
பாலகுமாரன்
காதல் சிறகு

அண்ணாமலையார் துணை

சிவஸ்ரீ பாலா அவர்களுக்கு,

நமஸ்காரம். அங்கு மன்னி, சி.வி. குழந்தைகளின் நலன்களை அறிய ஆவல். தங்களை நேற்று வியாழக்கிழமை (15-5-2003) மாலை N.S.C. போஸ் ரோட் கடை வீதியில், மின்னல் போல் தங்களின் தரிசனம் கிடைக்கப் பெற்றேன். தேவலோகத்திலுள்ள ரிஷிகள் பூலோகத்தில் உலாவந்தது போல மிக ரம்யமான காட்சியாக இருந்தது. தங்களின் மிடுக்கான தோற்றமும், தங்களுக்கே உரிய கருணாகடாக்ஷம் நிறைந்த விழிகளும், சந்தோஷத்தை அளித்தன.

தாங்கள் கூறியதுபோல், திருமாணிக்குழி திரு உதவி நாயகரின் ஸ்தல வரலாறு புத்தகமும், அதற்கு அருகில் உள்ள, தற்பொழுது நெசனூர் என்றழைக்கப் படுகின்ற எய்தனூர் என்கிற சிவஸ்தலத்துனுடைய மேலும், ஏனாதி நாத நாயனார்க்கு (அறுபத்து மூவருள் ஒருவர்) அருளிய சிவஸ்தலமாகும். இங்கு வாலி சிவபூஜை செய்வது போலவும், அதே நேரத்தில் தனது வாலால் இராவணனை கட்டி வைத்ததுபோல், ஸ்தல வரலாற்றைக் குறிக்கும் மிக அற்புதமான படைப்பு சிற்பம் அமைந்துள்ளது. தாங்கள் வந்து தரிசனம் பெற வேண்டும். அதன் மூலம் லட்சக்கணக்கான சிவநேயச் செல்வர்கள்; தங்களின் திருக்கரத்தின் மூலம் இச்சிவாலயத்தை தரிசிக்க வேண்டும், என்கிற ஆவல் அடியேனுக்கு இருக்கிறது. எனவே இப்புத்தகத் தையும் சேர்த்து அனுப்பியுள்ளேன். அன்று, தங்களை சந்தித்து விடைபெற்றபின், அங்கிருந்த கடைக்காரர்களும், ஏனைய சிலரும், அவர் எழுத்தாளர் தானே! பாலகுமாரன்தானே! என்று வியப்போடு விசாரித்தார்கள். இதே போன்று தாங்கள் வெளியே செல்கின்ற போது, அடியேனும் தங்களுடன் வந்து ஜனங்களெல் லாம் வியந்து போவதைக் கண்டு வியந்து போக ஆசைப் படுகிறேன்.

மீண்டும் வேணும் நமஸ்காரத்துடன்,
**ப.கணேஷ் குருக்கள்.**

## 'காதல் சிறகு' பற்றி பாலகுமாரன்...

காதல்சிறகு பிறந்த கதையை நாவலாசிரியர் பால குமாரன் சொன்னார். 'தேவி' மணி அவருடன் உரை யாடிய போது—

**மணி:** பாலகுமாரன் வணக்கம். எப்படியிருக்கிறீர்கள். உங்கள் மகளின் திருமணம் நடந்ததாகக் கேள்விப் பட்டேன்.

**பாலகுமாரன்:** வணக்கம், மணி. நலமாக இருக்கிறேன். கடந்த மார்ச் மாதம் என் மகளின் திருமணம் இறை யருளால் குருவருளால் விமரிசையாக நடந்து முடிந்தது. ஆன்மீகச் செல்வர்களும், திரையுலக ஜாம்பவான்களும், அரசு உயர் அதிகாரிகளும், வாசகர்களும் திருமணத்தில் கலந்து கொண்டு என் மகளையும், மாப்பிள்ளையையும் ஆசிர்வதித்தார்கள். என் மகள் தன் கணவருடன் நலமே குடித்தனம் செய்து கொண்டிருக்கிறார். உங்கள் விசாரிப் புக்கு நன்றி.

**மணி:** 'தேவி' க்கு என்ன எழுதப் போகிறீர்கள்.

**பாலகுமாரன்:** நான் என்னைச் சுற்றியுள்ள விஷயங் களை உற்று நோக்கித் தான் எழுதுகிறேன். என் மகள் திருமணம் நடந்து முடிந்து அவளை மும்பை விமான நிலையத்தில் வெளிதேசத்திற்கு வழி ஏற்றப் போகும் போது மனம் விண்டு போயிற்று.

**ஒருமகள் தன்னை உடையேன்**
**உலகம் நிறைந்த புகழால்,**
**திருமகள் போல வளர்த்தேன்**
**செங்கண்மால் தான் கொண்டு போனான்.**

—என்கிற பாசுர வரிகள் தான் ஞாபகம் வந்தது.

அடிக்கடி என் மகனோடு சிறிய விஷயங்களுக்கும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிற என் மகன் அவன் பிரிவு தாங்காமல் குலுங்கி அழுதான். அது அந்த விடியலில் நிகழ்ந்தது. மிகுந்த கனத்த நெஞ்சத்தோடு சென்னை திரும்பினோம்.

சென்னை வந்ததும் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி யிடம் 'இது என்ன சிஸ்டம்? மாப்பிள்ளை கிளம்பி நம் வீட்டிற்கு வரக் கூடாது?' என்று கேட்க அந்தப் பெண்மணி சிரித்தார். "மகனைப் பிரிந்த துக்கத்தின் உச்சியில் பேசுகிறீர் கள். நான் அமெரிக்காவில் வாஷிங்டன்னில் இருக்கிறேன். எனக்கு இரண்டு பிள்ளைகள். முதல் பிள்ளைக்கு திருமண மாகி என் முதல் மருமகள் அமெரிக்காவிற்கு வருவதற்கு ஒரு வருடம் ஆகியது.

இரண்டாவது பிள்ளைக்கும் திருமணம் ஆகியது. மரு மகள் அமெரிக்கா வருவதற்கு மூன்று வருடம் ஆகிவிட்டது.

திருமணமாகி முதலிரவு கொண்டாடி ஒரு மாதம் அவனோடு ஊர் சுற்றி விட்டு மறுபடியும் அவளை ஊருக்குக் கொண்டு வந்து குடித்தனம் செய்ய மூன்று வருடம் ஆயிற்று. இடையே மூன்று முறைகள் தான் அவனால் மனைவியைப் போய் பார்க்க முடிந்து.

அந்தப் பெண் வீட்டார் என்னை எப்படியெல்லாம் கேட்டார்கள் தெரியுமா? உங்களுக்கு மருமகளை அழைத் துப் போவதாக உத்தேசமே இல்லையா? என்றெல்லாம் சத்தம் போட்டார்கள். உங்களுடைய திருமகள் திருமண மான பத்தாம் நாளே தனிக்குடித்தனம் செய்ய ஊருக்குக் கிளம்பிப் போகிறாள் என்பது மிகப் பெரிய வரப்பிரசாதம். மூன்று வருடம் கணவனுக்காக காத்திருத்தல் என்பது எவ்வளவு கொடுமை! என்னதான் போனில் பேசினாலும், என்னதான் கடிதம் எழுதினாலும் இந்த ஏக்கம் தீருமா? மருமகளைப் பார்க்க எனக்கு பயமாகவே இருந்தது. பார்க்கும்போது வயிறு கலங்கியது!" என்று விவரித்தார்.

எனக்கு சட்டென்று ஒரு நாவல் அதற்குள் இருப்பது பிடிபட்டு விட்டது. இந்த நாவல், இது தான்- பிரிவுத் துயர் தான்.



மணி: மிக மெல்லிய கோடாக இருக்கிறதே இது நாவல் எழுதப் போதுமானதா?

பாலகுமாரன்: நிச்சயம் இது போதுமானது. ஒரு பெண் தன் கணவனோடு இல்லையெனில் ஊர் என்னவெல்லாம் பேசும் என்பதை சிறிது யோசனை செய்தால் நம்மால் உணரமுடியும்.

நாம் அந்தப் பெண்ணாக மாறினால் அந்த வேத னையை நிச்சயம் உணர்ந்து கொள்ள முடியும். புருஷனை அருகே வைத்துக் கொண்டு ஆனந்தப்பட முடியவில் லையே என்ற ஏக்கமட்டுமல்லாது இழிசொல் பலவற்றை யும் அந்தப் பெண் தாங்க வேண்டியிருக்கும். என்ன ஜென்மமோ, என்ன ஜாதகமோ என்று பிறர் அலுத்துக் கொள்ள அதை செவி மடுக்க வேண்டியிருக்கும். மனம் உடைந்து போகும். காத்திருக்க முடியாமல் கோபம் வரும். சீற்றம் வரும். சண்டை வரும்.

'எனக்கு ஏன் கல்யாணம் பண்ணி வச்ச. நான் கேட்டேனா?' என்று ஒரு ஆத்திரத்தில் கத்தும்படிக்கூட நிலைமை வரும்.

'புருஷன் எப்போ வருவான்னு தெரியலை. உனக்கு போர் அடிக்கலையா வாயேன் என்கூட எங்கனா கிளம்பி போயிட்டு வரலாம்' என்று மிக ரகசியமாக அவன் ஏக்கத்தை தவறாகப் புரிந்து கொண்டு அழைப்புகள் வரும்.

இவையெல்லாம் எத்தனை மன வேதனையை கொடுக் கும் என்பதை சற்று யோசித்தால் நாவலுக்குண்டான களன் தயாராகி விடும்.

மணி: அப்படியானால் இந்த நாவலின் மையக்கருத்து என்ன?

பாலகுமாரான்: நல்லதும் கெட்டதும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல. நல்லது வரின் கெட்டதும் பின்னே வரும். கெட்டது வரின் நல்லதும் அடுத்தபடி இருக்கும். அதைப் பிரிக்க முடியாது.

நல்லது வரும்பொழுது அட்டகாசம் செய்யாமலும், கெடுதல் வரும் பொழுது துவண்டு போகாமலும் எதிர்

கொள்ளுதல் தான் வாழ்க்கை. தடுமாறாமல் தனியே அமைதியாக நிற்பது தான் கெட்டிக்காரத்தனம். இதுவே வெற்றி பெறும், வழி. இந்த நடுநிலைமைக் கொள்கை இருந்தால் தான் நல்லதை நன்கு அனுபவிக்கவும், கெடுதல் வரும்பொழுது தளராமல் திடமாய் இருக்கவும் தெரிய வரும்.

மணி: இளம்வயதில் குறிப்பாக ஒரு பெண்ணுக்கு நடுநிலைமையாய் இரண்டையும் சமதையாய் தாங்கக் கூடிய பக்குவம் எப்படி வரும்.

பாலகுமாரன்: பெற்றோர்கள், உறவுகள், அண்டை அயலார்கள் சொல்லிக் கொடுக்கலாம். சொல்லிக் கொடுப்பதை புரிந்து கொள்ளுகின்ற நிதானம் தேவை. தனக்கு ஏற்பட்ட தனிமையை புரிந்து கொண்டு ஏன் இப்படி, எதனால் இப்படி என்று யோசித்தால் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து விடும். இடையறாத இறை வேண்டல் அதற்கு வெகு நிச்சயம் உதவும். பக்தி என்பது பிரச்சனையை மறக்கின்ற போதையான விஷயம் அல்ல. பக்தி என்பது உள்ளுக்குள் கொப்பளிக்கும் உணர்வுகளை நிதானப்படுத்தும் விஷயம். பக்தி என்பது வழிபடல்.

வழிபடல் என்றால் என்ன?

-ஒரு வழியில் நிற்றல்.

எந்த வழியில் நிற்றல்?

-அன்பு வழி.

சுற்றியுள்ளோரை இடையறாது நேசித்தபடி இருத்தல். மற்றவரை நீங்கள் நேசிக்க உங்களை மற்றவர்கள் நேசிப்பது நிச்சயம் ஏற்படும். உங்களுக்கு இடைஞ்சல் செய்ய முற்படுவோரும் நிச்சயம் அடிபட்டு மண்டியிடுவர். இதைத் தான் இந்த நாவலில் சூட்சுமமாக சொல்லப் போகிறேன்.

மணி: தொடக்கமே நன்றாக இருக்கிறது. நாவல் படிக்க ஆவலாக இருக்கிறது.

பாலகுமாரன்: நன்றி மணி. அடுத்த வாரத்திலிருந்து நாவல் ஆரம்பிக்கும்.

# காதல் சிறகு

## 1

பூரணி உள்ளங்கை நிறைய மஞ்சள் விழுது எடுத்து வாசற்படி மரத்தின் மீது வைத்து மெல்ல நீவித் துடைத்தாள்.

வாசற்படியின் இரண்டு பக்கமும் முழங்கால் உயரத்திற்கு மஞ்சள் விழுதை ஒற்றினாள். இண்டு இடுக்கு விடாமல் தேய்த்தாள். வாசற்படிக்கும், சுவருக்கும் இடையே இருந்த ஓட்டைகளெல்லாம் மஞ்சள் விழுது நிறைந்தன. தினமும் தடவித் தடவி மரவாசற்படி பச்சையேறிக் கிடந்தது.

மஞ்சளின் நெடி மூக்குக்குள் நுழைந்து மூளையை குறு குறுக்கச் செய்தது. வாசற்படி தடவிய மிச்சத்தை அப்படியே முகம், கழுத்து, முதுகு என்று தடவிக்கொள்ளலாம் என்ற ஆசை வந்தது.

பூரணிக்கு வாசற்படியின் மீது மஞ்சள் தடவுவது மிகப் பிடித்தமான விஷயம். அதற்கு காரணம், கமலக்கண்ணன்.

"பூரணி உங்க வீட்ல தினம் வாசப்படிக்கு மஞ்சள் தடவுவீங்களா...?"

"ஆமாங்க."

அவன் கேள்விக்கு பூரணி மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

"நீதான் தடவுவியா?"

"ஆமாங்க."

அதற்கும் தலையசைத்தாள்.

"வாசற்படிக்கு மஞ்சள தடவுறதுன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். வாசப்படிக்கு மஞ்சள் தடவுறபோது என்னை நினைச்சுக்க."

மிக உரிமையோடு அவள் கைகளை பற்றிக்கொண்டு கமலக்கண்ணன் கேட்க பூரணிக்கு பனிச்சென்று கண்களில் நீர் நிறைந்தது.

"அழக்கூடாது பூரணி. வீட்ல இருக்கற ஆம்பளை வெளிய போறபோது ஒரு பொம்மனாட்டி அழவே கூடாது. நான் ஊருக்குப் போய் உன்னை நினைச்சுக்கும்போது உன் அழுகை மூஞ்சிதான் ஞாபகம் வரும். அது நல்லாவா இருக்கும். நீ சிரிச்சு சந்தோஷமா வழி அனுப்பனும். அதுதான் எனக்குப் பிடிக்கும். எனக்கு அழுகை வருதேன்னு தயவுசெய்து சொல்லிடாத பூரணி."

பூரணி அழுகையை விழுங்கினாள். கண்களை துடைத்துக் கொண்டாள்.

"தினம் மஞ்சள் தடவுவேன். மஞ்சள் தடவுறபோது உங்களை நினைச்சுக்குவேன். ஆங்... தினம் மஞ்சள் துடைக்க முடியாது."

"ஏன்?"

"சிலநாள் அம்மாதான் துடைக்கும்படி ஆகும்."

அவன் மறுபடியும் ஏன் என்ற கேள்வியை தொண்டை வரை எழுப்பிவிட்டு சட்டென்று பெண்மையை புரிந்துகொண்டான்.

"ஆமா... அந்த மூணு நாலு நாள் செய்யமுடியாது இல்ல" என்று தனக்குதானே பேசிக்கொண்டான்.

பூரணியின் கை பற்றியபடி வெளியே வந்தான்.

அவளுக்கு கொஞ்சம் சங்கடமாக இருந்தது.

எதிர்வீடு, எதிர்வீட்டுக்கு அடுத்த வீடு, அடுத்த வீட்டிற்கு அடுத்த வீடு, பக்கத்து வீடு என்று எல்லோருமே அவர்கள் இருவரும் வெளியே வருவதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதுவும் தவிர கமலக்கண்ணன் வீட்டில் பெரியோர்களும்



காரில் உட்கார்ந்தபடி எப்பொழுது கமலக்கண்ணன் வெளியே வருவான் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

"ஒன்றரை வருஷம் கண் மூடி கண் திறக்கறதுக்குள்ளேயும் ஓடியே போயிடும். உன் அம்மா மூஞ்சி ரொம்ப இருண்டு கிடக்கு. என்னடா இப்படி ஆயிடுச்சேன்ற மாதிரி திகைச்சு போய் கிடக்காங்க. உங்கப்பாகிட்ட எவ்ளோ பேசணுமோ அவ்ளோ பேசிட்டேன். கொஞ்சம் கூட கவலைப்பட வேண் டாம். இது நம்ம ரெண்டுபேருக்கும் நல்லது பூரணி. என் ஞாபகமாகவே நீ. உன் ஞாபகமாவே நான் இருக்கப்போறேன். பூரணி நீ வாசப்படிக்கு மஞ்சள் தேய்க்கற போது என்னை நினைச்சுக்கப் போற. நான் உன்னை எப்போ நினைச்சுக்கப் போறேன் தெரியுமா?"

பூரணி மெல்லியதாய் வெட்கப்பட்டாள். அவன் விரலை விடுவித்துக்கொண்டு காம்ப்பௌண்ட் கதவை பிடித்துக் கொண்டாள்.

"தெரியும்" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

"என்ன தெரியும்?"

"காலையில் பல் தேய்க்கற போது என்னை நினைச்சுக்கப் போறீங்க. நான் உங்களுக்கு மூணு பிரஷ் வாங்கிக் கொடுத் திருக்கேன்" குரல் மாற்றினாள். "வெறுமனே நினைச்சிக்கிட்டா போறாது."

"பிறகு?"

"வாய் நுரைக்க நுரைக்க பல் தேய்க்கிறபோது பூரணி... பூரணின்னு சொல்லிகிட்டே பல் தேய்க்கணும்."

அவள் வேண்டுமென்றே குறும்பாகப் பேசினாள்.

அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

எல்லோரும் அவர்களை திரும்பிப் பார்த்தார்கள்.

அவன் வாய்க்கருகில் வைத்து பல் தேய்ப்பது போல பாவனை செய்து வாய் நிறைய டூத்பேஸ்ட் இருக்க எப்படி பூரணி என்று சொல்லமுடியும் என்பது போல் செய்து பார்த் தான்.

கொழகொழப்பாய் பூரணி... பூரணி என்று சொல்ல அவளும் வாய்விட்டு சிரித்தாள்.

சட்டென்று தான் சொல்வதை புரிந்து கொண்டு பூரணி மனம் மாறி அழுகையிலிருந்து விடுபட்டு கேலிக்கும், சந்தோஷத்திற்கும் தாவிவிட்டது பார்த்து அவன் உற்சாகமடைந்தான்.

"இதுபோறும் பூரணி. நான் என்ன சொல்றேன்னு புரிஞ்சு சட்டுனு ஜோக் அடிச்ச மாத்திட்ட இல்ல. இருந்தாலும் மனசு வலிக்குது. என்னடா... இப்படி பண்ணிட்டோமே அப்படின்னு வலிக்குது. அம்மா எங்க காணோம். உள்ள உட்கார்ந்து அழுவறாங்களா. அப்புறம் அவங்க அழுதா என்னால போகமுடியாது பூரணி. ப்ளீஸ்... அவங்கள வரச்சொல்லு."

பூரணி உள்ளே ஓடினாள்.

அம்மா முகம் பொத்தி அழுதுகொண்டிருந்தாள்.

"என்னா இப்படி பண்ற?"

அடிக்குரலில் அம்மாவை காதோரம் கத்தினாள்.

"அவரு உன்னை கூப்பிடறாரு. உன்னை அழவச்சிட்டுப் போறமேன்னு வருத்தப்படறாரு. நான் வருத்தமாயில்லை, சீக்கிரமா வந்துடுங்கன்னு ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?"

"ச்சு... முடியலைடி."

அம்மா அலுத்துக்கொண்டாள்.

"எனக்கும்தான் முடியலை. நான் பல்லை கடிச்சட்டு பொறுத்துக்கலை. முகம் மாறலை. ஊருக்குப் போறவங்கள இப்படியா அனுப்பி வைக்கறது. அப்புறம் அழுத மூஞ்சியாவே நம்பள ஞாபகம் வச்சுப்பாங்க."

அவன் அவளுக்குச் சொன்னதை அவள் அம்மாவுக்குச் சொன்னாள்.

அம்மாவுக்கும் அது புரிந்தது.

சட்டென்று முகம் துடைத்துக் கொண்டாள். கண்ணாடியில் நெற்றியை பார்த்துக்கொண்டாள். விறுவிறு என்று வாசலுக்கு வந்தாள்.



"நல்லபடியா போயிட்டு வாங்க" என்று குரல் நடுங்கச் சொன்னாள்.

அழுகை அந்தக் குரலில் ஒளிந்திருந்தது.

வாசற்படி தாண்டி மறுபடியும் உள்ளே வந்தான்.

"எங்க வீடு நல்ல வீடுதான். ஆனால் சுத்துபத்து உறவு வம்பு பேசும். எதுனா விஷமம் பண்ணும். எதுக்கும் கலங்காதீங்க. நேரடியா மாசாமாசம் பூரணிக்கு லெட்டர் எழுதறேன். மாசத்துக்கு ஒரு லெட்டர்தான் எழுதமுடியும். ரெண்டாவது சனிக்கிழமை லீவு. வெள்ளிக்கிழமை நல்லா தூங்கிட்டு ரெண்டாவது சனிக்கிழமை உட்கார்ந்து எங்க வீட்டுக்கு உங்க வீட்டுக்கு எல்லாத்துக்கும் கத்தை கத்தையா லெட்டர் எழுதறேன். தினம் லெட்டர் எழுதினாலோ வாராவாரம் லெட்டர் எழுதினாலோ லெட்டர் எழுதறது போர் அடிச்சுடும் இல்லீங்களா. லெட்டர் எழுதினா ஒரே வாரத்துல உங்களுக்கு கிடைச்சுடும். என்னடா... ஒன்னுமே தெரியலையே போனவன் போனவன் தானா அப்படின்ற மாதிரியெல்லாம் மனசைப் போட்டு உழப்பிக்க வேணாம். பொண்ணு பெத்தவங்களுக்கு இது எவ்ளோ கஷ்டமா இருக்கும்னு என்னால கொஞ்சம் புரிஞ்சுக்க முடியுது. பயப்படாதீங்க. உங்க மேல ஆணையா நான் பூரணியை மனசுலேர்ந்து கூட நகர்த்தமாட்டேன்.

நீங்க அழுதா சமாதானம் பண்ண பூரணி இருக்கு. பூரணி அழுதா சமாதானம் பண்ண நீங்களும், உங்க வீட்டுக்காரரும் இருக்கீங்க. போன இடத்தில நான் அழுதா என்னை சமாதானம் பண்ண யார் இருக்கா? அதுனாலேயே நான் அழமுடியாது. அழக்கூடாது. எனக்கும் கஷ்டம்தாங்க. புரியுதுங்களா?"

அவன் அடிக்குரலில் பேச அம்மா மெல்ல கைநீட்டி அவன் கைகளை பிடித்துக்கொண்டாள். முழங்கையைத் தடவி கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

"இது போதும்...எல்லாம் நல்லதுக்குத்தான். இதுபோதும்..." என்று திக்கித்திணறிச் சொன்னாள்.

அவன் பளிச்சென்று திரும்பினான். ரேழியிலிருந்து நகர்ந்தான். வாசற்படி தாண்டினான். நின்று வாசற்படியை பார்த்தான்.

"பூரணி மறந்துடாத. தினம் மஞ்சள் தடவு. மஞ்சள தடவுற போது என்னை நினைச்சுக்கோ. எனக்கு அங்க பொறை ஏறணும். அந்த மாதிரி நினைக்கணும். சரியா."

அவன் பதிலுக்கு காத்திராமல் இறங்கி நகர்ந்து அம்பாஸிடர் காரை சுற்றிக்கொண்டு போய் முன்பக்கம் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

காரிலுள்ள அத்தனை பேரும் கைகூப்பினார்கள். "வரேன் வரேன்" என்று சொன்னார்கள்.

கார் மெல்ல நகர்ந்தது.

தூசியும் புழுதியும் நெஞ்சு உயரத்திற்கு எழுந்தன. அடங்கின.

பூரணி கையில் மஞ்சள் விழுதோடு வாசற்படியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த வாசல்தானே அவன் என்னைவிட்டு பிரிந்துபோன இடம் என்று ஏக்கத்தோடு பார்த்தாள்.

அவன் இந்த வாசற்படியை தாண்டிப்போய் ஒரு வருடமாகி விட்டது. அவனிடமிருந்து பதிமூன்று கடிதங்கள் வந்துவிட்டன. ஆனால், காத்திருப்பது எளிது இல்லையென்று தெள்ளத் தெளிவாக அவளுக்குப் புரிந்தது. அவன் கடிதங்களும் அதையே சொல்லின.

பூரணி மிக முட்டாள்தனமாக உன் அம்மாவிற்கு சமாதானம் சொல்லிவிட்டு வந்தேன். பல்தேய்க்கும் போது உன்னை நினைத்துக் கொள்கிறேன் என்று கேலி செய்துவிட்டு வந்தேன். ஆனால் பூரணி பல் தேய்க்கின்றபோதும், சவரம் செய்து கொள்கிற போதும், குளிக்கிற போதும், உண்ணுகிற போதும், வேலைக்கு தோளில் ரின்ச்சோடு நடந்து போகிறபோதும் உன் நினைவே இருக்கிறது. காலை நேரத்திலும், உச்சி வெய்யிலிலும், அந்தி சரியும்போதும் உன் நினைப்பே வருகிறது. சூரியனை நான் மனதார நேசிக்கிறேன். இது என்னுடைய ஊரை தொட்டுவிட்டல்லவா என்னிடம் வந்திருக்கிறது. பூரணி வீட்டை தாண்டிவிட்டல்லவா என் தலையில் கால் வைக்கிறது என்று நினைத்துக் கொள்கிறேன். பூரணி, ஐ லவ் யூ. இந்த ஐ



லவ் யூவை எத்தனை முறை சொன்னாலும் போறாது. ஆனால், இதைவிட்டால் வேறு வார்த்தை எதுவும் இல்லை.

அவன் மூன்றாவது கடிதம் மிகவும் புலம்பலாக இருந்தது.

நான் இப்படி எழுதுவது உனக்கு வருத்தத்தை கொடுக்குமோ. உனக்கு புலம்பல் அதிகமாகி விடுமோ. எவ்வளவு கவலை இருப்பினும் என்னால் புலம்பாமல் இருக்க முடியவில்லை. இந்தக் கடிதத்தில் என் மனம் கரைவதை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

பூரணி அதைவிட கொடுமை என்ன தெரியுமா? வெள்ளிக்கிழமைகளில் மாலையில் எங்கேனும் உலாவப்போனால் மலையாளிகளும், தெலுங்கர்களும், நமது தமிழர்களும், பாகிஸ்தானியர்களும், பங்களாதேஷ்காரர்களும், ஹாங்காங் தேசத்திலிருந்து வந்த சப்பை மூக்கு இளைஞர்களும் அவரவர் மனைவியோடும், குழந்தையோடும் நடக்கும்போது மனம் தவித்துப் போகிறது. உங்கள் ஊர் பொழிச்சலூர் சிவன் கோவிலில் ஒரு தாலி கட்டிவிட்டு உன்னை கையோடு கூட்டி வந்திருக்கலாமே என்ற ஏக்கம் எழுகிறது.

ஆனால், துபாய் அவ்வளவு சுகமான ஊர் அல்ல. வெய்யில் மிகமிகக் கடுமை. ஒருமுறை தலைசுற்றி பொத்தென்று உட்கார்ந்து விட்டேன். உடனடியாக முதலுதவி செய்தார்கள். முதலில் அப்படித்தான் இருக்கும். இரண்டு மூன்று முறை விழும்படியாக இருக்கும். பிறகு உடம்பு இந்த வெப்பத்திற்கு பழகிவிடும் என்று சொன்னார்கள். இரவு நல்ல ஜுரம் வந்தது. அதற்கும் மருந்து கொடுத்தார்கள். இரண்டு நாளில் சரியாகி விட்டது.

பூரணி இங்கு தமிழ் சேனல்கள் சிலது தெரிகிறது. ஆனாலும் நான் டி.வி. பார்ப்பதில்லை. உன்னை நினைத்துக்கொள்ள டி.வி. சௌகரியமாக இல்லை. ஆனால், ரேடியோ மிக உதவியாக இருக்கிறது. இங்கு என்னை மாதிரியே ஒரு சோக கேஸ். தன் இளம் மனைவியை பிரிந்துவிட்டு வந்த புலம்பல் கேஸ். நாலு ரூம் தள்ளி இருக்கிறான். அவனிடம் நூற்றுக்கணக்கான கேஸட்டுகள் இருக்கின்றன. எல்லாம் தமிழ் பாடல்கள். சினிமா

பாடல்கள். பி.சுசிலாவின் சோகப்பாட்டுகள் என்று வைத்திருக்கிறான்.

பூரணி இந்தப் பாட்டைக் கேட்டிருக்கிறாயா...

*'மாலைப் பொழுதின் மயக்கத்திலே*
*நான் கனவு கண்டேன்தோழி.'*

அந்தப் பாடலை திரும்பத் திரும்ப வரும்படி ஒரு கேஸட் முழுக்க பதிவு செய்து வைத்திருக்கிறான். அவன் மனைவி பதிவு செய்து கொடுத்திருக்கிறாள். அவள் நன்றாகப் பாடுவாளாம். அவளுக்கு பி.சுசிலா என்றால் உயிராம். அந்தப் பாட்டை திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறான். நான் உன்னை பிரிந்து வந்ததைச் சொன்னதும் இந்தக் கேஸட்டை கொடுத்து இந்தா அனுபவி என்று சொல்லிவிட்டு போய்விட்டான். பூரணி... நெஞ்சு விண்டுபோய்விட்டது.

*'வழி மறந்தேனோ வந்தவர் நெஞ்சில்*
*சாய்ந்துவிட்டேன் தோழி'*

என்று பாடல் போகும்போது கண்ணிலிருந்து என்னை அறியாமல் கண்ணீர் வந்தது. அதை நீ பாடுவதாய், உன் வீட்டு பவழமல்லிக்குக் கீழ் உட்கார்ந்து பாடுவதாய் நினைத்துக் கொள்ளும் போது என்னால் உட்கார முடியவில்லை. நிற்க முடியவில்லை. நான் விறுவிறுவென்று கடைத்தெரு பக்கம் நடந்து போய்விட்டு வந்தேன்.

பூரணி, பிரிவு கொடுமையானது. ஆனால் இதுவும் ஒரு சுகம்.

என்றும் அன்புடன் என்று கையெழுத்திட்டிருந்தான். பூரணி ஓடிப்போய் அதே விதமான பல கேஸட்டுகள் வாங்கி வந்தாள்.

பவழமல்லி மேடையில் உட்கார்ந்து இரவு நேரம் பாட்டுக் கேட்க தொடங்கினாள்.

"என்னாடி ஒரே சோகப்பாட்டா கேட்டுட்டிருக்க."

அம்மா மெல்ல எட்டிப்பார்த்து கேட்க, "போ... போய் உன் வேலையைப் பார். வீணா இதெல்லாம் தலையிடாத" என்று அதட்டினாள்.



அம்மா சரக்கென்று திரும்பிப் போய்விட்டாள்.

கல்யாணம் பேசுகிறபோது இப்படி பிரிந்துபோவான் என்று நினைக்கவேயில்லை.

"சைதாப்பேட்டையில ஒரு நல்ல வரன் இருக்கு. பார்க்கறீங்களா?"

கல்யாண புரோக்கர் ஜாதகத்தை நீட்டியபோது அப்பா வாங்கிக்கொண்டார்.

"பத்துப் பன்னெண்டு கொடுத்தீங்கன்னா அதுல என்னா தேறும்னு பார்க்கலாம். ஒரேயொரு ஜாதகம் கொடுத்து பார்க்கறீங்களான்னா என்னா அர்த்தம்?"

அம்மா அவரை கடிந்து கொண்டாள்.

"இப்போதானே சொல்லியிருக்கீங்க. அந்த மாதிரி ஜாதகம் மெல்ல மெல்ல எடுத்துக்கிட்டிருக்கேன். சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்க பொண்ணு பி.காம்.னு சொல்றீங்க. அதுவும் ஃபர்ஸ்ட் க்ளாஸ்னு சொல்றீங்க. அதுக்கேத்த ஒரு வரனா பார்க்க வேணாமா. இப்போ இருக்கற பசங்க நாலாயிரம், அஞ்சாயிரம் சம்பளத்துல தானே இருக்கானே தவிர பெரிய சம்பளமா இல்லை. பெரிய சம்பளமா இருந்தா ஊர்ல இல்லை. வேற எங்கயோ வடக்க இருக்கறான். இல்லைன்னா வெளியூர்ல இருக்கிறான். மெட்ராஸ்ல நல்ல சம்பளமா இருக்கற பசங்க ஒருத்தனும் இல்லைன்னே எனக்கு தோணுது. எல்லாம் பொழப்புதேடி கடல்தாண்டி போயிட்டாங்க. அந்த மாதிரி வெளியூர் மாப்பிள்ளை எதுனா பார்க்கணும்னா சொல்லுங்க, டக்டக்குனு புடிச்சிடலாம். நல்ல வேலை, நல்ல சம்பளம் வந்து கல்யாணம் பண்ணிகிட்டு கூட்டிகிட்டு போயிட்டே இருப்பாங்க."

"இல்லை... வேணாம். அந்த மாதிரி வேணாம்."

அப்பா அழுத்தம் திருத்தமாகப் பேசினார்.

"ஏன்?"

"இருக்கறது ஒரே பொண்ணு. அந்தப் பொண்ணு ஏன் போய் இன்னொரு தேசத்துல வாக்கப்படணும்.பஸ் ஏறினோமா

பொண்ணு வீட்டுக்குப் போனோமா ஒரு டிபன் காபி சாப்பிட்டோமா. மாப்பிள்ளையோட கொஞ்சநேரம் பேசிகிட்டிருந்தோமா, திரும்பி வந்தோமான்னு இருக்கணும். அதான் நல்லதே தவிர எங்கயோ கண்காணாத இடத்துல கொடுத்துட்டு அவஸ்தைபடறதுக்கு நான் தயாரா இல்லை."

"சம்பளம் ஜாஸ்தி இல்லையே."

"பரவாயில்லைன்றேன்."

"அதெப்படி பரவாயில்லை. நல்லா சம்பாதிக்கற பையனாத்தானே பார்க்கணும். அவங்க குடும்பத்துக்கு போறலேன்னா மாசாமாசம் நீங்க கொடுத்துகிட்டிருப்பீங்களா?"

"அதுகூட செய்துடலாம். கொண்டுபோய் பொண்ணை எங்கயோ வெளியூர்ல கொடுக்கறது எனக்கு இஷ்டமில்லை. பாம்பே, கல்கத்தான்னு போயிடுச்சுன்னாக்க யாரு பின்னாடியே போகமுடியும் சொல்லு. ரொம்ப அதிகமா போச்சுன்னா தஞ்சாவூர், திருச்சியிலே கிடைக்கணும். தஞ்சாவூர்ல ஆயில் எடுக்கறாங்களாமே அந்தப் பையன் ஜாதகம் ஒன்னு இருக்குன்னு சொன்னீங்களே."

"இல்லை."

"ஏன் இல்லை?"

"கல்யாணம் ஆயிப்போச்சு."

"நேத்துதானே சொன்னீங்க. அப்படியொரு ஜாதகம் இருக்குன்னு."

"தெரியாத சொல்லிட்டேங்க. இன்னிக்கு காலையிலதான் விசாரிச்சேன். அந்தப் பையனுக்கு கல்யாணம் ஆயிடுச்சின்னு சொல்றாங்க. கல்யாணம் ஆகி கசமுசாவும் ஆயிப்போச்சு." புரோக்கர் அலுத்துக்கொண்டார்.

"அதென்ன கசமுசா?"

அவர்கள் எல்லோரும் ஆவலாக அவரை விசாரித்தார்கள்.

"அவனுக்கு வேலை நிரந்தரமில்லை. நிரந்தரம்னு பொய் சொல்லி கல்யாணம் பண்ணிட்டான். ஆயில் கம்பெனி மத்திய சர்க்கார் உத்தியோகம்னு ஏகப்பட்ட ரீல் விட்டிருக்கான், போய்



கேட்டா அங்க வேலை செய்யறது நிஜம்தான். ஆனா வாராந்திர கூலி அப்படின்னாங்க. இதுக்கு இருவத்தஞ்சு பவுன் நகை, ரெண்டு கிலோ வெள்ளிப் பாத்திரம்னு ஏக தடபுடல்."

"அயோக்கியத்தனமான குடும்பமா இருக்கே."

"குடும்பத்தைச் சொல்லி குத்தமில்லை. அந்தப் பையன் வீட்லயும் அப்படித்தான் பொய் சொல்லிருக்கான். அவங்களுக்கே தெரியாது அவன் வந்து கேஷுவல் லேபர்னு."

"அப்புறம் என்னாச்சு?"

"என்னாச்சு... வேற வழியென்ன. இன்னும் ஒரு நாலஞ்சு வருஷத்துல நிரந்தரமாயிடும் அப்படின்னாங்க. விசாரிச்சுப் பார்த்ததுல நிரந்தரமாக பத்து வருஷமாவது ஆகும்னு சொன்னாங்க. வேற வழி. பொண்ணு தலையெழுத்தேன்னு அவங்கூட குடித்தனம் பண்ணிகிட்டிருக்கு. மாசாமாசம் நீங்க சொல்ற மாதிரி அவனுக்கு துட்டு அனுப்பிகிட்டிருக்காங்க."

"அடச்சண்டாளப் பாவிகளா. பெத்தவ வயிறு எப்படி எரியும்?"

"அதை யார் கவனிக்கறா. அதனாலதான் ஆரம்பத்துலயே ஒன்னுக்கு மூணு நாலுவிதமா புள்ளையைப் பத்தி விசாரிச்சுட்டு தான் நான் சொல்றது வழக்கம். எந்த ஜாதகமா கொடுக்கறேன்னா மொத்தம் விசாரிச்சுட்டேன். அதனால் கொடுக்கறேன் இல்லைன்னா தரமாட்டேன்."

"இந்தப் பையன் நல்ல பையனா?"

"ரொம்ப நல்ல பையன். எனக்கு அவனை தனியாவே தெரியும். நான் அவனை மாப்ளேன்னுதான் கூப்பிடுவேன்."

"ஏன்... உங்க பொண்ணை கொடுக்கறதா எண்ணமிருக்கா?"

"எனக்கு பொண்ணே இல்லியே."

அவர் சட்டென்று சொல்ல 'நிம்மதி' என்று அம்மா சொன்னாள்.

பெண் சுமை என்பது அம்மாவின் கண்களில் தெரிந்தது பேச்சில் ஒலித்தது.

"அப்படி சொல்லாதீங்க.பொண்ணு மகாலட்சுமி. வீட்ல பொண்ணு இருக்கிறது ரொம்ப நல்லது. வீட்ல இருக்கற ஆம்பளைக்கு பொறுப்பு வரும். வரிசையா ஆறு புள்ளை பெத்தான்னு வச்சுக்கோங்கோ அவன் ஒரு மாதிரி திமிராத்தான் இருப்பான். இரண்டு பொண்ணா இருந்தா அடக்கமா இருந்துடுவான். தெரியுங்களா... அதனாலதான் பொண்ணு முக்கியம்னு சொல்றது."

"ஏன், அவனை மாப்ளேன்னு கூப்பிடுவீங்க?"

"பார்க்கறதுக்கு நல்லா இருப்பாங்க. பளிச்சுன்னு இருப்பான்."

"என்னா வேலை. என்னா சம்பளம்?"

"அதுதான்... சுமாராத்தான் இருக்குது. என்னாடா மாப்ளே வேற இடம் பார்த்து நல்ல இடமா போயேண்டா அப்படின்னேன். கிடைக்கலை மாமா. பார்த்துட்டு தான்இருக்கேன் அப்படின்றான்."

"வேலை பர்மனெண்ட்டாமா?"

"பர்மனெண்ட் வேலை. ஆபீஸ்லயும் நான் விசாரிச்சுட்டேன். அங்கயும் அவனை தங்கமா சொல்றாங்க."

"எங்க வேலை?" அம்மா கேட்டாள்.

"இந்தியன் ஆயில் கம்பெனி. ஏழாயிரத்து சொச்சம் சம்பளம். கையில ஆறாயிரம் ரூபா வாங்கறான். கொஞ்சம் கூட சம்பாதிச்ச பிறகு கல்யாணம் பண்ணிக்கணும்னு எண்ணம். ஆனா அவங்க வீட்ல தொந்தரவு பண்றாங்க. பண்ணிக்கோ... பண்ணிக்கோன்னு."

"உடன்பிறந்தவங்க எத்தினி பேரு?"

"ஒரு அக்கா, ஒரு அண்ணன், ஒரு தங்கச்சி, ஒரு தம்பி. தம்பி தவிர எல்லோருக்கும் கல்யாணம் ஆயிப்போச்சி. எல்லாரும் நல்லபடியா இருக்காங்க. இப்போதான் தங்கச்சிக்கு கல்யாணம் நடந்தது. தங்கச்சி புருஷன் கவர்மெண்ட்ல பெரிய வேலை. அக்கா புருஷனுக்கு மரக்கடை. போட்டோ கூட வச்சிருக்கேன் பார்."



அவர் நிதானமாக ஒரு புத்தகத்திலிருந்து போட்டோ எடுத்து அம்மாவிடம் நீட்டினார்.

அம்மாவின் தோள் வழியாக பூரணி அந்த முகத்தை முதன் முதலாகப் பார்த்தாள்.

பாஸ்போர்ட்டுக்காக எடுத்த போட்டோவை பெரிது பண்ணியிருந்தார்கள்.

சந்தோஷமும் இல்லாமல், சோகமும் இல்லாமல் வெறுமே இருந்த முகம். ஆனாலும் கமலக்கண்ணனின் கண்கள் அந்தப் போட்டோவில் சிரித்தபடி இருந்தன.

எதனாலேயோ பூரணிக்கு அந்த முகத்தை பிடித்துவிட்டது.

## 2

ஆனால் வேறு எந்த வீட்டிலும் ஒரு பெண்ணை, ஆண் போட்டோவை எடுத்து உற்றுப்பார்க்கவோ அல்லது எடுத்துக் கொண்டு போய் தனியறையில் வைத்துக் கொண்டு பார்க்கவோ விடவே மாட்டார்கள்.

"புள்ளைய பார்த்தேன். நல்லாதான் இருக்கான். பண்ணிக்கியேன்டி" என்று தான் மகளிடம் ஒரு தாயோ தகப்பனோ பேசுவார்கள்.

பூரணியின் வீடு வேறு விதம். அதற்குக் காரணம் அவள் தகப்பனார்.

"அப்பா நான் பேண்ட்டும் சட்டையும் போட்டுக்கட்டுமா" என்று தகப்பனாரை கேட்டபோது அப்பா "போட்டுக்கயேன்" என்று ஒரே வார்த்தையில் சொன்னார்.

"என்னாது... என்னா சொல்றீங்க. அவ பேண்ட்டும், சட்டையும் போட்டுகிட்டு இந்த பொழிச்சலூர்ல அலைவாளா. அலைய முடியுமா."

அம்மா உள்ளே புகுந்து கத்தினாள்.

"இரு நான் முழுக்க முடிக்கலையே. பேண்ட் சட்டை போட்டுக்கலாமான்னு கேட்கறா. போட்டுக்கலாம்னு சொன்னேன். போட்டுக்கம்மா வீட்டுக்குள்ளயே இரு. வெளிய போகாத அப்படின்னு சொல்றேன்."

"எம்ப்பா வெளிய போனா என்ன. இந்த ஊர்ல ரெண்டு மூனு பேரு போறாங்கப்பா."

"அம்மா... ஒரு விஷயம் நல்லா புரிஞ்சுக்கோ. நீ அமெரிக்காவுல பொறந்து அங்கேயே வளர்ந்து பேண்ட் சட்டை போட்டா ஒன்னும் கேட்கப் போறதில்லை. அமெரிக்காவுக்குப் போய் பேண்ட் சட்டை போட்டாலும் உன்னை யாரும் கேட்கப் போறதில்லை. இந்தப் பொழிச்சலூர்ல பேண்ட் சட்டை போட்டுக்கனும்னா துண்டா தெரில. நாலு பேர் கண்ணுபட துண்டா தெரியறது தான் பிரச்சனையே.

ஒன்னுமில்லை ப்ளீஸ் டூ முடிவுல நீ ஆயிரத்து நூத்து இருவத்திநாலு மார்க் வாங்கின. யாரது யாரது பூரணி. எங்க இருக்குது அது. அப்படின்னு ஒரு நூறு நூத்தி இருபது பேர் தேடிக்கிட்டு வந்துட்டாங்க. உனக்கு கையும் ஓடலை. காலும் ஓடலை. நாலு பேர் சேர்ந்து வந்து கதவை தட்டின போது உனக்கு வெடவெடன்னு வந்துருச்சி. எம்ப்பா இப்படி ஓடி வராங்க அப்படின்னு பயந்து கொல்லைப் பக்கம் போய் உட்கார்ந்துட்ட. ஏன். நமக்கு துண்டா நம்மள நிக்க வச்சு பழக்கமில்லை. நாமெல்லாம் கும்பலோட கும்பலா இருக்கறவங்க. அடுத்தவங்க கண்ணுக்கு உறுத்தலா தெரியக் கூடாதுன்னு நினைக்கறவங்க. ஆயிரத்து நூத்தி இருவத்தி நாலு மார்க் வாங்கினது பெரிய விசேஷம். நல்ல விஷயம். ஆனாலும், அதுலகூட துண்டா தெரியறது நமக்கு பயமா இருக்கு.

என்னா உன் பொண்ண ஆடிட்டருக்கு படிக்க வைக்கப் போறியாம்மே. சொன்னாங்க. வேணாம்... வேணாம்... காலா காலத்துல கல்யாணம் பண்ணிக்கொடு. ஆயிரத்து நூத்தி சொச்சம் வாங்கிட்டா என்னா. உலகத்தையே பொளந்துட்டான்னு அர்த்தமா அப்படின்னு நம்ம உறவுக்கார பொம்பளைங்களே சொன்னாங்க. நீ ஆடிட்டர் ஆயிடக்கூடாதுன்னு அத்தினி வேகமா வந்து பேசினாங்க.



இது சரியா தப்பாங்கறது வேற விஷயம். இப்படித்தான் நம்ம வீடு. நம்ம உலகம் இருக்கு. நம்ம உறவுக்காரங்களுக்கும் இந்த குணம் தான். அதனால் தான் நான் பயப்படறேன். நீ பேண்ட் சட்டை போட்டுக்கலாம் தாயி. ஆசைக்கு போட்டு ரூமுக்கும், வாசலுக்கும் நடந்துடு. வெளியே போகும் போது வழக்கம் போலவே பாவாடை, தாவணியில போ.''

அப்பா கனிவாகப் பேசினார்.

"கூடாது அப்படின்னு ஒரு வார்த்தையில சொல்றதை விட்டுட்டு இதென்ன ராமாயணம் சொல்லிக்கிட்டிருக்கீங்க."

அம்மா மறுபடியும் கத்தினாள்.

ஆனால் அப்பாவின் கனிவு, அப்பாவின் அன்பு அவர் சொன்ன காரணம் பூரணிக்குப் பிடித்திருந்தது.

"பொழிச்சலூர் சிவன் கோவில்ல பிரதோஷம்ப்பா. அங்க நிறைய பேர் உழவாரப்பணி பண்றாங்க. கோயிலெல்லாம் சுத்தம் பண்றாங்க. நான் போகட்டுமா."

"நல்லா போ."

"ரொம்ப ஆம்பளை பசங்களா இருந்தா திரும்பி வந்துருடி."

அம்மா கூவினாள்.

"என்ன சொல்ற.கோவில்ல ஆம்பளையா இருந்தா என்ன. அங்க வரவங்க மரியாதையாகத்தானே இருப்பாங்க. பெரியவங்க இருப்பாங்க இல்லை. ஏன் பயப்படற. அவ போயிட்டு வரட்டும்."

"வேணா, நானும் வரட்டுமா."

"வேணாம். சும்மாயிரு. அவ போயிட்டு வரட்டும்."

பூரணி துள்ளி குதித்துக் கொண்டு கோவிலுக்குப் போய் கருவறை கழுவுவதற்கு நீர் கொண்டு வந்து கொடுத்து. கோயில் முழுவதும் தண்ணீர் தெளித்து கோலங்கள் போட்டு. தோரணங்கள் கட்டி, பாத்திரங்கள் தேய்த்துக் கொடுத்து. பாக்கெட் பாக்கெட்டாக வரும் பால்களை கிழித்து பெரிய எவர்சில்வர் அண்டாவில் ஊற்றி கொண்டு போய் கருவறை வாசலில் வைத்து என்று பற்பல வேலைகள் செய்தாள். இவள் வந்து

செய்கிறாள் என்றே இன்னும் சில வீட்டுப் பெண்கள் வந்து நின்றார்கள். பல பெண்கள் வந்து நின்றதால் அந்த இடத்தில் பெண்கள் கூட்டம் அதிகமாகியது.

"கோயில்ல ஒரு நாள் நாங்க வேலை செய்யறோம். இந்த வேலைங்க எல்லாத்தையும் எங்ககிட்ட கொடுத்துருங்களேன். நீங்க செய்ய வேண்டிய வேலைகளை நீங்க செய்யுங்களேன்" என்று சொல்ல ஆண்கள் பல்வேறு வேலைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

பிரதோஷ வேலைகள் மொத்தமும் பெண்கள் செய்வது என்பதாக மாறிற்று.

ஸ்வாமி பல்லக்கு தூக்க மட்டுமே ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டது.

கோவிலிலேயே சோப்பு தேய்த்து முகம் அலம்பி விட்டு அங்கேயே கண்ணாடி பொருத்தி முகம் பார்த்து நெற்றிக்கு இட்டு விபூதியிட்டு எல்லாப் பெண்களும் மறுபடியும் புத்தம் புது பொலிவோடு தலையில் பூ அணிந்து கோவிலில் தேவார திருவாசகம் பாடி வருவார்கள்.

உழவாரப்பணி செய்ததால் அவர்களுக்கு தனியாக சர்க்கரைப் பொங்கலும், வெண் பொங்கலும் ,தலைக்குப் பூவும் சில சமயம் வாழைப்பழங்களும் தேங்காய் மூடியும் கிடைக்கும்.

"பூரணி ஆரம்பிச்சு வச்சது. பிரதோஷ பூஜை. கப்புனு புடிச்சுகிச்சு. இப்போ வெளியூர்லேர்ந்தெல்லாம் வந்து செய்யறாங்க."

"அப்படியா... யார் வந்தது வெளியூர்லேர்ந்து."

"வேண்டிக்கிட்டாங்களாம். மூணு பிரதோஷம் வந்து உனக்கு வேலை செய்யறேன். என் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிக்கொடு அப்படின்னு. அம்மாவும் பொண்ணும் வந்து பெருக்கி சுத்தம் பண்ணி வரப் போற படியெல்லாம் பெருக்கி மெழுகி கோலம் போட்டு காவி எழுதி எல்லாம் செய்திருக்காங்க. நாலாவது பிரதோஷத்தினுடைய மறுநாள் பொண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாகிப் போச்சாம். அந்தம்மா வந்து



பெரிய மாலை போட்டுப் போச்சு. இப்போ சொல்லி உள்ளூர்ல இருக்கிற மூணு நாலு பேர் அதே மாதிரி பொண்ணுக்கு கல்யாணம் ஆகணும். பிள்ளைக்கு வேலை கிடைக்கணும்னு பிரதோஷ வேலை பண்றாங்க."

"அப்படிப் போடு பொழிச்சலூர் சிவன் கோவில் பெருசா வரப் போகுது."

"வரப்போகுது என்னா வந்துடிச்சு. எல்லாம் அந்தப் பூரணிதான் காரணம்."

பூரணி அப்பாவுக்கு மனதுக்குள் நன்றி சொன்னாள்.

அப்பாவால் வீடு பதட்டமில்லாமல் இருந்தது. அம்மாவால் இனிமை அதிகம் இருந்தது.

எட்டு மணிக்கே அடுப்பை அணைத்து விடுவதால் பால் மட்டும் காய்ச்சி பத்து மணிக்கு எல்லா வேலையும் முடிந்து விடுவதால் அம்மாவுக்கு நிறைய நேரம் இருந்தது.

கொஞ்ச தூரம் நடக்கறது நல்லது என்று யாரோ சொல்ல அவள் ரப்பர் செருப்பு போட்டு பொழிச்சலூரின் அமைதியான தெருக்களில் வேகமாக நடப்பாள். பிறகு வீட்டிற்கு வந்து குளித்து விட்டு கோயில் மூடப்போகும் நேரம் அர்த்தஜாம பூஜையைப் போய் பார்ப்பாள்.

நெற்றி நிறைய பட்டையாய் விபூதியோடு, குங்குமம் வைத்து மிகுந்த களையோடு வருவாள். பிறகு திண்ணையில் உட்கார்ந்து வெறுமே நாமஜபம் சொல்லிக் கொண்டிருப்பாள். இடையறாது ராமநாமம் சொல்வாள்.

அம்மாவின் முகம் அழகாகிவிட்டது என்று அவள் உறவினர்கள் சொல்லுவது வழக்கம்.

ஏன் அழகாவாது. ஆம்படையான் உள்ளங்கையில வச்சு தாங்கறான். சொந்தத்துல வீடு. அரசாங்க உத்தியோகம். கண்ணுக்கு அழகா கெட்டிக்காரப் பொண்ணு. நல்லா பூசிக்கிற பையன்னு ரெண்டே ரெண்டு குழந்தைங்க. மாமியார் புடுங்கலோ, மாமனார் புடுங்கலோ ஒன்னுமில்லை. இந்த மாதிரி புருஷன் எனக்கு வாய்ச்சா நானும் தான் சீவி சிங்காரிச்சுட்டு

நல்லாயிருப்பேன். ராத்திரி பத்து பத்தரையாச்சுன்னா சிகப்பா ஒரு எண்ணெயை மூஞ்சியெல்லாம் தடவி உட்கார்ந்துட் டிருக்கா, என்னாடின்னு கேட்டான். எதிர்வூட்ல ஒரு ஐயரே காய்ச்சி இறக்கி வடிகட்டி தாராறாம். ராத்திரி முழுக்க ஊறி காலை யில சோப்பு போட்டு கழுவிட்டோம்னா முகம் பளபளன்னு இருக்குமாம். அதைத்தவிர தினமும் வேப்பங்கொழுந்து திங்க ராங்களாம். வீட்ல இருக்கற அத்தினி பேரும் விடாது சாப்பிடு வாங்களாம். புருஷன் கொடுத்த கவர்ச்சி எல்லாமா சேர்ந்து அவளை பேரழகியா காட்டுது.''

பொறுமலாக அம்மாவோடு கூடப்பிறந்த தங்கை தான் பேசினாள்.

பாவம். அவள் வீடு வேறு விதமாக அமைந்து விட்டது.

அம்மாவின் அழகுக்குக் காரணம் அவளது ஆசையின்மை. நகைக்கோ, பட்டுப் புடவைக்கோ வேறு அசட்டுக் கர்வங் களுக்கோ அலையாத தன்மை.

"நல்ல புருஷன். நல்லா சம்பாதிக்கறாரு. கேக்காமலேயே எதுவேணாலும் வாங்கித்தர்றாரு. அதுக்கப்புறம் இதைக் கொண்டா, அதைக் கொண்டான்னா நான் என்னத்த கேட்க ணும். யார்கிட்ட காமிக்கப் போறேன். அண்ணன் வாங்கிக் கொடுத்ததாக ஆம்படையான்கிட்ட காமிக்கலாம். ஆம்படை யான் வாங்கிக் கொடுத்தார்னு யார்கிட்ட காமிக்கிறது. அண்ணன்கிட்ட காமிக்கணுமா. அது தேவையில்லை. என் புருஷன் என்ன வாங்கிக் கொடுத்தாரு, எதுக்கு வாங்கிக் கொடுத் தாருன்னு எங்க ரெண்டு பேருக்கும் உண்டான ரகசியம். அது என் புள்ளைங்களுக்கு கூட தெரிய வேண்டிய அவசிய மில்லை. நான் எதுவோ கொடுத்திருப்பேன். அவரு எதுவோ வாரி வழங்கியிருப்பாரு. இதைப் போய் வெளிய சொல்லிக்க முடியுமா. புருஷன் என்னை நல்லா வச்சிருக்கான்னு நானா சொல்லணுமா தேவையே இல்லை. என் மூஞ்சி சொல்லும். என் குழந்தைங்க சொல்லும்.

நாமளும் தனிக்குடித்தனம்னு வந்தாச்சு. அப்புறம், உறவுக் காரங்கிட்ட போய் இழையறது எனக்கு புடிச்ச விஷயம் இல்லை.



நல்லது கெட்டதுக்கு போயிட்டு வாது, நல்லாயிருக்கியான்னு அங்க கேட்டுக்கறது. போன வருஷம் என் பாட்டி செத்துப் போயிட்டாங்க.கையில நாலு புடவை, பாவாடை அடுக்கிட்டு நாட்டுப்புறத்துக்கு போயிட்டு வரலியா. ஊர்ல இருக்கிற அத்தனை பேரையும் பார்த்து விசாரிச்சுட்டு வரலியா. என்னா... அழவா போனோம் இல்லை, எப்படியிருக்கீங்க நல்லாயிருக் கீங்களா. நான் நல்லாயிருக்கேன்னு விசாரிச்சுட்டு வரத்துக்கு போனோம். அவ்வளவு தான். புருஷன் கொடுத்தார்னு காட்டற துக்கு என்னா இருக்கு. எனக்கு புரியவேயில்லை'' என்று அம்மா சொல்வது வழக்கம்.

அம்மாவின் பல குணங்கள் பூரணிக்கும் வந்திருந்தன.

வீடு பற்றி மற்ற தோழிகள் பேசுகிற பொழுது அவள் ஒரு நாளும் தன் வீடு பற்றி மற்றவர்களிடம் விவரிப்பதில்லை.

"யாருடி அது, உன் கூட பஸ்ல வந்து இறங்கினது. உங்க ஆளா" என்று அவள் வேலை செய்யும் இடத்தில் ஒரு பெண் கேட்ட போது அவள் திரும்பி கள்ளென்று முறைத்தாள்.

"அது என் தம்பி. கூட எந்த ஆம்பளை வந்தாலும் உன் ஆளான்னு கேட்கற கெட்ட பழக்கத்தை நீ மாத்திக்க."

கடிந்து கொண்டாள்.

ஆனால், அப்படிக் கேட்டவள் மீது கோபப்படுவதில் நியாயமே இல்லை. அவள் எத்தனை சுற்றியும், எவ்வளவு சீராக உடுத்திக் கொண்டும் அவளுக்கென்று எந்த ஆளும் கிடைக்க வேயில்லை. ஆள் கிடைத்ததாக மாதக்கணக்கில் பொய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதிகமாக சுற்றுவதாகவும், அடிக்கடி இம்சிப்பதாகவும், என்ன செய்வது என்று தெரியாததாகவும் புலம்பிக் கொண் டிருந்தாள்.

இப்படிப் பேசுவதை அவள் வீட்டில் சொன்ன போது நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் என்று சொன்னது அத்தனையும் பொய் என்று சத்தியம் செய்து விட்டாள்.

பூரணியின் அலுவலகம் ஒரு வாரம் முழுவதும் அவளைப் பற்றியே கேலி பேசிக் கொண்டிருந்தது.

"வேலைக்கு போகணும்னு ஆசைப்பட்டா போயிட்டு வாயேம்மா. நாலாயிரம் ரூபா சம்பளம். சாதாரண விஷயமா. பி.காம் படிச்சுருக்க. கணக்கு எழுத கூப்பிடறாங்க. தெரிஞ்ச ஆளுங்க இருக்கற இடம் தான். அந்தக் கம்பெனி முதலாளி யோட சம்சாரம் என்கூட படிச்சவங்க தான். பதினொரு வருஷம் அது என் கூடதான் பஸ்ல வந்தது. பார்த்துக்கப்பா... அப்படின்னு அவங்கப்பா தான் அடிக்கடி வந்து சொல்லிட்டு போவாரு. நான் ஒரு வார்த்தை பேசினது இல்லை. ஆனா பஸ்ல ஏறிடுச்சா டிக்கெட் வாங்கிடுச்சா, இறங்க வேண்டிய இடத்துல இறங்கிடுச் சான்னு தவறாது கவனிப்பேன். நான் அப்படி கவனிக்கறேன்னு அந்தப் பொண்ணுக்கு தெரியும். என்னை விட மூணுமாசம் பெரியவங்க. ரொம்ப பிரியமா தம்பின்னு கூப்பிடுவாங்க. ஒரு கம்பெனியில வேலைக்குப்போ உலகம் தெரிஞ்சுக்க."

அப்பா அனுப்பினார்.

வேலைக்கு சேர்ந்த அன்றே முதலாளி வந்து யாரது பூரணி என்று விசாரித்து விட்டு, "உன்னைப் பற்றி, உன் தகப்பனைப் பற்றி என் மனைவி அதிகம் சொன்னாள். உனக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா. எந்தக் குறை இருந்தாலும் எனக்குச் சொல்" என்று சொல்லி விட்டுப் போனார்.

சுற்றியிருந்த அத்தனை பேரும் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவளிடம் மரியாதையாக நடந்து கொண்டார்கள்.

ஒரு வருடம் நன்கு அங்கு வேலை செய்ததால் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவியாக இருந்தது.மனிதர்களை புரிந்து கொள்ள அந்தச் சூழ்நிலை உதவியது.

"எந்த மொழியையும் கத்துக்கறது கஷ்டமேயில்லை.காதுல மொழியை கேட்டுக்கிட்டே இருந்தா மனசு தானா கிரகிச்சுக்கும். ஹிந்தி ஒழிக, ஆங்கிலம் படிக்காதே அப்படின்னு கத்தினா புத்தி கோணங்கித்தனம் பண்ணும். ஒரு ஆள் எத்தனை மொழி கத்துக்கிட்டாலும் நல்லது தான். இங்கிலீஷ் படி. ஆங்கிலம் பெரிய பால்கனி, திறந்த ஜன்னல், உலகம் முழுசும் காட்டற



இடம். ஆனா படிச்சு மாளாது. ஒரு ஆயுசு போதாது. அத்தினி புஸ்தகம் இருக்கு இங்கிலீஷ்ல. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவுன்னு சொல்றோமே. இந்தக் கைம்மண் அளவு தெரிஞ்சுக்கணும்னா நல்லா இங்கிலீஷ்- படிக்கணும். இங்கிலீஷ் தெரியலைன்னு வச்சுக்கோ வெறும் ஒரு சிட்டிகை புத்திதான் இருக்கும்."

அலுவலகத்தில் உள்ள சில கெட்டிக்காரர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். படிக்கிற பழக்கமும் அந்த அலுவலகத்தில் தான் ஏற்பட்டது.

படித்ததைப் பற்றி பரிமாறிக் கொள்கின்ற புத்தியும் அப்பொழுது தான் வந்தது.

பூரணி பேசுகிறாள். கவனிக்கிறாள். சிரிக்கிறாள். சந்தோஷ மாகிறாள் என்று உற்றுப் பார்த்த ஒரு வாலிபன் அவளுக்கு அழகு தமிழில் காதல் கடிதம் எழுதினான்.

தான் மிகப்பெரிய கவிஞனாக மாறப் போவதாகவும், தனக்கு வாழ்க்கைத் துணையாக வர முடியுமா என்று கேட்டான்.

அவளை பார்க்கும் பொழுது பரவசமாகி விடுவதாகவும் அவள் அழகு அவனை பித்தனாக்குவதாகவும், அவளை நினைத்தே பல கவிதைகள் எழுதியிருப்பதாகவும், இரண்டு கவிதைகள் இணைத்திருப்பதாகவும் அந்த கடிதம் விளக்கி யிருந்தது. உங்களுடைய பதிலை விரைவில் சொன்னால் நல்லது. மேற்கொண்டு உறவு தொடர வசதியாக இருக்கும் என்று கடிதம் முடிக்கப்பட்டிருந்தது.

பூரணி பயந்தாள்.

## 3

கடிதத்தைப் படித்து விட்டு பூரணி மிரண்டாள். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். சட்டென்று யாரோ முகத்தில் எதையோ வீசியது போல ஒரு வேதனையை அனுப வித்தாள். யாரிடமாவது சொல்லலாமா என்று யோசித்தாள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்து. இல்லை வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

அவன் எதிரே வந்து நின்ற போது மாலையில் பேசலாம் என்று அமைதியாக பதில் சொன்னாள். அவன் சந்தோஷமாகத் திரும்பினான்.

இவன் சந்தோஷத்தை உடைக்கப்போகிறோமே என்ற கவலை வந்தது. அப்படி உடைத்தால் இவன் என்ன செய்வான் என்ற பதட்டம் ஏற்பட்டது. ஆனாலும், அடக்கிக் கொண்டாள். உளமாற கடவுளை வணங்கினாள்.

மிக இக்கட்டான இடத்தில் இருக்கிறேன்.நான் வேலை செய்யும் இடத்தின் ரம்மியத்தை இந்தக் கடிதம் குலைத்து விட்டது. இவன் ஏதும் செய்யாதிருக்க உன் துணையை நாடுகிறேன் என்று மனமுருக பிரார்த்தனை செய்தாள்.

மாலையில் பஸ் ஸ்டாப்பில் அவனை சந்தித்தாள். காபி சாப்பிடலாமா என்று கேட்டாள். அவன் திகைத்து பின் சந்தோஷமாக ஒத்துக்கொண்டான். அருகிலுள்ள உடுப்பி ஹோட்டலுக்கு அழைத்துப் போனான்.

"ஏதுனா டிபன் சாப்பிடலாம்" என்று அவன் சொல்ல, "இல்லை," காபி மட்டும் போதும்" என்று அவள் தீர்மானமாகச் சொன்னாள்.

"தித்திப்புல ஆரம்பிப்போமே" என்று அவன் அசடு வழிய "எனக்கு சர்க்கரை ஜாஸ்தி வேண்டாம். கசப்பு காபியாவே இருக்கட்டும்" என்று சர்வரிடம் ஆர்டர் சொன்னாள்.

அவன் மீண்டும் திகைத்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு என்ன வயசாச்சுன்னு தெரியலை. இருவத்தெட்டு இருக்குமா. ஆனால், இந்த இருவத்தெட்டு வயசுக்கு இருக்க வேண்டிய அமைதி உங்க கிட்ட இல்லை. உங்களாண்ட ஒரு துள்ளற, ஆட்டம் போடற, கொஞ்சம் அலட்டலா இருக்கிற புத்தி இருக்கு. உங்க கவிதையில, உங்க கடிதத்துல, உங்க சட்டையில மூஞ்சியில கண்ணுல எல்லாத்துலயும் அது தெரியுது. நான் உங்கள மாதிரி ஆள் இல்லை. நான் வேற விதம்.



என்னை லவ் பண்றதுக்கு ஏதோ நாலஞ்சு காரணம் சொன்னீங்க. நான் உங்களை லவ் பண்றதுக்கு எனக்கு ஒரு காரணம் கூட கிடைக்கலை. உங்களை மட்டுமில்லை நான் யாரையுமே லவ் பண்ணமுடியாது. ஏன் தெரியுங்களா. நான் லவ் பண்றத என் வீடு விரும்பாது.

எங்க அப்பா, அம்மா மோசமானவங்களா இருந்தா, குரூரமானவங்களா இருந்தா, என்னை புரிஞ்சுக்காதவங்களா இருந்தா. என்னை புரிஞ்சுக்கற இன்னொரு ஆள் வேணுமேன்னு நான் யாரையாவது லவ் பண்ண போயிருக்கணும். ரொம்ப அற்புதமான அப்பா, அம்மா. கொஞ்சம் முகம் வாடினாலும் என்னா... என்னா... அப்படின்னு பதறுகிற பெற்றோர் அவங்க. அவங்க மனசு கோணும்படியா நான் நடந்துக்கவே மாட்டேன். என் மனசு கோணும்படியா அவங்க இதுவரைக்கும் நடந்ததில்லை. நான் லவ் பண்றேன்னு தெரிஞ்சா ஏண்டா கண்ணு. நான் உனக்கு என்ன குறை வச்சேன் அப்படின்னு அப்பா கேட்பாரு. அதுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன். எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க எங்க வீட்ல இருக்கற என் பெற்றோர்களுக்குத் தெரியும். கல்யாணத்தை நடத்தக் கூடிய உறவு பலம், பண பலம் எங்கப்பாகிட்ட உண்டு. கல்யாணத்துக்குன்னு அவர் துட்டு சேர்த்திருக்காரு. நகை பண்ணியிருக்காரு. வெள்ளிப் பாத்திரம் செய்திருக்காரு. அதனால நான் யாரையும் லவ் பண்ண வேண்டிய அவசியமேயில்லை''

"என்னா... இவ்வளவு படிச்சும் பழமைவாதி மாதிரி பேசறீங்க."

அவன் லேசான சிடுசிடுப்புடன் பேச ஆரம்பித்தான்.

"நீங்க சொல்றது புரியலை."

பூரணி அவனையே உற்றுப் பார்த்தாள்.

"காதல் செய்றது தப்பா. யாரோ ஒரு முகம் தெரியாத, விவரம் தெரியாத ஒரு ஆளை உங்கப்பா, அம்மா கொண்ணாந்து நிறுத்துவாங்க. நீங்க சரின்னு தலையாட்டுவீங்க."

"ஆமாம். எங்க அப்பா யாரோ ஒரு ஆளை கொண்ணாந்து நிக்கவைக்க மாட்டாங்க. ஒன்னுக்கு நூறு பேர்கிட்ட விசாரிச்

சதுக்கு அப்புறம் தான் கொண்டு வருவாங்க. இப்போ என் முன்னாடி உட்கார்ந்திருக்கீங்களே உங்களைப் பத்தி எனக்கு என்ன தெரியும். எதுவும் தெரியாது. உங்களை லவ் பண்ணணும்னு நீங்க எதிர்பார்க்கறீங்க. எந்த விவரமும் தெரியாத உங்களை நான் நேசிக்கணும்னு பெருசா கடிதம் எழுதறீங்க. ஆனா, எங்கப்பா கொண்ணாந்த ஆளை யாரோ முகம் தெரியாத ஆள்னு நீங்களா வாய்விட்டு சொல்றீங்க, இல்லை. எனக்குத் தெரிஞ்ச நீங்க தான் முகம் தெரியாத ஆள். நீங்க யாரோ எனக்குத் தெரியாது. தேவையில்லாத இந்த மாதிரி லெட்டர்லாம் எழுதாதீங்க."

"எதுக்கு காபி சாப்பிட கூப்பிட்டீங்க."

"மத்தியானம் நீங்க லெட்டர் கொடுத்ததுலேர்ந்து எனக்குத் தலைவலி. அந்தத் தலைவலி குறையறதுக்குத் தான் காபி சாப்பிட கூப்பிட்டேன். வேணாம்னா நீங்க எழுந்து போங்க.நான் சாப்பிட்டு பஸ் பிடிச்சு போறேன்."

அவன் எழுந்து விறுட்டென்று வெளியே நடந்தான்.

அவள் நிதானமாக காபியை குடித்து விட்டு இரண்டுக்கும் சேர்த்து காசு கொடுத்து விட்டு வெளியே வந்தாள். பஸ் ஏறினாள்.

முகம் கழுவி சாமி படத்திற்கு முன்னால் உட்கார்ந்து நான் அவனை புண்படுத்தியிருந்தால் மன்னித்து விடு என்று கேட்டாள்.

அவள் வீடு அவளை ஆச்சரியத்துடன் பார்த்தது. அவள் விவரம் சொன்னதும் பதறிற்று.

எந்த வீடு தன் வீட்டிலுள்ள பெண்களுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கிறதோ அந்த வீடு லட்சுமி கடாட்சம் நிறைந்ததாக இருக்கும். எந்த வீடு தன் வீட்டுப் பெண்களுக்கு மரியாதை கொடுக்கும் நிமித்தமாக முழுமையானப் பாதுகாப்பும், நெல்முனையளவும் பயமின்றி தனக்கு நேர்ந்ததை பரிமாறிக் கொள்கிற தைரியமும் கொடுத்திருக்கிறதோ அந்த வீடு வளர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் இருக்கும்.



எந்த வீட்டில் பெண்கள் அழுகிறார்களோ, பயந்து நடுங்குகிறார்களோ, தன் மனப்புழுக்கத்தை வெளியே சொல்ல முடியாமல் தவிக்கிறார்களோ அந்த வீடு இருளடைந்தும், எந்த வளர்ச்சியும் இல்லாமல் இருக்கும். அந்த வீட்டு ஆண்கள் தரித்திரர்களாக இருப்பார்கள். மனநோயாளிகளாக மாறுவார்கள்.

பூரணி தனக்கு காதல் கடிதம் வந்ததைச் சொன்னதும் அவள் வீடு அதிர்ந்து போயிற்று. சிறிது கூட பூரணியின் மீது அவள் வீடு சந்தேகம் கொள்ளவில்லை.

"என் பொண்ண பத்தி தப்பா ஒரு வார்த்தை கடவுள் வந்து சொன்னா கூட நான் நம்பமாட்டேன்" பலமுறை பூரணியின் அம்மா அடித்துச் சொல்லியிருக்கிறாள்.

இப்பொழுதும் அதே நிலையில் நின்றாள்.

"எந்த தொடப்பக்கட்டை அவன், எழுந்து பளார் பளார்னு அறைஞ்சிட்டு வர வேண்டியது தானே. கொண்டு போய் முதலாளிகிட்ட சொல்லிட்டு வர வேண்டியதுதானே. ஏங்க... சட்டை மாட்டிகிட்டு கிளம்புங்க. அந்த முதலாளி அம்மாகிட்ட போயிட்டு வந்துடலாம். என்னா ஆபீஸ்தான் நடத்தறீங்களா. இல்லை வேற எதுனாவா அப்படின்னு பளிச்சுனு கேட்டுட்டு வரலாம். உங்க ஆபீஸ்ல இருக்கறவங்களுக்கெல்லாம் வேலை இல்லையா. இதான் வேலையா. இல்லை எல்லாரும் கண்டிப்பா லவ் பண்ணியாகணும்னு ஏதாவது சட்டம் போட்டிருக்கீங்களா அப்படின்னு கேட்கலாம் வாங்க."

அம்மா படபடத்தாள். அப்பா வழக்கத்தை விட மிக அமைதியாக இருந்தார்.

"அந்த லெட்டர் எங்கம்மா."

பை பிரித்து கடிதத்தை எடுத்து அப்பாவிடம் கொடுத்தாள்.

அம்மாவுக்கு கோபம் வந்தது.

"இந்த கருமத்தை ஏண்டி பையில வச்சுண்டிருக்க. கிழிச்சு அவன் மூஞ்சியில விட்டெறிய வேண்டியதுதானே."

"இல்லைம்மா. நாளைக்கு நான் எழுதவே இல்லை. பூரணி தான் என்னைப் பார்த்து லவ் யூன்னு சொல்லிட்டாள்னு சொன்னா தப்பாயிடுமில்லை. அதனால தான் திருப்பிக் கொடுக்கலை. அதுவும் தவிர அதுல ரெண்டு கவிதை இருந்தது. கவிதையை எதுக்கு கிழிக்கணும்னு பையோட எடுத்தாந்துட்டேன்."

அப்பா கடிதத்தை பிரித்துப் படித்து பார்த்தார். அம்மாவிடம் நீட்டினார். அம்மாவும் படித்தாள்.

அப்பாவின் முகத்தை ஆவலோடு பார்த்தாள்.

"ஒண்ணும் பெரிய தப்பு இல்லை. நீ பார்க்கறதுக்கு அழகா இருக்கற. சிரிக்கும் போது நல்லாயிருக்க. பேசறபோது சந்தோஷமா இருக்கு. உன்னை நான் லவ் பண்றேன். உன்னை கல்யாணம் பண்றதுக்கு விரும்பறேன்னு சொல்லியிருக்கான். எல்லாப் பசங்களுக்கும் இந்த உரிமை இருக்கு இல்ல. அழகான பொண்ண பார்த்தா கல்யாணம் பண்ணிக்கறேன்னு ஒருத்தன் சொல்றது பெரிய குத்தமா எனக்குத் தெரியலை. ஆனா, மாட்டேன்னு சொன்னா இந்தப் பசங்க எப்படி எடுத்துப்பாங்க. அதான் பயமா இருக்கு."

"இழிவா பேசுவானுங்க. இவ லோலுன்னுவாங்க. கர்வின்னுவாங்க. எதுனா சொல்வாங்க. இவளா வந்து எங்கிட்ட லவ் யூன்னு சொன்னா நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்னு புரட்டி பேசுவானுங்க" அம்மா கூவினாள்.

"செய்யலாம் இதைவிட மோசமானது செய்யலாம்"

"என்னா மோசமானது செய்யலாம்."

அம்மா லேசான பதட்டத்தோடு அப்பாவைப் பார்த்தாள்.

"ரெண்டு பேரை கூட்டிட்டு வந்து ஆட்டோல தூக்கிப் போட்டு எங்கனா கொண்டு போய் கெடுத்துடலாம்."

அப்பா நிதானமாகச் சொல்ல அம்மாவும்,மகளும் அவரை அதிர்ந்து போய் பார்த்தார்கள்.

"பேப்பர்ல படிக்கலை. லவ் பண்ண மாட்டேன்ற பொண்ண இழுத்துட்டுப்போய் இம்சை பண்றது இந்த ஊருக்கு புதுசா. பதினாறு வயசு பொண்ண லவ் யூன்னு சொல்லிட்டு மாட்



டேன்னவுடனே கத்தியில குத்திட்டானே, என்னைக் காப்பாத்துங்கோ... காப்பாத்துங்கோன்னு பதினஞ்சு நிமிஷம் கத்தியிருக்கா. யாரும் காப்பாத்தலை. நடுரோட்ல பரிதாபமா செத்துப் போயிருக்கு. முந்தாநேத்து பேப்பர் படிக்கலை."

"என்னா சொல்றீங்க.சரியா சொல்லித் தொலைங்க."

"பூரணி வேலைக்கு போக வேண்டாம்."

"ஏன். சும்மா வீட்ல இருக்கறதுக்கு பதிலா வேலைக்குப் போ. உன் கல்யாணத்துக்கு உன் காசு உதவட்டும்னு அனுப்பினோம். போன இடத்துல நிலைமை சரியில்லை அப்படின்னா ஒதுங்கிக்கறது தானே நல்லது. என்னத்துக்கு அங்க போகணும்."

"அதுக்காக நல்ல வேலையை விட்டுடறதா."

"எது நல்ல வேலை. எது பூரணி வேலை. இந்த ஆபீஸ்லயே வேலை செய்யறதா. இந்த நாலாயிரம் ரூபா சம்பளமா."

"இல்லை. பூரணி வேலை குடும்பத்துப் பொண்ணா இருக்கறது. கல்யாணம் பண்ணிகிட்டு புருஷனுக்கு சோறு சமைச்சுப் போட்டு மாமியார், மாமனாரோட சௌக்கியமா இருக்கறது. இந்த வேலைக்குத் தான் பூரணிய நான் பழகணும்னு நினைச்சுகிட்டிருக்கேன். பி.காம். படிச்சிருக்கேன். வேலைக்கு போறேன்னா சரி போயிட்டு வந்து வெறுமனே படுத்திருந்தா என்னாம்மா இப்படி பண்றியேன்னு கேட்கலாம். பூரணி நல்லா சமைக்குது. வீடு நிர்வாகம் பண்ணுது. வேலைக்கும் போயிட்டு வருது. அதனால சரின்னு சொன்னேன். இப்போ இந்த தொந்தரவு வரும் போது வேணாம்னு தான் சொல்லத் தோணுது."

"போய் முதலாளிகிட்ட சொல்லுவோமே."

"சொல்லி என்னா பண்ணப்போறாங்க. என்ன செய்துட முடியும். இந்தக் காலத்துப் பசங்க இப்படித்தாம்ப்பா பெரும்போக்கா போயிடு. ஒண்ணும் கண்டுக்காதன்னு அவங்க சொல்லிட்டா கொண்டு போய் சொன்ன மூஞ்சிய எங்க வச்சுக்கறது."

"அப்படி சொல்லிடுவாங்களா. அவங்களுக்கு பொண் குழந்தை கிடையாதா."

"அவங்க பொண் குழந்தைக்கு இதுமாதிரி வந்தா அவன் வெட்டுவான், குத்துவான். ஊரார் வீட்டு பொண் குழந்தைக்கு லவ் லெட்டர் வந்தா பெருசா எடுத்துக்காதன்னு தான் சொல்லு வான்."

அப்பா மிக மிக நிதானமாகப் பேசினார்.

'இந்தப் பையனையே எடுத்துக்கோயேன். இவன் லவ் லெட்டர் எழுதிட்டான் இல்ல. இவன் தங்கச்சிக்கு யாராவது லவ் லெட்டர் எழுதினா இவன் என்ன பண்ணுவான்னு நினைக்கிற. லவ் லெட்டரே வேணாம்.ஒரு மொட்டை கடுதாசி எழுதிப் போடறோம்னா இவன் என்ன பண்ணுவான்.அவன் ஏண்டி எழுத நான்னு அந்த பொண்ணை அடிக்கறதுக்கு போவான். எப்படிடி லவ் பண்ணேன்னு முடியை பிடிச்சு குலுக்குவான். இவனுக்கு ஒரு நியாயம்- இவன் தங்கச்சிக்கு ஒரு நியாயம். இந்த மாதிரி அவசரப் படறவங்களெல்லாம் அல்பத்தனமாத்தான் இருப் பாங்க."

"அப்பா நான் கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்காத. இந்தாள் உண்மையிலேயே என்ன பண்ணியிருக்கணும்" பூரணி வியப் புடன் கேட்டாள்.

"உனக்கு திமிருடி. கேள்வி கேட்கறா பாரு."

அம்மா பல் கடித்துக் கொண்டு பூரணியை நோக்கி கை ஓங்கினாள். ஆனால் பூரணி அம்மாவைப் பார்த்து கண் சிமிட் டினாள்.

"சும்மாயிரும்மா. அப்பா எதுனா சொல்லுவாரு. அது என்னான்னு கேட்போம்."

"இதுவும் ஒரு நல்ல கேள்விதான் பாக்கியம். சொல்லு. இந்த பையன் என்ன பண்ணியிருக்கணும்னு நினைக்கிற."

"எனக்கு ஒரு எழவும் தெரியாது.இந்த மாதிரி பண்றவனை கை கால் உடைச்சு வீட்டுக்கு அனுப்பறது தான் எனக்குத் தெரியும்."

"அந்தப் பையன் எங்கிட்ட வந்து கேட்டிருந்தான்னா. டேய் லெட்டரெல்லாம் எழுதாத. அது அவங்களை கலவரப்படுத்தும்.



அவங்க வீட்டு அட்ரஸ் வாங்கி நேரா அந்தப் பக்கம் போயி அவங்க வீட்டு பெரியவங்ககிட்ட இந்த மாதிரி நான் அந்தக் கம்பெனியில வேலை செய்யறேன். எனக்கு இவ்ளோ சம்பளம். உங்க பொண்ணை பிடிச்சருக்கு. கல்யாணம் பண்ணலாமா. நான் இன்ன ஜாதி, எங்கம்மா இப்படி. என் தங்கச்சிய இந்த இடத் துல கல்யாணம் பண்ணி கொடுத்திருக்கு. அப்படின்னு விலா வரியா தன்னைப் பத்தி சொல்லி நம்மளபத்தி விசாரிச்சு நேர் பேச்சா பேசியிருக்கலாம். அப்போ ஓர் மரியாதை இருக்கும்."

"அப்போ கல்யாணம் பண்ணி கொடுத்துருவீங்களா" இடுப்பில் கை வைத்து அம்மா அப்பாவை முறைத்தாள்.

"எல்லாம் சரியா இருந்தா கொடுக்கலாமே."

"வேற ஜாதிக்காரனா இருந்தா."

"அது முக்கியமில்லை. கலாச்சாரம் முக்கியம். நம்ம வீட்டுக் கலாச்சாரமும், அவங்க வீட்டுக் கலாச்சாரமும் இழைஞ்சு போகு மான்றது முக்கியம். எட்டு வேலி நிலம், நாலு பங்களா, ஆறு கார் இருந்தா நான் வேணாம்னு சொல்லிருவேன். ஏன், அந்தக் கலாச்சாரமும், நம்ம கலாச்சாரமும் ஒத்துப்போகாது. நமக்கு இருக்கறது முன்பக்கம் தூக்கிக் கட்டின ஓட்டு வீடு... அரசாங்க உத்தியோகம். நாப்பது, அம்பது பவுன் நகை. இது கார் பங்களா வோட சரியா போகுமா. ஆக, கார் பங்களா வச்சிருக்கறவங்க வேற ஜாதி."

"அப்போ எது நம்ம ஜாதி."

"நம்மள மாதிரியே படிக்கறவங்க. நம்மள மாதிரியே நிதானமா பேசறவங்க. நம்மள மாதிரியே குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுக்கறவங்க.ரெண்டுக்கு மேல பெத்துக்காத இறுக்கமா அமைதியா அடக்கமா வாழறது. ஒரு சொந்த வீடு. ஒரு மோட்டார் பைக்குன்னு இருக்கறவங்க. வேலைக்கு போறவங்க. கதாகாலட்சேபம் கேட்கறவங்க. ஜபமாலை உருட்டி நாமஜபம் பண்றவங்க. சோத்துக்குப் பறக்காத குறைச் சலா சாப்பிடறவங்க. அப்படியொரு கலாச்சாரம் இருக்கு இல்ல. அந்த மாதிரி இழையலா இருந்தா ரொம்ப சந்தோஷமா பொண்ணை கொடுத்துருவேன். குலம், கோத்திரம் கேட்கமாட்

டேன். குலம் கோத்திரம்னு பிரிஞ்சதே இந்த கலாச்சாரத்தை ஒட்டிதான்."

"நம்ம சாப்பாடும், அவங்க சாப்பாடும், நம்ம உடுப்பும், அவங்க உடுப்பும், நம்ப மொழியும், அவங்க மொழியும் நாம் சாமி கும்பிடறதும், அவங்க சாமி கும்பிடறதும் ஒன்னா இழைஞ்சு வருதான்னு பார்க்கறது தான். பாவ புண்ணியத்துக்கு அஞ்சறவனா, தர்ம நியாயம் தெரிஞ்சவனா இருந்தா அதை விட பெரிய யோக்கியதை என்னான்னு நினைக்கற."

"அது சரி இப்போ என்னா பண்ணப் போறீங்க."

"நாளைலேர்ந்து நீ வேலைக்கு போக வேணாம்."

## 4

"நாளைலேர்ந்தாப்பா?"

பூரணி அப்பாவை அதிசயமாய் பார்த்தவாறு கேட்டாள். அவர் நிதானம் அவளுக்கு பிடித்திருந்தது.

"போய் என்னம்மா பண்ணப்போற. இந்த மாசம் முழுக்க போய் சம்பாதிச்சுட்டு வரப்போறியா. நாலு நாள் வேலைக்குப் போனா தொடர்ந்து போறேன்னுதான் பேசத் தோணும். வேணாம்மா வீட்ல இருந்துடு. எவ்ளோ சீக்கிரம் கல்யாணம் பண்ணணுமோ பண்ணி முடிச்சுடறேன்."

"அப்பா... திடீர்னு கல்யாணம்னு பேசறீங்க?"

"ரொம்ப நாளா நினைச்சுக்கிட்டிருக்கேன். இருவது வயசுல பி.காம். முடிச்ச. இருவத்தோரு வயசுல கம்ப்யூட்டர் முடிச்ச. ரெண்டரை வருஷம் வேலை செய்த. இப்போ இருபத்திமூணு வயசு. இதானே கல்யாணத்துக்கு அழகான வயசு. கல்யாணத்தை முடிச்சுடறேம்மா. நானே போன மாசத்துலேர்ந்து எப்போடா கல்யாணம் வச்சுக்கலாம். யாரைப் போய் கேட்கலாம்னு நினைச்சுகிட்டிருந்தேன். இதுவா வந்து மாட்டிச்சு. விட்டுடு."



"போய் எழுதி கொடுத்திட்டு வந்துடட்டுமா. இங்கேர்ந்தே அனுப்பட்டுமா?"

"அது மரியாதை இல்லை. போய் முதலாளியைப் பார்த்து ரெண்டு நிமிஷம் பேசணும்னு சொல்லிட்டு, எங்க வீட்ல கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றாங்க. அப்பா வேலையை விட்டுடுன்னு சொன்னாரு அப்படின்னு சொல்லு."

"இந்தப் பையனைப் பத்தி ஏதாவது சொல்லணுமப்பா?"

"ஐய்யய்ய வேண்டாம்மா.அது அசட்டுப்புள்ளை. அதைப் பத்தி சொல்லாதயே வந்துடு. அதான் நல்லது."

மறுநாள் காலை அவள் வேலைக்குப் போய் தன் ராஜினாமாவை சமர்ப்பித்தாள்.

அந்த அலுவலகம் திகைத்தது.

"ஏன் திடீர்னு இந்த மாசம் முடிஞ்சு போங்களேன்."

"இல்லீங்க. நான் இனிமே வேலைக்கு போகவேணாம்னு அப்பா பிரியப்படறாரு" என்று அவள் சொல்ல அலுவலகம் அவளை நம்ப மறுத்தது.

"ஏன்னு நான் சொல்லட்டுங்களா?"

ஒருவன் எழுந்து நின்றான்.

அலுவலகம் அவனை திரும்பிப் பார்த்தது.

"அந்த கீழ இருக்கற ஸ்டோர் ரூம் பையன் உங்களுக்கு லவ் லெட்டர் கொடுத்துட்டான். அதை வீட்ல சொல்லிட்டீங்க. உங்க வீட்ல பயந்து விட்டுடுன்னுட்டாங்க. அதானே."

நடுஹாலில் விஷயத்தைப் போட்டு உடைத்தான்.

பூரணி மிரண்டாள்.

அவள் மிரட்சியை அலுவலகம் குறித்துக்கொண்டது.

"இதுவா காரணம் பூரணி. சொல்லு... நொறுக்கிடறேன்."

அவளுக்கு வேலை கொடுத்தவர் முஷ்டியை மடக்கிக் கொண்டு எழுந்தார்.

"என்ன அயோக்கித்தனம்யா இது. ஆபீஸ்ல ஒரு பொண்ணு வேலை செய்யக்கூடாதா. உடனே லவ் லெட்டர்தானா. எந்த தொடப்பக்கட்டை அவன். கூப்பிடுயா அவனை" ஆள் ஆளாளுக்கு கத்த ஆரம்பித்தார்கள்.

அவள் சட்டென்று எழுந்து அடக்கினாள்.

"எந்தக் காரணமும் இல்லை. போன மாசமே வேலை லேர்ந்து நிக்க சொன்னாங்க.நான் தான் இப்போ போறேன், அப்போ போறேன்னு அப்பாகிட்ட டபாய்ச்சிகிட்டிருந்தேன்."

"நீ இந்த மாசம் முழுக்க இருந்து வேலை செய்துட்டு போயேன்."

"வேணாம். எங்கம்மாவுக்கு முடியலை.அவங்களுக்கு உத வியா நான் கொஞ்சம் வீட்டு வேலை செய்யணும்னு நினைக் கிறேன்."

"என்னமோ மறைக்கறீங்க."

"எதுவும் மறைக்கலைங்க. இத்தினி நாள் எனக்கு எல்லாம் கத்துக்கொடுத்தீங்க. அத்தனை பேரும் என்னை அவசியம் ஆசிர்வாதம் பண்ணணும்."

அவளுக்கு வேலை கற்றுக்கொடுத்தவரின் அருகே போய் நெற்றி நிலம்பட விழுந்து வணங்கினாள். கால் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

அவருக்கு கண்ணீர் வந்தது. முகத்தை பொத்திக் கொண்டார்.

"ஆபீஸ்க்கே லட்சுமிகரமா இருந்தாயே. டக்குனு கிளம்பி போறியே. எனக்கென்னமோ மனசே ஆறலை போ" என்று அவர் விம்மினார்.

சிறிது நேரம் அந்த பெரியவரின் கையை கோர்த்துக் கொண் டிருந்து விட்டு அவள் எல்லோரிடமும் விடைபெற்றாள்.

அவள் வெளியே வரும்போது நாலு பேர் பார்க்க கடிதம் தந்தவன் தடேரென்று அவள் காலில் விழுந்தான்.

"என்னாங்க இது. ஏன் இது?" பூரணி விலகி பதறினாள்.



"நான்தான் தப்பு பண்ணிட்டேன். உங்களுக்கு லவ் லெட்டர் எழுதியிருக்கக்கூடாது. நீங்க தெளிவா இருக்கற பொண்ணு. உங்ககிட்ட பேசிட்டு பழகிட்டு இதைச் செய்திருக்கணும். டக்குனு செய்தது முட்டாள்தனம். தயவுசெய்து நான் இப்படிப் பண்ணிட்டேன்னு வேலையை விட்டுப் போகாதீங்க. நான் லவ் லெட்டர் எழுதினது தப்பு. மனசார மன்னிப்பு கேட்கறேன். அந்த லவ் லெட்டரை கொடுத்துடுங்க. கிழிச்சு என் மூஞ்சியில் அடிச்சுடுங்க."

அவன் சொன்னபோது அவள் பையிலிருந்து பிரித்து அந்த காதல் கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

"கவிதை நல்லாயிருந்ததுங்க. ஆனா, லவ்வுன்னதும் தான் தப்பாயிடுச்சு. எங்க வீட்ல இதைக் காமிச்சேன். அவங்க கொஞ்சம் வருத்தப்பட்டாங்க. அப்பவே சொன்னேன் கல்யா ணம் பண்ணிக்கோன்னு நீ கேட்கலைன்னு திட்ட ஆரம்பிச்சுட் டாங்க. அவங்க கல்யாணத்துக்கு வேகமா ஏற்பாடு பண்றாங்க. மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கறாங்க. அதனால் வேலைக்கு போக வேண்டான்னுட்டாங்க. போன மாசமே நான் நின்னிருக்க வேண்டியது. இந்த லவ் லெட்டர்னால இப்போ நிக்கும்படியா ஆயிப்போச்சு. பெருசா ஒன்னும் நினைச்சுக்காதீங்க. உங்களுக் குன்னு ஒரு பொண்ணு கிடைக்காமலா போகும்?"

எல்லோர் எதிரிலும் அவனிடம் சமாதானம் பேசிவிட்டு வெளியே வந்தாள். திரும்பி அலுவலகம் பார்த்தாள்.

சட்டென்று வாழ்க்கை திசை மாறியது போல் இருந்தது. மெல்ல கண்களில் நீர் கோர்த்தது.கண்ணமிறங்கியது.

எவ்வளவு அருமையான நண்பர்கள். அத்தனை அற்புதமான அலுவலகம். ஏனோ இந்த வாழ்க்கை சடக்கென்று பிடுங்கிக் கொண்டு போய்விட்டது.

இதற்கு காதற் கடிதம் காரணமல்ல. வேறு ஏதோ காரணம்.

"குருபலன் வந்துடுத்து ஓய்...உன் பொண்ணுக்கு நிச்சயமா கல்யாணமாகும்..."

எதிர்வீட்டு ஐயர் அப்பாவிடம் சொன்னது காரணமாக இருக்கலாம். குருபலன்தான் இதற்கு காரணமெனில் இந்த காதற்கடிதத்தை கடிவதும், இழிவாக்குவதும் எதற்காக. கிரகங்கள்தான் இந்த மாற்றத்திற்கு காரணமெனில் அந்த இளைஞனை நோவது எதற்காக.

பூரணி முகத்தை கர்ச்சீப்பால் அழுந்தத் துடைத்துக் கொண்டு பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள். பகல் நேர பஸ்ஸில் கூட்டம் இல்லாமல் இருந்தது.

பொழிச்சலூருக்கு வந்து இறங்கினாள். சிவன் கோவில் மணி அடிப்பது கேட்டது. அவசரமாக கோவிலுக்குப் போய் நின்று உச்சிகால பூஜையை கவனித்தாள். அபிஷேக ஆராதனைகள் பார்த்தாள். பையிலிருந்த சிவபுராணம் எடுத்து படிக்கத் துவங்கினாள்.

சிவபுராணம் படிக்கும் பொழுது அழுகை வந்தது. அந்த அழுகை நிம்மதியாக இருந்தது.

நெற்றியில் திருநீறு இட்டுக்கொண்டு சந்தனத்தை கழுத்தில் தடவிக்கொண்டு, குங்குமத்தை புருவத்திற்கு நடுவில் வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

"அம்மா... வேலையை விட்டுட்டேன்." என்று ஓடிப்போய் அவளைக் கட்டிக்கொண்டாள்.

"யாரும் ஒண்ணும் சொல்லலையாடி?"

"ஏன் சொல்லலை. ஏன் போற... ஏன் போறேன்னு கேட்டாங்க. அந்தப் பையன்தானே காரணம் அப்படின்னு ஒருத்தன் நடுஹாலில் போட்டு உடைச்சான். ஆச்சா... போச்சான்னு அத்தினி பேரும் கத்தினாங்க. அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க. எங்க வீட்ல கல்யாணத்துக்கு எப்பவோ ஏற்பாடு பண்ணிட்டாங்கன்னு சமாதானப்படுத்தினேன். ஸ்டோருக்கு போனா தடேர்னு அவன் கால்ல விழுந்தான். தப்புங்க... மன்னிச்சுக்கோங்க அப்படின்னான். அதெல்லாம் ஒண்ணுமில்லை. கவிதை நல்லாயிருந்தது. வச்சுக்கோங்கன்னு லெட்டர் திருப்பி கொடுத்திட்டு வந்துட்டேன். பாவம், அவனை இந்நேரம் என்ன கதி பண்றாங்களோ."



"சரி... வேலையை விட்டு நின்னாச்சு. வேற என்ன பண்ணப் போறார் உங்கப்பா."

"தெரியலையே. எதுவோ விளம்பரம் கொடுக்கறேன்னு சொன்னாரும்மா."

"எப்போ விளம்பரம் கொடுத்து எப்போ நமக்கு லெட்டர் வந்து எப்போ நாம போய் பார்த்து, எப்போ அவங்க வந்து பார்த்து இப்போ முடியற காரியமா அது."

ஆனால், முடிந்தது. வேலையிலிருந்து நின்ற பதினைந்தாம் நாளே புரோக்கரால் ஜாதகம் கொண்டு வந்து கொடுக்கப் பட்டது.

ஜாதகத்தை எடுத்துக்கொண்டு அப்பா, எதிர்வீட்டு ஐயரிடம் போனார்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு அம்மாவும், பூரணியும் அப்பாவை பின் தொடர்ந்தார்கள்.

"வாங்க... வாங்க..." சீனுவாசய்யர் எழுந்து நின்று கைகூப்பி வரவேற்றார்.

புதிதாகக் கட்டப்பட்ட அருமையான வீட்டில் சீனுவாசய்யரும், அவருடைய மனைவி கமலத்தம்மாவும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர் தன் மகளுக்கு திருமணம் செய்து முடிந்து மாப்பிள்ளையோடு அமெரிக்காவுக்கு அனுப்பிவிட்டு அமெரிக்காவுக்கு அனுப்பிய அடுத்த வருடமே இன்ஜினியரிங் முடித்த மகனையும் அமெரிக்காவிலேயே வேலை வாங்கிக் கொடுத்து விட்டு, கம்ப்யூட்டரில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார். தனக்கென்று உண்டான சில நண்பர்களோடு, ஹிண்டு பேப்பர் படித்து உரக்க விவாதம் செய்து கொண்டிருப்பார்.

அவ்வப்பொழுது அப்பாவும் சேர்ந்து கொள்வதும் வழக்கம்.

சீனுவாசய்யர் வங்கி அதிகாரி. அந்த அம்மாவும் வங்கியில் வேலை செய்தவர். இரண்டு பேரும் கஷ்டப்பட்டு ஆரம்ப காலத்தில் சம்பாதித்து பொழிச்சலூரில் இடம் வாங்கி வாஸ்து

பிரகாரம் வீடு கட்டி குழந்தைகளை நல்லவிதமாக படிக்க வைத்து மிருதுவான தம்பதிகளாக வாழ்ந்து நிமிர்ந்தவர்கள்.

சீனுவாசய்யருக்கு ஜோசியம் தெரியும். ஜாதகப்பொருத்தம் பார்க்கத் தெரியும். உடல்நலம் குன்றினால் என்ன செய்ய வேண்டும் என்று தெரியும். ஆயுர்வேத மருந்துகளோடு பரிச்சயம் உண்டு. உடற்பயிற்சி செய்யவும், யோகா செய்யவும், பிராணாயாமம் செய்யவும் அவரிடம் கற்றுக்கொள்ள சில பேர் வருவதுண்டு.

"நீங்க இத்தினி விஷயம் வச்சருக்கீங்களே. ஒரு போர்டு போட்டா செமத்தியா சம்பாதிக்கலாமே."

அப்பா ஒரு முறை சொன்னார்.

"புருஷோத்தமரே இது சம்பாதிக்கற விஷயமில்லை ஓய்... குரு மூலமாக வர்ற விஷயம். அதாவது ஒருத்தர் மற்றவருக்கு சொல்லி வர்ற விஷயம்.எழுதி இதை எவனும் புரிஞ்சுக்க முடியாது. சொல்லி கொடுத்தா தான் தெரியும். இதைச் சொல்லிக் கொடுக்கறதுக்கு காசு வாங்கினா, சொல்லிக் கொடுக்கறவனுக்கும் மரியாதை இல்லை. கத்துக்கறவனுக்கும் மரியாதை இல்லை. கலை மீது உண்மையான அன்பு இருக்கறவன் காசு வாங்கமாட்டான். இங்க காசு சம்பாதிக்க ஆயிரம் வழிகள் தெரியும் புருஷோத்தமரே. வீட்டை பூட்டிட்டு சாவியை உம்ம கிட்ட கொடுத்துட்டு நான் அமெரிக்கா போய் இறங்கினேன்னு வச்சுக்கோ என் புள்ளைக்கு சமமா சம்பாதிப்பேன்" என்று சொல்லிவிட்டு வாய் நிறைய சிரித்தார்.

புருஷோத்தமன் என்ற பெயருடைய அப்பாவை புருஷோத்தமரே என்று நாடக பாணியில் விளிப்பது சீனுவாச ஐயருடைய வழக்கம். சிலசமயம் போரஸ் இருக்கிறாரா என்றும் கூப்பிடுவார்.

புருஷோத்தமனுக்கு போரஸ் என்ற பெயர் அலெக்ஸாண்டர் வைத்தாராம். அதையும் ஒரு முறை சொல்லியிருக்கிறார்.

சீனுவாசய்யருக்கு சரித்திரம் வெல்லக்கட்டி. பேச ஆரம்பித்தால் மணிக்கணக்கில் பேசுவார்.



"இண்டியா டுடே தமிழ் வாங்கறேளா. ரொம்ப சந்தோஷம். நான் இங்கிலீஷ் வாங்கறேன். சில விஷயங்கள் புரியலைன்னா தமிழ்ல படிச்சுக்கலாமோன்னோ. நாம எக்ஸ்சேன்ஜ் பண்ணிக்கலாமா?"

புருஷோத்தமரிடம் கேட்க அவர் சரியென்று தலையசைத்தார்.

"அனேகமா இந்த பொழிச்சலூர்ல இந்தியா டுடே நாம ரெண்டு பேர் மட்டும்தான் வாங்கறோம்னு நினைக்கிறேன்."

சீனுவாசய்யர் வீட்டில் எல்லா வாரப்பத்திரிகைகளும் வாங்கி விடுவார்கள். படிப்பது அந்த வீட்டினுடைய மிகப்பெரிய பொழுதுபோக்கு.

"நான்தான் வாரப்பத்திரிகை வாங்கறேனே. எதுக்கு வாடகைக்கு வெங்கிட்டயோ காசை கொடுக்கறீர்."

சீனுவாசய்யர் கேட்க "சரியா வராதுங்க. நக்கீரன் படிக்கணும். உடனே கொண்ணாந்து கொடுறான்னு கேட்பேன். அவன் கொடுப்பான். உம்மகிட்ட வந்து நக்கீரன் படிக்கணும். உடனே கொடுங்கன்னு கேட்க முடியமா. நீங்க படிச்சு முடிக்கற வரைக்கும் காத்துகிட்டிருக்கணும். இந்த மாதிரி வாரப்பத்திரிகைய ரெண்டு வாரம் பொறுத்து படிக்கறதுல என்ன லாபம் சொல்லுங்க. அப்பப்போ சூடா படிக்கிற பத்திரிகை இல்லியா அது. ஆறின காபி, ஊசின வடை, பழைய பத்திரிகை இதெல்லாம் ஒண்ணு. அந்த மணம் மாறாத படிக்கணும். அப்போதான் சுகம்."

"ஓய்... உம்ம திமிர் அழகா இருக்கு ஓய்."

பதிலுக்கு சீனுவாசய்யர் பாராட்டினார். அப்பாவைக் கட்டிக் கொண்டார்.

எப்போதாவது அவன் வேலைக்கு பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடக்கையில் சீனுவாசய்யர் ஸ்கூட்டரில் கிளம்பிக் கொண்டிருப்பார்.

"வா... வா வந்து ஏறிக்கோ."

அவளையும் அழைத்துக் கொண்டு போய் பஸ் ஸ்டாண்டில் இறக்கி விடுவார்.

"நீ என்ன நட்சத்திரம். சுவாதியா? என்ன நம்பர்? பத்தா. அடிசக்கை. நல்லாயிருக்கே எது செய்யணும், எது செய்யக் கூடாதுன்னு உனக்கு தெள்ளத்தெளிவா தெரியுமே. மயக்கமா இருக்கறது பிடிக்காது இல்ல."

"என் மாமா பிடிக்காது? பிடிக்கும். ஆனா கொஞ்ச நேரம் மயக்கமா இருந்துட்டு அப்புறம் தெளிவாயிடணும். எப்போமே மயக்கமா இருக்கறதுன்னா அது என்னமோ மாதிரி இருக்கும்" அவள் பேசினாள்.

"அதுதான். அந்தக் கெட்டிக்காரத்தனத்தை தான் சொல்றேன். சாப்பிடற நேரத்துல சாப்பிடறது. தூங்கற நேரத்துல தூங்கறது. மயக்கமா இருக்கற நேரத்துல மயக்கமா இருக்கறது. தெளிவாகணுங்கறபோது தெளிவாயிடறது இல்ல."

"ஆமாம்... மாமா."

"நல்ல பேரு.பூரணின்னு பூரணமா இருக்கிறவள்னு அர்த்தம் இல்ல. நீ பூரணமா இருக்கறவதான். நல்ல புருஷன் கிடைப்பான். கவலைப்படாத. எனக்குத் தெரிஞ்ச எந்த சுவாதி நட்சத்திரமும் கெட்டுப் போனதில்லை. பூர்வ ஜென்ம புண்ணியம் பலமா இருக்கறவாதான் சுவாதி நட்சத்திரத்தில் பிறக்க முடியும். சுவாதி நட்சத்திரத்து பெண்கள் வீட்டோட இருக்கறதயே விரும்புவா. நீ எப்படி வேலைக்கு போறேன்னு தெரியலை" வியந்தார்.

"அப்பா சொன்னாங்க போறேன்."

"மத்தபடி வீட்ல இருக்கத்தானே பிடிக்கும்."

"ஆமாம்... மாமா."

"வீட்ல வெறுமனே இருக்கக் கூடாது. அங்கதான் நிறைய வேலை செய்யணும்."

"என்ன வேலை மாமா?"



"நீ என்ன வேலை செய்யறியோ இல்லையோ... வீட்டு வாசப்படிய நன்னா துடைச்சு அலம்பு. மஞ்சளை சின்ன உருண்டை பண்ணி வீட்டு வாசப்படியில தேய்."

கட்டளை போல் எதிர்வீட்டு ஐயர் பேசினார்.

## 5

எதிர் வீட்டு சீனுவாச ஐயர் அவளை வாசற்படிக்கு அழைத்துப் போய் எதிர்ப்பக்கம் உட்காரச் சொல்லி தானும் குத்திட்டு உட்கார்ந்து கொண்டார்.

ஒரு வீட்டுக்கு தெய்வம் இருக்கற இடம் எதுன்னா பூஜையறை இல்லை. சமையல் அறை இல்லை. படுக்கை அறை இல்லை. வாசப்படிதான். இப்படி மஞ்சள் தடவி அலங்காரமா வைக்காத வீடு சிரமப்படும். இத்தனை அங்குல அகலத்துல வாசப்படி இருக்கணும்னு ஒரு கணக்கு இருக்கு. உன் வீட்டு வாசப்படி ரொம்ப அழகான வாசப்படி. இவ்வளவு கனமா மரத்துல பூ வேலைப்பாடோட கஜலட்சுமியோட அமிர்தக் குடத்தோட வாழைமரத்தோட எந்த வீட்டு வாசப்படியும் நான் பார்த்ததில்லை. எந்த மங்கலச் சின்னங்களெல்லாம் உண்டோ அத்தனையும் அந்த வாசப்படியில இருக்கு. அவ்வளவு பெரிய வாசப்படியை வச்சுண்டு அதுக்கு மஞ்சள் தடவாம இருக்காத."

"இல்லை மாமா வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை..."

"இல்லை தப்பு. தினம் தடவு.இண்டு இடுக்கு விடாத தடவு. உன் கையால தடவு. அம்மா தடவறது ஒரு பக்கம் இருக்கட்டும். நீ வளர வேண்டியவோ, மஞ்சள் உன் கையில படிஞ்சிருக்கட்டும். அது நல்லது. வெறுமனே தடவாத 'தனம் தரும். கல்வி தரும். ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்...' அப்படின்னு சொல்லிண்டே தடவு. வாசப்படி சகல சௌபாக்கியத்தையும் தரும். வாசப்படியில தேவதைங்க எல்லாம் உட்கார்ந்திருக்கா. உன்னுடைய பித்ருக்கள் சுமங்கலியா செத்துப் போன மூதாதையர்கள் அந்த வாசப்படியில வந்து நிப்பா. அவங்க உன்னயும்

வரமாட்டாங்க. வெளியவும் இருக்கமாட்டாங்க. உன் வீடு எப்படியிருக்குன்னு வாசப்படியில நின்னு கவனிப்பாங்க. யார் உள்ள போறாங்க.யார் வெளிய வராங்கன்னு அங்க நின்னே மோப்பம் பிடிப்பாங்க. வாசப்படியில மனுஷாள் உட்காருகிற மாதிரி பாபம் உலகத்துல எதுவும் இல்லை. மறந்துபோய் கூட வாசப்படியில உட்காராத."

சின்னச் சின்னதாய் சீனுவாசய்யர் பல விஷயங்கள் சொல் லித் தருவார்.

"நெத்தியில என்ன ஸ்டிக்கர் பொட்டா. நன்னாதான் இருக்கு. ஆனா, ஒரு துளி விபூதியும் இடலாமே. தப்பில்லையே. பொழிச்சலூர் சிவன் கோவில் விபூதி அத்தனை விசேஷம். சனீஸ்வரனுக்கு தனி சன்னதி இருக்கற இடமல்லவா. திருநள் ளாறு மாதிரி உசத்தியான ஊர் அல்லவா. சனி யோகக்காரகன். ஆரம்பத்துல துன்பம் கொடுத்தாலும் நிறைய நல்லது பண்ற வன். நிறைய வாரி வழங்கறவன். உங்கம்மா பாக்கியலட்சுமி மூணு பட்டையா திருநீரு இடுவாங்க. அவங்கள பார்க்கற பொழுது எனக்கு அப்படியே ஒரு பயம் வரும். கையெடுத்து கும்பிடத் தோணும், முகம். அந்த விபூதிப்பட்டை அத்தனை மரியாதை தரும்."

விதம் விதமாக சீனுவாசய்யர் பேசுவார். அதேபோல குற்றங்குறைகளையும் கள்ளென்று சொல்லுவார்.

"பூரணி இங்க வா. என்ன வாசப்படியில சாக்பீஸால கோலம் போட்டிருக்க."

"கோலமாவு ஆயிடுச்சு மாமா."

"நல்லாயிருக்கே கதை. உடுத்திக்கிறதுக்கு புடவை இல் லைன்னா கோணியை சுத்திண்டு அலைவியா."

"ஐயோ அது எப்படி மாமா."

"அந்த மாதிரி தான் நீ பண்ணியிருக்கறது. போ. போய் கோல மாவு வாங்கி மறுபடியும் தண்ணி தெளிச்சுட்டு கோலம் போடு. இப்படி கோலமாவு கூட இல்லாத அளவுக்கு குடித்தனம் பண்றீங் களா. நல்லாயிருக்கு."



ஓடி வந்து அம்மாவிடம் சொல்ல அம்மா பதறிக் கொண்டு அரிசி மாவு வாங்கி வந்து வாசல் தெளித்து கோலமிட்டாள்.

அதுவரை முறைப்பாக இருந்த சீனுவாசய்யர் அம்மாவைப் பார்த்து மலரச் சிரித்தார். கை கூப்பினார்.

அம்மா வெட்கப்பட்டு உள்ளே ஓடி வந்து விட்டாள்.

"இருந்தது டி கோலமாவு. கைதவறி கீழ கொட்டிடுச்சு. கீழ கொட்டியிருந்ததை எடுத்து போடுவானேன்னு சொல்லி நான் தான் பெருக்கி ஓரம் தள்ளினேன்.வாங்க மறந்துட்டேன்."

வீட்டுக்குள் இருந்தபடியே சமாதானம் சொன்னாள்.

சீனுவாசய்யரை பூரணியின் வீடு வெகுவாக மதித்தது. அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டது.அவரிடம் ஆலோசனை கேட்பது அந்த வீட்டின் வழக்கமாக இருந்தது.

"கல்யாண வேலை ஆரம்பிச்சாச்சா. இதான் முதல் ஜாதகம் கொண்டு வந்து கொடுக்கறீங்க இல்ல. ஈஸ்வரா... சிவபெரு மானே... தில்லைக்கூத்தனே, தென்பாண்டி நாட்டானே, தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" உரக்கக் கூவி கை கூப்பினார். அந்த ஜாதகத்தை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டார். பிரித்தார். பார்த்தார்.

"யோக ஜாதகமா இருக்கே. பையன் ரொம்ப நல்லவன். கெட்டிக்காரன். கடும் உழைப்பாளி. கொஞ்ச நாளைக்கு சிரம மான ஜீவிதம். ஆனா, அடுத்தவங்க கஷ்டம் தெரிஞ்சவன். பெரிய குடும்பம் உள்ளவன். அதிர்ஷ்டசாலியான மனைவியை அடையக்கூடியவன். ரெண்டு கிரகம் உச்சம். எங்கிட்ட பூரணி ஜாதகம் இருக்கு. பார்த்துடலாம்."

அவர் மறுபடியும் பஞ்சாங்கத்தை பிரித்து உட்கார கமலத் தம்மாளும், பூரணியின் அம்மாவும் பேசத் துவங்கினார்கள்.

"உங்களது எல்லாரும் பதினெட்டு வயசுலயே கல்யாணம் பண்ணி முடிச்சுடுவேளே. என்னடா... இன்னும் பூரணிக்கு பேசாம இருக்காளேன்னு நினைச்சேன். வேளை வந்துடுத்து."

ஆசிர்வாதமாக கமலத்தம்மாள் பேசினாள்.

"இவங்கப்பாக்கு பதினெட்டு வயசுலயே கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதுல இஷ்டமில்லைங்க.எதுக்காக அத்தினி சீக்கிரம் செய்யணும். மொள்ள நிதானமா பண்ணலாம். இருவத்திமூணு வயசு, இருவத்தி நாலு வயசுல பண்ணலாம் அப்படின்னு தான் அவங்க சொல்லிக்கிட்டிருந்தாங்க. அதே மாதிரி இருவத்தி மூணு வயசுல பண்ணும்படியா ஒரு நிர்பந்தம் வந்துடுச்சு."

"யாராவது பொண் கேட்டு வந்திருக்காளா."

"பொண்ணு கேட்டு வரலீங்க. வேறொரு விஷயம்..." என்று பூரணியின் அம்மா மெல்ல இழுக்க, அப்பா நகர்ந்து கமலத்தம்மாள் அருகில் போய் அடிக்குரலில் ஆபீஸ் விஷயத்தைச் சொன்னார்.

"அடக் கன்றாவியே... இதுக்கு பயந்துண்டா இப்படி ஆரம்பிச்சிருக்கேள்."

"எப்பவாவது ஆரம்பிக்க வேணாமா. இதை காரணமா வச்சு ஆரம்பிச்சுட்டேன். எதுக்கும் பயப்படலை."

பஞ்சாங்கம் பார்த்துக் கொண்டே அப்பா பேசுவதை கவனித்துக் கொண்டிருந்த சீனுவாசய்யர் தலை நிமிர்ந்தார்.

"தேர் திரும்பணும்னா அடிக்கட்டைய கொடுத்து திசை திருப்புவா.அதே மாதிரி குறுக்க ஒரு விஷயம் வந்து விழுந்தா வாழ்க்கை தானா திசை திரும்பும். அந்த மாதிரி விழுந்திருக்கு. மத்தபடி இதுல பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை. இந்த ஜாதகம் ரொம்ப நல்லாயிருக்கு. ரெண்டு பேருக்கும் ஜாதகம் பொருந்தியிருக்கு. ஒன்பது பொருத்தம் இருக்குன்னு சொல்லலாம். எந்தெந்த பொருத்தம் இருக்கணுமோ அது இருக்கு. அதனால முடிக்கறதுக்கு ட்ரை பண்ணுங்க. ரெண்டு ஜாதகத்தையும் எடுத்துண்டு போய் பொழிச்சலூர் சிவன் சன்னதியிலேயும், அம்பாள் சன்னதியிலேயும் வச்சு குழந்தைக்கு நல்லபடியா எந்த விக்னமும் இல்லாம கல்யாணம் ஆகணும்னு வேண்டிக் கோங்கோ."

"ஏன், ஏதாவது விக்னம் வருமா."



37682
5470062

அப்பா கவலையாகக் கேட்டார்.

"ஒரு விக்னமும் வராது. உங்க குழந்தை பரம சந்தோஷமா இருப்பா. பையன் ஜாதகத்தை விடுங்கோ. பூரணியினுடைய ஜாதகத்தை மட்டும் நான் பல தடவை பார்த்திருக்கேன். ஆனந்தமான வாழ்க்கை அவளுக்கு. அற்புதமான கணவன் கிடைப்பான். இந்தப் பையன் ஜாதகமும் பூரணி ஜாதகமும் ஒத்துப் போறத பார்க்கும் போது இந்த இடம் முடிஞ்சுடும்னு தோன்றது."

"அப்போ எதுக்கு கோவிலுக்குப் போய் வேண்டிக்கோன்னு சொல்றீங்க."

"இது என்னய்யா இது. ஒரு கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்கறது தப்பா. சாதாரணமா சொன்னய்யா. எல்லாத்துக்கும் நொய் நொய்னு அர்த்தம் கேட்டுண்டிருந்தா..."

"இல்லை, திடீர்னு சொல்றீங்களேன்னு பயந்துட்டேன்."

"பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.அதான் சொல்றேனே. பூரணி ஜாதகம் அற்புதமான ஜாதகம்.அவளுடைய வாழ்க்கை ரொம்ப நன்னாயிருக்கும். கவலையே பட வேண்டாம். பூர்வஜென்ம புண்ணியம் அதிகம். களத்திர ஸ்தானத்தின் மீது குரு பார்வை இருக்கு. அதனால் அற்புதமான புருஷன் கிடைப்பான். ஒவ்வொரு சனிக்கிழமையும் எள் விளக்கு போடச் சொன்னேனே போட்டுண்டிருக்கியோ."

"போட்டுண்டிருக்கேன் மாமா."

பூரணி சொன்னாள்.

"அது போறும் போ."

"என்னங்கய்யா... சுத்தி வளைச்சு என்னமோ ஒரு புள்ளி வச்சியே பேசறீரே." பூரணியின் அப்பா கூவினார்.

"ஒரு புள்ளியும் இல்லையப்பா. ஒரு கல்யாணத்துக்கு இருக்கற பொண்ணு சனீஸ்வரனுக்கு எள் விளக்கு போட்டா நல்லபடியா கல்யாணம் நடக்கும்."

"விக்னம் தீரும்னு சொல்றீங்களே."

"விக்னம் எல்லாருக்கும் இருக்கும்யா. ஒரு விஷயம் ஆரம்பிச்சா அது தடை பண்றதுக்கு நாலு பேர் காத்துண்

டிருப்பா. தடைபடாத இருக்கனுமேன்னு வேண்டிக்கிறது நியாயமில்லையா. சுக்லாம் பரதரம் எதுக்கு குட்டிக்கறது. பூஜை நல்லபடியா நடக்கணும்னு. பூஜை நல்லபடியா நடக்காதா. அதுக்குத்தான் சுக்லாம் பரதரம் குட்டிக்க சொல்றியான்னா நான் என்ன பதில் சொல்வேன்."

"சாதாரணமாத்தான் சொல்றீங்களா."

"சாதாரணமாத்தான் சொல்றேன்."

சீனிவாசய்யர் அடித்துச் சொன்னார்.

அப்பாவும், அம்மாவும் வெளியேற சீனிவாசய்யர் இரு என்று சைகை செய்தார்.

பூரணி தயங்கி நின்றாள்.

மாமியோடு ஏதோ பேசுவது போல சமையலறைக்குள் போனாள்.

அப்பாவும், அம்மாவும் வெளியேறிய பிறகு வீட்டுக் கதவு திறந்து உள்ளே போன பிறகு சீனுவாசய்யரிடம் வந்தாள்.

"என்ன மாமா. எதுக்கு நிக்கச் சொன்னீங்க" காதோடு கேட்டாள்.

"கண்ணு. ஒரு தொந்தரவு இருக்கு. காரியத்தடை இருக்கு. கிரகங்கள் பேரைச் சொல்லி உன்னை குழப்ப விரும்பலை. இந்தப் பையன் நல்லவன். ஆனால் இந்தப் பையனைச் சுற்றியிருக்கிற சில அமைப்புகள் சரியில்லை. அதனால், சில தொந்தரவுகள் உனக்கு வரக்கூடும்."

மெல்லியதாய் பூரணிக்கு வியர்த்தது.

"என்ன தொந்தரவு மாமா."

"சண்டை, சச்சரவு, வாய்ச்சொல், கடும் வார்த்தைகள் அந்த மாதிரி வரக் கூடும்."

"என்னாகும் மாமா."

"கல்யாணம் கொஞ்சம் தள்ளிப் போகும்."

"மாமா என்ன சொல்றீங்க."



"ஏய்...கடவுள் இருக்கார். உங்கப்பாகிட்ட சொன்னதையே உனக்கும் சொல்றேன். உன்னுடைய பூர்வ புண்ணிய ஸ்தானம் ரொம்ப பலமானது. உன்னுடைய வாழ்க்கை அற்புதமானது. பயப்படாத. இது மேலோட்டமா நான் சொல்றது.இந்த ஜாதகத்தை எடுத்துண்டு போய் என்னை விட கெட்டிக்காரனா இருக்கற ஜோசியன்கிட்ட காண்பிச்ச கேட்டுண்டு வரேன்."

"நானும் வரட்டுமா மாமா."

"வேண்டாம். நான் மட்டும் போயிட்டு வரேன். இதை தயவு செய்து அப்பாகிட்ட சொல்லாத."

"வேற ஏதாவது பண்ணணுமா மாமா."

"அது தான்... அது தான் புரியலை. அதை கேட்கறதுக்குத் தான் நான் போறேன். என்ன ஆனாலும் நான் தொழில் ரீதியா ஜாதகம் பார்க்கறவன் இல்லையே. அவங்களுக்குத் தான் தெள்ளத் தெளிவா இதெல்லாம் தெரியும். தினம் நீ கோவிலுக்குப் போற இல்லை."

"போறேன் மாமா."

"அது மட்டும் போறும் போ. நம் ஊர் சிவன் கோவில் சாதாரணமான விஷயம் இல்லை. ரொம்ப பிராச்சீனமானது. ரொம்ப பழமையானது. இத்தனை பழமையா ஒரு கோவில் இது நாள் வரைக்கும் பராமரிக்கப்பட்டிருந்தால் அந்த இடம் பலமா இருக்குன்னு அர்த்தம். பலமா இருக்கற இடத்துல கடவுளுடைய சாந்நித்யம் அதிகமாக இருக்கும். சகலவிதமான தொந்தரவுகளையும் நம்ம கோவில்ல இருக்கற சிவன் தீர்த்து வைப்பார். கவலைப்படாத போ."

"இத்தனை விஷயமும் சொல்லிட்டு அந்தப் பொண்ண கவலைப்படாதன்னு சொன்னா..."

சகலமும் கேட்டுக் கொண்டிருந்த கமலத்தம்மாள் சிடுசிடுப்பாக புருஷனை கோபித்துக் கொண்டாள்.

"பூரணி நீ கெட்டிக்காரி. தெளிவான பொண்ணு. நீ ரெண்டாங்கெட்டானா இருந்தா இதை சொல்லியிருக்கவே மாட்டேன். வாழ்க்கையை எப்படி அனுபவிக்கணும். எப்படி

அனுசணும்னு உனக்குத் தெரியும். எப்போ விட்டுக் கொடுக் கணும். எப்போ விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு உனக்குத் தெரியும். கெட்டிக்காரிங்கறதுனாலயே சொன்னேன். தயவு செய்து கலவரப்பட்டுடாத. உன்னுடைய கல்யாணத்தினு டைய ஒவ்வொரு அங்குலத்திலயும் இந்த சீனிவாசன் கூட இருப்பான். பயப்படாத" ரெண்டு கைகளையும் தூக்கி ஆசீர் வதித்தார்.

கமலத்தம்மாளையும், அவரையும் நிற்க வைத்து வணங்கி விட்டு குங்குமம் வாங்கிக் கொண்டு பூரணி உள்ளே நுழைந் தாள்.

அவளுக்கு மெல்லியதாய் மனசில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. முகத்தில் அந்தக் கலக்கம் தெரிந்தது.

"என்ன கண்ணு. என்ன சொன்னாரு ஐயரு."

"உடம்பைக் குறைன்னு சுத்தறாரும்மா. இவ்வளவு குண்டா இருந்தா நல்லாயிருக்காதுங்கறார்."

"நானே சொல்லணும்னு நினைச்சேன்.போ நட தினம் நட. வறுத்தது, பொரிச்சதுன்னு சாப்பிட்டுக்கிட்டே இருக்கே. அதெல்லாம் தப்பு. எல்லாத்தையும் அடியோட நிறுத்து. பால் கூட குடிக்காதே."

அம்மா மடமடவென்று கட்டளைகள் போட்டாள்.

பூரணி போய் பவழமரத்தடியில் உட்கார்ந்து கொண்டாள். அது அவளுடைய இடம்.

அவள் சிந்திக்கின்ற இடம். ஆனால் இது பற்றி எதுவுமே சிந்திக்க முடியவில்லை. வாழ்க்கை எப்படிப் போகும் என்று அனுமானிக்க முடியவில்லை. எப்படிப் போனாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் தான் மேலோங்கி யிருந்தது.

சரி, பார்த்துடுவோம் ஒரு கை.

பூரணி இடுப்பில் புடவை சொருகிக் கொண்டாள். கொல் லைப்புறத்து செடிகளுக்கு நடுவேயிருந்த களைகளை பிடுங்கி எறிந்து மண்வெட்டியால் குத்தி பாத்தி போன்று அமைத்து நீர்



பாய்ச்சினாள். செடிக்கு உரம் போட்டதால் முன்னைவிட வேக மாக செடி வளர்ந்தது.

## 6

ஜாதகம் சரியா இருக்கிறது என்று சீனிவாசய்யர் சொன்ன பதினாறாம் நாள் கமலக்கண்ணன் வீட்டிலிருந்து போன் வந்தது. அப்பாவை வந்து பேசும்படி அவர்கள் அழைத்தார்கள்.

அப்பாவும், அம்மாவும் பூரணியை வீட்டில் விட்டுவிட்டு சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடில் போய் பிள்ளைவீட்டாரிடம் பேசிவிட்டு வந்தார்கள்.

"பையன் ரொம்ப நல்லாயிருக்காம்மா. வீட்டுக்குள்ள பெரிய லைப்ரரி வச்சிருக்கான். அதைப் பார்த்தவுடனே சந்தோஷ மாயிடுச்சு."

அப்பா பெருங்குரலில் மகிழ்ச்சியோடு கூவினார்.

அம்மாவும் பல் தெரிய சிரித்தாள்.

கமலக்கண்ணனை பற்றி முதன்முதலாக ஒரு நல்ல கற்பனை அன்றுதான், அங்குதான் அவள் மனதில் விதைக்கப் பட்டது.

"அப்பா... நிஜமாவே அவர் ரொம்ப நல்லவராப்பா?"

இரண்டு நாள் இடைவெளிக்குப் பிறகு அப்பாவிற்கு அருகே நின்று செல்லமாய்க் கேட்க அப்பா கண்ணாடியை மடித்து வைத்துவிட்டு பேப்பரை கீழே போட்டார். வாஞ்சையுடன் மகளைப் பார்த்தார்.

"நான் சாதாரண அரசாங்க குமாஸ்தா. ஒருத்தர் மனசுக்குள்ள உள்ள புகுந்து அவர் நல்லவரா கெட்டவரான்னு பார்க்கறதுக் கெல்லாம் எனக்குத் தெரியாது. புதுசா ஒரு ஆளைப் பார்க்கற போது நம்ம மனசுக்குள்ள எந்த அபிப்ராயமும் இல்லாம இருக்கும். நிமிர்ந்து கண்ணோட கண் பார்க்கறபோது டக்குனு உள்ளுக்குள்ள எந்த காரணமும் இல்லாம நல்லதாவோ,

கெட்டதாவோ ஒரு அபிப்ராயம் ஓடும். அந்த அபிப்ராயத்தை நான் முக்கியமா மதிக்கறேன். அந்த அபிப்ராயம் சரியா இருக்கும்னு ஒரு அனுபவத்தால சொல்றேன். புள்ளையை பார்த்தவுடனே குளுகுளுன்னு இருந்தது.நாம பொண்ண பெத்தவன். அவரு மாப்பிள்ளை.கெத்தாதானே இருக்கணும். சொல்லி கொடுத்துருப்பாங்க இல்ல. மொறப்பா இருன்னு சொல்லிக் கொடுத்திருப்பாங்க இல்ல. அவரு பல் தெரிய சிரிச்சாரு. எழுந்து நின்னு வாங்கன்னு சொன்னாரு. என் பேரு கமலக் கண்ணன் அப்படின்னு தனக்குத்தானே அறிமுகம் பண்ணிக் கிட்டாரு. பக்கத்துல இருக்கறவங்களுக்கு பொறுக்கலை. பேண்ட்டை பிடிச்சு இழுத்து உட்கார் உட்காருன்னு உட்கார வச்சாங்க.

ஏன், என்ன தப்புன்னு அந்தப் புள்ளை மூஞ்சிக்கு நேரா கேட்கறான். அவங்களுக்கு ஒரு மாதிரி ஆயிடுச்சு. நாங்க கிளம்பி வந்தபிறகு அவனை திட்டுவாங்க போல'' சொல்லி விட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

பூரணிக்கும் சிரிப்பு வந்தது.

"இதனாலதான் அவரு நல்லவருன்றீங்களா?"

"அவங்க வீட்டு பொம்பளைங்க கொஞ்சம் அலட்டலா, அதிகப்பிரசிங்கித்தனமா பேசறபோது, அவன் உள்ளுக்குள்ள சிரிக்கறது தெரிஞ்சது."

"என்னா அலட்டினாங்க அவங்க?"

"ஒரு காலத்துல இதே சைதாப்பேட்டையில நாங்க எட்டு கட்டு வீட்ல இருந்தோம். கீரைக்காரர் குடும்பம்னு சொல்லுவாங்க. கீரை வித்தே நாங்க பெரிய பணக்காரர் ஆயிட்டோம். எங்க வீட்டு பெரியவங்க மயிலாப்பூருக்கும், மந்தவெளிக்கும், திருவல்லிக்கேணிக்கும் அப்போ கத்தை கத்தையா கீரை அனுப்புவாங்க. கீரை விக்கலியா அப்படியே எடுத்துட்டுப் போய் மாட்டுக்கு போடுவாங்க. அப்புறம் திருச்சிராப்பள்ளிக்கும், பெங்களூருக்கும் கூட கீரை போச்சு போயேன். லாரியில போனா வேட்டாவுதுன்னு சொல்லிட்டு கார் கொண்டாருவாங்க. மேல பாய் போட்டு ஈரம் பண்ணி ஓலைத்தடுக்குல



சுத்தி எடுத்துட்டு போவாங்க.அப்போ பெரியவங்க என்ன சொல்றாங்களோ அதான் ரேட். நான் எட்டு வயசாகும்போது இருபது பவுன் நகை போட்டிருந்தேன். சொன்னா நம்புவீங்களா அப்படின்னு கமலக்கண்ணன் அவங்க அம்மா சொல்றாங்க.

அதெல்லாம் பழைய கதைங்க. இப்போ அவ்வளவு வசதியில்லை. கமலக்கண்ணன் அவங்க அப்பா உள்ள புகுந்துட்டார். அப்பா உள்ள புகுந்தவுடனே அவனுக்கு அவ்ளோ சந்தோஷம்.''

"எப்படி தெரிஞ்சது?"

"முகம் காட்டிக்கொடுக்குதே."

"என்னா சொன்னாரு?"

"வார்த்தையா சொல்லலை. எதுனா சாப்பிட எடுத்தாம்மா அப்படின்னு அவங்க பேச்சை நிறுத்தி உள்ளுக்குள்ள அனுப்பிட்டாரு."

"வேற எதனால நல்லவருன்னு சொல்றீங்க."

"எங்க வேலை செய்யறீங்க தம்பின்னு கேட்டேன். இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன்னு சொன்னாரு. அது கவர்மெண்ட்டான்னு கேட்டேன். இல்லீங்க.கவர்மெண்ட் இல்ல. கவர்மெண்ட் மாதிரி. ஆனா துடிப்பா வேலை செய்யணும்னாரு. ஏன் கவர்மெண்ட்ல நாங்க துடிப்பா வேலை செய்யமாட்டோம்னு நினைக்கிறீங்களா. அப்படின்னு கேட்டேன். எனக்குத் தெரியும். கவர்மெண்ட்ல யார் துடிப்பா வேலை செய்வாங்க, யார் செய்ய மாட்டாங்கன்னு. எல்லாரும் துடிப்பா வேலை செய்தாதான் ஒரு இடம் நல்லாயிருக்கும். பாதி பேர் துடிப்பா வேலை செய்து, பாதி பேர் சும்மா சுத்திக்கிட்டிருந்தாக்க எந்த நிறுவனமும் செத்துப்போயிடும். அரசாங்கம் தடுமாற்றமாவே எப்பவும் இருக்கறதுக்கு காரணம். பாதி பேர் சரியா வேலை செய்யறதில்லை. என்னால அந்த மாதிரி இடங்கள்ல வேலை செய்யமுடியாது. எங்க கம்பெனியிலேயே யாராவது ஒருத்தர் ரெண்டு பேர் சோம்பலா இருக்கறத பார்த்தா ரொம்ப கோவமா வரும்.

ஏன் கவர்மெண்ட் வேலையில் சேர்ந்தீங்க அப்படின்னு கேட்டான். என்னுடைய இளமையான வயசுல கவர்மெண்ட் வேலையில் சேர்ந்தா நிம்மதியான வாழ்க்கைன்னாங்க. அப்புறம்தான் தெரிஞ்சுக்கிட்டேன், அரசாங்கத்துல சேர்ந்து நான் சோம்பலாயிட்டேன். இது போதும்னு உட்கார்ந்துட்டேன். அது தவிர, அந்த பீரியட்ல ரெண்டாயிரம் ரூபா,மூவாயிரம் ரூபா சம்பளமே ரொம்ப பெரிய காசு.அவனுக்கு இருவத்திமூணு வயசுல கல்யாணம், கவர்மெண்ட் உத்தியோகமா. அதான் டக்குனு கல்யாணம் பண்ணிக்கறான் அப்படின்னு பொறாமையா பல பேர் என்னைப் பத்தி பேசினாங்க.

கம்பெனியில சின்ன தப்பு பண்ணாலும் வேலைலேர்ந்து தூக்கிடுவான். கவர்மெண்ட்ல மாடு வந்துதா பாப்பாத்தியம்மான்னு நிதானமா இருக்கலாம். நம்மள தூக்கி எறியமுடியாது. அதிகபட்சம் போனா ஒரு இடத்துலேர்ந்து இன்னொரு இடத்துக்கு மாத்துவான். சரி, எங்கயோ ஒரு இடத்துல போய் குப்பை கொட்டறது. சோறு தின்றதுன்னு இருப்போம்.இப்போதான் வாழ்க்கை முறையே வேறமாதிரி ஆயிப்போச்சி, சம்பாதி... சம்பாதி... நிறைய சம்பாதின்னு ஜனங்க வேகமாயிட்டாங்க அப்படின்னு நான் சொன்னேன்.அது தப்புன்னு நினைக்கறீங்களா அப்படின்னு அவன் கேட்டான்.

சின்ன வயசுல வாடகை வீட்டுக்குத்தான் மரியாதை. சொந்த வீட்டுக்காரன் மடையன். எலக்ட்ரிக் பில் கட்டணுமே, பழுது பார்க்கணுமேன்னு பல வேதனை.வாடகை வீட்டுக்காரனுக்கு அதெல்லாம் கிடையாது. இந்த வீடு இல்லைன்னா இன்னொரு வீடு அப்படின்னு நகர்ந்துப்பாங்க. நல்ல குடித்தனக்காரன் கிடைக்க மாட்டானான்னு வீட்டுக்கு சொந்தக்காரங்க ஏங்குவாங்க. இப்போ தலைகீழா மாறிப்போச்சு. ஒரு கை அகல வீடு சொந்தமா இல்லைன்னா எந்த மனுஷனுக்கும் மரியாதை இல்லையே.

அது உண்மைதான். நாங்களும் சொந்த வீடு வாங்கணும்னு என்னென்னமோ முயற்சி பண்றோம்.சைதாப்பேட்டையில எல்லாம் இப்போதைக்கு சொந்த வீடு வாங்க முடியாது அப்படின்னு சொன்னான் கமலக்கண்ணன்.



வேணா பொழிச்சலூர் பக்கம் வாங்கறீங்களா தம்பி அப்படின்னேன். அவ்வளவு வசதி வரலை ஐயா. ஆறாயிரம் ரூபாதான் சம்பளம். பிடிப்பு போக அஞ்சாயிரத்து முன்னூறு ரூபாதான் கிடைக்கும் அப்படின்றான். சட்டுனு இத்தனை வெகுளியா, இத்தனை எளிமையா இதான் என் சம்பளம்னு பேச்சோட பேச்சா சொல்லிட்டானே எனக்கு அது பிடிச்சிருந்ததும்மா.

ஓவர் டைம் வருமேடா அதைச் சொல்லு அப்படின்றாரு அவங்கப்பா.அது கிடைச்சா கிடைக்கும் கிடைக்காட்டி இல்ல. அதைப்போய் ஒரு காசா சொல்லமுடியுமா. போனஸும் வருங்க அவங்கப்பா சொல்றாரு. ஏதோ வருது. இதான் சம்பளம். இதுல நான் பொய் சொல்ல விரும்பலை, அப்படினுட்டான்.

அவங்க வீட்ல எல்லாருக்கும் கடுகடுன்னு ஆயிப்போச்சு. என்னாடா இவன் பட்டவர்த்தமா பேசறானேன்னு.ஆனா, அந்தப் புள்ளை அதைக் கண்டுக்கவேயில்லை. நான் அப்படித்தான் பேசவேன்ற மாதிரி இருக்கான்.பொய் சொல்லணும்னா, சொல்லியிருக்கலாம். ஆனா, பொய்சொல்லாத, நிஜமும் சொல்லாத அமைதியா இருந்திருக்கலாம்.ஏதோ பத்தாயிரம் ரூபா சம்பாதிப்பார் போல இருக்கு அப்படின்னு நம்ம யூகத்துக்கு விட்டிருக்கலாம். இந்தியன் ஆயில் கம்பெனின்னா பெரிய இடம்தானே அப்படின்னு நம்மள நினைக்க விட்டிருக்கலாம். அதெல்லாம் இல்லாத இதுதான்னு சொன்னான் பாரு. அவன் நேர்மையான ஆள். யாரையும் ஏமாத்தக்கூடாதுன்னு சொல்ற ஒரு ஆளு ரொம்ப அபூர்வம்மா.

ஜனங்க எல்லாரும் எப்பவும் எல்லாரையும் ஏமாத்திக்கிட்டேயிருக்கற நேரத்துல உண்மையா இருக்கறவன் பெரிய உத்தமன். அதனாலயே எனக்கு அவனை பிடிச்சுப் போச்சு. எனக்கு அவனை பிடிச்சுப் போச்சுன்னு அவனுக்கும் தெரிஞ்சு போச்சு. ரொம்ப பக்கமா வந்து உட்கார்ந்து உங்களுக்கு எவ்ளோ வரும் ஸார் அப்படின்னு ரொம்ப மிருதுவா கேட்கறான். அவன் கேட்டது பக்கத்துல இருக்கற யாருக்கும் தெரியாது. பதினாலாயிரத்து நானூறு ரூபா. நானும் அவன் காதுக்கு மட்டுமே சொன்னேன். சொந்த வீடு இருக்கான்னு கேட்டான்.ஆமாப்பா அப்படின்னேன். கடன் வாங்கினீங்களா அப்படின்னு கேட்டான்.

இல்லைப்பா, பெரியவங்களது. இடிக்காத, கொள்ளாத கொஞ்சம் முன்பக்கம் தூக்கி கட்டியிருக்கேன். தளம் பண்ணியிருக்கேன். ஓட்டு வீடா இருந்ததை பின்பக்கம் மட்டும் ஓடா வச்சிட்டு, முன்பக்கம் தளமா மாத்திட்டேன். ஆறு லட்சரூபா செலவு பண்ணியிருக்கேம்ப்பா அப்படின்னேன். அடுத்த வாரம் வந்து பார்க்கறோம்னு சொன்னான்.

அவங்க வீட்ல மத்தவங்க சொல்றதுக்கு முன்னாடி இவன் வரேன்னு சொன்னது எனக்கு ஆச்சரியமா இருந்தது."

"போட்டோ பார்த்துட்டு ஏதாவது சொன்னாராப்பா?"

"உன் போட்டோவா, எங்ககிட்ட ஒன்னும் சொல்லலைம்மா. அவங்க அக்காகிட்ட சொன்னான். அவங்க அக்கா உங்கம்மாகிட்ட சொல்லியிருக்கு. என் தம்பிக்கு பிடிச்சிட்டாப் போலிருக்கு. என்னா, கொஞ்சம் குண்டா இருக்கற பொண்ணுன்னு சொன்னாங்க. இல்லை அவங்க குஷ்பு மாதிரி இருக்காங்கன்னு சொன்னான்."

"ஐய்ய... நான் குஷ்பு மாதிரியாப்பா இருக்கேன்?"

அவளுக்குள் சந்தோஷமும், கர்வமும் போட்டி போட்டுக் கொண்டு எகிறின.

"எனக்குத் தெரியலையேம்மா யார் குஷ்பூன்னு. அக்கம்பக்கத்துல விசாரிச்சுப் பாரு. வேணா சீனுவாச ஐயரை கேளேன்."

அப்பா சொல்லிவிட்டு கண்சிமிட்டினார்.

"உனக்கு திமிரு ஜாஸ்தி ஆயிடுச்சப்பா."

அப்பாவின் கன்னத்தை கிள்ளி விட்டு அவள் விலகி கொல்லைப் புறத்திற்கு போய் உட்கார்ந்தாள்.

"என்ன என்ன வார்த்தைகளோ
சின்னவிழி பார்வையிலே
சொல்லிச் சொல்லி முடித்துவிட்டேன்
சொன்ன கதை புரியவில்லை"

-என்று பாட்டு மனதுக்குள் பொங்கியது.



அவள் மேடையில் அமர்ந்து கால்களை ஆட்டி, கைகளை நெட்டி முறித்து பவழமரத்தை தழுவிக் கொண்டு பாட்டுப் பாடினாள்.

ஏதோ ஒரு இனம்புரியாத குதூகலம் உள்ளுக்குள் இருந்தது.

யாரிடம் போய் கேட்பது. நான் குஷ்பு மாதிரி இருக்கிறேனா என்று.

வெளியே சப்தம் கேட்டது. சீனுவாசய்யரும் அவருடைய மனைவி கமலத்தம்மாவும் ஏதோ பேசினார்கள்.

"அடுத்த திங்ககிழமை வரச் சொல்லுயா. நாள் நல்லாயிருக்கு. ரெண்டு பேருக்குமே பாந்தமான நட்சத்திரம்."

சீனுவாசய்யர் உரக்கப் பேசினார்.

"வரவாளுக்கு என்ன தரப்போற பாக்கியம்?"

கமலத்தம்மாள் கேட்டாள்.

"எனக்குத் தெரியலை. நீங்க சொல்லுங்க மாமி."

"எங்க ஜாதியில சொஜ்ஜி பஜ்ஜின்னு சொல்லுவா. கேசரி, வாழைக்காய் பஜ்ஜி, உருளைக்கிழங்கு பஜ்ஜின்னு போட்டோம்னா நல்ல டிபனாவும் இருக்கும். ருசியாவும் இருக்கும். காபியும் கொடுத்துடுவோம்."

"எத்தனை பேர் வருவாங்க."

"தெரியலையே மாமி."

"அதை கேட்டுண்டு வரவேண்டாமா?"

"போன் பண்றேன்னு சொன்னாங்க."

"எங்களதுல மூணு பேர் நாலுபேர்தான் வருவா"மாமி தொடர்ந்தாள்.

"இது அப்படியிருக்காது. இருபது பேராவது இருக்கும்."

"கடவுளே இருவது பேருக்கும் பஜ்ஜி எப்படி பண்றது?"

"அதனாலதான் நாங்க இழுத்து விட்டுக்கறதில்லை. கடையில் போயி லட்டும், மிக்சரும் வாங்கி வச்சுடுவோம்."

"அதை பண்ணாத பாக்கியலட்சுமி. அல்பத்தனமா இருக்கும், கடையை விட கம்மியாத்தான் செலவாகும். என்னா, முதல் முதலா பொண்ணு பார்க்க வராங்க நல்லா பண்ணேன். அடுப்படியில் உட்கார்ந்த பத்தி பார்க்காதீங்க."

உடனே அம்மா மெல்லிய குரலில் சரி மாமி என்றாள்.

'ஏன், இழுத்தாப்போல பேசற. உதவிக்கு நான் வரேன்.நான் சொஜ்ஜி கிளறி கொடுத்துடறேன். நீ பஜ்ஜியை பண்ணிக் கறியா. எண்ணெய் புகை எனக்கு ஆகாது."

"நான் பண்ணிக்கறேன் மாமி."

அம்மா உற்சாகமானாள்.

இருபது பேர் வருவதாகச் சொன்னார்கள்.பதினேழு பேர் வந்தார்கள்.

மூன்று கார்களில் அடைத்துக்கொண்டு தபதபவென்று இறங்கினார்கள். அதில் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

சீனுவாசய்யரும், கமலத்தம்மாளும் வாங்க வாங்க என்று வாசலுக்குப் போய் வரவேற்றார்கள்.

அவர்கள் எல்லோர் முகத்திலும் மிகப்பெரிய களைப்பு இருந்தது. பிற்பகல் வெய்யிலில் வந்த அசதி இருந்தது. பவுடர் கலைந்து நெற்றியிலுள்ள வியர்வையை துடைத்து துடைத்து ஃபேன் காற்றுக்கு ஏங்கினார்கள். நல்லவேளையாக சீலிங் ஃபேன் தவிர சீனுவாசய்யர் யோசனையோடு பெடஸ்டல் ஃபேன் தன் வீட்டிலிருந்து கொண்டு வந்து வைத்திருந்தார். அதை நாலாபுறமும் திரும்ப விட்டு அவர்கள் இளைப்பாறினார் கள். ஜில்லென்று குளிர்ந்த நீரை கேட்டு வாங்கிக் குடித்தார்கள்.

"ஏதோ... பொழிச்சலூர் தாம்பரம் போற வழியில இருக்கும்னு பார்த்தா, திரும்பி உள்ளாற எங்கயோ போய்க் கிட்டேயிருக்கே. இவ்ளோ தொலைவிலயா வீடு வாங்கி குடித்தனம் பண்றீங்க?"

ஒரு பெண்மணி சொல்ல அப்பா பதிலுக்கு வெறும் புன்னகை செய்தார்.



"பொழிச்சலூர்னா ஊருன்னு பார்த்தேன்.ஊர் இல்லை. கிராமம்" இன்னொரு பெரியவர் சற்று இடக்காகப் பேசினார்.

"கிராமமா, சின்ன கிராமம்னு சொல்லுங்க. இதைத்தாண் டினா காடு வந்திடும் போலிருக்கே.ஏங்க... அப்படித் தானே?"

இன்னொரு மத்திம வயது கேலி செய்தது.

அப்பா வாய் விட்டு சிரித்தார்.

சீனுவாசய்யருக்கு கோபம் வந்துவிட்டது.

"என்ன காடு. இந்த இடத்துல ஒரு கிரவுண்ட் விலை ரெண்டு லட்சரூபா. அதுவும் தென்கோடியில கிடக்கும். ஊர் லேர்ந்து ஒன்றரை பர்லாங் போகணும். மழை பெய்ஞ்சா சேறா இருக்கும். வயக்காட்டு நிலம். இங்க நிலம் திருப்பதி லட்டு மாதிரி கொள்ளை போய்கிட்டுருக்கு. என்னமோ காடு நாடுன்னு பேசறீங்களே."

"நாம என்ன நிலம் வாங்கவா வந்தோம்.பொண்ணு பார்க்கத் தானே வந்தோம். பொண்ண வரச்சொல்லுங்களேன்."

படுக்கை அறையிலிருந்து வருவதைவிட, சமையல் அறை யிலிருந்து வருவதைவிட, கொல்லைப்புறத்திலிருந்து வருவது நல்லது என்று ஏனோ பூரணிக்கு தோன்றிற்று.

அவர்கள் வரும்பொழுது பவழமல்லி மேடையில் உட்கார்ந் திருந்தால் மனம் அதிகம் படபடப்பில்லாமல் அமைதியாக இருக்கும் என்று தோன்றியது.

பூரணியின் சித்தியும், அவள் இளவயது மகளும் அவளுக்கு துணையாக உட்கார்ந்திருந்தார்கள்.

கண்ணாடி, பவுடர், ஸ்பான்ச், டர்க்கி டவல் என்றெல்லாம் தயாராக வைத்திருந்தார்கள். அடிக்கடி அவளுக்கு பொங்கிய வியர்வையை ஒற்றியெடுத்தார்கள்.

"காத்து குளுகுளுன்னுதானே அடிக்குது. ஏண்டி... இவ்வ ளவு வேர்க்குது."

"ஒரு பயம்தான்."

பூரணி மெல்லியதாய் சிரித்துக்கொண்டே சித்தி மகளுக்கு பதில் சொன்னாள்.

"எப்படிடி இருக்காரு?" ஆவல் பொங்கக் கேள்வி கேட்டாள்.

"யார் பார்த்தா.உன்னோட இந்தப் பக்கம் வந்தேன். நான் போய் எட்டிப்பார்த்தா நல்லாயிருக்குமா?இவதான் பொண்ணான்னு என்னை கேட்டுட்டா உங்கம்மா என்னை செருப்பாலயே அடிப்பாங்க. அந்தப் பக்கமே போகாத உட்கார்ந்திருக்கேன்" சொல்லிவிட்டு கண் சிமிட்டினாள்.

ஹாலிலிருந்து அவளை வரச்சொல்லி கட்டளை வந்தது.

"சாப்டுட்டு பொண்ணு பார்க்கலாமே."

"இல்லீங்க... பொண்ணு பார்த்துட்டு சாப்பிடலாம்."

அவர்கள் எல்லோரும் ஒருமனதாய் சொல்ல, "அது இல்லீங்க. உங்களுக்குன்னு தயார் பண்ணி வச்சிருக்கோம். அதை சாப்பிடுங்க. இன்னொரு தடவை ஜலம் குடிங்க. காபி குடிங்க. உற்சாகமாயிடுங்க. அதுக்கப்புறம் பொண்ணு பார்க்கலாம்"

சீனுவாசய்யர் சொல்ல அவள் மெல்ல பின்னடைந்தாள்.

## 7

**கொ**ல்லைப் புறத்திலிருந்த பூரணி முன்னுக்கு வருவதையும், பின்னுக்கு போவதையும் சீனுவாசய்யர் பார்த்து விட்டார். மெல்ல வேறு ஏதோ பேசுவது போல நகர்ந்து வந்து கொல்லைக் கதவை ஒருக்களித்து சார்த்தினார்.

அப்படிச் சார்த்தியது பூரணிக்கு வசதியாக இருந்தது.

கொல்லையிலிருந்து ஓடிவந்து கதவினுடைய சந்து வழியாக யார் மாப்பிள்ளை என்று தேடினாள்.

வெள்ளைப் பின்னணியில் ரோஸ் கலர் பொடி கட்டம் போட்ட முழுக்கை சட்டையில் அவன் கம்பீரமாக உட்கார்ந்திருந்தான். கண்களை அழுத்தி வைத்து அவனை நன்றாகப் பார்க்க முயற்சி செய்தாள்.



அவன் எழுந்து நின்று சொஜ்ஜியையும், கேசரியையும் வாங்கிக்கொண்டான். ஸ்பூன் கொடுங்க என்று கேட்டான்.

அம்மா சரியான நாட்டுப்புறம். கேசரியை கையிலியா வழிக்க தின்னுவாங்க. தூத்தெறிக்க... பூரணி மெல்லியதாய் கோபப்பட்டாள்.

அவனுக்கு மட்டும் ஸ்பூன் கொடுக்கப்பட்டது. மிக அழகாக அதை ஒதுக்கி சிறிது சிறிதாக வாயில் போட்டுக் கொண்டான்.

அவன் வாயசைத்து சாப்பிடுவதையே பூரணி வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவன் நிதானமாக சாப்பிட்டு முடித்தான். அவன் சாப்பிட்டு முடிக்கும் வரையில் எல்லோரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"அம்மா... மாப்பிள்ளை சாப்டு முடிச்சிட்டாரு. காபி கொண்டா."

அப்பா உரக்க கூவினார்.

"இருக்கட்டுங்க. முதல்ல பொண்ண வரச்சொல்லுங்க."

அம்மா சட்டென்று திரும்பினாள்.

"ரெண்டையும் ஒன்னா பண்ணிடுவோம்" என்று புன்சிரிப்பாய் பேசினான்.

அவர்கள் லேசாய் சிரித்தார்கள். அதிகம் சிரித்தால் கௌரவம் போய்விடும் என்று அழுத்தமாய் இருந்தார்கள்.

அவர்களுடைய அழுத்தம் வேடிக்கையாக இருந்தது.

அம்மா புதிதாக வாங்கிய எவர்சில்வர் ட்ரேயில் ஆறு வெள்ளி டம்ளர்கள் வைத்து ஏற்கனவே கலந்து வைத்திருந்த காபியை அதில் ஊற்றி பூரணியிடம் கொடுத்தாள்.

"முதல்ல பெரியவங்களுக்கு கொடு. அப்புறம் மாப்பிள்ளைக்கு கொடு. அப்புறம் இந்தப் பக்கம் திரும்பி பொம்பளைங்களுக்கு நடுவுல உட்கார்ந்திட்டிருக்கற புள்ளையை பெத்தவங்களுக்கு கொடு. அவங்க பக்கத்துல யார் உட்கார்ந்திருக்காங்களோ கொடு. பின்னாலயே நான் இன்னொரு ட்ரேயில

காபி கொண்ணாந்துடறேன். என்னாத்துக்குத்தான் அடிச்சு பிடிச்சுகிட்டு பதினெட்டு பேர் வராங்களோ. எனக்கு புரியவே இல்லை இதுங்களை."

அம்மாவும், அம்மாவைத் தொடர்ந்து சித்தியும் பெரிய பெரிய ட்ரேக்களில் காபியை கொண்டு வந்தார்கள்.

கமலக்கண்ணனின் தகப்பனாருக்கு அருகே ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். கமலக்கண்ணனின் தகப்பனாரின் நண்பராம். முகத்தில் அதிகப்பிரசங்கி என்று எழுதி ஒட்டியிருந்தது. கமலக்கண்ணனின் தகப்பனாருக்கு காபி கொடுத்தது. அடுத்து அவரிடம் ட்ரேயை பூரணி நீட்டினாள். அவர் எந்த டம்பளரில் அதிகம் காபி இருக்கிறதோ அதைத் தேடி எடுத்துக்கொண்டார்.

"என்னம்மா படிச்சருக்க" என்று நகர்ந்தவேளை மடக்கிக் கேட்டார்."

"பி.காம். படிச்சருக்கேங்க."

"அப்பறம் வேற ஏதாவது படிச்சருக்கியாம்மா."

"வேற ஏதாவதுன்னா."

"ஷார்ட் ஹாண்ட், டைப்ரைட்டிங்."

"அதெல்லாம் இப்போ படிக்க வேண்டிய அவசியமில்லைங்க. கம்ப்யூட்டர் பேசிக் முடிச்சருக்கேன்."

கமலக்கண்ணனுக்கு காபியை கொடுக்க வேண்டிய பரபரப்பு அவளுக்கு ஏற்பட்டது.

"ஏதுனா வேலை செய்யறியா."

அந்தக் கிழவர் மறுபடியும் கேட்டார்.

அவரைத் தாண்டிப் போக வேண்டுமா. அங்கேயே நின்று பதில் சொல்ல வேண்டுமா என்று புரியாமல் பூரணி திகைத்தாள்.

"புள்ளைக்கு காபி கொடும்மா நின்னுகிட்டே இருக்கியே."

அம்மா விரட்டினாள்.



மாப்பிள்ளை காபி எடுத்துக் கொள்வதற்குள் அம்மாவும், சித்தியும் பல பேருக்கு காபி கொடுத்து விட்டார்கள். சித்தி ஓரத்திலிருந்து பூரணியை முறைத்தாள்.

போ... கொடுடி என்பது போல் பார்த்தாள்.

பூரணி நகர இன்னும் ஒரு நிமிஷம் என்று அவர் சொல்ல, "சொல்லுங்கய்யா" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்து போய் மாப்பிள்ளையிடம் ட்ரேயை நீட்டினாள். மாப்பிள்ளை ட்ரேயை வாங்கிக் கொண்டான்.

மோதிரம் அணிந்த ஒரு கை வெள்ளி டம்ளரை பற்றி எடுத்துக் கொண்டது.

"உங்க ஆபீஸ்ல சாரங்கபாணின்னு ஒருத்தர் இருக்காரே அவரை தெரியுமா. அவர் என் மச்சினனுக்கு ஒன்று விட்ட தம்பி. நாங்க ரொம்ப நெருக்கம்."

"நான் இப்போ அந்த ஆபீஸ்ல இல்லீங்க."

"இருந்தாலும் நாங்க கேள்விப்பட்டோம். உன்னைப் பத்தி ரொம்ப நல்லா சொன்னாரு."

"சரிங்க."

மாப்பிள்ளையின் தோழர்களுக்கு காபி விநியோகம் செய்தாள். ட்ரேயை எடுத்துக் கொண்டாள். நகர்ந்து போய் சமையல் அறை வாசலில் நின்றாள். நிமிர்ந்து மாப்பிள்ளையை பார்த்தாள்.

மாப்பிள்ளை காபியை குடித்துக்கொண்டிருந்தான். முகத்தை வெள்ளி டம்ளர் மறைத்தது.

அவளுக்கு அந்த கிழவர் மீது கோபமாக வந்தது.

"மேனேஜர் லீவுன்னா உன்னைத்தான் வெளிய அனுப்பு வாங்களாமே" சொன்னவர் தொடர்ந்து பேசினார்.

உன்னைப்பற்றி அக்குவேராக ஆணிவேராக நான் விசாரித்து விட்டேன் என்பது போல் ஒரு பொய்யான கர்வம் அந்தப் பேச்சில் இருந்தது.

அவளைப் பற்றி அவன் தோழன் ஏதோ அபிப்ராயம் சொல்கிறான் போலிருக்கிறது. காபி டம்ளரை விலக்கி விட்டு நாற்காலியை சற்று பின்னுக்குத்தள்ளி அவன் பின்னால் அமர்ந்திருந்த தோழனுக்கு முகம் கொடுத்தான்.

அவளால் மறுபடியும் கமலக்கண்ணனை நேருக்கு நேர் சரியாகப் பார்க்க முடியவில்லை.

"பொண்ணு பார்த்தாச்சுங்களா. அவ உள்ள போலாங்களா" வெறுமே நின்றிருந்த பூரணியை பார்த்து விட்டு அம்மா சபையை நோக்கி கேள்வி கேட்டாள்.

"இருக்கட்டுமே பார்த்தானோ என்னமோ தெரியலையே. ஏம்பா... பொண்ண நல்லா பார்த்துட்டியா."

அம்மா மகனைப் பார்த்து கேள்வி கேட்டாள். திரும்பி அவளைப் பார்த்தான். மெல்ல சிரித்தான்.

முதன் முதலாக சிரிப்பு படர்ந்த அந்த முகம் தான் பூரணிக்கு மனதில் பதிந்தது.

"உங்களுக்கு எதுனா வேலை இருக்குங்களா."

அவளைப்பார்த்துக் கேட்டான்.

அவள் திடுக்கிட்டாள். அத்தனை பேருக்கும் நடுவில் அவனை நோக்கி அவன் கேள்வி கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. மறுபடியும் அதே கேள்வியை அவன் கேட்டான்.

"உள்ள எதுனா வேலை இருக்குங்களா."

"இல்லீங்க."

அவள் தடுமாறிச் சொன்னாள்.

"கல்யாணம் முடிச்சுட்டு வேலைக்கு போகணும்னு ஆசைப் படறீங்களா."

மறுபடியும் இரண்டாவது கேள்வியைக் கேட்டான்.

சபை மௌனமாக அவளைப் பார்த்துக்கொண்டிருந்தது.

"இல்லீங்க" என்று சொன்னாள்.

"எனக்கு சம்பளம் என்னான்னு சொன்னாங்களா."



"இருக்கட்டும்டா அதெல்லாம் பின்னாடி பேசிக்குவோம்."

"யார் பின்னாடி பேசறது. இப்போ பேசினாதானே அவங்களுக்கும் நம்மள பத்தி தெரியும் ஏங்க..." அவன் திரும்பி பூரணியின் அப்பாவைப் பார்த்தான்.

"என்னய்யா... சொல்லுங்க."

"உங்க பொண்ணோட கொஞ்ச நேரம் தனியா பேச முடியுமா."

"தெரியலையே. எங்க வீட்டு லேடீஸ் எப்படி எடுத்துப் பாங்கன்னு."

இப்பொழுது அப்பா தடுமாறினார்.

"என்னாம்மா சொல்ற. மாப்பிள்ளை தனியா பேசணுங் கறாரே."

அம்மாவை பார்த்து பேசினார்.

"நம்மளதுல அப்படி வழக்கமில்லைங்க."

"நம்மளதுல பொண்ணு பார்க்கற வழக்கம் கூடதான் இல்லை. அப்பா, அம்மா, பொண்ணு பார்த்துட்டு வந்துடு வாங்க. இவளை கட்டிக்கடான்னுவாங்க கட்டிக்குவோம். பொண்ணையே மாப்பிள்ளை வந்து மணவறையிலதான் பார்ப்பாரு. இப்போ அப்படியா நடக்கறது. நம்மளதுல பொண்ணு வேலைக்கு போற வழக்கமில்லை. நாம பொண்ண வேலைக்கு அனுப்பறோம். இப்போ அப்படியா நடக்குது."

"என்னா பேசப்போறீங்க" அம்மா கேட்டாள்.

"அதை உங்களாண்ட பேச முடியுமா?"

"நாங்க இருக்கச் சொல்லதான் பேசணும்."

"நீங்க இருங்க. ஆனா கேட்க வேண்டிய கேள்வியை நான் அவங்களை கேட்டுக்கறேன்."

அம்மா திரும்பி அவளைப் பார்த்தாள்.

பூரணியின் பார்வையில் எந்த அபிப்ராயமும் இல்லாமல் இருந்தது.

அப்பா சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார். அந்த அபத்த மான நேரத்தை உதற விரும்பினார்.

"நல்லா பேசுங்க.ஆனா, கூட பொண்ணுக்கு அம்மா இருப்பாங்க. பரவாயில்லையா."

"நல்லா இருக்கலாம்."

எழுந்து நின்றான். சபை அவனைப் பார்த்தது.

"எந்த இடம்" வேகமாகக் கேட்டான்.

பூரணி கொல்லைப் புறத்திற்கு பவழமல்லிச் செடிக்கு போக விரும்பினாள். திரும்பி பவழமல்லிச் செடியை நோக்கி நடந் தாள். அம்மா பின் தொடர அம்மாவுக்குப் பின் சித்தியின் பெண் பின் தொடர அவனும் பின் தொடர்ந்தான்.

அவன் கொல்லைக் கதவு பக்கம் வரும்பொழுது திரும்பி னாள்.

"பார்த்து குனிஞ்சு வாங்க"

அவள் வாசற்படியை காட்டி எச்சரித்தாள். அவன் குனிந்து வந்தான். நன்றி என்று சொன்னான்.

"அட... ரொம்ப அழகா இருக்கே இந்த இடம் உங்களை சேர்ந்ததுதானோ."

"ஆமாங்க. ரெண்டேகால் கிரவுண்ட். ஒரு கிரவுண்ட்ல வீடு கட்டிட்டோம். மிச்சம் ஒன்னேகால் கிரவுண்ட் தோட்டமா இருக்கு."

"அதாவது இன்னொரு வீடு கட்டலாம் போல."

"கட்டறதா இருந்தா கட்டலாங்க. அதோ அந்தப் பக்கம் வாசல் வச்சு கட்டலாம்."

"எவ்வளவு அழகான தோட்டம். இதை அழிச்சுட்டு இன்னொரு வீடு கட்டுவாங்களா. இப்படியொரு தோட்டம் அமையறது எவ்ளோ கஷ்டம். சைதாப்பேட்டையெல்லாம் ஜே... ஜேன்னு ஒரே நெருக்கம். ரெண்டு பூச்செடி கூட வைக்க முடியலை. இது பவழமல்லி இல்லை. அது என்னா மரம்?"

"சரக்கொன்றை."



"அட... அது மஞ்சளா, கொத்து கொத்தா பூக்குமே. அதுவா."

"ஆமாம்."

"சிவபெருமானுக்குப் பிடித்த பூ இல்லை."

"ஆமாங்க. இங்கேர்ந்து பூ எடுத்துகிட்டுப் போய் நம்மூர் கோயில்ல நிறைய சாத்துவாங்க."

"அதோ அங்க இருக்கே அது என்ன."

"வேம்பு. கடைசியில இருக்கறது பாதாம் மரம்."

"நிறைய பூச்செடிங்க வேற வளர்க்கறீங்க போல."

"ஆமாங்க. பூஜைக்கு ஆவும்னு தான்."

தோட்டத்தை விட்டு வீட்டுப் பக்கம் திரும்பினான். அந்தத் திண்ணையில் வாரப்பத்திரிகைகளும், நாவல்களும் நிரம்பி யிருந்தன.

"இந்தியா டுடே வாங்கறீங்களா?"

"ஆமாங்க. தமிழ் இந்தியா டுடே வாங்கறோம். இங்கிலீஷ் அவ்ளோ தெரியாது."

"இந்த பொழிச்சலூர்ல இந்தியா டுடே வாங்கறீங்கன்னா நீங்க பெரியாளா இருக்கணும்."

"நெறைய பேர் வாங்கறாங்க. நாட்டு நடப்பு தெரிஞ்சுக் கலாம். இந்தப் புஸ்தகம் அதுக்கு ரொம்ப உதவியா இருக்கு."

"நிறைய படிப்பீங்களா."

"வேற ஒன்னும் பொழிச்சலூர்ல பொழுதுபோக்கு இல்லியே."

"ஏன். டி.வி.பார்க்கறது."

"எனக்கு டி.வி. பிடிக்காதுங்க."

"நிஜமாவா."

"ஏன் நிஜமாத்தான் சொல்றேன்."

பூரணி அவனுக்கு பதில் சொன்னாள்.

"இவ டி.வி.யே.பார்க்கமாட்டா. ரேடியோவை எடுத்துகிட்டு பவழமல்லி மரத்தடிக்கு வந்துடுவா.நாங்கெல்லாம் டி.வி. பார்த்துகிட்டு இருப்போம். இந்த வீட்ல டி.வி. பார்க்கற ஒரே ஆளு நான் தான்" அம்மா பெருமையாகச் சொன்னாள்.

"எனக்கும் டி.வி பிடிக்காதுங்க. என்ன ரேடியோ கேட்பீங்க சிலோனா?"

"இல்லீங்க. கே.எல்.ரேடியோன்னு புதுசா ஒன்னு வந்திருக்கு. அதை வாங்கி அப்பா கொடுத்திருக்கார். சினிமா பாட்டு, கர்நாடக சங்கீதம் எல்லாம் வரும்.சும்மா உட்கார்ந்து படிச்சகிட்டே கேட்டுக்கிட்டிருப்பேன். இந்த மாதிரி பாட்டு கேட்கறது படிப்பையும் தொந்தரவு பண்ணாது.அதேநேரம் படிப்பும் போரடிக்காது."

"இன்னும் எதுனா பேசணுங்களா" அம்மா நேரமானதை நினைவுபடுத்தினாள்.

"நல்லா சமைப்பீங்களா பூரணி."

"சுமாரா சமைப்பேங்க. ஆனா நல்லா சமைக்கணும்னு கத்துகிட்டு வரேன்."

"காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பீங்க பூரணி."

"அஞ்சரைக்கு எழுந்திருவேங்க. ஏன்னா வாசல் தெளிக்கறது. வாசப்படியை மெழுகறது இது ரெண்டும் நான் நாள் தவறாது பண்றேன். ஒரு பூஜை மாதிரிபண்றேன். வாசல் தெளிச்சு அதுல கோலம் போட்டுட்டு முன் வராண்டால ஒரு கோலம் போட்டுட்டு நேரா குளிக்க போயிடுவேன். குளிச்சுட்டு வந்து மஞ்சள் எடுத்து வாசப்படியை துடைப்பேன்."

"பார்த்தேன்- பார்த்தேன். மஞ்ச மஞ்சேர்னு இருக்கு வாசப்படி."

"அதுக்கப்பறம் பூஜை பண்ண உட்கார்ந்துடுவேன். டிபன் சாப்டுட்டு வீட்டு வேலையை பார்த்துட்டு மத்தியானம் கொஞ்ச நேரம் படுத்துகிட்டுருப்பேன்."

அவள் விவரித்தாள்.

"ஏன் வேலையை விட்டீங்க."



"எனக்கு வேலைக்கு போக பிடிக்கலீங்க."

"அப்போ ஏன் வேலைக்கு சேர்ந்தீங்க."

அவன் அவளை கூர்மையாகப் பார்த்துக் கேட்டான்.

"படிச்சுருக்கியே உலகம் தெரியணும்னா கொஞ்சம் வேலைக்குப் போ. நாலு மனுஷாள பாரு. நிர்வாகத்திறமை வரட்டும். வெறும் வீட்டுப் பொம்பளையாவே இருக்காதன்னு அப்பா சொன்னார்."

"ஆபீஸ்ல என்ன கத்துகிட்டீங்க."

என்ன என்று புரியாதது போல் அவனைப் பார்த்தாள்.

"ஒரு ஆபீஸ்ல ஒரு லேடி கத்துக்கறத்துக்கு என்னா இருக்கு."

ஒரு பேராசிரியை போல கைகளை கட்டிக்கொண்டு கேட்டாள்.

"எல்லாரும் நம்மள போல இருப்பாங்களா. உலகத்துல எத்தனையோ விதமான மனுஷங்க.எத்தனையோ விதமான ஆத்திரம், கோபம், பொறாமை, வெறுப்பு, நல்லவங்க, கெட்டவங்க, அத்தனையும் நான் ஆபீஸ்லதான் கத்துகிட்டேன்."

"அப்போ ஒரு குடும்பத்துப் பொண்ணு ஆபீஸ் போறது நல்லதுன்றீங்க."

"ஆமா. பார்க்கணும். படிச்சுட்டு ஒரு நாலு வருஷம் ஆபீஸ்ல வேலை செய்யணும். அதுக்குப்பிறகு கல்யாணம் பண்ணணும். பிறகு வேலைக்கு போறத விட்டுடணும்."

அவள் தெளிவாகப் பேசினாள்.

## 8

"**வே**ற எதுனா காரணம் இருக்கா. இந்தமாதிரி வேலை கத்துகிட்டு வேலைய விடறதுக்கு."

கமலக்கண்ணன் மறுபடியும் கூர்மையாகக் கேட்டான்.

"ஒருவேளை புருஷன்காரன் விட்டுட்டான்னு வச்சுக்கோங்க... அந்தப் பொண்ணு ஒன்னுந் தெரியாதவளா வெறும்

சமைக்கற பொம்பளையா இல்லாத நான் நாலு வருஷம் ஆபீஸ்ல வேலை பார்த்திருக்கேன். என்னால் மறுபடியும் ஆபீஸ்ல போய் வேலை செய்யமுடியும்னு பத்து வருஷம் கழிச்சியும் தோள் தட்டிகிட்டே இறங்கணும்."

அவன் திகைத்துப்போய் அவளைப் பார்த்தான்.

"என்னாடி... என்னென்னமோ பேசற.அளவா பேசவேண்டாமா?"

அம்மா கடுகடுத்தாள்.

"இல்லீங்க. ரொம்ப கரெக்டா பேசறாங்க. நான் நினைச்சதை விட தெளிவா இருக்கீங்க. எனக்கு உங்களை புடிச்சிருக்கு. நான் உள்ள போய் பூரணியை பிடிச்சிருக்குன்னு சொல்லப்போறேன். மேற்கொண்டு நீங்க பேசிக்கோங்கம்மா."

அவன் அம்மாவைப் பார்த்து கைகூப்பினான். சுற்றி ஒருமுறை தோட்டத்தைப் பார்த்தான். நகர்ந்து வருகிறேன் என்று சொல்லி கொல்லைப்புற வாசற்படியில் மெல்ல குனிந்து நகர்ந்து சற்று முன்னே போய் திரும்பி பூரணியைப் பார்த்து மெல்ல சிரித்துவிட்டு ஹாலுக்கு போய் உட்கார்ந்து கொண்டான்.

"என்னடா... நல்லா பேசிட்டியா?"

உட்கார்ந்திருந்த அப்பாவின் நண்பர் எகத்தாளமாக விசாரித்தார்.

அந்த மாதிரி கிழங்களுக்கு இந்த மாதிரி விஷயங்களிலெல்லாம் பொறாமையாகவே இருக்கின்றன என்பது அவனுக்குப் புரிந்தது. பதில் சொல்லாமல் திரும்ப நண்பர்களைப் பார்த்து காதோரம் கிசுகிசுத்தான்.

பூரணியும், அம்மாவும், சித்திப் பெண்ணும் ஹாலுக்கு வந்தார்கள்.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

மெல்ல அவன் தொண்டையைச் செருமினான்.

எல்லோரும் திரும்பி அவனைப் பார்த்தார்கள்.



"எனக்கு பூரணியை பிடிச்சிருக்கு. மேற்கொண்டு நீங்க எதுனா பேசிக்கோங்க."

அவன் எழுந்தான்.

"அப்போ மத்த விஷயம் எப்ப பேசலாம்?"

பூரணியின் அப்பா மெல்ல குரல் கொடுத்தார்.

கமலக்கண்ணனின் அம்மாவுக்கு சட்டென்று அவன் நடுக்கூடத்தில் அப்படி போட்டு உடைத்தது பிடிக்கவில்லை.

வெளிப்படையாகவே அடுத்த பெண்மணிக்கு அருகே குனிந்து "என்னா... இப்படி முட்டாள் மாதிரி பேசிட்டு போறான்" என்று அடிக்குரலில் கூறினாள்.

ஆனாலும் அது பக்கத்திலிருந்த சித்திப் பெண்ணுக்கு கேட்டுவிட்டது.

"ஒன்னும் அதிகம் கேட்க போறதில்லங்க. நீங்க என்னா போடறீங்களோ அது போடுங்க."

அந்த அம்மாள் உரக்கப் பேசினாள்.

"எவ்ளோ சொல்றீங்களோ அது எங்களுக்கு சரின்னு பட்டுச்சுன்னா போடறோம்."

பூரணியின் அப்பா பதில் சொன்னார்.

"இருவது போடுங்களேன்."

பளிச்சென்று பின்பக்கத்திலிருந்து ஒரு பெண்மணியின் வாயிலிருந்து குரல் வந்தது.

ஏன் சம்பந்தமில்லாதவர்கள் பேசுகிறார்கள் என்று பூரணியின் அப்பா முகம் சுளித்தார்.

"அதான் சொல்றாங்களே போடுங்களேன் இருவது" என்று கமலக்கண்ணனின் அம்மா வழிமொழிந்தாள்.

"இருவது அதிகங்க.கல்யாண செலவு அத்தனையும் நீங்க பார்த்துப்பீங்களா?"

"அதெப்படி. கல்யாணமும் நீங்கதான் பண்ணணும்."

"இருவது சவரனைப் போட்டு கல்யாணமும் பண்ணாக்க நீங்க என்னா பண்ணுவீங்கன்னு எங்களுக்கு தெரியணு மில்லை."

"நாங்க என்னா ஒரு மூணு சவரனுக்கு நெக்லஸ் போட றோம்."

"அது போறாதுங்க.அப்படியானா கல்யாண செலவுல பேர் பாதி வச்சப்போம்."

"அது சரியா வராது."

"அப்போ இருவது எனக்கு முடியாது."

"என்னாதான் போடுவீங்க."

"பதினஞ்சுதான்."

"அப்போ கல்யாண செலவு உங்களதுன்னு ஒத்துக்கறீங் களா?"

"வேற வழி. நீங்க மாட்டேன்றீங்களே."

"உங்க பொண்ணுதானே, ஒரே பொண்ணுதானே பதி னெட்டு போட்டுக்கோங்க."

"அதென்ன பேரம் பேசறீங்க. பதினஞ்சுதான். அதுக்கு மேல போடமாட்டேன். காலையில ஒரே வேளை டிபன். ஒரு வேளை சாப்பாடு. நீங்கபாட்டுக்கு மூணு வேளை, நாலு வேளையெல் லாம் இழுத்து விட்டுடாதீங்க. ரிசப்ஷனெல்லாம் வைக்க மாட்டேன்."

"எப்போ கல்யாணம் வச்சுப்பீங்க?"

"அதை இப்போ சொல்லமுடியாதுங்க."

சட்டென்று அங்கு அந்த சபையில் ஒரு மௌனம் நிலவி யது. பூரணியின் அப்பா அவர்கள் பேசட்டும் என்று மௌனமாக காத்திருந்தார்.

"நாங்க போய் சொல்லி அனுப்பறோம்."

"என்னாம்மா நீ போய் சொல்லி அனுப்பறது. புள்ளை புடிக்கு துன்னு சொல்லிட்டான். அதை தான் போய் சொல்லி அனுப்ப றோம்னு சொல்லுவோம். அவன் புடிக்குதுன்னு சொல்லிட்ட



பிறகு உன் பஞ்சாயத்துக்கு பின்னாடி சொல்லி அனுப்ப றோம்னா நல்லாவா இருக்கு. முடியும், முடியாதுன்றத இங்கயே சொல்லி அனுப்பு. எதுக்கு இதுக்காக அவங்களை இழுத்து அடிக்கணும்" கமலக்கண்ணன் அப்பாவின் குரல் ஒலித்தது.

"அதான் சொன்னேன்.பதினெட்டு போடுங்க. கல்யா ணத்தை பண்ணுங்கன்னு. அவரு கல்யாணமே என்னமோ ரிஜிஸ்தர் மேரேஜா பண்ணிடுவாரு போலிருக்கே."

"வேற என்னா பண்ணணும்னு நினைக்கறீங்க. கல்யா ணத்தை ரிஜிஸ்டர் பண்ணுவேன். அரைமணி நேரம் ஐயரு வந்து சடங்கு செய்வாரு. அவ்ளோதான். இதுல வேற என்னா இருக்கு."

"பாட்டுக் கச்சேரியெல்லாம் வைக்கமாட்டீங்களா?"

பின்னால் இருந்த பெண் கேட்டாள்.

"ராத்திரியா கல்யாணம் பண்றோம். பாட்டுக்கச்சேரி வைக்க றதுக்கு. மறுபடியும் சொல்றேன். ஒரே ஒருவேளைதான் சோறு. உறவுக்காரங்களுக்கு ஒரு டிபன். இன்னும் தெளிவா சொல்ல ணும்னாக்க அறுபது, அம்பது டிபன்.ஐநூறு சாப்பாடு. இதுக்கு மேல் பெருசா என்னால பண்ணமுடியாது. பாட்டுக்கச்சேரி, டான்ஸ் அதெல்லாம் வைக்க முடியாதுங்க."

"எங்களுக்கு வாணவேடிக்கை யெல்லாம் பண்ணணும்கூட ஆசைதான். வசதியில்லை" பூரணியின் அம்மா கொஞ்சம் முறைப்பாகப் பேசினாள்.

"உங்களை யாரும் வாணவேடிக்கை பண்ண சொல்லலை. ஒரு பொண்ணா இருக்கே. விமரிசையா பண்ணுங்கன்னு சொல்றோம்."

"ஒரே பொண்ணா இருந்தா இருக்கற சொத்தை மொத்தமும் கல்யாணத்துல கொட்டிடணுமா. நீங்க பாதி, நான் பாதின்னு பிரிச்சப்போம்.பத்துப் பைசா கூட கல்யாண செலவு இழுத்துக்க மாட்டேன்றீங்க. எவ்ளோதான் நாங்க பண்றது."

"என்னாத்துக்கு பெருசா இழுத்து விட்டுக்கிட்டு. நீங்க சொல்றா மாதிரி நம்ம குடும்பத்துக்கு ஒரு டிபன் போடுங்க.

வரவங்களுக்கு பதினோரு மணிக்கு நல்லபடியா சாப்பாடு போட்ருங்க. அதுபோறும். சாயந்திரமெல்லாம் ஆட்டம் பாட்டமெல்லாம் வேணாம். தேவையில்லாத விஷயம்."

"புள்ளையே கேட்டா..."

"கூடவே கூடாதுன்னுதான் சொல்வான். நாமென்ன பெரிய வியாபாரிகளா.மிட்டா மிராசா. சாதாரண குடும்பம். நம்மள தேடி கல்யாணத்துக்கு வரவங்க காலையிலேயே வந்துட்டு போயிருவாங்க. அப்புறம் சாயந்திரம் எதுக்காக யாரை கூப்பிடறது. நீங்க என்னத்துக்கு பாட்டு வைக்க சொல்றீங்க. எனக்கு புரியலையே."

"காலையிலேயே பாட்டு வெச்சா என்ன?"

பிள்ளை வீட்டு பின்னாலிருந்து இன்னொரு பெண்மணி கேட்டாள்.

"சும்மாயிரு. விட்டாக்க நடுராத்திரியில கூட பாடச் சொல்லுவீங்க போலிருக்கு."

கமலக்கண்ணனின் அப்பா சீறலாகப் பேசினார்.

"சரி... அப்போ உங்க இஷ்டம்."

கமலக்கண்ணனின் அம்மா கைஊன்றி எழுந்து கொண்டாள்.

அவர்கள் கும்பலாகப் போனார்கள்.

பூரணியின் அப்பாவை அம்மா மெல்ல அழைத்தாள்.

"அந்தம்மா கொஞ்சம் முறைப்பா போறாங்க. நாம ரிசப்ஷன் வைக்கமாட்டேன்னு சொல்லிட்டோம். அதனால இருவது பவுன் போடறோம்னு சொல்லிடலாம். டக்குனு இருவது பவுன்னு சொல்லாத எத்தினி பவுன்னு கேளுங்க."

"புரிகிறது" என்று பூரணியின் அப்பா தலையாட்டினார். மெல்ல நடந்து போனார்.

"எத்தினி பவுன்னு சொல்லலீங்களே."

"இருவதுன்னு கேட்டோம். முடியாதுன்னு சொல்லிட்டீங்க. சரி... பத்தொன்பது போடுங்க."



கமலக்கண்ணனின் அம்மா ரொம்ப இறங்கி வந்தவள் போல் பேசினாள்.

கமலக்கண்ணனின் அப்பாவிற்கு அந்தப் பேச்சு பிடிக்கவில்லை.

"என்னம்மா, பத்தொன்பது பதினெட்டுன்னே சொல்லியிருக்கீங்க?"

"அப்போ எவ்வளோதான் போடுவீங்க?"

"பதினாறு போடறேன்."

"நீங்க பேசறது பேரம் மாதிரி இல்லையா?"

நடு ரேழியில் நின்றுகொண்டு கமலக்கண்ணனின் அம்மா உரத்த குரலில் பேசினாள். பூரணியின் அம்மா உள்ளே வந்தாள்.

"கடைசியா எவ்ளோ போடணும்னு சொல்றீங்க?"

"சுத்தம். நாங்க ஒன்னும் சொல்லலை. அதான் பதினாறுன்னு சொல்லிட்டாரே பெருந்தன்மையா."

கமலக்கண்ணனின் அம்மா கடுப்படித்தாள்.

"சரிங்க... நான் இருவதே போடறேன்."

பூரணியின் அப்பா சட்டென்று உயர்த்தினார்.

"ஆனால் ஆட்டம் பாட்டம் ரிசப்ஷன் இதெல்லாம் கிடையவே கிடையாது. பன்னெண்டு மணிக்கு மண்டபத்தை காலி செய்யும்படியாத்தான் இருக்கும்."

"புடவை, சீர், வெள்ளிப் பாத்திரமெல்லாம்."

"எங்களால முடிஞ்சதை செய்யறோம்."

அதைப்பற்றி பேசவேண்டாம் என்பதுபோல் பூரணியின் அப்பா சொல்ல அவர்கள் கிளம்பிப் போனார்கள்.

"ஏம்ப்பா... அவன் எந்த வண்டியில் இருக்கான்."

கமலக்கண்ணன் இருக்கும் வண்டியைத் தேடி அவன் அம்மா போனாள். அந்த வண்டியில் ஏறிக்கொண்டாள்.எல்லா வண்டிகளும் கிளம்பின.போகும் வழியில் கமலக்கண்ணனை அவள் குதறியிருப்பாளோ என்று எல்லோருக்கும் தோன்றியது.

கொஞ்சம் குழப்பமான குடும்பமாக இருக்குமோ என்ற எண்ணம் வந்தது. எல்லோரும் கவலையோடு உள்ளே வந்தார்கள்.

"வேணாம்னு சொல்லட்டுமாடி?"

அப்பா மறுநாள் காலை நடுக்கூடத்தில் நின்று கேட்டபோது பகீரென்று ஒருபயம் பூரணிக்கு எழுந்தது. ஆனால், எதுவும் சொல்ல முடியாதவளாக அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏங்க திடுக்குனு இவ்வளோ பெரிய வார்த்தை பேசறீங்க?" அம்மா கூவினாள்.

"அவங்க பேசறது, மத்த நடவடிக்கை எதுவும் பிடிக்கலையே."

"புள்ளைய பெத்தவங்க அப்படித்தான் கொஞ்சம் கெத்தா இருப்பாங்க.நாமதான் அனுசரிச்சு போகணும்" அம்மா திரும்பியவளாய் பேசினாள்.

"ரொம்ப பேரமா பேசறாங்க. எனக்கு அந்தக்குரல் பிடிக்கலை."

"நீங்கதானே கேட்டீங்க எவ்வளோ செய்யணும்னு. இருவதுன்னு சொன்னாங்க. நீங்க முடியாதுன்னீங்க.அப்போ பத்தொன்பது போடுன்னாங்க.இது நியாயம்தானே. ஒத்த பொண்ணு வச்சுண்டிருக்காரு. பதினஞ்சு போடுவேன்னு சொல்றாரு. அவருக்கு வெட்கமே இல்லைன்னு அவங்க வீட்ல பேசியிருப்பாங்களாக்கும்."

அம்மா, அப்பாவை மடக்கும்படியாகப் பேசினாள்.

"என்னை முட்டாள்னு நினைக்கறியா?"

அப்பா பதிலுக்கு சீறினார்.

"இந்த இடத்துல எல்லாம் பதட்டமா பேசக்கூடாது. முடியலைன்னு வச்சுக்கோங்க என்னால முடியாதம்மா. பதினஞ்சு சவரனுக்கு மேல ஒரு குண்டுமணி கூட கொடுக்கமாட்டேன்னு சொல்லணும். இல்லை, கெட்டிக்காரங்களா இருந்தா ஐயோ, இருபது சவரனா நான் வந்து பத்துதான் போடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கேன். வேணா, பன்னெண்டு போடறேன்னு ஆரம்பிச்சிருக்கலாம். பதினஞ்சுல வந்து முடிஞ்சிருக்கும். இருவதுக்கு பதினஞ்சுன்னா அவங்க பத்தொன்பதுன்னுவாங்க. இதுல என்ன தப்பு?"



"நான் எப்படி பேசியிருக்கணும்னு நினைக்கற?" அப்பா கொஞ்சம் கோபமாக அம்மாவைப் பார்த்து கேட்டார்.

"இருவதுதானே சரி போடறேன்னு ஒரே வார்த்தையில சொல்லியிருக்கலாம்."

"அவ்வளோதான். உடனே ஆட்டம், பாட்டம், வாண வேடிக்கை, டபுள் நாதஸ்வரம், பாண்ட் எல்லாம் சொல்லிடுவாங்க."

"இல்லை இருவது சவரன் போடுறேன். அது என் குழந்தைக்கு வரும்.மத்தபடி ஆட்டம் பாட்டத்தையெல்லாம் வச்சுக்காதீங்க. ஒரே வேளை சாப்பாடுன்னு அப்போ சொல்லியிருக்கலாம். அவங்களும் சந்தோஷமா இருப்பாங்க.எங்க குறைக்கணுமோ அங்க குறைக்காத, எங்க குறைக்கக்கூடாதோ அங்க குறைச்சுட்டீங்க."

"எங்க குறைக்காத விட்டேன்."

"ஏன் நூறு டிபன்.எதுக்கு டிபன் ஏழரை ஒன்பது முகூர்த்தத்துக்கு நாலுவிதமா டிபன் போட்டு போயிட்டு வாங்கப்பான்னு அனுப்பறத விட்டுட்டு அதென்ன டிபன், சோறு. டிபனுக்கு நூத்தி நாற்பது பேர் வந்துட்டா நீங்க மாட்டேன்னு சொல்லுவீங்களா?"

அம்மா உரத்த குரலில் அவரோடு வாக்குவாதம் போல பேசினாள்.

அப்பாவிற்கு அவர் தவறு புரிந்தது.

"இவருக்கு அனுபவம் போறலை. ஒரு கல்யாணத்துக்குப் போய் உட்கார்ந்து பார்த்து கல்யாணம் பேசறவங்களோட உட்கார்ந்து பேசி ஏதாவது செய்திருக்கணும். இல்லை சீனுவாசய்யரை பேச விட்டிருக்கணும். சீனுவாசய்யர் தனியா கூப்பிட்டு உங்க வீட்டுக்காரர் பேசறது சரியில்லைன்னு சொல்லிட்டாரு."

"ஆமா ஐயரு உங்கிட்ட சொன்னாராக்கும்.இங்க வந்து எங்கிட்ட சொல்ல வேண்டியது தானே."

"உங்ககிட்ட சொல்லணும். அவ்ளோதானே. நான் கூப்பிட றேன். ஏய்... போய் ஐயரை கூட்டிகிட்டு வா."

"என்னா ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கறீங்களா.இது சண்டை போடற விஷயமில்லை ரொம்ப ரொம்ப மிருதுவா நீங்க ரெண்டு பேரும் பேசிக்கணும்.இல்லை காரியம் கெட்டுப் போயிடும்."

வீட்டுக்குள் வந்த சீனிவாசய்யர் அமைதியான குரலில் பேசினார்.

"என் மேல் என்னமோ குறை சொன்னீங்களாமே ஐயரே. நான் என்ன தப்பு பண்ணேன்."

பூரணியின் அப்பா புருஷோத்தமன் குரலில் சற்று சோகத்தோடு ஐயரை விசாரித்தார்.

## 9

"அடடா... இதை மெனக்கெட்டு உங்க வீட்டம்மா உங்க கிட்ட குத்தமா சொன்னாங்களா நல்லாயிருக்கு கதை.ஏங்க கண்ணுக்கு முன்னாடி எவ்ளோ பெரிய காரியம் நிக்குது. அதை விட்டுட்டு ஒருத்தருக்கு ஒருத்தர் குத்தம் சொல்லிக்கிட்டிருக் கீங்களே."

"ஆமாம்.நான் சொன்னேன்.நீங்க பேசினது தப்புன்னு சொன்னேன். ஆனா, பேசியாச்சு இல்ல.பேசின பிறகு தப்பு இல்லை."

சீனுவாசய்யர் உரத்து சொன்னார். தம்பதிகள் இருவரும் விழித்தார்கள்.

"பேசினது தப்புன்றீங்க.பேசியாச்சுன்னா தப்பு இல்லைன்னு வீங்களா."



"ஆமாம். உங்க புருஷன் ஒரு வார்த்தை சொல்லியாச்சு. இப்போ அதுக்கு பின்னாடி நிக்கணுமே தவிர அவரு பேசினது தப்பு தப்புன்னு குத்தம் சொல்றது நல்லாவா இருக்கு. நல்ல பொம்பளைக்கு அழகா.என்னா நீங்க இப்படி பண்றீங்க. என் மதிப்புல நீங்க இறங்கிட்டீங்க போங்க."

சீனுவாசய்யர் அலுப்போடு பேச, பாக்கியத்தம்மாள் வாய் பொத்திக் கொண்டாள்.

"ஐயா, புரியும்படி சொல்லுங்கய்யா."

பூரணியின் அப்பா புருஷோத்தமன் சம்மணமிட்டு சீனுவாசய்யர் எதிரே உட்கார்ந்து கொண்டார்.

"ஏன் தரையில உட்கார்ந்துகறீங்க."

சீனுவாசய்யர் பதறி எழுந்து நிற்க சீனுவாசய்யரின் முழங் கால்களைப் பிடித்து பூரணியின் அப்பா உட்கார வைத்தார்.

"எனக்கு இதுதான் வசதி.சொல்லுங்க என்ன செய்திருக் கணும்."

"நூறு டிபன் போடறேன்னு சொல்லிட்டு சாப்பாட்டுக்கும் ஒத்துகிட்டது தப்பு. ஒட்டு மொத்தமா டப்புனு எட்டே முக்கா மணிக்கு அத்தினி பேருக்கும் டிபன் கொடுத்திருக்கலாம்."

"மாத்திடட்டுமா."

"போன தடவை ஒரு வார்த்தை சொல்லிட்டு அடுத்த தடவை ஒரு வார்த்தை பேசினா அது நல்லாயிருக்காது. அம்மா இதை குத்தமா எடுத்துக்காதீங்க. எத்தனையோ செலவு அதுல இந்த செலவும் அடங்கிட்டுப் போகட்டும். இதைப் போய் புருஷன் கிட்ட சொல்லி அவரை பலவீனப்படுத்திடாதீங்க. இந்த நேரத்துல அவர் பக்கத்துல இருந்து உற்சாகப்படுத்தணுமே தவிர நீங்க தப்பு பண்ணிட்டேன்னு குத்திக் காமிக்கறது நல்ல தில்லை. கல்யாணம்கறது ரொம்ப பெரிய விஷயம்.அதுல நூறு டிபன்றது விஷயமே இல்லை."

"மத்த விஷயங்களெல்லாம் கேட்டா என்னங்க பண்றது."

"டப்புனு சொல்லணும். எங்க வீட்ல பேசி கலந்து முடிவு பண்றேன் அப்படின்னு சொல்லிட்டு ரெண்டு மூணு நாள் தாவா

வாங்கி அப்புறம் நாமெல்லாம் உட்கார்ந்து பேசிட்டு அதுக்கப்புறம் தான் சொல்லணுமே தவிர டப்பு டப்புனு எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசிடப்படாது புருஷோத்தமரே."

சீனுவாசய்யர் சொல்ல புருஷோத்தமன் தன் தவறை புரிந்து கொண்டார்.

மிக வேதனையோடு மனைவியைப் பார்த்தார்.

பாக்கியத்தம்மாளுக்கு புருஷன் வேதனைப்படுவது கவலையாக இருந்தது. பூரணி இருவரையும் மாறி மாறி லேசான சிரிப்போடு பார்க்க சீனுவாசய்யர் அவளைப் பார்த்து கண் சிமிட்டினார்.

"பார். உனக்காக உங்கப்பாவும்,அம்மாவும் படற அவஸ்தையைப் பார். பொண்ணு பெத்துட்டா ஆச்சா.அது பெருசானதுலேர்ந்து கல்யாணம் ஆகி குடித்தனத்துக்கு போற வரைக்கும் பெத்தவங்க கவலை கொஞ்ச நஞ்சமில்லை. அத்தோட முடிஞ்சுதா, வளைகாப்பு, குழந்தைப் பேறு, பெத்த குழந்தைக்கு பேர் வைக்கறதுன்னு எத்தினியோ விஷயங்கள் நடந்துகிட்டே இருக்கு. பொண்ணை பெத்துட்டோம் கட்டிக் கொடுத்துட்டோம்னு இருக்க முடியாது. பின்னாலே போய் பார்த்து பார்த்து செய்துகிட்டுதான் இருக்கணும். அதான் சம்சாரம் சாகரம்னு சொல்றது. பெரிய கடல் அது.மாத்தி மாத்தி கை போட்டு நீந்திகிட்டே இருக்கணுமே தவிர முடியாத போது கை தூக்கி மூழ்க முடியாது.இப்போ என்னமோ சிரிப்பா அப்பா, அம்மா படற வேதனையைப் பார்த்துகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்க. நாளைக்கு ரெண்டு குழந்தை பெத்து இதே அவஸ்தையை நீ படப்போற."

"பொண்ணு பெத்தா தான் வேதனையா.புள்ள பெத்தாலும் கவலை தான். அந்தப் புள்ள நல்லா வளரணும். வாலிப மிடுக்கா இருக்கணும். மிடுக்கா இருக்கற புள்ள நல்லா படிக்கணும். படிச்ச புள்ளைக்கு நல்ல வேலை கிடைச்சு மேல மேல உயரணும். கெட்ட பழக்கம் இல்லாதவனா இருக்கணும். கோபம் இல்லாதவனா இருக்கணும். குணவானா இருக்கணும்."

சீனுவாசய்யரின் மனைவி கமலத்தம்மாள் பேசனாள்.

"இப்போ என்னை என்ன பண்ணணும்னு சொல்றீங்க?"



புருஷோத்தமன் மறுபடியும் பரிதாபமாக சொல்ல சீனுவாசய்யர் கண்மூடி யோசித்தார்.

"அவங்க வரட்டும். மறுபடியும் வந்து பாக்கு வெத்தலை மாத்திக்கிறத்துக்குன்னு பேசட்டும் அப்போ பார்த்துப்போம். அப்போது புதுசா ஏதாவது சொல்லி அதன்படியே நடக்க முயற்சிப்போம்."

"அதான் பொண்ணு பிடிச்சருக்குன்னு போயிட்டானே."

"அது மட்டும் போறாது அவங்க வரணும். பேசிட்டு வரணும்."

"நீங்க பேசதீங்களா" பாக்கியத்தம்மாள் கலவரத்தோடு கை உதற முற்பட்டாள்.

"இல்லை தாயே. ஆயிரம் ஆனாலும் நான் வேற. நீ வேற. நீ பேசற மாதிரி நான் பேசறது ஆகாது. உன் புருஷன் பேசற மாதிரி வேற ஒருத்தர் பேச முடியாது.என்ன பேசறது ஏது பேசறதுன்றத நாம அந்த நேரம் கூடி விவாதிக்க முடிவு பண்ணுவோம்."

"எனக்கு உள்ள ஏதோ கலவரமா இருக்கு."

"என்ன."

'இந்த இடம் நல்ல இடம் இல்லையோ. ரொம்ப அடாவடித் தனம் பண்றாங்களோ அப்படின்னு தோணுது."

புருஷோத்தமன் கவலையோடு பேச சீனுவாசய்யர் அவரை சமாதானப்படுத்தினார்.

"ஒண்ணுமில்லை. பையன் ரொம்ப நல்ல பையன். அவன் முகம், உட்கார விதம், பேசறது திரும்பறது எல்லாமுமே ரொம்ப லட்சணமா இருக்கு."

"பையனைக் குறை சொல்லலைங்க. அந்த வீடு கடபுடான்னு இருக்கே."

"ஆமாம் அதனால என்ன. ஒன்னு பார்த்தா ஒன்னு குறையும். அப்படித்தான் எல்லா இடமும். எல்லாம் சீரா அமைஞ்சு ஒரு சம்பந்தம் கிடைக்கறதுங்கறது ரொம்ப பெரிய விஷயம்.இதை விட்டுடாதீங்க, தட்டி கழிச்சிடாதீங்க. எனக்கென்னமோ இந்த இடம் அமைஞ்சிடும்னு மனசுல படுது. அந்தப்பையன்

மூஞ்சியே எனக்கு மனகல நிக்குது. கிட்ட வந்து நம்மை வீட்டை எட்டிப் பார்த்து இதான் உங்க வீடா வெளிலேர்ந்து பார்க்கறதுக்கே நல்லாயிருக்கே அப்படின்றான். இவ்ளோ எளிமையா, இனிமையா இந்தக் காலத்துப் பசங்க வரமாட்டானுங்க. ரொம்ப கெத்தா, எல்லாம் தெரிஞ்ச மாதிரி மூஞ்சியை உர்ருனு தூக்கிட்டு நிப்பானுங்க."

"அதுவும் வேஷமா இருக்கலாமில்லையா?" புருஷோத்தமர் சீனுவாசய்யரைப் பார்த்துக் கேட்டார்.

"யோவ்... என்னய்யா ஆச்சு உனக்கு. ஏன் இவ்ளோ குழப்பமா கலவரமா இருக்க. எல்லாரையும் ஏன் சந்தேகப்படற."

"தெரியலை ஐயரே.நான் பூரணி நல்லாயிருக்கணும்னு பதறிப்பேசறேன். அவ்ளோதான். ஒரு விதத்துல சொந்தத்துல எங்கேயாவது பார்த்து தெரிஞ்ச பையனா கொடுத்துடலாம்னா அதுக்கும் வழி இல்லை. சொந்தமா பையனே இல்லை."

"சொந்தத்துல கொடுத்தா அப்படியே உத்தமனா இருந்துடுவாங்களா. என்ன பேச்சு இது. பொண்ண பெத்த எல்லோரும் படற கலவரம் தான் உமக்கும் இருக்கு. பயப்படாதீங்கோ. நல்லபடியா முடியும். பூரணி ஜாதகம் நல்ல ஜாதகம். அவ புருஷனோட நல்லபடியா வாழ்வான்னு ஏழாமிடமும் எட்டாமிடமும் சொல்லுது. குடும்பஸ்தானம் நல்லாயிருக்கு. ஏன் பயப்படறீங்க. பாக்கியத்தம்மா உங்க புருஷன் ஏற்கனவே கலவரப்பட்டுக்கிட்டிருக்காரு. நீங்க வேற தாக்கரே மூக்கரேன்னு பேசினா அவருக்கு கையும் ஓடாது. காலும் ஓடாது. இன்னும் ஏகப்பட்ட வேலை இருக்கும்மா.

ஜவுளி வாங்கறதுக்குன்னு நுழைஞ்சா ஐம்பது அறுபது ரூபாய்க்கு போயிடும். அந்த செலவையெல்லாம் ஞாபகம் வச்சக்கோங்க. பெரிய சத்திரம் பார்க்கணும்னு சொல்லிட்டா நாப்பது ரூபா அம்பது ரூபா போயிடும். அதையும் ஞாபகம் வச்சக்கோங்க."

"என்ன பண்ணச் சொல்றீங்க."

"அவங்க வரட்டும்."



கமலக்கண்ணனின் அக்காவும், அக்கா புருஷனும் மறுநாளே வந்தார்கள். மத்த விஷயங்கள் பேசறதுக்கு நீங்க ஒரு தடவை எங்க வீட்டுக்கு வரணும் என்று அழைத்தார்கள்.

"இப்பவே பேசிடலாமே"என்று பாக்கியத்தம்மாள் பணிவாகக் கேட்டாள்.

"இல்லீங்க. எங்கம்மா பேசணும் அப்படின்றாங்க."

"கூட்டியாந்திருக்கலாமே."

புருஷோத்தமர் சொன்னார்.

"இல்லீங்க. அங்க வந்தீங்கன்னா எல்லாத்தையும் பேசிடலாம்."

"அது நல்லா இருக்காதுங்க. புள்ள வீட்டுக்காரங்க நீங்கதான் ஆவலா வரணுமே தவிர நாங்க ரொம்ப தழைஞ்சு போனோம்னாக்க சரியா வராது.இங்க வந்து இது வேணும். இந்த மாதிரி வேணும்னு சொன்னீங்கன்னா என்னால முடியும். முடியாதுன்னு சொல்லிடுவேன்."

"அதெல்லாம் பேசியாச்சு. மேற்கொண்டு வேற விஷயங்கள் பேசணும்."

"வேற விஷயங்கள்னா"

"சொந்த பந்தங்களுக்கு புடவை துணிமணி எடுக்கறதெல்லாம் பத்தி பேச வேணாமா."

"சம்மந்திக்கு வேட்டி புடவை எல்லாம் உண்டு.தாலி கயிறு முடிச்சு போடற நாத்தனாருக்கு புடவை வச்சு கொடுக்கறது உண்டு. அத்தோட முடிஞ்சு போச்சு.அதுவே எங்களால என்ன முடியுமோ, என்ன விலையில முடியுமோ அதைப் பண்ணித் தரோம்."

"ரொம்ப கெத்தா போறீங்களே."

"வந்து பேசினாதான் என்னவாம்."

"எதுக்குங்க வரது. நீங்க பேசற கெத்துதான் பயமா இருக்கு."

"அந்தப் புடவை துணிமணிக்கு காசா கொடுத்துடுங்க" என்று அவள் சட்டென்று பேச அங்கு ஒரு அசிங்கமான அமைதி

நிலவியது. கடைசியில் என்ன இந்தக் குடும்பம் காசு கேட்கிறது என்று புருஷோத்தமன் கவலைப்பட்டார்.

"துணி கேளுங்க. கொடுக்கறோம். காசுங்கறது எனக்குப் புரியலையே."

"இல்லை நாங்க வாங்கிக்கறோம்"

"நாப்பதாயிரத்துலயும் புடவை இருக்கு. நாலாயிரத்துலயும் புடவை இருக்கு. நானூறு ரூபாயிலயும் புடவை இருக்கு. நான் நானூறு ரூபா புடவை தான் வாங்குவேன். நீங்க வாங்கி அதுக்கு நாங்க பில் கொடுக்கணும்னா அது சரியா வராது.எங்க சக்திக்கு என்ன முடியுமோ அதைச் செய்யறேன். நீங்க இதுல தலையிட்டு ரொம்ப குழப்பிடாதீங்க" என்று புருஷோத்தமன் பணிவோடு கேட்க சீனுவாசய்யர் கவலையோடு அவர்களை பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன நீங்க சொல்லக் கூடாதா."

அக்காவின் புருஷன் சீனுவாசய்யரைப் பார்த்துக் கேட்டார்.

"ஏதாவது சொல்லணும்னு தான் நினைக்கறேன். ஆனா, சொல்லும்படியா ஒண்ணுமில்லை. உறவு துணிமணிக்கு எல்லாமா ஒரு பேச்சு வார்த்தை நடத்த முடியும். எனக்கு இது சரியாப்படலை" என்று முகத்திற்கு நேராகச் சொல்ல அவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்.காபி குடித்தார்கள்.

"எங்க அம்மாகிட்ட போய் அப்படியே சொல்லிடறேன்" என்று சொல்ல, வீடு மௌனமாக இருந்தது.

"எனக்கு ஒன்னும் தோணலை இந்த சம்மந்தம் சரியா வரும்னு. அப்படியே சரியா வந்தாலும் கொடுக்கணும்னு ஒரு எண்ணம் எங்கிட்டேர்ந்து போயிடுச்சு.பையன் நல்லவனா இருந்தாலும் அந்த வீட்ல இருக்கற மத்த ஆளுங்க தப்பா இருக்காங்க. பையன்கூட நல்லவனா வேஷம் போடறவனா இருக்கானோ அப்படின்னு ஒரு பயம் இருக்கு.இப்போ இனிக்க இனிக்க பேசிட்டு கல்யாணம்னு வந்தவுடனே குரங்கா மூஞ்சியை வச்சுக்கிட்டான்னா என்ன பண்றது."



கமலக்கண்ணன் என்கிற முகத்தை அழிக்கவும் முடியாமல், தக்க வைத்துக் கொள்ள முடியாமல் பூரணி அவஸ்தைப் பட்டாள்.

அவன் புருஷனா, அன்னியனா, அவன் நல்லவனா, கெட்டவனா, அவன் வேண்டுமா வேண்டாமா என்று பல்வேறு விதமான அபிப்ராயங்கள் முன்னும் பின்னும் உருண்டன.

எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு பாட்டு கேட்டுக் கொண் டிருப்பதோ பாட்டு பாடிக்கொண்டிருப்பதோ முடியாது என்று தோன்றியது.

மறுபடி மறுபடி அவன் முகம் முன்னே வந்து நின்றது.

என்ன அவஸ்தை இது. எதற்காக ஒரு ஆணைப் பற்றி திரும்பத் திரும்ப யோசித்துக் கொண்டிருக்கிறேன். பதினைந்து நாட்களுக்கு முன் எந்த ஆணைப் பற்றியும் எந்த விதச் சிந்தனை யும் இல்லாமல் பூப்போல இருந்தேனே. இப்போது இடையறாத ஒரு நெருடல் பெரிதாகி விட்டதே என்ன செய்வது என்று தவித்தாள்.

நல்ல அப்பா நல்ல அம்மா உண்மையான உறவுகள் இருக் கின்றன, ஆனால், மதிநுட்பம் நிறைந்த ஸ்நேகிதி அவளுக்கு கிடைக்கவேயில்லை.

இப்போது என்ன செய்வது. அவனை வெளியேற்றுவதா அல்லது உள்ளே வைத்திருப்பதா. இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள ஒரு பெண் என்ன செய்ய வேண்டும் உள்ளுக்குள்ளே இதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லையே.

என் கணவன்... என் கணவன் என்று அவன் கணவனாவ தற்கு முன்பே ஒரு எண்ணம் தோன்றுகிறதே அதை எப்படி விலக்குவது. அதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற கற்பனைகளை எப்படி நிறுத்துவது என்று ஒரு தோழியிடம் தான் கேட்க முடியுமே தவிர வேறு யாரிடமும் இதை வாய் விட்டு சொல்ல முடியாது. சொன்னால் சிரிப்பார்கள். இல்லை, இத்தனை காமமா என்று கேலி செய்வார்கள். ரொம்ப கெட்டப் பெண் என்று

இழித்துக் கூறுவார்கள். பிறரிடம் இதைப் பற்றி வதந்தி பரப்புவார்கள்.

அவள் பவழமல்லி மரத்தடியில் கால் கட்டிக்கொண்டு தலையை முழங்கால் மீது வைத்துக் கொண்டு மெல்ல உடம்பை ஆட்டியபடி யோசனை செய்ய அம்மா வந்து உட்கார்ந்தாள்.

"என்ன என் குட்டி கவலையா இருக்கு" என்று தலையைத் தடவி பேசினாள்.

அம்மா அப்படி அடிக்கடி பேசமாட்டாள். ஆனால், திடீரென்று அம்மாவுக்கு பாசம் பொங்கும். வந்து அணைத்துக் கொள்வாள். கன்னத்தில் முத்தமிடுவாள். என்னடி வேணும் சொல்லு என்று சொல்வாள். யாரும் இல்லாத நேரத்தில் தான் மகளைக் கொஞ்சுவது என்று அவள் வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு அப்பா வெளியே போய் விட வீட்டு வாசல் கதவை தாழ் போட்டு விட்டு மகளிடம் வந்து அம்மா உட்கார்ந்து கொண்டாள்.

"ஒண்ணுமில்லைம்மா, சும்மா உட்கார்ந்துகிட்டிருக்கேன்."

"இல்லையில்லை, நீ சும்மா உட்கார்ந்திருக்கும் போது எப்படி இருப்பேன்னு தெரியும்.ஏதோ யோசனையா இருக்க உள்ளுக்குள்ள கவலையா இருக்க. என்னா வேணும் சொல்லு."

"எனக்கு ஒண்ணும் கவலை இல்லைம்மா.நீங்களெல்லாம் இருக்கச் சொல்ல எனக்கு என்ன கவலை."

"நாங்களெல்லாம் இருக்கத்தான் செய்யறோம்.அதுக்காக கவலை இல்லாத போயிடுமா. கவலையும் கூடவே வரத்தான் செய்யும்.என்ன அந்தப் பையனை ரொம்ப பிடிச்சுருக்கா உனக்கு."

அம்மா நேரடியாய் தாக்கினாள்.



## 10

உலுக்குவது போல் கேள்வி கேட்கும் அம்மாவின் கண்களை பூரணி பயமில்லாமல் சந்தித்தாள்.

"இல்லைம்மா. அப்படியொன்னும் இல்லை" பூரணி சொன்னாள்.

"அப்போ பிடிக்கலையா?"

"அதுவும் சொல்லமுடியாது. நீங்களெல்லாம் சரின்னா எனக்கும் சரி."

"நாங்களெல்லாம் சரின்றதைத் தாண்டி உனக்கு அவன் மேல ஒரு பிடிப்பு வரலை."

அம்மா கேட்க பூரணி மௌனமாக இருந்தாள்.

"சொல்லு... நாங்களெல்லாம் பேசறது தாண்டி உனக்கு அவன் மேல ஒரு ஆசை வரலை."

அம்மாவின் கண்களை பூரணி ஏறிட்டுப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் மெல்ல கண்ணீர் தேங்கி நின்றது.

"ஏம்மா அழுவறா?"

"அழுவலைடி. இதே நிலைமை எனக்கும் வந்தது. அதை நினைச்சகிட்டேன். என்னமோ உள்ள உடைஞ்சு பொங்குது."

"என்னம்மா நிலைமை?"

"வரிசையா ஆறு பேர் என்னைய பொண்ணு பார்த்துட்டு போனாங்க உங்கப்பா பார்க்கறதுக்கு முன்னாடி. உங்கப்பா ஏழாவது. ஆறு தடவையும் இவன்தான் புருஷனோ இவன்தான் புருஷனோன்னு நான் அலைமோதி ரொம்ப அவஸ்தைப் பட்டேன். இப்போவாவது எத்தனையோ விஷயங்கள் இருக்குடி மனசை மாத்திக்கறதுக்கு. ரேடியோ பாட்டு இருக்கு. டி.வி. இருக்கு. கோவில் இருக்கு. அப்போ ஒண்ணுமில்லை. கோவில் போறதா இருந்தாக்கூட ஆம்பளை துணையோடதான் போகணும். அடுக்களை, கொல்லைப்புறம் தாண்டி வேற எங்கயும்

போகமுடியாது. சுத்தி சுத்தி ஒரே இடத்துல வரதுனால மனசு நாலாபக்கமும் அலையும்."

"எல்லா பக்கமும் அலையும்னா என்னா பண்ணும்?"

"வேற எதுனா வெங்கடேசனா, ராமசாமியா, குப்புசாமியா அப்படின்னு ஒவ்வொருத்தன் மூஞ்சியையும் திரும்பத் திரும்ப நினைவுக்கு கொண்டாந்து இவன் கூட குடித்தனம் பண்ணப் போறேனோ, அவன்கூட நிக்கப்போறேனோ, பால் சொம்பு வச்சுட்டு எவன் எதிர நிக்கப்போறேன். எவன் புடவைய பிடிச்சு இழுப்பான்னு..."

"என்னம்மா இப்படி பேசற?"

"ஐயோ பொம்பளை உள்ளுக்குள்ள நடக்கற கூத்து கொஞ்ச நஞ்சம் இல்லை. அது உனக்கும் வந்துடக்கூடாதுன்னு பார்க்கறேன்."

"எனக்கு அந்தத் தொந்தரவெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா."

"தெரியும்டி. என்னை மாதிரி நீ இல்லை. என்னைவிட ரொம்ப கெட்டிக்காரி. உன்னை உங்கப்பா ரொம்ப நல்லபடியா வளர்த்திருக்காரு. நல்ல விஷயங்கள் நிறைய சொல்லிக் கொடுத்திருக்காரு. வேலைக்குப் போன்னு அனுப்பியிருக்காரு. என்னைவிட உலகம் தெரிஞ்சவதான். நான் இல்லேன்னு சொல்லலை. ஆனா இந்த குழப்பத்துலேர்ந்து தப்பிச்சுக்க முடியுமா. இவனா புருஷன், இவன் இல்லன்னா வேறு யார் புருஷன்னு உள்ளுக்குள்ள கேள்வி வருமே."

"வருதும்மா. ஆனா அதை பெருசா அலட்டிக்கலை."

"நீ உள்ள மனசு திறந்து பேசமாட்ட. நீ ஒரு மறைவான பொண்ணு. நான் சொல்றேன் உன் மனசு என்ன பாடுபடும்றது எனக்குத்தெரியும். நான் ஒரு சூட்சுமத்தைத் சொல்லித்தரேன். நேரா பொழிச்சலூர் சிவன்கிட்ட போய் நில்லு. ரெண்டுவிதமா நீ வேண்டிக்கலாம். இவனையே எனக்கு புருஷனாக்கு அப்படின்னு சொல்லலாம். அல்லது எவனையாவது ஒருத்தனை நல்லவனை, வல்லவனை எனக்கு புருஷனாக்கு. இவன பத்தி



எனக்கு எந்த அபிப்ராயமும் இல்லை. நான் சுத்தமா துடைச்சு போட்டுட்டேன் அப்படின்னு அவராண்ட உரக்க சொல்லிட்டு வரலாம். உரக்கன்னா வாய்விட்டு இல்லை. மனசு உரக்க..."

அம்மா சொல்லிவிட்டு மெல்ல விசும்பத் துவங்கினாள்.

பூரணி பாய்ந்து அம்மாவை அணைத்துக்கொண்டாள்.

"என் பேர்ல இத்தினி அக்கறையா உனக்கு. நான் எங்கடா கலகலத்துடப் போறனோ, கவலைப்படப்போறேனோன்னு சொல்லிட்டு நீ உட்கார்ந்து பிழியப் பிழிய அழுவறியா. அசடு. சும்மாயிரு. சிவன்கிட்ட என்ன வேண்டிக்கறதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும் வந்து இத்தனை அக்கறையா எங்கிட்ட சொல்லியிருக்கப் பார். இதுக்கு ரொம்ப தேங்க்ஸ். உன்னை மாதிரி அம்மா கிடைக்கறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்."

அம்மாவின் கைகளை எடுத்து பூரணி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"நீ ரெண்டாவது சொன்னியே அதுதான் ரைட் இவன்தான் கிடைக்கணும்னு நான் என்ன தீர்மானம் பண்றது. நமக்காக பொழிச்சலூர் சிவன் தீர்மானம் பண்ணட்டும். எனக்கு நல்லவனா, வல்லவனா ஒரு புருஷனை கொண்ணாந்து கொடு. சகலத்தையும் உங்கிட்ட ஒப்படைச்சிட்டேன், அப்படின்னு சொல்லிட்டு வரேன். அம்மா நீயும் வரியா?"

"வேணாம்மா. வீட்டை பூட்டிட்டு போகணும். உங்கப்பா எப்போ வருவாருன்னு தெரியாது."

"எதிர்வீட்ல சொல்லிட்டுப் போலாமே."

"வேணாம். நீ போயிட்டு வா. இதெல்லாம் தனியாத்தான் செய்யணும். எல்லாத்தையுமா அம்மா கூட செய்யமுடியும். போ. நீ போய் உன் இஷ்டப்பிரகாரம் வேண்டிகிட்டு வா. முன்ன மாதிரி மலர்ச்சியா இருக்கணும். அழுத மூஞ்சியா கவலை தோய்ஞ்ச முகமா இருந்தா எனக்கு வயித்தை கலக்குதுடி" என்று சொல்ல, அவள் மறுபடியும் அம்மாவை தழுவிக் கொண்டு முத்தமிட்டாள்.

"இதோ அஞ்சே நிமிஷத்துல வந்துடறேன்."

வேறு தாவணி உடுத்திக்கொண்டாள். முகம் துடைத்துக் கொண்டாள். குங்குமம் வைத்துக் கொண்டாள். அதற்கு மேலே சிறிதாய் திருநீறு இட்டுக் கொண்டாள்.

கதவு திறந்து தெருவில் இறங்கி கோயில் நோக்கி மெல்ல நடக்கத் துவங்கினாள்.

பொழிச்சலூர் சிவன் கோயில் வாசலில் எப்பொழுதும் ஒரு வாலிபர்கூட்டம் இருக்கும். அங்கு ஒரு டியூஷன் சென்டர் இருக்கிறது. அந்த டியூஷன் சென்டரில் வாலிபர்கள் பள்ளிக் கூட பிள்ளைகளுக்கு டியூஷன் எடுக்கிறார்கள். பிறகு கூடிப் பேசுகிறார்கள். கதை பேசுகிறார்கள். பாட்டு பாடுகிறார்கள். சிலசமயம் கோயில் விசேஷங்களுக்கு திட்டம் தீட்டுதலும் அதை செயல்படுத்துகின்ற ஆபீஸ் ஆகவும் அந்த கூரைக் கொட்டகை இருக்கிறது.

அந்த கூரை கொட்டகை வாசலில் இளம் பையன்கள் நின்றிருந்தார்கள்.

அவள் வரவே லேசாக பரபரப்படைந்தார்கள். இது வழக்க மாக நடக்கின்ற விஷயம்தான். எப்பொழுது பூரணி அந்தப் பக்கம் தாண்டினாலும் அந்த இளைஞர்கள் மரியாதையாக விலகி வணக்கம் பூரணி என்பார்கள். பொழிச்சலூரிலுள்ள இளைஞர்கள் ஒருமுறை கூட அத்துமீறி நடந்து கொண்ட தில்லை. வெறுமே மரியாதையாக பார்ப்பதோடு அவர்கள் நின்றுவிடுகிறார்கள்.

அந்த மரியாதை பூரணிக்கு பிடித்திருந்தது.பதிலுக்கு இன்றும் வணக்கம் சொன்னாள்.

அவள் கோவிலின் வெளிக்கதவை தாண்டி உள்ளுக்குள் போனாள். மண்டபத்தில் நுழைந்தாள். மண்டபத்தில் நுழைந்து நேரே போய் சிவனின் எதிரே கைகூப்பி நின்றுகொண்டாள்.

*"தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"*

என்று வேண்டினாள்.



உரக்க அம்மாவிடம் சொன்னது போல எனக்கு நல்லவ னான, வல்லவனான ஒரு புருஷனை நீயே தேர்ந்தெடுத்துக் கொடு. நான் கைகூப்பி காத்திருக்கிறேன். நீ கொடுத்த எந்தப் புருஷனோடும் நான் அமைதியாக குடித்தனம் செய்கிறேன் என்று மனமுருக பிராத்தனை செய்தாள்.திருநீறு வாங்கி இட்டுக்கொண்டாள். தட்டில் ஐந்து ரூபாய் காசு போட்டாள். அம்பாளை தரிசனம் செய்தாள். உள் சுற்றுக்கு நகரும்போது மண்டபத்தில் ஈசான்ய மூலையில் கமலக்கண்ணன் நின்றிருந் தான். அவளைப் பார்த்தவுடன் கைகூப்பி வணக்கம் என்று சொன்னான்.

பூரணிக்கு சொரேர் என்ற பயம் ஏற்பட்டது. அவள் திடுக்கிட்டாள்.

அம்மாவைக் கூட்டி வந்திருக்கலாமோ. என்ன இது இப்படி வந்து நிற்கிறானே என்று கவலைப்பட்டாள்.

எவராவது உடனடியாக பொழிச்சலூர் முழுவதும் சொல்லி விடுவார்களே.நான் இவனோடு பேசுவதா அல்லது பேசாமல் போவதா. பேசாமல் போவது மரியாதையா பேசினால் சரியா வருமா.

அவள் மறுபடியும் திண்டாடினாள்.

*"தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"*

உள்ளுக்குள் மறுபடி கூவினாள்.

"வணக்கங்க" அவன் மறுபடியும் சொன்னான்.

அவள் கைகூப்பி வணக்கம் என்று சொன்னாள்.

"எங்க இந்தப்பக்கம்?" என்று இனிமையாகக் கேட்டாள்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கேன்."

அவன் பதில் சொன்னான்.

பூரணியை மறுபடியும் பயம் தாக்கியது.

பூரணிக்கு பொழிச்சலூரில் அனேகமாக எல்லோரையும் தெரியும். அவள் பொழிச்சலூருக்கு குடிநீர் வசதி வேண்டும்

என்று சொல்லி போராட்டத்தில் கலந்து கொண்டாள். ஒருநாள் முழுவதும் நடுத்தெருவில் நின்று உரக்கக் கத்தி தொண்டை கட்டிப்போயிற்று.

"பூரணி ஒருத்திதாம்ப்பா துணிச்சலா முன்ன நின்னுது. போலீஸ்காரனெல்லாம் முறைச்ச போது கூட கொஞ்சம்கூட பின்வாங்கலை. மத்த லேடீஸெல்லாம் மொள்ள ஓடிட்டாங்க. பூரணிதான் நகரவேயில்லை" என்று பொழிச்சலூர் மக்கள் அவளை பெருமையாகப் பேசினார்கள்.

அதேபோல மாரியம்மன் கோயில் தீமிதி திருவிழாவுக்கும் பால்குடம் எடுப்பதற்கும் பூரணி கலந்துகொள்வது வழக்கம். பிரதோஷ தினத்தன்று கோவில் முழுவதையும் பெருக்க வேண்டுமென்பதிலும் பூரணி வேகமாக ஈடுபடுவாள்.

ஒருநாள் நடுநிசியில் எதிர்ப்பக்கம் இருக்கின்ற சீனுவாசய்யர் வீட்டு மாடியில் ஆட்கள் நடமாட பூரணி தைரியமாக கதவு திறந்து கொண்டு வந்து திருடன்... திருடன்... திருடன்... என்று உரக்கக் கத்தினாள். மொட்டைமாடியில் இருந்த அந்த ஆள் கற்களைத் தூக்கி பூரணியின் மீது வீச, பூரணி ஒதுங்கிக் கொண்டாள். கீழிருந்த கற்களை எடுத்து மொட்டை மாடியில் வீசினாள். அந்த ஆட்கள் வேறுபக்கமாக குதித்துப் போனார்கள்.

பொழிச்சலூர் இளைஞர்கள் சப்தம் கேட்டு ஆட்களைத் துரத்திப்போய் இரண்டு பேரை பிடித்துவிட்டார்கள். இன்னொருவன் கால் தவறி விழுந்து சரியான அடி வாங்கினான். அதனால் பூரணி அங்கு அதிகம் பிரசித்தி பெற்றிருந்தாள்.

"தயவு செய்து வெளிய வந்து இந்த மாதிரி கத்தாதீங்க. யாராவது பாய்ஞ்சு உங்களை கத்தியால குத்திட்டா இல்ல, சங்கிலியை அறுத்துட்டு போயிட்டா என்ன பண்றது?" என்று பொழிச்சலூர் இளைஞர்கள் அவளுக்கு புத்திமதி சொன்னார்கள்.

அவள் அலட்சியமாக சரியென்று கேட்டுக்கொண்டாள்.

பொழிச்சலூர் டியூஷன் சென்டரின் ஆண்டுவிழாவின் போது பூரணிக்கு இதற்காக பாராட்டு சொல்லி ஒரு கலைவாணி பொம்மை பரிசளித்தார்கள். அவளை வாயாரப் பாராட்டினார்



கள். அதே இளைஞர்கள் கமலக்கண்ணனோடு பேசினால் இதையும் விமரிசையாகத்தான் நாலு பேருக்குத் தெரியும் படியாகத்தான் செய்வார்கள்.

என்ன செய்வது. தொடர்ந்து பேசுவதா அல்லது வீட்டுக்குப் போகிறேன். பின்னாலேயே வாருங்கள் என்று சொல்வதா? இத்தனை தூரம் இந்த கோவிலில் வந்து அவன் காத்திருக்கிறான் என்றால் அவன் வீட்டிற்கு வந்து பேசுவதற்காக வரவில்லை. தன்னிடம் பேசுவதற்காக வந்திருக்கிறான் என்று தெரிந்து, வாங்க நாம வெளிமண்டபத்துல போய் பேசுவோம் என்று பூரணி அவனோடு மண்டபத்திற்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள். அவன் இடைவெளி விட்டு அமர்ந்து கொண்டான்.

"என்ன சொல்லுங்க" என்று கேட்டாள்.

பொழிச்சலூர் இளைஞர்கள் எட்டி அவளைப் பார்த்து வியந்தார்கள்.

இதுவரைக்கும் பூரணியை இன்னொரு ஆளோட பார்த்ததேயில்லையே. யார் அந்த ஆள் என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

பூரணி அவர்கள் மீது ஒரு கண்ணும், கமலக்கண்ணன் மீது ஒரு கண்ணுமாய் உட்கார்ந்திருந்தாள்.

பூரணிக்குள் ஒரு பரபரப்பு எகிறி எகிறி அடங்கியது. பயத்தால் தொடைகள் கனத்தன. முழங்காலுக்கு கீழ் வலுவில்லாது போயிருந்தது. நல்லவேளை உட்கார்ந்து கொண்டோம் என்று தோன்றியது.ஆனால், இப்படி உட்கார்ந்தது சரியோ எழுந்து ஓடிவிடலாமா என்ற இன்னொரு எண்ணமும் வந்தது.

ச்சீ... ரொம்பவும் ஆடாதே.அமைதியாக இரு என்று மனதை அதட்டினாள்.

மறுபடியும் இனிமையாக அவனைப் பார்த்தாள். "சொல்லுங்க" என்று சொன்னாள்.

"இங்க உட்கார்ந்து பேசறதுனால உண்டான கஷ்டம் எனக்குத் தெரியும்."

அவன் நிதானமாக ஆரம்பித்தான்.

"சுருக்கமா சொல்லிடறேன். எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு. உங்க ஐடியாவை ரொம்ப பிடிச்சிருக்கு. எங்க வீட்ல கொஞ்சம் முட்டாள்தனமா பேசறாங்க. நான் தடுக்கட்ரை பண்றபோது உனக்கு ஒண்ணும் தெரியாது சும்மா இருன்றாங்க. ஒரு ரெண்டுமணிநேரம் முன்னாடி உங்க வீட்டுக்கு ஆதரவா பேசறபோது நாங்க வரமாட்டோம் நீயா பார்த்து, நீயா கல்யாணம் பண்ணிக்கோ எங்களைக் கூப்பிடாத அப்படின்னு முரட்டுத்தனமா எங்கம்மா சொல்லிட்டாங்க. எங்கம்மா பக்கம் அத்தனை பேரும் நிக்கறாங்க.எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை."

அவன் பேச பூரணி திகைத்தபடி உட்கார்ந்திருந்தாள்.

## 11

**பொழிச்சலூர்** இளைஞர்கள் ஒரு சந்தேகத்தோடே கமலக்கண்ணனைப் பார்க்க பூரணி சாதாரணமாய் இருக்க முயற்சித்தாள்.கமலக்கண்ணன் தொடர்ந்து பேசினான்.

"வாழ்க்கையில் நல்ல மனைவி அமையறதுங்கறது ரொம்ப கஷ்டம். அவங்களுக்கு நல்ல மனைவி ஒருத்தனுக்கு அமை யறதுவிட வேறு எத்தனையோ ஆட்டபாட்டங்கள் இருக்கு. அதை ஒவ்வொன்னும் எடுத்து தனித்தனியா அலசிப் பார்த் தோம்னா அசிங்கமா இருக்கு.சொன்னா கேட்கலை.சொல் புத்தி யில்லை. சுயபுத்தியும் இல்லை.நான் இவ்வளவு கடுமையா எங்க வீட்டை இதுவரைக்கும் விமர்சனம் பண்ணதில்லை. அழ குல மயங்கிட்டேன். சொந்த வீட்டை பார்த்து மயங்கிட்டேன். அப்படின்றாங்க. அதெல்லாம் இல்லை" கமலக்கண்ணன் தரை பார்த்து பூரணியோடு பேசினான்.

"எல்லோருடைய அழகும் ரொம்ப டெம்பரரி.அதே போல சொத்து சுகமும் நிரந்தரமில்லாத விஷயம். மனுஷாளுக்கு பேசும்போதே ஒரு தன்மை இருக்கணும். எங்க வீட்ல எங்க



அக்கா உட்பட சித்தப்பா பெரியப்பா பொண்ணுங்களுக்கு ஒரு நாலு பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ணி நாயா நடத்தப் பட்டிருக்கோம். இப்போ முதல் முதல்ல ஒரு பையனுடைய கல்யாணம் நடக்குது. அதனால் பொண்ணுக்கு கல்யாணம் பண்ற போது என்ன அவஸ்தையெல்லாம் பட்டாங்களோ அந்த அவஸ்தையெல்லாம் பதிலுக்கு பண்ணணும்னு ஆரம்பிக் கறாங்க. நீங்க உதை வாங்கிட்டு இதே மாதிரி இன்னொருத்தர் கிட்ட உதைக்கணும்னு ஆரம்பிக்கிறீங்களே. நல்லா இருக் கான்னு கேட்டேன். அதுக்கு எல்லாருக்கும் கோவம் வந்து டுச்சு."

"என்ன சொல்ல வறீங்க."

"கல்யாணம்னு ஆகற வரைக்கும் தான் இந்த ஆட்டபாட்ட மெல்லாம். கல்யாணம் ஆகி என்னுடைய மனைவியா நீங்க வந்த பிறகு நான் வைக்கறது தான் சட்டம்.அப்போ அம்மா பின்னாடி சுத்துங்கன்னோ, அப்பா சொல்படி கேளுங்கன்னோ, எங்க அக்காவுக்கு இதமா இருங்கன்னோ நான் சொல்லவே மாட்டேன். நீங்க நான் அதான் முக்கியம்."

"நாங்க என்ன பண்ணணும்னு சொல்றீங்க."

"உங்கப்பாகிட்ட நான் நேரடியா பேசறதுக்கு முன்னாடி உங்ககிட்ட நான் உங்களை விரும்பறேன்றதை சொல்றதுக்கு முயற்சி பண்ணேன். அவ்ளோ தான். இப்போ உங்கப்பாவை போய் பார்த்து உங்கப்பாகிட்ட முன்னபின்ன எங்க வீடு டிமாண்ட் பண்ணாலும் அதை பெரிசு பண்ணாதீங்க. கூட செலவாச்சுன்னாக்க இருவதாயிரம் ரூபா நான் கையில் வச்சருக் கேன். அதை உங்ககிட்ட கொடுத்துட்டுப் போறேன்னு காசு எடுத்துட்டு வந்திருக்கேன்" என்று சொன்னதும், அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவனை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள்.

"பையில் காசு இருக்குங்க. உங்களாண்ட கொடுத்தா நல்லா யிருக்காது. வீட்டுக்கு வந்து அப்பாகிட்ட கொடுக்கட்டுமா."

"அப்பா இல்லியே. மாம்பலம் வரைக்கும் போயிருக்காரே."

"அடடே... அம்மாகிட்டே கொடுத்தா?"

"அம்மா வாங்குவாங்களான்னு தெரியலையே..."

"அப்போ... சீனுவாசய்யர்கிட்ட சொன்னோம்னா..."

அவன் விடாப்பிடியாக தொடர்ந்தான்.

"நல்லாயிருக்கும். வாங்க. எங்க வீட்டுக்கு வந்து பேசறதை விட சீனுவாசய்யர் வீட்டுக்கு வந்து பேசுங்க."

அவள் அவனை அழைத்துக் கொண்டு போனாள்.

பொழிச்சலூர் இளைஞர்கள் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இந்தப் பையனை தெரியும்ப்பா. இவன் வந்து பொண்ணு பார்க்க வந்தான் பூரணியை. எனக்கு தெரியும்ப்பா அம்பாஸிடர் கார்ல வந்தாங்க. அப்போ ப்ளு சட்டை போட்டுகிட்டிருந்தான். இப்போ ஒயிட் சட்டை போட்டுகிட்டிருக்கான். கல்யாணம் நிச்சயமாயிட்டாப்போல அதான் வந்து பேச வந்தாப் போல இருக்கட்டும் இருக்கட்டும் நல்லா இருக்கட்டும்" என்று அவர்கள் உரக்கப் பேசிக் கொள்வது பூரணியின் காதில் விழுந்து.

அது அவன் காதிலும் விழுந்திருக்க வேண்டும். திரும்ப பூரணியைப் பார்த்து மெல்ல சிரித்தான். பூரணியும் சிரித்தாள்.

அவர்கள் இரண்டு பேரும் நடந்து சீனுவாசய்யர் வீட்டிற்கு வந்தார்கள்.

சீனுவாசய்யருக்கு சட்டென்று அவனை அடையாளம் தெரியவில்லை.

"மாமா இவர் தான் கமலக்கண்ணன். பொண்ணு பார்த்துட்டு போனாரே."

"ஆமா... ஆமா..." என்று சீனுவாசய்யர் திடுக்கிட்டு எழுந்தார்.

மடியிலிருந்த பேப்பர் நழுவி விழுந்தது. அவன் குனிந்து பேப்பரை எடுத்துக் கொடுத்தான். அவர் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். நமஸ்காரங்க என்றான்.

பூரணிக்கு அந்தப் பணிவு பிடித்திருந்தது. சீனுவாசய்யருக்கும் அந்தப் பணிவு பிடித்திருக்க வேண்டும்.

37682
5470062



"என்ன திடீர்னு."

"பூரணியைப் பிடிச்சருக்கு. அதனால எங்க வீடு முன்ன பின்ன காக கேட்டாலும் பயப்பட வேண்டாம். ஒத்துக்கோங்க. உங்களுக்கு காசு அதிகம் செலவாகும்னு தோணிச்சன்னா நான் தரேன் அப்படின்னு இருபதாயிரம் கொண்ணாந்திருக்கேன். பூரணி அப்பாகிட்டயோ அம்மாகிட்டயோ பேசறதுக்கு பதிலா இதை உங்ககிட்ட பேசலாம்னு சொல்லிச்சு. அதான் இங்க வந்துட்டோம்."

"பூரணியை எங்க பார்த்தீங்க."

"சிவன் கோவில்ல."

"நீங்க கோவிலுக்கு எப்போ வந்தீங்க."

"நான் வந்து ஒரு மணி நேரம் ஆகுது."

"பூரணி வருவான்னு எப்படி தெரியும்."

"காத்திருந்து பார்ப்போம். இல்லைன்னா வீட்டுக்கதவை தட்டுவோம்னு நினைச்சேன். பொழிச்சலூர் சிவன்கிட்ட பூரணியை அனுப்புங்களேன் அப்படின்னு வேண்டிகிட்டேன். பூரணி வந்துடுச்சு."

அவன் வியப்போடு பார்க்க, அதே வியப்போடு சீனுவாசய்யரும் அவனை உற்றுப்பார்த்தார்.

"அப்போ பூரணியை அவ்ளோ பிடிச்சருக்கா."

"ஆமாங்க."

"ஏன்."

"ரெண்டு காரணம். பூரணி ஜாதகத்தை எடுத்துக்கிட்டுப் போய் என்னுடைய நண்பர் ஒருத்தர்கிட்ட காண்பிச்சேன். கே.பி.வித்யாதரன்னு பேரு. ஜோசியர். ஆனா எங்களுக்கு அண்ணா மாதிரி. கமலக்கண்ணா, என்ன பாடுபட்டாவது இந்த இடத்தை முடி. இந்தப் பொண்ண பிடி அப்படின்னு திரும்பத் திரும்ப சொல்றாரு. விட்டுடாத விட்டுடாதன்னு தினம் போன்ல கூப்பிட்டு தொந்தரவு பண்றாரு. பூரணி ஜாதகம் அவ்ளோ அமோகமா இருக்கு, அப்படின்றாரு.

பூரணியோட அப்பாவையும், அம்மாவையும் பிடிச்சிருந்தது. எங்க வீடு கொஞ்சம் சத்தங்க. சத்தம்போடாத ஒரு வீடா இருக்கணும்னு எனக்கு ஆசை. எங்க வீட்ல அது பலிதமாகலை. மெதுவா பேசற மனுஷாளை பிடிக்கும். பூரணியினுடைய அப்பாவும், அம்மாவும் ரொம்ப நல்லா பேசினாங்க. அவங்களுக்கு உங்களுடைய நட்பு கிடைச்சிருக்கறது பெரிய அதிர்ஷ்டம்னு எனக்கு தோணிச்சு. ஒவ்வொரு விஷயத்துக்கும் அவங்க உங்க மூஞ்சியைப் பார்த்தாங்க. நீங்களும் ரொம்ப அக்கறையா அந்தக் குடும்பத்தை வழிநடத்திட்டு வறீங்கன்னு தெரிஞ்சுது. அப்படிப்பட்ட ஒரு நல்ல இடத்துல சம்மந்தம் வச்சுக்கறதுக்கு நான் கொடுத்து வச்சுருக்கணும். பூரணி அழகா இருக்கு ஒன்னு. பூரணி ஜாதகம் நல்ல ஜாதகம் ரெண்டு. பூரணி பி.காம். படிச்சிருக்கு மூணு. பூரணியோட அப்பாவும்,அம்மாவும் ரொம்ப நல்லாயிருக்காங்க நாலு. பூரணிக்கு உங்களை மாதிரி ஒரு வழிகாட்டி இருக்கு அஞ்சு. இந்த ஐந்து காரணங்கள் போதாதா."

"வேகமா முடிவு பண்றீங்க தம்பி. இதுல ஜாதகம் பார்த்து பொண்ண கெட்டியா பிடிச்சுருக்கோன்னு ஒரு ஜோசியர் சொன்னாரு அப்படின்னு சொல்ற விஷயம் நல்லாயிருக்கு. புருஷோத்தமர் எங்க வீட்டுக்கு எதிர் வீட்டுக்காரர். எனக்கு அவங்க வீட்ல எந்த உரிமையும் இல்லை. நட்பா சிலது கேட்கற போது அவங்களுக்கு நான் உதவி செய்யறது உண்டே தவிர அவங்களுக்கு எல்லா உதவியையும் செய்யக் கூடிய ஒரு தெம்பு, திறன் என்கிட்ட இல்லை. நீ சொல்றா மாதிரி எத்தனை விஷயங்களும் இருந்தாலும் நீ கொண்டு வந்திருக்கிற இருபதாயிரத்தை நாங்க வாங்கிக்கவே முடியாது.நல்லவேளை அவங்க வீட்டுக்கு போகாத இங்க வந்து நின்ன.சிவனா பார்த்து இந்தப் பக்கம் திருப்பி விட்டுட்டாரு. அவங்க அப்பாகிட்ட போய் காசை நீட்டியிருந்தீன்னா அவங்க அப்பாவுக்கு ரொம்ப கஷ்டமா இருந்திருக்கும். பெரிய தப்பா நடந்திருக்கும். என்ன தம்பி இவ்ளோ காசு கொண்டு வந்து கொடுக்கறீங்கன்னு கொஞ்சம் கோவம் கூட பட்டிருக்கலாம். எங்கிட்ட இல்லாத காசா அப்ப டின்னு பேசியிருக்கலாம்."

"நான் அப்படி நினைச்சு வரலீங்க."



"நீ ரொம்ப நல்லபடியாதான் நினைச்சு வந்த.ஆனால் இது அந்த வீட்ல நடக்காத எங்கிட்ட வந்து சொன்ன பார். இது கடவுளுடைய செயல். பெரிய அபத்தத்துலேர்ந்து தப்பிச்சு வந்த விஷயம்."

"எங்க வீடு டிபன் போடணும். சோத்துல இது போடணும். அது போடணும். இத்தனை பேர் வருவாங்க அப்படின்னெல்லாம் பேசறாங்க. இதெல்லாம் பார்த்தா கூடுதலாதான் கொஞ்சம் செலவாகும். கூடுதலா செலவாகும்கறதுனாலயே இந்தக் கல்யாணம் தட்டிப் போயிடக் கூடாதுன்ற பயத்துல காசுதானே அதை நாம கொடுப்போமே அப்படின்ற எண்ணத்துல இங்க வந்தேன். மத்தபடி யாரையும் இழிவு பண்ற எண்ணமில்லைங்க."

"ரொம்ப நல்லாயிருக்கு தம்பி நீங்க பேசறது. ஆனாலும் இப்போ காசு பத்தி பேசறது ரொம்ப தப்பு.பூரணி புருஷோத்தமருக்கு ஒரே பொண்ணு.இருபதாயிரம் ரூபா அவருக்கு விஷயமே இல்லை. அவர் போய் அவங்க அவருடைய சொந்த பந்தங்கள்கிட்ட உதவி கேட்டா காசு கொடுத்துடுவாங்க.இந்த செலவை நான் எடுத்துக்கறேன்னு முன்னால வேட்டியை மடிச்சுகிட்டு இறங்கிடுவாங்க.எந்தச் செலவும் பிரச்சினை இல்லை. கேட்கற விதம். அலட்டல் அதைப் பார்த்துட்டு பூரணி அப்பா பயப்படறாரு."

"அதைத் தாங்க நான் சொல்ல வந்தேன்.எங்க வீடு தூக்கலா பேசும். கல்யாணமாகி என் பொண்டாட்டின்னு வந்துட்டா அப்போ எங்க அம்மா பேச்சையோ எங்கப்பா பேச்சையோ எங்க அக்கா பேச்சையோ நீங்க கேட்க வேண்டிய அவசியமில்லை. நீ நான் அவ்ளோ தான் அப்படின்னு பூரணிகிட்ட சொன்னேங்க."

சீனுவாசய்யரிடம் அவன் உயர்த்திச் சொல்ல, சீனுவாசய்யர் திரும்பி பூரணியைப் பார்த்தார். பூரணி ஆமாம் என்று தலையசைத்தாள்.

சீனுவாசய்யருக்கு மெல்ல சிரிப்பு வந்தது.

"தம்பி நீ நல்லவன்டா. எனக்கு சந்தோஷமா இருக்கு. பூரணிக்கு புருஷனா கிடைச்சா நல்லா தான் இருக்கும். இல்லைன்னு சொல்லலை. ஆனாலும் இந்த வழி, இந்தப் போக்கு சரியாக வராது. பெண் வீட்டாரை இந்தப் போக்கு இழிவு படுத்திவிடும். அவங்க அப்பா அம்மாவை இழிவுபடுத்திட்டு அவளை நீ கொண்டாடவே முடியாது. அவங்க அப்பா அம்மாவைக் கொண்டாடினா தான் அவளை கொண்டாட முடியும்.

"அதுக்காகத்தாங்க காசு எடுத்துகிட்டு வந்தேன்."

"அதுதான்யா தப்பு.உங்க பொண்ணு எனக்கு வேணும். இந்தாங்க காசுன்னு நீ கொடுத்தீனா அது வேற மாதிரி ஆயிடாதா."

"ஐய்யய்யோ... நான் அந்த மாதிரியெல்லாம் ஒன்னும் நினைக்கலீங்க."

அவன் பதறினான்.

அவர் மெல்ல அவன் தோளில் கை வைத்தார்.

"உட்கார். பூரணி நீ வீட்டுக்குப் போ. தயவு செய்து இதை யார்கிட்டேயும் சொல்லாத குறிப்பா உங்கப்பாகிட்டயும், உங்கம்மாகிட்டயும் சொல்லாத பேசாம உட்கார்ந்துண்டிரு. நான் இவன்கிட்ட பேசி என்ன செய்யணுமோ செய்யறேன். இவனைப் பார்த்ததா சொல்லவே சொல்லாத பூரணி."

"எப்படி மாமா.பொழிச்சலூர்ல அத்தினி பேரும் பார்த்துட் டாங்க."

"அத்தினி பேரும்னா."

"அங்கிருக்கற வாலிபர்களெல்லாம் பாத்துட்டாங்க, கோயில்ல வரபோறவங்க பார்த்துட்டாங்க அங்க உட்கார்ந்து பேசிட்டுத்தானே இங்க வரோம்."

"ஆமாம் நீ சொன்னதை மறந்துட்டேன்."

ஈஸி சேரில் தொப்பென்று உட்கார்ந்து கண் மூடிக் கொண்டார்.



அவர் கைகள் மடமடவென்று பாக்கை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு துரிதமாக சுண்ணாம்பு தடவி வாயில் கிடுகிடுவென்று வெற்றிலைகளை அதக்கிக்கொள்ள உள்ளுக் குள்ளே தீவிரமான யோசனை போயிற்று.

ஊர் பார்த்த ஒரு விஷயத்தை தான் மறைத்தால் தானும் அபத்தமாவோம் என்பது அவருக்குத் தெரிந்தது.

"காசைப்பத்தி பேசிக்கிட்டிருந்தது எதுவும் யாருக்கும் வெளிய தெரியலையே."

"இல்லை தெரியாது மாமா."

பூரணி பதில் சொன்னாள்.

"சரி. நீ போ. இவரைப் பத்தி இவர் கொண்டாந்திருக்கறத பத்தி எதுவும் சொல்லாத. கமலக்கண்ணனை கோயில்ல பார்த் தேன். அவர் சீனுவாசய்யர் வீடு பார்க்கணும்னு சொன்னாரு. சீனு வாசய்யர் வீட்டுக்கு கொண்டு போய் விட்டுட்டு வந்துட் டேன்னு சொல்லு.வேற ஒண்ணும் சொல்லாத."

பூரணி படியிறங்கி தன் வீட்டிற்குள் நுழைய சீனுவாசய்யர் கதவைச் சாத்திக் கொண்டார்.

"இந்த க்ஷணம் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலே கமலக்கண்ணா. ஆர்வக் கோளாறால கொஞ்சம் உரசின மாதிரியே வண்டியை ஓட்டிட்டே. அப்பாவும், அம்மாவும் கோயிலுக்கு போகும் போது என்னா உங்க பொண்ணு ஒரு பையனோட பேசிகிட்டிருந்ததேன்னு சொன்னா அவங்க என்னான்னு நினைச்சப்பாங்க. அது அவங்களுக்கு நல்லா யிருக்குமா. நல்லாயிருக்காது கமலக்கண்ணா. பொழிச்சலூர்ல நிலம் வாங்கறதுக்காக வந்தீங்க. என்னை தேடினீங்கன்னு சொல்லிடுங்க சரியா."

"சரிங்க. அப்படியே சொல்லிடறேன்."

"இன்னிக்கு வேண்டாம்.நாளைக்கு புரோக்கரை கூப்பிட்டு பொழிச்சலூர்ல எங்கெங்க நிலம் இருக்குன்னு காமிக்கறேன்னு சொல்லிடறேன். சரியா."

"சரி."

"சீனுவாசய்யர் வீடு தெரியாது. அதைத்தான் கோயில்ல. வந்து கேட்கறதுக்கு முயற்சி பண்ணேன். பூரணி வந்தது. பூரணிகிட்ட கேட்டேன்னு சொல்லிடு சரியா."

"சரி. இப்போ இதை பூரணிகிட்டயும், பூரணி அம்மாகிட்டயும் சொல்லணும். நான் போய் சொல்லிட்டு வரேன்."

அவர் இறங்கி எதிர்வீட்டுக்குள் நுழைய பூரணியின் அம்மா பரபரப்பாக கதவு திறந்தாள்.

"என்னாங்க இது.பையன் தேடிகிட்டு வந்துட்டானாமே" என்று உரத்த குரலில் சற்று கூச்சலாகப் பேசினாள்.

அவளுக்கு அது பிடிக்கவில்லை என்று அந்தக் கூச்சலிலிருந்து தெரிந்தது.

## 12

**வா**ழ்வின் போக்கு பற்றிய குழப்பங்கள் மனிதர்களுக்கு தலைமுறை தலைமுறையாய் எழுவது பழக்கம்.

பொண்ண பார்க்கறதா.யாரு, யாரு போய் பொண்ணு பார்க்கறது. நீயா ஒருக்காலும் முடியாது. காலையில எழுப்புவோம். தலையில தண்ணி ஊத்துவோம். கழுத்துல மாலை போடுவோம். இடுப்புல மஞ்சவேட்டி கட்டுவோம். கொண்டு போய் ஒரு மனையில் உட்கார வைப்போம். உன் பக்கத்துல வந்து ஒரு பொண்ணு உட்காரும்.குனிஞ்ச தலை நிமிராம இருக்கும். கட்டுடா தாலியைன்னு சொல்லுவோம். கெட்டிமேளம் அடிக்கும். அவ கழுத்துல தாலி கட்டணும். அவதான் உன் பொண்டாட்டி. உன் பொண்டாட்டியை நாங்க பார்த்து நல்லாயிருக்குன்னு சொல்லணுமே தவிர நீ சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படி நமக்கு வழக்கமில்லை என்று சொல்லப்பட்ட காலங்கள் உண்டு. அவ்விதமே பிள்ளைகளும் செயல்பட்டார்கள்.

பையன் போட்டோவை பார்க்கணுமா. ஏண்டி உங்கப்பா போட்டோவை பார்த்தா நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.



போட்டோவை பார்த்தா கல்யாணம் நடந்திருக்குமா. நீ பொறந்திருப்பியா? என்னா வேதனை இது. எதுக்குடி நீ பையன் போட்டோவை கேட்கற. ஒரு போட்டோல என்ன தெரிஞ்சுடும். அப்படி என்னாதான் பார்ப்ப. பார்க்கறதுக்கு அழகா இருக்கானா, கண்ணுக்கு குளுமையா இருக்கானான்னு பார்ப்பியா. இல்லைடி அதை வச்சு குடித்தனம் பண்ணமுடியாது. நாங்க அவன் சொத்து பத்து மொத்தமும் பார்த்து அவனுக்கு வீட்ல பொண்ணை வச்சு குடித்தனம் பண்ற யோக்கியதையோட இருக்கானா இல்லையான்னு பார்ப்போம். அப்படி யோக்கியதை இருக்கறவனைத்தான் உனக்கு கட்டிக்கொடுப்போமே தவிர நீ போட்டோ பார்க்க வேண்டிய அவசியமில்லை. போட்டோல ஒரு ஆளைப்பத்தி ஒண்ணும் தெரியாது.பொத்திக்கிட்டு உட்கார் என்று பெண்ணை மிரட்டிய காலங்களும் உண்டு. பெண்களும் அதற்கு பணிந்திருந்தார்கள்.

நாடு சுதந்திரமடைந்தது போல மெல்ல மெல்ல இந்தியப் பெண்களுக்கும் பல்வேறு வகை சுதந்திரங்கள் கிடைத்தன. சுதந்திரம் கிடைத்ததும் பாரத தேசம் பல்வேறு விஷயங்களில் விடுதலை ஆகாதது போல பெண்களுக்கு சில விடுதலைகள் கிடைத்தும் சில விடுதலைகள் கிடைக்காதும் இரண்டும்கெட்டான் நிலைமை உருவாகியது.

காதலிக்கிறதா, எதிர்வீட்டுப் பெண்ணையா, என்ன கேவலம்டா இது என்று எகிறின கூக்குரல்கள் அடங்கிப்போயின. காதலிக்கறத பத்தி ஒண்ணுமில்லை. கல்யாணம் பண்ணிப்பியா என்று பேசுதல் இப்பொழுது நடைபெறுகிறது. காதலும் இல்லை. கல்யாணமும் இல்லை. சும்மா ஃப்ரெண்ட்ஷிப் என்று சொல்ல அதையும் ஏற்றுக் கொள்ள சமூகம் தயாராகிவிட்டது. ஆமாம், தொட்டான், கட்டிண்டான்,முத்தம் கொடுத்தான். ஆனா அதுக்குப் பேரு லவ் இல்லை. ஃப்ரெண்ட்ஷிப். அவ ஆனா அதுக்குப் பேரு லவ் இல்லை. ஃப்ரெண்ட்ஷிப். அவனால எனக்கு காரியம் ஆகணும். என்னால அவனுக்கு பெரியனால எனக்கு காரியம் ஆகணும். என்னால அவனுக்கு பெரிய

ஆனால் இந்த எல்லைக்குள் பொழிச்சலூர் வரவில்லை. பொழிச்சலூர் பெண்களுக்கு இவ்விதமான சுதந்திரங்கள் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள தயாராக இல்லை. ஆனால், தனக்கு நல்ல புருஷன் வரவேண்டும் என்ற கவலை பொழிச்சலூர் உட்பட்ட தென்னிந்திய பெண்களுக்கு இருந்தது. அவன் யார் என்ன குணம், என்ன தொழில், என்ன சம்பாத்தியம், எப்படி குடித்தனம் நடத்துவான், அங்கு அவனை சுற்றியுள்ளவர்கள் யார். என்னென்ன விதமான குணாதிசயங்கள் என்று தெரிந்து கொள்கின்ற பேராவல் பொதிந்திருந்தது. திருமணத்திற்கு முன்னேயே இதை தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்ற எண்ணமும் ஏற்பட்டது.

நிச்சயதார்த்தம் ஆயிப் போச்சு. பையன் எங்க வேலை செய்யறான்னு கேட்டேன். ரெயில்வேன்னு சொன்னாங்க. போய் விசாரிச்சு பார்த்ததுல ரெயில்வேயில அந்த மாதிரி இடமே இல்லை. அந்த மாதிரி ஆளுமில்லைன்னாங்க. மறுபடியும் அவனைப் போய் எங்க வேலை செய்யற, என்ன சமாச்சாரம்னு விசாரிக்க இங்க அங்கன்னு மாத்தி மாத்தி சொன்னான். வாங்க வந்து நீங்க வேலை செய்ற இடத்தை காட்டுங்கன்னு கேட்ட போது எனக்கு இந்தக் கல்யாணமே வேண்டாம்னுட்டான். கால்ல போட்டிருக்கற செருப்பை தூக்கி உயர காட்டி அப்பன் 'ஆயின்' னு மிரட்டிட்டு வந்துட்டோம்.

ரோடுல நாலு பேராண்ட இந்த மாதிரி நடந்துகிட்டான்னு சொன்னோம். எல்லாம் எட்டி உதைச்சு முறிஞ்சுபோச்சு. இங்க தின்ன சாப்பாட்டுக்கு ஆச்சுன்னு சொல்லி வீட்ல இருக்கற பித்தளை அண்டாவையும் குண்டாவையும் எடுத்துகிட்டு வந்துட்டோம். கொண்டாந்து கோயில்ல வச்சுக்கோங்கன்னு சொல்லி கொடுத்துட்டோம் என்று வேறு எங்கோ எவரோ நடந்தது சொல்ல அது சரிதான் என்று ஊர் ஆமோதித்தது. பையனைப் பற்றி தீர விசாரிக்காமல் நிச்சயதார்த்தம் செய்தது தவறு என்று கடிந்து கொண்டது. ஆக தீர விசாரிப்பது என்பது ஒரு முறையான வழக்கம். ஆனால் இந்த விசாரிப்பை குடும்பம் தான் செய்யுமே தவிர அந்த பெண்ணே செய்வது என்பது முடியுமோ. அவள் உட்கார்ந்து பேசலாமோ. அவள் அறிந்து



கொள்வதற்கு ஆவலுற்றாலும் அதை அனுமதிக்கலாமோ என்ற கேள்விகள் இருந்தன.

சாக்லெட் கம்பெனியில வேலைன்னு சொன்னாங்க.

பொழிச்சலூர் அந்தணப் பெண் ஒருத்தி தன் கதையை பூரணியிடம் சொல்லியிருக்கிறாள்.

"அந்த கம்பெனி வழியாதானே தினம் போவேன். இப்படியொரு ஆளை ஒருதடவையும் பார்த்ததே இல்லியே. அப்படின்னு எனக்குள்ள கேள்வி இருந்தது. இந்த நேரம் தாண்டிப்போறபோது உள்ள என்ன பண்ணிகிட்டிருப்பாரு அப்படின்னு ஒரு யோசனை இருந்தது. நிச்சயதார்த்தம் ஆன பிறகு ஒருநாள் போய் பார்த்தா என்ன அப்படின்னு சொல்லி நானா உள்ளுக்குள்ள போய் இவர் இருக்காரான்னு கேட்டேன். ஆறாவது மாடியில நாலாவது ரூம் காண்பிச்சாங்க.

போய் நின்னவுடனேயே அந்த ஆள் அப்படியே ஆடிப் போயிட்டாரு. என்ன என்னன்னு பதறினாரு. ஒண்ணுமில்லை உங்களை பார்க்கணும்னு தோணிச்சு வந்தேன் அப்படின்னேன். ஒரு மாதிரி ஆயிடுச்சு அவருக்கு. ஏன் வந்தது தப்பான்னு கேட்டேன். அதெல்லாம் இல்லை. உனக்கு என்ன என் மேல் இவ்வளவு சந்தேகம். எனக்கு அதுதான் கவலையா இருக்குன்னாரு. மன்னிச்சுக்கோங்கன்னு சொல்லி திரும்பினேன். இல்லை, உட்காருன்னு சொல்லி உட்கார வச்சு காபி வாங்கிக் கொடுத்து கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தாரு.

நான் இன்னிக்கு சாயந்தரம் உன் ஆபீஸுக்கு வரப் போறேன்னு சொன்னாரு. நல்லா வாங்க அப்படின்னு சொன்னேன். அரைநாள் லீவுபோட்டு என் கூட ஆபீஸுக்கு வந்தாரு. ஆபீஸ்ல கொஞ்சநேரம் உட்கார்ந்து பேசிட்டு நானும் அரை நாள் லீவு போட ரெண்டுபேரும் பீச்சுக்கு போய் உட்கார்ந்து பேசினோம்... பேசினோம்... பேசினோம் ராத்திரி எட்டு மணி வரைக்கும் பேசினோம்.

கல்யாணம் பத்தின எல்லா கவலையும் எனக்கு விட்டுப் போன மாதிரி ஆச்சு. அவரும் ரொம்ப சந்தோஷப்பட்டாரு. எனக்கு பேசணும்னுதான் ஆசை. வந்து நின்னா ரொம்ப அல்பமா

நினைப்பியோன்றதுனால நான் வராத இருந்தேன். நீ வந்தது நல்லதாப் போச்சு அப்படின்னாரு."

பூரணி அந்த சந்தோஷம் முழுவதும் உள்வாங்கிக் கொண்டு கைகொடுத்தாள். அவளைக் கட்டிக்கொண்டாள்.

"அப்புறம் அடிக்கடி பார்ப்பீங்களா?" என்று கேட்டாள்.

"இல்லை... போன்ல பேசிக்குவோம்.ஜாஸ்தி பார்க்க வேணாம்னு நாங்களே தீர்மானம் பண்ணிகிட்டோம்."

"ஏன்?"

"திருஷ்டிபடும்னு அவரே சொன்னாரு."

"என்ன திருஷ்டி?"

பூரணி கேட்டாள்.

"நானும் அதான் கேட்டேன். என்ன திருஷ்டி அப்படின்னு, இவ்ளோ அழகான பொண்ணோட காதலிக்காம கல்யாண ஏற்பாடு பண்ணிட்டு அதுக்கப்புறம் கைகோர்த்துகிட்டு ஊரை சுத்தறானே அப்படின்னு என்னை சுத்தியிருக்கற நாலுபேர் பொறாமைப்படலாம். அது நம்மை தாக்கலாம்.என்னாத்துக்கு கல்யாணம் ஆகட்டும். ஊர் சுத்தறதையே நமக்கு தொழிலா பண்ணிடுவோம். அப்படின்னாரு. நானும் நிறுத்திட்டேன்."

மறுபடியும் பூரணி அவளை கட்டிக்கொண்டு கைகோர்த்துக் கொண்டாள்.

நல்ல புருஷன் கிடைப்பது எத்தனை சந்தோஷம் என்பதை அவளும் புரிந்துகொண்டாள்.

ஆனால், இந்த விஷயம் அதுமாதிரி குதூகலமில்லை. அவளை தேடிக்கொண்டு கமலக்கண்ணன் வந்து நின்று எங்க வீட்ல கூட காக கேட்டா கவலைப்படாதீங்க. நான் வச்சுருக் கேன் என்று நீட்டுவது அத்தனை ரம்மியமாக இல்லை. இதை வீடு ஏற்குமா என்றுதெரியவில்லை. வீடு ஏற்காததற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. ஏற்க மறுத்து திருப்பி அனுப்பி வைத்தால் கமலக்கண்ணன் என்னஆவான் என்ற கவலைதான் அவளை முதலில் பற்றிக்கொண்டு உலுக்கிக்கொண்டிருந் தது. அப்படி கேட்டு வந்தவனை பூரணி கொண்டுபோய் சீனு



வாசய்யர் வீட்டில் உட்கார வைத்து அம்மாவிடம் சொல்ல அம்மா பதறிக்கொண்டு எழுந்தாள்.

அம்மாவின் பதட்டத்தை சீனுவாசய்யர் மிக அழகாக தணித்தார்.

"அவன் உங்களை தேடிட்டு வரலை. கிளம்புறபோது எங்கிட்ட பேசினான் இல்லியா. பொழிச்சலூர்ல நிலம் வாங்க ணும்னு அந்த நிலம் வாங்கறது பத்தி கேட்கறதுக்காக வந்திருக் கான்."

"இப்போ என்னாங்க அதுக்கு மொடை"

அம்மா பளிச்சென்று கேள்வி கேட்டாள்.

அவன் நிலம் வாங்க வரவில்லை. வேறு எதற்கோ வந்திருக்கிறான் என்பது போலதான் அவள் கேள்வி இருந்தது.

"மொடையில்லை. ஒரு பரபரப்பு. உங்க வீடு பார்த்து திகைச்சு போயிட்டான். பொழிச்சலூர் பார்த்து சந்தோஷமாயிட் டான். கிராமமாவும் இல்லாம நகரமாவும் இல்லாம ரொம்ப நல்லாயிருக்கு. கோயில் இருக்கு. சுத்தி பெருசு பெருசா வீடு இருக்கு. அந்த மாதிரி ஒரு வீடு கட்டணும்னு ஆசையிருக்கு. ஒன்றரைகிரவுண்ட் வாங்கிப்போட்டு அதுல மெல்ல மெல்ல வீடு கட்டி இங்கயே குடித்தனம் வந்துடணும்னு தோணுது. ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தா போதும், நகரத்துக்கு போயிட்டு வந்துடலாம் அப்படின்னு சொல்றான். அதுக்குத்தான் வந்திருக் கான்."

சீனுவாசய்யர் விலாவரியாய் பேசினார்.

"உங்க வீட்ல உட்கார்ந்திருக்கா புள்ள."

"ஆமாம்."

"நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வரலாமா?"

"அது உங்க இஷ்டம்."

"உங்களை கேட்கறேன். நீங்க சொல்லுங்க."

அம்மா சற்று கோபமாகவும், அதட்டலாகவும் சீனுவாசய்ய ரிடம் பேசினாள்.

அவள் வழக்கமாக அன்னிய புருஷர்களிடம் அவ்விதம் பேச மாட்டாள். ஆனால் அந்த நிலைமை அவளை பேச வைத்தது. தன் புருஷன் இப்பொழுது பார்த்து எங்கேயோ வெளியே போய்விட்டானே என்ற கலவரம் ஏற்பட்டது.

"ஒண்ணும் பயப்படாதீங்கம்மா.உங்க வீட்டுக்கு வரதுல எந்தத் தப்புமில்லை. வீட்டுக்குப் போய் காபி எடுத்துண்டு வாங்க. வேற ஏதாவது சாப்பிடறதுக்கு இருக்கா. எடுத்துண்டு வாங்க. நம்ம வீட்டுக்கு வந்து கொடுங்க.உட்கார்ந்து பேசிண்டிருக்கலாம். நான் புரோக்கருக்கு சொல்லி அனுப்பியிருக்கேன். வருவார். வந்தவுடனே புரோக்கர்கிட்ட பேசிட்டு அவன் போயிடுவான். அவ்ளோதானே இதுக்கு ஏன் இவ்வளவு பதறீங்க?"

சீனுவாசய்யர் சமாதானப்படுத்த அவள் மெல்ல அமைதியானாள்.

"கோயில்ல போய் உட்கார்ந்துகிட்டிருந்தாராமே."

"ஆமாம். அவருக்கு உங்க வீடு தெரியுதே தவிர என் வீடு தெரியலை. டக்குனு வீட்டுக்குள்ள நுழையலாமா அப்படிங்கறதும் அவருக்கு கேள்வி. சரி பூரணி கோவிலுக்கு வந்திருக்கும். வந்துட்டா அதுங்கிட்ட கேட்டுண்டு போகலாம்னு அங்க உட்கார்ந்திருக்கார்."

"நம்மூர்ல யாராவது பார்த்தா நல்லாவா இருக்கும். ஏன் இப்படி பண்றாங்கன்னே தெரியலை."

மறுபடியும் அம்மா அடுப்புக்குப் போனாள்.

"விட்ருங்க. நடக்கறதைப் பாருங்க. போய் காபி கொண்டாங்க" என்று சொல்ல அம்மா உள்ளுக்குள் ஓடினாள்.

டப்பாவைத் திறந்து மிக்சரை எடுத்து ஒரு தட்டில் போட்டு இனிப்பு எதுவுமே இல்லையென்று அடுக்களையைத் துழாவி கொல்லைப்புறமாக ஓடி அடுத்த வீட்டு சமையலறைக்கு ஓடி 'என்ன இனிப்பு இருக்கிறது' என்று கேட்டு அந்த வீட்டில் 'மைசூர்பாக்கு இருக்கிறது' என்று சொன்னவுடன் ஒரு துண்டு கொடுக்கும்படி கேட்க அந்தப் பெண்மணி ஆவலாக விசாரிக்க 'சொல்றேன், சொல்றேன்' என்று வாக்குறுதி அளித்து விட்டு அவர்கள் பிரித்துக் கொடுத்த மைசூர்பாக்கிலிருந்து ஒன்றே



யொன்றை எடுத்துக் கொண்டு தட்டில் வைத்து காபி கலந்து எல்லாம் எடுத்துக்கொண்டு சீனுவாசய்யர் வீட்டிற்கு ஓடினாள்.

யாராவது பார்க்கிறார்களா என்று பார்த்தாள்.

இனிப்பு கொடுத்த வீடு எட்டிப்பார்த்தது. எங்கே ஓடுகிறாள் என்று எட்டிப்பார்த்தது. நோட்டமிட்டுக் கொண்டிருந்தது. என்ன என்று வியந்தது.

அவர்கள் வியப்பதையும் பூரணியின் அம்மா அறிந்து கொண்டாள். வேறு வழியில்லை என்று சீனுவாசய்யரின் வீட்டிற்குள் போனாள்.

கமலக்கண்ணன் உட்கார்ந்திருக்க அவன் எதிரே பலகார வகைகளை வைத்துவிட்டு காபியும் கொடுத்துவிட்டு வாங்க என்று மேல் தோளில் துணியை போர்த்திக் கொண்டு நின்றாள். எழுந்து நின்று கரம் குவித்து கும்பிட்டான்.

"ஏதோ நிலம் பார்க்க வந்திருக்கீங்கன்னு ஐயரு சொன்னாரு" என்று இழுத்தபடி பேசினாள்.

"ஆமாங்க. புரோக்கருக்காக காத்துட்டிருக்கேன். என்னத்துக்கு இதெல்லாம் கொண்டு வந்து சிரமப்படறீங்க? நான் காபியெல்லாம் சாப்பிட்டுதான் வந்தேன்."

"இல்லீங்க... வந்தவங்களுக்கு காபிதண்ணி கொடுக்கறதுதான் மரியாதை. வீட்ல ஏதாவது சொன்னாங்களா?" என்று தொடர்ந்து பேசினாள்.

"நீங்க எப்போ வருவீங்கன்னு காத்துகிட்டிருக்காங்க."

"வரேங்க. சீக்கிரம் வரோம்."

அவள் சொல்லிவிட்டு காபி எடுத்துக்கோங்க என்று கைகாட்டினாள்.

அவன் மைசூர்பாக்கை ஒரு துண்டு சாப்பிட்டுவிட்டு உள்ளங்கையில் மிக்சரை கொட்டிக்கொண்டு வாயில் போட்டுக்கொண்டு பிறகு காபி ஆற்றத் துவங்கினான். குடித்தான்.

"எங்க இன்னும் புரோக்கரை காணோம்" என்று சீனுவாசய்யரை கேட்டான்.

"வரமாட்டாராம். நாமதான் போகவேண்டியிருக்கும். வாங்க போகலாம்" என்று சொல்ல அவன் காபி டம்ளரை கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

"பூரணி அப்பா வந்தா ஏதாவது சொல்லணுமா?"

"ஒண்ணும் சொல்லவேண்டாம். நான் வந்துட்டு போனேன். நிலம் பார்க்க வந்திருக்கேன்னு சொல்லுங்க போதும்."

"எல்லாம் நல்லபடியா முடியணுங்க.அதான் கவலையா இருக்கு."

"முடியுங்க" என்று அவன் சாதாரணமாக பதில் சொல்லி விட்டு வெளியே வந்தான்.

அவன் கண்கள் பூரணியைத் தேடின.

## 13

மனம் விரும்பிய பெண்ணை நேருக்கு நேர் சந்திப்பதைப் போன்ற சுகம் ஆணுக்கு வேறேதுமில்லை. காமம் மட்டுமே இதற்குக் காரணம் என்பதும் உண்மையில்லை. பசிக்கு மட்டுமே பலரும் உண்பதில்லை. ருசி முக்கியம். மனம் ருசிக்கு ஏங்கும் விஷயங்கள் கணக்கிலடங்காதவை.

பூரணி, அவள் வீட்டுக்குள்ளிலிருந்து அவனை பார்த்து நின்றாள். அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது. அழகாக இருந்தாள். அவளைத் தேடுவதை வேகமாகச் செய்தான்.

அவன் தன்னைத் தேடுகிறான் என்று புரிந்துகொண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது.

தோழரே, அத்தனை ஆசையா. இப்பல்லாம் ஆசை காமிப்பீங்கடா. அப்புறம் அம்மா, அக்கா, தங்கச்சின்னு மாறிடுவீங்க என்று மனசுக்குள் மருகினாள்.

நாங்களும் ஒண்ணும் சாதாரணம் இல்லை. உங்களைக் காட்டிலும் ஒருபடி மேலதான். புள்ளை பெத்துட்டான்ற ஒரேயொரு காரணத்துக்காக உங்கம்மா அலட்டறா. இதெல்லாம் வேற எங்கயாவது வச்சுக்க சொல்லு என்று கோபமாக மனசுக்குள்ளேயே வசனம் பேசினாள்.

அவன் படியிறங்கினான்.

சீனுவாசய்யர் மனைவியிடம் சொல்லிவிட்டு அவரும் வெளியே வந்தார்.

"வண்டியை கோவிலாண்ட நிக்க வச்சிருக்கேங்க" என்று சொன்னதும் இரண்டு பேரும் நடந்து கோவில் பக்கம் போனார்கள். திரும்பவும் இப்படித்தானே வரவேண்டும் என்ற நினைப்போடு அவள் வெளியே வந்து தோட்டக்கதவை பிடித்து நின்றாள்.

அவன் அவளைப் பார்த்து மெல்ல சிரித்தான்.

உனக்காகத்தான் வந்தேன் என்பது போல் பார்த்தான். ஆனாலும் என்ன இது மொத்தமும் தோல்வி அடைந்துவிட்டது என்று துக்கத்தையும் உடனே காண்பித்தான்.

அவள் பேசாது அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

இதெல்லாம் வேண்டாம் என்று அவள் மனம் சொல்லியது. மனம் சொன்னதை முகம் காட்டியது.

அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளும் அவனையே பார்த்தாள்.

நீயா... நீதான் புருஷனாகப் போகிறாயா. உன்னோடுதான் நான் காலாகாலமும் வாழப்போகிறேனா. நீதான் என் உயிர் என்று உன்னை நினைத்துக் கொண்டிருக்கப் போகிறேனா என்று திகைப்போடு கவனித்தாள்.

அவனும் அவளை அவ்விதமாகவே கவனித்தான்.

என்ன அழகு. என்ன வாளிப்பு. எத்தனை தெளிவு முகத்தில். கண்கள் எவ்வளவு பெரிதாக இருக்கின்றன. எங்கள் வீட்டுப் பெண்ணாக இருந்தால் இந்நேரம் கொல்லைப்புறத்தில் உட்கார்ந்து தலையில் அடித்துக்கொண்டிருக்கும். என்ன எழவுக்கு வந்தானோ என்று கத்திக் கொண்டிருக்கும். அந்த கத்தலும் பொய். அந்த தலையிலடித்தலும் பொய்.நீ தெளிவாக வந்து வாசலில் நிற்கிறாயே. இதுவே சந்தோஷமாக இருக்கிறது.

நேருக்கு நேர் பார்க்கிறாயே இதுவே மலர்ச்சியாக இருக்கிறது. எனக்கு இதுபோதும். எனக்கு இதுபோன்ற பெண்தான் வேண்டும் என்று அவளை உற்றுப்பார்க்க அவள் கண்களும் அவனோடு பேசின.

கோவில் வரைக்கும் போனால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.

அட... இவள் கோவில் வரை வரமாட்டாளா என்று அவனுக்கும் எண்ணம் ஏற்பட்டது.

அவள் தோட்டக்கதவை திறந்தாள்.

சீனுவாசய்யர் படியிறங்கும் போது அவரோடு சேர்ந்து கொண்டாள்.

"மோட்டார் சைக்கிளை அங்க வச்சிருக்காங்க போலிருக்கு. நான் கோவில் வரைக்கும் வரட்டுமா மாமா" என்று கேட்டாள்.

"வாடி கண்ணு" என்று சீனுவாசய்யர் அவளோடு கைகோர்த்துக் கொண்டார்.

வலப்பக்கம் அவனும் இடப்பக்கம் பூரணியுமாய் சீனுவாசய்யர் கோயில் நோக்கி நடந்தார். ஊரிலிருந்த பலபேர்கள் எட்டிப் பார்த்தார்கள்.

இது அவ்வளவு நல்லதல்ல என்று சீனுவாசய்யருக்கு தோன்றியது. ஆனாலும் சகஜமாக இருக்க முயற்சி செய்தார்.

காதல் வசனம் என்று பேச வேண்டாம். ஆனால் மனம் திறந்து பேசலாமல்லவா. சீனுவாசய்யர் இருக்கும்போது பூரணியோடு பேசுவது உத்தமமல்லவா. பூரணிக்கு தான் விரும்புகிறேன் என்பதை சொல்வதில் எந்தத் தவறும் இல்லை அல்லவா. சீனுவாசய்யர் இதற்கு புறம்பாக இருக்கமாட்டார், வேண்டாம் என்று தடுக்கமாட்டார் என்று அவனுக்குள் எண்ணம் ஓடியது.

ஒரு அடி எடுத்து வைத்து பூரணியை உற்றுப்பார்த்தான்.

"உங்களை பார்க்கணும்னு தாங்க வந்தேன்" என்று சீனுவாசய்யர் கேட்க அவளோடு பேசினான்.



"தெரியுதே... என்னை பார்க்கணும்னுதான் வந்தீங்கன்னு. நல்லவேளை இவர் இருந்தாரு. இல்லைன்னா கதை கந்தல் ஆகியிருக்கும்" என்று சிரித்தபடி பூரணி சொன்னாள்.

அவளுக்கு தான் வந்ததைப் பற்றி எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பது புரிய கமலக்கண்ணன் சந்தோஷமானான்.

"உங்களுக்கு விருப்பம் தானுங்களா இந்த கல்யாணத்துல அதை கேட்கணும்னுதான் வந்தேன்."

"இதுக்கு எப்படி நான் பதில் சொல்வேன். விருப்பம்தான். ஆனாலும் என் விருப்பம் மட்டும் போறாது. எங்க வீடு விரும்பணும். எங்க வீடு விரும்பறா மாதிரி உங்க வீடு நடந்துக்கணும். நீங்க நடந்துக்கணும்."

சீனுவாசய்யருக்கு அவள் பேச்சு மிகவும் பிடித்திருந்தது. ஆனந்தமாக வாய்விட்டு சிரித்தார்.

"அதுதான் உண்மை" என்று ஒரே வார்த்தையில் சொன்னார்.

"என் வீடு நீங்க விரும்பற மாதிரி நடந்துக்கலைன்னு வச்சுக்கோங்க. அதனால இந்தக் கல்யாணம் நிக்கக்கூடாது" என்று அவன் வேகமாகச் சொன்னான்.

"அப்படியில்லை தம்பி. உன் வீடு பூரணியை நல்லா வச்சுக்கணும்னு எங்க வீடு எதிர்பார்ப்பதுல எந்தத் தப்பும் இல்லை. நீ மட்டும் நல்லாயிருந்தா போறாது. உங்க வீட்டு மனுஷாளும் பூரணி மேல மரியாதையா இருக்கணும். பூரணியினுடைய அப்பா மேலயும் அம்மா மேலயும் மரியாதையா இருக்கணும். அது இல்லாத வெறுமனே மாப்பிள்ளை நல்லவன்னு பொண்ணு கொடுக்கறதுக்கு யாரும் முன்வர மாட்டாங்க."

"இல்லைங்க... அவங்க கெட்டவங்க இல்லை.கொஞ்சம் கூட எதிர்பார்க்கறாங்க. அதுக்குத்தான் நான் பணத்தோட வந்தேன். நீங்க வாங்கமாட்டேன்றீங்க."

"ரொம்ப தப்பாயிடும் தம்பி.நாளைக்கு நீயே திருப்பி பேசிடுவ. அது சரியாவே வராது. இருபதாயிரம் ரூபா ஒரு காசே இல்லை. பொண்ணோட வாழ்க்கைன்னு பார்க்கும்போது இரு

பது லட்ச ரூபா கூட அவங்க அப்பாவால புரட்டமுடியும். காக வச்சு தயவுசெய்து பேசாத."

"இதை அலட்டலாவோ அகங்காரமாகவோ செய்யலை. என்ன செய்தா பூரணி கிடைப்பான்ற ஒரு நடுக்கத்துல பயத்துல செய்றேன்" என்று சொல்ல இரண்டு பேரும் அவனை திரும்பிப் பார்த்தார்கள்.

பூரணிக்கு அந்த வார்த்தை மிகவும் பிடித்திருந்தது. தன்னை நேசிக்கின்ற ஒரு ஆள் தனக்கு வேண்டுமென்பது அவள் நெடுநாளைய விருப்பம். அந்த விருப்பத்தின் முதல் பகுதியாக இந்த விஷயங்கள் பேசப்படுகின்றன என்று நினைத்துக் கொண்டாள்.

"பணத்தை கொடுக்கறத விட நல்ல விஷயம் ஒன்னு சொல்லட்டுமா?"

"சொல்லுங்க"

"பொழிச்சலூர் சிவன்கிட்ட பூரணி வேணும்னு வேண்டிக் கோங்க கிடைக்கும்."

"மனுஷ முயற்சியே தப்புன்னு சொல்றீங்களா?" கமலக் கண்ணன் சீனுவாசய்யரை கேட்டான்.

"சில விஷயங்களில் மனுஷ முயற்சி இல்லாது இருக்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன். விட்டுடறது நல்லது.செடி தானா வளரணும். தானா பூக்கணும். அதுக்கு ஊசி போட்டாக்க வளமில்லாத செடி வாசனையில்லாத பூன்னு வந்துடும். விட்றுங்க. நல்ல பூ தானா கிடைக்கும். செடியை வளரவிடுங்க. அதுக்குண்டான நேரம் கொடுங்க."

"விட்ருவோமோன்னு பயமா இருக்கு."

"அப்படி இல்லைன்னு ஆயிப்போச்சன்னு வச்சுக்கோங்க என்ன செய்வீங்க?"

சீனுவாசய்யர் கேட்டார்.

அவன் மௌனமாக நடந்து வந்தான்.

"உங்களைத்தான் கேட்கறேன். அப்படி இல்லைன்னு ஆயிடுச்சன்னா என்ன பண்ணுவீங்க?"



அவன் மெல்ல திரும்பினான்.

"கொஞ்சம் வேதனையோட வேற பொண்ணு பார்த்து கட்டிப்பேன்."

அவர்கள் இரண்டு பேரும் வாய்விட்டு சிரித்தார்கள்.

"உண்மைய பேசறீங்க தம்பி. ரொம்ப நல்லா இருக்கு தம்பி நீங்க பேசினது. இதுதான் நிஜம். கல்யாணமே கட்டிக்கமாட்டேன். பூரணிக்காக அடுத்த ஜென்மம் வரைக்கும் காத்துக்கிட்டிருப்பீங்கன்னா சரி, உங்களுக்கு மனசுக்குள்ள எதுவோ தகராறுன்னு சொல்லிடலாம். இப்போ சொன்னீங்க பாருங்க கொஞ்சம் வேதனையோட வேற பொண்ண பார்த்து கட்டிப்பீங்கன்னு அது ரொம்ப அழகாக இருக்கு. நீங்க கெட்டிக்காரங்க தம்பி. ஆனா, அவசரப்படறீங்க. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க."

"பூரணியோட தனியா பேசமுடியாதா?"

"பேசி என்னா. என்ன பேசமுடியும்? பேசறதுல நல்லது எதுவும் நடக்காது. நிச்சயதார்த்தம் ஆகட்டும். பூரணியை நான் கூட்டிட்டு வரேன். எங்க வேணாலும் கூட்டிட்டுப் போய் பேசுங்க."

"நான் நாளைக்கே இல்லைன்னா நாளைய மறுநாளே உங்களுக்கு செய்தி அனுப்பறேங்க. வரேன்."

அவன் மோட்டார் சைக்கிளில் சாவி போட்டு திறந்தான். ஏறி உட்கார்ந்தான். உதைத்தான். சட்டென்று திரும்பினான்.

பூரணியை மறுபடியும் ஏக்கத்தோடு பார்த்தான். பூரணி மெல்ல அவனைப்பார்த்து சிரித்தாள். எதுவும் என் கையில் இல்லை என்பது போல் நின்றாள்.

சீனுவாசய்யர் அவன் முதுகைத் தடவிக்கொடுத்தார். தலையை வருடினார்.

"இதுக்குப் பேர்தான் காதல். என்னுடைய அபிப்ராயத்துல காதல் என்பதற்கு அர்த்தம் மதித்தல். பூரணி என்கிற பெண்ணை நீ அதிகம் மதிக்கிறாய் என்பதாய் நான் புரிந்து கொள்கிறேன். அந்த மதிப்பு தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதுதான்

பெற்றோர்களுடைய கவலையாக இருக்கும். எனவே அவர்கள் பெற்றோரையும் மதிக்க நீங்கள் முற்பட்டால் இந்தக் காதல் பூரணமாக இருக்கும்.

ஒரு பெண் தனியாக உங்கள் மடியில் வந்து உட்கார்ந்து விட முடியாது. அவள் வளர்ந்த இடத்தினுடைய மனிதர்களை மறந்துவிட்டு உங்களோடு ஒன்றிவிட முடியாது. அவள் அடி மனதில் அவளுடைய பெற்றோரும் மற்றோரும் நிறைந்திருப் பார்கள் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் வேதனை படும்படியான காரியத்தை அவர்கள் துக்கப்படும் படியான ஒரு சூழ்நிலையை ஒருநாளும் நீங்கள் கொடுத்துவிட வேண்டாம். அப்படி கொடுத்தீர்கள் எனில் இந்தப் பெண் ணுக்கு மிகப்பெரிய வேதனை ஏற்படும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

காதல் என்பது மதித்தல் என்பதை நீங்கள் புரிந்துகொண் டால் பூரணியின் வீடு முழுவதும் நீங்கள் நேசிக்க வேண்டிய கட்டாயத்தையும் அறிந்து கொள்வீர்கள். நீங்கள் வந்தது ஒரு நல்ல முயற்சி. இது பூரணிக்கு நிச்சயம் சந்தோஷத்தை கொடுக்கும். எனக்கு மிகப்பெரிய ஆனந்தத்தையும் கொடுத் திருக்கிறது. ஆனால் மறுபடியும் இதைச் செய்ய வேண்டாம். நல்லவேளை நான் இருந்ததால் இந்த விஷயம் அழகாக நிகழ்ந்துவிட்டது. இல்லையெனில் சற்று முட்டிமோதி சில ருக்கு ரணம் ஏற்பட்டிருக்கலாம். குறிப்பாய் பூரணிக்கு வேத னைகள் ஏற்பட்டிருக்கலாம்.

"உங்கள் வீடு பற்றிய தெளிவை ஏற்படுத்திக் கொண்டு இவர்கள் வீட்டை தொடர்பு கொள்வதே நல்லது" என்று ஆங் கிலத்தில் சொல்ல அவன் சரியென்று தலையசைத்தான். இன்ஜினை உதைத்து ஸ்டார்ட் செய்தான். பூரணியிடம் வரு கிறேன் என்று சொன்னான்.

சீனுவாசய்யரின் கரம் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

"மிக்க நன்றி. மிகப்பெரிய உதவியை செய்திருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது.நான் வீட்டிற்குப் போய் மறுபடியும்



யோசித்துப் பார்த்தால் மறுபடியும் உங்கள் மீது மிகப்பெரிய நன்றி ஏற்படும். நான் என்ன பேசுவது என்று தெரியாமல் தவிக்கிறேன்" என்று அவனும் ஆங்கிலத்தில் சொன்னான்.

"புரிகிறது... போய் வா" என்று விடைகொடுக்க மோட்டார் சைக்கிள் சீறிப்பாய்ந்தது.

பொழிச்சலூர் இளைஞர்கள் அவர்களையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் நகர்ந்ததும் சீனுவாசய்யர் முகம் இருண்டார்.

"உங்க அப்பன் இப்ப வந்து கேள்வி கேட்பான். நான் என்ன பதில் சொல்வேன்னுதான் எனக்குப் புரியலை" என்று பூரணி யிடம் பேசினார்.

ஆனால், பூரணிக்கு சீனுவாசய்யர் பேசியவை அவ்வளவு வேகமாக காதில் வந்து விழவில்லை. வார்த்தைகள் விழுந்தா லும் அதைவிட்டு நகர்ந்துபோய் போகிறவன் முதுகையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் அவனைப்பற்றி ஒரு கிறக்கம் ஏற்பட்டுவிட்டது. அவன் மீது மதிப்பு ஏற்பட்டு விட்டது.

ஒருவேளை அவமானம் நடந்தாலும் பரவாயில்லை என்று தானே வந்திருக்கிறான். அபபடியானால் இவன் நல்லவனாகத் தானே இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

பூரணி வீடு நோக்கி நடந்தாள்.

வரும்போது உண்டான நடையிலுள்ள உறுதி திரும்பும் போது இல்லை. இடுப்பு வேகமாக அசைந்தது. போய் கருண்டு பவழமல்லி செடியில் உட்கார்ந்துகொள்ள வேண்டுமென்று தோன்றியது. ஆனால், போய் உட்கார்ந்துகொண்டால் அம்மா கேள்வி கேட்பாள்.

என்னாடி அவன் நினைப்பாவே உட்கார்ந்துட்டியாக்கும் என்று இளக்காரம் பேசுவாள். எனவே சாதாரணமாக இருந்து விட்டு சற்றுநேரம் கழித்து அவனைப் பற்றிய நினைப்போடு உட்கார்ந்துகொள்ள வேண்டும் என்று வீட்டுக்குள் நுழைந் தாள்.

அவனிடம் ஏதாவது கொடுத்து அனுப்பியிருக்கலாம். குறைந்த பட்சம் பொழிச்சலூர் சிவன் கோவிலின் விபூதி குங்குமப் பிரசாதமாவது கொடுத்திருக்கலாம் என்று தோன்றியது. வெறுங்கையோடு அனுப்பியது உறுத்தியது.

## 14

"ஏன்டா கமலக்கண்ணா நாளைக்கு அரை நாள் லீவு போட முடியுமா?"

அம்மா கேட்டாள்.

"போடலாம். எதுக்கு?"

"பொண்ணு பார்த்துட்டு வரலாம்."

"பொண்ணா, என்னா சொல்ற?"

"வேற ஒரு இடத்துல பொண்ணு சொல்றாங்கடா. நிறைய போடறாங்களாம் சிந்தாதிரிப்பேட்டையாம்."

"நான் வரலை."

"ஏன்?"

"சும்மா சும்மா பொண்ணு பார்க்கறது என்ன விளையாட்டா? பார்த்த பொண்ண என்ன பண்ணீங்க?"

"எந்தப் பொண்ண சொல்ற?"

"பொழிச்சலூர் பொண்ண."

"பொழிச்சலூர் பொண்ணு தான் சரியா வரலையேடா."

"சரியா வரலைன்னு நீங்க தீர்மானம் பண்ணா ஆச்சா?"

"ஏன்... உனக்கு என்னா பத்திக்குது. அவங்க எங்க சரியா வந்தாங்க. வந்து பேசறதுக்கே வரலை. நாம போய் கூப்பிட்ட போதும் வர முடியாதுங்கறாங்களே. அங்க போய் நாம உட்காரணுமா?"

"நாமதானே பொண்ண போய்ப் பார்த்தோம். நாமதானே போய் பேசணும். அவங்களை வரச்சொன்னா எப்படி?"



"அவங்கதான்டா வரணும். பொண்ணு பெத்தவங்க வந்து நாங்க என்னா செய்யணும்னு கேட்கணும்."

"அப்படியெல்லாம் யாரும் கேட்கமாட்டாங்க. நம்மதுல அது வழக்கமில்லை."

"உனக்கு என்னாடா தெரியும் நம்ம வழக்கம்."

"இப்போ என்ன அவங்க வீட்டுக்கு போய் மேற்கொண்டு பேசுவீங்களா மாட்டீங்களா?"

"ஏன் அந்தப் பொண்ணு தான் வேணுமா?"

"அப்படியில்லை. ஒரு பொண்ணையும் பிடிக்காம எல்லாப் பக்கமும் நாய் வாயை வச்சா மாதிரி பேசினீங்கன்னா?"

"டேய் யாரைப் பார்த்து நாய்ன்னு சொல்ற?"

அம்மா கத்தினாள்.

"எதுக்காக இன்னொரு பொண்ண போய் பார்க்கறது. பார்த்த பொண்ணுக்கு என்னா பதில் சொன்னீங்க? வேணாம்னு சொல்லிட்டீங்களா. சொல்லலியே."

"அப்போ சொல்லிடு வேணாம்னு. அந்த வீட்டுக்கு போன் போட்டுடு. நீங்க வரமாட்டேன்றீங்க. எங்களுக்கும் வரத்துக்கு மனசு இல்ல. நாம இத்தோட விட்டுடுவோம். அப்படின்னு சொல்லிடு." என்று அம்மா சொல்ல அக்கா போன் எடுத்தாள்.

"அப்படியானால் நானும் வேற பொண்ணு பார்க்க வரலை."

"என்னாடா சொல்ற."

"முடிஞ்சா அந்தப் பூரணியை கல்யாணம் பண்ணி வைங்க. இல்லைன்னா விட்ருங்க" என்று கமலக்கண்ணன் பேச வீடு அவனை ஆத்திரத்தோடு பார்த்தது.

"என்னா திடீர்னு தேவையில்லாத அந்தப் பொண்ண பத்தி பேசற. அப்படி ஒண்ணும் அழகாவே இல்லியே."

"நான் ஒண்ணும் அவ அழகா இருக்கான்னு சொல்லலை. எனக்கு முடிஞ்சா அந்தப் பொண்ண கல்யாணம் பண்ணி வைங்க. வேற இடத்துக்கு பொண்ணு பார்க்கறதுக்கு கூப்பிடாதீங்க."

"டேய்... எவ்வளவு பெரிய எண்ணெய் கம்பெனியில வேலை செய்யிற. அதுக்கு கூட கொடுக்கணும்டா. இவங்க வந்து பிச்சைக்காரத்தனமா பேசறாங்க."

"எனக்கு கூட காசு கொடுத்து ஒண்ணும் நிறைய போறதில்லை. இருக்கற காசுல என்னால குடித்தனம் பண்ண முடியும். எனக்கு நல்ல பொண்ணா இருக்கணும் அதான் முக்கியம்."

"அந்தப் பொண்ண என்னா நல்ல பொண்ணுன்னு நீ தீர்மானம் பண்றது."

"அந்தக் குடும்பம் நல்லாதான் இருக்கு பார்க்கறதுக்கு."

"அட முட்டாளே, இப்போ போய் பார்க்கற குடும்பம் அதை விட நல்ல குடும்பம். மூணு மாமனுங்க இருக்காங்க.மூணு மாமனுங்களும் அரசியல்ல இருக்காங்க. நல்ல துட்டு. சொந்தவீடு. சிந்தாதிரிப்பேட்டையில சொந்த வீடுன்னா சாதாரண விஷயமா, பொழிச்சலூர்ல குடிசை மாதிரி ஒட்டு வீடு வச்சக்கிட்டு அலட்டறான். அதைப் போய் பெருசா பேசிகிட்டிருக்கியே."

"நான் வீட்டை கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை. மாமனை கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை. அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அந்தப் பொண்ண கல்யாணம் பண்ணா சந்தோஷமா இருப்பேன்னு உள்ளுக்குள்ள தோணுது. எனக்கு முடிஞ்சா அந்த பொண்ண கல்யாணம் பண்ணி வைங்க. இல்லைன்னா கல்யாணம் பத்தி பேசாதீங்க."

"நீ என்னா அந்தப் பெ.ண்ண லவ் பண்றயா"அக்கா கேட்டாள்.

"அறிவு கெட்ட முண்டம். உனக்கு என்னா தெரியும் லவ் பத்தி. காதல் என்பது மதித்தல்."

சீனுவாசய்யர் சொன்னதை அவன் பதிலுக்குச் சொல்ல அவன் அக்கா உதடு சுழித்தாள்.

"இவன் எங்கயோ கதைய படிச்சிட்டு உளர்றான். டேய்... இன்னும் நல்ல பொண்ணு கிடைக்கும்டா. கொஞ்சம் பொறுமையா இருடா. நாங்க சொல்றத கேளு. நாங்க வேற இடத்துல பொண்ணு பார்த்துட்டு வரோம். நல்லா இருந்தா உன்னை கூட்டிட்டு போறோம்."



"இப்ப நீ வரத் தேவையில்லை" என்று அக்கா சொல்ல,

"முடியாது. நீங்க வேற இடத்துல பொண்ணு பார்க்கறத நான் ஒத்துக்க முடியாது. முடிஞ்சா பூரணிய கல்யாணம் பண்ணி வைங்க. இல்லைன்னா வேணாம்."

"ஏன் இவன் இப்படிப் பேசறான்."

"எனக்கு தெரியாதும்மா. நீ ஆச்சு உன் புள்ளையாச்சு."

அக்கா நகர்ந்து கொண்டாள்.

அப்பா மெல்ல தொண்டையைக் கனைத்தார்.

"அவனுக்கு பிடிச்சருக்குன்னா அதையே முடிச்சிட வேண்டியதுதானே."

"முடிச்சிடலாம். ஆனா அவங்க என்னமோ பெரிய பந்தா பண்றாங்களே. யாரும் வரமாட்டாங்க.நீங்க தான் வரணும்றாங்களே."

"அப்படித்தானே வழக்கம்.நீங்க ஏன் அவங்களை கூப்பிடறீங்க. அவுங்கள இங்க கூப்பிட்டு நாலா பக்கமும் போட்டு நெருக்கினா முடியுமா. என்னா செய்யணும்னு சொல்லிட்டா அதுக்கு அவங்க ஒத்துக்கிட்டாங்க. மறைக்கலை. திருப்பி வந்து இதுக்கு கூப்டு பேசணும். அதுக்கு பேசணும்னா என்னாத்துக்கு."

"சாப்பாடு, டிபன் வகையறா பேச வேணாமா."

"ஒண்ணும் பேச வேணாம். கல்யாணத்தை நல்லபடியா நடத்தி கொடுன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க."

"இப்ப என்னா சொல்ல சொல்றீங்க."

"அவனுக்கு பொண்ணு பிடிச்சருக்கு. போய் பேசு" அப்பா சொல்ல அம்மா முகம் தூக்கிக் கொண்டாள்.

"யோசனை பண்ணித்தான் பேச முடியும்" என்று சமையல் அறைக்குப் போனாள்.

அந்த வீடு அமைதியாக இருந்தது.

"எனக்குப் பிடிக்கலை" பூரணியின் அப்பா கோபமாக பேசினார்.

சீனுவாசய்யர் கவலையோடு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீங்களும் அவனை வீட்டுக்கு கூட்டிட்டு வரக்கூடாது. பொழிச்சலூர் கோவில்லேர்ந்து போடா அப்படின்னு சொல்லியிருக்கணும். நல்லாயிருக்கே எதுக்கு வீட்டுக்கு கூட்டிட்டு வந்தீங்க. நீ போய் ஏண்டி அவனுக்கு மிச்சரும் ஸ்வீட்டும் கொடுக்கற. என்னா மூணு தடவை பொண்ணு பார்க்க வருவான். மூணு தடவையும் பரிமாறிக்கிட்டுருக்கணுமா" என்று கத்த வீடு அமைதியாக இருந்தது.

"அப்படி கோபப்படக் கூடாது புருஷோத்தமர். அந்தப் பையன் பூரணி மேல ஆசையாத்தான் இங்க வந்திருக்கான்."

"அது தாங்க எனக்கு பிடிக்கலைன்றேன்."

"அதுல ஒண்ணும் பெரிய தப்பில்லை புருஷோத்தமர்."

"என்னாங்க இது விளையாட்டுத்தனமா இருக்கு. நாம பொண்ணு பார்க்க வந்தவங்களை எல்லாரையும் கூப்ட்டு உட்கார வச்சு பேசி முடிச்சருக்கோம். இந்தப் பையன் மட்டும் வந்தா அப்போ என்னா சொல்லுவாங்க.நாம கூப்பிட்டு அனுப்பினா மாதிரியும் நம்ப பொண்ணு ஏதோ போன் பண்ண மாதிரியும் ஆகாதா. அந்த மாதிரி ஆச்சுன்னா அசிங்கமில்லையா. வார்த்தை ரொம்ப முக்கியம்ங்க. தப்பா ஏதாவது அவங்க பேசினாங்கன்னா என்னால தாங்கவே முடியாது. நீ என்னாத்துக்கு பூரணி அவனைப் போய் பார்க்கற. நீங்க எதுக்காக கூட்டிட்டு கோயிலுக்கு போனீங்க. எனக்கு எதுவுமே பிடிக்கலை. ஊர்ல அத்தினி பேரும் நீங்க நடந்து போனதை பார்த்திருக்காங்க. இந்த ஊர் சாதாரணப்பட்ட ஊரா. எதுனா பேசிச்சுன்னா தாங்க முடியுமா. கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர். நீங்க இப்ப தடுக்குனு நடந்துப்பீங்கன்னு நான் நினைக்கவேயில்லை. எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு" என்று அப்பா கத்த சீனுவாசய்யர் கையை கட்டிக் கொண்டார்.

அவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.



சீனுவாசய்யரின் மனைவி கமலத்தம்மாள் மெல்ல பேச ஆரம்பித்தாள்.

"நாம யாரும் கூப்பிடலை. அவன் வந்துட்டான். வந்தவனை ச்சீ... போடான்னு சொல்றதுல பல சங்கடங்கள் இருக்கு. அவன் வந்ததுக்கு காரணம் நிலம் வாங்கறதுக்குன்னு சாக்கு சொன்னாலும் அடிமனசுல பூரணியை மறுபடி பார்க்கணும்கற எண்ணமும் இருந்திருக்கு.இதை உங்ககிட்ட நாங்க மறைக்கத் தயாரா இல்லை. நீங்க பொண்ணை பெத்தவா.அந்தப் பையனை உங்க வீட்டுக்கு கூப்பிடாம எங்க வீட்ல உட்கார வச்சு உபசாரம் பண்ணது ஒரு நல்ல விஷயம். அவன் உங்க வீட்ல வாசலை மிதிக்கலை. யாரையோ பார்க்க வந்தான் போனான்னு நாம தெளிவா சொல்லிடலாம். ஆனால், உண்மையில அவன் பூரணியை பார்க்க வந்தான்றது தான் உங்ககிட்ட சொல்லப் பார்க்கறோம். அவனுக்கு இந்தப் பொண்ண பிடிச்சருக்கு.வெறுமனே யாரோ ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கறத விட நம்ம பொண்ணை நேசிக்கிறவனை நம்ம பொண்ணு விரும்பறவனை கல்யாணம் பண்ணி வைக்கறது தப்பா."

"இப்போ எல்லாம் சரியா இருக்கும்மா. இந்தக் காலத்துப் பசங்களுக்கு தூணுக்கு புடவை கட்டினா கூட நேசிப்பாங்க. கவிதை எழுதுவாங்க.இந்தப் பசங்களை நம்ப மாட்டேன். ஒரு மரியாதை ஒழுக்கம் வேணாம்.தடுக்குனு வந்து ஒரு வீட்ல நிக்கறதுன்னா அவங்க வீட்ல எவ்வளவு கஷ்டம்னு தெரிய வேணாம். ரெண்டுங்கெட்டான் பசங்களைதாம்மா நான் பார்த்து பயப்படறேன்" என்று மறுபடியும் கத்தினார்.

பூரணிக்கு அப்பாவின் கோபம் கவலையாக இருந்தது.

"இப்போ என்ன பண்றது.இந்த சம்பந்தம் வேண்டாம்னு முடிவு பண்ணிடறதா" சீனுவாசய்யர் கேட்டார்.

"எனக்கு அப்படித்தாங்க தோணுது" புருஷோத்தமர் உரக்கக் கத்தினார்.

"ஏன் கோவமாவே பேசறீங்க."

"எனக்கொரு எரிச்சல் வந்துடுச்சய்யா. எதுக்காக அந்தப் பையன் இங்க வரணும். நான் இல்லாத போது ஏன் வரணும்."

"நீங்க இல்லேன்னு அவனுக்கு தெரியலை. அவன் நேரா வரலை. பொழிச்சலூர் கோவில்லதான் உட்கார்ந்துண்டிருந் தான். பூரணியைப் பார்த்த பிறகு எங்க போறது அப்படின்னு விசாரிச்சு என் வீட்டுக்கு வந்திருக்கான். நீங்க ஏன் ரொம்ப இளக்காரமா அவனை பேசறீங்க."

"இது ஒரு லோஃபர் புத்தி."

"தப்பு. அந்த மாதிரி பேசக் கூடாது."

சீனுவாசய்யர் எழுந்து நின்று புருஷோத்தமரின் தோளில் கை வைத்து அடக்கினார்.

லேசாக பூரணி திடுக்கிட்டாள்.எதற்காக இவ்வளவு பெரிய கெட்ட வார்த்தையை அப்பா சொல்கிறார் என்று பயந்தாள்.

"நன்னா யோசனை பண்ணுங்கோ. தேவையில்லாத பேசா தீங்கோ. அவன் நல்ல பையன் நல்ல வேலையில இருக்கான்."

"அந்த வீடு நல்லாயில்லைங்க.எனக்கு அந்த இடத்துல பொண்ணு கொடுக்கறதுக்கு கொஞ்சம் பயமாகவே இருக்கு. அல்பத்தனமா பேசறாங்க.என்னா வேணும்.என்னா சீர் செய்ய ணும். அதுக்குண்டான பேச்சு பேசியாச்சு. அப்புறம் டிபனுக்கு ஒரு தடவை பேசணும். சாப்பாட்டுக்கு ஒரு தடவை பேசணும். அதுக்கப்புறம் என்னா விருந்து வைப்பீங்க.அந்த மெனு என்னான்னு கேட்கணும்.அப்படின்னு ஆரம்பிச்சாங்கன்னா அதெல்லாம் சரியா வராது."

"இல்லீங்க. அந்த வீடு கொஞ்சம் அல்பத்தனமா இருக்குன்னு நான் சொல்லமாட்டேன். மூணு பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி இப்போ ஒரு பையனுக்கு கல்யாணம் பண்றதுனால நம்ம வீட்டுக் கல்யாணம் நாம எப்படி பண்ணி வச்சோமோ அதே மாதிரி நடக்கணுமேங்கற ஒரு ஆவலாதி இருக்கே தவிர அவங்க ஒண்ணும் கெட்டவங்களா தோணலை. இன்னும் மரியாதையா இந்த விஷயத்தை அணுகியிருக்கலாம். அணுகத் தெரியலை. அவ்வளவுதான். நாம சொல்லித் தருவோம்."

"நீங்க சொல்லிக் கொடுத்தெல்லாம் வராதுங்க. அது பரம்பரை பரம்பரையா வரணும்."



புருஷோத்தமர் இன்னும் உரக்கப் பேசினார்.

"இப்போ என்ன சொல்றீங்க."

"எனக்கு இந்த இடம் பிடிக்கலை. ஒரு போன்போட்டு சொல்லிடுங்க. நாங்க இந்த விஷயத்துல ஈடுபடலை.வேற இடம் பார்க்கறோம் அப்படின்னு நீங்களா போன் போட்டு சொல்லிடுங்க."

"வேணாம். அவன் வீட்டுக்குப் போய் ஏற்பாடு பண்றேன். அப்படின்னு சொல்லியிருக்கான். அவன் ஏமாந்துடக்கூடாது."

சீனுவாசய்யர் சொன்னார். நிமிர்ந்து பூரணியை பார்த்தார். பூரணியின் கண்களில் ஒரு ஏமாற்றம் தெரிந்தது அவள் அதை விழுங்கிக் கொள்ள முயற்சி செய்தாள்.

பூரணியின் அப்பா போனுக்கு அருகே போனார்.எடுத்து காதில் வைத்துக் கொண்டு எண்களை சுழற்றினார்.

மறுபடியும் போனை துண்டித்தார். யோசித்தார்.

"பூரணி உனக்கு அந்தப் பையனை ரொம்ப பிடிச்சருக் காம்மா" என்று சட்டென்று திரும்பிக்கேட்டார்.

பூரணி மௌனமாக நின்றிருந்தாள். "இப்படி கேட்டா அவ எப்படி பதில் சொல்லுவா.நியாயமா இருக்கா நீங்க பேசறது."

கமலத்தம்மாள் கவலையோடு புருஷோத்தமரைப் பார்த்துப் பேச புருஷோத்தமர் மெல்ல நெருங்கி பூரணியின் அருகே வந்தார். தலையைத் தடவினார்.

"அம்மா என்னைப் பார்த்து சொல்லு. உனக்கு அந்தப் பையன் வேணுமா. அவன் வந்து உன் கூட பேசினது உனக்கு பிடிச்சருக்கா. அவனை விரும்பறியா தாயி" என்று மெல்ல கேட்க பூரணி அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள். மெல்ல பின்ன டைந்தாள்.

"உங்க விருப்பம் எதுவோ அதுதான்ப்பா எனக்கும். எனக் குன்னு எந்த விருப்பமும் கிடையாதுப்பா" என்று சொல்லி விட்டு திரும்பி கொல்லைப்புறம் நோக்கி நகர்ந்து போனாள்.

# 15

பூரணியின் அப்பா மௌனமாக நின்றிருந்தார்.

பூரணியின் அமைதி அவரை சங்கடத்திற்குள்ளாக்கியது.

மறுபடியும் டெலிபோனுக்குப் போனார். எடுத்தார். எண்களை சுழற்றினார். மறுபடியும் துண்டித்தார்.

"ஏங்க பூரணி விரும்பறா போலவே பேசறா" என்று சீனுவாசய்யரிடம் பேசினார்.

"ஆமாம். அது இப்போது தான் புரியுதா உமக்கு. வாயைத் திறந்து எனக்கு பிடிச்சிருக்கு.அவனை கல்யாணம் பண்ணி வைங்கோன்னு ஒரு பொண்ணு சொல்வாளா. அதுவும் உன் பொண்ணு சொல்வாளா. சொல்ல மாட்டாய்யா. அவ தங்கக் கம்பி. ரத்னம். ரொம்ப உண்மையான பொண்ணு.தாயையும், தந்தையையும் தெய்வமாக நினைக்கிற பொண்ணு. அவ வாயைத் திறந்து எனக்கு இவனைக் கல்யாணம் பண்ணி வைன்னு ஒரு நாளும் சொல்லமாட்டா. உன் விருப்பம் என்னவோ அதான் என் விருப்பம்னு சொல்லிட்டு போனா பார் அதுக்குள்ள அடங்கியிருக்கு அவ விருப்பம்."

"என்ன பண்றதுன்னே எனக்கு தெரியலையே."

தொலைபேசி மணி ஒலித்தது.

புருஷோத்தமர் தொலைபேசியை எடுத்து காதில் வைத்துக் கொண்டு புருஷோத்தமன் பேசறேன் என்று சொல்ல எதிர் முனையில் அவன் பேசினான்.

"ஸார். நான் கமலக்கண்ணன் பேசறேன். வணக்கம் ஸார்" என்று சொன்னான்.

பேசுவது கமலக்கண்ணன் என்று தெரிந்ததும் பூரணியின் அப்பா புருஷோத்தமர் வியப்போடும், லேசான கோபத்தோடும் சீனுவாசய்யரைப் பார்த்தார்.

சீனுவாசய்யர் அமைதி, அமைதி என்று சைகை காட்டினார். கோபப்பட வேண்டாம் என்றும் சைகையில் சொன்னார்.



"ஐயா. நான் சீனுவாசய்யர் வீட்டுக்கு போன் பண்ணேன். அது பெல் அடிச்சகிட்டே இருக்கு.அவங்க ஒரு வேளை உங்க வீட்ல இருப்பாங்களோ அல்லது உங்களுக்கு ஏதாவது அவர் எங்க போயிருக்காருன்னு தெரியுமா? அப்படின்றதுக்காக உங்க வீட்டுக்கு போன் பண்ணேன். சீனுவாசய்யர் எங்க இருக்காருன்னு தெரியுங்களா" என்று பணிவாகக் கேட்டான்.

"நம்ம வீட்ல தான் இருக்காரு."

"கொஞ்சம் கொடுக்கறீங்களா?" என்று அவன் கேட்க "இதோ கொடுக்கறேன்."

"ஐயா" என்று மறுபடியும் அவன் வினவ "என்ன தம்பி."

"நல்லாயிருக்கீங்களா ஐயா."

"நல்லா இருக்கேன்."

"நான் வந்திருந்தேங்க, சீனுவாசய்யர் வீட்டுக்கு. கோயில்ல உட்கார்ந்து பூரணிகிட்ட கேட்டேன். சீனுவாசய்யர் எங்க இருப்பாருன்னு. பூரணிதான் கூட்டிட்டு போச்சு. பொழிச்சலூர்ல நிலம் வாங்கலாம்னு இருக்கேன்யா." உங்களோட ஆசீர்வாதம் வேணும்."

"வாங்குங்க தம்பி. நல்லா வாங்குங்க. பொழிச்சலூர் நல்ல இடம். தண்ணி கஷ்டம் கிடையாது. வாங்குங்க தம்பி" என்று சாதாரணமாகச் சொன்னார்.

"சீனுவாசய்யர்கிட்ட கொடுக்கட்டுங்களா" என்று அவர் கேட்க "சரிங்க கொடுங்க" என்று சொன்னான்.

சீனுவாசய்யர் டெலிபோன் வாங்கிக் கொண்டார். காதில் பொருத்திக் கொண்டார்.

"ஹலோ" என்று சொன்னார்.

ஆனால் அவனிடம் மட்டும் ரகசியமாக பேசுவதை அவர் விரும்பவில்லை.

"ஒரு நிமிஷம் கமலக்கண்ணன். வாயில வெத்தலை பாக்கு போட்டுண்டிருக்கேன். துப்பிட்டு வந்துடறேன்" என்று சொல்லி டெலிபோனை கீழே வைத்தார். வாயிலுள்ள புகையிலையை ஓடிப் போய் முற்றத்தில் உள்ள தொட்டியில்

துப்பினார். குழாய் திறந்து விட்டார். வாயைக் கொப்பளித்தார். வந்து நின்று அடிக்குரலில் அவன் என்ன பேசறான்னு நான் மட்டும் கேட்டா போறாது. நீங்களும் கேட்கணும். இதுல ஸ்பீக்கர் வசதி இருக்கா" என்று கேட்க அப்பா அந்த பட்டனை சுட்டிக் காட்டினார். டெலிபோனை காதில் வைத்துக் கொண்டு ஸ்பீக்கர் பட்டனை அழுத்திவிட அவன் பேசுவது அந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் கேட்டது.

"ஐயா. நான் கமலக்கண்ணன் பேசறேன்."

"சொல்லுங்க கமலக்கண்ணன்."

"ஐயா. நான் உங்க வீட்டுக்குத் தான் போன் பண்ணேன். நீங்க இல்லைன்னவுடனே இங்க பண்ணினேன். ஐயா எங்க வீட்ல கொஞ்சம் பிரச்சனை ஆயிடுச்சு."

"என்னா"

"வேற பொண்ணு பார்க்கலாம்னு சொல்றாங்க."

"அப்புறம்?"

"நான் வரமாட்டேன் அப்படின்னு சொல்லிட்டேன்."

"எனக்கு பூரணியை கல்யாணம் பண்ணி வச்சா வைங்க இல்லைன்னா வேணாம் அப்படின்னு சொல்லிட்டேன். அவங்க என்ன லவ்வா, காதலா அப்படியெல்லாம் பேசறாங்க. அதெல்லாம் இல்லை எனக்கு அந்த பொண்ண பிடிச்சருக்குன்னு சொன்னேன். எங்களுக்கு பிடிக்கலைன்னு சொல்லி மூஞ்சியை தூக்கி வச்சுக்கிட்டாங்க. இன்னொரு பொண்ண பார்க்க முடியாதுன்னு சொன்னதுனால அதையும் கேன்சல் பண்ணிட்டாங்க. எனக்குத் தெரியாது. உன் கல்யாணம்கற மாதிரி எல்லாரும் விலகி இருக்காங்க.ஐயா இது ஒரு வாரத்துக்குள்ள இழுபறியா இருக்கும்.அதுக்குள்ள உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்டுக்கணும்."

"என்னதுப்பா"

"பூரணிக்கு அவங்க வேற இடம் பார்க்காத இருக்கணுய்யா. அப்படி ஏதாவது பார்த்தாலும் நீங்க தடுத்திடணும்."



"என்னதம்பி. இவ்ளோ பெரிய வார்த்தை சொல்ற. ஒரு பொண்ணுக்கு கல்யாணம் பண்றதுன்றது சாதாரண விஷயமா. நீ இல்லைன்னா வேற இடம் இல்லாம போகுமா. அவங்க அப்பா அம்மா பார்க்காம இருப்பாங்களா."

"இல்லைங்கய்யா. ஒரு வார்த்தை மறுபடியும் எப்படியாவது எங்க வீட்டை சரி பண்ணி உங்களாண்ட பேச வைக்கறேன்."

"அவ்வளவு வேகம் எதுக்குப்பா. ஏன் அப்படி பூரணி... பூரணின்னு சொல்ற."

"இல்லைங்கய்யா. எனக்கு பூரணியை மட்டும் பிடிக்கலை. அந்த வீடே பிடிச்சருக்கு. எங்க வீடு ரொம்ப சத்தம், ஆர்ப்பாட்டம். அந்த வீடு அமைதியா இருக்குய்யா. அந்த வீட்ல இருக்கற மனுஷாள் எல்லாரையும் பிடிச்சருக்கு. இப்படி ஒரு வீடு வேணும்னு நான் ரொம்ப நாள் நினைச்சுகிட்டிருந்தேன். எனக்கு அந்த வீடு வேணுய்யா. அந்த வீட்டுக்கு நான் மாப்பிள்ளையா வரணும். இது எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு. விட்டுட்டோம்னா பெரிய நஷ்டம்னு தோணுது. அதனாலதான் நான் பிடிவாதமா இருக்கேன். பூரணிக்கு வேற இடம் பார்க்காம நீங்க தடுக்க முடியுமா."

"நான் முயற்சி பண்றேன் தம்பி."

"சரிங்கய்யா. நான் மறுபடியும் போன் பண்றேன். பூரணியை ரொம்ப கேட்டதா சொல்லுங்க" என்று சொல்லி போன் துண்டித்தான். சீனுவாசய்யரும் போன் துண்டித்தார்.

வீட்டிலுள்ள எல்லோரும் மெல்லிய அதிர்ச்சியில் உட்கார்ந்திருந்தார்கள். பூரணி திரும்பி சுவற்றில் பின் தலையை சாய்த்து என்ன இது என்பது போல் திகைத்துக் கிடந்தாள். பூரணியின் அப்பா தலை குனிந்து யோசித்துக் கொண்டிருந்தார். பூரணியின் அம்மா சமையலறைக்குள் போய் நிற்க முடியாமல் உட்கார்ந்து கொண்டாள்.

சீனுவாசய்யர் மெல்ல போய் புருஷோத்தமரின் தோளில் கை வைத்து "என்ன ஆச்சு. எதுக்கு இப்படி இடிஞ்சு போயிருக்கீர். ஒரு பையன் உம்ம பொண்ண பிடிச்சருக்குன்றான். இது பெரிய தப்பு இல்லை. அவன் கடைசியா சொன்ன வார்த்தைய

கவனிச்சீரா. இந்த வீட்டையே எனக்கு பிடிச்சுருக்கு. இந்த வீடு எனக்கு வேணும்னு சொல்றான். அது ரொம்ப நல்ல வார்த்தைய்யா. அவன் பொய் சொல்றவனா, பித்தலாட்டக் காரனா எனக்குத் தெரியலை.நமக்கு எதைக் கண்டாலும் மிரட்சி. எதைப் பார்த்தாலும் பயம். நல்லவாளை, கெட்டவாளை பிரிச்சுப் பார்க்கத் தெரியாத குணம். எல்லாரும் கெட்டவங் களாத்தான் இருப்பாங்கன்னு ஒரு நம்பிக்கை. அதுலதான் நாம சரியான தேர்வு பண்ண முடியாம தவிக்கறோம். ஒரு வாரம் டைம் கேட்டிருக்கான். நாம ஒண்ணும் உடனே பூரணிக்கு வலைவீசி வரன் தேடப்போறதில்லை. ஒரு வாரம் பொறுத்து என்ன பண்றான்னு பார்ப்போம்."

சீனுவாசய்யர் சொல்ல புருஷோத்தமர் சரியென்று தலை யசைத்தார். திரும்ப பூரணியைப் பார்த்தார்.

"ஏம்மா இப்போ சொல்லு. அந்தப் பையனை உனக்கு பிடிச் சுருக்கா" என்று மறுபடியும் கேட்டார்.

எல்லோரும் பூரணியையே பார்த்தபடி இருந்தார்கள்.

பூரணி திரும்பி தரையை நோக்கினாள். மெல்ல அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"இல்லைப்பா. நீங்க யாரை கல்யாணம் பண்ணிக்க சொல்றீங்களோ அவங்கள கல்யாணம் பண்ணிப்பேன். எனக்கு நல்லது கெட்டது எதுன்னு என்னை விட உங்களுக்கு நல்லா தெரியும்ப்பா. நான் உங்க பேச்சை மீறமாட்டேன். எனக்கு யார் மேலயும் ஈடுபாடு இல்லை.யாரையும் வெறுக்கவும் இல்லை. இவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னாலும் சரி.இவர் வேண்டாம்னாலும் சரி. நான் எல்லாத்துக்கும் தயாரா இருக்கேன்ப்பா. எனக்கு நல்லவிதமா, நல்ல புருஷனா பார்த்து நீங்க கல்யாணம் பண்ணி வைப்பீங்க.நான் என்னாத்துக்கு நடுவில அபிப்ராயம் சொல்லணும்."

பூரணி தெளிவாகப் பேசினாள். கமலத்தம்மாளுக்கு நெகிழ்ந்து விட்டது.

"அடியே... என் ராஜாத்தி..." என்று ஓடிப்போய் பூரணியை கட்டிக் கொண்டாள்.



பூரணியின் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன. மெல்ல கண்ணீர் வந்தது.

"எதுக்குடி அழற?"

"எங்கப்பா இப்படி அதிர்ந்து போய் கிடக்காரே. அதைப் பார்த்தா எனக்கு கொஞ்சம் வருத்தமாயிருக்கு. எதுக்கு இவர் இப்படிப்பேசணும். எதுக்கு எங்கப்பா இப்படி அதிரணும். எதுக்கு எங்கம்மா நெகிழ்ந்து போய் உட்காரணும். வீடு பாருங்க நல்லாவா இருக்கு. ஏன் இப்படி இவர் பண்றாருன்னே தெரி யலை. இவர் யாரையாவது பார்த்து கல்யாணம் பண்ணிக்க லாமே. நான் ஒண்ணும் முக்கியமில்லையே" என்று சொன்னாள்.

"இல்லைடி. ஒரு ஆம்பளை ஒரு பொம்பளை மேல ஆசை வைக்கறது ரொம்ப நல்ல விஷயம். அவன் உன் மேல மட்டு மல்லாத இந்த வீடு மேலயும் ஆசை வச்சுருக்கான்றது இன்னும் நல்ல விஷயம். நீ ஒண்ணும் கவலைப்படாத.பொழிச்சலூர் சிவன்கிட்ட விட்ருவோம். அவர் பார்த்து நமக்கு செய்வார். நீ கிளம்புடி. கோயிலுக்கு போயிட்டு வரலாம்" என்று சொல்ல அந்த வீடு மெல்ல எழுந்து அவரவர் வேலையை கவனிக்க ஆரம்பித்தது.

பூரணி, கமலம் மாமியோடு கோவிலுக்கு போய் வந்தாள். சீனுவாசய்யர் என்ன செய்வது என்று தெரியாமல் டி.வி.யை பார்த்துக்கொண்டிருந்தார். டி.வி.யில் படங்கள் ஓடினாலும் அவர் புத்தி முழுவதும் அந்தப்பையன் மீதே சுற்றிக் கொண் டிருந்தது.

புருஷோத்தமர் இரவு குழம்புசாதம் மட்டும் போதும் என்று சொல்ல அவர் மனைவி குழம்பு சாதமும் அப்பளமும் பொரித்து வைத்தாள். அதை சாப்பிட்டு விட்டு அரை டம்ளர் பால் குடித்தார். தோளில் துண்டு போட்டுக்கொண்டு சீனுவாசய்யர் வீடு நோக்கி வந்தார்.அவருடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்.

டி.வி.யை அணைத்து விட்டு சீனுவாசய்யர் வெளியே வந்து திண்ணையில் உட்கார்ந்து கொள்ள "இந்தக் கமலக் கண்ணன்ற பையனையே முடிச்சுடலாம்னு எனக்கு தோணுது.

நாம அந்தப் பையனுக்கு எதுனா உதவி செய்து இந்தக் கல்யாணத்தை நடத்தலாம்னு தோணுது.அவங்க வீட்டுக்கு நான் போய் பேசினா என்ன தப்பு.அதுல என்ன குறைச்சல். அப்படியொன்னும் தவறு இல்லையே. நீங்களும் வந்தீங்கன்னா நாம எல்லோரும் போய் அவங்க வீட்டுக்குப்போய் உட்கார்ந்து என்னா வேணும். எது வேணாம்னு கேட்டுக்கலாம். நாம வீணா கர்வம் காட்டறதுனால எந்தப் பிரயோஜனமும் இல்லைன்னு தோணுது. அப்படியொரு நல்ல புருஷன் பூரணிக்கு கிடைக்கறத நான் தடுப்பானேன்."

"சரியான பேச்சு.ஆனால் நீங்க போக வேண்டாம்."

"ஏன்."

"போறது உங்க ஜாதியில் வழக்கமில்லை. எங்க ஜாதியில் போகலாம். பொண்ண பெத்தவன் தான்போகனும். போய் நின்னு என்ன வேணும்னு கைய கட்டிண்டு கேட்கணும். உங்க ஜாதியில அப்படியொன்னும் போகற சம்பிரதாயம் இல்லைன்னா நீங்க போகாதீங்க. கீழ இறங்காதீங்க. நான் போய் கேட்கறேன்."

"உங்களுக்கு இது தேவையில்லாத வேலையில்லையா."

"அது என் குழந்தைய்யா. பூரணி என்னுடைய மகள். நானும் ரெண்டு பெத்து கட்டிக் கொடுத்திருக்கேனே. கல்யாணம்றது சாதாரண விஷயமா.நீயும் நானும் ஜாதி தான் வேறயே தவிர நமக்குள்ள நட்பு எவ்வளவு நெருக்கமானது. எத்தனை வருஷமா பழகிண்டிருக்கோம். எவ்வளவு விஷயங்களை பரிமாறிக் கொண்டிருக்கோம். என் பொண்ணு கல்யாணத்துக்கு நீ வேட்டியை மடிச்சுண்டு நிக்கலை. உன் மாமன், மச்சானை கூட்டிண்டு வந்து என் வீட்டு கல்யாணத்துக்கு நீ ஏன் காவல் காக்கனும். இடுப்புல பச்சை பெல்டோடயும், பச்சை பெல்ட்டுல கத்தியோடயும் நீங்க ராத்தூக்கமில்லாம கல்யாண சத்திரத்தை ஏன் சுத்தி சுத்தி வரணும்.

ஜானவாசத்துக்கு பத்து ஆள் தயார் பண்ணிங்களே.ரொம்ப பந்தோபஸ்தா ஜானவாசத்தை நடத்தி கொடுத்தீங்களே. யாரு... யாருன்னு சம்மந்தி வீட்ல கேட்க எல்லாம் எங்க ஆளுங்க



தான்னு நான் நெஞ்சு நிமிர்த்தி சொன்னேனே எனக்கு மறக்குமா? லக்கேஜையும் பெட்டியையும் சென்ட்ரல் ஸ்டேஷன் ட்ராலியில் வச்சு தள்ளிக்கொண்டு போய் வண்டியில ஏத்தி கூலிக்காரங்க மாதிரி உங்க ஆளுங்க செய்தாங்களே மறக்குமா. அதுக்கு பிரதிபலனா இதுன்னு சொன்னாலும் தப்பு. உமக்கு பிரச்சனைங்கற போது நான் நிப்பேன்.எனக்கு பிரச்சனைங்கற போது நீங்க நிப்பீங்க. இப்போ உமக்கு பிரச்சனை நான் பார்த்துக்கறேன். நான் போய் பேசறேன். இதுல என்ன தப்பு."

"நீங்க போய் பேசறத தவறா அவங்க நினைச்சாக்க."

"அதெப்படி தவறா நினைக்க முடியும். எங்க சம்பிரதாயம் அப்படி இல்லை. ஆனாலும் நீங்க கேட்கறேன்ங்கறதுனால நான் இங்க வந்திருக்கேன். என்ன வேணும் சொல்லுங்க. எங்கிட்ட சொன்னீங்கன்னா நான் புருஷோத்தமருக்கு தெரிவிக்கறேன். அப்படின்னு சொல்றேன்.கேட்டு பார்ப்போமே. நீயும் இறங்க வேணாம். அவங்களும் வர வேண்டாம். அதானே நல்லாயிருக்கும்."

"சரி போயிட்டு வந்துடுங்க சீனுவாசய்யர்.என்ன வேணும்னு போய் கேட்டுட்டு வந்துடுங்க."

"முதல்ல போன்ல பேசவோமா."

"இப்பவே பேசிடுவோம் மணி எட்டே முக்கால்தானே ஆகுது."

கார்ட்லெஸ் போன் கொண்டு வந்து சீனுவாசய்யர் நீட்ட புருஷோத்தமர் அந்த வீட்டுக்கு போன் செய்தார்.

## 16

தொலைபேசி மணி ஒலிக்க கமலக்கண்ணனின் அப்பா போன் எடுத்தார்.

"யாரு புருஷோத்தமரா வணக்கம்" வாய் நிறைய முகமன் கூறினார். கமலக்கண்ணன் வெளியே போயிருப்பதாகச் சொன்னார்.

"ஐயா நீங்க எதுவோ மேற்கொண்டு பேசணும்னு கூப்பிட்டீங்களாம். நான் வரது நல்லாயிருக்காது. நம்மலதுல சம்பிரதாயமில்லை. அதேசமயம் நீங்க கூப்பிடறதால மறுக்கவும் முடியாது. என்னுடைய நண்பர் சீனுவாசய்யரை அனுப்பறேன். என்ன வேணும்னு உங்க வீட்டு லேடீஸ்கிட்ட கேட்டு சொன்னீங்கன்னாக்க எனக்கு வசதியாக இருக்கும் பட்சத்தில் உடனடியா நிறைவேத்தித் தரேன்" என்று பணிவாகச் சொல்ல "ஒண்ணும் பிரமாதமா கேட்கப் போறதில்லைங்க.சும்மா நாலு பொம்பளைங்க சேர்ந்துகிட்டு இதைக்கேட்கலாம். அதைக் கேட்கலாம்கறாங்க. கடைசியில போய் பார்த்தாக்க பத்தாயிரம் ரூபா பெறுமானமுள்ள விஷயமா இருக்கும்."

"என்னாங்க கேட்கறாங்க."

"ஒண்ணுமில்லை. டிபன் இப்படி போடணும். சாப்பாடு இப்படி போடணும்கறாங்க. அதை ஏன் போய் கேட்கற. விட்டுடுன்னு சொன்னா கேட்கமாட்டேன்றாங்க. அதைத்தவிர வெள்ளிப் பாத்திரம், எவர்சில்வர் பாத்திரம், குடித்தனத்துக்குண்டான கட்டில், மேஜை, நாற்காலி, பீரோ இதெல்லாம் பேசவே இல்லையாம். இதுவும் பேசணுமாம்."

"இது எதுவும் பேச வேணாம்னு சொல்லுங்க. எனக்கு இருக்கறது ஒரே பொண்ணு. இந்தப் பொண்ணுக்கு என்னா அனுப்பணுமோ அதை நான் அனுப்புவேன்னு சொல்லுங்க. எல்லாம் பண்ணி வச்சிருக்கேன்னு சொல்லுங்க."

"என்னா பண்ணி வச்சுருக்கீங்க."

"நீங்க என்னா சொன்னீங்களோ அதைவிட கூடுதலாதான் வருமே தவிர குறைச்சலா வராது. உங்களதுல சோபா செட் உண்டுங்களா."

"இல்லீங்களே."

"எங்கிட்ட இருக்குங்க. சோபா செட் நல்லபடியா துணி போட்டு மூடி வச்சிருக்கேன். கவலைப்படாதீங்க.உங்களதுல டி.வி. உண்டுங்களா?"

"இல்லீங்களே."



"நான் டி.வியும் வாங்கித்தரேன். கவலைப்படாதீங்க. தனிக் குடித்தனம் போறதுக்கு என்னா உண்டோ அத்தனையும் அனுப்பறேன். இன்னும் தெள்ளத் தெளிவா சீனுவாசய்யர்கிட்ட சொல்லிட்டீங்கன்னா அது நல்லாயிருக்கும். அவ்ளோதானுங்களே நீங்க கேட்கறது சின்னச்சின்ன விஷயம்."

"இதை செய்யத்தான் போறாங்க.நீங்க ஏன் தொந்தரவு பண்றீங்கன்னு கேட்டாக்க. இல்லை பேசிடலாம். இல்லை பேசிடலாம்றாங்க. இதுக்கு காரணமும் இருக்குங்க."

எதிர்முனையில் கமலக்கண்ணன் அப்பா பேசினார்.

"என்ன"

"எங்க வீட்ல இதுவரை மூணு கல்யாணம்.ஒரு மாதிரி பல சிரமங்கள் அனுபவிச்சிட்டோம். குறிப்பா இந்தப் பொம்பளைங்க நாலஞ்சு இடத்துல நல்லா சூடு வாங்கிட்டாங்க. இப்போ ஒட்டுமொத்தமா தான் திருப்பித்தரணும்னு ஆசைப் படறாங்க. இதுல இன்னொன்னும் நடந்து போச்சுங்க."

"என்ன"

"போன மாதம் ஒரு பொண்ணு பார்த்தோம். அந்தப் பொண்ணு பார்த்ததுல அவங்க கமலக்கண்ணனுக்கு ஆறாயிரம் ரூபாதானே காசு. அது குடித்தனம் பண்ண போறாது. எங்களுக்கு இந்த புள்ள வேணாம்னு சொல்லிட்டாங்க.பெரிய கம்பெனி. ஆயில் கம்பெனி அப்படின்னு சொன்னோம். அதனால என்ன சம்பளம் கம்மியாதானே இருக்கு. எங்களுக்கு வேணாம் அப்படின்னு டக்குனு சொல்லிட்டாங்க. அதுல ஆடிப்போயிட்டாங்க. நீங்க சரின்னு சொல்லிட்டீங்களா மேல பாய்ஞ்சு இது கேட்கலாம். அது கேட்கலாம்னு ஆரம்பிக்கிறாங்க."

"ஏங்க சீனுவாசய்யரை நாளைக்கு காலையில் பத்துமணிக்கு அனுப்பட்டுமா. உங்க வீட்ல எல்லாரையும் இருக்க சொல்றீங்களா" புருஷோத்தமர் கேட்டார்.

"சரி.சொல்றேங்க."

"நல்லாயிருக்கீங்களா."

"ரொம்ப நல்லாயிருக்கேன். எனக்கு உங்க வீடு ரொம்ப பிடிச்சுருக்கு. நாம அமைதியா இருந்து இந்தக் கல்யாணத்தை முடிப்போம். பையனுக்கு உங்க பொண்ணு மேல ரொம்ப ஆசைன்னு நினைக்கிறேன்."

"ஆமாங்க... வந்திருந்தாருங்க இங்க."

வாய்தப்பி புருஷோத்தமர் சொல்ல எதிர்முனையில் சட்டென்று மௌனம் பரவியது.

"யார் வந்திருந்ததுன்னு சொல்றீங்க."

எதிர்முனையில் கமலக்கண்ணனின் அப்பா கேள்வி கேட்டார். புருஷோத்தமரால் பின் வாங்க முடியவில்லை.

"கமலக்கண்ணன் வந்திருந்தாங்க."

"எப்போ?"

"இன்னிக்கு மத்தியானங்க."

"அதானா... அதான் வந்து கத்திட்டு போயிட்டானா."

"என்ன கத்தினாருங்க?"

"பூரணி தவிர வேற பொண்ணு பார்க்கமாட்டேன். கல்யாணம் பண்ணா பூரணியை கல்யாணம் பண்ணுவேன். இல்லைன்னா முடியாதுன்னு சொல்லிட்டான். சரி. இதை பெரிசு பண்ண வேணாம். பொம்பளைங்க கிட்ட பேச வேணாம். இவன் வந்ததா சொல்லாதீங்க. பொம்பளைங்க அவனை கொன்னு போட்டுடும். விட்டுடுங்க. நாம மறைச்சு வச்சே பேசுவோம்" என்று கமலக்கண்ணனின் அப்பா சொல்ல சரிங்க என்று புருஷோத்தமர் சொன்னார்.

போனைத் துண்டித்து விட்டு முகம் மலர சிரித்தார்.

"அந்தப் புள்ளை உண்மையாதான் இருந்திருக்கான். நம்ம பொண்ணு சொல்றதெல்லாம் நிஜம் தான்" என்று சொன்னார்.

"என்ன... என்ன" என்று சீனுவாசய்யர் ஆவலோடு கேட்க புருஷோத்தமர் தன் மனைவியை உரக்கக் கூப்பிட்டார். பூரணியும் வெளியேவர இரண்டு பேரும் கதவை சார்த்திக் கொண்டு



சீனுவாசய்யர் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

கமலத்தம்மாள் வந்து நிற்க அவர் கமலக்கண்ணனின் அப்பா என்ன பேசினார் என்பதை அதே குரலில் பேசிக் காட்டினார்.

அந்த வீடு சந்தோஷப்பட்டது.

"பாருங்கோ. சரியா இருக்கு. அந்தப் பையன் மேல எனக்கு குத்தம் தெரியலை. அவன் நல்லவனா இருக்கான். ஆனால், டக்குனு அவன் இங்க வந்தான்னு போட்டு உடைச்சிட்டீங்களே எனக்கு அது தான் பயமாயிருக்கு" கமலத்தம்மாள் குரல் நடுங்க பேசினாள்.

"ஆமாம். வாய்தப்பி சொல்லிட்டேன். ஆனா, அந்தப் பெரியவர் ரொம்ப யதார்த்தமா இதை பொம்பளைங்ககிட்ட சொல்ல வேணாம்னு சொல்லிட்டாரு."

"அவரும் சொல்லாம இருந்தா நல்லாயிருக்கும். அவரும் உம்ம மாதிரி வாய் தப்பி ஏதாவது பேசிட்டாருன்னா பாவம் அவன் தலை உருளும். நமக்கு பிரச்சனைவரும்."

"ஒண்ணும் தப்பு நடக்காது. பொழிச்சலூர் சிவனே, என் அப்பா... என் தெய்வமே... என் ரட்சகா... ஐயனே..." பூரணியின் அப்பா புருஷோத்தமர் கை கூப்பினார்.

"இந்தக் கல்யாணத்தை நல்லபடியா முடிச்சு கொடுப்பா.என் பொண்ண நேசிக்கற ஒரு பையனை என் பொண்ணுக்கு கொடுக்கறதுதான் மரியாதை. அந்தப் பையன் நல்லவனா இருக்கான்ப்பா. அவனுக்கே என் பொண்ண முடிச்சு கொடுப்பா."

வாய் விட்டு உரக்க கைகூப்பி கேட்டார்.

அங்குள்ள அத்தனை பேரும் கை கூப்பினார்கள்.

"வேணும்னா நீங்க போய் வாங்களேன்" புருஷோத்தமரின் மனைவி சொல்ல "வேண்டாம்" என்று கமலத்தம்மாள் சட்டென்று உள்ளே புகுந்தாள்.

"எப்படி பேசப்பட்டதோ அப்படி போறது தான் நல்லாயிருக்கும். அவரு இளகிட்டாருன்னு சொல்லிட்டு நீங்க போறது நல்லாயிருக்காது. எங்க வீட்டுக்காரர் போகட்டும். வேணா, நான் போறேன்" என்று சொல்ல அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

மறுநாள் காலை அவருடைய பழைய மாருதி காரை எடுத்துக் கொண்டு கமலத்தம்மாள் முன்னால் உட்கார்ந்து கொண்டு சீனுவாசய்யர் சைதாப்பேட்டை நோக்கி பயணமானார்.

அவர் பயணம் நல்லபடியாக முடிய வேண்டும் என்று பூரணியின் வீடு வேண்டிக்கொண்டது.

சீனுவாசய்யர் சைதாப்பேட்டையில் வீடு தேடி இறங்கி வண்டியை பூட்டிவிட்டு அவர் வீட்டுக்குள்ளே புகுந்து கைகூப்ப அந்த வீடு வரவேற்றது.

பெரியவர் நேற்று பேசியது பற்றி பெண்களிடம் எதுவும் சொல்லப்போவதில்லை என்று சீனுவாசய்யர் தீர்மானமாய் இருந்தார்.

"என்ன திடீர்னு உங்களை அனுப்பியிருக்காரு. அவர் வர முடியாதாமா" என்று கமலக்கண்ணனின் தாயார் எகத்தாளமாகக் கேட்டாள்.

"அவர் வரது மரியாதையில்லைங்க. உங்க ஜாதியில பழக்கமில்லாத பழக்கத்தை ஏன் ஏற்படுத்தறீங்க. எங்க ஜாதியில் நாங்க வருவோம். அதனால அவருக்காக நான் வந்திருக்கேன். உங்களுக்கு அவர் வந்து என்ன ஆகணும். எங்கிட்ட சொல்லுங்க. அவரும், நானும் ஒண்ணுதான்" என்று சீனுவாசய்யர் சொன்னார்.

"ஒண்ணும் கேட்டுட போறதில்லை. அவர் சொன்ன சீருக்கு நாங்க ஒத்துகிட்டோம். அதுக்கு மேல ஒரு குண்டுமணி கூட கேட்கலை. கல்யாண பத்திரிகை அடிக்கறது யாரு.எந்த செலவு யாருது. எங்களதுல எத்தனை பேருக்கு புடவை வேட்டி எடுத்து கொடுப்பீங்க. என்னென்ன சீர் செய்வீங்க. கட்டில் தருவீங்களா. பீரோ தருவீங்களா இந்த மாதிரி விஷயங்களைப் பேசலாம்னு கூப்பிட்டோம். அதுக்கென்னமோ வரமாட்டேன். செய்யமாட்டேன்னாக்க... எதுனா பேசினாதானே நல்லாயிருக்கும்."



"இதுக்கு என்ன வழக்கமா செய்வாங்களோ அதை செய்துடுவார். இதை எதுக்கு பேசறது."

"நீங்க கேட்கலை.நாங்க செய்யலைன்னு பின்னாடி சொல்லக்கூடாது இல்ல."

"கேட்டா செய்துடுவாங்களாமா.என்ன செய்வாங்களோ அதானே செய்வாங்க. நீங்க கேட்டதெல்லாம் செய்யறதுக்கு அவங்க என்ன கோடீஸ்வரங்களா.நீங்க என்னவோ அதேமாதிரி தானே. என்ன வேணுமோ அதை செய்துட்டுப் போறாங்க. இதைப்போய் டிமாண்டா சொன்னா நல்லாயிருக்காது.

அவங்ககிட்ட விட்ருங்கோ. அவங்க செய்வாங்க."

"இல்லை என்ன செய்வாங்கன்னுதான் கேட்கறேன். இன்னது செய்யுங்கன்னு கூட நாங்க சொல்லலையே. இன்னது செய்யலாங்கன்னு கூட சொல்லமாட்டேன்னாக்க."

"சரி, நீங்க கேளுங்கோ. என்ன வேணும்."

"கட்டில், பீரோ, டைனிங் டேபிள், நாலு நாற்காலி,மெத்தை, காஸ் ஸ்டவ், சிலிண்டர், குடித்தனம் பண்றதுக்கு வேண்டிய பித்தளை பாத்திரம்,எவர்சில்வர் பாத்திரம் இதெல்லாம் செய்வாங்க."

"சரி. சொல்றேன்."

"என்னா சொல்றீங்க.செய்ய சொல்றீங்களா."

"இல்லை. இப்படி சொன்னீங்கன்னு சொல்றேன்."

"அதாங்க அவரு வந்தா நேரடியா பேசிடலாமில்லை. நீங்க சொல்லி அவர் கேட்டு, அவர் சொல்லி நீங்க கேட்டு..."

"அவர் வரமாட்டாருங்க.தெள்ளத்தெளிவா புரிஞ்சுக்கோங்க. நீங்க சொல்றத அங்க போய் சொல்றேன். அவர் என்ன செய்யறாரோ அதான். இதை வந்து டிமாண்டா நீங்க சொல்லவே கூடாது."

"ஏங்க கட்டிலே இல்லை.வெறும் மெத்தைய கொடுத்துட்டா நாங்க ஏத்துக்கணுமா."

"அப்படி செய்ய மாட்டாருங்க. இப்போ கேட்கற டைனிங் டேபிள் ஜாஸ்தி. அதை எதுக்கு செய்யணும்."

"எங்க வீட்ல டைனிங் டேபிள் இல்லை. இருந்தா நல்லாயிருக்கும். அதுக்காகத்தான் சொல்றேன்."

"அதுக்காக பொண்ணு பெத்தவங்களை கேட்கறதா. நீங்க பேசறது நல்லாயில்லை. உங்க வீட்ல என்ன சாமானெல்லாம் இல்லையோ அதெல்லாம் அவங்க செய்யணும்னு ஆசைப்பட்டீங்கன்னா சரியாவா வரும்."

"மிக்ஸி, கிரைண்டர் கூட வேணும்."

"அதுவும் உங்க வீட்ல இல்லையா."

"எங்க வீட்ல இருக்குங்க. அவளுக்காகத்தான் கேட்கறோம்."

"ப்பா... இது பேசி மாளாது. எழுதிக்கொடுங்க."

"நாங்க எழுதி வச்சருக்கோம்."

அவர்கள் ஒரு பட்டியல் நீட்டினார்கள். பட்டியலில் முப்பத்திரண்டு விஷயங்கள் இருந்தன.

சீனுவாசய்யர் கவலையானார்.

கமலத்தம்மாள் சோர்வாகக் காணப்பட்டாள்.

"இது தவிர வேற ஏதாவது தோணுச்சன்னா சொல்றோம்."

"இதுவே ஜாஸ்தியா இருக்கு. இதைத் தவிர தோணுச்சன்னா என்ன."

"இது ஒண்ணும் ஜாஸ்தியில்லைங்க.எல்லாரும் செய்யறது தான். நாங்க கூடுதலா எதுவும் கேட்டுடலை. படிச்சு பாருங்க தெரியும்."

"எங்க உங்க பையனை காணும்."

"அவன் வேலைக்கு போயிருக்கான்."

"சரிங்க, நான் வரேன். இதைக் கொண்டு போய் கொடுத்துடறேன்."

"எப்போ சொல்வீங்க."



"நாளைக்கு காலையில் அல்லது இன்னிக்கு சாயந்தரம் சொல்லிடறேன். என்னென்ன செய்ய முடியும். என்னென்ன செய்ய முடியாதுன்னு சொல்லிடறேன். அதுக்கப்புறம் உங்க இஷ்டம்."

"மூணு அக்கா தங்கச்சிக்கும் துணிமணி வாங்கணும். எங்க பெரியவருக்கு எனக்கு துணிமணி வாங்கணும். என் தம்பிக்கு தம்பி பொண்டாட்டிக்கு துணிமணி வாங்கணும்."

"அதெல்லாம் நீங்க வாங்கணும். அவர் வாங்கமாட்டார்."

"நாத்தனாருக்கு தாலி முடியற போது கொடுக்க வேண்டாமா."

"ஒரு நாத்தனார் தானே தாலி முடியப்போறா அவளுக்குத் தான் உண்டு. ரெண்டு நாத்தனாருக்கும் புடவைங்கறது நல்லா வராது."

"எங்க கூட ஒரு பொண்ணுக்குக் கொடுத்தா என்னவாம்."

"சரி ரெண்டு பேருக்கும் கொடுக்க சொல்றேன். ஒரு பொண்ணுக்கு புடவை கொடுத்தா ஒண்ணும் அழிஞ்சுடப்போறதில்லை. ஆனா நீங்க பாட்டுக்கு டைனிங் டேபிள், புத்தக அலமாரின்னு எழுதியிருக்கீங்களே. புத்தக ஷெல்ப்புக்கும் உங்க வீட்டுக்கும் என்ன சம்மந்தம்."

"அது புத்தக ஷெல்ப் இல்லீங்க. அதுக்கு என்ன பேர் சொல்றதுன்னு தெரியலை. பொம்மையெல்லாம் வைக்கறோமே அந்த மாதிரியான விஷயம்."

"சரி. ஷோகேஸ் வேணும்னு கேட்கறீங்களா."

"ஆமாம்."

"சரி சொல்லிடறேன்."

"உங்க புள்ள இந்த லிஸ்ட் எல்லாம் பார்த்தாருங்களா" என்று சீனுவாசய்யர் கேட்க கமலக்கண்ணன் அம்மாவிற்கு கோபம் வந்தது.

"நீங்க என்னாங்க புள்ளயே பத்தியே பேசறீங்க. எங்க இஷ்டத்துக்குத்தாங்க கல்யாணம். நான் கட்டுடா தாலியன்னா கட்டுவான். கட்டாதடான்னா கட்டமாட்டான்."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை."

கமலக்கண்ணன் அப்பா உள்ளே புகுந்தார். அந்தப் பெண்கள் முறைப்பாக அவரைப் பார்த்தார்கள்.

"அவனுக்குன்னு மனசுல சில எண்ணங்கள் வச்சுக்கிட்டிருக்கான். இந்த லிஸ்ட்டை அவன் பார்க்கலை. பார்த்தா அவன் கோபப்படுவான். இதுங்களுக்கு சொன்னா புரியலை" என்று இவர்கள் பக்கம் சாய அந்த வீட்டில் அந்த இடத்தில் அருவையான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

## 17

இந்தியக் குடும்ப வாழ்க்கையில் பெண்ணைப் பெற்றவருக்கு சுமைகள் மிக அதிகம். பெண்ணுக்கு சீர் செய்ய வேண்டுமே என்கிற பொருளாதார சிரமம் எவராலும் சமாளித்துவிட முடியும். சற்று திட்டமிட்ட வாழ்க்கை நடத்தினால் நிச்சயம் ஒன்றுக்கு இரண்டு பெண்களுக்கு நல்லவிதமாய் திருமணம் முடித்துவிட முடியும். இங்கே சீர் செய்வது பிரச்சினை இல்லை. சீர் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறபோது உள்ளுக்குள் இனம் புரியாத ஒரு கோபம் பொங்குகிறது. இன்னுமா நாம் காட்டுமிராண்டிகளாக வாழ்கிறோம் என்கிற ஆத்திரம் ஏற்படுகிறது. செய்த செயலைப் பற்றி குறை சொல்லுகிற பொழுது இன்னும் ரௌத்திரம் ஏற்படுகிறது. ஆனாலும், இவை எல்லாவற்றையும் பெண்ணின் வாழ்க்கைக்காக பொறுத்துக்கொள்ள வேண்டும் என்கிறபோது அந்த மன அழுத்தம் மிக வேதனையை கொடுக்கிறது.

இந்தக் கல்யாண முறையே தவறோ. வேறுவிதமாக இந்தக் கல்யாண முறையை மாற்றி அமைக்க வேண்டுமோ. காதல் திருமணங்களை உற்சாகப்படுத்த வேண்டுமோ. பெண்ணுக்கு தேர்ந்தெடுக்கின்ற உரிமையைக் கொடுத்து பேசிப் பழகிப்பார். பிடித்திருந்தால் திருமணம் செய்து கொள் என்று விதிகளை கலைத்துவிட வேண்டுமோ என்றெல்லாம் கூட யோசிப்புகள் வந்துவிடுகின்றன.



ஆனால், பிள்ளையைப் பெற்றவர்கள் நல்லவராக இருந்து நீங்கள் என்ன செய்தாலும் சரி.எதற்கு அதிகம் காக செலவழிக்கிறீர்கள். உங்களுக்கு என்று ஏதும் வேண்டாமா. சீர்செனத்திற்கு அதிகம் காக செலவு பண்ணாமல் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். சீர் செனத்திற்கும் உங்கள் மகளினுடைய வாழ்வுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எப்பொழுது என் மகனுக்கு அவள் மனைவியாகி விட்டாளோ அப்பொழுதே அவள் எனக்கு மகள் போலத்தான். அவளுடைய நல்லது, கெட்டதிற்கு நான் துணை நிற்பேன். அவள் குணமறிந்து அவளை மேலும் பக்குவப்படுத்துவேன். வாழ்வு பற்றி சொல்லித் தருவேன். உங்கள் மகளைப் பற்றிய கவலையை முற்றிலுமாய் உங்கள் மனதிலிருந்து துடைத்து எடுத்து விடுங்கள்.

வேண்டுமென்றால் இந்தக் கல்யாணத்தால் ஒரு வருத்தம் உங்களுக்கு ஏற்படலாம். உங்கள் மகள் உங்களைக் கொண்டாடாமல் உங்கள் எதிரிலேயே என்னைக் கொண்டாடுவதும் என்னோடு இழைவதும் உங்களுக்கு வருத்தமாக இருக்கலாம். மற்றபடிக்கு வேறு எந்தவிதமான கவலையும் உங்களுக்கு வராது என்று உறுதியளித்தால் அதைவிட ஆனந்தம் வேறு ஏதுமில்லை.

புருஷனால் கொண்டாடப்பட்டு மாமியார், நாத்தனார்களால் போற்றப்பட்டு அவர்கள் பக்க உறவுகளால் அரவணைக்கப்பட்டு தன்னுடைய மகள் சந்தோஷமாக வாழ்வதைப் பார்க்கும் போது கடவுள் கொடுத்த வரம் என்றே தோன்றுகிறது.

பத்தில் ஒருவருக்குத்தான் இம்மாதிரியான வாழ்க்கை அமைகிறது.

விதம் விதமாக சிந்தித்தவாறே கமலக்கண்ணனின் தகப்பனாரை சீனிவாசய்யர் கூர்ந்து பார்த்தார்.

இந்த வீட்டில் நீ ஒருவனாவது தெளிவாக இருக்கிறாயே என்று சந்தோஷப்பட்டார்.மனதிற்குள் பாராட்டினார்.

ஆனால், முகம் மட்டும் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று புரியாதது போல் லேசான சிலிர்ப்பை காட்டிக் கொண்டிருந்தது.

கமலத்தம்மாளும் உள்ளே பொங்கின ஆனந்தத்தை வெளியே காட்டாமல் சாதாரணமாக உட்கார்ந்திருந்தாள்.

அந்த வீட்டில் மற்ற எல்லோரும் அவரைக் கடுகடுப்பாக பார்க்க அவர்களை அலட்சியம் செய்துவிட்டு கமலக்கண்ணனின் அப்பா சீனுவாசய்யரோடு பேசத் தொடங்கினார்.

"அவன் திரும்பத் திரும்ப கேட்கற ஒரே விஷயம், நல்ல குடும்பத்து பொண்ணா இருக்கணும். அந்த வீடு மத்த வீடு மாதிரி கச்சடாவா இல்லாத சௌஜன்யமா பழகறதா இருக்கணும் அப்படின்னு சொல்றான். மிருதுவா பேசணும். நல்லா பாடணும். நிறைய விஷயங்களைப் பத்தி விவாதம் பண்ணணும். தமிழ்ல ஆவல் இருக்கணும். வீட்டை சுத்தமா வச்சுக்கற குடித்தனமா இருக்கணும் அப்படியெல்லாம் பேசுவான். உங்க வீடு அவனுக்கு ரொம்ப பிடிச்சு போச்சு.நான் எப்படி நினைச்சுகிட்டிருந்தேனோ அதேமாதிரி இந்த வீடு இருக்குப்பா அப்படின்னு ரெண்டு மூணு தடவை சொல்லிட்டான். வீட்டையாடா கட்டிக்கப்போற அப்படின்னு முட்டாள்தனமா இவங்க கேட்டாங்க.

அவன் என்ன கேட்கறான்னு இவங்களுக்கு புரியலை. இவங்க என்ன நினைக்கறாங்கன்னு அவனுக்கு புரியலை. இவங்க ஊர் உலகத்துக்கு சொல்லிக்கறதுக்காக சீர்... சீர்னு பேசறாங்க. முட்டாள்தனமா சொல்றதா இருந்தா நாங்க என்ன செலவு பண்ணோமோ அதை மீட்டுட்டோம் அப்படின்ற மாதிரி இவங்களுக்கு வெளிய சொல்லணும். இதுக்கெல்லாம் அவன் ஒத்துக்கமாட்டான்."

அவர் தொடர்ந்து பேச பெண்கள் கிசுகிசுவென்று கோபமாக தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

"எனக்கு உங்க வீடு பத்தி நன்னா புரியறது. வீட்டு லேடீஸ் ஒருவிதமா கல்யாணம் நடக்கணும்னு பார்க்கறா. நீங்களும் உங்க பிள்ளையும் வேற ஒருவிதமா கல்யாணம் நடக்கணும்னு பார்க்கறீங்க. உங்களுக்குள்ளயே பேசி ஒரு முடிவுக்கு வந்தீங்கன்னா அதுக்கேத்தபடி நடந்துக்கறதுக்கு எங்களுக்கு சௌகரியமா இருக்கும். நாளைக்கு சபையில வந்து யாரும் எதுவும் குறையா பேசிடக்கூடாதுங்கறதுதான் அவங்களுடைய முக்கிய



மான நோக்கம். பெண்ணைப் பெத்தவர் அங்க போய் கைகட்டி தலைகுனிஞ்சு நிக்கக்கூடாதுன்னுதான் நாங்களும் ஆசைப்படறோம். எது முடியும் அப்படின்னு இன்னைக்கு சாயந்தரம் இல்ல நாளைக்கு கார்த்தால சொல்லச் சொல்றேன். இந்த லிஸ்ட் மொத்தமும் அவர் செய்வார்னு எனக்கு நம்பிக்கையில்லை. இப்படி கேட்கறதே தவறு அப்படிங்கறது என் அபிப்ராயம்."

சீனுவாசய்யர் சொல்ல "தவறுதான். சொன்னா எங்க தெரியுது இதுங்களுக்கு.எதாவது செய்துட்டு போறாங்க விடுடி. ஒரே பொண்ணா.தானா பார்த்து பார்த்து செய்வாங்க.அந்தப் பொண்ணும் எனக்கு இது பண்ணிக்கொடுப்பா அது பண்ணிக் கொடுப்பான்னு வாங்கிட்டு வரும்.அதை விட்டுட்டு நீங்க போய் லிஸ்ட் நீட்டினீங்கன்னா அது நல்லாவேயில்லை."

"இப்போ நான் என்ன பண்ணட்டும் சொல்லுங்க."

"லிஸ்ட்டை கசக்கி போட்டுருங்க.அவருக்கு என்ன பண்ண முடியுமோ அதைப் பண்ணச் சொல்லுங்க."

"கசக்கி போடுவானேன். நான் வச்சுக்கறேன். போய் என்னன்னு கேட்டாங்கன்னா நான் பதில் சொல்லணுமில்லை. அப்படி என்னதான் கேட்டாங்கன்னாக்க நான் அந்த லிஸ்ட்டை காண்பிப்பேன் இல்லை" என்று லிஸ்ட்டை மடித்து பையில் வைத்துக் கொண்டார்.

மெல்ல எழுந்து நின்றார்.

"உங்க வீட்டு ஐயா சொன்னாப்போல அந்தப் பொண்ணே நிறைய கொண்டு வரும்மா. நீங்க போறும் போறும்கற அளவுக்கு கொண்டு வரும். லிஸ்ட்டுன்னு கொடுக்கற போது தான் செய்யணுமான்னு தோணுதே தவிர விட்டுட்டீங்கன்னா நீங்க கேட்டதை விட அதிகமாகவே பண்ணுவாங்க."

சீனுவாசய்யர் யாரிடம் பேசுவது என்று தெரியாமல் பொதுவாகப் பேசினார்.

அவர்கள் முகம் திருப்பிக்கொண்டார்கள். சகோதரிகள் சமையல் அறைக்குப் போனார்கள்.

"அப்போ நான் வரேங்க" என்று கைகூப்பினார்.

அவருக்கு யாரும் பதில் சொல்லவில்லை.திரும்பி கமலக் கண்ணன் அப்பாவைப் பார்த்தார்.

"அதுங்க அப்படித்தான் வாங்க.நான் உங்களை வழியனுப்பி வைக்கறேன்."

அவர்கள் வெளியே வந்தார்கள்.

அவர் செருப்பு போட்டுக்கொண்டு வெளியே வரும்வரை சீனுவாசய்யரும் கமலத்தம்மாளும் காத்திருந்தார்கள்.

"என்ன முன்னயும் போகாத பின்னயும் போகாத ரெண்டுங் கெட்டானா திரும்பறோம். லிஸ்ட்ல இருக்கறதை கொடுத்து டுன்னு சொல்ல வேண்டியதுதானே. என்னத்துக்கு பொம்ம னாட்டிகளை பகைச்சுண்டு."

கமலத்தம்மாள் அடிக்குரலில் பேசினார்.

காரில் ஏறி உட்கார்ந்து கமலக்கண்ணன் அப்பாவை பார்த்து கைகூப்புகிற போது எதிரே மோட்டார் சைக்கிளில் கமலக் கண்ணன் வந்து இறங்கினான்.

"என்னங்க... திடீர்னு வந்திருக்கீங்க" ஆவலாகக் கேட்டான்.

சீனுவாசய்யர் கீழே இறங்கினார். கமலத்தம்மாள் வண்டிக் குள்ளேயே இருந்தாள்.

"புருஷோத்தமர் போய் பார்த்துட்டு வாங்கோன்னு சொன் னார். அதான் வந்திருக்கேன்.பார்த்தேன். பேசினேன். வீட்டுக்கு திரும்பிண்டிருக்கேன்."

சந்தோஷமாக அவன் கையைப் பிடித்து குலுக்கினார்.

"ஏதாவது சாப்பிட்டீங்களா?கொடுத்தாங்களா?"

"ஆங்... சாப்டாச்சு."

சாதாரணமாக சீனுவாசய்யர் சொல்ல அவன் கூர்மையாக அப்பாவைப் பார்த்தான்.

"என்ன ஏதாவது கொடுத்தாங்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்... இவ்ளோ பெரிய லிஸ்ட் கொடுத்தாங்க.அதை வாங்கிட்டுதான் போறாரு. வேற என்ன கொடுப்பாங்க."

"லிஸ்ட்டா... என்ன லிஸ்ட்?"



"உன் கல்யாணத்துக்கு என்ன சீர் பண்ணனும்னு எழுதி வச்சிருக்காங்கப்பா."

"நல்லாவா இருக்கு இது?"

"யாரோட திட்டம் இதுன்னு தெரியலை.மூணும் கிசுகிசுன்னு பேசி உயிரை வாங்குதுங்க. சீனுவாசய்யர் அதுக்கு என்ன பண்ணுவாரு. நான் கொண்டு போய் புருஷோத்தமர்கிட்ட கொடுக்கறேன்னாரு."

"என்ன லிஸ்ட் காண்பீங்க?"

"அது ஒண்ணுமில்லைங்க. சின்னதா ஒரு பத்துப் பன்னெண்டு அயிட்டம். நாங்க கொடுக்கறேன்னு சொன்ன அயிட்டம்தான்."

சீனுவாசய்யர் விடாமல் பேச "தயவு செய்து அந்த லிஸ்ட்டைக் கொடுங்க. என்னன்னு நான் பார்த்துட்டு தரேன்."

அவன் அவரிடம் கையேந்தினான்.

ஜிப்பா பாக்கெட்டிலிருந்து சீனுவாசய்யர் லிஸ்ட் எடுத்து கொடுக்க வேகமாக படித்தான், புரட்டிப் பார்த்தான்.

"இவ்வளவா... இவ்வளவா... எதுக்காக இவ்ளோ... என்னத்துக்கு இப்படி கேட்கறோம். இப்படி கேட்கறதுல என்ன முறை இருக்கு? நாம இவ்ளோ செய்தோமா. செய்யலையே. ஷோகேஸ் கேட்கறாங்களே. என்னத்துக்கு ஷோகேஸ். நீங்க எத்தினி ஷோகேஸ் கொடுத்தீங்க. யாருக்கு டைனிங் டேபிள் கொடுத்தீங்க. கேஸ் ஸ்டவ்... ரெப்ரிஜ்ரேட்டர் என்ன கூத்தா இருக்கு இதெல்லாம். கேஸ் ஸ்டவ் நான் கொடுக்கமாட்டேனா அவங்கதான் வாங்கி கொடுக்கனும்னு சட்டமா. என்னம்மா இது... என்னப்பா இது ஏன் இப்படி பண்றீங்க?"

"என்னைக் கேட்டீன்னா... போய் உள்ள அவங்களை கேளு."

"யாரது உள்ள?"

அவன் உரக்க குரல் கொடுத்தான்.

அம்மா வெளியே வந்தாள்.

37683
547064

"இந்த மாதிரி லிஸ்ட் கொடுக்கற வேலையெல்லாம் வச்சுக்காதே. இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. அவங்க என்ன செய்யறாங்களோ அதைச் செய்யட்டும். அதுக்கு மேல ஒரு துரும்பு கூட நீ வாயைத் திறந்து கேட்கக்கூடாது. அது கொண்டாந்தது தான் சீர். அப்போ கொடுத்ததுதான் சௌத்தி. அதுக்கு மேல ஒண்ணும் பேசக்கூடாது."

லிஸ்ட்டை உயரத்தூக்கி பரபரவென்று சுக்குநூறாக கிழித்துப் போட்டான்.

காகிதங்கள் தரையில் விழுந்து காற்றில் புரண்டன.

அம்மா முகம் இருண்டு போனாள். உள்ளிருந்து கோபமாக சில பேச்சுக்குரல்கள் கேட்டன.

"இதோ பார்... எனக்கு அங்கேயிருந்து ஏதாவது குரல் வந்ததுன்னா நான் ரொம்ப எக்குத்தப்பா நடந்துக்குவேன். உங்க கல்யாணம் இல்லை. என் கல்யாணம்.உங்க கல்யாணத்துக்கு என்ன பண்ணனுமோ அதைப் பண்ணியாச்சு. தேவையில்லாத இங்க நிக்காதீங்க. ரொம்ப சிரமமா இருந்தா கிளம்பி காலி பண்ணிகிட்டு இப்பவே ஊரைப்பார்க்க போங்க. என் கல்யாணம் சாக்குன்னு இங்க உட்கார்ந்துகிட்டு இருக்கறவங்களை ரெண்டு பண்ண பார்க்கறீங்களா?

ஐயா... நீங்க போங்க. பூரணி அப்பாகிட்ட என்ன முடியுமோ அதைப்பண்ணச் சொல்லுங்க. அதுக்கு மேல ஒண்ணும் வேண்டாம். அவங்களுக்கு என்ன தாங்குமோ அந்த சீர் செய்தா போதும். கல்யாணம் நல்லபடி நடத்தினா அது சந்தோஷம். ஏன்னா வரவங்க போறவங்க அதிகமா இருப்பாங்க. எல்லாருக்கும் கூப்பிட்டு சாப்பாடு போடறதுதான் எங்களுக்கு சந்தோஷமா இருக்கும். இதைத்தவிர வேற எந்த ரிக்வெஸ்ட்டும் நாங்க கேட்கலை."

"அப்போ நான் அவர்கிட்ட போய் தேதி குறிக்க சொல்லட்டுமா?"

"சொல்லிடுங்களேன்."

"உங்க அம்மா ஒரு வார்த்தை சொன்னா நல்லாயிருக்குமே."



"என்னம்மா... உன்னை ஒரு வார்த்தை கேட்கறாரு. என்ன சொல்லப்போற நீ..."

"நீதான் சொல்லிட்டியேடா. அவங்க கொடுக்கறது தான் சீருன்னு. அவங்க என்ன கொடுக்கறாங்களோ கொடுக்கட்டும். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை."

"எப்போ நிச்சயதார்த்தம் வச்சுக்க சொல்றது?"

"அதுவும் அவங்க சௌகரியப்படியே செய்யட்டும். இதுல நான் சொல்றதுக்கு எதுவும் இல்லை."

"அப்படிச் சொல்லு. இந்த மாதிரி முன்னாடியே சொல்லியிருக்கலாம். ஸார் அதுவும் அவங்களுக்கு சௌகரியப்பட்ட நேரத்துல, சௌகரியப்பட்ட நாள்ல, சௌகரியப்பட்ட இடத்துல செய்யட்டும். நாங்க வந்து கலந்துக்கறோம். நிச்சயதார்த்த செலவு அப்படின்றது பிள்ளை வீட்டார்துன்னு நான் கேள்விப்பட்டிருக்கேன். அதுக்கு என்ன செலவாச்சோ எனக்கு கொஞ்சம் எழுதிக்கொடுத்துடுங்க. அந்த செலவுக்குண்டான காசை நான் கொடுத்துடறேன்."

"ஒண்ணுமில்லைங்க.சாப்பாடு செலவுதான் பிள்ளை வீட்டுக்காரங்கது. சத்திரம் பிடிச்சு செய்யணுமா. இல்ல, வீட்டுக்குள்ளயே வச்சுக்கலாமா?"

"உங்க வசதி."

"இல்ல, என் வீடு கொஞ்சம் பெருசா இருக்கும். அங்க வச்சுக்கலாமா?"

"தாராளமா செய்யலாம்."

"உங்க பக்கத்துலேர்ந்து எத்தனை பேர் சாப்பாட்டுக்கு வருவீங்கன்னு சொல்லிட்டா அதுக்கேத்தபடி நான் ஏற்பாடு பண்ணிடுவேன்."

"வரத்துக்கு முதல்நாள் சொன்னா போறாதா?"

"ஆஹா... அதுபோதும்."

சீனுவாசய்யர் மறுபடியும் காரில் ஏறி உட்கார்ந்தார்.

கமலக்கண்ணன் கையசைத்து விடைகொடுத்தான்.

கமலக்கண்ணன் உள்ளே போவது காரின் நிலைக் கண்ணாடி வழியாக தெரிந்தது.

## 18

"எங்க அந்த லிஸ்ட்?"

புருஷோத்தமர் சீனுவாசய்யரைப் பார்த்து ஆவலோடு கேட்டார்.

"அதுதான் கிழிச்சு போட்டான்னு சொல்றேனே."

"ஏங்க... என்ன கேட்டிருக்காங்கன்னு எனக்கு தெரிய வேண்டாமா. நான்தானே முடியும் முடியாதுன்னு சொல்லணும்."

"நான் அதுக்குத்தான் எடுத்துண்டு வந்தேன். இப்படியொரு லிஸ்டே கிடையாது. இந்த லிஸ்ட் தேவையே இல்லை. எங்க அம்மா கொடுத்தது தப்புன்னு சொல்லி நடுரோட்ல கிழிச்சு காத்துல பறக்கவிட்டுட்டா."

"அடக்கடவுளே... இதுவும் நல்லாயில்லையே."

"ஆமாம்... நன்னாயில்லைதான். கிழிக்காதடான்னு நான் எப்படி சொல்றது?"

புருஷோத்தமரிடம் சீனுவாசய்யர் கவலையோடு பேசினார்.

"ரொம்ப கேட்டுட்டாங்களா?"

புருஷோத்தமரின் மனைவி கேட்க சீனுவாசய்யருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"நான் ஒரு தடவைக்கு மூணு தடவை அந்த லிஸ்ட்டை படிச்சு பார்த்தேன். அந்த லிஸ்ட்ல என்ன இருந்ததோ அதை எழுதிக் கொடுக்கறதுக்கு முயற்சி பண்றேன்."

அவர் வீட்டிற்குப் போய் மடமடவென்று நினைவில் நின்றவைகளை எழுதிக் கொடுக்க புருஷோத்தமர் அவர் தோள் வழியே குனிந்து பார்த்தார்.

"இதெல்லாம்தான் பண்றோம்னே சொல்லிட்டோமே."



"நான் அதைத்தான் சொன்னேன். கூடுதலா ஷோகேஸ் கேட்கறாங்க."

"சமையல் சாமான்னு ஒரே வரியில போட்டிருந்தா போறாதா. கேஸ் ஸ்டவ்வெல்லாம் நான் வாங்கித் தரமாட்டேனா. ஏகப்பட்ட பாத்திரங்கள் ஊர்ல இருக்கு. அதைத் துடைச்சு கொடுத்தாலே நல்லபடி ஆகும்."

"ஷோகேஸ் கேட்கறதுதான் ஆச்சரியமாயிருக்கு."

"கொடுத்துட்டாப் போகுது. செய்யறோம்னு சொல்லிட்டு வாங்கிட்டு வரவேண்டியதுதானே."

"நல்லாயிருக்கே புருஷோத்தமர். உங்களுக்காக நான் ஒத்துக்க முடியுமா?"

"இதுக்குத்தான் நீங்களே போங்கன்னு சொன்னேன்."

புருஷோத்தமரின் மனைவி கடுகடுத்தாள்.

"ஆனா அந்தப் பையன் கிழிச்சுப் போட்டது எனக்கு சந்தோஷமா இருந்தது."

"ஒருவிதத்துல சந்தோஷம். இன்னொரு விதத்துல கவலை. இவன் கோச்சுக்க நம்ப பொண்ணு அவங்க வீட்டு பொண்ணுங்கக்கிட்ட என்ன பாடுபடுமோன்னு ஒரு பயம் வரத்தானே செய்யுது."

"இல்லை. இவன் தனியா குடித்தனம் வச்சுடுவான்னு நினைக்கறேன்."

"நிச்சயதார்த்தம் எப்போ வச்சுக்கலாம்?"

"எவ்வளோ சீக்கிரம் வச்சுக்கணுமோ அவ்வளவு நல்லது."

"ஏன்?"

"மறுபடி மறுபடி இந்தப் பஞ்சாயத்து வராம விமரிசையா நல்லபடியா பண்ணிடறது நல்லது."

"நிச்சயதார்த்தத்துல நம்ம செலவு என்ன?"

"மாப்பிள்ளைக்கு பேண்ட், சட்டை பொண்ணுக்கு புடவை. லைட், வாழைமரம், பந்தல், பெட்ரோமாக்ஸ் எல்லாம் தயார் பண்ணணும்."

"எத்தனை பேர் வருவாங்க."

"அதை நிச்சயதார்த்தத்துக்கு முதல் நாள் சொல்லுவாங் களாம்."

"உறவுக்காரங்க மட்டும்தானே வருவாங்க."

"தெரியலை."

"எப்போ நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம். முதல்ல அதைச் சொல்லுங்க."

புருஷோத்தமரின் மனைவி சொல்ல சீனுவாசய்யர் பஞ்சாங் கம் பிரித்துப் பார்த்தார்.

இரண்டு மூன்று தேதிகள் சொன்னார்.

புருஷோத்தமர் அதில் ஒரு தேதியை தேர்ந்தெடுக்க கமலக் கண்ணனுக்கும் பூரணிக்கும் அந்த நாளின் நட்சத்திரம் பொருத்தமாக இருக்கிறது என்று சீனுவாசய்யர் சந்தோஷப் பட்டார்.

இருபது நாள் இடைவெளி இருந்தும் நிச்சயதார்த்தத்திற்கு அலையும்போதே பெரிய கேஸ் ஸ்டவ்வும், டைனிங் டேபிளும், மிக்ஸியும், கிரைண்டரும் வாங்கி வந்து வீட்டில் இறக்கினார்.

"ஷோகேஸ் துண்டா செய்யறதுவிட அவங்க எங்க குடித் தனம் பண்ணப் போறாங்கறத பார்த்து அதுக்கேத்தாப்போல அளவெடுத்து செய்யச் சொல்லிடறேன்" என்று மனைவியிடம் சொன்னார்.

லிஸ்டில் என்ன கேட்கப்பட்டதோ அதற்கு மேலே செய்வது என்று உறுதி எடுத்துக்கொண்டார்.

பூரணி வீட்டில் விதம் விதமாக சமையல் செய்து பழக ஆரம்பித்தாள். அழகாக உடுத்திக்கொண்டு வலம் வந்தாள். பாட்டுப் பாடினாள்.

பூரணி சந்தோஷப்படுவதும், அவள் முகம் மலர்ச்சியாக இருப்பதும் பார்த்து புருஷோத்தமருக்கு திருமண விஷயங்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டது.



"சீனுவாசய்யர் அந்தப் பையன் வரவேயில்லையே. தடுக்குன்னு ஒருநாள் வருவான்னு நினைச்சேன். இன்னும் நாலு நாள்தான் இருக்கு நிச்சயதார்த்தத்துக்கு. அவனுக்கு போன் பண்ணி வரவழைப்போமா?"

"நானும் நினைச்சேன். நீரே சொல்லிட்டீர். போன் பண்ணி வரவழைக்க வேண்டாம். போன் பண்ணி எப்படியிருக்க சௌக் கியமா. இன்னது வாங்கியிருக்கோம் அப்படின்னு சொல்ல லாமா?"

"நான் சொல்றதை விட நீங்க சொன்னா நல்லாயிருக்கும் சீனுவாசய்யர்."

"யோவ்... எல்லாத்துக்கும் பலி ஆடு மாதிரி என்னையே தள்ளிடுய்யா."

சீனுவாசய்யர் செல்லமாக கோபித்துக்கொண்டார்.

கமலக்கண்ணன் அலுவலகத்திற்கு போன் செய்தார்.

"கமலக்கண்ணன் இன்னிக்கு லீவுங்க. பாஸ்போர்ட் ஆபீஸ் வரைக்கும் போயிருக்காரு. அதனால லீவு போட்டிருக்காரு. நீங்க யார் பேசறது?"

"சீனுவாசய்யர். கமலக்கண்ணனுக்கு பெண் கொடுப்பவ ரின் நண்பர்" என்று சொல்ல "அடடே... கல்யாணம் பத்தி என்னமோ சொல்லிகிட்டுதான் இருந்தாரு. ஆனா மேரேஜா, வெளியூரா எது போறது அப்படின்னு தெரியலையேன்னு வருத்தப்பட்டுக் கிட்டிருந்தாரு."

"வெளியூரா... எங்க வெளியூர்?"

"துபாய்க்கு போறாபோல ஒரு எண்ணம் இருக்கே."

எதிர்பக்கத்திலிருந்து குரல் கேட்டது. சீனுவாசய்யர் கலக்க மானார்.

அந்த விஷயத்தை அவர் அப்போதைக்கு புருஷோத்தமரிடம் சொல்லவில்லை.நேரே மறுபடியும் கமலக்கண்ணனை பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டார்.

"சரிங்க... கமலக்கண்ணன் ஸார் வந்தா உடனே போன் பண்ணச் சொல்லுங்க" என்று தன்னுடைய போன் நம்பரும் பெயரும் கொடுத்தார்.

"வெளியூர் போயிருக்காராம். வரேன்னு சொன்னாராம்."

"ஏதோ வெளியூர்னு சொன்னீங்க?"

"யாரையோ கூப்பிடறதுக்கு வெளியூர் போகணுமாம். அதுக்காகவும் போயிருப்பாரோ அப்படின்னு சொல்றா."

"உறவுப்பட்டாளம் பெருசா வரும்னு நினைக்கறேன். எதுக்கும் நாம ரெடியா இருக்கறது நல்லது."

தனக்குத்தானே பேசிக் கொண்டு புருஷோத்தமர் வேகமாக வீடு தாண்டுவதைப் பார்த்து சீனுவாசய்யர் கவலையானார்.

இந்த நேரம் பார்த்து ஏன் துபாய்க்கு போகவேண்டும். கமலக் கண்ணன் நல்லவனா, கெட்டவனா?

உள்ளுக்குள், அவருக்குள் பலமாய் ஒரு சந்தேகம் எழுந்தது.

"கும்பிடறேங்க."

பத்து நாள் கழித்து வீட்டுவாசலில் யாரோ ஒரு அம்மாள் ஐம்பது வயதுக்கு மேல இருக்கும். பருத்த உடம்போடு வீட்டுப் படியேறி நின்றாள். கைகுவித்தாள்.

"வாங்க... யாரு?"

புருஷோத்தமரின் மனைவி வரவேற்றாள்.

உள்ளே படுத்திருந்த புருஷோத்தமர் எழுந்து துண்டால் முகம் துடைத்துக் கொண்டு சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே வந்தார்.

"என் பேரு சரோஜா. சைதாப்பேட்டைலேர்ந்து வரேன்."

சைதாப்பேட்டை என்று சொன்னதுமே அவர்களுக்கு கமலக்கண்ணின் வீடுதான் ஞாபகம் வந்தது.

"வாங்க... வாங்க."

இரண்டு பேரும் வரவேற்றார்கள்.

"என் பேரு சரோஜா."



"அதான் சொல்லிட்டீங்களே... உட்காருங்க."

"என்னை கமலக்கண்ணன் வீட்ல ஒரு சேதி சொல்லிட்டு வான்னு சொன்னாங்க. அதான் வந்திருக்கேன்."

"அப்படியா... நீங்க யாரு கமலக்கண்ணனுக்கு?"

"நாங்க அவங்க வீட்ல வேலை செய்யறேங்க.முதல்ல எடுபிடி வேலைக்குத்தான் கூப்பிட்டாங்க.அப்புறம் அவங்க வீட்ல அந்த அம்மாவுக்கு முடியலை. அதனால சமையல் வேலை கூட நான்தான் செய்யறேன். ஒரு நாலு வருஷமா அங்கதான் இருக்கறேன்."

"அங்கயே தங்கியிருக்கீங்களா?"

"இல்லை... இல்லை... ஸ்டேஷன் பக்கம் எனக்கு வீடு இருக்கு.என் புள்ளயோட இருக்கறேன். அவனுக்கு சம்பளம் போறலை. அதான் என்னையும் வேலைக்கு போடின்னு அனுப் பிட்டான். இவங்க வீட்ல உட்கார்ந்து சாப்பிட்டு சமையல் வேலை செய்துவிட்டு ராத்திரியோட ராத்திரியா வீட்டுக்கு போயிடுவேன்."

"என்ன சொல்லி அனுப்பினாங்க?"

"நிச்சயதார்த்தத்துக்கு நாப்பத்துமூணு பேர் வருவாங்களாம். தடாபுடான்னு செலவு பண்ணவேணாம். ஒரு ஸ்வீட், ஒரு கூட்டு, ஒரு காய் பண்ணா போறும். பெருசா இழுத்து விட்டுக்க வேணாம்னு சொன்னாங்க."

புருஷோத்தமருக்கு மெல்லியதாய் கோபம் வந்தது.

என்ன அயோக்கியத்தனம் இது. என்ன இழிவு இது.நான் ஒரு நண்பரை பேச அனுப்பினேன் என்பதால் இவர்கள் ஒரு வேலைக்காரியை விவரம் சொல்ல அனுப்புகிறார்களா. சிறிது கூட நாகரீகம் இல்லாத ஜனங்களாக இருக்கிறார்களே. நீ ஒன்று செய்தால் நான் ஒன்று செய்வேன் என்று எட்டாம் வகுப்பு பிள்ளை போல நடந்துகொள்கிறார்களே என்று பல் கடித்தார்.

அவரின் மனப்போக்கு அவர் மனைவிக்கு புரிந்தது.

"உங்க பக்கத்துலேர்ந்து நாப்பத்திமூணா. இது ஜாஸ்தியா இருக்கே."

புருஷோத்தமரின் மனைவி சொல்ல, "இது ரொம்ப கம்மிம்மா. அதுங்க ஜனம் படைங்க ஜாஸ்தி. நாப்பத்தி மூணுன்னு சொல்றாங்களே தவிர கடைசியா அம்பது. அறுவதுன்னு ஏறிடும். எதுக்கும் ஜாக்கிரதையா நடந்துக்கோங்க."

"இதைச் சொல்றதுக்கு அவங்க யாராவது வரலாமே."

"வரலாம்தான். நீங்க வரலையே. அதனால அவங்க வர பயப்படறாங்க."

"நாங்க பொண்ண பெத்தவங்க வரமுடியாது. அவங்க புள்ளைய பெத்தவங்க வரலாமில்லை."

"எல்லாருக்கும் ஒரே மாதிரி மானமரியாதைன்னுதான் சொன்னாங்க."

"வாயைத்திறந்து அப்படி சொன்னாங்களா?"

"என்னான்னு கேட்டா இப்படி சொல்லுன்னு சொன்னாங்க."

மீண்டும் கோபம் தலைக்கேறியது. புருஷோத்தமர் எழுந்து உள்ளே போய்விடலாமா என்று நினைத்தார். இருக்கையில் உட்கார முடியாமல் அவஸ்தைப்பட்டார்.

உறவு என்கிற ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறபோதே இத்தனை முரட்டுத்தனமும், பிடிவாதமும், அலட்சியமும், அகங்காரமும் காட்டினால் போகப்போக எப்படியிருக்கும்.

இந்த இடத்தில் ஒரு பெண்ணைக் கொடுத்துவிட்டு இரவும் பகலும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா. சோறு தின்னாமல் திகைத்துப் போயிருக்க முடியுமா.பெண் எப்படி இருக்கிறாளோ, என்ன அவஸ்தைப் படுகிறாளோ என்று நினைத்து நினைத்து வெதும்ப முடியுமா?

வேண்டாம். இந்த சம்மந்தம் வேண்டவே வேண்டாம் என்று உள்ளுக்குள் கோபம் பொங்கியது.

புருஷோத்தமரின் மனைவி ஓடிப்போய் சீனுவாசய்யருக்கு தகவல் தெரிவித்தாள்.



சீனுவாசய்யர் வேட்டியை இறுக்கக் கட்டிக்கொண்டு மேலே துணியை போர்த்திக் கொண்டு வெற்றிலைப் பெட்டியுடன் வந்து உட்கார்ந்தார்.

அந்த அம்மாளைப் பார்த்ததும் சட்டென்று அவருக்கு எப்படி இந்த விஷயத்தை கையாள வேண்டும் என்று புரிந்தது.

"அம்மா... அங்க தளிகை பண்றேளோ."

"இல்லீங்க. சமையல் பண்றேன்."

"நான் அதைத்தான் எங்க பாஷையில் கேட்டேன்."

"அம்மாவுக்கு குடும்பம், குழந்தை, குட்டிங்களெல்லாம் இருக்கா?"

"எங்க வீட்டுக்காரரு மலேசியா போயிருக்காரு. அங்க அவருக்கு வேலை."

"என்னா வேலை?"

"காட்ல மரம் அறுக்கறது. லோடு போட்டு இங்க அனுப்பறது."

"வாழ்க."

"ஒரு பையன்."

"கல்யாணமாயிடுச்சா?"

"ஆச்சுங்க. மருமக இருக்கறா ரெண்டு குழந்தைங்க இருக்கு."

"அடடா... நிறைஞ்ச வாழ்வு... நிறைஞ்ச வாழ்வு."

கைதூக்கி அந்த அம்மாளை ஆசிர்வதித்தார்.

அந்த அம்மா பெரிதாகச் சிரித்தாள்.

அவள் சிரிப்பதைப் பார்த்து இன்னும் இவளைக் கிளறலாம் என்று சீனுவாசய்யருக்கு தோன்றியது.

புருஷோத்தமர் சீனுவாசய்யரை கோபத்துடன் பார்த்தார்.

எதுக்கு இவளுடன் பேசிக்கொண்டிருப்பது என்பது போல் ஒரு கூர்மையை படரவிட்டார்.

சீனுவாசய்யர் புரிந்து கொண்டு அமைதியாக இரு என்று சைகை செய்தார்.

## 19

"நல்லா வாழ்ந்தவங்க முகம்தான் இப்படி லட்சுமிகரமாக இருக்கும்" என்று கமலக்கண்ணன் வீட்டு வேலைக்காரியைப் பார்த்து சீனுவாசய்யர் பேசினார்.

"என் புருஷன் ரொம்ப நல்லவருங்க. ஆனா, என்ன பண்றது. வேலைக்காக வெளியூர் போக வேண்டியிருக்கு. உள்ளூர்ல ஒண்ணும் பெரிய சம்பாத்தியம் வரமாட்டேன்னுது. வருஷா வருஷம் வருவாரு. ஒரு மாசம், ரெண்டு மாசம் இங்க இருப்பாரு. அப்புறம் கிளம்பி டிக்கெட் வாங்கி மறுபடியும் மலேசியா போயிடுவாரு. எந்த மரம் வெட்டணும். எந்த மரம் வெட்டக் கூடாதுன்னு சொல்றதுல கில்லாடியாம். அவரு வரணுங்கறதுக்காக மலேசியாவுல ஆளுங்க காத்துகிட்டிருக்குமாம்."

"அடாடா... அடாடா... கெட்டிக்கார புருஷன் நல்லவனா கிடைக்கிறதுக்கு கொடுத்து வச்சருக்கணும். மருமக எப்படி?"

"அதுவும் நல்ல பொண்ணுதாங்க.எனக்கு ரொம்ப கால் நோவும். வந்து குளிச்சிட்டு சாப்பிட்டு படுத்தவுடனே மருமக எந்நேரமானாலும் என்ன வேலையிருந்தாலும் என் பக்கத்துல உட்கார்ந்து இருவத்தஞ்சு முப்பது நிமிஷம் காலை பிடிச்சு விடும். அந்த சுகத்துலயே தூங்கிடுவேன். போறும்டி எனக்கு இதுமட்டும் பண்ணா போறும்னு சொல்லிடுவேன்."

அந்த அம்மாள் கைகாலை வேகமாக ஆட்டிக்கொண்டு பேசினாள்.

"எல்லா வசதியிருந்தும் எங்கனயோ போய் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தமும் உங்களுக்கு இருக்கு. பாவம்."

சீனுவாசய்யர் பரிதாபப்பட்டார்.

"வீட்டோட இருந்தாதாங்க சண்டை வம்பு தும்பெல்லாம் வரும். நாம டப்புனு கிளம்பி ஒரு ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு



இந்தாண்ட வந்துட்டோம்னாக்க துட்டுக்கு துட்டு ஆச்சு. வேலைக்கு வேலையும் ஆச்சு."

"சபாஷ். கரெக்டா சொல்றீங்க. வெறுமனே உட்கார்ந்துக்கும் போதுதான் வீண் சண்டை."

"ஆமாங்க நீங்க சொல்றது கரெக்ட்."

அவள் பதிலுக்கு சீனுவாசய்யரை பாராட்டினாள்.

"நல்லா குடித்தனம் பண்ணி நிமிர்ந்தவங்களை இங்க அனுப்பினாங்களே. அது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்."

சீனுவாசய்யர் கைகூப்பினார்.

"ஆனா தடுக் தடுக்குனு வகைதொகையில்லாத சீர்செனத்தி கேட்கறாங்களே இதுதான் பயமாயிருக்கு. குழந்தைய நல்ல படியா வச்சுப்பாங்களா. அதை கண்கலங்காம காப்பாத்துவாங்களான்னு ஒரு சந்தேகம் வருது."

"அதெல்லாம் ஒரு தவறும் நடக்காதுங்க. அந்த வூட்டு அம்மா நல்லவங்க. ஐயா ரொம்ப ரொம்ப நல்லவரு. ரெண்டு பொண்ணுங்கதான் திமிர் பிடிச்சு ஆடுதுங்க."

"யாரோ ஒருத்தர் ஆடினா போதுமேம்மா நம்ம குழந்தை இல்ல கஷ்டப்படும்."

"நீங்க ஒன்னு. இதெல்லாம் பார்த்து இந்த சம்மந்தத்தை தட்டிவிட்டுடாதீங்க. கமலக்கண்ணன் மாதிரி நல்ல புள்ள கிடைக்கறதுக்கு நீங்க கொடுத்து வச்சருக்கணும். அம்மா... அம்மான்னு என்னை வாய்நிறைய கூப்பிடற புள்ள அது. வீட்ல வேலை செய்யறவங்கள யாராவது அம்மான்னு கூப்பிடுவாங்களா. ஏய்... ஏய்னு கூப்பிடுவாங்க. அதெல்லாம் சொல்லவே சொல்லாது."

"அவங்க ரெண்டு பேரும் ஏன் இதுல மூக்கை நுழைக்கறாங்க."

புருஷோத்தமரின் மனைவி கவலையோடு கேட்டார்.

"நரிக்கு நாட்டாமை கொடுத்தா, என்னால முடியலைடி. நீ கொஞ்சம் பார்த்து என் புள்ளைக்கு கல்யாணத்தை பண்ணி வைன்னு அம்மாகாரி சொல்லிட்டா. நிஜமாவே அவங்களுக்கு

முடியலை. ஆச்சா போச்சான்னு இதுங்க ரெண்டும் கையில எடுத்து பண்ணுதுங்க. அவ டேபிள்னா, இவ கட்டில்னுவா இவ கட்டிலுன்னா அவ சோஃபான்னுவா, இப்படி மாத்தி மாத்தி அதுங்க ரெண்டும் பேசியே இது பெருசாயிப்போச்சு. கமலக்கண்ணன் அவங்க அப்பா உள்ள புகுந்து சொன்னாரு. என்னங்கடி மூணு சம்மந்தமும் தட்டிப்போச்சு. நாலாவதா இதையும் ஒடிச்சுடப்போறீங்களான்னு கேட்டாரு."

"ஏன் மூணு சம்மந்தமும் தட்டிப்போச்சு?"

"இதே கூத்துதான்."

"என்னா கூத்து?"

"நாப்பத்தஞ்சு பவுன் சவரனில்ல கேட்டாங்க. அப்போ அஞ்சாயிரம் ரூபாதான் சம்பளம் அவனுக்கு. பொண்ணு பெத்தவன் சும்மா விடலை. என்னா உன் புள்ள சப்கலெக்டரா. இல்ல போலீஸ் ஐ.ஜி.யா. நாப்பத்தஞ்சு சவரன் கேட்கறீங்களே. அப்படின்னு உரத்த குரல்ல நடுசபையில கேட்டாங்க. அஞ்சாயிரம் ரூபாய்க்கு ஆயில் கம்பெனில வேலை செய்யறவர் தானே. இதுக்கென்ன இத்தனை அலட்டல் அப்படின்னு திரும்பவும் கத்துனாங்க. கொடுத்தா கொடுங்க கொடுக்காட்டி போங்க அப்படின்னு பெரியவ சொன்னா, எவனும் கொடுக்க மாட்டான். எங்கேயாவது பைத்தியம், பன்னாடைய தலையில கட்டறதுக்குத்தான் நாப்பத்தஞ்சு சவரன் கொடுப்பானே தவிர நல்ல பொண்ணு நாப்பத்தஞ்சு சவரனோட வரமாட்டா அப்படின்னு சொல்லி எழுந்து போயிட்டாங்க.அன்னிக்கு முழுக்க ஒரே கூச்சல். இவ ஒழியணும். அவ ஒழியணும். அவ சாகணும். இவ சாகணும்னு."

"இது தப்பில்லையா?"

"தப்புதான். யார் சொல்றது."

அந்தப் பெண்மணி அவளேயறியாமல் மெல்ல மெல்ல கட்சி மாறினாள்.

"ரெண்டு பொண்ணுங்களுக்கு நடுவுல நீங்க எப்படி வேலை செய்யறீங்க?"



"எங்கிட்ட வச்சா இழுத்துட மாட்டேன். முதல்ல ஆட்டம் காண்பிச்சாங்க. பச்பச்சனு வச்சேன். ரெண்டு நாள் வராத பண்ணேன். இவங்க சமையலை எவ திங்கறது. கமலக்கண்ணன் ஓடி வந்து அம்மா மனசுல வச்சுக்காதீங்க.வந்து சாப்பாடு சமைச்சு போடு. எனக்கு அவங்க சாப்பாடு ஒத்துக்கவேயில்லை அப்படின்னு சொல்லிடுச்சு. கமலக்கண்ணனுக்காக மறுபடியும் வந்தேன்."

"என்ன தொந்தரவு பண்ணுவாளுங்க?"

"நானே வாதநோய்க்காரி. அவங்க வந்து காலை பிடிச்சி விடு. கைய பிடிச்சு விடு. முதுகுக்கு சீயக்காய் தேச்சுவிடு. தலைக்கு எண்ணெய் தடவிவிடுன்னுவாங்க. இதெல்லாம் நம்மால முடியாது. கையத்தூக்கினா தோள்பட்டை வரைக்கும் வலிக்குது எனக்கு. ஏதோ கூட ஆயிரம் ரூபாய் வந்தா குழந்தைங்களுக்கு ஆகுமேன்னுதான் சமையல் வேலைன்னு சொல்லி உட்கார்ந்திருக்கேனே தவிர இவங்களுக்காவா வந்தேன்."

"மூணு பேருக்குத்தான் சமையலா?"

"ஆமாம். அவங்க அப்பா, அம்மா, கமலக்கண்ணன். இவங்க மூணு பேருக்குதான் சமைக்கறதுக்கு வந்தேன். இதுங்க இப்போ வந்து உட்கார்ந்துகிட்டு இவன் கல்யாணத்தை முடிச்சுட்டுதான் வெளிய போவேன்னு கத்துதுங்க."

"எப்படி அவங்க வீட்டுக்காரங்க சும்மாயிருக்காங்க?"

"இதுங்க இல்லாம இருந்தா போதும்னு நினைக்கறாப்போல. ஆனா அவங்களும் வந்துடறாங்களே பொட்டிய தூக்கிகிட்டு. இந்த ரூம் எனக்கு. அந்த ரூம் எனக்குன்னு. போய் பூட்டிக்கறாங்களே. நினைச்ச நேரத்துக்கு காபி, நினைச்ச நேரத்துக்கு சோறு. சனிக்கிழமை, ஞாயித்துக்கிழமை பேஜாரா போயிடும். நான் அதுக்கெல்லாம் ஆடமுடியாதுன்னு சொல்லிட்டேன். ஞாயித்துக்கிழமை அவங்களே பார்த்துப்பாங்க."

"இப்போ நாங்க என்ன பண்ணணும்னு நினைக்கறீங்க?"

"நான் வந்த விஷயம் வேறய்யா. அவங்க சொன்னதை உங்களாண்ட சொல்லணும். நீங்க நல்ல குடும்பமா இருக்கறதுனால எனக்கு ஒன்னே ஒன்னு தோணுது."

"சொல்லும்மா"

"என்ன ஆனாலும் சரி. இந்த சம்மந்தத்தை நீங்க விட்டுட வேண்டாம். கமலக்கண்ணன், வெளிய கிளம்பறபோது அவங்க வீட்டுக்கு உன்னை போகச் சொல்லியிருக்காங்களான்னு கேட்டாங்க. ஆமான்னு சொன்னேன். நான் ரொம்ப அந்தப் பொண்ண விரும்பறதா அவங்ககிட்ட ஒரேயொரு வார்த்தை சொல்லிடு அப்படின்னு சொன்னாரு. ஏம்ப்பா...இதை நீயே போய் சொல்லலாமேன்னு சொன்னேன். நான் ஒரு தடவை சொல்லிட்டேன். நீயும் சொல்லு. நான் வெட்கமில்லாம எல்லார்கிட்டேயும் சொல்லிக்கிட்டிருக்கேன்னு அவங்க தெரிஞ்சுகட்டும்னு சொன்னான். எனக்கு கண்ணு கலங்கிப்போச்சு. எங்கிட்ட சொல்றதுக்கு என்னாடா கண்ணு வெட்கம் அப்படின்னேன். அப்பாகிட்ட கூட சொல்லமுடியாத விஷயம் ஆத்தா இது உங்கிட்ட சொல்லி அனுப்பறேன்னாக்க நான் எவ்வளவு விரும்பறேன்னு அது தெரிஞ்சுகட்டும்னு சொல்லிச்சு. அதை சொல்லணும் முதல்ல எனக்கு.

ரெண்டாவது, கமலக்கண்ணன் அங்க உங்க பொண்ண வச்சிருக்கமாட்டான். தனியா கூட்டிகிட்டு போயிடுவான். கமலக்கண்ணன் அவங்க அம்மா ரொம்ப நல்லவ. அப்பா ரொம்ப அமைதி. இந்த இரண்டு பொம்பளைங்களும் ஆடறாங்களே தவிர தனக்கு எல்லாம் தெரியும்னு காட்டறதுக்கு முட்டி மோதறாங்களே தவிர அந்த வீடு கெட்ட வீடு இல்லை. அது ரெண்டுங்கெட்டானா இருக்கிற வீடு. இந்த தொந்தரவு வருமோ, அந்த தொந்தரவு வருமோன்னு பயப்படாதீங்க. ஒரு பொண்ணு வீடு மாத்தி வீடு போனா அங்க சின்னச்சின்னதா பிரச்சனைகள் வரத்தான் செய்யும். அதைப் போக்கி குடித்தனம் பண்றதுதான் பொம்பளைக்கு அழகு.

கல்யாணம் பண்ணிக்கும் போது உங்க வீட்டு அம்மாவுக்கும் இதே பிரச்சனை இருந்திருக்கும். ஐயோ, இவரோட எப்படி



குடித்தனம் பண்ணப் போறேனோ இந்த மாமியாரை எப்படி சமாளிப்பேனோ அப்படின்னு அந்த அம்மாவும் நினைச்சுருக்கும். அந்த அம்மாவோட அப்பாவும் நினைச்சிருப்பார். இது தலைமுறை தலைமுறையா, காலாகாலமா எல்லா வீட்லயும் ஏற்படறதுதான். சொந்தத்துல கட்டிக்கொடுத்தாக்கூட இந்தப் பயம் வரத்தான் செய்யுது. அப்போ அன்னியத்துல கட்டிக்கொடுக்கும் போது வராத இருக்குமா. கன்றைப் பிடுங்கி வேற இடத்துல குழியில போட்டு நடறோம். மரமா வர வரைக்கும் மனசுக்குள்ள பயம் இருக்கத்தான் செய்யும். அதுக்காக வளரவேண்டிய இடம் மாத்தாத வச்சிட முடியுமா? மாத்தினாதான் முடியும். மாத்தினா தான் வளர்ச்சி. குழி வெட்டறதுதான் கல்யாணம். உள்ளுக்குள்ள உரமும் சாணமும் போட்டு அதை ரொப்பறதுதான் சீர்வரிசை. கொண்டு போய் நட்டு, மண்ணு போட்டு மூடி கெட்டிப்படுத்தறதுதான் உறவு. அப்பப்போ தண்ணி ஊத்தி அது பச்சுனு இலை பிடிக்கறவரைக்கும் பாதுகாப்பா இருக்கிறதுதான் போக்குவரத்து. மரியாதை.

ஆனா, அது இலை பிடிச்ச கிளை விட்டுடுச்சன்னு வச்சுக்கோங்க. நீங்க அதை மறிக்கப் போறதில்லை. அது உங்களை மறிக்கப் போறதில்லை. அது தான் பாட்டுக்கு வளரப்போகுது. இதுதான் எல்லார் வீட்லயும் எல்லாப் பொண்களுக்கும் நடக்கற வித்தை.

பொண்ண பெத்தவரு தேவையில்லாத கோவமா இருக்காறோன்னு எனக்கு ஒரு பயம். அவரு முறுக்கிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கறத பார்த்தா உள்ளுக்குள்ள ஆத்திரம் பொங்குதோன்னு ஒரு எண்ணம் தோணுது. அப்படியிருக்க வேணாம். நான் ரெண்டு பொண்ணு பெத்து கல்யாணம் பண்ணவ, மகனோடயும், மகளோடயும் வாழறவ. எனக்கும் ரெண்டு தங்கச்சிங்க. அதுங்களும் நல்லபடியா இருக்கு. நான் சமையல்காரிதான். ஆயிரம் ரூபாய்க்கு வீட்டு வாசப்படி விட்டு இறங்கி இன்னொரு வீட்ல உட்கார்ந்து காய்கறி அரிஞ்சு குழம்பு செய்யறவதான். ஆனா என் புருஷன் மாசத்துக்கு ரெண்டு லெட்டர் போடுவாரு. முதல் ஞாயித்துக்கிழமை போன் செய்வாரு. எவ்ளோ சந்தோஷமா இருக்கும்.

மலேசியாவுல இருந்து மரம் வரும்.மரம் இறக்கறதுக்கு பத்து பேர் வருவாங்க. அவங்களாண்ட துணிமணி, சென்ட் பாட்டிலு, தலைவலி தைலம்னு எதுனா கொடுத்தனுப்புவாரு. எனக்கு மோதிரம்னா ரொம்ப இஷ்டம். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு மோதிரம் வாங்கிட்டு வருவாரு. எங்கிட்ட பதினாறு மோதிரம் இருக்குது. அழிச்சு வேற எதுனா செய்யலாமேன்னு என் மருமக சொல்லிச்சு. நான் செத்த பிறகு அழிச்சுக்கடி. நான் இருக்கற வரைக்கும் அதை நானே வச்சிக்கறேன். அது பொட்டியிலயே இருந்தாலும் இருக்குமே தவிர அழிச்சுடாத. ஏன்னா அது என் புருஷன் கொடுத்ததுன்னு சொன்னேன்.

நாப்பத்தொம்போது பேர் நிச்சயதார்த்தத்துக்கு வரதுன்றது எங்க அளவுல குறைவு. நூறுபேர் கூட வரதுண்டு. அதுக்கு பயந்துடாதீங்க. கமலக்கண்ணன் எவ்வளவா இருந்தாலும் கொடுத்துடுவான். நல்லபடியா செய்யுங்க. இலைக்கு அறுவது ரூபான்னா சரியான சாப்பாடு போட்டுடலாம். நிச்சயதார்த்தம் காலையிலயே வச்சுக்கோங்க.பதினோரு மணிக்கு மேல சோறு போட்டுருங்க. காலையில வந்தவுடனே எல்லாருக்கும் காபி கொடுத்துடுங்க."

அவள் சொல்லிவிட்டு உள்ளே போய் பூரணியின் கையைப் பிடித்துக்கொண்டு தலையைத் தடவினாள்.

"ரொம்ப அழகா இருக்கற. அதான் மயங்கிட்டான் எங்க புள்ள" என்று உரத்த குரலில் உற்சாகமாகச் சொன்னாள்.

சமையல் அறையைப் பார்த்தாள்.

"நல்லா வச்சுருக்கீங்க. நறுவிசா இருக்கு வீடு. இப்படித்தான் இருக்கணும் வீடுன்றதே."

பாராட்டிவிட்டுப் போனாள்.

அவள் போன பிறகு மனசுக்குள் நம்பிக்கையும், சந்தோஷமும் பெருகின.



## 20

"உங்க வீடும், என் வீடும் சேர்த்து நூறு பேர் வருவாங்களா. ஒரு இலைக்கு அறுவது ரூபான்னா, நூறு இலைக்கு ஆறாயிரம் ரூபா. பூமாலை, மேளதாளம், வாழைமரம், எங்க சார்புல பூரணிக்கு ஒரு பட்டுப்புடவை, உங்களுக்கு வேட்டி சட்டை, அம்மாவுக்கு ஒரு பட்டுப்புடவை. ஆக எல்லாத்துக்கும் சேர்த்து நான் பத்தாயிரம் ரூபா தரேன்.மேற்கொண்டு என்ன ஆச்சோ அதையும் கொடுத்துடறேன்."

நடுக்கூடத்தில் கமலக்கண்ணன் உட்கார்ந்து பேச அவனைச்சுற்றி சகலரும் அமர்ந்திருந்தார்கள்.இந்த முறை அவன் வருகை பூரணியின் வீட்டுக்குள் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

அவன் வரப்போகிறான் என்று தெரிந்தே பூரணியை அவனோடு பேசவைத்து அவனுக்கு என்ன டிபன் பிடிக்கும் என்று கேட்கவைத்து அவனுக்குப் பிடித்த வெங்காய ஊத்தப்பமும் மசாலா போட்ட வடைகறியும் செய்திருந்தார்கள். வந்தவுடனேயே கமலக்கண்ணன் பேசத்துவங்க "முதல்ல சாப்பாடு. அதுக்கப்புறம் பேச்சு" என்று பூரணி அவனை தடுத்து நிறுத்தி விட்டாள்.

அவள் தடுத்து நிறுத்தியது அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

அவன் மேசைக்கருகே வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

பூரணிதான் பரிமாறினாள்.

பூரணியின் இடுப்பு அழகையும், எடுப்பான மார்பகங்களையும் கழுத்து வளைவையும், தாடையையும் அவன் வைத்த கண் வாங்காமல் ரசித்தான்.

பெரியவர்கள் அதை கண்டும் காணாமலும் வேறு வேலையில் மூழ்குவது போல் நடித்தார்கள்.

அவன் பார்வை பூரணிக்குள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அடிவயிறு குழைந்தது. துடித்தது. இடுப்பில் பெரிய பிரளயங்

கள் ஏற்பட்டன. கண் சொருகிற்று. கன்னம் இறுகிற்று. காதுகள் சூடாகின.

"ஏய்... பூரணி சும்மாயிரு" உள்ளே பெரிய அதட்டல் போட்டாள். சட்டென்று சரிசெய்து கொண்டாள்.

"எதிர்வீட்டு மாமி வத்தக்குழம்பு பண்ணியிருக்காங்க. ஊத்தப்பத்துக்கு வத்தக்குழம்பு தொட்டுகிட்டு சாப்டிருக்கீங்களா பாருங்க."

அவள் ஒரு கிண்ணத்தில் கொண்டு வந்து தனியே வைத்தாள். அவன் எடுத்து ஊத்தப்பத்தின் மீது கவிழ்த்துக் கொண்டான்.

"அடிசக்கை... சாப்பாட்டு ராமன் போலிருக்கு."

மனசுக்குள் சந்தோஷப்பட்டாள்.

"விட்டா ஊத்தப்பத்தை பிசைஞ்சே சாப்பிட்டிருவீங்க போலிருக்கே."

ஒருவார்த்தை காதோரம் சொல்லிவிட்டு வந்தாள்.

அடுத்த முறை ஏதோ கொண்டு வரும்போது உன் கூட தனியா பேசணும். அவள் காதோரம் சொன்னான்.

சீனுவாசய்யருக்குத் தெரிந்துவிட்டது. எலேய்... ரகசியம் பேசறியா, நானும் உன்னை மாதிரி இளசா இருந்துட்டு வந்தவன் தாண்டா. பேசு...பேசு... எங்க வீட்டுப் பொண்ண நல்லபடியா வச்சுகிட்டா எங்களுக்கு அது போதும்."

"அப்பா... அவரு தனியா பேசணும்னு சொன்னாரு. நான் சரின்னு சொல்லிட்டேன்."

பூரணி அப்பாவை சமையலறைக்கு அழைத்துச் சொன்னாள்.

"ஐயருகிட்ட ஒரு வார்த்தை சொல்லிடு."

பூரணியின் அம்மா அவசரப்படுத்தினாள்.

"ஐயருக்கு அவர் கேட்டது தெரிஞ்சுபோயிருச்சுப்போல. என்னை ஒரு மாதிரியா குறும்பா பார்க்காரு."

"அவரை ஒரு வார்த்தை கேட்டுடேன்."



அம்மா சொன்னாள்.

"நான் கேட்கறதவிட அப்பா போய் கேட்கட்டும். நான் போய் தனியா பேசலாமா வேணாமான்னு."

"பேசட்டும் விடு. இங்க பின்னாடி கொல்லைப் புறத்துலயே போய் உட்கார்ந்துகட்டும். அரைமணி இல்லை முக்கால் மணி நேரம் பேசட்டும். அதுல ஒண்ணும் தப்பில்லை."

"அந்த பாஸ்போர்ட் விஷயம் கேட்க வேணாமா."

"நாமா ஆரம்பிக்க வேணாம். அவனா ஏதாவது சொல்றானான்னு பார்ப்போம். அப்படிச் சொல்லலைன்னா வெளியபோற போது என்னப்பா எந்த ஊர் போகப் போறேன்னு கேள்வி கேட்போம்."

கையை அலம்பிக் கொள்ள கொல்லைப்புறம் அழைத்துப் போய்விட்டு அப்படியே மேடைமீது பூரணி அவனை உட்கார வைத்தாள்.

மனம் துள்ளியது. உடம்பு முழுவதும் ஆனந்தம் பரவியது. மனதில் சந்தோஷம் வழிந்தது.

"அப்போ எனக்கு புருஷன் நீதானா."

அவனைத் தொடவேண்டும் போல உடம்பும், மனசும் பரபரத்தன. கைகளை கோர்த்துக் கொள்ள வேண்டும் போல் ஒரு எண்ணம் எழுந்தது. நெருங்கி உட்கார்ந்து கொண்டு சொல்லு என்னைப்பத்தி சொல்லு. உன்னைப் பத்தி சொல்லு என்று நிறைய அவன் பேசிக் கேட்க வேண்டுமென்ற ஆசை வந்தது. ஆனால், எகிறுகின்ற மனதை அவன் கட்டி அடக்கினாள்.

"அசிங்கமா நினைச்சுக்கப்போறாங்க. அலையுதுன்னு சொல்லிடப்போறாங்க சும்மாயிரு. ஏற்கனவே அந்த வீடு வம்பான வீடு.நீ ஏதாவது உளறி அவரு அங்கபோய் சொல்லி உள்ள போற போதே கெட்டபேரோட போவாத. உட்கார் அமைதியா உட்கார். கம்பீரமா நடந்துக்கோ. கால்மேல கால்போட்டு உட்கார்ந்து கம்பீரமா இங்கிலீஷ்ல பேசு. எனிதிங் யூ வாண்ட் டூ டாக் அப்படின்னு கேள்வி கேளு. ஆனா, அதுவும் மரியாதையா

இருக்காது. தாலிகட்டிக்கப்போற புருஷனைப் போய் அவமரி யாதையா நடத்தக்கூடாது. அவன் முன்னாடி கால்மேல கால் போட்டு உட்காரக்கூடாது. பள்ளிக்கூடத்து டீச்சர் மாதிரி பேசக் கூடாது."

"பின்ன, எப்படித்தாண்டி நடந்துக்கணும்."

"கொஞ்சம் ஆசைப்படறா மாதிரியும், ரொம்ப நாணப்படறா மாதிரியும் நடந்துக்கணும்."

"எத்தனை ஆசை. எத்தனை நாணம்."

"ஒரு நாப்பது ஆசை. அறுபது நாணம்னு வச்சுக்கேயேன்."

உள்ளே அவள் வேகமாகக் கணக்கு போட்டாள்.

"ஏய்... நீ ரொம்ப அழகா இருக்கே."

கமலக்கண்ணன் கரும்பு வில்லை வளைத்து முதல் மலர் பாணத்தை அவள் மீது எய்தான்.

அந்த அம்பு அவளை அடித்துச் சாய்த்தது. குப்பென்று முகம் சிவந்தது. உதடுகள் துடித்தன. கண்கள் மருண்டன. விரல்கள் பின்னிக்கொண்டன.

"போங்க... நான் ஒன்னும் அவ்வளவு அழகு இல்லை."

"நிஜமா பூரணி. நீ ரொம்ப அழகா இருக்கே."

"என்னா இது திடீர்னு புதுசா சொல்றீங்க"

"இல்லை பூரணி. உன்னை பொண் பார்க்க வந்தபோதும் சரியா பார்க்கலை. அப்புறம் கோயிலுக்கு வந்தபோதும் சரியா பார்க்கலை. ஒரு பயத்தோட பார்த்தேன். இப்போதான் நல்லா முழுக்க இடுப்பு, மார், கை, கால்..."

"ஐயோ... கடவுளே சும்மா இருங்களேன்."

அவள் நாணத்தில் முகம் பொத்திக் கொண்டாள்.

"உள்ள இருக்கறத வெளிப்படையா பேசறேன். மனசுக் குள்ள என்ன விதமாக ஒரு பெண் வேணும்னு நினைச்சுக் கிட்டிருந்தேனோ அதே விதமா நீ எதிர்க்க வந்து நிக்கற பூரணி. ரொம்ப வெட்கப்படாம அதே சமயத்துல வெட்கமே இல்லா



தன்னு இல்லாம ஒரு அழகான கலவையா இருக்க. எனக்கு அது ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு."

"அடியே... ராஜாத்தி நான் சொன்னதை கேட்டியா கரெக்டா ஒர்க் அவுட் ஆவுது பார்."

உள்ளுக்குள் உள்ள இன்னொரு பூரணி கைகொட்டி சந்தோஷப்பட்டாள்.

"போதும்" என்று பொதுவாகச் சொன்னாள்.

"என்னை பிடிச்சிருக்கா பூரணி."

"ரொம்ப பிடிச்சிருக்குங்க."

"என்னா பிடிச்சிருக்கு."

"வெளிப்படையா பேசறீங்க. அதான் முதல்ல பிடிச்சிருக்கு. நீங்க என்ன நினைச்சுப்பீங்களோன்னு நான் பயப்படவேண்டிய அவசியமே இல்லை.உங்களுக்கு இது வேணும். இது பிடிக்கும் இது பிடிக்காதுன்னு தெரிஞ்சுட்டா அது மாதிரி நடந்துக்கலா மில்லை."

"அப்படியொன்னும் அவசியமில்லை."

"என்னா அவசியமில்லைன்னு சொல்றீங்க."

"உனக்கு என்ன பிடிக்குதோ அதைப் பண்ணலாம். எனக்கு என்ன பிடிக்குதோ அதை நான் பண்ணுவேன்."

"ஐயோ... இப்படி மூலைக்கொன்னா பண்ணிக்கிட்டு போனா எப்படி குடித்தனம் பண்றது"

"உலகத்துல செய்யக் கூடாதுன்னு சொல்றதை செய்யாம இருந்துட்டாப் போதும். நல்லா குடித்தனம் பண்ணலாம்."

"உலகத்துல செய்யக் கூடாதுன்னு எதைச் சொல்றாங்க."

"குடிக்கக்கூடாது. இன்னொருத்தன் பொண்டாட்டிய பார்க்கக்கூடாது. பொய் சொல்லக் கூடாது. திருடக்கூடாது. லாஹிரி வஸ்துக்களை உபயோகப்படுத்தக் கூடாது."

"நீங்க எதுவும் செய்ய மாட்டீங்களா."

"மாட்டேன் பூரணி."

"அப்போ உங்ககிட்ட இருக்கற கெட்ட பழக்கம் என்னா..."

"கெட்ட பழக்கம்னா ஒன்னேயொன்னு சொல்லலாம். நான் ஒரு தீனிப்பண்டாரம். நல்லா சாப்பிடுவேன். எனக்கு நாலு ஊத்தப்பம்தான் போட்ட. அல்வாவும் கொஞ்சம் தான் கொடுத்தீங்க. நான் இந்த மாதிரி டபுள் பங்கு சாப்பிடுவேன். சரி. எப்படிடா கேட்கறதுன்னு வெட்கப்பட்டு விட்டுட்டேன். வீட்டுக்கு கிளம்பறபோது கொஞ்சம் அல்வா கொடு."

"இல்லை, இப்பவே தரேன்."

"இப்பவே தந்தா உங்க வீட்ல என்னைப்பத்தி அசிங்கமா நினைப்பாங்க. நான் ரகசியமா, உங்கிட்ட சொல்றதை உள்ள போய் அம்மாகிட்ட சொல்லக்கூடாது. நீ சாப்பிடறா மாதிரி அல்வாவை வாங்கிகிட்டு வந்து எனக்கு கொடுக்கணுமே தவிர, ஐயோ அவருக்கு வேணும்.நிறைய எடைக்கு எடை அல்வா கேட்கறார்னு சொல்லிடாதே."

பூரணி வாய்விட்டு தங்கச் சோழிகளை இரைத்தது போல் சிரித்தாள்.

அவன் மனம் பிரகாசமாயிற்று.

"இன்னொரு ரெக்வஸ்ட்."

"என்னா."

பூரணி ஆவலாகக் கேட்டாள்.

"எழுந்து நில்லேன்."

"எதுக்கு."

"உன்னை இன்னொரு தடவை உத்துப்பார்க்கணும்."

"நோ... முடியாது."

"ஏய்... நீ எனக்குத்தானே நான் பார்த்தா என்ன."

"நீங்க ரொம்ப மோசம்."

"நான் மோசமாயிடக் கூடாதுன்னுதான் அழகான பொண்ணா நல்ல பொண்ணா பார்த்துப்பார்த்து தேர்ந்தெடுக்கறேன். கண்ணுக்கு நிறைஞ்ச பொண்டாட்டி மனசுக்கு நிறைஞ்ச மனைவி. இது கிடைச்சிட்டா ஒரு ஆம்பளை எந்தப் பக்கமும் திரும்பி



பார்க்க வேண்டிய அவசியமில்லை.சாகற வரைக்கும் அவளையே பார்த்துக் கிட்டிருக்கலாம்."

"உண்மையாவா."

"ஆமாம். கண்ணுக்கு தெரிஞ்ச வரைக்கும், உத்து உத்து பார்க்கற போது மனைவிகிட்ட முழுசா அன்பையும், அரவணைப்பையும் கிடைக்காத ஆம்பளை நாலாபக்கமும் அலையறான். நல்ல மனைவி இருந்தும் அலையறவங்களும் உண்டு. அது இருக்கும் நூத்துக்கு பத்து. ஆனா அதிகம் பேரு எங்கேயோ மனைவி நிறைவா இல்லைங்கற போதுதான் கண்ணை வேற பக்கம் மேய விடுறான். அப்படி ஒரு தப்பு நான் பண்ணவே கூடாது. அது எனக்கு நானே செய்யற அவமரியாதை. துரோகம். எழுந்து நில்லேன்."

அவள் எழுந்து நின்றாள்.

"ஒரு ரவுண்ட் சுத்தேன்."

அவள் சுற்றினாள்.

"அப்பா... கொடி மாதிரியே இருக்க, மெலிசா திடமா அழகா. அழகு நல்லாயிருக்கு. உனக்கு படிக்கறது பிடிக்குமா."

"நான் நிறைய கதை படிப்பேன்."

"நான் நிறைய படிக்கமாட்டேன். எது கிடைச்சதோ அதை படிப்பேன்."

பூரணி பதில் சொன்னாள்.

"நான் நல்லா சாப்பிடுவேன்."

"உங்களுக்கு விதம் விதமா சமைச்சுபோட எனக்கு நல்லா தெரியும். எங்க வீட்ல பாதிநேரம் நான்தான் சமைக்கறது."

"பாடுவியா."

"சுமாரா பாடுவேன்."

"நானும் சுமாராதான் பாடுவேன்" கமலக்கண்ணன் சொன்னான்.

"ஆனா பாடிகிட்டே இருக்கறது பிடிக்கும். அதுவும் பழைய பாட்டெல்லாம் பாடிக்கிட்டே இருக்கறது பிடிக்கும்."

"உனக்கு பிடிச்ச பாட்டு என்ன."

*"ஞாயிறு என்பது கண்ணாக..."*

பூரணி துள்ளலுடன் பதில் சொன்னாள்.

"எனக்கு கல்யாணத் தேன்நிலா பிடிக்கும்."

"ஐயோ... சூப்பர் பாட்டு இல்ல"

பூரணி அவனுடைய ரசிப்புக்கு எதிரொலித்தாள்.

*"தென்பாண்டிக் கூடலா தேவாரப்பாடலா*
*தீராத ஊடலா*
*தேன்சிந்தும் கூடலா..."*

அவன் பாடத்துவங்கினான். அவள் மெய்மறந்து கேட்டாள்.

"நல்லா பாடறீங்க. சுமாராத்தான் பாடுவேன்னு சொன்னீங்க."

*"சங்கீதம் பாட்டிலா*
*நீ பேசும் பேச்சிலா..."*

அவன் தொடர்ந்து பாட அவள் கிறங்கிப் போனாள்.

## 21

"நீ பாடவேமாட்டேன்றியே."

கமலக்கண்ணன் பூரணியைப் பார்த்துக் கேட்டான்.

"நான் பாடணும்னுதான் நினைச்சேன்.இப்போ பாடறதுக்கு பயமா இருக்கு."

"ஏன்?"

"நீங்க நல்லா பாடறீங்க. நான் சுமாராத்தான் பாடுவேன். நிஜமாவே சுமாராத்தான் பாடுவேன்.உங்க பாட்டுக்கு முன்னாடி என்னோடது எடுபடாது."

"பரவாயில்லை பாடு."



"எனக்குப் பிடிச்ச ஒரு பாட்டு இருக்கு. வீரபாண்டிய கட்டபொம்மன்ல வரும்.

*சிங்காரக் கண்ணே*
*உன் தேனூறும் சொல்லாலே*
*தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி..."*

அவள் மெல்ல குரல் எடுத்து விரல்களால் தாளம் போட்டுப் பாடினாள்.

அவன் அழகாக ரசித்தான்.

"பாடத்தெரிஞ்சிருக்கு அது பெரிய விஷயம்."

"நல்லா பாடலைன்னு சொல்றீங்களா?"

"பாடிப் பழகலைன்னு சொல்றேன்."

"கொஞ்சம் பயம்."

"பாடறதுக்கா?"

அவன் வியப்போடு கேட்டான்.

"ஆமாம். பாட்டு கூத்தெல்லாம் வேணாம். சமைக்க கத்துக்க அப்படின்னு சொல்வாங்க அம்மா. அதனாலயே நான் பாடறதை மெல்ல மெல்ல விட்டுட்டேன்."

"நான் ஒரு ஏடாகூடமான உத்தியோகத்துல இருக்கேன். நேரம் கிடைச்சதுன்னு வச்சுக்கோ, நான் உட்கார்ந்து கர்நாடக சங்கீதமே கத்துப்பேன்.ரெண்டு மூணு கர்நாடக சங்கீதமும் தெரியும். பாட்டுன்னா அவ்வளவு இஷ்டம்."

அவன் உற்சாகமாகப் பேசினான்.

"ஒரு உண்மைய சொல்லட்டுங்களா, நானும் கத்துகிட்டேன்.

*ஸஸ நிநி நிநி நிநி பப மம"*

அவன் சரளி வரிசை பாடிக் காண்பித்தான்.

*"கம பத நிந பம கம பக மகரிஸ"*

அவன் சரளி வரிசையை முடித்தான்.

இரண்டு பேரும் சட்டென்று கைகுலுக்கிக் கொண்டார்கள், சந்தோஷமானார்கள்.

தொலைவிலிருந்து புருஷோத்தமரும், அவர் மனைவியும் அவர்கள் சந்தோஷத்தை மெல்லிய கவலையோடும் அதீத சந்தோஷத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உனக்கு பிடிச்ச கலர் என்ன?"

"பிடிச்ச கலரெல்லாம் சொன்னா அம்மா திட்டுவாங்க. எனக்கு பிடிச்ச கலர் வெள்ளை. வெள்ளையில பூப்போட்ட புடவைன்னா எனக்கு உசிரு. ஆறேழு வச்சிருக்கேன். ஆபீஸ் போகும் போதெல்லாம் அந்த மாதிரி புடவை தான் கட்டுவேன். என்னாத்துக்குடி வெள்ளை கட்டற அப்படின்னு அம்மா திட்டுவாங்க. நீலம், பச்சை, மஞ்சளெல்லாம் எனக்கு அவ்வளோ பிடிக்கறதில்ல."

"உனக்கு ரெட் நல்லாயிருக்கும்."

"ரெட்டும் பிடிக்கும்."

அவள் அவன் அருகில் உட்கார்ந்து அவனையே பார்த்தபடி பேசினாள்.

ஐயோ டக்கரா பேசறாரு. இப்படியே பேசிக்கிட்டிருந்தா போதும். நான் எந்த பிரச்சனை வந்தாலும் சமாளிச்சுடுவேன்.

உள்ளுக்குள் வேறொரு குரல் ஓடிற்று.

ஆனால் பாட்டும் உடுப்பும் மட்டும் போதுமா. காசு வேண்டாமா. உன் சம்பளத்தில் குடித்தனம் நடத்த முடியுமா. இல்லை, மாதாமாதம் அப்பாவிடம் நான் கையேந்த வேண்டுமா. இன்னும் நீ நிறைய சம்பாதிக்கிற உத்தியோகத்தில் இருக்கக்கூடாதா. காசு பைத்தியம் பிடிக்காததுனாலதான் இப்படி உட்கார்ந்து பாட்டு பாடிக்கொண்டு ஊத்தப்பம் சாப்பிட்டுக் கொண்டு ஜாலியாக இருக்கிறாயோ, நீ இன்னும் மும்முரமான ஆள் இல்லையோ. கத்தி எடுத்து யுத்தத்திற்கு போகாமல் தளுக்கு சுந்தரனாய் இருக்கிறாயே என்று கேள்வியும் உள்ளுக்குள் எழுந்தது.

என்னப்பன் அல்லவா.
என் தாயும் அல்லவா.



*பொன்னப்பன் அல்லவா.*
*பொன்னம்பலத்தவா...*

என்று பழைய பாட்டை அவன் கமகத்தோடு பாடிக் காட்டினான்.

"நல்லா பாடறீங்களே."

அப்பா கூடத்திலிருந்து நகர்ந்து வந்து உட்கார்ந்தார்.

போதும். முடித்துக் கொள்ளுங்கள் என்பது போல் அவர் வருகை இருந்தது.

அவன் துள்ளி எழுந்தான்.

"ரொம்ப சந்தோஷம். எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. வாழ்க்கையில மறக்கமுடியாத நேரம் இது. பூரணிய நான் நல்லா வச்சுக்குவேன். கவலைப்படாதீங்க."

"எங்களுக்கும் அந்த நம்பிக்கை இருக்கு. நீங்க பேசிப் பழகறது, வெள்ளையா சிரிக்கறதையெல்லாம் பார்த்த பிறகு எங்க மனசுலயும் ஒரு நிம்மதி சந்தோஷம் வந்துடுச்சு."

அப்பா பதில் சொன்னார்.

"நீங்க பாஸ்போர்ட் வாங்கப் போயிருக்கறதா, வெளியூருக்கு வேலைக்கு ட்ரை பண்றதா உங்க ஆபீஸ்க்கு போன் பண்ணும் போது சொன்னாங்க. நிஜம்தானா?" சீனுவாச ஐயர் கேட்டார். வீடு திகைத்து அவனைப் பார்த்தது.

"பாஸ்போர்ட் எங்கிட்ட ஏற்கனவே இருக்கு. வேலையை காமிச்சு ஒரு விண்ணப்பம் போட்டேன்."

"எங்கே?"

"யுனைடெட் அராப் எமிரேட்ஸ் துபாய்க்கு."

"என்ன வேலை?"

"இதே வேலைதான். ஆயில் பைப் ரிப்பேர் பண்றது. ஆயில் பைப் கனெக்ஷன் கொடுக்கறதுதான்."

"எப்போ போவீங்க?"

"தெரியலை. போனாலும் போவேன். போகாட்டியும் இல்லை. எங்க ஆயில் கம்பெனில ஒரு இன்ஜினியர் இருந்தாரு.

அவருக்கு என் மேல ரொம்ப பிரியம். அவரு அஞ்சு வருஷம் முன்னாடி யுனைடெட் அராப் எமிரேட்ஸுக்கு போய் நல்லா செட்டிலாயிட்டார். பெரிய ஆபீஸராயிட்டார். அவரு எங்க ஆபீஸுக்கு போன் பண்ணி ஒரு பத்து பேர் பேரைக் கொடுத்து இங்க எல்லாரையும் அவங்களுடைய தகுதியை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்க அப்படின்னு சொல்லியிருக்காரு. அந்த தகுதியை எழுதிக் கொடுத்து வேலைக்கு உண்டான விண்ணப்பத்தையும் பூர்த்தி செய்து அவங்க சொந்தக்காரங்க கிட்ட கொண்டு போய் கொடுத்துட்டு வந்திருக்கோம். அதுக்குத்தான் நான் லீவு போட்டேன்.

அவர் என்னைக் கூப்பிடுவாரா, கூப்பிடமாட்டாரா ஒண்ணும் தெரியலை. ஆயில் ப்ளம்பர் எங்கக்கிட்ட இருவது இருவத்தி மூணுபேர் உண்டு. ஆனா அதுல பத்து பேர் பெயர் எழுதியிருக்காரு. அதுல முதல் பெயர் என் பெயராத்தான் இருக்கு."

"ஒரு வேளை கிடைச்சா போய்டுவீங்களா?"

"கிடைக்கட்டும் பார்க்கலாம்."

"போயிட்டு வாங்க. அதான் நல்லாயிருக்கும்.இங்கத்த விட சம்பளம் ஜாஸ்தியில்லை."

"இங்க ஆறாயிரம் ரூபா சம்பளம். அங்க அறுபத்தஞ்சாயிரம் ரூபா சம்பளம். அது தவிர தங்குறதுக்கு இடம்.ரெண்டு வேளை சாப்பாடு ப்ரீ. கூலிங்க்ளாஸ்,யூனிஃபார்ம், ஷு, தொப்பி அதே மாதிரி தரான். பீல்டு அலவன்ஸுன்னு ஒரு அஞ்சாயிரம் ரூபா தரான். என்ன கட்டெரிக்கற வெயில்ல, அம்பது டிகிரி வெயில்ல வேலை செய்ய வேண்டியிருக்கும். இதுக்கு பயந்தே எங்க ஆளுங்க யாரும் போகமாட்டாங்க."

"கிடைச்சா நீங்க போவீங்க இல்ல?"

"ஆமா, யாரு அறுவத்தஞ்சாயிரம் ரூபா சம்பளம் கொடுக்கறாங்க. சப்ஜாடா அப்படியே வீட்டுக்கு அனுப்பலாமே."

"லேடீஸை கூட்டிட்டுப் போக முடியாதா?"

ஆவலாக பூரணி கேட்டாள்.



"உடனே முடியாது. ஒரு வருஷம் கழிச்சு முடியும்னு நினைக்கறேன். ஆனா லேடீஸுக்கு ரொம்ப போர் அடிக்குமாம்."

"இது ரிசல்ட் எப்போ தெரியும்."

"தெரியலையே. என்ன ஐடியா வச்சிருக்காங்க. என்ன பண்ணப் போறாங்கன்னு புரியலையே. போன வருஷம் இதே மாதிரி ஒரு டிசம்பர் மாசம் போன் பண்ணி சொன்னாரு. நான் கூப்பிட்டா வருவியாடான்னு கேட்டாரு. நீங்க இருக்கற தைரியத்துல வருவேன்னேன். நான் சகலமும் பார்த்துக்கறேன். சரியான சம்பளம் வாங்கித் தரேன். ஆனா உன்னை மாதிரி உழைக்கற ஆள் வேணும் அப்படின்னாரு."

"நீங்க அந்த வேலையில கெட்டிக்காரரா?"

பூரணி ஆவலாகக் கேட்டாள்.

"அது கொஞ்சம் சிக்கலான வேலை. எதை திறக்கறது, எதை மூடறது. எதை மூடிட்டு எதை திறக்கறது அப்படின்னு பல கணக்கு உண்டு. தப்பா திறந்துட்டோம் நாப்பத்தஞ்சு அடி, அம்பது அடி உயரத்துக்கு ஆயில் அடிக்கும். ஒரு வினாடிக்கு பத்து கேலன் ஆயில் வெளிய வந்துடும். மூடறதுக்குள்ள போறும் போறும்னு ஆயிடும்.அதனால தப்பே பண்ணாத மூடறதும், திறக்கறதும் செய்யணும். ட்ராயிங் இருக்கு.அந்த டிராயிங்கை படிக்கத் தெரியணும். ஒரு நெருப்பு பிடிச்சதுன்னு வச்சுக்கோங்க டக்குன்னு அணைக்கத் தெரியணும். அந்த மாதிரி நிறைய சிக்கலான சமாச்சாரங்கள் இருக்கு"

"உயிருக்கு ஆபத்தான தொழிலா?"

பூரணியின் அம்மா கேட்டாள்.

"அதெல்லாம் இல்லீங்க.இங்கிருந்து சைதாப்பேட்டை போற போது உயிரோடதான் போவோமா. அதுல ஒரு ரிஸ்க் இருக்கு இல்ல. அந்த ரிஸ்க்குதான் அந்த வேலையிலயும் உண்டு."

"எதுவா இருந்தாலும் கல்யாணம் முடிச்சுட்டு போங்க."

"அப்படித்தான். கல்யாணம் முடிச்சுட்டுதான்" என்று அவன் சொன்னான்.

மெல்ல கூடம் தாண்டி வாசலுக்கு வந்தான்.

வெள்ளியாலான ஒரு குங்குமச் சிமிழை அவன் பூரணிக்கு பரிசளித்தான்.

பூரணி ஒரு கட்டம் போட்ட ஒரு சட்டையும், அந்த சட்டைப் பாக்கெட்டில் ஒரு மூடி வைக்கிற சீப்பும் கொடுத்தாள். சீப்பை சந்தோஷமாக பிரித்துப் பார்த்துவிட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு பையில் வைத்துக் கொண்டான்.

அந்த வீடு சிரித்தது.

"நிச்சயதார்த்தத்துல பார்ப்போம்."

அவன் கைகூப்பி விடைபெற்று மோட்டார் சைக்கிளில் போனான்.

எல்லோருக்கும் சந்தோஷமாகவும் இருந்தது. கவலையாக வும் இருந்தது.

சீனுவாசய்யர் ஹாலில் இருக்கிற அத்தனை சாமான்களை யும் இன்னொரு அறைக்கு மாற்றி பூட்டி விட்டு தலைகாணி, கம்பளங்களை வாடகைக்கு வாங்கி எல்லா பக்கமும் விரித்து விட்டு வாசலில் பெரிதாய் கோலம் எழுதி வாசற்படிக்கு மாலை போட்டு ஹாலிலுள்ள அத்தனை சுவாமிப் படங்களுக்கும் மல்லிகைச்சரம் தொங்கவிட்டு ஊதுவத்தியைக் கொளுத்தி கைகட்டி காத்திருந்தார்கள்.

சாப்பாட்டு விஷயங்கள் பூரணி வீட்டில் நடைபெறுவதாய் தீர்மானமாகி இருந்தது. பூரணி வீட்டுக் கொல்லைப்புறத்தில் தடுப்பு எழுப்பி கிச்சடியும் இட்லியும் தோசையும் தயாராகிக் கொண்டிருந்தன.

இரண்டு கார், ஒரு வேன், கித்தான் போட்டு மூடிய ஒரு மினி காய்கறி லாரி இவைகளிலிருந்து கமலக்கண்ணன் வீட்டார் கீழே இறங்கினார்கள். அறுவதுக்கும் மேற்பட்ட ஆட்கள் இறங்குவது சீனுவாசய்யருக்கு புரிந்து போயிற்று.

நிச்சயதார்த்த சமையலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருந்த வன் கெட்டிக்காரன்.வாசலில் வண்டிகள் வந்து நின்றவுடனே கேசரியை கிளறுவதை இன்னொருவரிடம் கொடுத்துவிட்டு பாம்பு மாதிரி ஓடி வந்தான். விலகி நின்று மடமடவென்று



எண்ணினான். அறுபத்து நான்கு பேர் தேறியது. இதைத்தவிர உள்ளூர்வாசிகள் பதினைந்து பேராவது இருப்பார்கள். எனவே எழுபத்தைந்திலிருந்து எண்பதுக்குள் என்பது நிச்சயம் என்று புரிந்தது. நூறு இலை என்று கணக்கு வைத்துக் கொண்டால் சரியாக இருக்குமென்று தோன்றியது.

சீனுவாசய்யர் வீட்டை சுற்றிக்கொண்டு போனான். கொல் லைக் கதவைத் தட்டி வேலைக்காரி திறந்ததும் உள்ளுக்குள் நுழைந்தான். சீனுவாசய்யரைத் தேடினான்.மெல்ல அருகே போய் நின்றான்.

"உம்ம கணக்கு சரியா வராதுங்களே.நூறு இலை எனக்குத் தெரிஞ்சு. தயார் பண்ணிடட்டுமா?"

"ஆமாம். புரியறது. ஜாஸ்திதான். எண்ணிக்கையைப் பத்தி கவலைப்படாதே. நல்லவிதமா டிபன் போடு."

"முதல்ல கேசரியையும் கிச்சடியையும் வச்சடறேன் டப்புனு வயிறு அடைச்சுடும். ஊத்தப்பம் அப்புறம் பார்த்துப்போம்."

"சரி... உனக்குத் தெரியாததா. பார்த்துப் பண்ணு. காசைப் பத்தி கவலைப்படாத. ருசியை குறைக்காத."

"அதெல்லாம் ஒரு குறையும் இருக்காது. கூட அரை கிலோ முந்திரிப்பருப்பு கேட்டிருக்கேன். பொடிசா வறுத்துப்போட்டா அந்த ருசிக்கே கூட கேசரி கேட்பாங்க. கேசரி இறங்கித்துனாலே போதும். வயிறு ரொம்பிடும். கிச்சடி அடுத்த படி இறங்கித் துன்னா இன்னும் கும்முனு ஆகும். சாப்பிட்டே ஆகணுங்கற திமிர்லதான் சாப்பிடவேண்டியிருக்குமே தவிர வயிறு கேட்காது."

மாப்பிள்ளை வீட்டார்கள் காரிலிருந்து தட்டு இறக்கினார் கள். மாலைக்கு மேல் தாங்காது என்பது போல கருப்புக் கோடு கள் விழுந்து விட்ட பூவன் பழம் ஆறேழு சீப்புகள். கமலாப்பழம் பத்து, சாத்துக்குடி பத்து, ஆப்பிள் ஆறு, அன்னாசி இரண்டு, பப்பாளி இரண்டு என்று பழங்களை அடுக்கினார்கள்.

"மலைவாழைப்பழம் வாங்கிண்டு வரக்கூடாதோ. இதென்ன மட்டரகமா பூவன்பழம்."

சீனுவாசய்யரின் மனைவி கமலா முணுமுணுத்தாள்.

எல்லோரும் உட்கார குடிப்பதற்கு சில்லென்ற தண்ணீரும், சாதாரண தண்ணீரும் வெந்நீரும் கேட்டுக்கேட்டு வழங்கப் பட்டன.

"கமலக்கண்ணன்னா எல்லாருக்கும் உயிர். நான் வரேன், நீ வரேன்னு போட்டி போட்டிகிட்டு வண்டியில ஏறிட்டாங்க. எங்களால ஒண்ணும் சொல்ல முடியலை."

கமலக்கண்ணனின் அம்மா மன்னிப்பு கேட்பது போல பேசினாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. லெட்டர் போட்டு வரவழைச்சுட்டாங்க."

சட்டென்று கமலக்கண்ணன் அப்பா பேசினார்.

சீனுவாசய்யர் அவரை அதிகம் பேசவிடவில்லை.

"எங்களதுலயும் அப்படித்தான் பண்ணுவோம். நிச்சயதார்த்தம்னா லெட்டர் போட்டு வரவழைச்சு நீங்களும் நிச்சயதார்த்தத்துக்கு வாங்கன்னு கூப்பிடுவோம். உறவுக்காரா இல்லாத எப்படி நிச்சயதார்த்தம் பண்றது" என்று நட்பாக கமலக்கண்ணனின் தாயாரைப் பார்த்து சிரித்தார்.

கமலக்கண்ணனின் அம்மா பதிலுக்கு சிரித்துவிட்டு திரும்ப தன் புருஷனை முறைத்தாள். பின்னால் உட்கார்ந்திருந்த மகளை திரும்பிப் பார்த்தாள். அம்மாவும் பெண்ணும் கிசுகிசுவென்று பேசிக் கொண்டார்கள்.

"நம்ம ஜாதி பெரிய மனுஷாளை வச்சு நிச்சயதார்த்தப் பத்திரிகை எழுதுறது நம்ம வழக்கம்."

"எங்களதுல வேற மாதிரிங்க. நிச்சயதார்த்த பத்திரிகை எழுதறதுக்கு கூட நாங்க ஐயரை கூப்பிடுவோம்."

"நாங்க கல்யாணத்துக்கே ஐயரை கூப்பிடறது இல்லையே."

கமலக்கண்ணனின் அக்கா பேசினாள்.

"ஐயரு இல்லாத நம்ம கல்யாணம் நடக்கவே நடக்காது. அக்னி மூட்டி மந்திரம் சொல்லி ஐயரு எடுத்துக் கொடுத்த பிறகுதான் தாலி கட்டறது."



"சரி. அப்படியே செய்துடலாம். அதுல ஒண்ணும் தப்பில்லை."

கமலக்கண்ணனின் அம்மா பெருந்தன்மையாக விட்டுக் கொடுப்பது போல் பேசினாள்.

நிச்சயதார்த்தத்திற்கு வந்த கூட்டம் ஹாலில் உட்கார்ந்து வளவளவென்று அலம்பல் பண்ணிக் கொண்டிருந்தது.

"எதுவாயிருந்தாலும் சட்டுபுட்டுனு முடிங்கோ. காலையில பன்னெண்டு மணிக்கு சாப்பிட்டது. நடுவுல ஒரு டீ கூட குடிக்கலை."

ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்த ஒரு நாற்பது வயது ஆள் உரக்கக் கத்தினான்.

கூட்டம் சிரித்தது.

சாப்பிடத்தான் வந்திருக்கிறோம் என்று அந்தக் கூட்டம் சொல்லாமல் சொன்னது.

"டேய்... சும்மா இருங்கடா. மூலைக்கு மூலை கூவிகிட்டு."

"ஏய்... இப்படி கத்தற வேலையெல்லாம் வச்சுக்காத. எனக்குப் பிடிக்காது."

மூலையிலிருந்து ஒரு வாலிபன் உரக்கக் கத்தினான்.

"வா... வான்னு கூட்டிகிட்டு வந்துட்டு அப்புறம் வந்து என்னா கத்தறது. அவரு என்னா சொன்னாரு. சீக்கிரம் சாப்பாடு போடுன்னாரு. போட்டா என்ன?"

"ஐயா... சாப்பாடு இல்லைங்க. டிபனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கோம்."

பூரணியின் அப்பா புருஷோத்தமர் மெல்லப் பேசினார்.

## 22

"ஏதோ ஒன்னு, டிபனோ சாப்பாடோ சீக்கிரம் சட்டுபுட்டுனு போடுங்க. அதுக்குத்தானே வந்திருக்கோம்."

நிச்சயதார்த்தத்திற்கு வந்த ஒரு பையன் அழுத்தம் திருத்தமாகப் பேசினான்.

"சரி... உங்க இஷ்டப்படியே நடத்துங்க. நீங்க யாரை வச்சு எழுதப் போறீங்க? கோயில்லேர்ந்து ஐயரு கூட்டியாந்திருக்கீங்களா?"

"கோவில் ஐயரு இல்ல. நம்ம சீனுவாசய்யருதான்."

"இவரு பொதுவான ஆளா இல்லையே. உங்க பக்கத்து ஆளாச்சே."

"பொதுவான ஆளுக்கு எங்க போறது. நீங்க கூட்டிட்டு வந்தா உங்க பக்கத்து ஆளு.நான் கூட்டிட்டு வந்தா எங்க பக்கத்து ஆளு. ரோட்ல போய் வாங்க வாங்கன்னு யாரையாவது கூட்டிட்டு வரமுடியுமா. அது நல்லாயிருக்காது இல்ல."

"எழுதட்டுமே. இவருதான் எழுதட்டுமே."

கமலக்கண்ணனின் அப்பா சொல்ல கமலக்கண்ணன் சற்று தொலைவிலுள்ள நாற்காலியில் அமர்ந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். மறுபடியும் கமலக்கண்ணனின் தாயார் தன் மகள்களோடு பேசினாள்.

"சரி... சீனுவாசய்யரே எழுதட்டும்" என்று சொன்னாள்.

சீனுவாசய்யர் பயத்தோடு தன் மனைவியைப் பார்த்தார்.

மனைவி மேலே கைகாண்பித்து எல்லாம் இறைவன் சித்தம் என்றாள்.

சீனுவாசய்யர் பின்பக்கம் போனார்.கைகால்களை கழுவிக் கொண்டார். முகம் துடைத்துக் கொண்டார். நெற்றிக்கு இட்டுக் கொண்டு பூஜை அறைக்குப் போய் கைகூப்பி தான் தினமும் அபிஷேகம் செய்யும் ஸ்படிக விநாயகரையும், பஞ்சலோக விநாயகரையும் பார்த்தார். விழுந்து வணங்கினார்.

அருகே வந்து நின்ற மனைவியிடம் "எனக்காக வேண்டிக்கோ கமலா" என்று அடிக்குரலில் முணுமுணுத்தார்.

"அந்தக் குழந்தை சௌக்கியமா இருக்கணும். அதுக்காகவும் வேண்டிக்கோ."



விருட்டென்று பூஜையறையிலிருந்து வெளியேறி எல்லாரையும் பிளந்து கொண்டுபோய் சபைக்கு நடுவே உட்கார்ந்து கொண்டார். வணங்கினார்.

"ஒவ்வொரு தொழிலுக்குத் தகுந்தா மாதிரி ஒவ்வொரு ஜாதி. ஒவ்வொரு இடத்திற்கு தகுந்தா மாதிரி பழக்க வழக்கம். சம்பிர தாயம் சடங்கு முக்கியமே இல்லை. சந்தோஷம் முக்கியம். அடுத்த சந்ததியின் வளர்ச்சி முக்கியம். இதுக்காகத்தான் கல யாணம். இதுக்காகத்தான் ஒழுங்கு நெறிமுறைகள். இதுக்காகத் தான் எல்லா சம்பிரதாயங்களும். உங்களுக்கு என்ன சம்பிரதா யம். இவருக்கென்ன சம்பிரதாயம்னு எனக்குத் தெரியாது. ஆனா, இந்தக் குழந்தேள் ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்னு பகவானை வேண்டிண்டு எனக்குத் தெரிஞ்ச சம்பிரதாயப்படி நான் இந்த நிச்சயதார்த்தத்தை நடத்தறேன்."

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்...

அவர் உரத்த குரலில் சொல்லி நெற்றியில் குட்டிக் கொண்டு இடது கையை வலது மடியில் வைத்து அதன் மீது வலது கையை வைத்து சங்கல்பம் செய்து கொண்டு பரமேஸ் வரனுடைய ப்ரீதிக்காக அவனை முன்னிறுத்தி இந்தக் காரியத்தை நான் செய்யத் துவங்குகிறேன் என்று சொல்லி இப்பொழுது ரிக் வேதம் சொல்லப் போகிறேன் என்று சொல்லி ரிக் வேதசாகை சிலது சொன்னார். இப்பொழுது விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்லப் போகிறேன் என்று சொல்லி விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலிருந்து பத்து வரிகள் சொன்னார். இப் பொழுது லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லப் போகிறேன் என்று சொல்லி லலிதா ஸஹஸ்ரநாமத்திலிருந்து சில வரிகள் சொன்னார்.

"முருகர் பத்தியும் பாடிடுங்கோ" என்று உரத்தக் குரலில் பின்னாலிருந்து குரல் வந்தது.

திருப்புகழ் பாட்டு ஒன்று பாடினார். சுற்றியிருந்தோர் மெல்ல அயர்சியாவது தெரிந்தது.

"இந்த ஊரில் இந்த குலத்தில் இன்னாருக்கு மகனாகப் பிறந்த நான், எனக்கும் என்னுடைய மனைவியான இன்னாருக்கும்

பிறந்த மகனான கமலக்கண்ணனை இன்னாருடைய மகளான இன்னாருக்கு இன்னாருடைய மனைவியின் மூலம் பிறந்த அவருடைய மகளுக்கு கன்னிகாதானம் ஏற்றுக்கொள்ள முடிவு செய்து இருபது சவரன் நகைகளோடு..."

"இருவத்தியொன்னா போட்டுக்கோங்கோ. சைபர் போடாதீங்க கடைசியில்" என்று கமலக்கண்ணனின் தமக்கை சொல்ல, நிறுத்தி புருஷோத்தமரைப் பார்த்தார். புருஷோத்தமர் பேசாமல் இருக்க "இருபத்தோரு சவரன் நகைகள் போட்டு வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் கொடுத்து நல்ல தினத்தில் சௌகரியப்பட்ட முகூர்த்தத்தில் சௌகரியப்பட்ட இடத்தில் நல்லவிதமாய் ஸ்ரீபுருஷோத்தமர் திருமணம் செய்து கொடுக்க நாங்கள் இந்த திருமணத்தை முன்னின்று நடத்தி வைப்பதாக உத்தரவாதம் எழுதித் தருகிறோம். அவர் சொன்ன சீரவரிசைகளுக்கு நாங்கள் சம்மதம் தெரிவிக்கிறோம்."

"சௌகரியப்பட்ட அப்படின்னு போட்டா போறுங்களா. எந்த தேதிக்குள்ள அப்படின்னு சொல்ல வேண்டாங்களா."

"எனக்குப் புரியலையே."

சீனுவாசய்யர் கேட்டார்.

"ஆறு மாசத்துக்குள்ள முடிக்கறேன்னு சொல்லணும்."

"என்னா புருஷோத்தமரே அப்படி சொல்லணுமா என்ன?" ஐயர் கேட்டார்.

"வேணாங்க. இப்படியே இருக்கட்டும். கல்யாணம் நடத்தறது நம்ம இஷ்டம்தான். அதனால் நமக்கு எப்போ சௌகரியமோ அப்போ நடத்தலாம். இவங்ககிட்ட தேதி கொடுத்துட்டு நாம திகைக்க முடியாது."

"எனக்கும் நீங்க எழுதியிருக்கறது சரியாப்படலையே. இன்ன தேதிக்குள்ள நாங்க கல்யாணம் முடிப்போம்னு சொல்லணுமே..."

வேறொருவர் பேசினார்.

"இதோ பாருங்க... கல்யாணத்துக்கு ஏத்துகிட்டிருக்கோம். முடிக்கறது முடியாதுன்றது இறைவனுடைய கட்டளை. சத்திரம்



கிடைக்கணும். இரண்டு பேருக்கும் சரியான நட்சத்திரமா வரணும்."

"இவரென்னா வீட்லயேவா பொண்ண வச்சகிட்டிருக்கப் போறாரு. சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொடுக்கறதுதானே புருஷோத்தமருக்கும் நல்லது. முன்னூத்தி எழுவத்தஞ்சு கிராம் விக்கற சவரன் நாளைக்கு கூடுதலா தான் ஆகுமே தவிர குறையாது. அரிசி, பருப்பு விலையெல்லாம் உயர்ந்துகிட்டே வருதே. எவ்வளவு சீக்கிரமா முடிக்கணுமோ அவ்வளவு சீக்கிரமா முடிக்கணும்னுதான் பார்ப்பாங்க. இதுல தேதி கொடுத்தோம்னா அது அவருக்கு சிக்கலா இருக்கும். அவரை சுதந்திரமா விடுங்க."

"என்னய்யா சொல்றீங்க"

கமலக்கண்ணன் அம்மா அப்பாவை பார்த்து கேட்க, "அவங்க சொல்றது நியாயம்தானே. அவங்க இஷ்டத்துக்கு கல்யாணம் பண்ணட்டும்."

"இன்ன தேதிலேர்ந்து இன்ன தேதிக்குள்ளன்னு ஒன்னு சொல்ல வேணாமா?" கமலக்கண்ணனின் தமக்கை உரத்துக் கேட்டாள்.

"சொல்ல வேண்டாம்."

பின்னாலிருந்து கமலக்கண்ணன் குரல் கொடுத்தான்.

எல்லோரும் திரும்பி அவனைப் பார்த்தார்கள். சுற்றியிருந்த உறவுக்கூட்டமும் கிசுகிசுவென்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

கமலக்கண்ணன் ஆசைப்பட்டு தான் இந்தக் கல்யாணம் நடக்கிறது என்பது போல சில பேச்சுகள் காதில் விழுந்தன.

"பையன் சாஞ்சுட்டான்ப்பா அந்தப் பக்கம். என்னா பண்ண முடியும் பெத்தவங்க" என்று ஒரு குரல் உரக்கவே பேசியது.

கமலக்கண்ணன் திரும்பி அவரைப் பார்த்து முறைத்தான்.

"ஓரளவுல நிறுத்திக்கோங்க" என்று விரல் நீட்டி அவரை எச்சரித்தான்.

அவர் விருட்டென்று எழுந்து வெளியே போனார்.

அங்கு ஒரு அமைதியற்ற ஒரு நிலைமை தோன்றியது.

"ஓரளவுல சொல்லமுடியும். இத்தனை தேதிக்குள்ளன்னு ஆனா அதை பேப்பர்ல கமிட் பண்ணிக்க வேணாம்னு தோணுது."

புருஷோத்தமர் அந்த நிலைமையை சமாளிப்பதற்காக உரத்த குரலில பேசினார்.

எல்லோரும் அவரை இப்பொழுது பார்த்தார்கள்.

"இன்னிலேர்ந்து ஆறு மாசத்துக்குள்ள திருமணம் முடிச்சுடணும்னுதான் நான் நினைக்கறேன். மூணாவது மாசமோ, நாலாவது மாசமோ குறைந்தபட்சம் அஞ்சாவது மாசமோ முடிச்சுடுவேன். ஆறுன்னு நான் கேட்கறது அதிகபட்சம். நான் எல்லா விதத்துலயும் தயாரா இருக்கேன். எங்க வீட்டுக்கு வந்து நான் வாங்கியிருக்கிற சீரவரிசையெல்லாம் கூட நீங்க பார்க்கலாம். கல்யாண சத்திரம் பேசணும்.சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணணும். இதைத்தவிர துணிமணி வாங்கறது இருக்கும். மத்தபடிக்கு நான் தயாராவே இருக்கேன்."

"அப்புறம் என்ன. அவர் சொல்றத பார்த்தா ஒரே மாசத்துல திருமணத்துக்கு தயாராயிடுவார் போலிருக்கே.இப்போ சத்திரம் நாமளே ஒன்னு பார்த்துக் கொடுத்தோம்னு வச்சுக்கோ டப்புனு வந்து முடிச்சுடப் போறாரு. என்னங்க சொல்றது."

"ஒரு மாசத்துக்குள்ளேயும் முடிக்கணும்னாலும் முடியுங்க."

புருஷோத்தமர் பேச அவரை கைஉயர்த்தி மெல்ல சீனுவாசய்யர் அடக்கினார்.

"அது அவருடைய ஆவல்ல சொல்றாரு. விருப்பத்தை சொல்றாரு. ஒரு தகப்பன் பெண்ணை பெற்றவர் அப்படித்தான் பேசுவார். சீக்கிரம்தான் பொண்ணு கல்யாணம் முடியணு மேன்னுதான் கவலையோட இருப்பார். ஆனால், கல்யாணம்றது ஆயிரம் காலத்துப் பயிர். இன்னும் நல்லபடியா யோசனை பண்ணி வரவங்களை சரியா உபசரிக்கணும்னா கட்டுக்கோப்பா எல்லாருக்கும் ஒரு அவகாசம் கொடுத்து வரவழைக்கணும். அவரு ஜனங்களெல்லாம் வரவேணாமா. நிச்சயதார்த்தத்துக்கே இன்னும் நல்லா ஏற்பாடு செய்திருக்கணும். கல்யாணம் போது



இன்னும் நிறைய செய்யவேணாமா. அதனால ஒரு மாசம்னு சொல்றதெல்லாம் சும்மா பேச்சு. முதல்ல சொன்னா மாதிரி மூணு மாசத்துலேர்ந்து நாலு மாசம். அதிகபட்சம் போனா ஆறு மாசம். அதுக்குள்ள கல்யாணம் முடிச்சுடுவாரு. இதை எழுத மாட்டோம். வாய் வார்த்தையா ஏத்துக்கறோம்" என்று சீனுவாசய்யர் உரத்துச் சொல்ல சரி சரி என்று எல்லோரும் சொன்னார்கள்.

பசியெடுத்த கும்பல் வேகமாகப் போவது பார்த்து கமலக் கண்ணன் அம்மா முறைத்தாள். திரும்பி மகளைப் பார்த்தாள்.

"அப்பவே சொன்னேன். எல்லாரையும் கூட்டியாராத. தலைக்கு தலைக்கு பேசும்னு."

"அதான் ஒத்துக்கறாங்களேமா. அப்புறம் என்ன. கையெழுத் துப் போடுங்க. எல்லாரும் வெத்தலைப் பாக்கு மாத்திக்கோங்க. ஏங்க நாதஸ்வரம் ஒன்னும் ஏற்பாடு பண்ணலையா?"

"இல்லீங்க. அந்த வழக்கம் கிடையாது. இருந்தாலும் டேப்ரிகார்டர் கூட வச்சிருக்கோம்."

சட்டென்று கைகாட்ட கமலத்தம்மாள் டேப்ரிகார்டர் போட்டாள்.

கெட்டிமேளம் கொட்டியது.

பிள்ளையும் தகப்பனும், தாயும் மூத்த மாப்பிள்ளையும் கையெழுத்துப் போட புருஷோத்தமரும் அவர் மனைவியும் சீனு வாசய்யரும் கையெழுத்துப் போட்டார்கள். வெற்றிலைப்பாக்கு மாற்றிக் கொண்டார்கள்.

பொண்ணுக்கு சீராக புடவையும் ரவிக்கையும் எங்க பக்கத்து நகையா மூணு சவரன்ல ஒரு மல்லிகை மொக்கு நெக்லஸும் கொடுத்திருக்கோம் என்று தட்டில் நகையும் புடவையும் வைத் துக் கொடுக்க மாப்பிள்ளைக்கு அவர்கள் மோதிரமும் வாட்ச்சும் போட்டார்கள்.

"மோதிரம் என்னா கையில கொடுத்துட்டீங்கோ. பொண்ண விட்டு போடவைங்கோ."

"அப்படி வழக்கம் இல்லீங்களே."

"அட... பெரிய வழக்கம். இப்போ நடந்ததெல்லாம் நம்ம வழக்கமா. ஏதோ ஐயருங்க வீட்டு கல்யாணம் போல இருக்கு. அதையும் கொண்டு வந்து செய்திருங்களேன்" என்று ஒருவர் சொல்ல, மெல்ல அடியெடுத்து பூரணி வெளியே வந்தாள்.

பெரிய கரைபோட்ட பட்டுப் புடவையில் தேவதை போல இருந்தாள்.மெல்ல நடந்து வந்து சீனுவாசய்யர் கொடுத்த மோதிரத்தை வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டு கமலக் கண்ணனின் அருகே நெருங்கி அவன் நீட்டிய இடது கையை பற்றி மெல்ல மோதிரத்தை ஆட்காட்டி விரலில் போட்டாள். நிமிர்ந்து பார்த்தாள். விழுந்து வணங்கினாள். சுற்றி வந்து சபைக்கு மறுபடியும் நமஸ்காரம் செய்தாள். உள்ளே போனாள். பெட்டியிலிருந்து வாட்ச் எடுத்து அதையும் தன் கையில் கமலக்கண்ணன் கட்டிக்கொண்டான். பழைய வாட்ச்சை எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். கதவிடுக்கி லிருந்து பூரணி கவனிப்பதை பார்த்து மெல்ல சிரித்தான். பக்கத்திலிருந்த பன்னிரெண்டு வயது அக்காள் மகளை அழைத்து மல்லிமொக்கு மாலை நெக்லஸ் நான்தான் போட்டு விடுவேன்னு பூரணிகிட்ட சொல்லு என்று சொல்ல அந்தப் பெண் ஓடிப்போய் சொல்லிற்று.

"அது இப்போ அவர் போடவேணாம். தாலி கட்டி முடிச்ச பிறகு நானே அவர்கிட்ட கொண்டு வந்து கொடுக்கறேன். அப்போ அவர் போட்டு விடட்டும்" என்று அந்தக் குழந்தை யிடம் பூரணி சொல்லி அனுப்பினாள். அந்தக் குழந்தை வந்து இங்கே சொல்ல அவன் சிரித்தான். சரியென்று தலையசைத் தான். எல்லோரும் எழுந்திருந்து எதிர்ப்பக்கம் போனார்கள்.

பொழிச்சலூர் இளைஞர்கள் சீனுவாசய்யர் வீட்டுக்கு ஓடிவந்தார்கள்.

"இன்னிக்கு பூரணிக்கு நிச்சயதார்த்தமாமே."

"ஆமாப்பா... என்ன சமாச்சாரம்?"

"யாரோ ஒருத்தர் இன்னிக்கு சர்க்கரைப் பொங்கல் நைவேத் தியம் பண்ணாரு. ஒரு அடுக்கு சர்க்கரைப் பொங்கல் இருக்கு. அதை வரவங்களுக்கு போட்டுடலாமே."



"கேசரி போட்ருக்கோமே."

"இதை பிரசாதமா கொடுக்கலாமே" ஆர்வமாக கேட்டார்கள்.

"கொடுங்கப்பா."

பொழிச்சலூர் இளைஞர்கள் வேகமாக கோயிலுக்குள் ஓடினார்கள். அடுக்குகள் எடுத்து வந்தார்கள். விபூதி தட்டை யும் குங்குமத் தட்டையும் இருவர் ஏந்திக்கொள்ள இலைக்கு எதிரே உட்கார்ந்தவர்கள் எல்லோருக்கும் பொழிச்சலூர் சிவன் கோவில் விபூதி தரப்பட்டது. அத்தனை பேரும் விபூதி இட்டுக் கொள்ள அடுத்தது குங்குமம் எடுத்துக் கொள்ள பெண்களுக்கு பெண்களால் விபூதியும் குங்குமமும் தரப்பட்டன. எல்லோருக் கும் சர்க்கரைப் பொங்கல் உள்ளங்கையில் போடப்பட்டது. ஒரு பையன் சாதாரண கேமிராவில் படம் எடுத்தான்.

"பொண்ணு வீட்டுக்கு வந்து முதன் முதல்ல கோயில் பிரசாதம் சாப்பிடறதே ரொம்ப அம்சம். ரொம்ப அழகு."

யாரோ வாய்விட்டுப் பாராட்ட சீனுவாசய்யர் பூரித்துப் போனார்.

பொழிச்சலூர் இளைஞர்களைப் பார்த்து கைகூப்பினார்.

## 23

"நம்ம ஊர் பொண்ணு நல்லா இருக்கணும் ஸார். அதுக்கா கத்தான். பாருங்க பூரணி அதிர்ஷ்டம் இன்னிக்குன்னு பார்த்து எங்க காண்ட்ராக்டர் ரெண்டு அடுக்கு பொங்கல் பண்ணச் சொன்னாரு. ஒரு அடுக்குதான் செலவாச்சு. என்னடா இன்னொரு அடுக்கு என்ன பண்றதுங்கறபோது இவன்தான் யோசனை சொன்னான். பூரணி வீட்ல நிச்சயதார்த்தம் ஆகுது. அங்க கொண்டு போய் கொடுக்கலாமேன்னு. வெளியூர் ஆளுங்ககிட்ட கொடுத்தா நம்ம கோயில் பத்தி மரியாதையா நினைப்பாங்க இல்ல" பொழிச்சலூர் இளைஞன் ஒருவன் பேசினான்.

"கமலக்கண்ணன்கிட்ட கோயிலுக்கு எதுனா பண்ணுன்னு சொல்லு" என்று சீனுவாசய்யர் சொல்ல அவர்கள் கமலக் கண்ணன் எதிரே போய் "இந்த கோயிலுக்கு நீங்க ஏதாவது பண்ணணும்" என்று சொன்னார்கள்.

"நிச்சயம் பண்றேன். என்ன பண்ணலாம் சொல்லு."

"பிரதோஷ சிவனுக்கு கல்லு மாலை வேணும். இருக்கற தெல்லாம் பழசாகிப்போச்சு."

"அவ்வளவுதானே. அறுநூறு எழுநூறு ரூபாய்க்கு நல்ல ஹாரம் கிடைக்கும். நான் வாங்கித்தரேன். ஹாரம் வேணுமா காசுமாலையா வேணுமா?"

"உங்க இஷ்டம்" பொழிச்சலூர் இளைஞர்கள் சொல்ல, அவன் ஏதேனும் செய்வதாகச் சொன்னான். நகையாக கொண்டு வந்து போடுவதாக வாக்குறுதி அளித்தான். விரைவி லேயே செய்வதாகச் சொன்னான்.

அறுபத்தியிரண்டு பேரும் ஹாலின், வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் உட்கார்ந்துவிட பொழிச்சலூர் இளைஞர்கள் சாம்பார், சட்னிக் கரண்டியை கையில் எடுத்துக் கொண்டார் கள். சமையற்காரர்கள் பரிமாற உபவிஷயங்களை அவர்கள் கவனித்துக் கொண்டார்கள்.

சிறிதளவு கேசரி, சிறிதளவு கிச்சடி, ஒரேயொரு ஊத்தப்பம் சாப்பிட்டுவிட்டு கமலக்கண்ணன் எழுந்து விட்டான். காபி டம்ளரை எடுத்துக்கொண்டு பவழமல்லிச் செடியைத் தாண்டி இன்னும் கொல்லைப்புறத்தின் கடைசிப் பகுதிக்கு போனான். அங்கு ஒரு இளைஞன் நாற்காலி போட உட்கார்ந்து கொண் டான். பூரணி வருகிறாளா என்று எட்டிப் பார்த்தான். அவன் நினைத்தது போல பூரணி நடந்து வந்தாள்.

"என்ன இங்க உட்கார்ந்துட்டீங்க?" என்று கேட்டாள்.

ஒரு இளைஞன் ஓடிப்போய் பூரணிக்கு மர ஸ்டூல் போட கமலக்கண்ணன் எதிரே உட்கார்ந்தாள். அதுவரை கும்பலை எடுத்துக் கொண்டிருந்த போட்டோகிராபர் ஓடிவந்து அவர்கள் உட்கார்ந்து பேசுவதை படமெடுத்தான். ஜோடியாக நிற்க வைத்து இன்னொரு க்ளிக் செய்தான்.



"கொஞ்சம் பேசணும்" என்று கமலக்கண்ணன் சொல்ல அந்த இளைஞனும் போட்டோகிராபரும் நகர்ந்தார்கள்.

"என்ன இங்க தனியா வந்து உட்கார்ந்துட்டீங்க?"

"உன்கூட பேசறதுக்குத்தான்."

"என்ன பேசணும்?"

"எனக்கு வெளியூர்ல வேலை கிடைக்கிற வாய்ப்பு அதிகமா இருக்கு. நான் போகலாமா வேண்டாமா?"

"போகணும்னுதானே வேலைக்கு மனு போட்டீங்க."

"ஆமாம். கிடைக்காதுன்னு நினைச்சு போட்டேன். இப்போ நிச்சயமா கிடைச்சுடும் போலிருக்கு. இன்னிக்கு கார்த்தாலதான் போன் வந்தது."

"என்ன போன்?"

"என்னுடைய சீனியர் மேனேஜர் அங்கு போனவரு எனக்குண்டான எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்காரு. நான் நினைச்சதைவிட அதிகமாகவே சம்பளம் கிடைக்கும்."

"அதிகமான்னா எவ்வளவு?"

"எழுவத்தஞ்சாயிரம்."

"அடேங்கப்பா... ஒரு மாசத்துக்கு என்ன செலவாகும்?"

"வீசியடிச்சு செலவு பண்ணாகூட பதினஞ்சு இருவது. மிச்சம் அம்பத்தஞ்சு அப்படியே வீட்டுக்கு அனுப்பலாம்."

"எத்தனை நாள் வேலை இருக்கும்?"

"நிறைய நாள்."

"நிறைய நாள்னா?"

"ஒன்றரை வருஷம்."

"ஒன்றரை வருஷம் வரமுடியாதா?"

"தெரியலை. நடுவுல வரலாமா முடியாதான்னு தெரியலை. நாளைக்கு கேட்டு சொல்றேன்னாரு. இதைத்தவிர ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு ஆஃபர் இருக்கு."

"என்ன... ஒரு மாசத்துக்கு ஒரு லட்சமா?"

"ஆமாம்."

"என்ன வேலை?"

"அது வேறவிதமான வேலை."

"என்னான்னு சொல்லுங்களேன்."

"ரிக்குனு சொல்லுவாங்க."

"ரிக்குன்னா?"

"ஆர்.ஐ.ஜி. ரிக். அப்படின்னா கடலுக்கு நடுவுல ஒரு பெரிய மேடை போட்டு ஆள்துளையா ஒட்டை போட்டு அதுலேர்ந்து ஆயில் எடுத்து அந்த ஆயிலை கலக்கு பம்ப் மூலமா அனுப்புவாங்க. அந்த ரிக்ல தங்கறதுக்கு இடம் வசதியெல்லாம் இருக்கும். ஹெலிகாப்டர்ல போய் இறக்கிவிட்டான்னா பதினஞ்சு நாள் ரிக்ல இருக்கணும். பதினஞ்சு நாள் கரையில இருக்கணும். பதினஞ்சு நாள் தொடர்ச்சியா வேலை. ஒரு பதினஞ்சு நாள் கரையில ரெஸ்ட். வேணும்னா அஞ்சு நாள் ரெஸ்ட் எடுத்துகிட்டு ஒரு பத்து நாள் கரையிலயும் வேலை செய்யலாம். அதுக்கு கூடுதலா சம்பளம். கிட்டதட்ட ஒன்னு இருவத்தஞ்சு கூட சம்பாதிக்கலாம்."

"யப்பா... அவ்ளோ காசா?"

"ஆமாம். ஆனால் காண்ட்ராக்ட்ல கையெழுத்து போடணும். பதினெட்டு மாசம் வேலையை விட்டு போகமாட்டேன்னு சொல்லணும். முதல் ஒரு மாசம் நமக்கு வேலை தெரியுதான்னு பார்ப்பாங்க. அதுக்கப்புறம் பதினெட்டு மாசம் வேலை பண்ணணும். அதாவது இப்போ போனேன்னா பத்தொன்பது மாசம் கழிச்சுதான் வரமுடியும். ஒத்துக்கறதா வேணாமான்னு தெரியலை. இதை உங்கிட்ட சொல்லிடணும் அப்படின்னு சொல்லிட்டேன். நீ என்ன சொல்ற?"

"உங்க இஷ்டம். நீங்க என்ன சொன்னாலும் சரி. எப்போ புறப்பட வேண்டியிருக்கும்?"

"தெரியலையே. உங்கப்பா சீக்கிரம் கல்யாணம் வச்சார்னா கல்யாணத்தை பண்ணிகிட்டு கிளம்பி போயிடுவேன். உங்கப்பா லேட்டாகும்னு சொல்லும்போது எனக்கு பயமா இருந்தது. ஆறு மாசம்னா அதுவரைக்கும் இங்க உட்காரமுடியாதே."



"எப்போ கூப்பிடுவாங்கன்னு நினைக்கறீங்க?"

"ஒரு மாசத்துல கூப்பிடுவாங்க."

"அப்போ ஒரு மாசத்துல அப்பாவை கல்யாணம் பண்ணச் சொல்லட்டுமா?"

"கேட்டுப் பாரேன். அது கஷ்டமில்லையா. சத்திரம் கிடைக்க வேணாமா?"

"சீனுவாசய்யர் வீட்ல கல்யாணம் வச்சுட்டா போகுது."

"நிச்சயதார்த்தம் இத்தினி பெருசா இருக்கு. கல்யாணம் தாங்குமா?"

"பொழிச்சலூர் சிவன் கோவில்ல கல்யாணம் வச்சுட்டா."

"கோவில்ல கல்யாணம் வைக்கக்கூடாதுன்னு அம்மா சொல்வாங்க. சத்திரத்துலதான் வைக்கணும். கோவில் சாமி கும்பிடற இடம். ஊர்ல எல்லோரும் வரப்போற இடம். அந்த இடத்துல கல்யாணம்னு எப்படி வைக்கறது? அப்போ விருந்து எங்கன்னு கேள்வி வருமில்லை?"

"ஆமாம். சங்கடம்தான். ஒரு மாசத்துக்குள்ள சத்திரம் கிடைக்காது."

"தேடித்தான் பார்க்கணும். கிடைக்கும்னு எப்படி சொல்ல முடியும்?"

"ஆமாம். அதுவும் புரியுது."

பூரணியின் அப்பா புருஷோத்தமர் அடுப்பறையைத் தாண்டி பூரணியை நோக்கி நடந்து வந்தார்.

"என்னம்மா சொல்றாரு மாப்பிள்ளை?"

பிரியமாகக் கேட்டார். தன் எதிர்கால மருமகன் தன்னுடைய மகளை வைத்து குடித்தனம் செய்யப்போகிறவன், அவளுக்கு தாலிகட்டப் போகிறவன் அவளுக்கருகே கம்பீரமாக உட்கார்ந்து கொண்டிருப்பதும் அவனைக் காதலாக தன் மகள் பார்ப்பதும் அவருக்குள் ஒரு நிறைவை ஏற்படுத்தின.

"என்ன இங்க உட்கார்ந்து பேசிகிட்டிருக்கீங்க மாப்பிள்ளை? ஏதாவது பிரச்சனையா?" என்று அடிக்குரலில் கேட்டார்.

"இல்லைப்பா. அவருக்கு வெளிநாட்டு வேலை கிடைக்கும் போலத் தோணுதாம்."

"அதான். அப்பவே சொன்னாரே. மெதுவா போகலா மில்லை. வெளிநாட்டுக்கு?"

"இல்லை. ஒரு மாசத்துக்குள்ள போகும்படியா இருக்கும்னு சொல்றாரு. ஒருமாசத்துக்குள்ள கல்யாணம் பண்ணமுடியு மான்னு கேட்கறாரு."

"தெரியலையே."

"முயற்சி பண்ணுங்க மாமா. காலையிலதான் போன் வந்தது. எவ்வளவு சீக்கிரத்துல கிளம்பறியோ கிளம்பு அப்படின்னு."

"சரி. முயற்சி பண்ணி பார்க்கலாம். இவளையும் கூட்டிகிட்டு போகமுடியுமா?"

"இல்லைங்க. நான் ஒரு புது வேலை ஒத்துண்டிருக்கேன். ரிக். நடுக்கடல்ல வேலை செய்யறது. கூடுதலா சம்பளம் கிடைக்கும். அதேசமயம் வேலை ரொம்ப கடுமையா இருக்கும். பதினஞ்சு நாள் கடல்ல வேலை. பத்து நாள் கரையில வேலை. அஞ்சு நாள் ரெஸ்ட்."

"எவ்வளவு கிடைக்கும்"

"ஒன்னேகால் ருபா கிடைக்கும்."

"ஒன்னேகால் ருபான்னா?"

"ஒரு லட்சத்து இருவத்தஞ்சாயிரம்."

"நிஜமாவா?"

அவர் திகைத்தார். தன்னுடைய ஒரு வருட சம்பளத்தை மிகச் சாதாரணமாக இந்த இளைஞன் ஒரு மாதத்தில் சம்பாதிக்கப் போகிறான் என்றால் அவனைப் பற்றிய மரியாதையும், அவன் மீது தனித்த அன்பும் அதேநேரத்தில் ஒரு கலவரமும் அவருக் குள் ஏற்பட்டன.

"இவ்ளோ காசுன்னா ஒத்துக்கோங்களேன் மாப்ளே."



அவர் பவ்யமாக பேசினார்.

"எப்போ கிளம்பறதுன்றது தெரியலை மாமா. கல்யா ணத்தை முடிச்சுடணும்னு நினைச்சிக்கிட்டிருக்கேன். ஆனா என்னுடைய சீனியர் மேனேஜர் அங்க இருக்கறவரு சீக்கிரம் கிளம்புப்பா அதான் நல்லது.இல்லைன்னா பாகிஸ்தான் காரனோ, பஞ்சாபியோ, வெஸ்ட் பெங்கால்காரனோ, சைனா காரனோ உள்ள வந்துடுவான். எனக்கு தமிழ் தெரிஞ்ச நம்ம ஆளு அங்க வந்தா நல்லாயிருக்கும்னு சொல்றாரு."

"சீக்கிரம்னா எவ்வளவு சீக்கிரம்?"

"நாளைக்கு காலையில் போன் வரும். அப்போ தெரிஞ்சுடும்."

"நாளைக்கு காலையில் வீட்டுக்கு போன் பண்ணுங்க. நானும் ஒரு மாசத்துக்குள்ள திருமணம் நடக்கறதுக்கு ஏற்பாடு பண்றேன். ஆனா, இதை நான் சொன்னதா வெளிய சொல்லி டாதீங்க. முயற்சிதான் செய்யலாம். கல்யாணம் நம்மகிட்டயா இருக்கு."

"எனக்கு புரியுது மாமா. எல்லாம் நல்லபடியா முடியும். கவலைப்படாதீங்க. இதை சொல்றதுக்குத்தான் வந்தேன்."

அவன் எழுந்து நின்றான்.

அவன் கடைசி முடக்கு காபியை குடிக்கப் போகும்போது பூரணி அதை சட்டென்று பறித்துக்கொண்டாள். மீதமிருந்ததை தன் வாயில் விட்டுக்கொண்டாள்.

பூரணியின் அப்பா ஓரக்கண்ணால் அதைப்பார்த்து மனசுக் குள் சந்தோஷப்பட்டார்.

பூரணியும் கமலக்கண்ணனும் மெல்ல ஒருவரையொருவர் கைகளை பற்றிக்கொள்வது தெரிந்தது.

வேகமாக அந்த இடம் விட்டு நகர்ந்தார்.

அவருக்கு சந்தோஷமாகவும் இருந்தது. கவலையாகவும் இருந்தது.

பெண்ணின் மனது விசித்திரமானது.ஒரு புள்ளி வரை விலகி யிருக்கின்ற பெண் அந்தப் புள்ளியைக் கடந்ததும் புருஷன்

என்று தனக்கு உலகம் வழங்கப்பட்டவனைக் கொண்டாட ஆரம்பித்துவிடுகிறாள். அவன் தன்னை கொண்டாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்.

அதுவரை கமலக்கண்ணனை ஓரக்கண்ணாலும் பாதி பார்வையாலும் பார்த்துக் கொண்டிருந்த பூரணி அவனை முழுமையாகப் பார்த்தாள். அருகே நின்று அவன் வாசனையை உணர்ந்தாள். அவன் திண்தோளை ஒருமுறை தடவினாள். வியந்தாள்.

பூரணியின் அண்மையும், அவள் தடவலும், அவள் பார்வையும் கமலக்கண்ணனை கிறங்க வைத்தன.

"குட்டி... நான் கூப்பிட்டா வெளிய வருவியா? சினிமா, பீச்சுன்னு எங்கயாவது போகலாமா?"

"ஓ... யெஸ் போகலாம்."

கமலக்கண்ணன் கேட்பதற்கு உடனே எந்தத் தயக்கமும் இல்லாமல் பூரணி பதில் சொன்னாள். அவள் வேகமாக பதில் சொல்ல கமலக்கண்ணன் தயங்கினான்.தன் வீடு என்ன சொல்லும், யார் எதிர்ப்பார்கள் என்று அரை நிமிடம் கவலைப் பட்டான்.

அட... அதுங்க எதுனா சொல்லிகிட்டு தான் இருக்கும். கல்யாணத்துக்கு முன்னாடி காதலர்களா வெளிய சுத்தறது ஒரு தனி சந்தோஷமில்லையா? எல்லாருக்கும் கிடைக்குமா? யார் என்ன சொன்னாலும் நாம இதை செய்துதான் ஆகணும் என்று மனசுக்குள் திட்டம் போட்டான்.

"உங்க வீட்ல ஒண்ணும் சொல்லமாட்டாங்களா?" மெல்ல அவளிடம் கேள்வி கேட்டான்.

"அப்பா வேணுமா அவசியமான்னு கேட்பாரு.கண்டிப்பா அவசியம் நான் போயே ஆகணும்னு சொன்னா சரி போம்மான்னு சொல்லிடுவாரு. உடனே கிளம்பி சாயந்தரம் வந்துடணும். ராத்தங்க விடமாட்டாங்க."

"ச்சே... ராத்திரியெல்லாம் தங்கமாட்டோம்."

வேகமாக கமலக்கண்ணன் பேசினான்.



37682
E7-70062

ராத்திரி தங்கினாத்தான் என்ன?

பூரணிக்கு உள்ளே ஒரு திமிர் எழுந்தது.

தனக்கு கணவனாக நிச்சயிக்கப்பட்டவருக்கு ஒரு முத்தம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது.அதுவும் இந்தப் பவழமல்லி மரத்துக்கு கீழேயே கொடுப்பது சிறப்பு என்று உள்ளே ஒரு எண்ணம் ஏற்பட்டது.

வேலையாட்கள் எல்லோரும் உள்ளே வேலையாக இருக்க அவள் நகர்ந்து கொல்லைக்கதவு சார்த்தினாள். வேகமாக புருஷனிடம் வந்தாள். அவனை மெல்லத்தழுவி இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டாள். உதடுகளிலும் சட்டென்று ஒன்று பதித்தாள்.

அவன் அவளுடைய உடம்பின் மென்மையைத் தாங்காமல் தடுமாறினான்.

"என்ன குட்டி... என்ன ஆச்சு?" என்று கனிவோடு காதல் பொங்கக் கேட்டான். கட்டிக்கொண்டான்.

"அடிக்கடி வாங்கப்பா. நாம ஒருத்தரையொருத்தர் கல்யாணத்துக்கு முன்னாடியே புரிஞ்சுக்கலாம்" அடிக்குரலில் அவனை விரலால் தொட்டபடியே பூரணி பேசினாள்.

"எனக்கென்னமோ ரொம்ப நாள் பழகினா மாதிரி படுது. ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுகிட்டா மாதிரி தோணுது."

கமலக்கண்ணன் பதில் சொன்னான்.

"உண்மை.ஆனாலும் நேரடியா பேசி உங்களுக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காதுன்னு நான் தெரிஞ்சுக்கணும். வீட்ல யார் யார் இருக்காங்க.அவங்களெல்லாம் எப்படின்னு தெரிஞ்சுக்கணும். நாம எங்க குடித்தனம் போகப்போறோம். உங்க வீட்லயா அல்லது தனியாவா அதுபத்தியும் பேசணும்."

பூரணி சொல்லிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் யோசித்தான்.

எந்தப் பெண்களும் சாதாரணமானவரில்லை. அது தமக்கையோ, தாயோ, சித்தியோ, அத்தையோ, மனைவியோ, மைத்துனியோ, தங்கையோ, ஸ்நேகிதியோ எல்லாப் பெண்களும்

எப்பொழுதுமே ஒரு தற்காப்பு நோக்கத்தோடுதான் பழகுகிறார்கள். அவர்களுக்கு எதிர்காலம் பற்றி இடையறாத கவலை இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால் அவர்கள் மனிதர்களை எடை போட்டு இறக்குவதில், அபிப்ராயம் சொல்வதில் ஆர்வமாக இருக்கிறார்கள் என்றுபட்டது.

இது சரியா? தவறா?

கேள்வி எழுந்தது.

## 24

ஒரு விதத்தில் சரி, ஒரு விதத்தில் தவறு. தேவையற்ற ஊர் வம்பில் ஈடுபடாது தானுண்டு தன் வேலையுண்டு என்று வீட்டுப் பெண்கள் இருப்பது நல்லது. இது என்ன, அது என்னனு, அவர் வாழ்க்கை எப்படி. இவர் வாழ்க்கை எப்படி. இவள் ஏன் புருஷனோடு இல்லை. அவள் புருஷன் ஏன் இன்னொருவளை நாடினான் என்றெல்லாம் பேச ஆரம்பித்தால் இதற்கு முடிவே கிடையாது.

எந்த ஊருக்கும் போக வேண்டுமென்றால் நிதானமாக கல்யாணம் முடித்து நிம்மதியாக குடித்தனம் பண்ணி, மனைவியை வேறு எவர் வாயாலும் விழாமல் தானே அடைகாத்து அற்புதமாக வாழ்ந்து வரலாம். ஆனால், திருமணம் முடிந்த பிறகு இவளை தன் வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டியிருக்கிறது. அப்படி விட்டுவிட்டு வந்தால் உன் வீடு இவளை என்ன செய்யும். கிட்டத்தட்ட வேலைக்காரியாக நடத்தும்.

தன் வீட்டிற்கு ஒரு மருமகள் வந்திருக்கிறாள். தம்பி, வெளியே சம்பாதிக்கப் போயிருக்கிறான் என்று தெரிந்தால் சகல சகோதரிகளும் வந்து உட்கார்ந்து கொண்டு இதைச் செய், அதைச் செய் என்று விரட்டுவார்கள். அம்மாவை தூண்டி விடுவார்கள். அப்பாவிற்கு எதிராகப் பேசுவார்கள். அப்பா என்கிற ஒரு ஜீவனைத்தவிர இங்குள்ள அத்தனைபேரும் பூரணியை மென்று தின்றுவிடலாம். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் பூரணிக்கு என்ன விதமான பாதுகாப்பு கொடுப்பது. நீ உன் வீட்டில் போய் இரு என்று சொல்வதா. அது சரியாக இருக்குமா. அது பூரணியை புறக்கணிப்பதாக ஆகாதா. உன்னிடம் மரியாதையாக இல்லையென்றால் நீ எதிர்த்துப்பேசு என்று சொல்லி விடலாமா. என் வீடு இப்படிப்பட்டது என்று மறுபடி மறுபடி விவரிக்கலாமா. நாமே நம் வீட்டை மற்றவரிடம் இகழ்ச்சியாக சொல்வதா.



எந்த சகோதரியும் கெட்டவர்கள் அல்ல. அவர்கள் கொஞ்சம் அலட்டுபவர்கள். தன்னைவிட யாராவது அழகாக இருந்தால் சற்று அலட்சியமாகப் பேசுகிறவர்கள். அம்மா அசடு. யார் என்ன சொன்னாலும் உடனே பொங்கி எழுந்து கத்தி விடுகிற ஜாதி. முட்டாள். இவர்களிடம் மாட்டிக்கொண்டு பூரணி பேரவஸ்தை தான் படுவாள். எனவே, வீடு பற்றி நேரடியாக இவளுக்கு விளக்கி இவர்கள் இந்த விதம்... இவர்கள் இந்த விதம். இவர்களோடு இப்படிப்போக என்றெல்லாம் சொல்லி, வீட்டோடு இரு. வந்து பேசினால் இப்படிப்பேசு என்று சொல்லிவிடலாமா.

அதெல்லாம் இருக்கட்டும். இப்போது துபாய்க்கு வரச் சொன்னால் போவதா. போகாமல் இருப்பதா. ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் என்பது பொய்யான கணக்கு. அவ்வளவு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. அதேசமயம் எழுபத்தைந்தாயிரத்திற்கும் குறையாது. திருமணமாகி உடனடியாக மனைவி என்கிறவளோடு சந்தோஷமாக இராமல் வெளிநாடு போய் காசுக்காக அலையவேண்டியது அவசியம்தானா. திருமணம் ஆன இரண்டு மூன்று வருடங்கள் கழித்துப் போனால் என்ன. அவளுக்கொரு குழந்தை பிறந்தால் குழந்தையோடு அவள் வாழ்க்கை எளிதாகப் போய்விடுமே.

முன்னும் பின்னுமாக கமலக்கண்ணன் யோசித்தான். என்ன செய்வது என்று தெரியாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

ஆனால், விதி எவ்வளவு மோசமானது. போன வருடம் முழுவதும் திருமணத்திற்கு அலைந்தார்கள். யார் யார் போட்டோவோ வந்து காட்டினார்கள். அப்பொழுது இந்த பூரணி

எங்கே போனான். பூரணி வருகிறாள் என்று தெரிந்ததுமே வேறு வேலையும் வருகிறதே. எழுபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளம் பற்றி சிந்திக்கிறேன் என்றால் அது பூரணியின் வருகையால் தானே. வேலைக்கு வா என்று சொல்லி ஆறுமாதமாயிற்று. என்று பூரணியைப் பார்த்தேனோ அன்று மறுதினமே வாழ்க்கை வளமாய் வளர ஆரம்பித்துவிட்டது. அதையெல்லாம் தாண்டி இன்னொரு பயமிருக்கிறது. நாளை காலை போன் செய்து விசாவுக்கான பேப்பர் அனுப்பி விட்டேன்.போய் விசா வாங்கிக்கொண்டு உடனடியாக வந்து சேர் என்று சொன்னாலும் சொல்லிவிடலாம். இன்று பாஸ்போர்ட் கிடைத்துவிடும்.

இப்பொழுது வாங்குகிற ஆறாயிரத்து சொச்சத்தில் என்ன குடித்தனம் செய்யமுடியும். எழுபத்தைந்தாயிரம் என்பது எவ்வளவு அற்புதமான விஷயம்.முக்கியமான வேலையாக ஒன்று செய்ய வேண்டும். இப்பொழுது வேலை செய்கிற இடத்து ஆயில் பைப் வரைபடங்களை ஜெராக்ஸ் காப்பி எடுத்துக் கொள்ளவேண்டும். டாங்கிலுள்ள ஆயிலின் கன அழுத்தத்தை எப்படி சமாளிக்கிறோம் என்று இன்னொரு தடவை பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

இக்கணமே கிளம்பு என்று சொன்னால் உடனே கிளம்புவதா இல்லை ஒரு மாதம் கழித்து திருமணம் செய்து கொண்டு வருகிறேன் என்று சொல்வதா.

அவன் தொடர்ந்து யோசித்தான். அமைதியானான்.

நான் யோசிப்பதில் ஒரு தவறு இருக்கிறது. பூரணியைப் பற்றிய உண்மையான அக்கறை இருப்பின் நான் திருமணம் பற்றி இப்பொழுது அவசரப்படக்கூடாது.அவர் அப்பா ஆறு மாதம் இடைவெளி கேட்டிருக்கிறார். இது நல்லது. திருமணம் நிச்சயமாகிவிட்டது. இங்கிருந்துபோய் அங்கு வேலை செய்துவிட்டு கொஞ்சம் காசு சேர்த்துக் கொண்டு பதினைந்து நாள் விடுப்பில் வந்து திருமணம் முடித்து பிறகு மறுபடியும் போகலாம். அதற்கு இடைவெளி கொடுத்தது போலவும் இருக்கும். தான் வேலையில் சேர்ந்தது போலவும் இருக்கும். ஆனால், ஆறு மாதம் கழித்து வரமுடியுமா.



மறுபடியும் குழம்பினான். தன்னுடைய அதிகாரியிடம் உடனடியாகப் பேச ஆசைப்பட்டான். யோசிக்க யோசிக்க யோசிப்பின் வேகத்தில் முகம் இருண்டு போனது.

"என்னடா... பேய் அடிச்சாப் போல இருக்கிற. எதுனா சொல்லிட்டாங்களா அந்த வீட்ல."

அம்மா கேலி செய்தாள்.

அக்கா தூண்டி விட்டுத்தான் அம்மா பேசுகிறாள் என்பது ஒரு பார்வையில் புரிந்து போயிற்று.ஏனெனில் அம்மாவைவிட அக்காதான் அவன் பதிலுக்கு ஆவலாகக் காத்திருந்தாள்.

"அந்தப் பூரணி ஏதோ சொல்லிடுச்சு. அதான் வருத்தமாயிருக்கு."

"என்னா... என்னா..." எல்லோரும் பாய்ந்து கொண்டு வந்தார்கள்.

"நான் வெளிய வாசல்ல போகலாம் வாடின்னு கூப்பிட்டேன். அதெல்லாம் வரமுடியாது. உங்க வீட்ல இருக்கறவங்க அசிங்கமா சொல்வாங்க. தயவு செய்து என்னை அதுக்கெல்லாம் கூப்பிடாதீங்கன்னு கையெடுத்து கும்பிட்டுடுச்சு. ஒரே பேஜாரா ஆயிப்போச்சு போயேன். நம்ம வீடுதான் கொஞ்சம் கட்டுப் பொட்டின்னா இது அதுக்கு மேல இருக்குதேன்னு வெறுப்பா போயிட்டேன் நான்."

"யாரு கட்டுப்பொட்டி. நானும் எங்க வீட்டுக்காரரும் போகலையா வெளிய. சினிமாக்கு போனோமே. எம்.ஜி.ஆர். படம் பார்த்துட்டு வந்தோமே கூப்ட்டா போகவேண்டியதுதான். நாங்க என்னாத்த சொல்லப்போறோம். சும்மா எதுனா எங்களை சொல்லிக்கிட்டே இருக்கனும். நீ கூட்டிகிட்டு போடா."

"அது வராது."

"நான் போன் பண்ணி சொல்றேன். என் தம்பி கூப்பிடறான். அவன் எங்க கூப்பிடறானோ போன்னு நான் சொல்றேன்."

"அதெல்லாம் வேணாம். அசிங்கமா போயிடும். உன் மரியாதைய குறைச்சுக்காத."

கோபத்தோடு அவன் தமக்கையைப் பார்த்தான்.

அவன் பதட்டமாவது போல் நடந்தான்.

இந்த வீடு கறுப்பு என்றால் வெள்ளை என்று சொல்லும். வெள்ளை என்று சொன்னால் கறுப்பு என்று சொல்லும்.

சினிமா போகலாமான்னு கேட்கறா, போயிட்டு வரட்டுமா என்று இவன் கேட்டால், "பொம்பளையா அவ இப்படி கூப்பிடறாளே, அசிங்கமா இல்லை அவ பேசறது. யார் வீட்லயாவது நடக்குமா இந்த அநியாயம். கல்யாணம் நிச்சயம் ஆயிப் போச்சுன்னா என்ன. அவுத்துப்போட்டு ஆடணுமா." வாய்க் கொள்ளாது அசிங்கம் அசிங்கமாகப் பேசுவார்கள்.

வீடு ஏன் கழுகுப் பார்வையோடு பூரணியை கவனித்துக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. இது பெண்களின் இயல்பா இல்லை, இந்த வீடு மட்டும்தான் இப்படி முட்டாள் தனமாக நடந்துகொள்கிறதா. இடையறாத ஒரு பொறாமையில் ஒரு அவசரத்தில் இவர்கள் ஏன் தவிக்கிறார்கள். தம்பிக்கு கல்யாணம். நான் சொல்றபடிதான் நடக்கணும் என்று இந்த முட்டாள் பெண் ஏன் அலைகிறாள். இவர்களை தந்திரமாகத் தான் நகர்த்த வேண்டும்.

"ப்ளீஸ் வாங்கப்பா."

பூரணியின் குரல் காதுக்குள் ஒலித்தது.

"நீ சொல்றதுதான் கரெக்ட்டும்மா. நான் ஒரு தடவை போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்."

சட்டென்று பாத்ருமுக்குள் போய் கதவு சார்த்திக் கொண்டான். கதவிடுக்கு வழியாக எட்டிப்பார்த்தான்.

அம்மாவும் பெண்ணும் கிசு கிசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். முகம் கழுவினான். தலை வாரினான். சீராக உடுத்திக்கொண்டான். சென்ட் போட்டுக்கொண்டான். குறுக்கும் நெடுக்குமாக நடந்து இருவரும் அவனை ஓரக்கண்ணால் பார்த்தார்கள்.

அவன் வெளியே கிளம்புகிறேன் என்றபோது "போகும் போது எங்கன்னு கேட்கக்கூடாது."

அம்மா இழுத்தாள்.



"பூரணி வீட்டுக்குத்தான்."

"அடிக்கடி போகலாமா."

"நீங்கதானே போகலாம்னு சொன்னீங்க."

"பீச்... பார்க்குக்கு போகலாம்னு சொன்னோம். வீட்டுக்கு ஏன் போற."

"வீட்டுக்குப் போய் அவளை கூட்டிகிட்டுதானே போகணும். பீச்சுக்கு நேரா வந்துடுன்னு சொல்ல முடியுமா?"

"ஏன் வந்தா என்ன."

"அதெல்லாம் தப்பு. அப்பா அம்மாகிட்டபோய் இந்த மாதிரி உங்க மகளை நான் வெளியே வாசல்ல கூட்டிண்டு போறேன் அப்படின்னு சொன்னாதான் மரியாதையே தவிர இங்க வந்துடு அங்க வந்துடுன்னெல்லாம் சொன்னா அது நல்லாதில்லை. என்ன நான் சொல்றது" என்று சொல்ல இருவரும் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கண்களில் தேவையில்லாத ஒரு குரோதம் கொப்பளித்தது.

ஆயிரத்து ஐநூறு ரூபாய் பாக்கெட்டில் எடுத்துப் போட்டுக் கொண்டான். துள்ளலாக வெளியே கிளம்பினான்.

திருமணம் நிச்சயமாகி முதல் தடவையாக வெளியே போகிறோம். வெறும் கையோடு போவதா. ஏதாவது வாங்கிக் கொண்டு போகலாமே என்று தோன்றியது.

பரிசுகள் வாங்கும் கடைக்குப் போனான். விதம்விதமான பரிசுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பெட்டியைத் திறந்ததும் பெட்டிக்குள்ளிருந்து ஒரு பொம்மை வெளிப்பட்டு கால்தூக்கி சுழன்று ஆடியது. மெல்லிய இசைச் சத்தம் பெட்டியிலிருந்து வந்தது. வெள்ளை கவுன் அணிந்த பெண்ணும், அந்த இசையும் அவனைக் கொள்ளைகொண்டு விட்டன. அது வெறும் இசைப்பெட்டி மட்டுமல்ல. கீழே மூன்று நான்கு அறைகளில் வளையல்கள், மூக்குத்தி, காதுகம்மல், செயின் போன்றவற்றை வைத்துக்கொள்ள வசதிகள் இருந்தது. கடைக்காரன் ஐநூறு ரூபாய் விலை சொன்னான். சட்டென்று கொடுத்து அதை பளபளவென்று பேப்பர் போட்டு சுருட்டி கையில் எடுத்

துக் கொண்டான். பையில் போட்டுக் கொண்டான். மோட்டார் சைக்கிளை பொழிச்சலூர் நோக்கித் திருப்பினான். வழியில் வண்டி நிறுத்தி பூரணி வீட்டிற்கு போன் செய்தான்.

பூரணியின் அம்மா பேசினாள்.

"மாமி குட்மார்னிங்" என்று சொல்ல "யாரு" என்று குரல் நடுங்கக்கேட்டாள்.

"நான்தான் கமலக்கண்ணன் பேசறேன்."

"ஐயோ... இருங்க இருங்க."

"உங்ககிட்டதான் பேசணும் மாமி" என்று சொல்ல,

"என்ன சொல்லுங்க" என்று பதட்டம் குறையாத குரலில் பேசினாள்.

"உங்க வீட்டுக்குதான் வந்துட்டுருக்கேன். பூரணியை கூட்டிக்கிட்டு வெளியே போகலாம்னு இருக்கேன். மாமா இருக் காரா. மாமாகிட்ட சொல்லிடுங்க. இன்னும் பத்துப்பதினைஞ்சு நிமிஷத்துல அங்க இருப்பேன்" என்று சொல்லி போனை துண்டித்தான்.

இந்த நேரம் வீடு அல்லோலப்படும் என்ற சிரிப்போடு மோட் டார் சைக்கிளை உதைத்து பூரணியின் வீடு நோக்கிப் போனான். பூரணியின் வீடு அவனை சந்தோஷமாக வரவேற்றது.

"காலையிலயே சொல்லக்கூடாதா, நான் சாப்பாட்டுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணியிருப்பேன் இல்ல" பூரணியின் அம்மா கூடத்தில் வந்து உட்கார்ந்ததும் சொன்னாள்.

மின் விசிறி அவன் பக்கம் திருப்பி வைக்கப்பட்டது. பூரணி எதிர்ப்பட்டு அவனுக்கு நமஸ்காரம் செய்தாள். தூண் அருகே போய் நின்று கொண்டாள். உட்கார் என்று கமலக்கண்ணன் சொல்ல அருகில் இருக்கின்ற சிறிய ஸ்டூலில் உட்கார்ந்தாள்.

பூரணியின் அப்பா நாற்காலியை அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு கமலக்கண்ணன் கைகளை ஆதரவாகக் கோர்த்துக் கொண்டார்.



அவர் நடந்து கொண்ட விதம் கமலக்கண்ணனுக்கு சந்தோஷமாக இருந்தது. அவனும் அவர் கைகளை இறுக்கப் பிடித்துக்கொண்டான்.

"நான் வரேன்னு சொன்னா நீங்க ஏதாவது பண்ணி வீட்டோட உட்காரவச்சுடுவீங்கறதுனாலதான் நான் சொல்லலை. நான் பூரணியை வெளியே கூட்டிகிட்டு போகறதுக்காக வந்திருக் கேன். நாங்க வெளியே சாப்டுக்கறோம்.என்ன பூரணி..."

"தெரியலையே. அம்மா என்ன சொல்ல சொல்றாங் கன்னு..."

"வெளிய இன்னொரு நாள் போயிக்கலாம். இன்னிக்கு பொழிச்சலூர் சிவன் கோயிலுக்கு போயிட்டு வந்துடுங்க. சீனு வாசய்யர் வீட்டுக்கு போயிட்டு வந்துடுங்க. மகாபலிபுரம் ரோடுல திருவிடந்தை அப்படின்னு ஒரு ஊர் இருக்கு. பூரணிக்கு கல்யாணம் நல்லபடியா ஆகணும்னு நாங்க வேண்டிக்கிட்டிருக்கோம். நீங்களும் வந்து நல்லபடியா கல் யாணம் ஆகணும்னு ஒரு தடவை சாமி கும்பிட்டு வந்திடுங்க. முதல் தடவை போறீங்க. ஹோட்டலுக்கு பீச்சுக்குன்னு போறத விட கோயிலுக்கு போனா எங்களுக்கு சந்தோஷமா இருக்கும்."

பூரணியின் அப்பா மரியாதையாகப் பேச அப்படியே ஆகட்டும் என்று அவன் தலையசைத்தான்.

"பூரணியோட சும்மா பேசிக்கிட்டிருக்கணும் அதான் வந்தேன்."

"நீங்க கோயிலுக்கு போங்கன்னு சொன்னாலும் சரி, இல்லை, வீட்டோட இருங்கன்னு சொன்னாலும் சரி" என்று சொல்ல அவர்கள் மாப்பிள்ளையின் குணம் பார்த்து வியந்தார் கள். முகம் மலர்ந்தார்கள்.

"புடலங்காய் கூட்டும், முருங்கைக்காய் சாம்பாரும் வச்சருக் கேன். நல்ல வேளை நேத்து வரலை."

"ஏன்."

"நேத்து கீரை கொழம்பு. மாப்பிள்ளை முதன் முதல்ல வந்தாரு கீரை கொழம்பு பண்ணோம்னா எங்க வீட்ல என்னை

ஒரு மாதிரி பண்ணிடுவாங்க. இதைத் தவிர நான் என்ன செய்யட்டும்"என்று பூரணியின் அம்மா வேகமாகப் பேசினாள்.

"எனக்கு கோஸ்கறி பிடிக்கும் முடிஞ்சா பண்ணுங்க."

"வாங்கிட்டு வந்துடறேன். வேறென்ன."

"மணத்தக்காளி வத்தல், கொத்தவரங்காய் வத்தல் இதை வறுத்து சாப்பிடறது பிடிக்கும்."

"அட... அதுவும் ஐயருகிட்ட இருக்கும்.வாங்கிட்டு வந்துடறேன்."

"ஏன். உங்க வீட்ல வச்சக்க மாட்டீங்களா."

"நான் பொரிச்சது ஜாஸ்தி சாப்பிடறதில்லை தம்பி. வயசாயிடுச்க இல்ல. என்ன ரசம் பிடிக்கும்."

"நீங்க என்ன ரசம் பண்ணாலும் சாப்பிடறேன். அது உங்க இஷ்டம்."

"பூரணி கிளம்பேண்டி. கோயில் மூடிடப்போவுது."

அம்மா துரிதப்படுத்த பூரணி ஓடிப்போய் ஈரத்துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டாள். துண்டின் நுனிப்பகுதியை ஈரம் செய்து கமலக்கண்ணனிடம் நீட்டினாள்.

"துடைச்சுக்கோங்க. மோட்டர் பைக்ல வந்தது முகம் கொஞ்சம் டல்லா இருக்கு."

அவன் மறுபடியும் முகத்தை துடைத்துக்கொண்டான். அப்பா அவனுக்கு திருநீறு இட்டார்.

பளிச்சென்று முகம் மாறியது.

"வேட்டி உடுத்திக்கறீங்களா. இல்ல, பேண்ட்லயே போறீங்களா. வேணா... பேண்ட்லயே போங்க."

"ஏன் வேட்டி உடுத்திக்கறேனே."

கமலக்கண்ணன் கேட்டான்.

"வேட்டி உடுத்திக்கிட்டிங்கன்னா மாப்பிள்ளை மாதிரியே ஆயிடுவீங்க. கல்யாணம் ஆயிடுச்சா சொல்லலையேன்னு கேட்பாங்க. பேண்ட்லயே இருங்க."



இரண்டு பேரும் இறங்கி பொழிச்சலூர் சிவன் கோவிலுக்குப் போனார்கள்.

பொழிச்சலூர் அவர்களை வேடிக்கை பார்த்தது.

சிவன் கோவில் அதிக நடமாட்டமில்லாமல் வெறிச்சோடி இருந்தது. தூணருகே உட்கார்ந்திருந்த ஐயர் எழுந்து நின்று வரவேற்றார். கற்பூர ஆரத்தி காட்டினார்.

பூரணி கோயிலை அடிப்பிரதட்சணம் செய்ய கமலக்கண்ணன் ஆவலோடு ஏகப்பட்ட விஷயங்கள் பேசிக் கொண்டு வந்தான்.

"எல்லாம் சரி. எப்போ ஊருக்கு போறதா உத்தேசம். ஏதனா தகவல் வந்ததா. ஒண்ணுமே சொல்லலையே."

"ஒரு தகவலும் வரலை பூரணி. கிணத்துல போட்ட கல்லு மாதிரி இருக்கு."

## 25

"நாம சீனுவாசய்யரை பார்க்க போகும்போது அவர்கிட்ட உங்க ஜாதகம் பத்தி கேட்கலாமா."

பூரணி கேட்டாள்.

"என் ஜாதகம் அவர் கிட்ட இருக்குமே."

"இருக்கு. அவர் நேத்துகூட அப்பாகிட்ட பேசிகிட்டிருந்தார். வெளிநாடு போற வாய்ப்பிருக்குன்னு."

"அப்படியா... எப்போவாம்."

"அது எனக்கு தெரியலையே."

"இப்பவே கேட்கலாம் வரியா."

"போகலாம்."

அவன் முன்னும் பின்னும் அலைய அவள் நிதானமாக கோவிலை சுற்றிவிட்டு வந்து வணங்கினாள்.

அவர்கள் இரண்டு பேரும் சீனுவாசய்யர் வீட்டிற்குப் போனார்கள்.

அங்கு போய் உட்கார்ந்ததும் குடிக்க நீர் கொடுத்தார். ஒரு கண்ணாடி டம்ளர் நிறைய சாத்துக்குடி ஜூஸ் கொடுத்தார்.

"இதைக் குடிச்சேன்னா எப்படி சாப்பிடறது. அவங்க வீட்ல ஏதேதோ பண்ணி வச்சுருப்பாங்களே."

"சாத்துக்குடி ஜூஸ்தான் சாப்பிடு. இது அப்பிடைசர். நல்லா சாப்பிடலாம். ஜீரணசக்தி அதிகமாகும். பசி பரபரக்கும், ரெண்டு சொட்டு இஞ்சி சாறு வேற விட்டிருக்கேன். கொஞ்சம் தேன் விட்டிருக்கேன்."

அந்தக்கலவை மிக நன்றாக இருந்தது. கமலக்கண்ணன் ரசித்துக் குடித்தான்.

"ஒண்ணுமில்லைங்க. காலைலேர்ந்தே உழப்பிட்டிருக்கேன். ஒருவேளை வெளிநாடு போறது உடனடியா தீர்மானம் ஆச்சுன்னா நாம என்ன பண்றது. பதினைஞ்சு நாள்ல புருஷோத்தமர் கல்யாணம் முடிப்பாரா."

"தப்புங்க. அப்படி முடிக்க சொல்லும்படி அவரை வற்புறுத்தாதீங்க. அவரால முடியும். அது வேற கதை. ஆனா நிறைவா இருக்குமா. அவங்க ஊர் மனுஷாள் வரவேணாமா. நீங்க ஆறுமாசம் டைம் கொடுக்கறதுதான் சரி. நிதானமா ஒவ்வொரு வேலையையும் பார்த்துப் பார்த்து ஒன்னுக்கு நாலு தடவை யோசனை பண்ணி செய்யலாம். அவர்கிட்ட காசு இருக்கு இல்லைன்னு சொல்றதுக்கில்லை. ஆனா, நல்லபடியா கல்யாணம் முடிக்கறதுக்குண்டான அவகாசம் நீங்க அவருக்கு கொடுத்துத் தான் ஆகணும்."

"அடுத்த மாசமே ஊருக்கு போகும் படியா இருந்ததுன்னா..."

"ஊருக்கு போயிட்டு வந்துடுங்க. வந்து கல்யாணம் வச்சுக்கலாம்."

"ஊருக்கு போயிட்டு வரது தள்ளிப்போயிச்சுன்னா."

"தள்ளின்னா எவ்வளவு தள்ளி..."



"அதான் சொல்றேனே பத்தொன்பது மாசம் காண்ட்ராக்ட் அதான் போடுவாங்க. பூரணி காத்துக்கிட்டுதான் இருக்கணும். வேற வழியில்லை. அதான் சொல்றேன் நான் கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிடறேன்னு."

"கமலக்கண்ணன் நல்லவேளை. இதை எங்கிட்ட பேசினீங்க. இது பூரணி காதுல கூடவிழலை. இது அவ அப்பா அம்மா காதுல விழுந்ததுன்னா உன் பொண்ண நாலு ராத்திரி அனுபவிச்சுட்டு ஊருக்கு கிளம்பறேன்டான்ற மாதிரி படும். அவங்களுக்கு ரொம்ப வேதனையா இருக்கும். பூரணியை சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கறேன்ற வேகத்துல நீங்க பேசறதா அவங்க புரிஞ்சுக்கமாட்டாங்க. தப்பா விழும். இப்படி பேசிடாதீங்க."

சீனுவாசய்யர் அடிக்குரலில் சொல்ல அவன் முகம் மாறினான்.

சீனுவாசய்யரின் முழங்கால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

"எனக்கு புரியுது. நான் பேசினது முட்டாள்தனம்."

உடனடியாக ஒத்துக்கொண்டான்.

"உங்களுக்கு அப்படி தோணுதா சீக்கிரமே கூப்பிடுவாங்கன்னு."

"ஆமாம். அவங்களுக்கு அங்க ஆள் தேவைப்படுது. நான் வேண்டான்னு சொன்னாக்க வேற ஆள்ரெடியா இருக்கு. அவரு என்னை ரொம்ப முக்கியமான விஷயமா நினைச்சு திரும்பத் திரும்ப கூப்பிடறாரு. நான் கல்யாணம் பண்ணிக்கிட்டு ஆறு மாசம் பொறுத்து வரேன்னு சொன்னா சரின்னும் சொல்லலாம். நீ வேண்டாம். நான் வேற ஆள் பார்த்துக்கறேன்னு என்னை ஒதுக்கவும் ஒதுக்கலாம். மறுபடியும் இந்த வாய்ப்பு கிடைச்சாலும் கிடைக்கலாம். கிடைக்காதும் போகலாம். வேற தேசத்துல ஓமன், ஏமன்னு கிடைச்சா இவ்வளவு காசு கிடைக்காது கம்மியா கிடைக்கும்."

"நான் இப்போ ரிக்ல வேலை செய்யப்போறேன். அமெரிக்கன் ரிக். அமெரிக்கன் ரிக்குன்னா காசு ஜாஸ்தி.மரியாதையா

நடத்துவான். ஆனால் வேலை கசக்கி பிழிஞ்சுடுவான். நான் வெளிய விசாரிச்சப் பார்த்தேன். ஒன்னேகால் ரூபா கிடைக்கறது கஷ்டம்தான். எழுவத்தஞ்சுக்கு மேல கிடைக்கும். பணத்துக்கு ஆசைப்பட்டு ரொம்பவும் வேலை செய்துடாத. உன் உடம்பு தாங்கணும். இந்த வெய்யில் சாதாரணமில்லை. அப்படின்னெல்லாம் பயமுறுத்தறாங்க. ஓமன்ல வெய்யில் நம்மஊர் வெய்யில் மாதிரி இருக்குமாம். துபாய்ல வெய்யில் ரொம்ப ஜாஸ்தி இருக்குமாம். காலையில ஆறு மணிலேர்ந்து பதினோரு மணிவரைக்கும் வேலை செய்யணும். பிறகு ரெஸ்ட். திருப்பி சாயந்தரம் நாலுலேர்ந்து எட்டு ஒன்பது மணிவரைக்கும் வேலை செய்யணும். திருப்பி படுத்துடணும். வேலை செய்யறது தூங்கறது இது ரெண்டுக்கும் தான் நேரம் இருக்கும். மத்தபடி வேற எதுவுமே பண்ணமுடியாது. எதுவுமே யோசிக்க முடியாதுன்னு சொல்றாங்க. வேலை கஷ்டம் அப்படின்றது தெள்ளத் தெளிவா தெரியுது. கல்யாணத்தை பண்ணிட்டு இந்த வேலையை ஒத்துக்கணுமான்னு தோணுது. ஆனால், சம்பளத்தை பார்த்தா என் வாழ்க்கையில இந்த சம்பளம் நான் வேற எங்கயும் சம்பாதிக்க மாட்டேன்னு தெரியுது. ஒரு வேளை இந்த வாய்ப்பை விட்டுட்டேன்னா வேற எப்பவும் வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காதோ அப்படின்னு ஒரு பயம் இருக்கு''

சீனுவாசய்யர் கமலக்கண்ணனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதுல இன்னொரு நல்ல விஷயம் என்ன தெரியுங்களா. எங்க கம்பெனியில வேலை செய்தவங்க அப்படியே சப்ஜாடா போயிருக்காங்க.எல்லோரும் தமிழ் தெரிஞ்சவங்க. என்கூட வேலை செய்தவங்க.ஒரே காம்பவுண்டுக்குள்ள எல்லாரும் இருக்காங்களாம். தமிழ்நாட்டுக்குள்ள இருக்கறாமாதிரியே இருக்குமாம்."

"உங்களுக்கு குவாட்டர்ஸ் உண்டா."

சீனுவாசய்யர் ஆவலோடு அவனைக் கேட்டார்.

"ஹாஸ்டல் மாதிரி உண்டு. வீடு மாதிரி அதிகாரிகளுக்கு மட்டும்தான். அவங்க சம்பளத்துக்கு லேடீஸ், குழந்தைங்களை கூட்டிக்கிட்டு போறது நல்லாயிருக்கும். நமக்கு அவ்ளோ வாட்டப்படாதுன்றாங்க."

"எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை. கல்யாணம் கட்டிக்கிட்டு போன்னு சொல்றதா. நீ போய் வந்த பிறகு கல்யாணம் வச்சுக்கலாம்னு சொல்றதா, இல்லை, கல்யாணம் கட்டிகிட்டு எப்படியாவது இவளையும் கூட்டிக்கிட்டு போன்னு சொல்றதா. ஒரே குழப்பமா இருக்குப்பா. ஆனா, வெளிநாடுக்கு போகாத இங்கயே எதனா வேலைசெய் அப்படின்னு சொல்லமட்டும் மனசு வரலை. இது காசு சம்பாதிக்க வேண்டிய காலம். காசு சம்பாதிச்சாதான் மரியாதைன்னு இருக்கற காலம். பின்னாடி ஐய்யய்யோ ஒரு நல்ல வாழ்க்கைய விட்டோமே இதுக்கு கல்யாணம் காரணமாப் போச்சே அப்படின்னு நீ நொந்து போகக் கூடாது.ஆனா, கஷ்டப்பட்டாலும் ரெண்டு வருஷம், மூணு வருஷம் நல்ல காசு சேர்த்துடலாம். சம்பாதிச்ச புருஷோத்தமருக்கு அனுப்பினா பார்த்து பார்த்து நிலம் வாங்கி உனக்குன்னு வீடு கட்டி வச்சுடுவாரு. இன்னும் மூணு வருஷம் போனா புருஷோத்தமருக்கும் ஓடி ஆட முடியாது. நல்லா யோசனை பண்ணி பார்க்கற போது நீ கிளம்பி போறது சரி. மறுபடியும் என்ன சம்பளம் கிடைக்கும்னு தெள்ளத்தெளிவா கேட்டுக் கோப்பா. அங்க போய் சம்பளம் கம்மின்னு திரும்பி வராத. எல்லா விவரமும் தெளிவா கேட்டுக்கோ. குழப்பத்தை ரொம்ப முகத்தில் காண்பிக்காதே. அவங்க வீட்ல நல்லா சிரிச்சபடி சாப்பிடு."

சீனுவாசய்யர் கெட்டிக்காரத்தனமாக அவனை எச்சரித்தார்.

அவன் சீனுவாசய்யரை நன்றியோடு நோக்கினான்.

முகத்தை மாற்றி கலகலப்பாக பூரணியோடும், பூரணி அம்மாவோடும் பேசிச் சிரித்து விருந்து சாப்பிட்டான். அந்தக் கூடத்திலேயே பாய் போட்டு தலையணை கொடுக்க கண் மூடி சிறிது நேரம் படுத்துக்கிடந்தான்.

பூரணி சாப்பிடும் வரை காத்திருந்தான்.

பூரணி அருகே வந்து உட்கார்ந்து கொள்ள தலையணையை மடியில் வைத்துக்கொண்டு அவன் எதிரே சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டான்.

பூரணியும், அப்பாவும், அம்மாவும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

பூரணியை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

"அடேயப்பா... என்ன அழகு."

மனம் வியந்தது.

"நான் விரும்பியது போலவே அழகியை, அறிவார்ந்தவளை எனக்கு மனைவியாகக் கொடுத்துவிட்டாய் உனக்கு நன்றி" என்று இனம் தெரியாத, முகம் தெரியாத கடவுளை நோக்கிக் கும்பிட்டான்.

"என்னிக்கோ ஒரு நாள் நீ ஒட்டு மொத்தமா எனக்கு சொந்தமாவ இல்ல."

பூரணி ஆமாம் என்று சொன்னாள்.

சற்று அருகே நகர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"வீட்டுக்குப் போய் என்ன பண்ணுவீங்க."

"உன்னையே நினைச்சுண்டிருப்பேன்."

"நிஜமாவா."

"சத்தியமா."

"என்னன்னு நினைச்சுப்பீங்க."

அவன் உளறத் துவங்கினான். அவள் ரசிக்கத் துவங்கினாள். பதிலுக்கு வஞ்சனையின்றி அவளும் உளறினாள்.

"நகைப்பெட்டி பிடிச்சுருந்ததா" என்று கேட்டான்.

"ரொம்ப நல்லாயிருந்தது. அதை எடுத்தவுடனேயே அது நிறைய நான் ஒரு நாள் நகை வச்சுக்கப்போறேன்னு தெள்ளத் தெளிவா தெரிஞ்சுது. உங்களுக்கு நானும் ஒண்ணு வாங்கி வச்சுருக்கேன்."

அவள் எழுந்து போய் பீரோவைத் திறந்து ஒரு கூலிங்கிளாஸ் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் அணிந்து கொண்டான்.



"ப்பா... கரெக்டா இருக்கு. பயந்துகிட்டே இருந்தேன்."

"எப்போ வாங்கினது இது"

"முந்தாநேத்து கடைக்கு போன போது ஏதாவது உங்களுக்கு வாங்கணும்னு தோணிச்சு."

"ஆக... இப்பவே என்னை வெளிய போடான்னு அனுப்ப தயாராயிட்டியா."

வியப்பானகுரலில் கேட்டான்.

"என்ன... புரியலையே."

"துபாய்க்கு போறேங்கறதுனால கூலிங்கிளாஸ் வாங்கிக் கொடுக்கறியா."

"துபாய்க்கு போறீங்களா."

"தெரியலை."

"என்னமோ போறேன்ற மாதிரி சொன்னீங்க."

"ஆமாம். போகும்படியா நேரும்."

"எப்போ."

"தெரியலை."

"இதென்னங்கடா இது. இப்படியே பதில் சொன்னா என்ன அர்த்தம். எதுவா இருந்தாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க."

"அதுவும் எங்கிட்ட இல்லை."

"ஏன்."

"ஆறுமாசத்துக்குள்ள உங்க அப்பா கல்யாணம் பண்றது கஷ்டம் தான் அப்படின்னு சீனுவாசய்யர் சொல்றாரு. ஆறுமாசம் வரைக்கும் காத்துக்கிட்டிருந்தேன்னாக்க இந்த வாழ்க்கையே விட்டுப் போயிடும். நான் குறைஞ்சபட்சம் பத்துப் பதினஞ்சு நாள்லயாவது கிளம்பும்படியா இருக்கும். அதுக்குள்ள கல்யாணம் வைன்னு நான் அப்பாகிட்ட எப்படி சொல்றது."

"திரும்ப எப்போ வருவீங்க."

அவன் பதில் சொல்லாது இருந்தான்.

"சொல்லுங்க. போனா எப்போ வருவீங்க."

அவள் இரண்டாம் முறை சற்று உரக்கக் கேட்டாள்.

"குறைஞ்சபட்சம் பத்தொன்பது மாசம்."

"கடவுளே... ஒன்றரை வருஷமா. நிச்சயதார்த்தம் ஆகி ஒன்றரை வருஷமா. அது எப்படி. சரியா வராதுங்களே'

"வேற வழியில்லை."

"உங்க வீட்டுக்குத் தெரியுமா."

"தெரியாது."

"ஏன் சொல்லலை."

"என்னான்னு சொல்றது."

"அப்பாக்கிட்ட சொல்லிட்டீங்களா."

"இல்லை."

"யார்கிட்ட சொன்னீங்க."

"சீனுவாசய்யர்கிட்ட மட்டும் சொன்னேன். என்ன பண்றதுன்னு தெரியலையே. அந்த வேலையே வேண்டாம்னு இந்த ஆறாயிரம் ரூபா வேலையிலயே இருக்கலாமா."

"இருந்துடுங்க. ஆறாயிரம் ரூபா போதும்.நான் குடித்தனம் பண்ணி காட்டறேன்."

"அங்க போனா என்ன சம்பளம் தெரியுமா."

"சொன்னீங்களே. நிறைய வரும்னு."

"குறைஞ்சபட்சம் எழுவத்தஞ்சாயிரம். மாசத்துக்கு அறுபதாயிரம் ரூபா சேர்க்க முடியும் அல்லது அனுப்ப முடியும். காசை சேர்த்து புருஷோத்தமர்கிட்ட கொடு. புருஷோத்தமர் நிலம் வாங்கட்டும். பொழிச்சலூர்ல வீடு கட்டட்டும்னு சொல்றாரு."

அவள் இன்னும் நகர்ந்து உட்கார்ந்தாள்.

"நிஜமாவே போகப் போறீங்களா."

"தெரியலை பூரணி. ஒருபோன் காலுக்கு வெயிட் பண்ணிண்டிருக்கேன். எப்போ வேணா கிளம்பறதுக்கு தயாரா இருஅப்படின்னு சொன்னாரு. எப்போ ஸார்னு கேட்டேன். தெரி



யலை பத்துநாளோ, பதினைஞ்சு நாளோ ஒரு மாசமோ அப்படின்னாரு. அதிகபட்சம் ஒரு மாசம். ரொம்ப சீக்கிரம், பத்து நாள்."

"அப்போ ஆறுமாசம் வெயிட் பண்ண மாட்டீங்களா."

"வெயிட் பண்ணலாம். இந்த வேலை கிடைக்காது."

பூரணி திகைத்துப்போய் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் மெல்ல நகர்ந்து அவள் கைகளை பற்றிக் கொண்டான். மெல்ல இழுத்து தன் பக்கம் சாய்த்துக் கொண்டான்.

சமையறையில் அம்மாவும், அப்பாவும் அடிக்குரலில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

பூரணி அவர்களை திரும்பிப் பார்த்துவிட்டு இவனிடம் இன்னும் நெருங்கி வந்தாள். கன்னத்தோடு கன்னம் வைத்தாள்.

"அவ்ளோ நாள் காத்துக்கிட்டிருக்க முடியாதுங்க. ரொம்ப கஷ்டங்க அது."

தழுதழுத்த குரலில் சொன்னாள்.

சகலத்தையும் உதறிவிட்டு பேசாமல் இங்கேயே உட்கார்ந்து விடலாமா என்ற ஒரு எண்ணம் கமலக்கண்ணனுக்கு ஏற்பட்டது.

இவளை துடிக்க வைக்கத்தான் நிச்சயதார்த்தம் செய்து கொண்டோமோ என்ற வருத்தம் கவ்விற்று.

## 26

"பயப்படாத. நடுவுல வரலாம். ஒரு ஆறுமாசத்துக்கு நடுவுல பதினஞ்சுநாள் லீவு போட்டுட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டு மறுபடியும் போய் இன்னொரு ஆறு மாசம் கழிச்க..."

கமலக்கண்ணன் இழுவையாய் பேசினான்.

"வரமுடியலைன்னா... துபாய் போகாத இருக்கணும். என்ன பண்றதுன்னு உங்க வீடு சொல்லணும்."

"நீங்க என்ன சொல்றீங்க."

"நான் போகணும்னு சொல்வேன்."

"ஏன்."

"காசு, காசு முக்கியம். ரொம்ப குறிப்பா கல்யாணம் பண்ணிக்கணும்னா காசு முக்கியம். குறைஞ்சபட்சம் பத்து லட்ச ரூபாயோட வந்துடுவேன். பொழிச்சலூர்ல பத்து லட்ச ரூபாய்க்கு வீடுன்னா, அது நாலு ரூம், பெரிய ஹால் கொல்லைப்புறம் தோட்டம் கூட பண்ணிடலாம்."

"போங்க. வேணாம்னு சொல்லலை. கல்யாணம் பண்ணி என்கூட பத்து நாள் குடித்தனம் பண்ணிட்டுப் போங்க. பத்து நாள் கூட வேணாம். அஞ்சுநாள். அஞ்சுநாள் கூடவேணாம் ஒரேயொரு நாள் ஒரு ராத்திரி என்கூட இருந்துட்டுப் போங்க எனக்கு நிம்மதியாயிடும். எங்க வீட்டுக்காரரு சம்பாதிக்கப் போயிருக்காருன்னு சந்தோஷமா எல்லார்கிட்டயும் சொல்லி சுத்தி சுத்தி வந்து கிட்டிருப்பேன். உங்களுக்காக நூறு தடவை கோயிலுக்கு போவேன்."

"நான் ரெடி. இதே பொழிச்சலூர்ல தாலியை கட்டிட்டு உங்க வீட்ல ஒரு ரெண்டு நாள் தங்கிட்டு ஊருக்கு போக நான் ரெடி. உங்கப்பா ரெடியா."

"நிச்சயதார்த்தத்து அன்னிக்கு எனக்கு மனசே சரியில்லை. எங்கயோ போய் தனியா உட்கார்ந்துக்கணும் போல தோணிச்சு. என்னடா ஏன் சந்தோஷமா இல்லை. எல்லாம் நல்லா தானே நடக்குது அப்படின்னு நினைச்சேன். இப்போதான் புரியுது நீங்க கல்யாணத்துக்கு முன்னாடியே கிளம்பிட்டீங்கன்னா எனக்கு ரொம்ப சிரமம். கல்யாணம் தள்ளிப் போயிடுச்சா... கல்யாணம் தள்ளிப் போயிடுச்சான்னு ஊர்ல இருக்கற அத்தனை பேரும் விசாரிப்பாங்க."

"உண்மை. நான் தப்பு பண்ணிட்டேன். நிச்சயதார்த்தம் பண்ணாம இருந்திருக்கலாம். அன்னிக்கு கூட போன் வந்தது."



"என்னான்னு."

"கிளம்பலையா. கிளம்ப தயாரா இருக்கியான்னு. இருக்கேன் சார்னு என்னை மறந்து சொல்லிட்டேன். நிச்சயதார்த்தம் வேணாம் தள்ளி வச்சுக்கலாம்னு சொல்றதுக்கு அப்போ மனசு ஆவலை."

"ஏன்."

"பூரணியை விடறதுக்கு எனக்கு மனசு இல்லை."

அவன் உண்மையைச் சொல்லிட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் கண்களில் மெல்ல நீர்கோர்த்துக் கொண்டு தேங்கி நின்றது.

அவள் மூச்சை வேகமாக இழுத்து கண்ணில் தேங்கிய நீரை உள்ளே இழுத்துக் கொண்டாள். நீர் மூக்கில் இறங்கி அவளை தொந்தரவு செய்தது.

"போன் கால் வராது போயிடவும் வாய்ப்பு இருக்கு இல்ல."

அவள் நிமிர்ந்திருந்து தன்னை சரி பண்ணிக்கொண்டு பேசினாள்.

"அப்படியும் ஒரு வாய்ப்பு இருக்கு. ஆனா, நான் கொஞ்சம் உடைஞ்சு போயிடுவேன்."

"ஏன்."

"ஆறாயிரம் ரூபாதான்னு கவலை வந்துடும்."

"இந்த ஆறாயிரம் ரூபாயை நம்பித்தானே நான் உங்களை கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டேன். நீங்களும் கல்யாணத்துக்கு சரின்னு சொன்னீங்க."

"ஆமாம். ஆனா, இப்போ கூடுதலா சம்பாதிக்கறதுக்கு எனக்கு யோக்கியதை இருக்கு அப்படின்னு தெரிஞ்ச பிறகு அதை விடறதுக்கு மனசு வரலை."

"சீனுவாசய்யர் என்ன சொன்னாரு."

"மூணு வருஷம் கஷ்டப்பட்டு காசு சேர்த்துகிட்டு வந்துடு. இங்கயே நிம்மதியா சாப்பிடலாம்."

"இங்க யார் வேலை கொடுப்பாங்க."

"குருட் ஆயில் உபயோகப்படுத்தற பிரைவேட் கம்பெனி யில வேலை கிடைக்கும் அல்லது இந்த வேலையே இல்லாம சம்பாதிச்சு வந்த காசுல வேற ஏதாவது தொழில் ஆரம்பிக்க லாம். தொழிற்சாலைக்கு பைப் லைன் போடறதுக்குன்னு தனி ஃபாக்டரி இருக்கு. அதுக்குன்னு தனி இன்ஜினீயர்ஸ் இருக் காங்க. அவங்ககிட்ட வேலை செய்யலாம்."

"மூணு வருஷமோ, முப்பது வருஷமோ கல்யாணம் பண்ணி கிட்டு போனீங்கன்னா நல்லாயிருக்கும். கல்யாணம் பண்ணாம போனீங்கன்னா நான் எப்படித் தாங்குவேன்னு தெரியலை."

"எனக்கும் அந்தக் கவலை இருக்கு. உங்கப்பாகிட்ட பேசிடட்டுமா."

"வேணாம் தெரிய வேணாம்."

"ஏன்."

"என்னன்னு முடிவாகட்டும். அதுக்கப்புறம் பேசிக்கலாம்."

"புரியலை நீ சொல்றது."

"ஒருவேளை நீங்க வேணாம்னு சொல்லிட்டாங்கன்னாக்க இந்தப் பேச்சுக்கே அர்த்தமில்லாம போகுமில்ல."

"ஆமாம்."

"அது என்னன்னு முடிவாகட்டும். நிச்சயமா உங்களை கூப்பிடட்டும். அப்போ வந்து சொல்லுங்க."

அவர்கள் இரண்டு பேரும் மௌனமாய் தரையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்

கமலக்கண்ணன் நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன. ரொம்ப அப்செட் ஆயிட்டியா."

"ஆமாம்."

"ஏன் கண்ணு."

"என் லைஃப் ஏன் இப்படி துரதிஷ்டமாவே இருக்கு. எங்க நல்லது கிடைச்சாலும் எனக்கொரு முழுமையான சந்தோஷம் அனுபவிக்க முடியலை. நல்ல புடவை வாங்குவேன். எங்க



யாவது ஒரு ஓரத்துல ஒரு ஓட்டை இருக்கும்.யாராவது பார்த்து என்ன ஓட்டை இருக்கிற புடவையா வாங்கியிருக்க அப்படின்னு சிரிப்பாங்க. எனக்கு அழுத்துப்போயிடும். எல்லாருக்கும் பூ கொடுத்துக்கிட்டு வருவாரு ஐயரு. என் பக்கம் வந்ததும் பூ காலி ஆயிடும் அல்லது சாமந்திபூ கிடைக்கும். இந்தப்பூவை வச்சுக்கோ அப்படின்னு ஒரு மாமி மல்லிகைப் பூவோ எதுவோ தருவாங்க. எனக்கு வாங்கிக்கணும்னே தோணாது. ஏன் எனக்கு மல்லிகைப்பூ கிடைக்கலை அப்படின்னு கோபம் வரும். அதே மாதிரிதான் இப்பவும் நடந்திருக்கு."

அவளுக்கு சொல்லும் பொழுதே அழுகை வந்து விட்டது.

அவனால் அதைப் பார்க்க முடியவில்லை. மெல்ல எழுந்தான்.

ஹாலில் மாட்டியிருந்த கண்ணாடி முன்புபோய் தலைவாரிக் கொண்டான். ஈரத்துண்டால் முகம் துடைத்துக் கொண்டான். மறுபடியும் விபூதி இட்டுக் கொண்டான்.

"அப்போ நான் கிளம்பட்டுங்களா" உள்ளே எட்டிப்பார்த்து புருஷோத்தமரைப் பார்த்து சொன்னான்.

புருஷோத்தமர் கைகழுவி வெளியே வந்தார். விடை கொடுத்தார்.

வீட்டிலுள்ள மூன்று பேருக்குமே தொண்டை வரையிலும் ஏதோ ஒரு துக்கம் இருந்தது.

கமலக்கண்ணன் அவர்களை உற்றுப்பார்த்தான்.மெல்ல ஏறி மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான்

சீனுவாசய்யர் வெளியே வர அவருக்குக் கை காட்டினான். சரக்கென்று கிளம்பி பொழிச்சலூரை விட்டு பட்டணத்தின் நீண்ட நெடுஞ்சாலையைக் கடந்தான்.

அன்று இரவு ஒன்பது மணிக்கு அவனுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

"கமலக்கண்ணன் இ-மெயில்ல விசா பேப்பரை அனுப்பியிருக்கேன். வாங்கிட்டு ஒரு வாரத்துல வந்துடறியா"

அவனுடைய பழைய மானேஜர் சந்திரசேகர் உற்சாகமாகப் பேசினார்.

"சம்பளம் எழுவத்தஞ்சாயிரம். ரிக் அலவன்ஸ் பதினைஞ்சாயிரம். தொண்ணூறாயிரம் ரூபா கிடைக்கும்யா. வந்துடு."

ஒரு பக்கம் அளவில்லாத சந்தோஷமும் இன்னொரு பக்கம் மிகப் பெரிய துக்கமும் கமலக்கண்ணனுக்கு ஏற்பட்டன.

வீட்டில் மற்றவரெல்லாம் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க ஈசிசேரில் சாய்ந்து கண்ணைமூடிக் கொண்டிருந்த அப்பா மட்டும் சரக்கென்று நிமிர்ந்து அவனை உற்றுப் பார்த்தார். அவன் தொடர்ந்து பேசுவதைக் கவனித்தார். பேசி முடித்ததும் மெல்ல எழுந்து வந்தார்.

"என்னடா" என்று ஒற்றை வார்த்தையாய் அவன் தோளைப் பிடித்துக்கொண்டு வினவினார்.

அவன் சிந்தனை வயப்பட்டவனாய் பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மறுபடியும் "என்னடா சொல்லு" என்று கேள்வி கேட்டார்.

"துபாய்க்கு கூப்பிடறாங்கப்பா. எழுவத்தஞ்சாயிரம் ப்ளஸ் பதினைஞ்சாயிரம். மொத்தம் தொண்ணூறாயிரம் சம்பளம். பதினெட்டு மாசத்துக்கு காண்ட்ராக்ட். இருவத்தஞ்சு நாள் வேலை. அஞ்சு நாள் லீவு. ரொம்ப அவசியம் நேர்ந்தாலொழிய நம்மூருக்கு போகாம இருக்கறது நல்லது. போனா குறையலாம். வேணாம் வராத வேற ஆள் வச்சுக்கறோம்னு சொன்னாலும் சொல்லிடலாம். பதினெட்டு மாசம் எந்தத் தொந்தரவும் இல்லாத அங்கயே இருக்கும்படியா வரச்சொல்றாங்க. பேப்பர்ஸ் அனுப்பிட்டாங்களாம். இங்க போய் விசா வாங்கிக்கணும். எவ்ளோ சீக்கிரம் கிளம்ப முடியுமோ கிளம்புன்றாங்க. டிராவல் ஏஜெண்ட்டுகிட்ட போனா அவன் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணி கொடுத்துடலாம். டிக்கெட்டெல்லாம் கம்பெனி பே பண்ணிடும். துணிமணியோட சர்டிஃபிகேட்டெல்லாம் எடுத்துக்கிட்டு போகணும். ப்ளாண்ட்டை எக்ஸ்பேண்ட் பண்றாங்களாம். இந்த நேரம் போனா புது கன்ஸ்ட்ரக்ஷன்ல வேலை செய்யலாமாம். பழசுல வேலை செய்யறதவிட புதுசு சுலபம்.



மடமடன்னு பைப் மாட்டிகிட்டே போகலாம். நாம போட்ட பைப்புன்றதால நமக்கு நல்லா தெரியும். தொடர்ந்து வேலை செய்யறதும் சுலபம். ஆறு பேர் எடுத்துருக்காங்க. பாம்பேலேர்ந்து மூணு பேர். கல்கத்தாலேர்ந்து ஒருத்தன். விசாகப்பட்டணத்துலேர்ந்து ஒரு ஆள். நான் ஒருத்தன். பாம்பேல இருக்கறவங்க ரெண்டு பேரும் மலையாளிஸ். எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ கிளம்புன்றாங்க, என்னப்பா பண்றது."

"என்னா பண்றதா, நிச்சயதார்த்தம் முடிச்சுட்டு கிளம்பினா என்ன அர்த்தம். யாராவது விடுவாங்களா. அதெல்லாம் ஒண்ணும் வேணாம். இங்க இருக்கற சம்பளம் போதும். இந்த சம்பளம் பார்த்துதானே பொண்ணு கொடுக்க வந்தாங்க. இங்க இருந்து கல்யாணத்தை முடிச்சுட்டு அதுக்கப்புறம் வரேன்னு சொல்லு."

"விடமாட்டாங்கப்பா."

"அப்போ போவாத."

"தொண்ணூறு ஆயிரம்ப்பா."

"பொண்ண பெத்தவனுக்கு என்னடா பதில் சொல்றது."

"என்னா... என்னா..." அக்காவும், அம்மாவும் ஓடிவந்தார்கள்.

"துபாய்க்கு கூப்பிடறாங்க. ஒரு வாரத்துல வரச் சொல்றாங்க. தொண்ணூறு ஆயிரம் ரூபா சம்பளமாம்."

"தொண்ணூறு ஆயிரமா. போக வேண்டியது தானே. ஏன் நின்னுகிட்டிருக்க."

அக்கா உடனே அவனை துரத்துவதில் முனைந்தாள்.

"நிச்சயதார்த்தம் பண்ணியிருக்கோம். போகவேண்டியது தானேன்றியே."

"நாம அப்பவே சொன்னோம். சீக்கிரமா கல்யாணம் பண்ணுங்கன்னு. அந்நாள் அக்கறையே இல்லாத இருந்தா?"

"ஏண்டி. போனவாரம் நிச்சயதார்த்தம் பண்ணிட்டு இந்த வாரம் ஊருக்கு கிளம்பறேன்னா பொண்ண பெத்தவன் சும்மா விடுவானா. என்னா... மப்புல பேசற."

அப்பா உரக்கக் கத்தினார்.

"நாங்க என்ன வேணும்னா பண்ணோம். இப்போதானே வந்தது. இந்த சம்பளம் எவன் தருவான். என்னமோ அவ வந்த வேளை துட்டு வரணும்னு இருக்கு. அதனால போறான். என்னா இப்போ போனா எப்போ வருவ. ஆறு மாசத்துல வந்துட மாட்டியா."

"இல்லை. பதினெட்டு மாசம் ஆகும்."

"பதினெட்டு மாசமா."

அம்மா திகைத்தாள். அக்கா பேசாதிருந்தாள்.

"எனக்கு தெரியாதுப்பா. நீ போய் பேசிக்கோ."

அம்மா கைதட்டி விட்டு நகர்ந்தாள்.

"என்னம்மா இப்படி பேசற."

"காலையில போறபோது எங்கிட்ட கேட்டுட்டா போன. நீயேதானபோன. நீயா போய் சொல்லு."

"அதெப்படி அவனா போய் சொல்லுவான். நான்தானே பாக்கு வெத்தலை மாத்தினேன். நான்தானே போய் சொல்லணும்."

"போங்க போய் சொல்லுங்க."

"உன்னை பக்கத்துல வச்சகிட்டுதானே மாத்தினேன். எருமை மாட்டையா பக்கத்துல வச்சக்கிட்டேன். விட்டேத்தியா பேசற. கிளம்பு கார் பிடிடா. ரெண்டு பேரும்போய் இந்த மாதிரி சமாச்சாரம், என்னா பண்றதுன்னு கேட்டுட்டு வரோம்."

"இதுல என்ன இருக்கு கேட்கறதுக்கு. அவனுக்கு நல்ல வேலை கிடைச்சிருக்கு போயிட்டு வரட்டுமே. இதோன்னா போயிடப் போறது ஒன்றரை வருஷம்."

"உன் பொண்ணா இருந்தா விடுவியா. நிச்சயதார்த்தத்தை முடிச்சுட்டு ஒன்றரை வருஷத்துக்கப்புறம்தான் கல்யாணம்னா உன் பொண்ணா இருந்தா விடுவியான்னு கேட்கறேன்."

"இதோ பாருங்க. கல்யாணம் பண்ணி உடனே கிளம்பியிருந்தான்னாக்க என்னா கதி. எனக்கு தெரிஞ்ச ஒருத்தன் கல்யாணம் பண்ணிகிட்டு அமெரிக்காவுக்கு போனான். போன வேளையில அங்க ஏகப்பட்ட குழப்பம். விசா கிடைக்கறதெல்லாம் பிரச்சினை. ரெண்டு தடவை பொண்டாட்டி விசா ரிஜக்ட் ஆயிப்போச்சு. கல்யாணமாகி அவபோய் சேர்றதுக்கு மூணு வருஷம் ஆச்சு குடித்தனம் பண்றதுக்கு. அவன் வந்துட்டு வந்துட்டு போனானேதவிர அவன் கூட தனிக்குடித்தனம் பண்றதுக்கு மூணுவருஷம் ஆச்சு. அந்த மாதிரியெல்லாம் இல்லாத ஒன்றரை வருஷத்துல டக்குனு வந்துடறானே அது பெரிய விஷயமில்லையா. கல்யாணம் பண்ணிகிட்டு போனா தான் வேதனை. கல்யாணத்துக்கு முன்னாடியே போனா நல்லது தானே. கையில காசை நம்மகிட்டயா கொடுக்கப் போறான். அவன் பொண்டாட்டிக்கிட்ட தானே கொடுப்பான்."



"யப்பா... இதுங்க அல்பக்கணக்கு இப்பவே போட ஆரம்பிச்சாச்சு டேய்... நாளைக்கு காலையில நீயும் நானும் போய் பேசிட்டு வரலாம்டா."

மறுநாள் விடிந்து வெய்யில் ஏறியவுடன் அப்பாவும், பிள்ளையும் மோட்டார் சைக்கிளில் ஏறி பொழிச்சலூர் போனார்கள். பூரணியின் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

## 27

பூரணியின் அப்பா வரவேற்றார். உட்காரச் சொன்னார். அப்பாவும் பிள்ளையும் உள்ளே நுழைந்தார்கள்.

"எங்க அம்மாவையும் காணும், பூரணியையும் காணோம்" ஆவலாக கமலக்கண்ணன் கேட்டான்.

"கோயிலுக்கு போயிருக்காங்க. என்னமோ ராத்தூக்கமே சரியில்லை. கனவெல்லாம் கெட்ட கெட்ட கனவா வருது அப்படின்னு அவங்கம்மா சொன்னா. இவ அம்மாவை கூட்டிகிட்டு கோயிலுக்கு போயிருக்கா."

அப்பாவும், பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

புருஷோத்தமர் அவர்களை வினோதமாக நோக்கினார்.

"என்னா ஒரு மாதிரி பார்த்துக்கறீங்க" என்று கேட்டார்.

"அவனுக்கு துபாய்க்கு வரச்சொல்லி போன் வந்தது. பத்து மணிக்கு விசாவுக்கு போகணும். டிக்கெட்டும் கொடுத்துடு வாங்க. ஒரு வாரத்துல கிளம்பும்படியா இருக்கும். என்ன பண்ணலாம், ஏது பண்ணலாம் அப்படின்னு கேட்டுட்டு போகறதுக்காக வந்திருக்கேன். தொண்ணூறு ஆயிரம் சம்பளம்."

பெருமூச்சு விட்டபடி கமலக்கண்ணனின் அப்பா பேசினார். புருஷோத்தமர் அந்தப் பெருமூச்சை வாங்கி தானும் எதிரொலித்தார்.

"நேத்து நாங்களும் பேசினோம். கமலக்கண்ணன் வந்து மத்தியானம் ஒரு மாதிரி போகும்படியா இருக்கும்னு சொன்னாரு. ராத்திரி நாங்க படுக்கறதுக்கே ரெண்டு மணி ஆயிப் போச்சு. அப்பப்போ எழுந்து இது என்ன ஆகும். அது என்ன ஆகும்னு கேட்டோம். பொழிச்சலூர்ல ஒரு தாலியை கட்டிட்டு கிளம்பிடறேன்னு சொன்னாரு. ஆனால் இன்னிக்கு தேதிலேர்ந்து பதினேழு நாளைக்கு நல்ல முகூர்த்தம் இல்லை. அதனால முகூர்த்தமில்லாத முகூர்த்தத்துல தாலி கட்டறது சரியா வராதுன்றது எங்க அபிப்ராயம். போயிட்டு வரட்டும். குழந்தை காத்துக்கிட்டிருப்பா."

"என்னங்க டக்குன்னு சொல்றீங்க."

"வேற வழி.வேற வழி சொல்லுங்க. என் பொண்ண அது வரைக்கும் அடைகாக்கறா மாதிரி நான் காத்துகிட்டிருப்பேன். அது ரொம்ப மெலிசான பொண்ணு. நிறைய கனவு. இப்பவே கமலக்கண்ணன்... கமலக்கண்ணன்... அவரு பேரையே சொல்லிகிட்டிருக்கு. எப்போ மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டாலும் வாசலுக்கு ஓடிப்போய் பார்க்குது. ஒன்றரை வருஷம் எப்படி காத்திருக்கும், எனக்குத் தெரியலைய்யா" புருஷோத்தமர் குரல் உடைந்து தழுதழுத்தது.

கமலக்கண்ணன் அப்பா எழுந்திருந்தார். புருஷோத்தமரின் தோளைத் தடவினார். அவருடைய ஆதரவைப் பார்த்ததும்



சட்டென்று முகத்தை கைகளால் பொத்திக் கொண்டு விசும்பி விசும்பி அழுதார்.

"குழந்தை மேல தப்பில்லைய்யா. நான் பாவி. ஏதோ பாபம் பண்ணியிருக்கேன். நல்லபடியாக ஒரு கல்யாணத்தை சட்டு புட்டுனு முடிக்கறதுக்கு எனக்குத் தெரியலை.எங்கயோ, யார் கல்யாணத்தையோ குறுக்க கை நீட்டி மறிச்சருக்கேன். அதான் என் பொண்ணு கல்யாணம் தள்ளிப் போகுது. காத்திருக்கோமய்யா, வேற வழி, காத்திருக்கோம். கமலக்கண்ணன் போயிட்டு செளகரியமா வரட்டும். நிறைய காசோட வரட்டும். சந்தோஷமா வரட்டும். வந்து என் பொண்ண கைய பிடிச்சுகிட்டு எங்கயாவது கூட்டிக்கிட்டு போகட்டும்."

கமலக்கண்ணன் அப்பா இன்னும் நெருக்கமாய் அவரைத் தழுவிக் கொண்டார்.

"என்ன குழந்தை மாதிரி அழுவறீங்க. உங்க பொண்ணு வந்த வேளை ஆறாயிரம் ரூபா சம்பளம் வாங்கியிருந்தவனுக்கு தொண்ணூறு ஆயிரம் ரூபா கிடைக்குது. அது எவ்ளோ பெரிய பாக்கியம். லஷ்மி தேவியே வந்த மாதிரி. என்ன கொஞ்சம் வெயில்லயும், மழையிலயும் கஷ்டப்படணும். கஷ்டப்பட்டுட்டுப் போறான். கஷ்டப்படறதுக்குண்டான வலுவும், வயசும் இருக்கற நேரம் இது. நல்லவேளை நாற்பது வயசுல ஊர் மாத்தி போகலையே. அம்பது வயசுல போய் வேலை செய்யணும்னு தலையெழுத்து இல்லையே. இப்போ கஷ்டப்பட்டு வேலை செய்தோம்னா வீடு வாசலெல்லாம் நிறைஞ்சுருக்கலாம். இப்போ எல்லாரும் இருவத்து நாலு வயசுலதான் கல்யாணம் பண்ணிக்கறாங்க. உங்க பொண்ணுக்கு இருவத்திரண்டு வயசு. சரியான வயசுல கல்யாணம் ஆகப்போகுது அவ்ளோதானே."

"பொண்ணு ரொம்ப ஏங்கிடுமய்யா."

"ஆமாம். ஆனா சுதாரிச்சுக்கும். ஒரு மாசம் கஷ்டப்படும். இவன்கிட்டேயிருந்து லெட்டர் போக்குவரத்து வந்தபடியே இருந்தா அதை வச்சு அது தளதளன்னு வளர்ந்துடும். பொம்பளை மனசு விசித்திரமானது. அதுக்கு ஒரு பிடி கொடுத்துட்டோம் விடவே விடாது. எத்தினி வருஷமா இருந்தாலும் அது

இழுத்து தன் மடியில உட்கார வச்சுக்கும். கமலக்கண்ணன் எங்கயும் போயிடமாட்டான். கல்யாணத்துக்கு நான் கேரண்டி."

"எங்க... வீட்லேர்ந்து யாரும் லேடீஸே வரலை."

புருஷோத்தமர் அழுகையை அடக்கிக் கொண்டே கேட்டார்.

"கூப்பிட்டோம். கார் கீரு ஏதாவது தேடணும். மோட்டார் சைக்கிளா இருந்தால் நாங்க ரெண்டு பேருமே வந்துடலா மேன்னு சட்டுனு கிளம்பிட்டோம். வீட்ல நாளைக்கே வரச் சொல்றோம்."

"வேணாங்க. என்னாத்துக்கு அவங்க வேற வந்து ஏதாவது பேசி மனசு கஷ்டமாயிடும்."

"யாரும் எதுவும் பேசமாட்டாங்க. எங்க வீட்டு பொண்ணுங் களுக்கு கொஞ்சம் போறாது அவ்ளோதான். மத்தபடி யாரும் கெட்டவங்க இல்லய்யா. நாங்களும் ஒன்னுக்கு ரெண்டு பொண்ணு பெத்து கல்யாணம் பண்ணிக் கொடுத்து நல்ல படியா குடித்தனம் பண்ணனுமேன்னு பக்பக்குனு உட்கார்ந் தவங்கதான். பொண்ணு உண்டாயிட்டு வரப்போ நல்லபடியா புள்ள பெக்கணுமேன்னு கவலைப்பட்டவங்கதான். நல்ல படியா புள்ளை பெத்த பிறகு நல்லபடியா கொண்டு போய் மாப்பிள்ளைகிட்ட சேர்க்கணுமே அப்படின்னு யோசனை பண்ணினவங்கதான். நான் வாழ்ந்தவன்யா. உம்ம ஒவ்வொரு துக்கமும் எனக்கு புரியுது. கவலைப்படாதீங்க. இது எல்லாம் நல்லதுக்குத்தான்."

பூரணி அம்மாவோடு உள்ளே நுழைந்தாள்.

கமலக்கண்ணன் அப்பாவோடு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திகைத்தாள்.

என்ன... என்று கண்களால் கேட்டாள்.

வலது உள்ளங்கையை தட்டையாக்கி விமானத்தில் போக வேண்டும் என்பது போல் கமலக்கண்ணன் சைகை செய்தான்.



சட்டென்று பூரணிக்கு கண்ணில் ஜலம் கோர்த்தது. மெல்ல தூண் பிடித்துக் கொண்டு தரையைப் பார்த்து நின்றாள். கண்ணிலிருந்து கன்னத்தில் நீர் வழிந்து தரையில் தெறித்தது.

அங்கு அசாதாரணமான மௌனம் நிலவியது.

"எனக்குப் பிடிக்கலீங்க நீங்க சொல்றது. நாங்க வந்து நீங்க துபாய்க்கு போகணும்னோ தொண்ணூறு ஆயிரம் சம்பாதிக் கணும்னோ ஆசைப்படவேயில்லை. இங்க ஆயில் கம்பெனி யில நல்ல வேலை அப்படின்னு சொன்னீங்க. உடனே சம்மந்தம் பண்ணி நாங்க கொடுத்தோம். புள்ள நல்லவனாக இருக்கான். அது போறும் எங்களுக்கு அப்படின்னு சொன் னோம். ஆறாயிரம் ரூபா சம்பளத்துல நீங்க குடித்தனம் பண்ணா போதும்னு சொல்லிட்டு தான் உங்களுக்கு பொண்ணு கொடுக்க நாங்க வந்தோமே தவிர நீங்க துபாய்க்கு போக ணும்னோ, கூட துட்டு சம்பாதிக்கணும்னோ ஆசைப்படவே யில்லை. தயவு செய்து எங்கயும் போகாத என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிகிட்டு இங்கயே குடித்தனம் பண்ணுங்க அது போதும். உங்களை அனுப்பிட்டு நாங்க வயித்துல நெருப்பை கட்டிகிட்டு உட்கார்ந்திருக்க முடியாது."

பெருங்குரலில் அதிரலாய் பூரணியின் அம்மா பேசினாள்.

அவள் பேச்சில் ஆதங்கம் கொப்பளித்தது.

அந்தப் பேச்சிற்கு யாரும் எதிரொலிக்காது மௌனமாக இருந்தார்கள்.

"வீட்ல யாரும் வரலீங்களா. கட்டில் வேணும், பீரோ வேணும், மெத்தை வேணும், தலைகாணி வேணும்னு மூணு பேருக்கு நாலுபேர் வந்து கேட்டாங்களே. இதைச் சொல்றதுக்கு பொம்பளைங்க வரமாட்டாங்களா."

இன்னும் அவள் குரலில் ஆவேசம் அதிகமாகியது.

"எனக்கு இஷ்டமில்லை உங்க புள்ள வெளியூர் போறதுல. அப்படி போறதா இருந்தா என் பொண்ணு கழுத்துல தாலியை கட்டிட்டு மூணு நாள் தங்கிட்டுத்தான் போகணுமே தவிர நிச்சயதார்த்த கோலம்கூட போட்டது அழியலை. அதுக்கு முன் னால கிளம்பினாக்க எங்க மனசு பொறுக்காது."

"எனக்கு புரியுதும்மா. தொன்னூறாயிரம் ரூபா..."

"என்னங்க தொன்னூறாயிரம் பெரிய தொன்னூறாயிரம். அத்தினி சம்பாதிச்சு என்னாங்க பண்ணப்போறோம். இவரு போய் வெயில்லயும், மழையிலயும் ஊர் தெரியாத ஊர்ல, சரியா சாப்பாடு இல்லாத, சரியா தண்ணி இல்லாத கூரையை பார்த்து உட்கார்ந்துகிட்டு அப்படியொரு காசு சம்பாதிச்சு திரும்பி வரணுமா. அந்த மாதிரி வேலைக்கு போய் உடம்புக்கு வந்த [illegible]ன்னா சரிபண்ண முடியுமா. சுவர் வச்சிதானே சித்திரம். உடம்பை பாழ்பண்ணிக்கவா காசு சம்பாதிக்கறது. அம்பது டிகிரி வெய்யிலாம். உடம்பு பூத்து போயிடுமாம். பொத்து பொத்துனு கீழ விழுவாங்களாம். இதோ கோயில் வாசல்ல கேட்டுட்டு தான் வரோம். பொழிச்சலூர்லேர்ந்து போன பையன் சொல்றான். போறும்பா சாமின்னு கையெடுத்து கும்பிட்டுட்டு ஓடியாந்துட்டேன்றான். கிரேன் ஆப்பரேட்டர்னு கூட்டிகிட்டு போய் ஆடு மேய்க்கவும், ஒட்டகம் மேய்க்கவும் விட்டிருக்காங்க."

"அப்படியில்லைங்க. இது பெரிய கம்பெனி. அந்த மாதிரியான வேலைக்கெல்லாம் என்னை அனுப்பமாட்டாங்க. நான் டிப்ளமோ ஹோல்டர்."

கமலக்கண்ணன் சற்று அலுப்போடு பேசினான்.

"நீங்க போறது எதுக்கு, ஏன் அப்படிங்கறது எனக்கு முக்கியமில்லை. என் குழந்தைய கல்யாணம் பண்ணிக்கிட்டு போங் கோன்றதுதான் உங்க கால்ல விழுந்து கேட்டுக்கறேன்."

பூரணியின் அம்மா கைகூப்பினாள். பூரணி மெல்லப்போய் அவள் தோளை அழுத்தினாள். பேச வேண்டாம் என்று சொன்னாள்.

"ஏண்டி... ஏண்டி பேச வேணான்னு சொல்ற. கோயில் தூணைப் பிடிச்சுட்டு விக்கி விக்கி அழுத இல்ல. எல்லாரும் பார்த்துட்டு என்ன என்னன்னு கேட்டாங்க இல்ல. தலை வலின்னு சொன்னோம் இல்ல."

"ஏன் பூரணி, ஏன் கோயில்ல போய் அழுவணும்."



கமலக்கண்ணன் மெல்லிய கோபத்தோடு பூரணியைப் பார்த்தான்.

"ஏன் பூரணி, வேணாம்னு சொல்லு போகலை. ஆனா, அழுதாக்க எனக்கு தாங்காது பூரணி."

"நீங்க போறதுக்கு அழுவலீங்க. அங்க போனா என்ன கஷ்டங்களெல்லாம் இருக்குன்னு அந்த ஐயர் பையன் சொன்னான். நான் துடிச்சுட்டேன். இத்தினி கஷ்டப்பட்டு சம்பாதிக்கணுமா. நீங்க ஹாயா உட்கார்ந்து காப்பி குடிக்க முடியுமா? சோறு தின்ன முடியுமா. தூங்க முடியுமா. குளிக்க முடியுமா. பாட்டு கேட்க முடியுமா. ஷெட்லதான் படுக்கணுமாமே."

"தப்பு பூரணி அந்த மாதிரி கிடையாது. எல்லா இடமும் ஏசி பண்ணியிருக்கும், வேலை செய்யற இடத்தைத் தவிர. ஒரு மணி நேரம் போன பிறகு வேற ஆள் வருவான். நம்ம ஏசி ரூம்ல உட்கார்ந்து உடம்பை துடைச்சுட்டு தண்ணியை குடிச்சுட்டு காத்துகிட்டிருக்கணும். அவன் ஒரு மணிநேரம் பொறுத்து உள்ள வந்தவுடனே நாம போய் வேலையை எடுக்கணும். அப்படி மாத்திமாத்திதான் செய்யணும். அங்க யாராலயும் அந்த வெயில்ல இருக்க முடியாது. வேலை கஷ்டம்தான். ஆனா, காசு நிறைய. இப்படி கைநீட்டி மறிச்சீங்கன்னா நான் போகலை. நின்னுடறேன். ஆனால், வாழ்க்கையில் பெரிய வாய்ப்பு. வேறெங்கயாவது வேலை கிடைக்கலாம். அங்க ஆள் தெரியாத ஆள், பாஷை தெரியாத ஊர்ல நான் தவிக்கறதுக்கு நம்ம ஆளுங்களா நாப்பது பேர் இருக்கற இடத்துக்கு போறதுல என்ன தப்பு. பதிமூணு பேர் தமிழர்கள். நான் போனா பதினாலு. வடக்கேயிருந்து வந்தவங்க கம்மி.

தெலுங்கர்களும், மலையாளிகளும் கொஞ்சம் கன்னடர்களும் இருக்காங்க. ஒரே குடும்பமா ஒன்னா இருக்காங்க. வந்துட்டா வீட்டு நினைப்பே தோணாது. தமிழ்நாட்ல வெளிவரத்தனை படமும் பார்த்துடலாம். அத்தினி கேசட்டும் கிடைக்கும். கேசட் வாங்கிண்டு வந்து ரொட்டேஷன்ல வருவாங்க. நமக்குன்னு ரெக்கார்ட் பண்ணித்தருவாங்க. பைப்லைன்ல குருட் ஆயில் போயிகிட்டிருக்கும் போது நாம பக்கத்துல

உட்கார்ந்து பார்த்துகிட்டிருக்கணும். காதுல வாக்மேன் மாட்டிகிட்டு சினிமா பாட்டு கேட்டுகிட்டே இருக்கலாம். எங்க இன்ஜினீயர் சந்திரசேகர், வாரியார் பிரசங்கம், சுகிசிவம் பிரசங்கம்னு கேட்டுகிட்டிருப்பாராம். பாட்டு கேட்கறதவிட அதுதான் ரொம்ப பிடிக்குமாம். காதுல தமிழ் கேட்டுகிட்டே இருக்கறது பெரிய சுகமாம்."

"என்ன பண்ணப்போறீங்க. போகணும்னு தீர்மானம் பண்ணிட்டீங்களா."

"சரின்னு சொன்னா போயிட்டு வரதுதாங்க எனக்கு ஆசை."

"ஒரு பொண்ணோட மனசு கொஞ்சம் கூட புரியாது இல்லை உங்களுக்கு."

பூரணியின் அம்மா மறுபடியும் உரக்கப் பேசினாள்.

மெல்ல கமலக்கண்ணனின் அப்பா எழுந்தார்.

"ரெண்டுல ஒன்னு தெள்ளத் தெளிவா அஞ்சு நிமிஷத்துக்குள்ள முடிவு பண்ணி சொல்லுங்க. மாத்திமாத்தி கத்துறதுல புண்ணியமில்லை. போகணுமா, வேணாமா. நீங்க சொல்றத விட புருஷோத்தமர் சொல்றதவிட அந்தப் பொண்ணு சொல்லட்டும். இவன் உன் எதிர்காலக் கணவன். அவனுக்கு ஒரு உயர்வு வந்திருக்கு. அதுல ஒரு துக்கம் பிரிவு இருக்குங்கறது உண்மைதான். அவன் வெளிநாடு போய் சம்பாதிச்சுகிட்டு வரட்டுமா வேண்டாமா. எல்லாரும் பேசறத விட, இன்னொருத்தர் இதுக்கு வந்து சமாதானம் சொல்றத விட, நீ முடிவு பண்ணு. நீ என்ன முடிவு பண்றியோ அதுக்கு அவனை கட்டுப்பட வைக்கறது என் பொறுப்பு."

"நான் அவர் கூட கொஞ்சம் வெளிய போயிட்டு வந்து இதைப் பத்தி பேசறேன்" பூரணி மிருதுவாய் பதில் சொன்னாள்.

"ரொம்ப நல்லதாப்போச்சு. என்னை பஸ் ஸ்டாண்ட்ல இறக்கி விட்டுடறா. பஸ் பிடிச்சு வீட்டுக்கு போறேன். பேசிட்டு வாங்க."

"ஆனாலும், உங்க வீட்ல லேடீஸ் வந்து இதைச் சொல்லாதது எனக்கு ஒரு அவமரியாதையாத்தான் படுது."



"ஆமாம். அவன் ஊருக்கு போறதுக்கு முன்னாடி எங்க வீட்ல இருக்கறவங்களை வரச்சொல்றேன். அவங்களுக்கு ஒரு சங்கடம், எப்படிடா இதைச் சொல்றதுன்னு. அதை புரிஞ்சுக்கோங்க நீங்க."

கமலக்கண்ணன் அப்பா விடாமல் பேசினார். கிளம்பினார்.

கமலக்கண்ணன் அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி பஸ் ஸ்டாண்டில் விட்டான்.

அவர் பஸ் ஏறியதும் அப்படியே வண்டியை திருப்பி வீட்டிற்கு வந்தான்.

## 28

**வீ**ட்டிற்குள் பூரணியின் அம்மா சமையலறையில் நின்று விசும்பிக் கொண்டிருந்தாள்.

பூரணியின் அப்பா பேப்பர் படிப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தார். பூரணி எங்கே என்று கேட்க வலப்பக்கம் திரும்பி அங்கே இருக்கின்ற அறையைக் காண்பித்தார். சற்று நேரம் தயங்கி நின்ற கமலக்கண்ணன் மெல்ல கதவு திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்தான். உள்ளுக்குள்போய் கட்டிலில் குப்புறப் படுத்திருக்கிற பூரணியை தொட்டுப்பார்த்தான். மெல்ல வந்து கதவை லேசாக மூடினான்.

பூரணி அருகே போய் அவள் தலையைத் தடவி "கண்ணு போகட்டுமா.வேண்டாமாடா..."

அவள் திரும்பினாள். துள்ளி எழுந்து அவனைத் தழுவிக் கொண்டாள். இறுக்கிக் கொண்டாள். அவன் மெல்லத் தடுமாறி அவளைச் சுற்றி அணைத்துக் கொண்டான்.

"போயிட்டு வாங்கய்யா. போய் சம்பாதிச்சுட்டு வாங்க. சம்பாதிக்கப் போறேன்னு ஒரு புருஷன் சொல்றபோது வேணாம்னு ஒரு பொண்டாட்டி எப்படி சொல்றது. ஜாடையா எல்லோ சொன்னேன் எங்கம்மாவை கத்தாத அப்படின்னு. உங்களை பார்த்தவுடனே கத்த ஆரம்பிச்சுட்டா. தயவுசெய்து அவனை

மன்னிச்சுடுங்க. அவளை ரொம்ப திட்டினேன். என் வாழ்க்கைய நாசம் பண்ணாதேன்னு சொன்னேன். நானாடி நாசம் பண்றேன்னு அழுவறா. உங்க அப்பா எதிர்க்க கத்திட்டாளேன்னுதான் எனக்கு கவலை. உங்கப்பா போய் உங்கம்மாகிட்ட சொன்னாக்க அது ரொம்ப மோசமா போயிடும்."

"இல்லை. எங்கப்பா சொல்ல மாட்டார். நல்லவேளை எங்கம்மா வரலை. எங்கம்மா வந்திருந்தா உங்கம்மா பேச எங்கம்மா பேச பெருசாயிட்டிருக்கும்."

கமலக்கண்ணன் நெட்டுயிர்ப்போடு பேசினான்.

"முழு மனசோடதான் சொல்றியா நான் போயிட்டு வரலாம்னு."

"எனக்கு புரியலை. ஒரு செகண்ட் போகணும்னு தோணுது. இன்னொரு செகண்ட் என்னாத்துக்கு அங்கபோய் கஷ்டப்பட்டுகிட்டு, இருக்கிற இடத்துல சந்தோஷமா இருக்கலாமேன்னு தோணுது. இங்க இருந்தா அங்க நினைப்பு. இப்படித்தான் நான் அல்லாடப்போறேன்னு தெள்ளத் தெளிவா தெரியுது. ஆனால், பத்து லட்ச ரூபா ஒன்றரை வருஷத்துல சம்பாதிச்கண்டு இங்க வந்து இறங்கறது தான் புத்திசாலிதனம்."

"அந்த பையன்- பொழிச்சலூர் பையன் நீங்க போனபிறகு இங்க வந்தான். வேலை கஷ்டம்னு சொல்றாங்களே தவிர மறுபடியும் யார்னா கூப்பிட மாட்டாங்களான்னு தான் இருக்கு. அறுபதாயிரம், முப்பதாயிரம்னு அங்க சம்பாதிக்க முடியும். இங்க பாருங்க மூவாயிரம் ரூபாய்க்கு செருப்படி பட்டுக்கிட்டிருக்கேன் அப்படின்னு அழுகிறான். உங்க வீட்டுக்காரரு அங்க போகப் போறாரா, எனக்கு எதுனா வாய்ப்பிருந்தா சொல்லச் சொல்லுங்களேன் அப்படின்னு வந்து சொல்லிட்டு போகறதுக்கு வந்திருக்கான். ஏண்டா... முடியாதுன்னு சொல்லிட்டு இப்போ மறுபடியும் போகணுங்கற அப்படின்னேன்.

"காக ருசிக்கா. காக ருசியை விடவே முடியாது... அங்க போய் சம்பாதிச்க பழக்கப்பட்டுட்டா திருப்பி திருப்பி காச சம்பாதிக்கத்தான் தோணுமே தவிர எத்தினி கஷ்டம் வந்தாலும் எல்லாத்தையும் எத்துக்கலாம்னு தோணுமே தவிர இங்க இருக்க



தோணாது. இங்க வாழ்க்கை வேஸ்ட்டுக்கா, வெறும் வீணாப் போகுது' அப்படின்றான். அப்போதான் எனக்கு புரிஞ்சுது. பொழிச்சலூர் சிவனே அனுப்பி வச்சாமாதிரி. இங்க உட்கார்ந்தா உங்க மனசு படாதுபாடு படும். வேஸ்ட் பண்றோம்னு தோணும். ஒரு புருஷன் தண்டத்துக்கு பொண்டாட்டியோட இருக்கோம்னு தோணிச்சன்னாக்க அப்புறம் அது நல்ல குடித்தனமா இருக்காது. சின்ன விஷயத்துக்கெல்லாம் நொந்துக்கும்படியா ஆயிடும். பத்து ரூபா கேட்டாக்க இல்லைன்னு சொல்ல மனசு வராது. ஐயோ பத்து ரூபா கேட்கறான்னு பத்தாயிரம் ரூபா கொடுக்க வேண்டிய யோக்கியதை வந்துதே அப்படின்னு அந்த இடத்துக்கே புத்தி போகும். அதனால எல்லாத்தையும் உதறிட்டு போயிட்டு வாங்க. கல்யாணம் ஆகியிருந்தா நல்லாயிருக்கும். ஆகலை அதுவும் ஒரு விதத்துல நல்லது. கல்யாணமாகியிருந்தா நான் இங்க இருக்க முடியுமா. உங்கப்பாவுக்குத்தான் சோறு போட்டுகிட்டு. உங்கம்மாவுக்கு கைகால் பிடிச்சு விட்டுகிட்டு இருக்க முடியும். இப்போ அது இல்லை. எங்க வீட்ல நான் இருக்கேன். இது ஒரு வகையில் நிம்மதி. நல்லபடியா வரணுமே, நல்லபடியா கல்யாணம் ஆகணுமேன்னு ஒன்றரை வருஷமா காத்துகிட்டுருக்கேன் பாருங்க அது ஒரு வகையில் துக்கம். மாத்தி மாத்தி அனுபவிச்சுத்தான் ஆகணும். நல்லபடியா போயிட்டு வாங்க. போகக் கூடாதுன்னு தடுக்கறதுக்கு எனக்கு எந்த ரைட்டும் இல்லை. நான் சந்தோஷமா அனுப்பறேன்."

அவன் தோளில் அவள் முகம் பதித்துக் கொண்டாள். அவன் அவள் கன்னத்தை தேக்கினான். உதடுகளில் முத்தமிட்டான். அவன் தொடத்தொட அவளுக்குள் ஆசைகள் கிளர்ந்தன. கட்டிலில் அவன் மார்பு மீது தன் முதுகு பதித்து நெகிழலாய்க் கிடந்தாள்.

"பூரணி காபி அனுப்பட்டுமாடி."

அம்மாவின் குரல் கதவு பக்கம் கேட்டது.

அவள் எழுந்தாள். உடையை சரி செய்து கொண்டாள். தலையை வாரினாள். கதவு திறந்து சமையலறைக்குப் போய் அவள் கையாலேயே காபி கலந்தாள். கொண்டு வந்து அவன் முன்பு நீட்டினாள்.

"அஞ்சு நிமிஷத்துல கிளம்பிடறேன்."

பின் பக்கம் போய் முகம் அலம்பிக் கொண்டாள். பல் தேய்த்தாள். மறுபடியும் முகம் கழுவினாள்.

கூடத்தில் உட்கார்ந்து காபி குடிப்பவனைத் தாண்டி அறைக்குள்போய் கதவு சார்த்தி உடைகள் மாற்றிக் கொண்டாள். ஜிமிக்கி ஆட, குழல் அசைய தேவதை போல வாசனையோடு வெளியே வந்தாள்.

"எங்க போறோம்னு தெரியலைம்மா. எங்கனா அப்படியே சுத்திட்டு சாய்ந்தரம் ஆறு மணிக்குள்ள வந்துடறோம். வீணா சுத்தாத. அப்பா கூட சண்டை போடாத. தலையெழுத்து தலையெழுத்துன்னு புலம்பாத. நல்லதுக்குத்தான். அவரை நல்லபடியா போயிட்டு வாங்கன்னு நான் சொல்லிட்டேன். அவரு சரின்னு சொல்லிட்டாரு. இனிமே இதைப் பத்தி எதிர்ப்பா பேசவேணாம். அவங்க வீட்லேர்ந்து ஏதாவது போன் வந்தால் மிருதுவா பேசுங்க. சாதாரணமா சிநேகிதமா பேசுங்க. கத்தி சண்டை போட்டு நீங்க ஏன் வரலை, அவங்க ஏன் வரலைன்னு கேள்வி கேட்காதீங்க. வாங்க போகலாம்."

கமலக்கண்ணனை பார்த்துக் கூப்பிட்டாள்.

கமலக்கண்ணன் அவர்களிடம் விடைபெற்று விட்டு மோட்டார் சைக்கிளை கிளப்பினான். பின்னால் உட்கார்ந்து அவன் தோளை பிடித்துக்கொண்டாள்.

"கொஞ்சம் மெல்ல போங்க, அவ மோட்டார் சைக்கிள்ல இது வரைக்கும் போனதில்லை."

புருஷோத்தமர் எச்சரித்தார்.

"நிதானமா போறேன் மாமா கவலைப்படாதீங்க."

அம்மாவும், அப்பாவும் அவன் கமலக்கண்ணன் தோளை பிடித்துக் கொண்டு புன்சிரிப்போடு போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"கல்யாணமாயிட்டு போயிருக்கலாமே... கல்யாணமாயிட்டு போயிருக்கலாமே... இப்படி அரைகுறையா மனசை தவிக்க விட்டுட்டு போறீங்களே."



அம்மா உள்ளுக்குள் நுழைந்து முகத்தில் அடித்துக் கொண்டு அழுதாள்.

"போதும்டி நிறுத்து."

புருஷோத்தமர் அதட்டல் போட சமையலறைக்கு ஓடினாள்.

மோட்டார் சைக்கிள் பொழிச்சலூரிலிருந்து தேசிய நெடுஞ்சாலையில் சென்னையை நோக்கி ஓடிற்று.

"மோட்டார் சைக்கிள்ல போனதே இல்லையா."

"யார் சொன்னா.ரெண்டு தடவை போயிருக்கேன். எங்க அப்பாவுக்கு தெரியாது."

"அப்படியா யாரோட?"

"ஒண்ணு எங்க மேனேஜரோட ஒரு தடவை. அதுக்கு முன்னாடி சீனுவாசய்யர் பையன் மோட்டார் சைக்கிள்ளதான் போவான். அவன் ஒரு தடவை கூட்டிட்டு போயிருக்கான். ரெண்டு தடவை போயிருக்கேன். பாக்ஸ்ஃபைல்னு சொல்லு வாங்க அது ஒரு தடவை கால்ல விழுந்து கண்டு விரல்ல நகம் பெயர்ந்து ரத்தமான ரத்தம். மேனேஜர் என்னை கூட்டிகிட்டு போய் டாக்டர்கிட்ட சொல்லி நகத்தை எடுத்து அதைச் சுத்தி கட்டு போட்டுட்டு அப்படியே கொண்டு போய் வீட்ல விட்டாரு. சீனுவாசய்யர் பையன், பூரணி உனக்கு புடவை வாங்கித்தரேன் அப்படின்னு சொல்லி தாம்பரம் கூட்டிகிட்டு போய் புடவை வாங்கி கொடுத்தான். தனக்கு ஃபாரின் போறதுக்கு வாய்ப்பு வந்தா மூணு லேடீஸுக்கு புடவை வாங்கி கொடுக்கறதா பொழிச்சலூர் சிவன் கிட்ட வேண்டிண்டிருந்தான். முதல் புடவை எனக்கு கொடுத்தான். மத்தவங்களுக்கெல்லாம் சாதாரண டெரிகாட்டன் புடவை. எனக்கு பட்டுப் புடவை."

ஒரு குழந்தைபோல் பூரணி சொல்ல கண்ணாடியில் அவளுடைய குதூகலத்தைப் பார்த்து கமலக்கண்ணன் சந்தோஷமானான்.

வெள்ளையான பெண். உண்மையான பெண் என்று உள்ளுக்குள் ஒரு நினைவு ஏற்பட்டது.

"என் கூட மோட்டார் சைக்கிள்ல வாரது பயமாயிருக்கா."

"இல்லையே. நல்லா ஓட்டறீங்களே."

"சுடிதார் போட்டு வந்திருக்கலாம், இருக்கில்ல."

"ஓ... ரெண்டு செட் வச்சுருக்கேன். ஏன்."

"சுடிதார் போட்டு வந்தா ரெண்டு பக்கமும் கால் போட்டு உட்காரலாம்."

"வேணாம்ப்பா. எனக்கு இப்படி உட்கார்ந்து வரதுதான் ஜோரா இருக்கு."

"எனக்கு அவ்வளோ ஜோரா இல்லை."

"ஏன்."

"ரெண்டு பக்கமும் உட்கார்ந்தா பிரேக் போடும் போது முதுகுக்கு இதமா இருக்கும்."

"ச்சீ..." என்று கமலக்கண்ணன் ஆவலுக்கு அவள் கூவி முற்றுப் புள்ளி வைத்தாள்.

"எங்க போகப் போறீங்க."

"விசா வாங்கறதுக்கு டிராவல் ஏஜன்ஸி போகப் போறேன்."

அவர்கள் டிராவல் ஏஜன்ஸியை நோக்கிப் போனார்கள்.

வாசலில் வண்டி நிறுத்தினார்கள். படியேறினார்கள்.

"துபாய் விசாவா. கல்யாணிராமன் ஆறாவது டேபிள்" என்று அடையாளம் காட்ட அங்கு போய் நின்றார்கள்.

"நாங்க டிராவல் ஏஜண்ட்டு தான். டிக்கெட் விசா கொடுக்கறதுதான் எங்க வேலை. ஆனால், அந்தக் கம்பெனி உங்க ஒரிஜினல் சர்ட்டிபிகேட்ஸை செக் பண்ணச் சொல்லி எங்களுக்கு பேக்ஸ் அனுப்பியிருக்கு. கொண்டு வந்திருக்கீங்களா."

"கொண்டு வந்திருக்கேன் மேடம்."

அவன் நீட்ட கல்யாணிராமன் பூரணியைப் பார்த்து அழகாகச் சிரித்தாள்.

"உங்க வொய்ஃபா."



"வுட்பீ மேடம்."

"அப்படியா... நீங்கதானே போறீங்க துபாய்க்கு."

"ஆமாம்."

"கல்யாணம் பண்ணிகிட்டு போகவேண்டியதுதானே" கல்யாணிராமன் சிரிப்போடு பேசினாள்.

"இல்லீங்க மேடம். போனவாரம் தான் நிச்சயதார்த்தம் ஆச்சு. உடனே என்னை அங்க கிளம்பி வரச்சொல்லி போன் வந்தது. கிளம்பறேன்."

"போனா வர லேட்டாகாது?"

"ஆமாம். மேடம் பதினெட்டு மாசம் காண்ட்ராக்ட் போட்டிருக்கேன்."

"நிச்சயதார்த்தம் ஆயிட்டு ஒன்றரை வருஷம் காத்துண்டிருக்கணுமா. கொடுமை இல்லையா அது."

"நீங்க கொடுமை அப்படின்னு சொன்னீங்கன்னா, நான் எல்லா சர்டிபிக்கேட்டையும் எடுத்துகிட்டு வீட்டுக்கு போயிடறேன்."

"ஐய்யய்யோ நான் அப்படியெல்லாம் சொல்லலை. போறதும் போகாததும் உங்க இஷ்டம்" கல்யாணிராமன் கூவினாள்.

"இவங்க போயிட்டு வாங்கன்னு தைரியமா சொன்னாங்க அதனாலதான் கிளம்பறேன்."

"இட்ஸ் அ குட் ஸ்பிரிட். காக சம்பாதிங்க. காக சம்பாதிங்க காக ரொம்ப முக்கியம். சம்பாதிக்கற வயசு. சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கற காலகட்டம் இது. ஆறாயிரம் ரூபாய் சம்பாதிச்சு ரேஷன் கடையில அரிசி வாங்கி, சர்க்கரை வாங்கி, கெரசின் வாங்கி குடித்தனம் பண்றத விட ரெண்டு வருஷம் வேலை செய்து கை நிறைய காசு கொண்டு வந்து பேங்க்ல போட்டு நிதானமா சாப்பிடலாம். போயிட்டு வந்தீங்கன்னா திரும்பத்திரும்ப போகத் தோணுமே தவிர இங்க இருக்கவே தோணாது. இந்த மாதிரி வெளிநாடு வேலைவாய்ப்பு தட்டி விட்டவங்க எனக்குத் தெரிஞ்சு யாருமே இல்லை. நம்ம தேசம் வறுமையான தேசம் ஸார். போய் காசு சம்பாதிச்சு கொண்டு

வாங்க. கத்தரிக்காய், முருங்கைக்காய் விக்கறவனுக்கெல்லாம் கூட உங்க காக போகும். அவனும் நல்ல படியா இருப்பான். இந்த மாதிரி டிராவல் ஏஜன்ஸிக்கெல்லாம் கூட மரியாதை இருக்கும். காரணம் துபாய்க்கு போறவங்களால தான். வேற யாரும் இல்லை."

அவள் சான்றிதழ்களை சரி பார்த்து திருப்பிக் கொடுத்தாள்.

அவன் பாஸ்போர்ட்டை வாங்கிக்கொண்டாள். விசா சேர்க்கப்பட்ட பாஸ்போர்ட் விரைவில் கிடைக்கும் நான் போன் செய்கிறேன் என்று சொன்னாள்.

"கவலைப்படாத அனுப்பி வைங்க மேடம். நல்லபடியா சம்பாதிக்க வரட்டும்."

இருவருடனும் கை குலுக்கினாள்.

அவர்கள் முன்னைவிட அதிகமான தெம்போடு வெளியே வந்தார்கள்.

## 29

"போறதுன்னு நிச்சயமாயிடுச்சு. என்னிக்குன்னு தெரியலை. என்னென்ன சாமான் வாங்கணும்னு ஒரு லிஸ்ட் போடுவோமா?"

"கோட்சூட் எடுக்கணுமா?"

"இல்லை. சட்டை, பேண்ட் எடுத்தாப் போதும். அண்டர்வேர் வாங்கணும். லுங்கிக்கு பதிலா தூங்கறதுக்கு பைஜாமா வாங்கிக்கோன்னு சொன்னாங்க."

"ரெடிமேட் தைக்கற கடை ஒண்ணு எனக்குத் தெரியும். சீனுவாசய்யர் பையன் ஒரு கடையில வாங்குவான். மாம்பலம் பக்கம் போங்களேன்."

அவர்கள் பல கடைக்கு ஏறினார்கள். துணி வாங்கினார்கள். ஹோட்டலில் சாப்பிட்டார்கள்.



பொழிச்சலூர் போகும்போது டிராவல் ஏஜண்ட் கல்யாணி ராமனைப் போய் பார்த்தார்கள்.

"இன்னும் அஞ்சு நாள்ல நீங்க கிளம்பும்படி இருக்கும். டிக்கெட், விசா எல்லாம் நாளைக்கு காலையில் என் கைக்கு வந்துடும். நான் போன் பண்ணி சொல்றேன். ஒருவேளை உங்களுக்கும் அங்க இருக்கற அரசாங்கத்துக்கும் சரியா வரலைன்னா நீங்க உடனடியா திரும்பி வரத்துக்கு நாங்கதான் டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணணும். அதாவது மறைமுகமா நான் உங்களுக்கு ஏஜண்ட்டா இருக்கேன். ஆகவே திரும்பி வரதுக்குண்டான டிக்கெட், போறதுக்குண்டான டிக்கெட் அதுக்கும் காக இப்போவே தரணும். அதைத்தவிர ஒரு செக்யூரிட்டி டெபாசிட்."

"எதுக்குங்க செக்யூரிட்டி டெபாசிட்?"

"ஒருவேளை உங்களுக்கு அங்க எதுனா ஆயிடுச்சு. நோய் வந்தது. எழுந்திருக்க முடியாம போச்சு அங்கேயிருந்து உங்களைக் கூட்டிக்கிட்டு வந்து ஏரோப்ளேன்ல ஏத்தற வரைக்கும் எங்க ஆளுங்க பார்த்துப்பாங்க. நான் சொல்றத தப்பா நினைக்க வேண்டாம். நீங்க இறந்துட்டீங்க, உங்க பாடியை பத்திரமா மெட்ராஸுக்கு அனுப்பணுமில்லை. அதுக்குண்டான வேலையையும் எங்க ஆளுங்க பண்ணுவாங்க. அந்த அமெரிக்கன் கம்பெனிக்கு நாங்க ஏஜண்ட். கூட்டிட்டுப் போறதும், கூட்டிகிட்டு வரதுக்கும் உண்டான பிரச்சனையை நாங்க பார்த்துக்கறோம்னு அந்த அமெரிக்கன் கம்பெனிக்கு நாங்க உத்தரவாதம் கொடுத்திருக்கோம். அதனால அந்த உத்தரவாதத்தை நிறைவேற்ற எங்களுக்கு நீங்க செக்யூரிட்டி டெபாசிட் கட்டணும்."

"இதையெல்லாம் கம்பெனியே ஏத்துக்கும்னு சொன்னாங்க."

"வாஸ்தவம். அங்க போய் இறங்கினதும் வந்த விமானக் கட்டணம் வாங்கிக்கலாம். அங்கேர்ந்து கிளம்பற போது வரதுக்குண்டான ஏரோப்ளேன் காசு கொடுத்துடுவாங்க. வேற எந்தப் பிரச்சனையும் பண்ணாம நல்லா வந்துட்டீங்கன்னாக்க இங்க வந்ததும் எங்ககிட்ட அந்த செக்யூரிட்டி காசை வாங்கிக்கலாம்."

"என்னங்க இவ்வளோ ஜாக்கிரதையா இருக்கீங்க?"

"என்ன பண்றது. நம்மாளுங்க ஏமாத்தறாங்களே. விதம் விதமா ஏமாத்தறாங்களே. நம்ம ஆளுங்க எப்படி ஏமாத்துவாங்கன்னு தெரியாத அமெரிக்கன் கம்பெனி அந்தப் பொறுப்பை எங்ககிட்ட ஒப்படைச்சிருக்கு. நாங்க ஒரு ஜாக்கிரதைக்காக டெபாசிட் வாங்கறோம். ஒழுங்கா போய் ஒழுங்கா வந்தா உங்களுக்கு ஒரு பைசா நஷ்டமில்லை."

"எவ்வளோ தர வேண்டியிருக்கும்."

"செக்யூரிட்டி டெபாசிட்டோட சேர்த்து அறுபதாயிரம் ரூபாய்."

"எப்போ கொடுக்கணும்."

"நாளைக்கு நான் உங்ககிட்ட டிக்கெட் கொடுப்பேன். அப்போ கொடுக்கணும்."

அவன் திகைத்தான்.

பூரணியைப் பார்த்தான்.

பூரணி என்ன என்று கண்களால் வினவினாள்.

"இவ்வளோ காசு கையில இல்லையே."

கல்யாணிராமன் அவர்களையே பார்த்தபடி இருந்தாள்.

"ஒருவேளை காசு இல்லைன்னா அதுக்கும் ஏற்பாடு பண்ணலாம்."

"எப்படிங்க?"

"இந்த மாதிரி விஷயத்துக்கு கடன் கொடுக்கறவங்க இருக்காங்க. அவர்கிட்ட பாண்ட்ல கையெழுத்து போட்டீங்கன்னா எழுவத்தஞ்சாயிரம் ரூபா கையெழுத்து வாங்கிட்டு அறுபதாயிரம் ரூபா கொடுப்பாங்க."

"பதினஞ்சாயிரம்?"

"அவங்களுக்கு ஒரு சேஃப்டி செக்யூரிட்டி டெபாசிட். அது தவிர மாசாமாசம் நீங்க வட்டி கட்டணும்."

"எத்தனைங்க?" அவன் கேட்டான்.

"பதினெட்டு பர்சென்ட்."



"வேணாம். வாங்க."

பூரணி எழுந்தாள்.

"ஏன் பூரணி?"

"அப்பாவை தரச்சொல்றேன்."

"பூரணி சும்மாயிரு. நான் இதெல்லாம் அப்பாகிட்ட கேட்க முடியாது."

"அதாங்க பெட்டர்."

கல்யாணிராமன் இடையில் புகுந்தாள்.

"பைனான்ஸ் கம்பெனியில வாங்காதீங்க. அவங்க சேட் காசே இல்லாதவங்களுக்கு உதவி பண்ணுவாங்க. உங்களுக்கு என்னங்க. அந்த மேடம் தரேன்றாங்க. போய் வாங்கிக்கோங்க. அதுதான் நல்லது. காலையில பதினொரு மணிக்கு காசோட வந்துடுங்க. லேட்டாச்சன்னா அவ்வளோதான்."

"என்ன பூரணி தடுக்குன்னு உங்கப்பா தருவார்னு சொல்ற. ஒரு வேளை உங்கப்பா தரலைன்னா நான் என்ன பண்றது?"

"அப்போ பைனான்ஸ் கம்பெனிக்கு போய் பார்த்துக்கலாம். இப்போ வாங்க. அப்பா எப்படி தர மாட்டேன்னு சொல்லுவாரு."

பூரணி மோட்டார் சைக்கிளை நோக்கி நடக்க அவன் பின் தொடர்ந்தான்.

"எனக்கு அப்பவே தெரியும். ஒட்டுமொத்தமா தன்னை அந்த வீட்டுக்கு வித்துட்டான்னு தெரியும். எழுவத்தஞ்சாயிரத்துக்கு அடமானம் வச்சுகிட்டியா. ரொம்ப சந்தோஷம். ஏன் எங்களை கேட்டா தரமாட்டோமா?"

அவன் வீடு ஒருவேளை உரத்த குரலில் பேசும்.

"டிக்கெட்டுக்கும் செக்யூரிட்டிக்கும் காசு கொடுக்கறது இருக்கட்டும். அங்க போனா செலவுக்கு காசு வச்சருக்கீங்களா?"

பூரணி சற்று உரத்த குரலில் கமலக்கண்ணனை கேட்டாள்.

"அங்க ஒண்ணும் செலவில்லையே."

கமலக்கண்ணன் மெல்லிய குரலில் பதில் சொன்னான்.

"கேட்கற கேள்விக்கு பதில் சொல்லுங்க. செலவுக்கு காசு வச்சருக்கீங்களா?"

"இருக்கு."

"எவ்வளவு?"

"மூவாயிரத்து நானூறு."

"மூவாயிரத்து நானூறு ரூபாயில என்ன வாங்குவீங்க. என்ன பண்ணுவீங்க. இதை அந்த ஊர் துட்டா மாத்த வேண்டாமா?"

"ரிசர்வ் பேங்க்ல எதுவோ தருவாங்க போலிருக்கு. அதுவும் தவிர பர்மா பஜார்ல அந்த நோட்டுக்குண்டான இந்திய ரூபாயை கொடுத்தா அவங்க காசு தருவாங்க. கொஞ்சம் கமிஷன் எடுத்துப்பாங்க."

"மூவாயிரத்து நானூறு ரூபா போறாது."

"ஆமாம். ஆனா போறும். நான் எப்படியும் சமாளிச்சுப்பேன்."

"எப்படி?"

"போனவுடனே மேனேஜர்கிட்ட ஏதாவது கடன் வாங்கி..."

"ஒரு ஊருக்கு போய் இறங்கினவுடனே கடன் வாங்குவீங்களா? நீங்க பேசறது நல்லாவேயில்லை. நீங்க ஏன் சரியா எந்த விஷயத்தையும் ப்ளான் பண்ணமாட்டேன்றீங்க?"

அவள் குற்றம் சாட்ட ஹோட்டலில் காபி டிபனுக்குச் சொல்லிவிட்டு காத்திருந்த கமலக்கண்ணன் கலவரமாய் அவளைப் பார்த்தான்.

அவள் சட்டென்று தன் மனதை மாற்றிக் கொண்டாள்.

"டிக்கெட் செலவுக்கு அறுபதாயிரம் ரூபா. அதைத்தவிர நாப்பதாயிரம் ரூபா. ஒரு லட்ச ரூபா நான் அப்பாவை தரச் சொல்றேன். அப்பாகிட்டகாக இருக்கு."

"தயவுசெய்து சும்மாயிரு பூரணி. என்னை அசிங்கப் படுத்தாத."

பூரணி சட்டென்று விலகி உட்கார்ந்து கொண்டாள்.

"என்ன அசிங்கம் இதுல. எனக்கு நீங்க பேசறதே புரியலை."



"கல்யாணமாகலை. நிச்சயதார்த்தம் ஆகி நான் பாட்டுக்கு ஊருக்கு கிளம்பறேன். போற நேரத்துல ஒரு லட்சரூபா காசு வாங்கினாக்க எல்லாரும் ஏதாவது சொல்லுவாங்க."

"எல்லாரும்னா உங்க வீட்லயா? உங்க அம்மாவா? உங்க அக்காவா? சொல்லிட்டுப் போறாங்க."

"என்னை மானங்கெட்டவனேன்னுவாங்க."

"என்னத்துக்கு மானங்கெட்டுப்போறது. நீங்க என் புருஷன்."

"இன்னும் கல்யாணமாகலையே."

"யார் சொன்னது. நிச்சயதார்த்தங்கறது கல்யாணம்தான். கமலக்கண்ணனுக்கும் பூரணிக்கும் கடவுள் அருளால் நிச்சயிக்கப்பட்டு அப்படித்தான் பத்திரிகை அடிச்சாங்க."

"இல்லை பூரணி, தாலி கட்டி... சடங்கு பண்ணி..."

"அதெல்லாம் இல்லீங்க. இனிமே யாரையாவது நான் கல்யாணம் பண்ணிக்க முடியுமா. யாரையாவது புருஷன்னு நினைக்க முடியுமா. அப்படியெல்லாம் பண்ணமுடியாது. கல்யாணம் ஒரு சடங்கு. எனக்கு மனசுக்குள்ள கல்யாணம் முடிஞ்சு போச்சு. நான் சொல்றதுல எந்த தப்பும் இல்லை. காசில்லாத தயவுசெய்து போகாதீங்க. எனக்கு இங்கே வயிறு பிசையும். நீங்க அங்கே போய் கஷ்டப்படறீங்கன்னா என்னால சோறு தின்னமுடியுமா?"

"ஆனா, எங்க மேனேஜர் சந்திரசேகர் என்கிட்ட இதச் சொல்லவே இல்லையே. கேட்ருவோமா? போன் இருக்கா?"

"கேட்ருவோம்."

"சந்திரசேகர் ஸார், நான் கமலக்கண்ணன் பேசறேன்."

அந்தப் பக்கமிருந்து ஆரவாரமான வாழ்த்துக்கள் வந்தன.

"உனக்கு என்னமோ கல்யாணம்னு சொன்னாங்க."

"ஆமா ஸார். நிச்சயதார்த்தம் ஆயிடுச்சி."

"அப்புறம் எப்படிடா வருவ?"

"வரச்சொல்றீங்களே... கிளம்பிட்டேன் ஸார். பாஸ்போர்ட்டெல்லாம் கொடுத்துட்டேன். நாளைக்கு காலையில டிக்கெட்,

விசால்லாம் வருது. அந்தம்மா அறுபதாயிரம் ரூபா கேட்கறாங்க ஸார்."

"கொடுத்திரு."

கமலக்கண்ணன் பதில் சொல்லாமல் இருந்தான்.

அவர் புரிந்து கொண்டார்.

"ஏன். காசில்லையா? இங்க வந்தா திருப்பி கொடுத்துடு வாங்கடா."

"அது சொன்னாங்க ஸார்."

"அப்புறம் என்ன. வேலையை ரிஸைன் பண்ணிட்டுதானே வரப்போறே. அந்தக் காசு கிடைக்குமில்ல. அஞ்சு வருஷம் சர்வீஸ் போட்டிருக்க இல்ல.பிராவிடண்ட் ஃபண்டே நிறைய வருமேடா."

"எல்லாம் வரும் ஸார். மெல்லதானே வரும்."

"ஓ... வேற எங்கயும் புரட்டி போட்டு வாங்கிட்டு வர முடியாதா? நான் அனுப்பட்டுமா?"

"ஸார். வேணாம் ஸார். இங்க ஏற்பாடு பண்றேன்."

"இருந்தாலும் கொடுக்கலாமா வேணாமான்னு ஒரு கலவரம். நீங்க சொல்லலை இல்ல."

"உனக்கு தெரியும்னு நினைச்சேன். அவங்கதான் ஏஜண்ட். அவங்க என்ன கேட்கறாங்களோ அதைக் கொடுத்துரு. அது அத்தனை காசும் இங்க உனக்கு திரும்பி வந்துடும். நம்ம ஆளுங்க பதினாலு பேருக்கும் தனித்தனியா ஏ.சி. ரூம் வாங்கி வச்சிருக்கேன். சாப்பிட வேண்டியது, வேலை செய்ய வேண்டியது, தூங்க வேண்டியது. இந்த மூணும் தவிர வேற வேலையே இல்லை. இங்க ஜெயா டி.வி, சன் டி.வி. எல்லாம் வருது. எங்கயோ திண்டிவனம், விழுப்புரத்துல இருக்கறா மாதிரியே இருக்குமே தவிர வெளியிடத்துல வேலை செய்ய றோம்கற மாதிரியே இருக்காது. இதுக்கப்புறம் கூப்பிட மாட்டாங்கடா. ஆளுங்க ஜாஸ்தி ஆயிட்டாங்க. எந்தக் காரணமும் சொல்லாத வந்துடு."



"ஏதாவது வாங்கிட்டு வரணுமான்னு கேளுங்க."

"ஏதாவது வாங்கிட்டு வரணுமா ஸார்?"

"யாரது லேடீஸ் குரல் கேட்குது?"

"என் வுட்பீ ஸார். எதிர்கால மனைவி."

"அவங்கதான் கேட்கறாங்களா. எனக்கு ஏதாவது வாங்கிட்டு வரணும்னு. அவங்ககிட்ட கொடு."

பூரணி தயங்கினாள். சட்டென்று காதில் ரிசீவரை பொருத்திக் கொண்டாள்.

"ஐயா... வணக்கங்க. ஐயா, சொல்லுங்க நான் பூரணி பேசறேன்"

"பூரணியா... நல்லாயிருக்கு பேரு.பருப்பு பொடி, கொத்த மல்லி பொடி, கருவேப்பிலைப் பொடி, வேப்பிலைக் கட்டி, ஊறுகாய் இங்க எல்லாருக்கும் தேவைப்படும். தமிழ் நாவல் கொண்டாரச் சொல்லு. அது படிக்கறதுக்கும் ஆள் இருக்கு. ஷிரடி சாய்பாபா படம் அல்லது பொம்மை.இது ஒருத்தர் கேட்டாரு. இதைக் கொண்டாந்தான்னா நல்லாயிருக்கும். கமலக் கண்ணனைப்பத்தி கவலைப்படாத அனுப்புங்க. நான் பார்த்துக் கறேன்."

"ரொம்ப நன்றி ஐயா."

கமலக்கண்ணனும் நன்றி சொல்லிவிட்டு தொலை பேசியை துண்டித்தான்.

"தேங்க்யூ பூரணி. என்ன வாங்கிட்டு வரணும்னு கேட்ட வுடனே எவ்வளவு குஷி ஆயிட்டாரு பார்த்தியா. என்ன சொன்னாரு?"

அவன் குறித்துக்கொண்டான்.

"எங்க வாங்கறது?" கேட்டான்.

"எல்லாம் நான் ஏற்பாடு பண்றேன். ஒண்ணும் கஷ்டமில்லை. சீனுவாசய்யர் பொண்டாட்டி கமலத்தம்மா பிரமாதமா பண்ணி கொடுப்பாங்க. இதை கடையில ஏன் வாங்கணும்? நாம உப்பு

பார்த்து, உறைப்பு பார்த்து நல்லபடியா செய்து எடுத்துட்டு போகலாம். நேரா போய் அப்பாவைப் பார்க்கலாம் வாங்க."

அவன் வண்டியை நிறுத்தி விட்டு வாசலிலிருந்து எட்டிப்பார்த்த சீனுவாசய்யரைப் பார்த்து வணங்கி அவரை நோக்கி நகர்ந்தான்.

## 30

**மோ**ட்டார் சைக்கிள் விட்டு பூரணி வீட்டிற்குள் ஓடினாள். அப்பா எதிரே மூச்சிரைக்க நின்றாள்.

"என்ன கண்ணு... என்னாச்சு?"

அப்பா திடுக்கிட்டு எழுந்து நின்றார்.

"ஒரு லட்ச ரூபாய் வேணும்ப்பா."

"என்னது?"

"ஒரு லட்ச ரூபாய் வேணும்."

"எதுக்கு?"

"துபாய் போறதுக்கு?"

"என்னம்மா விளையாடற?"

"அறுபதாயிரம் போக வர டிக்கெட்டோட செக்யூரிட்டியும் கேட்கறாங்கப்பா."

"யாரோ கூட்டுதானே போறாங்க. இவரேவா போறாரு."

"ஏஜெண்ட் சொல்றாங்கப்பா. போனவுடனே அந்தக் காசை திருப்பி கொடுத்துடுவாங்களாம்."

"என்னம்மா ஆரம்பத்துல அப்படி சொல்லலையே."

"அவருக்கே இப்போதாம்ப்பா தெரியுது."

"கல்யாணமும் பண்ணிக்கலை. ஒரு லட்சம் காசும் கேட்கறாங்கன்னா."

"அவரு கேட்கலைப்பா."



37682
5470062

"பின்னே?"

"நான்தான் தரேன்னு சொன்னேன்."

"அவசரப்பட்டு சொல்றம்மா."

"இல்லைப்பா அவர்கிட்ட அத்தினி காசு இல்லை."

"அஞ்சு வருஷமா சம்பாதிக்கறாரே."

"சேர்த்து வைக்கலை. அந்தக் காசு அங்கப் போனதும் திரும்பி வந்துடும். அதைத்தவிர இவரு வேலையை ரிஸைன் பண்ணப்போறாரு இல்ல. அங்கேயிருந்தும் காசு கிடைக்கும்."

"எவ்ளோ கிடைக்கும்?"

"சரியா தெரியலைங்கறாரு."

"நீ பேசறது சரியா படலையே."

"அப்பா, நான் தரேன்னு ஒத்துகிட்டேன். அவரு வேணாம்னு தான் சொன்னாரு. நான்தான் வற்புறுத்தினேன். அவருக்கு அறுபதாயிரம் ரூபா, அப்புறம் செக்யூரிட்டி. ஆனா கையில மூவாயிரத்து நானூறுதான் வச்சிருக்காரு. அது போறாது. அவரு காசு இல்லாத அங்க கஷ்டப்படறாருன்னு தெரிஞ்சா எனக்கு சிரமமா இருக்கும்."

"ஒரு மாசம்தானம்மா சமாளிக்கமாட்டாரா?"

"வேற யார்கிட்டயோ கடன் கேட்கறதுக்கு நாம கொடுத்தா தப்பாப்பா?"

"என்னம்மா... இப்படி தடுக்குனு நீ வந்து கேட்கற. நான் எப்படி மாட்டேன்றது?"

"மாட்டேன்னு சொல்லக்கூடாதுப்பா. அவரு என் புருஷன்."

"கல்யாணம் ஆகலையேம்மா."

"என்னப்பா நீங்களும் அவரு மாதிரியே பேசறீங்க. கல்யாணம் ஆனாதானா... எனக்குள்ள கல்யாணம் ஆயிடுச்சு. எனக்கு புருஷன்னா அது கமலக்கண்ணன்தான். இனிமே மாத்திக்க முடியாதுப்பா."

புருஷோத்தமர் திகைப்போடு மனைவியை பார்த்தார். மனைவி அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்ன பண்றது?"

"இவ குதிக்கறாளே. நீங்க கொடுத்துதான் ஆகணும்."

"என்ன கணக்குன்னு கொடுப்ப?"

"அப்புறம் பார்த்துக்கலாம்ப்பா. அவரு இப்போ உள்ள வருவாரு. எதுவும் சொல்லிடாதீங்க. நான் தரேன் நீங்க போயிட்டு வாங்கன்னு சந்தோஷமா சொல்லுங்க."

"அம்மா... இதெல்லாம் என்னை கேட்காம நீயா முடிவெடுத்துட்டு வந்து என்னை கஷ்டப்படுத்தாதே."

"அப்பா... எனக்குன்னுதானப்பா காசு சேர்த்து வச்சருக்கீங்க. எனக்குன்னுதானப்பா கல்யாணத்துல செலவு பண்ணப் போறீங்க. அந்தக் காசுதாம்ப்பா கேட்கறேன்."

வாசல் பக்கம் சப்தம் கேட்டது.

"அப்பா மூஞ்சி மாறிடாதீங்க. சந்தேகமா பேசாதீங்க. அவரு ரொம்ப வருத்தப்பட்டுருவாரு."

முதலில் சீனுவாசய்யர் நுழைந்தார். பிறகு அவன் தயங்கித் தயங்கி வந்தான்.

"வாங்க... உள்ள வாங்க."

புருஷோத்தமர் கைகூப்பி வரவேற்றார்.

"டிக்கெட் சார்ஜ் செக்யூரிட்டின்னு கேட்கறாங்களாம். அப்படி கேட்கறது வழக்கம்தான். என் பசங்க ரெண்டு பேரும் வெளிநாடு போனாங்களே... ரெண்டு பேருக்கும் முதல்ல நான்தான் காசு கொடுத்தேன். அங்க வந்து சேர்ந்தபிறகு வந்த காசு கொடுப்பான். அங்கேயிருந்து கிளம்பறபோது போற காசு கொடுப்பான். இதுதான் வழக்கம். நம்ம கைக்காசு போட்டுண்டுதான் போகணும்" சீனுவாசய்யர் பேசினார்.

"அப்படிங்களா... அவங்க கூப்பிடறதால அவங்கதான் செலவழிக்கணும்னு நான் நினைச்சேன்."

"அவங்க செலவுதான். நாம என்ன மாப்பிள்ளையாகவா போறோம். வேலை செய்யத்தானே போறோம். போகவர காசை அங்க இருக்கறவன் இங்க அனுப்ப இங்க இருக்கறவன்



கிடைச்சது லாபம்னு சொல்லிட்டு அதை வாரி சுருட்டிண்டு எங்கேயாவது போய் ஒளிஞ்சுண்டான்னா கண்டுபிடிக்க முடியுமா?"

சீனுவாசய்யர் பேசும்போது அப்படிக் கேட்பதின் அவசியம் புரிந்தது.

"அவங்க ஏன் நம்பணும் உன்னை. அவங்க நம்பமாட்டாங்க. நீ வா. காசு தரேன்னுவாங்க. அதனால போற வர காசு நாமதான் கொடுத்தாகணும். செக்யூரிட்டி முன்னெல்லாம் கேட்கறதில்லை. இப்போ கேட்கறாங்க. அந்த மாதிரி ஒரு தகராறு ஆயிப்போச்சு."

"என்னா?"

"போனவன் உடம்பு சரியில்லாம மண்டையை போட்டுட்டான். ஆக்ஸிடெண்ட்ல கைகால் போச்சு. ஆஸ்பத்திரியில சேர்க்கணும். ஆஸ்பத்திரியில செத்துப் போயிட்டான். என்ன பண்றது... அங்கயே புதைச்சுடுன்னு சொல்லுவீங்களா இல்ல, கொண்டா பாடியைன்னுவீங்க. அப்போ கொண்டார காசு யாரு. இவன்தானே அந்தப் பொறுப்பையும் லோக்கலா இருக்கற ஏஜெண்ட்டே எடுத்துக்குது. இந்த ஏஜெண்ட்டோட ஆளு ஒருத்தன் அங்க இருப்பான். அவன் எல்லாம் பார்த்துக்குவான்."

"என்னங்க போகச்சொல்லயே என்னென்னமோ பேசறீங்க."

"அட நெருப்புன்னா வாய்வெந்துடுமா. அவங்க எதுக்காக செக்யூரிட்டி கேட்கறாங்கறதுக்கு உங்களுக்கு புரிய வைக்கறேன்."

"ஸ்கூட்டர் சாவியை எடு. சீனுவாசய்யர் என் கூட கொஞ்சம் பேங்குக்கு வாங்களேன்."

சட்டையை மாட்டி சாவி எடுத்து செருப்புகளை அணிந்து கொண்டு புருஷோத்தமர் வெளியே போனார்.

சீனுவாசய்யர் பின்தொடர்ந்தார்.

"என்னங்க... கொடுக்கலாமா?"

"கொடுத்துதான் ஆகணும்."

"இந்த செலவை இவன் எதிர்பார்க்கலை. என்ன பண்றதுன்னவுடனே குழந்தையே நான் தரேன். நான் தரேன்னு சொல்லியிருக்கா. அந்தப் பொண்ணு அப்படி சொல்லுது. அவங்க வீட்ல போய் கேட்கலாமான்னு என்னை வந்து கேட்டான்."

சீனுவாசய்யர் ரகசியமான குரலில் பேசினார்.

"பூரணி பண்றது முட்டாள்தனம்."

"இல்லைய்யா. ரொம்ப சரியான விஷயம். இந்தப் பையன் வந்து எங்கிட்ட நான் என்ன பண்ணட்டும்னு கேட்கறான்பாரு. அதுவும் ரொம்ப நல்ல விஷயம். இவன் ஏமாத்தற பையன் இல்லைய்யா. ஒரு அளவுல வெகுளி."

"பெரிய தொகையா இருக்கேன்னு பார்க்கறேன்."

"காசு இருக்கா இல்லையா?"

"இருக்கு. போய் பேங்க்லேர்ந்து எடுத்துட்டு வந்து சப்ஜாடா கையில கொடுத்துடணும். ஏதாவது பாண்ட்ல கையெழுத்து வாங்கணுமா?"

"மரியாதையா இருக்காது. நம்பி கொடு."

"உமக்கு புரியலை சீனுவாசய்யரே. இப்போதைக்கு கல்யாணமுமில்லை. பையனுக்கு காசும் வேற தரணும். தப்பான சம்மந்தமோன்னு உள்ள அடிமனசுல ஏதோவொரு பயம் கேள்வி கேட்டுக்கிட்டே இருக்கு."

"நியாயம். உன்னையும் புரியுது. ஆனாலும் நான் சொல்றேன். பூரணி ஜாதகத்தை வச்சு சொல்றேன். இந்தப் பையனோட பேசினது வச்சு சொல்றேன். உள்ளுக்குள்ள எனக்கும் ஒரு குரல் கேட்குது. எதுக்கும் பயப்பட வேண்டாம். எல்லாம் நல்லதுக்குன்னுதான் கேட்குது. இன்னிக்கு நீர் கொடுத்த காசு அவனுக்கு உதவும். அவன் காலம் முழுக்க நன்றியா இருப்பான். உம்ம பொண்ண கண்ல வச்சு காப்பாத்துவான். கொடு."

"தடுக்குனு எங்க இப்படி நடக்குது?"

புருஷோத்தமர் மெல்ல விசும்பத் துவங்கினார்.



"நல்லாயிருக்கே இப்படி பேசறது. வண்டியில ஏறுய்யா. இங்க உட்கார்ந்துண்டு அழுதா வாசல்ல நின்னு எட்டிப்பார்த்தா என்ன ஆகும். ஏறி உட்கார். வண்டியை நான் ஓட்டட்டுமா?"

சீனுவாசய்யர் சாவியை வாங்கி வண்டியைத் திறந்து உதைத்துக் கிளப்பினார்.

இருவரும் திரும்பினார்கள். பத்தாவது நிமிடம் துணிப் பையில் சுற்றிய காசோடு வந்தார்கள்.

வெள்ளித்தட்டை சாமி எதிரே வைத்து காசு அடுக்கினார்கள். சாமி படத்திலிருந்து பூவை எடுத்து அந்தக் காசின் மீது சீனுவாசய்யர் போட்டார். கிழக்கு பார்த்து புருஷோத்தமரையும் அவரது மனைவியையும் நிற்க வைத்தார்.

"விழுந்து நமஸ்காரம் பண்ணி, இங்க கொடுக்கிற இந்தக் காசை என்னிக்காவது ஒருநாள் திருப்பி கொடுத்துடுவேன். கடனா வாங்கிக்கறேன் அப்படின்னு சொல்லிட்டு கைகூப்பி வாங்கிக்கோ. அவா ரொம்ப பிரியமா தரா. வேற எந்த வீட்லயுமே இப்படி நடக்காது. அப்பாவ கூப்பிடு. அம்மாவை கூப்பிடுன்னு உங்க பக்கம் இழுப்பாங்க. ஆனா அவர் உன்னை நம்பி தரார். பூரணியும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கு. கொடுத்தே ஆகணும்னு சொல்லி இருக்கு. அவர் நல்ல மனசை நீ புரிஞ்சுக்கணும் கமலக்கண்ணா."

அவர் சொல்ல கமலக்கண்ணன் கைகூப்பி தரையைப் பார்த்தபடியே நின்றான். மெல்ல தலை நிமிர்ந்தான்.

"ஒன்றரை வருஷம் தயவு செய்து எனக்காக பொறுத்துக்கோங்க. நான் நிறைய காசோட திரும்பிவரேன். ஒரு அளவுல இப்படி போறது நல்லதுன்னு எனக்கு படுது. பூரணியினுடைய மகிமை, உங்க வீட்டினுடைய மகிமை எனக்கும் எங்க வீட்டுக்கும் புரிய வரும். ரொம்ப நன்றியோடு இந்தக்காசை வாங்கிக்கறேன். ரிஸைன் பண்ண இடத்துலேர்ந்து கொஞ்சம் காசு வரும். அந்தக் காசை உங்க பேருக்கு எழுதிக் கொடுத்துடறேன். உங்க அட்ரஸுக்கு வரும்படி பண்ணிடறேன்."

"அவசியமில்லை" சீனுவாசய்யர் சொன்னார்.

"அந்தக் காசை இங்க கொடுத்தீன்னா உங்க வீட்ல எதுனா பிரச்சனை உண்டாகும். அந்தக் காசை உன் பேங்க்ல டெபாசிட் ஆகட்டும். நீ வந்து உபயோகப்படுத்திக்கோ. அதை வச்சு இதைக் கொடுத்தாங்கன்னு ஒரு கெட்ட பேர் புருஷோத்தமருக்கு வர வேண்டாம். தன் மாப்பிள்ளையை நம்பி கொடுத்தாருன்ற நல்ல பேரே அவருக்கு இருக்கட்டும்."

அவன் விழுந்து வணங்கி அந்தக் காசை வாங்கிக் கொண்டான்.

"கமலக்கண்ணா, காசு வரும் போகும். ஆனா, குடும்ப மானம் ரொம்ப பெருசு. பூரணிக்கு நிச்சயதார்த்தம் ஆயிடுச்சு. கல்யாணம் தள்ளிப்போயிடுச்சுன்னு ஊர்ல இருக்கறவன் பேசத்தான் செய்வான். அங்க பூரணியினுடைய மனசு, எங்க வீட்டினுடைய நிலைமை எப்பவும் ஞாபகம் வச்சுக்கோப்பா. உனக்காக இந்தப் பொண்ணு, இந்தப் பவழமல்லி மரத்தடியில உட்கார்ந்து காத்துகிட்டிருப்பா. பாட்டுப்பாடிகிட்டிருப்பா. கண்ல ஜலம் விட்டு அழுதுகிட்டிருப்பான்னு தயவுசெய்து மறந்துடாத இருப்பா" சொல்லிவிட்டு புருஷோத்தமர் பெரிதாக அழத் துவங்கினார்.

புருஷோத்தமருடைய மனைவி பாக்கியம் முகம் பொத்திக் கதறினாள்.

பூரணிக்கு கண்களில் நீர் கட்டியது. மிகச் சிரமப்பட்டு அழுகை வராமல் தடுப்பதற்கு கமலக்கண்ணன் போராட வேண்டியிருந்தது.

சீனுவாசய்யர் மெல்ல புருஷோத்தமரின் முதுகை தடவிக் கொடுத்தார்.

"என்ன இது... போதும். நிறுத்திக்கோ" என்று அடிக்குரலில் அதட்டினார்.

புருஷோத்தமரின் மனைவியை உள்ளே போய் காபி கொண்டு வரும்படி சொன்னார்.

"பூரணி எனக்கு கொஞ்சம் படுத்துக்கணும் போல இருக்கு."

அவள் காதோரம் கமலக்கண்ணன் கிசுகிசுத்தான்.



பூரணி சில விநாடிகள் தயங்கினாள்.

"உள்ள வாங்க."

அவன் கைபிடித்து இழுத்து அறைக்குள் புகுந்து கொண்டாள்.

"அம்மாடி காபி வேணுமே எடுத்துண்டு போ. புருஷோத்தமர் வாய்யா. அங்க வீட்டுக்கு வா."

புருஷோத்தமரின் மனைவி மட்டும் சமையலறையில் இருக்க அவர்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியேறி எதிர்வீட்டுக்குப் போனார்கள்.

பூரணி அறைக்கதவைத் திறந்து கட்டிலில் சாய்ந்து கிடந்த கமலக்கண்ணன் அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

சட்டென்று அவள் மனசுக்குள் தான் கமலக்கண்ணன் மனைவி என்ற உணர்வு வேகமாக வந்து ஒட்டிக்கொண்டது.

"என்ன நீங்க ஒரு மாதிரி ஆயிட்டீங்க" அவனிடம் நெருங்கி உட்கார்ந்து கொண்டு அவள் விசாரித்தாள். அவன் மெல்ல அவள் தலையை தடவிக் கொடுத்தான். நிமிர்ந்து உட்கார்ந்து அவள் இடுப்பில் கைபோட்டு இறுக்கிக் கொண்டான். அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.மெல்ல கன்னத்தோடு கன்னம் இழைந்தான். உதடுகளை மெல்ல முத்தமிட்டான். பிறகு கவ்வினான்.

அவள் திகைத்தாள். வேண்டாம் என்பது போல் தள்ள அவன் இன்னும் அவளை இறுக்கிக் கொண்டான்.

"நான் உனக்கு உறுதியாகணும் அவ்ளோதானே. நான் தான் புருஷன்னு உறுதியாகணும். வா, உறுதியாக்கறேன் வா."

அவளை இன்னும் இறுக்க எடுத்து தூக்கி தன் மடியில் போட்டு நகர விடாமல் இறுக்கிக் கொள்ள அவள் அவனை தழுவிக் கிடந்தாள்.

அவனுக்கு அவளைப் பற்றி சட்டென்று ஒரு ஆச்சரியம் வந்தது.

"அட... சாதாரணமா இருக்காளே" என்று எண்ணம் வந்தது.

அவன் எண்ணத்தை புரிந்து கொண்டாளா. அல்லது சாதாரணமாகப் பேசினாளா.

அவள் கண்கள் விரிவோடு அவனைப் பார்த்தாள்.

"நமக்கு கல்யாணம் ஆயிடுச்சு இல்லைப்பா" என்று கேட்டாள்.

அவன் ஆம் என்று தலையசைத்தான்.

திருமணம் என்பது சடங்கல்ல. அது மனசின் ஒற்றுமை.

நெகிழ்ந்த உடையை ஆவலோடு அவன் பார்த்தான்.

அவள் நிதானமாக சீர் செய்து கொண்டாள்.

எதற்கு ஏன் சீர் செய்து விடுகிறாய் என்பது போல் பார்த்தான். மெல்ல விரலால் விலக்கினான்.

கன்னங்களில் முத்தமிட்டான்.

அவளுக்கு சட்டென்று ஒரு நாணம் பரவ தலைகுனிந்தாள்.

அவன் மெல்ல முன்னேறினான். இங்கும் அங்குமாய் அவன் கைகள் பரவின. இறுக்கின.

"பூரணி காபி வச்சிருக்கேன்ப்பா."

வெளியிலிருந்து அம்மாவின் குரல் கேட்டது.

அவள் நிதானமாக எழுந்தாள். அவன் அவளை விடமுடியாமல் தவித்தான்.

அவள் விலகினாள். தளர்ந்து நடந்தாள். போய் கதவு திறந்து அம்மாவிடம் காபிக்காக கை நீட்டினாள்.

## 31

தன்மகள் நடப்பதும், நிற்பதும் இறங்குவதுமான விதத்தை தாய் புரிந்து கொண்டாள்.

"பார்த்துடி" என்று ஒரேயொரு வார்த்தை சொன்னாள்.

"ஒண்ணுமில்லைம்மா சும்மாதான்."



மகள் பதிலுக்குச் சொன்னாள்.

அதில் ஏகப்பட்ட விஷயங்கள் பொதிந்து கிடந்தன.

குனிந்து காபியை ஆற்றியபடி பூரணி அவனுக்கருகே வந்தாள். அரை டம்ளர் காபியைக் கொடுத்தாள். திரும்பக் கதவு பார்த்தாள். கதவு திறந்து கிடந்தது. அம்மா சமையலறையில் நடமாடுவது தெரிந்தது. மெல்ல கதவு நோக்கி நடந்தாள். கதவை முதுகால் மூடினாள். வேகமாக முன்னேறினாள்.

அவன் வாயில் வைத்திருந்த டம்ளரைப் பிடுங்கி அதில் மறுபடியும் காபியை ஊற்றினாள். இன்னும் நெகிழ நின்றாள். அமர்ந்தாள்.

அவர்கள் தொட்டுக் கொண்டும் இறுக்கிக் கொண்டும் முத்தமிட்டுக் கொண்டும் இருந்தார்கள். மெல்ல எழுந்தார்கள்.

"நாளைக்கும் வருவீங்களா" என்று அவள் காதோரம் கேட்க, வருவேன் என்று அவன் பதில் சொன்னான்.

ஒருபையில் காசை சுருட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் முன்பக்கம் வைத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

"போன பிறகு போன் பண்ணுங்க. நான் காத்திருப்பேன்" என்று அவள் அடிக்குரலில் சொல்ல சரியென்று தலையசைத்தான்.

புருஷோத்தமரும், சீனுவாசய்யரும், கமலம்மாவும், புருஷோத்தமர் மனைவியும் விடைகொடுக்க அவன் வண்டி நிதானமாக என்றும் இல்லாத அளவு மிக மிருதுவாக ஊர்ந்து தெருவைக் கடந்து மறைந்தது.

அதற்குப் பிறகும் வேகமாய் ஓட்ட அவனால் முடியவில்லை.

யாரோ கையைக்கட்டி காலைக்கட்டி வாயில் ஏதோ அடைத்து உருட்டிவிட்டது போல ஒரு அயற்சி, ஒரு பயம் ஒரு திகைப்பு தோன்றியது.

பொண்ணு சொன்னான்னு ஒரு லட்ச ரூபா தூக்கி கொடுத்திருக்காங்களே நாளைக்கு ஏதனா தப்பா ஆச்சுன்னா, துபாய் விட்டு வரவே முடியாத போச்சுன்னா. ரிக்ல நிக்கும் போது

நச்சுனு மண்டையிலே கிரேன் இடிச்ச குப்புறத்தள்ளி இடிச்ச வேகத்துலயே உயிர் போயிடுச்சுன்னா யார் திருப்பி தருவா. என்ன ஆகும் பூரணி கதி. கடவுளே... இது எந்த வகையான கடன். நான் எப்படி தீர்க்கப்போறேன். இப்படி துட்டு வாங்கியிருக்கேன்னு வீட்ல சொன்னா விடுவாங்களா. அதுக்கு ஒரு சுத்தல் நடக்காதா. நான் தரமாட்டேனா அப்படின்னு யாராவது குரல் கொடுத்து பண்ணது தப்புன்னு குத்தி காட்டுவாங்க.

ஆனால், சொல்லிவிட வேண்டும். யார் என்ன சொன்னாலும் புருஷோத்தமருடைய இந்த அன்பை சொல்லிவிட வேண்டும். தன் வீட்டு மனிதர்களை தந்திரமாகத்தான் இந்த விஷயத்தில் அணுக வேண்டும்.

துபாய்க்கு கூப்பிடறாங்க. உடனடியா எழுவத்தஞ்சாயிரம் ரூபா தேவைப்படுது அக்கா உன் நகையை கொடேன் என்று ஆரம்பிக்க வேண்டும். கொடுத்து விட்டால்...

மறுபடியும் பயம் வந்தது.

தம்பி லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறான். வட்டியும் முதலுமா வாங்கிக்கலாம் என்று சட்டென்று அவிழ்த்து கொடுத்து விட்டால் புருஷோத்தமரிடம் வாங்கியது தவறாகப் போய் விடுமே.

தெரு முனையில இருக்கிற மார்வாடிகிட்ட கொண்டு போய் வச்சா போதும் ரெண்டாம் மாசம் நீ திருப்பிட மாட்டியா. இருவது இருவத்தி ரெண்டு பர்செண்ட் வட்டி போடுவான். போட்டுட்டு போறான். மூணாவது மாதம் மீட்டுடமாட்டியா என்று அக்கா கேட்டால்... அப்போது புருஷோத்தமர் கொடுத்தது இழிவாக அல்லவா போகும். அங்கு வாங்கியது தவறாக அல்லவா ஆகும்.

மறுபடியும் ஒரு கலவரம் எழுந்தது.

வீட்டில் இதைச் சொல்லலாமா வேண்டாமா. வீட்டில் இதைச் சொல்லாமல் போனால் புருஷோத்தமர் கேள்வி கேட்க மாட்டாரா. சீனுவாசய்யர் ஏன் அப்படி திருட்டுத்தனம் என்று எறிட்டுப் பார்க்க மாட்டாரா. பூரணி கேட்பாளே பதில் சொல்ல



வேண்டாமா. சொன்னாலும் பொல்லாப்பு. சொல்லாது போனாலும் பிரச்சனை. என்ன செய்வது.

வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு டீ குடித்தான். ஒரு பெரிய சைஸ் சிகரெட் வாங்கி பற்ற வைத்துக் கொண்டான்.

கமலக்கண்ணனுக்கு சிகரெட் குடிப்பது வழக்கமில்லை. ஆனால், எப்போதாவது சிகரெட் குடிக்கும் ஆசை வரும். வருஷத்திற்கு நான்கு அல்லது ஐந்து சிகரெட்டுகள் குடிப்பான்.

ஒரு மழை நாளில் ஹார்பர் பக்கமுள்ள பைப் லைன்கள் உடைத்துக் கொள்ள அதை சரிசெய்யும் போது ஆறேழு சிகரெட்டுகள் குடித்தான். மற்றபடி சிகரெட் வேண்டு மென்று தோன்றினால் மூளையிலிருந்து அந்த ஆசையை விலக்கி விடுவான். ஆனால், இப்போது சிகரெட் குடிக்க வேண்டும் என்று தோன்றியது. நிதானமாக சிகரெட் புகை இழுத்துக் கொண்டான். மூக்காலும், வாயாலும் புகையை வெளியே விட்டான்.

கமலக்கண்ணா... யோசி என்ன செய்வது என்று யோசி என்று மூளையை விரட்டினான்.

சொல்ல வேண்டாம் என்றுதான் கடைசியாக தீர்மானித்தான்.

பூரணிக்கு போன் செய்து நான் இதைச் சொல்லப்போவதில்லை. உன் அப்பாவிடம் இதைத் தெரிவித்து விடு அல்லது நானே பேசுகிறேன். இன்னென்ன காரணம் என்று விவரித்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்தான்.

வீட்டிற்குள் நுழைந்து பையைக் கொண்டு போய் பீரோவில் வைத்தான். பீரோவை பூட்டி சாவியை கொக்கியில் மாட்டினான். சட்டையை அவிழ்த்து லுங்கியை மாற்றிக் கொண்டு பின்பக்கம் போய் வந்தான். மறுபடியும் அறைக்கு வரும்போது அவனுடைய பீரோவை அவன் தமக்கை குடைந்து கொண்டிருந்தான்.

"என்னா... எதுக்கு பீரோவை திறக்கற."

"நெயில் கட்டர் வேணும்டா. அப்பா கால் நகம் வெட்டி விடுன்னு சொல்றாரு. ரெண்டு தடவை இடிச்சு கிட்டு ரொம்ப வலி."

"எங்கிட்ட கேட்க வேண்டியதுதானே."

"வந்ததே தெரியாதே. நீ வரலையோன்னு நினைச்சுகிட்டு தான் நான் பீரோவை திறந்தேன்... நெயில் கட்டர் இங்க இருக்கு."

அவள் மேல் தட்டில் கைவைத்து நெயில் கட்டர் எடுக்க சற்றுமுன் வைத்த பை கீழே விழுந்தது. பை விழ பைக்குள்ளிருந்து ரூபாய் நோட்டுக்கற்றைகள் வெளியே சிதறின. நோட்டுகள் சிதறும் நேரத்தில் அம்மா காபியோடு உள்ளே வந்தாள்.

"ஆங்... இவ்ளோ துட்டு."

"மடப் பைத்தியண்டி... நீ."

அக்காவை கள்ளென்று கோபித்துக் கொண்டான். நோட்டுக் கற்றைகளை பைக்குள் திணித்தான். சுற்றி மேலே வைத்தான்.

"என்னடா அது. இந்தப் பைதானே இப்போ எடுத்தாந்த."

"ஆமாம்."

"ஏது இவ்ளோ காசு."

"வேலையை ரிஸைன் பண்ணிட்டேன் இல்ல அப்போ கொடுத்தாங்க."

"ஆபீஸ் போயிருந்தியா."

"ஹெட் ஆபீஸ் போயிருந்தேன்."

"ஒரு வேளை நீ பொழிச்சலூர் தான் போயிருக்கியோ அந்தப் பொண்ணப் பார்க்கறதுக்குன்னு நினைச்சேன்."

"நான் ஏன் பொழிச்சலூர் போறேன் எனக்கு என்ன வேலை இருக்கு."

மறுபடியும் பீரோவை மூடி சாவியை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டான். அவன் இடுப்பில் சொருகிக்



கொண்டதை அவன் தங்கை உற்றுப் பார்த்தாள். மறுபடி அவனை ஏறிட்டு நோக்கினாள்.

"ஏன்... கொக்கியில மாட்டமாட்டியா."

"மாட்டினா நீங்களெல்லாம் கை வைக்கறீங்க."

"இப்போ என்ன காசை திருடிகிட்டா போயிட்டேன். நீ காசு வச்சருக்கறதே எனக்குத் தெரியாது. நான் தேடினது நெயில் கட்டர். யப்பா... எவ்ளோ மோசமாயிட்டான் பாரேன் இவன்."

அலுப்பாகப் பேசினாள்.

"இந்த வேலையை விட்டுட்டினா துபாய் போறதுக்கு முடிவாயிப் போச்சா."

"ஆமாம். நாளைக்கு டிக்கெட் வந்துடும்."

"போய் எப்போ வருவ."

"லேட்டாகும்."

"கல்யாணத்துக்கு அவங்க ஆறு மாசத்துக்குள்ள ஏற்பாடு பண்றேன்னு சொல்லியிருக்காங்களேடா."

"அப்புறம் தள்ளி வச்சுக்க சொல்லு."

"அதெப்படி நான் சொல்றது. நீதான் சொல்லிட்டுப் போகணும்."

"ஏன்... நீ வந்து சாப்பிடலையா. நீ வந்து பேசலையா. நீதான் நியாயத்துக்கு போய் என் பிள்ளைக்கு வேற இடத்துல வேலை கிடைச்சருக்கு நாம கொஞ்சம் தள்ளி வச்சுப்போம் கல்யாணத்தைன்னு சொல்லணும்."

"ஒரு மாசம் கழிச்சு போயேன். அதுக்குள்ள கல்யாணம் வச்சுக்கணும்னு சொல்லிடலாம்."

"அதெப்படி ஒரு மாசத்துக்குள்ள ஒருத்தர் கல்யாணம் வைக்க முடியும்."

"பத்து நாள்ல கல்யாணம் ஏற்பாடு பண்றவனெல்லாம் இருக்காங்கடா."

"பண்ணலாம். டோக்கன் கல்யாணம் பண்ணலாம்."

"அதென்ன டோக்கன் கல்யாணம்?'' அம்மா வியப்போடு கேட்டாள்.

"கோயில்ல தாலிகட்டிட்டு பதினைஞ்சு நிமிஷத்துல கல்யாணம் முடிஞ்சிடும். யாரெல்லாம் கல்யாணத்துக்கு வந்திருக்கீங்களோ அவங்களுக்கெல்லாம் ஹோட்டல் சாப்பாடு டோக்கன் கிழிச்சு கொடுத்துடுவாங்க. அந்த டோக்கனை பக்கத்துல இருக்கற ஹோட்டல்ல போய் கொடுத்தா அங்க சாப்பாடு போட்டுருவான்."

"கோயில்லயே சோறு போடறது."

"அது நல்லாயிருக்காது. கோயில்ல இப்போ ஏழை பாழைங்களுக்குத்தானே சோறு போடறாங்க. அங்க எப்படி உட்கார வைக்கறது. அதனாலதான் ஹோட்டலுக்கு அனுப்பிடுவாங்க. ஹோட்டல் டோக்கன் கொடுத்தா சரியாய் போயிடும்."

"கூட்டிகிட்டு போய் சோறு போடறது. அதென்ன டோக்கன்."

"போறவரவனெல்லாம் ஹோட்டல்ல தின்னுட்டு போவான். யார் நம்மாளு, யார் வெளியாள்ன்னு தெரியாது. அதனால தான் யாருக்கு டோக்கன் கொடுக்கணுமோ அவங்ககிட்டேயே கொடுத்துடறது. உட்கார்ந்து நம்மாளுங்க சாப்பிடறபோது நம்மாளுன்னு தெரிஞ்சு ஒரு ஜாங்கிரி வைக்கறது இதுதான் டோக்கன் கல்யாணம்.பண்ணிடலாமா. யாருக்கும் பத்திரிகையே கொடுக்கலை. அப்புறம் டோக்கன் வாங்கறதுக்கு யார் வரப்போறாங்க."

"அதெல்லாம் முடியாது நான் இன்னும் ஏழு நாள்ல ஊரைவிட்டு கிளம்பணும். வந்துதான் கல்யாணம்."

"ஒன்றரை வருஷம் ஆகுங்கறியே."

"ஆமாம்."

"இது நியாயமா படலையேடா" அம்மா கேட்டாள்.

"நான் என்ன வேணும்னாலுமேவா பண்றேன். நீங்க பொழிச்சலூர் போய் இந்த மாதிரி ஆயிப்போச்சுன்னு சொல்லுங்க."

"நீ சொல்லலையா."

"நான் என்னாத்துக்கு சொல்லணும்."



"நீதானடா சொல்லணும், போயிட்டு போயிட்டு வரியே."

"நான் எங்கயும் போகலை."

டெலிபோன் மணி அடித்தது. அக்கா போய் டெலிபோன் எடுத்தாள்.

"அப்படிங்களா... சொல்லுங்க. சரிங்க... சரிங்க... கூப்டுங்களா, வேணாங்களா. சரிங்க"

டெலிபோன் துண்டித்தாள். திரும்பி அவனைப் பார்த்தாள்.

"இவன் பொழிச்சலூர்தான் போயிட்டு வந்திருக்கான். போன இடத்துல கூலிங்க்ளாஸை விட்டுட்டானாம். அங்க இருக்குதான் எங்கயும் தேட வேணாம்னு அந்தப் பொண்ணு போன் பண்ணுது. நம்மகிட்ட இல்லைன்னு பொய் சொல்றான் பாரேன்."

அம்மா திகைத்து அவனைப் பார்த்தாள்.

"ஏன்டா பொழிச்சலூர் போய காக வாங்கிட்டு வரியா" என்று கேட்டாள்.

அவன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் உறைந்து போய் நின்றான்.

வீட்டில் எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்து விட்டது.

"அசிங்கம். ரொம்ப அசிங்கம், ரொம்ப ரொம்ப அசிங்கம். நாளைக்கு அவங்க மூஞ்சியில நான் எப்படி முழிப்பேன். படியேறும் போது வான்னு கூப்டுவாங்களா கூப்பிடமாட்டாங்களே. வந்தா வா. வராட்டிப்போ. எங்க வீட்டுக்கு மாப்பிள்ளை வந்தாச்சு அப்படின்னு நெஞ்சை நிமிர்த்துகிட்டல்ல இருப்பாங்க."

"என்னம்மா சொல்ற" அம்மாவை மகள் கேட்டாள்.

"அந்த பூரணியோட அம்மாவைத்தான் சொல்றேன். ஏற்கனவே அந்த வீட்டுக்கு போயிருக்கோம். வாய் நிறைய வாங்கன்னு சொல்லியிருக்காளா. வெறும் தலையை ஆட்டுவா. வாங்க அப்படின்னு அப்படியே ரெண்டு நாள்ல செத்துடற பொம்பளைமாதிரி பேசுவா. சிரிப்பா ஒரு அழகா அவ கூப்டதே கிடையாது. இப்போ ஒரு லட்சரூபா கைய நீட்டி

வாங்கிட்டு வந்துட்டான். அவ்ளோ தான். கால் போட்டுகிட்டு உட்கார்ந்துட்டிருப்பா. நாம உள்ள வந்து வரட்டுங்களான்னு கேட்டா ம்... ம்... அப்படின்னுவா. புள்ளைய பெத்துட்டு நான் இப்பேர்பட்ட அவமானம் படத்தான் வேணும்ப்பா... நா பொண்ணா பொறந்த வேளை என் கிரகச்சாரம். என்ன பண்ணாலும் செருப்படிதான் படுவ அப்படின்னு என் ஜாதகம் பார்த்துட்டு ஜோசியன் சொல்லிட்டான். இவங்க அப்பங்கிட்ட அவமானப்பட்டுகிட்டிருக்கேன். எங்க மாமனார் மாமியார்கிட்ட அவமானப்பட்டுகிட்டிருக்கேன். இப்போ சம்மந்திகிட்ட அவமானப்படப்போறேன். என்ன அவமானப்படறது புதுசா அப்பப்போ படறதுதானே."

அம்மா அழுகையும் விம்மலுமாய் பேச ஆரம்பித்தாள்.

அப்பா தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்.

தமக்கையின் கணவர் உள்ளே வர வீடு அவரை எழுந்து நின்று வரவேற்றது.

"என்ன எல்லோரும் ஒரு மாதிரியா இருக்கீங்க" என்று அவர் கேட்க நடந்த விஷயங்கள் மாப்பிள்ளைக்கு சொல்லப்பட்டன.

"என்னாங்க. பொண்ணு எடுக்கற இடத்துல போய் கை நீட்டிட்டீங்க. நல்லாயில்லையே ஒரு லட்ச ரூபா தானே. நான் கொடுத்திருக்கமாட்டேனா."

"அதான் சொன்னேன்" அக்கா சொன்னாள்.

"நகையை அடமானம் வச்சருக்கறதா சொல்லுவ. நகைய அடமானம் வைக்கவேண்டிய அவசியமே இல்லை. நம்மகிட்ட துட்டா இல்லாத போச்சு. ஸ்நேகிதகாரங்க பைனாஸ் நடத்த றாங்க. யப்பா இன்ன வட்டிக்கு கொடு. இந்த மாதிரி மச்சான் போறான் அப்படின்னு சொன்னா கொடுக்கப்போறாங்க. உன்பேப்பர் பார்ப்பான். நீ போகறயா போகலையா விசா இருக்கா, பாஸ்போர்ட் இருக்கா ஏர் டிக்கெட் இருக்கான்னு பார்ப்பான். நீ போறன்னு தெரிஞ்சவுடனே மடமடன்னு கையெழுத்து போட்டு எங்கிட்ட துட்டை கொடுத்துடுவான். ஏன் அவர்கிட்ட போய் வாங்கனீங்க. ரொம்ப கெத்தாயிடுமே."



"போய் திரும்பிக் கொடுத்துட்டு வாடா; எனக்கு பிடிக்காது" அம்மா கத்தினாள்.

"தாமுடியாதும்மா."

"ஏண்டா போன அங்க."

"நான் பூரணிய பார்க்க போனேம்மா."

"காசு பத்தி ஏன் போய் சொல்ற."

"இதை சொல்லலை. நானும் பூரணியும் டிராவல் ஏஜண்ட் கிட்ட போனோம். டிராவல் ஏஜண்ட் இப்படி சொன்னா. இவ்ளோதானே நான் ஏற்பாடு பண்றேன்னு சொல்லி அந்தப் பொண்ணு உடனே சொல்லிச்சு. நானும் சரின்னு தலையாட் டிட்டேன்."

"மடக்கிட்டா. தந்திரக்காரி. ஒரு லட்ச ரூபா தானே வாங்கித்தரேன் பார் அப்படின்னு தன் கவுரதை நிக்கறதுக்கு முந்திகிட்டா. நீ வீட்டுக்கு வந்து இந்த விஷயத்தை சொல்ற துக்கு முன்னாடி உன் கைக்கு துட்டு கொடுத்துட்டா. அப்படித் தானே."

"ஆமா... ஆமா... அப்படித்தான் நடந்திருக்கு."

அம்மாவின் குற்றச்சாட்டை தமக்கை வழிமொழிய வீடு மறுபடியும் நிசப்தமாயிற்று.

"இப்படியாடா... ஒருத்தன் முட்டாள் காரியம் பண்ணுவான். அங்கபோய் கேட்டது தப்பு. கேட்டதை வாங்கியாந்துட்ட எங்கணா மறைப்பா வச்சுக்கக்கூடாதா. கொண்ணாந்து மேல் தட்டுல வைப்பியா. இதுங்கதான் எல்லா இடத்தையும் நோண்டி பார்க்குதுங்களேடா" அப்பா உரக்க பேசினார். கமலக்கண்ண னுக்கு கோபம் வந்தது.

## 32

கமலக்கண்ணன் நிதானித்தான். நிமிர்ந்து அப்பாவிடம் பேசினான்.

"உம் பொண்ணை கல்யாணம் கட்டிக் கொடுத்தாச்சு இல்ல, ஏம்ப்பா... இங்கயே உட்கார்ந்துகிட்டிருக்கா."

"எங்க போகச் சொல்ற அவளை. இது அவ அம்மா வீடு. அப்பப்போ வந்து சீராடுவா. ஏண்டி அம்மா வீட்டுக்கு அடிக்கடி போறேன்னு அவ ஆம்படையான் கேட்கலை. அவ எத்தனையோ சாமர்த்தியம் பண்ணி அவ ஆம்படையானை கைக்குள்ள போட்டு வச்சிருக்கா. ராத்திரி சாப்பாட்டுக்கு எங்க அம்மா வீட்டுக்கு வந்திருங்கன்னு அவ சொல்றா. அவனும் பல்லை காமிச்சுகிட்டு வந்து நிக்கறான். உட்கார்ந்தா போதும் நண்டு வறுவல், மீன் வறுவல், கோழி வறுவல்னு விதம் விதமா மாமிசம்தான் பேசுவான். இவங்களும் அவன் சொல்லறதுக்கெல்லாம் தலையாட்டிகிட்டு இருக்கும். ஆனா அந்தப் பொண்ணு சொன்னவுடனே அந்த அப்பன் ஓடிப்போய் கொண்ணாந்து கொடுத்திருக்கான்னா அவனுக்கு உன் மேலயும் தன் பொண்ணு மேலயும் தான் ரொம்ப நம்பிக்கை இருக்குன்னு அர்த்தம். உங்கம்மா சொல்றமாதிரி மாப்பிள்ளை தன் பக்கம் இழுக்கணும்னு அந்தாள் முயற்சி பண்றான்னும் அர்த்தம். சரி போனது போயிட்டு போறது. இனிமே பண்றதையாவது ஒழுங்கா பண்ணனும். அவங்க கல்யாணம் தள்ளி வைக்கறத பத்தி என்ன சொன்னாங்க."

"வேற வழியில்லை. நான் வரவரைக்கும் காத்துகிட்டிருக்கேன்னு அந்தப் பொண்ணும் சொல்லுது. அவங்க வீட்லயும் சொல்றாங்க."

"ஆறுமாசத்துல உன்னால வர முடியாதா?"

"வர முடியும்ன்னு நினைக்கிறேன். அங்க போனாதான் தெரியும்."

"ஒரு பதினைஞ்சு நாள் லீவு எடுத்துகிட்டு வாடா. நாங்க இங்க எல்லா ஏற்பாடும் பண்ணி வைக்கறோம். வந்தோமா கல்யாணம் பண்ணோமா பொண்டாட்டியோட ஒரு வாரம் சௌக்கியமா இருந்தோமா டக்குனு அடுத்த ஃப்ளைட் பிடிச்சோமா போனோமான்னு இருந்துட்டேன்னு வச்சுக்கோ அதுக்கும் நிம்மதி. நமக்கும் நிம்மதி."



"இதுல இன்னொன்னும் இருக்குப்பா."

"என்ன."

"கல்யாணம் கட்டினா அந்தப் பொண்ணு நம்ம வீட்ல தானப்பா இருக்கணும்."

"ஆமாம்."

"நான் இல்லாத அந்தப் பொண்ணு மட்டும் நம்ம வீட்ல இருந்தா இதுங்களெல்லாம் ஆடாதுங்க."

"ஆடும்."

"அதனாலதாம்ப்பா சொல்றேன். ஆறுமாசத்துல வந்து நான் கல்யாணம் கட்டறமாதிரி இல்லை. ஒன்னு அவளை கூப்பிட்டு போகணும். இல்ல, இங்கேயே இருந்துடணும். கொண்ணாந்து நம்ம வீட்ல விடறதுக்கு எனக்கு ஒப்புமை இல்லைப்பா."

"நீ சொல்றது கரெக்ட்."

"ஆனா, ஒன்றரை வருஷம் ஒரு பொண்ணு காத்துகிட்டிருக்கிறது பெரிய வேதனை இல்லை."

"காத்துகிட்டிருக்கேன்னு அந்தப் பொண்ணே சொல்லுதே."

"கடவுளே... கடவுளே... ஏன் நம்ம வீட்டுக்கு மட்டும் இப்படி நடக்குதுன்னு தெரியலை. சொல்லிடும்டா. அதுக்கப்புறம் தான் சித்ரவதையே இருக்கு. சாதாரண சித்ரவதை இல்லை. எப்போ பொழுது விடியும் எப்போ பொழுது சாயும்னு ஒவ்வொரு நாளா உட்கார்ந்து எண்ணிகிட்டிருக்கணும். ஒரு மாசமா ரெண்டு மாசமா மூணு மாசமா பல்லை கடிச்சுகிட்டு தாண்டறதுக்கு பத்தொம்போது மாசம்னு சொல்ற. இது பெரிய பாவம்டா. பொம்பளைக்கு ரொம்ப கஷ்டம். உனக்கு அது தெரியாது."

அப்பா சொல்லிவிட்டு நிதானமாக நடந்தார்.

அவன் என்ன செய்வது என்று தெரியாமல் மனம் பேதலித்தவனாய் அப்பாவின் பக்கம் நடந்து வந்தான்.

"சரி, அடிக்கடி போன்லயாவது பேசமுடியுமா."

"இல்லைப்பா. எங்க ஆபீஸ்ல சொல்றாங்க. ஏண்டா... அங்க போய் மாட்டினேன்னு. நான் என்னான்னு கேட்டேன். சிக்

குன்றது ரொம்ப தொலைவா இருக்கும். நடுக்கடல்ல இருக்கும். கடலாண்ட ரிக் இருந்தா போன்ல பேசறதுன்றது இல்லை. கரைக்கு வந்தாதான் முடியும். கரையில இருக்கற ரிக்கா இருந்தா வேலை நேரத்துல பேசமுடியாது. ஓய்வா இருக்கும் போது பேசலாம். எப்போ வேலை, எப்போ ஓய்வு ஒண்ணும் தெரியாது. அதானால முடிஞ்சவரைக்கும் ஊருக்கு பேசாம இருக்கறதுதான் நல்லது."

"உனக்கு எந்த இடத்துல வேலை."

"தெரியலையேப்பா. லெட்டர் போட்டால் வரும். ஆனா, நான் எப்போவாவதுதான் எழுத முடியும்."

"ஏண்டா... அப்படி."

"வெய்யிலாம்ப்பா. போய் சுருண்டு படுத்துடுவ. சாப்பிட்ட உடனே தூக்கம் வந்துடும். அப்பவும் தட்டி எழுப்பி வாடான்னு கூப்பிட்டு போவாங்க. எழுதறதுக்கெல்லாம் நேரமே இருக்காதுங்கறாங்க."

"வேணும்னே சொல்றாங்களோ."

"இல்லைப்பா. போயிட்டு வந்தவன் சொல்றான்."

"அங்க எத்தனை நாள் இருந்தான்."

"ஆறு வருஷம் இருந்திருக்காம்ப்பா... ஆனா உடம்பெல்லாம் தங்கம். அவன் பொண்டாட்டி பிடிப்பிடியா நகை போட்டுகிட்டிருக்கா. வீடு வாங்கிட்டாங்க. அவன் பொண்டாட்டி மறுபடியும் எப்போ போகப் போறேன்னுதான் கேட்கறாளே தவிர அங்க புருஷனுக்கு என்ன கஷ்டம்னு கேட்கவே இல்லை"

"அவங்களெல்லாம் வேறடா. இருவத்தி மூணு வயசுல பத்தொம்போது வயசு பொண்ணு கல்யாணம் பண்ணி ஒன்னுக்கு மூணா குழந்தைங்க பெத்து லோக்கல்ல நடத்தற வியாபாரம் நொடிஞ்சு போயி மாமன் திட்டி, மச்சான் திட்டி, அப்பன்திட்டி, ஆயாதிட்டி, லாயக்கில்லையேன்னு நினைச்ச நேரத்துல துபாய்க்கு போனவனுங்க.அந்த மாதிரி ஆளுங்க வெறி பிடிச்சமாதிரி தான் வேலை செய்வான். எத்தினி வந்தாலும் போறாது. மூணு குழந்தைங்களை கரை ஏத்தனுமில்ல.



தங்கச்சிங்களுக்கும் மச்சினிச்சிங்களுக்கும் செய்யணுமில்ல. அதனால வருஷக்கணக்கா பிரிஞ்சுதான் இருக்கான். அது ஒரு மாதிரி பாவம். கடுமையான விதி. இந்த துபாயும் இல்லாட்டி அவன் கதி அதோகதி தான். அதனாலதான் பழந்தின்னி வௌவால் கூட்டம் மாதிரி அங்க போயிடறாங்க."

"அவன் பொண்டாட்டிக்கு புருஷன் கூட இருக்கணும்னு ஆசை இருக்காதா."

"புருஷன் இங்க இருக்கற ஒவ்வொரு நேரமும் காசு போகுதேங்கற பயம்தான் அவளுக்கு இருக்கும்."

"புருஷன் ஊர்லேர்ந்து கிளம்பற போது அவளுக்கும் நெஞ்சு நோகும்டா ஐயோன்னுதான் இருக்கும். அவனும் ஏர்போர்ட் லவுன்ச்ல உட்கார்ந்து அழத்தான் செய்வான். உங்களையெல்லாம் மறுபடியும் பார்ப்பேனா அப்படின்னு ஒரு கவலையோடதான் பிரிஞ்சு போவான்.எங்க பெரியப்பா ஒருத்தரை கரும்பு காட்டுக்கு கூட்டிகிட்டு போயிட்டாங்க."

"எங்க."

"சவுத் ஆப்ரிக்கா. அவர் சைவம். கறிசோறுதான் போடுவாங்களாம். அவருக்கு சைவ சாப்பாடு வேணுங்கறதுக்காக அடிபட்டிருக்கார். நிறைய் தேவாரம், திருவாசகம் படிச்சு மனப்பாடம் பண்ணவரு. ஆனா, அவருக்கு படிப்பறிவில்லாதவர்னு சர்டிஃபிகேட் கொடுத்திருக்கான். ஆனா, அவரை வச்சுருக்கற முதலாளிக்கு இங்கிலீஷ் படிக்கத் தெரியாது. அவன் பேரைத் தவிர வேற எதுவும் எழுதத் தெரியாது. இந்தியர்கள் காட்டு மிராண்டிகள்னு அடிப்பானாம். இவர் தப்பிச்சு கப்பல் ஏறி பாகிஸ்தான்ல இறங்கி அங்கேர்ந்து நடந்து பஞ்சாப்புக்கு வந்து பஞ்சாப்லேர்ந்து டிரெயின்பிடிச்சு பாம்பே வந்து பாம்பேல ஒரு மாசம் இருந்து அங்கேர்ந்து மெட்ராஸ் வந்து மெட்ராஸ்லேர்ந்து மாயவரம் வந்திருக்கார். அங்க யாருக்கும் அவரை அடையாளமே தெரியலை. மாயவரத்துக்கு வந்து அவர் செய்த முதல் வேலை மண்ணை அள்ளி அள்ளி மூஞ்சியெல்லாம். உடம்பெல்லாம் பூசிக்கிட்டதுதான். இதுதான் தேசம். இதுதான் ஊர். இனிமே சோழதேசத்தை விட்டு எங்கேயும் போகமாட்டேன்னு

மண்ணுமேல அடிச்சு சத்தியம் பண்ணாங்க. அதுவொரு காலம். அதுவொரு நிலைமை. ஆனால், அதே நேரம் இதே மாயவரத்து லேர்ந்து ரங்கசாமின்னு ஒரு ஐயரு சிங்கப்பூர் போய் அங்க இருக்கற ஹோட்டல்ல வெள்ளை கோட் வெள்ளை பேண்ட் போட்டுகிட்டு வரபோற வெள்ளக்காரனுக்கு கதவு திறந்து விட்டு ரூம் போறதுக்கு வழிகாட்டி கார் பஸ் ஏற்பாடுபண்ணி பெரிய ஆளாயிட்டான். அவன் குடும்பமே அங்க போயிடுச்சு. மாயவரத்துல அவன் நிலத்துல மூணு வருஷமா எந்த அனுமதியுமில்லாம பயிர் பண்ணிக்கிட்டிருந்தான் இன்னொரு ஆளு. வந்தவனுக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டு கைது பண்ண வச்சு அவன் வீட்ல இருக்கற அத்தனை சேர், நாற்காலி, தங்க நகைகள் எல்லாத்தையும் வாங்கிட்டு அதை வித்து மறுபடியும் சிங்கப்பூர் போயிட்டான். பட்டணத்துல இருக்கற ஒரு ஐயருக்கு மாயவரம் மாதிரி ஊர் உண்டான்னு பேசி அவன் நிலத்தை அவனுக்கு வித்து அவன் வச்சிருந்த மாம்பலம் பங்களாவ வாங்கி அதை இடிச்சு பெருசா கட்டி சாகறமட்டும் ஓகோன்னு இருந்தான். அது ஒரு வாழ்க்கை. அது ஒரு நிலைமை.

அஞ்சுநாள் சிங்கப்பூர்ல வேலை செய்துட்டு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மாயவரம் வந்துடுவான். கார் எடுத்துகிட்டு போய் ஏர்போர்ட்ல விட்டுட்டு சிங்கப்பூருக்கு ஏறிப்போய் அங்க அஞ்சு நாள் இருந்துட்டு திருப்பியும் வந்து ஏர்போர்ட்ல உள்ள காரை எடுத்துகிட்டு மாயவரம் வருவான். எங்க இருக்கோம் அப்படிங்கறது முக்கியமில்லை. எப்படியிருக்கோம்கறதுதான் முக்கியம். எதுக்கு போற வெளிநாட்டுக்கு சம்பாதிக்க. எதுக்கு சம்பாதிக்கணும், சந்தோஷமா இருக்க. அங்கபோய் சம்பாதிக்கத் தான் முடியும். சந்தோஷமா இருக்க முடியாதுன்னா போகணுமா, போகணுங்கறது அவசியமா அப்படின்னு ஒரு கேள்வி வருது.

பூரணி மாதிரி ஒரு பொண்ண நிச்சயதார்த்தம் பண்ணிட்டு கல்யாணம் கட்டாத துபாய்க்கு போறியே இது கொடுமைதான் ஒரு வகையில. இன்னொரு வகையில ஒன்றரை வருஷம் பல்லை கடிச்சுகிட்டு உட்கார்ந்துட்ட பூரணி கழுத்துல நல்ல நகை போடலாம். சரியான வீடு வாங்கலாம். இங்க உட்கார்ந்து வேர்க்கடலை பயிர்வாங்கி விக்கலாம். வாசல்லயே கொடவுன் கட்டி அரிசி விக்கலாம். ஒரு மூட்டைக்கு நூறு ரூபா லாபம் போதும். ஒரு நாளைக்கு பத்துமூட்டை அரிசி வித்தா போதும். கொஞ்சம் ஓடியாடி துவரம் பருப்பு உளுத்தம்பருப்புன்னு வித்தோம்னா அத்தனையும் போனஸ். சுகபோகமா வாழலாம். போ சம்பாதிச்சுகிட்டு வா. ஒன்றரை வருஷத்துல என்ன அள்ளி கிட்டு வரியோ அத்தனையும் அள்ளிகிட்டு வா. மிச்சத்தை கடவுள் பார்த்துப்பாரு. காரணமில்லாம எதுவும் நடக்கலைடா. உங்கம்மா கெட்டவஇல்லை. அசடு. ஒன்னை ரெண்டு பேர் வெட்ட வராங்க அப்படின்னு சொன்னா கத்தியை எடுத்து கையில வச்சுப்பா. உன்னை எதுக்கு வெட்ட வராங்கன்னு சொன்னா கேட்கவே மாட்டா. யோசிக்கவே மாட்டா.

அந்த ரெண்டாங்கெட்டான் பொம்பளையோட நான் ரொம்ப கஷ்டப்பட்டிருக்கேன். சூட்சுமமா எது சொன்னாலும் புரியாது. கொஞ்சம் கூட கிடையாது. கல்யாணம் ஆன புதுசுல என் வீட்டுக்கு ஒரு ஆம்பளை, பொம்பளை வந்தாங்க. ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கு. கணவன், மனைவி பார்க் கும் போதே கண்ணுக்கு குளுமையா இருக்காங்க இல்லியா அப்படின்னு கேட்டேன். எனக்குத் தெரியாதுன்னா. ஏன் கண்ணு இல்லையான்னு கேட்டேன். நான் எந்த ஆம்பளையும் ஏறெ டுத்து பார்க்கறதில்லை. அதனால தெரியாது அப்படின்னு பதில் சொல்றா. நாம என்ன பண்றது-ஒரு அஞ்சு வருஷம் பொறுத்து கேட்டேன்.

அன்னிக்கு ஆம்பளைய ஏறிட்டு பார்க்கறதில்லைன்னு பதில் சொன்னியே ஏன் அப்படி சொன்னேன்னு கேட்டேன். அப்படி சொன்னாதான் உன்னைமாதிரி ஆம்பளைங்களுக்கு பிடிக்கும்னு எனக்கு சொல்லிவச்சிருந்தாங்க. அதனால... அப்ப டின்னு பதில் சொல்றா. பொய் சொல்லாத சொல்லணும்னா பூரணியை பார்த்தவுடனே எனக்கு ரொம்ப சந்தோசமாயிடுச்சு. உன்னை மாதிரி வாலிபனுக்கு அந்த மாதிரி பொண்ணுங்கதான் ரொம்ப சரி. நீ நல்லதை தேடித்தேடி அனுபவிக்கிறவன். உடுத்தறதுலயும், சாப்பிடறதுலயும் உனக்கொரு ருசி உண்டு. எனக்கும் இருந்தது. ஆனால் உங்கம்மாவை கல்யாணம் பண்ண பிறகு மெல்ல மெல்ல ஓய்ஞ்சுப்போச்சு. உடுத்தினா

முதல்முதல்ல பொண்டாட்டி ரசிக்கனும். சாப்பாட்டை அவ தெரிஞ்சு செய்து போடனும். பேசற போதும், பழகற போதும் புரிஞ்சு புரிஞ்சு செய்யனும். எந்தக்காரணம் கொண்டும் பூரணியை விட்டுடாத."

"என்னப்பா... இது... நிச்சயதார்த்தம் ஆயிப்போச்சு விட்டுடாதன்னு பேசிக்கிட்டிருக்க."

"இல்லைடா... உங்கம்மாவும் உங்க அக்காவும் சேர்ந்துகிட்டு வேணும்னா நாம பாக்கு வெத்தலைய திருப்பி வாங்கிக்கலாமன்னு முட்டாள்தனமா பேசுவாங்க."

"நான் வெறி ஆயிடுவேன்ப்பா."

"அப்படியும் ஆகக்கூடாது. நிதானமா தெள்ளத்தெளிவா இந்தப் பொண்ண விட்டா எனக்கு வேற பொண்ணு தேவையில்லைன்னு தெள்ளத் தெளிவா பேசிடனும். அப்போதான் அவங்களுக்கும் அந்தப் பொண்ணு மேல ஒரு மரியாதை வரும். டேய்... ஒன்றரை வருஷத்துக்கு மேல இருக்காதடா. வந்துடறா அந்தப் பொண்ணு பாவம்டா."

அப்பா சொல்லிவிட்டு மேற்கொண்டு நடக்கமுடியாமல் ஒரு கடைவாசலில் போட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்.

அவன் பழைய பேப்பரை கடையில் வாங்கி அவருக்கு விசிறினான்.

அப்பா மிகவும் நொந்து போய் இருக்கிறார் என்பது தெரிந்தது.

"எப்பா... நான் வேணா இன்னொரு தடவை புருஷோத்தமரைப் பார்த்து சமாதானமா பேசட்டுமா."

"தேவையிருக்காதுப்பா."

"இல்லை. நம்ம வீட்ல வரலையே. அதனால இன்னொரு தடவை போய் பேசறதும் மரியாதையா இருக்கும்னு தோணுது. அப்பா அப்படி கேட்டார்னு கேட்டுட்டு வா."

"அப்பா... வா வீட்டுக்கு போகலாம்."



"டேய்... ஆட்டோ வச்சுடறா. என்னால நடக்க முடியும்னு தோணலை."

அப்பா வீட்டுக்கு வந்தார். சட்டையை கழற்றி மாட்டினார். நடு ஹாலில் பாய் விரித்து தலையணை வைத்து படுத்துக் கொண்டார். படுத்த சில நிமிடத்திலேயே தூங்கிப்போனார்.

அப்பாவைப் பற்றி சட்டென்று ஒரு கவலை கமலக் கண்ணனுக்குள் ஒட்டிக்கொண்டது.

இரவு தூக்கமே இல்லை.

தூங்கியபோதும் எங்கோ ஒரு மலைமீது ஏறுவதாகத்தான் கனவு வந்தது. மலைமீது எவருமே இல்லை. ஆனால் பலநூறு கண்கள் பார்த்தன. ஒரு உணர்வு உடம்பு முழுவதும் பரவியது. நாம் ரகசியமாக கண்காணிக்கப் படுகிறோம் என்ற எண்ணம் நடக்கும்போதே தோன்றியது.

அந்தக் கனவு பிடிக்காமல் சிரமப்பட்டு கண்கள் விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

வேண்டாம் என்று சொல்லி விடலாமா.

பின்பக்கம் போய் கைகால் கழுவி பிறகு பல் தேய்த்து வாசல் பக்கம் போய் நின்று கொண்டான். பின்னே யாரோ வரும் சத்தம் கேட்டது.

அப்பா தள்ளாடி எழுந்து வந்தார்.

"என்னடா... மனசுக்கு ரொம்ப தொந்தரவு ஆயிப்போச்சா. பாதி வழியில இருக்க. அப்படித்தான் இருக்கும். அங்க போய் சேர்ந்துட்டின்னாக்க எல்லாம் சரியாயிடும். பொம்பளைங்க காத்துகிட்டிருப்பாங்கடா. விடாப்பிடியா காத்துகிட்டிருப்பாங்க. உனக்குத்தான் கஷ்டம்.நான் உன்னைப் பத்திதான் கவலைப் படறேன். சரியா சாப்பாடு கிடைக்காத, சரியான நேரத்துல தூங்க முடியாத வேலை, வேலைன்னு உடம்பை கெடுத்துப்பியோன்னு பயமா இருக்கு. அம்பது டிகிரி வெய்யில்னா யாரா லடா தாங்க முடியும். ரத்தம் கண்டிடாது. ரத்தம் கண்டிப்போய் வந்து கல்யாணம் பண்ணிகிட்டு என்னாத்த குடித்தனம் பண்ணுவ."

"என்னப்பா... போன்னு சொல்ற போகாதன்னும் சொல்ற."

"நான் போகாதேன்னு சொல்லலைடா. இத்தினி ஜனம் போயிருக்கே. எல்லாபேரும் சம்பாதிச்சகிட்டு வந்திருக்காங்களே உன்னாலயும் முடியும்னுதான் தோணுது. ஆனா, உடம்பு பார்த்துக்கடா. இப்படி தடுக்தடுக்குனு இப்பவே எழுந்து உட்கார்ந்துக்கறியே. அங்க போனா என்னா பண்ணுவ. உன்னைப் பத்தி கவலையா இருக்குடா. அந்தக் கவலையில பேசறேன்."

"என்னைப் பத்தியே பேசிகிட்டிருக்காதப்பா. பூரணி... பூரணி... அவ என்ன கதி ஆவா. எனக்கு அது பயமா இருக்குப்பா."

"மணி என்ன" அப்பா கேட்டார்.

"நாலேமுக்கா" அவன் பதில் சொன்னான்.

"இரு. நான் பல்லை தேய்ச்சகிட்டு வந்துடறேன். எங்கனா போய் டீ சாப்பிட்டு அப்படியே பூரணி வீட்டுப் பக்கம் போயிட்டு வந்துடலாம்."

"ஏம்ப்பா."

"அவங்க அப்பனுக்கும், அம்மாவுக்கும் பயம் இருக்கும். துட்டு வாங்கினதை எங்கிட்ட பையன் சொல்லிட்டான். நீங்க கொடுத்ததை நான் திருப்பித் தரேன் நீங்க கவலைப்படாதீங்க. நான் கேரண்டின்னு சொல்லப்போறேன்."

"நான் வாங்கினது சரியாப்பா."

"தப்புதான். வாங்கிட்டியே என்னா பண்றது நேர் பண்ண வேணாமா."

"எங்கிட்ட இவ்ளோ பிரியமா நீ எப்பவுமே பேசினது இல்லைப்பா."

அவன் மெல்ல அப்பாவை அணைத்துக் கொண்டான்.

"எங்கிட்டயும்தான் யாருமே, எதுக்குமே, எப்பவுமே, பிரியமா பேசினது இல்லை. எதிர்பார்த்ததெல்லாம் கிடைக்குதா. பூரணி மாதிரி ஒரு பொண்ணு உனக்கு மனைவியா வரப்போறான்னு தெரிஞ்சவுடனேயே எனக்கு சந்தோஷமாயிடுச்சு. எனக்கு கிடைக்காதது என் பையனுக்கு கிடைக்கும் அப்படின்னு ஒரு



நிலமை வந்துடுச்சு. நானும் வெளிநாடு போக ட்ரை பண்ணேன், போக முடியலை. நானும் ஸ்கில்ட் டெக்னீசியன் ஆகணும்னு நினைச்சேன். ஆக முடியலை. நிறைய துட்டு சம்பாதிக்கணும்னு நினைச்சேன். சம்பாதிக்க முடியலை. இதெல்லாம் நீ பண்ணப்போற. அதனாலதான் உன்மேல ஒரு அக்கறை. உன் மேல ஒரு அன்பு" பல்துலக்கி முகம் கழுவி சட்டை போட்டுக் கொண்டுவர அவர்கள் இரண்டு பேரும் தெரு முனைக் கடையில் டீ குடித்து விட்டு பொழிச்சலூர் போனார்கள்.

## 33

ஆறு அடிக்க ஐந்து நிமிடத்தின் போது அந்த வீட்டு வாசலில் இறங்கினார்கள்.

வீடு நிசப்தமாக இருந்தது.

சீனுவாசய்யர் வீட்டிலிருந்து டேப்ரிக்கார்டர் ஒலி கேட்டது.

"என்னாடா இது. மெட்ராஸ்ல குளிர் இல்ல. இங்க என்னமோ நடுங்குது" கையை குறுக்கே கட்டிக் கொண்டார்.

"பொழிச்சலூரெல்லாம் மரம் இருக்கற இடம்ப்பா. குளிரத்தான் செய்யும். ஊருக்கு உள்ள வந்துட்டோமில்ல. கடற்கரையோரம் கொஞ்சம் வெப்பமாக இருக்கும்."

பிள்ளை விளக்கினான்.

"யாரது வாசல்ல உட்கார்ந்து கிட்டிருக்கறது."

பின்பக்கம் குரல் கேட்டது.

புருஷோத்தமரின் மனைவி பாக்கியத்தம்மாள் விசாரித்தாள். விளக்கு போட்டாள்.

அவர்கள் முகத்தில் ஒளி படர்ந்ததும், "வாங்க... வாங்க... வாங்க" என்று துடப்பத்தை ஓரமாகப் போட்டு விட்டு கதவு திறந்தாள்.

"என்ன காலங்காலையில" இழுத்தாற்போல் பேசினாள்.

"தூக்கமே இல்லை போங்க."

"ஏன்?"

"வீட்ல கொஞ்சம் சண்டை."

"எதனால? இவன் பாட்டுக்கு துட்டை வாங்கி பையில போட்டுகிட்டு வந்துட்டான். அது என்னமா வாங்குவ, ஏதா வாங்குவேன்னு கத்த ஆரம்பிச்சுட்டாங்க."

"திருப்பி கொண்ணார்ந்துட்டீங்களா?"

"இல்லையே. அப்படியெல்லாம் செய்ய மாட்டோம், உங்களுக்கு கொடுக்கறதுக்கு உரிமை இருக்கு. வாங்கறதுக்கு அவனுக்கு உரிமை இருக்கு. இதை திரும்பி கொண்ணாந்து கொடுத்தா அவமரியாதை இல்லையா?"

"நல்லவேளை பயந்தே போயிட்டேன்."

பாக்கியத்தம்மாள் நெஞ்சில் கை வைத்துக் கொண்டு சொன்னாள்.

"அப்படியெல்லாம் தப்பு நடக்க விட்டுட மாட்டோம்மா. நான் வந்தது வேற விஷயம்?"

"என்ன?"

"என் புள்ளைய நம்பி ஒரு லட்ச ரூபா கொடுத்திருக்கீங்க. அதைவந்து என் புள்ள எங்கிட்ட சொல்லிட்டான். அந்த ஒரு லட்ச ரூபாய்க்கு நான் கேரண்டி. எங்கனா கையெழுத்து போடறதா இருந்தாலும் போட்டுத்தரேன். அப்படின்னு சொல்றதுக் காகத்தான்."

"போங்க நல்லாயிருக்கு. இதுக்கா வந்தீங்க காலங்காலை யில. காபி சாப்பிடறீங்களா."

"வாசல்ல பெருக்கிடுங்களேன்."

"அதை எப்போ வேணா பெருக்கிக்கலாம். உள்ள வாங்க. ஏங்க யார் வந்திருக்காங்க பாருங்க. ஏய்... பூரணி எங்க இருக்கற நீ."

குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே போனாள்.

மறுபடியும் பூரணியைப் பார்க்கப் போகிறோம் என்று அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.



அடுத்த பத்தே நிமிடத்தில் அந்த வீட்டிலுள்ளவர்கள் ஹாலுக்கு வந்தார்கள். மாமனாரையும், தனக்கு கணவனாக வரப்போகிறவனையும் பூரணி விழுந்து வணங்கினாள்.

பாக்கியத்தம்மாள் கொதிக்கக் கொதிக்க காபி கொண்டு வந்தாள்.

பூரணி ஒரு டம்ளரை ஆற்ற இன்னொரு காபியை பாக்கியத்தம்மாள் ஆற்றினாள்.

"நான் சந்தேகப்படறதா யார் சொன்னது உங்களுக்கு. நல்லா யிருக்கு போங்க நீங்க பண்ற வேலை."

செல்லமாக புருஷோத்தமர் கோபித்துக் கொண்டார்.

"எங்கயாவது அடிமனசுல பொண்ணு பெத்த உங்களுக்கு ஒரு பயம் இருக்குமில்ல. நிச்சயதார்த்தம் நடந்து முடிஞ்சுடுச்சு. கல்யாணம் தள்ளிப் போகுது. அதுக்கு நடுவுல பிள்ளை வீட்லேர்ந்து துட்டு வாங்கிட்டு போறாங்கன்னவுடனே வயிறு கலங்குமில்லை. கண்ட கண்ட சிந்தனை வருமில்ல. ஏமாத் திடுவாங்களோன்னு ஒரு பயம் வருமில்ல. அதை துடைச்சு போடணும்னுதான் வந்தேன். நேரங்கெட்ட நேரம்னு எனக்கு முதல்ல தோணிச்சு. ஆனால், எவ்ளோ சீக்கிரம் வந்து சொல் றோமோ, அவ்ளோ சீக்கிரம் உங்களுக்கு நிம்மதி ஆகும்னு தெரிஞ்சு வந்தேன்."

"பெரிய மனுஷன்யா நீங்க. ரொம்ப பெரிய மனுஷன்னு காமிச்சுட்டீங்க. எனக்கொரு ஒரு பயம் அப்படி இருந்தது உண்மை. சீனுவாசய்யர் தொண்ணூறு சதவீதம் துடைச்சுட்டார். அவன் ரொம்ப நல்ல பையன், அவனைப்பத்தி கவலைப்படாத அப்படின்னு சொன்னார். மீதி இருக்கற பத்து பர்சென்ட்ட நீங்க துடைச்சுட்டீங்க. நான் சந்தோஷமா கொடுக்கறேன். இந்த காசை வச்சுகிட்டு அவரு நல்லபடியா ஊருக்குப்போய் இந்த மாதிரி பல மடங்கு சம்பாதிச்சுகிட்டு வரணும். என் குழந்தையை நல்லபடியா வச்சு குடித்தனம் பண்ணணும். இது தான் என் வேண்டுதல். இது தான் என் பிரார்த்தனை."

"பூரணி அவன் ஊருக்கு போயிட்டு வரலாமில்ல."

கமலக்கண்ணனின் அப்பா திரும்பி அவளைப் பார்த்துக் கேட்டார்.

"நல்லா போயிட்டு வரட்டும் மாமா. எனக்கும் ஆரம்பத்துல கொஞ்சம் பயமிருந்தது. வயிறு கலங்குச்சு. ஆனா, இதுவொரு நல்ல சந்தர்ப்பம். இதை நழுவ விட்டோம்னா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் நம்ம நல்ல வாய்ப்பை தவற விட்டோமோ அதுக்குக் காரணம் கல்யாணமோ, பூரணியோ அப்படின்னு தோணும். ஒன்றரை வருஷம் கஷ்டப்பட்டோம்னாக்க சகலமும் ஜெயிச்சுகிட்டு அவரு வந்துடுவாரு. இந்த ஒன்றரை வருஷத்துல நாங்களும் ஒருத்தரையொருத்தர் (நல்லா) புரிஞ்சுக்குவோம்."

"அடாடா... என்ன காபி. பாக்கியத்தம்மா காபியை இப்போ தான் சாப்பிடறேன். ரொம்ப சநதோஷம்.எனக்கு ஐயருங்க ஸ்நேகிதம் ஜாஸ்தி. காபின்னா ரொம்ப உசிரு. உங்க வீட்ல ரொம்ப நல்லா காபி போடறீங்க."

"எல்லாம் சீனுவாசய்யர்தான் நல்ல காபிக்கு காரணம். நானும் ஆரம்பத்துல பொடியை கொதிக்க விட்டுத்தான் போட்டுகிட்டிருந்தேன். அவருவந்து சரிபண்ணாரு. அப்புறம் தான் பில்டர் காபிக்கு மாறினோம்."

அவர்கள் சந்தோஷமாக பல்வேறு விஷயங்களை பேசினார்கள்.

சந்தோஷப்பட வேண்டும் என்று தீர்மானித்து விட்டால் இந்த உலகத்தில் சந்தோஷப்படுவதற்கென்று பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்றரை மணி நேரம் பேசி விட்டு அப்பாவும் பிள்ளையும் எழுந்து நின்றார்கள்.

"மாமா இவரோட நான் ஏர்டிக்கெட் வாங்கறதுக்கு போயிட்டு வரட்டுமா."

பணிவாக பூரணி கேட்டாள்.

"ஏன்... ஏர்டிக்கெட் மட்டும் போனா போதுமா? அவன் ஊருக்கு போறவரைக்கும் அவன் கூடவே கொஞ்சம் வெளிய வாசல்ல சுத்திகிட்டு இரு. ராத்திரி வீட்டுக்கு திரும்பிடு."



மிக அழகாக அவர் ஒப்புதல் கொடுத்தார்.

பூரணி சட்டென்று அவர் புறங்கையைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

என்ன நல்ல மனிதன் என்று மனதுக்குள் வியப்பு தோன்றியது.

அப்பாவும், பிள்ளையும் கிளம்பினார்கள்.

பகல் பதினோரு மணிக்கு பூரணியோடு கமலக்கண்ணன் டிராவல் ஏஜண்டின் படியேறினான். உள்ள வெள்ளை வெளேரென்று கல்யாணிராமன் மெல்லிய புன்சிரிப்போடு உட்கார்ந்திருந்தான்.

"ஸார், இன்னும் நாலுநாள்தான் இருக்கு. நீங்க கிளம்பறதுக்கு. உங்களை ஏர்போர்ட்ல வந்து சந்திரசேகர் ரிசீவ் பண்ணிப் பாரு. போன அன்னிக்கு ஓய்வு. மறுநாள்லேர்ந்து டூட்டியில் ஜாயின் பண்ணிடுவீங்க. முதல் ஒரு வாரம் டே ஷிப்ட்டா இருக்கும். அப்புறம் எந்த ஷிப்ட்டு வேணா வரும். எல்லா நேரமும் இருக்கும்படியாவும் இருக்கும். காசு கொண்டு வந்திருக்கீங்களா ஸார்" கல்யாணிராமன் கேட்க, அவன் உடனே காசு எடுத்து மேஜையில் வைத்தான்.

துபாய் காசாக மாற்றிக் கொள்ளும் வழியையும், இடத்தையும் அவன் அவனுக்கு விளக்கிச் சொன்னான்.

கமலக்கண்ணனும், பூரணியும் காசு மாற்றும் இடத்திற்கு போனார்கள். பூரணி அவன் தோளை இறுகப் பற்றிக் கொண்டு வந்தாள். சிலசமயம் மேலே சாய்ந்தபடி வந்தாள்.

அவர்கள் குளுமையான பெரிய ஹோட்டலில் எதிரும், புதிருமாய் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.

"எதுனா படம் போகலாமா" என்று கமலக்கண்ணன் கேட்க சரியென்று அவள் தலையசைத்தாள்.

இரண்டு பேரும் ஒரு தமிழ்ப்படத்திற்கு போய் உட்கார்ந்து கொண்டார்கள். கைகளை கோர்த்து கொண்டார்கள். கன்னம் இழைத்து கொண்டார்கள்.

அவன் தோளில் முகம் பதித்து படம் பார்த்ததால் என்ன படம் ஓடுகிறதென்றே தெரியவில்லை. அவனுக்கும் தெரிய வில்லை.

இடைவேளை முடிந்ததும் போர் அடிக்குது போகலாமா என்று கேட்க சரியென்று அவன் தலையசைத்தான்.

"படம் நல்லாயிருந்ததா நல்லா இல்லையா."

திடுமென்று கேட்டான்.

"யார் பார்த்தா. இருட்டுல கைகோர்த்துகிட்டு உட்காரனும். உட்கார்ந்துட்டோம். மறுபடியும் ஊரை சுத்தனும்னு தோணித்து வந்துட்டோம்."

"பீச்சுக்கு போகலாமா."

இந்தமுறை அவள் கேட்டாள்.

இரண்டு பேரும் கடற்கரைக்குப் போனார்கள்.

அவன் பேண்ட்டை சுருட்டிக்கொண்டு அலைந்தான். அவள் புடவையைத் தூக்கிக் கொண்டு அவனுக்கருகே நின்றாள். பெரிய அலை ஒன்று ஓடிவந்து அவர்கள் இரண்டு பேரையும் இடுப்பு வரை நனைத்தது. அவர்கள் கரையேறினார்கள். பானி பூரி சாப்பிட்டார்கள். பிறகு மோட்டார் சைக்கிள் ஏறி பார்த்தசாரதி கோயிலுக்குப் போனார்கள்.

"நான் துபாய் போறேன். வரத்துக்கு ஒரு வருஷம் ஆகும். நல்லபடியா போயிட்டு வரணும்னு அர்ச்சனை பண்ணனும்."

அவன் கோவில் பட்டரிடம் சொல்ல கதவருகேயிருந்து உள்ளே அழைத்தார். இரண்டு பேரையும் அருகருகே நிற்க வைத்தார்.

"இது யாரு ஒய்ஃபா."

"ஆமாம்."

அவன் கூசாமல் சொன்னான்.

கம்பீரமாய், மீசையோடு, சிரிப்போடு பெரிய பெரிய கண்களோடு நான் இருக்கிறேன் என்று நெஞ்சு நிமிர்வோடு தன் மனைவி ருக்மணியோடு அண்ணன் பலராமரோடும், தம்பி



யோடும், மகனோடும், பேரனோடும் பார்த்தசாரதி கொலுவீற்றிருந்ததை அவர்கள் கண்கொட்டாமல் கவனித்தார்கள். எல்லோரையும் வணங்கினார்கள்.

இது பார்த்தசாரதி குடும்பமா இருக்கற இடம். குடும்பங்கறது ஆம்படையான், பொண்டாட்டி மட்டுமே இல்லை. எல்லாரும் சேர்ந்ததுதான் குடும்பம்.

ஒரு குடும்பமா கம்பீரமா இருக்கறா மாதிரி எல்லாரும் இருக்கணும்கறதுதான் இந்தக் கோவிலினுடைய ஜதீகம்.

தீர்த்தம் கொடுத்து சடாரிசார்த்தி கழுத்தில் மாலை போட்டு அவளுக்கு தலைக்கு மல்லிகைப் பூ கொடுத்து தேங்காயும், வாழைப்பழமும் கொடுக்க அவன் அவர் தட்டில் நூறுரூபாய் போட்டான்.

"என்னமோ உள்ள நிறைஞ்சுப் போச்சு பூரணி" குரல் தழுதழுக்க குதூகலமாய் சொன்னான்.

"எனக்குந்தான், அவரு பொண்டாட்டியான்னு கேட்டா ஆமான்னு தலையசைச்சீங்களே."

"ஏன் உனக்கென்ன சந்தேகம்."

"இன்னும் கல்யாணம் ஆகலையே."

"ஆயிடுச்சு, எதுனா உனக்கு நம்ம கல்யாணம் பத்தி சந்தேகம் இருந்தா அதை துடைச்சு போட்டுடு.நான் இப்பவே உன்னை அள்ளி தூக்கிட்டு போய் எங்கனா லாட்ஜுல படுக்க வச்சுடுவேன். உங்க அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மரியாதை கொடுக்கணும்னுதான் நான் ஒன்றும் பண்ணாத இருக்கேன். அது முக்கியம். வா, உன்னை வீட்டுக்கு கொண்டு போய் விடறேன்."

கமலக்கண்ணன் மிகச் சரியாக இருட்டுகின்ற நேரத்தில் தாய்க்கும், தந்தைக்கும் கவலை தோன்றுகின்ற நேரத்தில் அவன் வண்டியை வாசலில் நிறுத்தினான்.

பூரணி துள்ளிக் கொண்டு உள்ளே போனாள்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் குங்குமம் கொடுத்தாள், பார்த்தசாரதி கோவிலில், தான் வணங்கியது பற்றிச் சொன்னாள்.

அவன் டிக்கெட்டையும், விசாவையும் அவர்களிடம் காண்பித்தார்கள்.

கவர் பிரித்து விசாவைப் பார்த்து "அட....மூணு வருஷத்துக்கு கொடுத்திருக்காங்க."

"ஆமாய்யா... வொர்க்கிங் விசா."

"இந்த பேப்பர் காமிச்சா போதும். அவங்க ஏற்பாடு பண்ணிடுவாங்க. இதுவொரு பாண்ட். அந்த டிராவல் ஏஜெண்ட் இந்த பாண்ட்ல சைன் பண்ண அந்த அமெரிக்கன் கம்பெனிக்கு கொடுத்திருக்கான். அந்த பாண்டினுடைய காப்பி.இதைக் காண்பிச்சா டிக்கெட் கொடுத்துருவாங்க."

"அப்போ கிளம்பறது முடிவாயிடுச்சு இல்ல."

"ஆமாய்யா. ஏன்ய்யா கேக்கறீங்க." கமலக்கண்ணன் மெல்லிய குரலில் கேட்டான்.

"எதுனா சொல்லி கிளம்பாத இருந்திருவியோன்னு நினைச்சேன்."

"ஏங்க... நான் போறதுல எதுனா கஷ்டங்களா?"

"இல்லையா... அத்தினி பேரும் கேள்வி கேட்பாங்களே. நிச்சயதார்த்தத்துக்கு வந்தவனெல்லாம் எப்போ கல்யாணம், எப்போ கல்யாணம்னு கேட்பாளே.ஆறுமாசம் வரைக்கும் தாக்கு பிடிக்கலாம். அதுக்கப்புறம் சொல்லணுமில்லை. ஒன்றரை வருஷம் ஆகும் மாப்பிள்ளை வரதுக்குன்னு ஏன் அப்படியொரு சம்மந்தம் பண்ணீங்கன்னு கேட்பாங்க இல்ல. எதுனா பேசுவான் இல்ல. உனக்கும் எனக்கும் இருக்கற உறவு, உனக்கும் எனக்கும் இருக்கற அன்னியோன்யம், நட்பு பத்தி அவனுக்கு ஏதாவது கவலை உண்டா. அவன் ஏதாவது சொல்ல நாங்க ஏதாவது சொல்ல தேவையில்லாத பேச்சு வரும். நான் தான் அடக்கமா இருக்கணும்."

"உங்களுக்கு ரொம்ப கஷ்டம் கொடுத்துட்டேன்யா."



"நீயா கொடுத்த. இதெல்லாம் ஏற்கனவே எழுதப்பட்ட விதி. கடவுளின் விருப்பம்.எல்லாம் நல்லதுக்குத்தான்."

"நாளைக்கு கொஞ்சம் லுங்கி வாங்கணும். ரெடிமேட் சட்டை வாங்கணும்."

"வாங்கிக்கயேன்."

"பூரணியை..."

"கூட்டிகிட்டு போயேன்."

மறுநாளும் ஊர் சுற்றினார்கள்.

"மகாபலிபுரம் போற வழியில திருவிடந்தைன்னு ஒரு இடம் இருக்காம். கல்யாணமாகாதவங்களுக்கு அங்க வேண்டிக் கிட்டா நல்லபடி கல்யாணமாகுமாம்."

"நமக்குத்தான் கல்யாணம் நிச்சயமாயிடுச்சே..."

பூரணியின் பேச்சுக்கு கமலக்கண்ணன் பதில் கொடுத்தான்.

"நல்லபடியா கல்யாணம் நடக்கணும் அப்படின்னு வேண்டிக்கலாமில்லை."

"வேண்டிக்கலாம். இப்பவே போயிடட்டுமா."

அவன் வண்டி வேகமாகக் கிளம்பியது. திருவிடந்தைக்குள் இறங்கியது.

வண்டியை வாசலில் நிற்க வைத்து இரண்டு பேரும் மாலை வாங்கிக் கொண்டு போய் மனைவியை மடியில் வைத்திருந்த வராகருக்குப் போட்டு இன்னொன்றை தாயாருக்குப் போட்டு அழகு பார்த்தார்கள்.

நெடுந்துயர்ந்த சிலை. தாயாரின் கன்னத்தில் முத்தமிட்ட நிலையில் இருக்கின்ற வராகர். வராகரை பயமின்றி அணைத்துக் கொண்டிருக்கும் தாயார்.

"அதான் நீங்க."

வராகரை பூரணி சுட்டிக் காட்டினாள்.

"ஏன் கேலியா சொல்றியா."

"இல்லை வராகருன்றது பூமியை குடைகிற அம்சம். நீங்க பூமியை குடைஞ்சு எண்ணை எடுத்துட்டு வரப் போறீங்க. எப்படிப்பட்ட உடம்பு வாகுங்க அவருக்கு. ஆஜானுபாகுவா எதுக்கும் பயப்படாதவரா இருக்காரு. அந்தம்மாவை பாருங்க"

"ஆங்... உன்னை மாதிரியே இருக்காங்க."

"எப்படி சொல்றீங்க."

"இடுப்புல கைய போட்டுகிட்டு இன்னும் முத்தம் கொடுன்ற மாதிரி கன்னத்தை காட்டிகிட்டு இருக்காங்களே."

அவள் இனிமையாய் பொங்கிச் சிரித்தாள்.

அவர்கள் கோவிலை வலம் வந்தார்கள்.

அங்கிருந்து வீட்டுக்கு வந்து முகம் கழுவி காபி குடித்து விட்டு பொழிச்சலூர் கோவிலுக்கும் போனான்.

பொழிச்சலூர் இளைஞர்கள் அவனை சூழ்ந்து கொண்டார்கள்.

"எப்போ ஸார் கல்யாணம்? அடிக்கடி இங்க பார்க்கறோம்."

ஒரு இளைஞன் ஸ்நேகமாகக் கேட்டான்.

"பூரணியை பார்க்கறதுக்காக வரேன். நான் ஊருக்குப் போறேன்."

"என்ன ஸார்... கல்யாணம்?"

"வந்து நடக்கும்."

"எங்க ஸார்"

"துபாய்."

"என் ஸார் அவ்ளோ தொலைவு."

"வேலை கிடைச்சுருக்கு."

"போயிட்டு வாங்க ஸார். பொழிச்சலூர்லேர்ந்து நிறைய பசங்க மிடில் ஈஸ்ட் போயிருக்காங்க. துபாய்க்குக்கூட ஒரு பெரியவர் போயிருக்காரு."

பொழிச்சலூர் இளைஞர்கள் உற்சாகமாகப் பேசினார்கள். கைகுலுக்கி விடை கொடுத்தார்கள்.



# 34

"நான் நாளைக்கு எங்கேயும் வரலை" பூரணி பேசினாள்.

"ஏன் அலுத்துப்போச்சா."

"இல்லை. உங்களுக்கு பொடியெல்லாம் பண்ண வேணாமா. மாமிகிட்ட கேட்டேன். அது ஒருநாள் விவகாரம். நானே பண்ணித்தரேன்னாங்க. நீங்க மட்டும் பண்ணா போறாது மாமி நானும் கூட இருப்பேன்னு சொல்லிட்டேன். அரைகிலோ பிளாஸ்டிக் டப்பா நாலு வாங்கியிருக்கோம்."

"இதுவே கனமாயிடுச்சுன்னா மத்ததுக்கு நான் என்ன பண்ணுவேன்."

"மிச்சம் என்ன இருக்கு துணிமணிதானே."

"அங்க பேண்டெல்லாம் விலை ஜாஸ்தி."

"பரவாயில்லை. கூடுதலா எடை ஆச்சுன்னா அதுக்கு கட்டணம் கட்டிடலாம்."

"நான் உங்க வீட்டுக்கு வரவா, இல்ல, ஏர்போர்ட்டுக்கு வரவா."

"வீட்டுக்கு வா."

அவன் திடமாக பதில் சொன்னான்.

அவன் சொன்னது அவளுக்குப் பிடித்திருந்தது.

அவளும் அவன் வீட்டிற்கு வந்தாள். ஆட்டோவிலிருந்து பெரிய பெட்டியை இறக்கினார்கள்.

"ஐய்யய்ய... இதெல்லாம் எடுத்துட்டுபோய் என்னத்துக்கு தேவையில்லாம கனம் வைக்காதீங்க" அக்கா கூவினாள்.

"இல்லை. அங்க தேவைப்படும்னுதான் கொண்டு வந்திருக்கோம்."

பூரணி அம்மா பாக்கியத்தம்மாள் மிருதுவான குரலில் பேசினாள்.

"நான்தாம்மா கொண்டு வரச்சொன்னேன். அங்க வேணும்னு சந்திரசேகர் கேட்டாரு. அவருதான் என்னை அங்க வரவழைக்கறாரு."

அம்மா வாயடைத்துப் போனாள்.

"நல்லபடியா கல்யாணம் ஆகும்னு நினைச்சோம். என்னமோ பக்குனு இவன் கிளம்பும்படியா ஆயிப்போச்சு."

"அதுக்கென்ன நிறைய சம்பாதிச்சுகிட்டு வரப்போறாரு."

"சரி... வரட்டும். வேணாம்னு சொல்லலை. இத்தினி நாள் உட்கார்ந்துகிட்டிருந்தான் இங்கேயே அப்போல்லாம் கிடைக்கலை. கல்யாணம்னு வரும்போது கிடைக்குது பாருங்க."

"எல்லாம் ஒரு நேரம்தான்."

"நல்ல நேரம்னு சொல்றீங்களா, கெட்ட நேரம்னு சொல்றீங்களா" அம்மா கேட்டாள்.

"நாம எடுத்துக்கறது பொறுத்திருக்கு."

புருஷோத்தமர் பதில் சொன்னார்.

"ஆமாம். நாம் நல்லபடியாவே எடுத்துப்போம்."

அவர்கள் அமைதியானார்கள். டிபனும், காபியும் சாப்பிட்டு விட்டு புருஷோத்தமரின் வீடு விடைபெற்றுக்கொண்டு போயிற்று.

"நான் ஏர்போர்ட்டுக்கு வரேன்" பூரணி காதோரம் சொன்னாள்.

"பதினோரு மணிக்கு ஃப்ளைட். ஒன்பது மணிக்கு உள்ள போயிடுவேன்."

"நாங்க அங்க எட்டு மணிக்கு இருப்போம்."

அவன் அப்பாவோடும் தமக்கையோடும், தமக்கையின் கணவரோடும் ஏர்போர்ட்டுக்கு வந்திருந்தான்.

அவன் வந்ததும் குழந்தை போல துள்ளிக்குதித்துக் கொண்டு பூரணி அவனுக்கு அருகே போனாள்.

அவன் மெல்ல அவள் இடுப்பைச் சுற்றி கட்டிக் கொண்டான். அணைத்துக்கொண்டான்.



கமலக்கண்ணனின் தமக்கை அதை வியப்போடு பார்த்தாள்.

அப்படின்னா இந்த அஞ்சு நாளும் நல்லா ஊர் சுத்தியிருக்கீங்களா. அடிப்பாவி... என்று மனசுக்குள் முனகிக் கொண்டாள்.

பிரிவு தாகத்தால் நாக்கு வறண்டது. அவன் அவளுக்கு ஆரஞ்சு ஜூஸ் வாங்கிக் கொடுத்தான். இரண்டு பேரும் குடித்துக் கொண்டே தனியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

புருஷோத்தமர் காலில் விழுந்து வணங்கினான். பாக்கியத்தம்மாளின் காலை தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

"நல்லபடியா போயிட்டு வாங்க. பொண்ண பெத்த நான் வயித்துல நெருப்பை கட்டிகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கேன். வாய்வார்த்தையா எதுவும் சொல்லக்கூடாதுன்னு ரொம்ப இறுக்கமாக இருக்கேன். என் நிலைமையை யோசனை பண்ணி பார்த்துட்டு சட்டுனு வந்துருங்க தம்பி."

"வந்துடறேம்மா."

ஒற்றை வார்த்தையாய் அவன் பதில் சொன்னான்.

"பூரணி எதுனா பேசேன்" மறுபடியும் அவளுக்கருகே போய் கைகள் கோர்த்துக் கொண்டான்.

அவள் கைப்பையை திறந்து அதிலிருந்து ஒரு சிறிய கவர் எடுத்துக் கொடுத்தாள்.

"என்ன."

"ஒன்னு என் போட்டோ. இன்னொன்னு கேசட். எனக்கு பிடிச்ச சினிமா பாட்டெல்லாம் இதுல ரெக்கார்ட் பண்ணியிருக்கேன் ரெண்டு கேசட் முழுக்க இருக்கு. எப்போவாவது முடிஞ்சதுன்னா போட்டு கேளுங்க. போனவுடனேயே டேப்ரிக்கார்டர் வாங்கிக்கோங்க. இங்கேயே டேப்ரிக்கார்டர் வாங்கித்தரணும்னு ஆசை, ஆனா இங்க விட அங்க கிடைக்கும்னு சொன்னாங்க. அதான் வெறும் கேசட் மட்டும் தரேன்."

"என்னது கவர்ல" தமக்கை கேட்டாள்.

"ஒன்றுமில்லை."

அவன் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அவன் தமக்கைக்கு மெல்லிய கோபம் ஏற்பட்டது.

"நான் வரட்டுங்களா... வரட்டுங்களா... நான் வரேன்."

தமக்கையை பார்த்துச் சொன்னான். மாப்பிள்ளையை கட்டித்தழுவிக் கொண்டான்.

அப்பாவின் முகத்தை கையில் தேக்கிக்கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான். இறுக அணைத்துக்கொண்டான்.

"முடியும்போதெல்லாம் அவங்ககிட்ட பேசிகிட்டிரு. மாசத்துக்கு ஒரு தடவையாவது அவங்க வீட்டுக்குப்போ மறந்துடாதே" கமலக்கண்ணன் அப்பாவுக்கு கட்டளையிட்டான்.

"சரிடா. நீ உடம்பு பார்த்துக்கோ.நல்ல பொருளா சாப்பிடு. ரொம்ப வெய்யில்ல நிக்காதடா."

ஏதோ சொல்ல வேண்டும் என்பதாய் பெரியவர் பேசினார். அவர் குரல் உடைந்திருந்தது.

"பூரணி, இங்க வா. அதோபார் அந்த போலீஸ்காரரைத் தாண்டி ஒரு ஆபீஸர் நிக்கறாரு. அவராண்ட போய் எனக்கு நிச்சயதார்த்தம் ஆயிடுச்சு. எங்க வீட்டுக்காரர் துபாய் போறாரு. நான் வழி அனுப்பிட்டு வந்துடறேன்னு கேளு. சரின்னு சொன்னாலும் சொல்லுவார்."

"எங்க... எங்க."

பூரணி படபடத்தாள்.

"ரொம்ப தாழ்மையாக் கேளு. அவன் விடணும்னு அவசியமில்லை."

பளிச்சென்று அந்தக் கூட்டத்தை விட்டு ஓடி போலீஸ்காரிடம் கெஞ்சி அதைத்தாண்டி அங்குள்ள அதிகாரியைப் பார்த்து கைகூப்பினாள். மூச்சிரைக்க நின்றாள்.



என்ன என்று கேட்டதற்கு மடமடவென்று தமிழில் தன்னுடைய நிலைமையைச் சொன்னாள்.

"இது ஏர்போர்ட்டும்மா. செக்யூரிட்டி ஜாஸ்தி. வயசானவங்களுக்கு துணையா யாராவது போகலாம். இப்படியெல்லாம் யாரும் போகக்கூடாது."

அவள் கைகூப்பினாள்.

"உயிரே பிரியுது போல இருக்குங்க. ஒரு அஞ்சுநிமிஷம் அவர்கூடநின்னு பேசிட்டுபோறேன். சத்தி எங்க வீட்டு மனுஷாள், அவங்க வீட்டு மனுஷாள்னு ஒண்ணுமே பேசமுடியலை. எதுபேசினாலும் பக்கத்துல வந்து நின்னுக்கறாங்க. நீங்க வயசானவங்க. பொண்ணை பெத்துருப்பீங்க. வாழ்ந்திருப்பீங்க உங்களுக்குத் தெரியாதா."

"சரி. போம்மா."

மடமடவென்று அவள் பெயரையும் விலாசமும் எழுதிக் கொண்டு தனிச்சீட்டில் ஒரு அனுமதிக் கடிதம் கொடுத்தார். துள்ளிக்கொண்டு வெளியே வந்தாள். வாங்கிட்டேன் என்றாள்.

அவளுடைய சாமர்த்தியம் கமலக்கண்ணனுக்கு பிடித்திருந்தது.

"ஐய்யய்ய... நீயெல்லாம் உள்ள போகக்கூடாது." விவரம் தெரியாமல் கமலக்கண்ணனின் தமக்கை தடுக்க அவள் சரியென்று கேட்டுக்கொண்டாள்.

"இதைத்தாண்டி பொது ஜனத்துக்கு அனுமதி இல்லை."

மறுபடியும் தமக்கை உரத்த குரலில் பேச அவள் கமலக்கண்ணனின் டிராலியை தள்ளி உள்ளே எடுத்துச் சென்றாள். கடிதம் காட்டினாள்.

பூரணியின் அப்பாவுக்கு அவள் ஏதோ செய்து தனி அனுமதி வாங்கியிருக்கிறாள் என்பது புரிந்து விட்டது. தொலைவிலிருந்து கையசைத்தார்.

"இவ மட்டும் எப்படிப் போறா. நாம போக முடியாதா."

"அவ ஸ்பெஷலா ஒரு பர்மிஷன் வாங்கியிருக்கா. இப்போ ஓடினாளே பார்க்கலை."

கமலக்கண்ணனின் அப்பா சொல்ல அவர்கள் அங்கிருந்தே விடைகொடுத்தார்கள்.

அவள் டிராலியைத் தள்ளி திரும்பினாள். கமலக்கண்ணனுக்கு அருகே அவர்களைப் பார்த்து கையசைத்தார்கள்.

அவளும் அவனோடே போவது போல ஒரு கற்பனையில் தொடர்ந்து நடக்க கமலக்கண்ணனும் விருட்டென்று அவள் பின்னே நகர்ந்தான்.

கமலக்கண்ணனின் தமக்கைக்கு அது ஏமாற்றமாக இருந்தது. ஏனோ கோபம் வந்தது.

டிக்கெட்டைக்காட்டி போர்டிங் பாஸ் வாங்கிக் கொண்டான். தன்னுடைய பாஸ்போர்ட் பற்றிய விவரங்களை விமான எண்ணை அந்தப்படிவத்தில் குறித்து பாஸ்போர்ட்டில் வைத்துக்கொண்டான்.

இமிக்ரேஷனைத் தாண்டி அவளால் வரமுடியாது. எனவே அங்கேயே ஒரு நாற்காலியில் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார்கள். கையைக் கோர்த்துக் கொண்டார்கள். உடம்போடு உடம்பு உரசி பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

"ஏண்டா உன்னை பார்த்தோம்னு இருக்கு."

"என்ன சொல்றீங்க புரியலையே."

பூரணி கொஞ்சலாகக் கேட்டாள்.

"பார்த்ததுனாலேதானே இப்படி பிரியும்படியா இருக்கு. பார்க்காதயே இருந்திருந்தோம்னா நல்லாயிருந்துருக்குமில்லை."

"சும்மா அப்படியெல்லாம் பேசக்கூடாது. என்னா இப்போ புருஷன் பொண்டாட்டியா ஆயிட்டா பிரிய முடியாதா. அப்பவும் தான் வேலைக்கு வெளிய போகணும். இதுக்கெல்லாம் வருத்தப்படக்கூடாது."

"எனக்கு கொஞ்சம் கூட வருத்தம் வரலை. நீங்க என் புருஷன். வேலைக்கு போயிருக்கீங்க, நல்லபடியா வேலையை முடிச்சுட்டு நிறைய காசோட மறுபடியும் வரப்போறீங்க. யார் கேட்டாலும் என் புருஷன் வெளியூருக்கு போயிருக்காரு. சம்பாதிச்சுகிட்டு வருவாருன்னு சந்தோஷமா சொல்லுவேன்."



அவன் சட்டென்று இறுக்கி அவள் உதடுகளில் முத்தமிட்டான்.

ஒலிபெருக்கியில் விமானத்தில் ஏறச்சொல்லி அழைப்பு வந்தது. கைப்பையை மட்டும் தூக்கிக் கொண்டு இமிக்ரேஷன் நோக்கி நடந்தான்.

"உங்க ரெண்டு பெட்டியும் வந்துடுமா துபாய்க்கு."

"ஜாக்கிரதையா வந்துடும்.அங்க போய் எடுத்துக்க வேண்டியதுதான்."

அவளோடு கைகுலுக்கினான். மெல்ல நெற்றியில் முத்தமிட்டான்.

அவள் நெருங்கி அவனின் நெஞ்சில் முகத்தை பதித்துக் கொண்டாள். விலகினாள்.

"நல்லபடியா போயிட்டு வாங்க. மறுபடியும் சொல்றேன் எனக்கு கொஞ்சம்கூட வருத்தமில்லை. துக்கமில்லை.இது எல்லாம் நல்லதுக்குத்தான். இந்தப்பிரிவு நம்ப ரெண்டு பேருக்கும் நாம யாருன்னு தெரிவிக்கும். நம்ம காதல் பெருசாகும். மரண பரியந்தமும் ஒரு சின்ன சண்டைக்கூட இல்லாது நாம குடித்தனம் பண்ணப் போறோம்."

"நீயும் நானும் எப்படி இருக்கப்போறோம்கறது முக்கியமே இல்லை அதோ அந்த கும்பல். அங்க நாம என்ன பண்ணப் போறோம்னு எனக்கு கவலையா இருக்கு. ஒன்றரை வருஷத்துல உங்க வீட்டுக்கும் என் வீட்டுக்கும் தகராறு இல்லாது இருக்கணுமேன்னு கவலையா இருக்கு" அவன் கவலையோடு பேசினான்.

"அதெல்லாம் ஒரு கவலையும் நீங்க படவேண்டாம். எல்லாத்தையும் என் பொறுப்புல விட்டுருங்க. என்ன தகராறு வந்தாலும் நான் உள்ள புகுந்து சரி பண்ணிடுவேன்."

"என் தங்கையும், அம்மாவையும் கொஞ்சம் வளைச்சுக்க பூரணி."

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்."

"ரொம்ப கீழ போக வேணாம்."

அவன் ஆதரவாய் தோளில் கைவைத்தான்.

"சிலசமயம் கீழத்தான் போயாகணும். அதுல ஒண்ணும் தப்பில்லை. உங்கம்மாவை எப்படி மயக்கறதுன்னு எனக்கு தெரியும். உங்க தங்கச்சி கர்வத்துல ஆடறாங்க. கடவுளா பார்த்து தள்ளி வைப்பாரு. ஒரு கவலையும் படாதீங்க. உடம்பை பார்த்துக்கோங்க. முடிஞ்சபோது லெட்டர் போடுங்க. போன்ல பேசுங்க. போய் இறங்கினவுடனே தயவுசெய்து போன் பண்ணுங்க."

அவள் இந்த முறை எட்டி அவனை ஆரத்தழுவிக்கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள். கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அவன் தோள்பையோடு நகர்ந்தான். இமிக்ரேஷன் தாண்டினான். அங்கிருந்து அவளைப் பார்த்தான். அவளுக்கு அழுகை பொங்கிற்று. கண்ணிலிருந்து கண்ணீர் அருவியாய் வழிந்தது.

அவன் நகர்ந்தான். தொலைவில் போய் மறுபடியும் பார்த்தான்.

தொலைவே, புடவையை வாயில் வைத்துக்கொண்டு அசையாமல் நிற்கிறவளை பார்க்கும் போது வயிறு கலங்கியது. அங்கிருந்து கைவீசி ஆட்டினான். அவளும் பதிலுக்கு வீசி ஆட்டினாள்.

அவன் வீசலில் ஒரு நொய்மை இருந்தது.

"ஸார் ஃப்ளைட்டுக்கு கூப்பிட்டாங்க போங்க" என்று யாரோ நகர்த்த அவன் தோளில் பைமாட்டிக்கொண்டு இன்னொரு கண்ணாடிக் கதவைத்தாண்டி நகர்ந்தான்.

அவள் அங்கேயே நிற்பது தெரிந்தது. மெல்ல நடந்து தன் பையை ஒரு மேஜையில் வைத்து திறந்து காட்டினான். மறுபடி மூடினான். தோளில் பைமாட்டிக் கொண்டு வெட்ட வெளிக்கு நடுவிலேயிருந்த விமானம் நோக்கி நடந்தான்.

உடம்பில் வலுவே இல்லாதது போல் இருந்தது.

அவன் பையை பிரித்துக் காட்டுவது தெரிந்தது. மறுபடி மூடுவது தெரிந்தது. தோளில் மாட்டுவது தெரிந்தது. மெல்ல



தோளில் மாட்டி தன் பக்கம் திரும்பி நேரே நடக்கும் போது அவளுக்கு அவள் உயிரே அவளைவிட்டு பிரிவது போல் இருந்தது. அங்கேயே துவண்டு விழுந்துவிடுவோம்போல ஒரு பலஹீனம் ஏற்பட்டது. உடம்புக்குள் ஏதோவொன்று மடமட வென்று ஓடியது.

மறுபடியும் பார்ப்பேனா. இவன் கையில் தாலி வாங்குவேனா. இவனோடு கட்டிலில் படுத்துப்புரண்டு குடித்தனம் செய்வேனா. குழந்தை பெறுவேனா. எல்லாமே கேள்வியாகி விட்டதே ஏன். எதற்காக இந்தத் தவம். ஏன் இந்தத் தனிமை.

அவள் மெல்ல நகர்ந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

முகம் பொத்திக்கொண்டாள். அவளுக்கு அழுகை பீறிட்டு வந்தது. கொஞ்ச நேரம் அழவேண்டும்போல் இருந்தது.

அவள் அழத்துவங்கினாள்.

தொலைவிலிருந்து சிலபேர் வேடிக்கை பார்த்தார்கள்.

அவள் வீடு வெளியே தவித்துக் கொண்டிருந்தது.

## 35

உதறிவிடலாமா. சகலத்தையும் நிறுத்தி விடலாமா. இந்த இமிக்ரேஷன் இடத்தைத் தாண்டி ஓடிப்போய் அவன் பையைப் பிடுங்கி வா. போகாதேன்னு சொல்லி இழுத்து வந்து விடலாமா? கொண்டு வந்து கொடுக்கின்ற ஆறாயிரம் போதும். அதில் நான் சொர்க்கத்தை காட்டுகிறேன். அற்புதமாக குடித்தனம் பண்ணுகிறேன்.எனக்கு காக வேண்டாம். நீ வேண்டும். நீ வேண்டும் என்று இழுத்து வந்து விடலாமா.

அழுகை சட்டென்று நின்று ஒரு கோபம் எழுந்தது.

என்ன முட்டாள்தனம். இந்தக் கணத்தை இப்படி ஒரு பிரிவை நீ சந்திக்கப் போகிறாய் என்று உனக்குத் தெரிந்திருந்தும் ஏன் இதை அனுமதித்தாய். ஏன் உன்னால் தடுத்துநிறுத்த

முடியவில்லை. நீ போகக் கூடாது என்று சொல்வதற்கு உன் புத்தி எங்கே போயிற்று. நீயாகத் தானே அனுப்பி வைத்தாய். அப்படி அனுப்பிவைக்கின்ற அபத்தம் உனக்குத் தெரியவில்லையா. ஒன்றரை வருடங்கள் இதோ இந்தக் க்ஷணத்திலிருந்து பதினெட்டு மாதங்கள் வெறுமே தண்ணீர் இல்லாத கொடி போல் நீ கிடக்கப் போகிறாய். ஊர் முழுவதும் உன்னை கதவு தட்டி துக்கம் விசாரிக்கப் போகிறது. என்னாடி கல்யாணம் நின்னு போச்சாமே என்று நாக்கூசாமல் கேள்வி கேட்கப் போகிறது. யார் பதில் சொல்லப் போகிறார்கள். யாரால் பதில் சொல்ல முடியும். ஒவ்வொரு கேள்வியும் காது வழியாக நெஞ்சுக்குள் ஈட்டி போல் பாயுமே எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்.

இன்னும் கமலக்கண்ணன் வீட்டு ஜனம் என்ன செய்யப் போகிறதென்று தெரியவில்லை. உன்னால்தான் என்று சொல்லுமா? என் பிள்ளைய எங்கயோ தொலைதூரம் அனுப்பிட்டியே அவனை போக வேணாம்னு சொல்லத் தெரியலை. என்ன பொம்பளை நீ என்று கேலி பேசுமா.

அவள் உள்ளுக்குள் தடுமாறினாள். மெல்ல அடியெடுத்து வாசற் பக்கம் வந்தாள்.

"என்னம்மா வீட்டுக்காரரை அனுப்பிட்டியா?"

அனுமதித்த அதிகாரி கேட்க கைகூப்பி நன்றி ஸார் என்று சொன்னாள்.

"வந்துருவாங்கம்மா. ஆம்பளை வெளிய போகணும். ஜெயிக்கணும். அதான் அழகு. தைரியமா இருங்க."

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

ஏன் அப்படிப் பேசுகிறார். ஒரு வேளை என் துக்கம் என் முகத்தில் தெரிகிறதோ, என் நடையில் தெரிகிறதோ, என் எல்லா செயல்களிலும் தெரிகிறதோ.

"உள்ள நுழையும்போது துள்ளிகிட்டு போனீங்க. வெளிய வரும் போது எவ்வளவு சோர்ந்து போய்வறீங்க. மனசுதான் காரணம் இல்ல."



அவர் தொடர்ந்து தனக்குத்தானே பேசுவதுபோல் பேசினார்.

அவள் மறுபடியும் கைகூப்பி நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்தாள். மெல்ல அம்மாவுக்கு அருகே போய் நின்று அம்மாவின் கைகளை கோர்த்துக் கொண்டாள். அம்மா அந்தக் கைகளை இறுக்கிக் கொண்டாள்.

அந்த இரண்டு பெண்களுக்கும் நடுவே ஒரு அன்பான பரிமாற்றம் நடந்தது.

தாய்க்கும் தெரியும் மகளுடைய வேதனை என்று அந்த இறுக்கலில் செய்தி வெளிப்பட்டது.

என்ன பிடிச்சுக்கோம்மா. என்னால முடியலைம்மா.

அந்தக் கதறல்தான் அவள் கை விரல்களில் வழிந்தது.

"எங்களை இறக்கி விட்டுட்டு நீங்க போய்டுவீங்களா இல்ல, நாங்க போகட்டுமா."

கமலக்கண்ணன் வீடு கேள்வி கேட்டது.

பூரணியின் குடும்பம் ஏர்போர்ட்டுக்கு வெளியே இறங்கிக் கொண்டது. அவர்களை நீங்கள் போய் இறங்கி காரை அனுப்பி விடுங்கள் என்று கேட்டுக் கொண்டது. ஆட்டோ ஏறி வீட்டிற்கு வந்தது.

அப்பா சாவி போட்டு கதவு திறக்க அவள் வேகமாக உள்ளே ஓடினாள். போய் கட்டிலில் பொத்தென்று விழுந்து அழத் துவங்கினாள்.

சீனுவாசய்யர் குரல் வாசலில் கேட்டது. சீனுவாசய்யரும் அவருடைய மனைவியும் வீட்டிற்கு வந்தார்கள்.

"எங்க பூரணி" என்று சீனுவாசய்யர் மனைவி கமலத்தம்மாள் தேடினாள். ஓடி வந்து அருகே உட்கார்ந்து கொண்டாள்.

"என்னடி இது. இப்படி அழக்கூடாது. ரொம்ப அச்சான்யம். இது அவனை படுத்தும்டி. வயிறு வலிக்கச் செய்யும். புருஷனை அனுப்பிட்டு அழவே கூடாது. ரொம்ப தப்பு அது. எழுந்து உட்கார். மூஞ்சிய துடைச்சுக்கோ. நான் உன்னை அழவிட மாட்டேன்" அவள் தோளைப்பிடித்து இறுக்கி எழுப்பி உட்கார வைத்தாள். கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு

போய் கொல்லைப்புறம் முகம் கழுவ வைத்தாள். நெற்றிக்கு இட வைத்தாள்.

"விளக்கேத்து.விளக்கேத்தி நமஸ்காரம் பண்ணு. ஒரு ஊதுவத்தியை ஏத்தி வை. அவர் நல்லபடியா போய்,அங்க ஊர்ல இறங்கணும்னு வேண்டிண்டு வா. அதை விட்டுட்டு இப்படி குப்புற படுத்துண்டு அழுதா அவனுக்கு வயித்தை கலக்கும்டி. நெஞ்சு அடைக்கும். தயவு செய்து இப்படி பண்ணாத."

கமலத்தம்மாள் கடுமையாகப் பேச, சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டாள். விளக்கேற்றி நமஸ்காரம் செய்தாள். ஊதுவத்தியை ஏற்றி வேண்டிக் கொண்டாள். கண்மூடி சுவாமி படத்தின் எதிரே அமர்ந்திருந்தாள்.

என் புருஷனை உன் கைகளில் கொடுத்து விட்டேன். அவனை பத்திரமாகப் பாதுகாத்திடு. ஒரு சிறிய பிரச்சினை கூட வராமல் ஊருக்கு அழைத்துப் போ. அங்கு எல்லோரும் உதவி செய்து அவன் சிறப்பாக பணியாற்றி திரும்பி வரும் வரை அவனுக்குக் காவலாக இரு. என் மனசு என்ன சொல்கிறது என்பதை இடையறாது அவனுக்கு சொல்லிக் கொண்டிரு என்று கைகூப்பி வேண்டினாள். எழுந்து ஹாலுக்கு வந்தாள். மிகவும் சந்தோஷத்தோடு வீடு சுற்றி வந்து பாட்டுப் பாடினாள்.

விமானத்தில் வெள்ளி பேப்பரில் நான்கு இட்லிகள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. பிரிக்க முகத்தில் ஆவி அடித்தது. சாம்பாரும், சட்னியும் வேறொரு கிண்ணத்தில், ரவா கேசரியும், இன்னொரு கிண்ணத்தில் பொங்கலும் ஒரு ஸ்பான்ச் கேக்கும் இருந்தன.

காலையில் நல்ல சாப்பாடு சாப்பிட்டபிறகும் ஏனோ நல்ல பசி இருந்தது. எடுத்து வேகமாக சாப்பிட்டான். பிளாஸ்டிக் டம்ளரில் இருக்கும் தண்ணீரை ருசித்துக் குடித்தான்.

விமான பணிப்பெண் காலி செய்த தட்டை வாங்கிக் கொண்டு போனாள். காபி ஊற்றினாள். காபியை குடித்து முடிந்ததும் தூக்கம் வந்தது. இருக்கையை தளரவிட்டு காலை நீட்டிக் கொண்டு படுக்க கண்களில் தூக்கம். அவன் மெல்ல உறங்கத் துவங்கினான்.



கனவு போலும் இல்லை. நினைவு போலும் இல்லை. மனம் ஏதோ ஆழமாக கொஞ்சம் காமமாக சிந்திக்க ஆரம்பித்தது. என்ன இப்படி சிந்திக்கிறோமே என்று யோசிக்க முடியவில்லை. சிந்தனை தொடர்ந்தது.

எங்கோ தொலைவில் வெறும் பாவாடையும், சட்டையுமாய் பூரணி நின்று கொண்டிருக்க அவன் மாலையோடு அவளை தேடிக் கொண்டிருக்கிறான்.

பூரணி இடதும், வலதும் ஓடி அவனுக்கு தட்டுப்படாமல் ஒளிய முற்பட்டு கொண்டிருக்க அவன் சீனுவாசய்யரிடம் கெஞ்சுகிறான்.

சீனுவாசய்யர், "உன்னாலெல்லாம் ஒண்ணும் முடியாதுடா. உனக்கு சாமர்த்தியமே கிடையாது" என்று கேலி செய்ய, அப்பாவிடம் ஓடுகிறான். அப்பா, "என்ன பண்ணச் சொல்ற. நீயா தேடிகிட்ட வம்பு தானே. நாங்க சொல்ற பொண்ண கல்யாணம் பண்ணிகறதா இருந்தா இந்த மாதிரி ஆயிருக்குமா. நீயா பார்த்து தேடிகிட்ட அவ ஆட்டம் காட்டறா. பேசாத மாலையை கதவுல மாட்டிட்டு திண்ணையில உட்காரு. வேறு ஏதாவது பேசிகிட்டிருப்போம்."

"அந்தக் கட்சித் தலைவரை உள்ள போட்டாங்களாமே ஏன் அப்படி" என்று ஆரம்பிக்க அவன் நொந்து போய் வீட்டுக்குள் போகிறான்.

வெட்டிடறா... அவன் அம்மா அரிவாள் நீட்டுகிறாள்.

"நீ விடு நான் அவளை ஒழிச்சுடறேன். ஆள் வச்சு அடிக்கறேன். உனக்கு இல்லாத பொண்ணாடா. ஒன்னுக்கு மூணு பொண்ணா கல்யாணம் பண்ணி வைக்கறேன்டா."

தமக்கை சொல்கிறாள்.

அவன் நகர்ந்து படுக்கையில் போய் விழ திடீரென தலை காணி வேறுவிதமாக மாறுகிறது. நிமிர்ந்து பார்க்க அங்கே பூரணி இருக்கிறாள்.

"என்னம்மா... எங்க போயிட்ட நீ" விசாரிக்க "இன்னும் கல்யாணம் ஆகலையே. கல்யாணம் ஆகறவரைக்கும் நான்

உங்களுக்கு ஒன்னும் சொத்து இல்லை" என்று சொல்ல அவன் காலைப் பிடித்து அவன் அம்மா இடிக்கிறாள். அவன் விழித்துக் கொள்ள ஒரு ஏர்ஹோஸ்ட்டெஸ் அவனை தட்டி எழுப்புவது தெரிந்தது.

"உன்னுடைய காலை உள்ளுக்குள் வைத்துக் கொள். வழிநடையில் வைத்தால் நான் எப்படி போவது."

அந்த ஏர்ஹோஸ்ட்டெஸ் கொஞ்சம் கடுமையுடன் சொல்ல, அவன் தன்னுடைய காலை உள்ளே வைத்து தூங்கத் துவங்கினான்.

இப்பொழுது தூக்கம் வரவில்லை.

அந்தக் கனவே மறுபடியும் ஞாபகத்திற்கு வந்தது.

என்ன கனவு இது. எனக்கு பூரணி என்பவள் யார். நான் பூரணியின் எந்த அம்சத்தை ரசிக்கிறேன். பூரணியின் அழகு தானா. பாவாடையும், ப்ளவுஸுமாய் நின்றாளே அந்தக் கோலம் தானா. இது காமம்தானா. எல்லாக் கல்யாணமும் காமத்தி னுடைய தூண்டுதல்தானா.

பூரணியைப் பார்க்கும் முன்பு பல பெண்களைப் பார்த்திருக் கிறேனே. எதுவும் இத்தகைய காமத்தைக் கொடுத்தில் லையே. இவள் மட்டும் ஏன் இப்படி உள்ளுக்குள் ஒரு கிளர்ச் சியை ஏற்படுத்துகிறாள். எதனால் பூரணியிடம் மயங்கினேன்.

அவன் கண்ணை மூடியே யோசிக்க ஆரம்பித்தான்.

எனக்கு காமம் என்பதின் மீது ஆசையில்லை. குடும்பம் என்பதின் மீது ஆசை வந்து விட்டது. எனக்கு மனைவியோடு தெருவில் போக மற்றவர்கள் வியந்து பார்க்க வேண்டும். பிறக்கிற குழந்தைகளும் பளிச்சென்று இருக்க வேண்டும்.

வேலை செய்த ஆயில் கம்பெனியில் பல பேருக்குத் திருமணம் பொருந்தாத் திருமணமாகத்தான் இருக்கிறது.

உயரமாய் இருக்கின்ற ராஜகோபாலுக்கு குள்ளமாய், குந்தா ணியாய் ஒரு பெண். ஜெனரல் மேனேஜர் மனைவி மட்டும் ஏதோ சுமாராக இருப்பாள், மற்ற எல்லா ஜோடியும் எங்கோ ஒரு



இடறலோடு ஒரு தவறான இணைப்பு என்கிற மாதிரித்தான் அவன் மனசுக்குப்படும்.

பூரணி வெறும் பாவாடையும் ப்ளவுஸும் அல்ல. அவள் மிகச் சரியான இணை. அழகு, உயரம், படிப்பு, பண்பு, அந்த வீடு எல்லாம் சரியான இணை. நம்முடைய வீடு நமக்கு அலுத்து விட்டது. இடையறாத கூச்சல் புளித்து விட்டது. எனவே இன்னும் அமைதியாய் இன்னும் ஆதரவாய் பேசுகின்ற மக்கள் தேவைப்படுகிறது. அப்பாவைத்தவிர நம் வீட்டில் எல்லோருமே வாய்ஜாலர்கள். பொய் பேசுபவர்கள்.

அம்மாவின் ஆதிக்கம் தாங்காமல் அப்பா பலமுறை மௌன மாக இருக்கிறார். அந்த மௌனம் ஒரு உள்ளார்ந்த அழுகை. வெளியே சொல்ல முடியாத ஒரு வேதனை.

ஆஹா... இப்போது புரிந்து விட்டது. அம்மாவைப் பிடிக் காமல்தான் நான் பூரணியை நேசித்திருக்கிறேன். இது சரியா.

அம்மா நல்லவள்தானா. அம்மா எனக்கு இதுவரை கெடுதல் ஏதும் செய்ததில்லையே.

அம்மா நல்லவள்தான். ஆனால் அசடு. அசட்டுப் பெண் மணியை எப்படி நல்லவள் என்று சொல்ல முடியும். அவள் எப்பொழுது வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் மிதித்து விடுவாள். அம்மாவின் கெட்ட குணம்தான். அம்மாவின் அசட்டுத்தனம்தான் இரண்டு சகோதரிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

உன் வளர்ப்பு சரியில்லைடி... உன் வளர்ப்பு சரியில்லைடி என்று சகோதரியின் வீட்டு சம்மந்தி அம்மாள் உரக்கக் கத்த சகோதரி முகத்தைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தது ஞாபகம் இருக்கிறது.

அந்த சம்மந்தி அம்மாள் மிக நல்லவள் என்று ஊரில் எல்லோரிடமும் பெயர் வாங்கியவள். ஆனால், இவன் தமக்கை மட்டும் அவளை ராட்சசி என்றுதான் வர்ணித்திருக்கிறாள்.

"சாயங்காலம் ஆச்சன்னா விளக்கேத்த மாட்டியா, வாசல்ல நின்னு பேசிட்டிருக்க. வீட்டுக்காரன் வரதுன்னா வரும்போது வரான். வாசல்ல எதுக்காக நிக்கணும். ரோட்ல போறவரவனை

யெல்லாம் பார்க்கணும்னா. நல்லாயிருக்கு. உள்ள போடி, போய் விளக்கேத்து" என்று சொல்ல அவள் ஓடிப் போய் படுத்துக் கொண்டதாகவும், அதை வீட்டுக்கு வந்ததும் தன் புருஷனிடம் சொல்ல அவன் "அவள் அப்படித்தான் வேணா நீ விளக்கேத் தேன்" என்று பிள்ளை சொன்னதாகவும், அம்மா இடிந்து போன தாகவும் பிற்பாடு கதைகள் காதில் வந்து விழுந்திருக்கின்றன.

ஆணும், பெண்ணும் சேர்ந்ததுதான் இல்லறமெனில் அந்த வீட்டில் இருக்கிற பெண் மிக உற்சாகமானவளாக, உண்மை யானவளாக இருக்க வேண்டும்.

என்னால் பொய்மையோடு போராட முடியாது. என்னால் போலித்தனமாக வாழ முடியாது. மனைவியிடம் பயமின்றி உண்மையாக இருக்க வேண்டும்.

ஆனால், பெண்களுடைய குற்றச்சாட்டு வேறு மாதிரி இருக்கிறது. ஆண்கள் உண்மையாக இல்லை என்றுதான் அவர்கள் கூறுகிறார்கள். கோபப்படுகிறார்கள்.

இல்லை. நான் உண்மையானவன். சத்தியமானவன். என் வாழ்க்கை பிசிறில்லாது இருக்க வேண்டும்.மனைவியை நினைத்து திண்ணையில் உட்கார்ந்து என் தகப்பனைப் போல் நான் அழக்கூடாது. வீண் வார்த்தைகளை பேசக்கூடாது. கூர்ந்து பார்த்தால் மனைவிக்குப் புரிய வேண்டும். மனைவி கனைத் தால் என்ன என்று எனக்குத் தெரிய வேண்டும்.

பொய் பேசி, உரத்த குரலில் விவாதிப்பது வீண். அசிங்கம். ஆபாசம். எனக்கும் பூரணிக்கும் நடுவே பேச்சை விட உணர்வுப் பரிமாற்றம் சரியாக இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் புருஷனை நம்பியிராமல், ஓடிப் போய் டிக்கெட் வாங்கி, டிக்கெட் பின்னே கையெழுத்து வாங்கி சரக்கென்று வண்டியைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து விட்டாள். இது எத்தனை பெரிய சந்தோஷம். எவ்வளவு கெட் டிக்காரத்தனம். கொடுப்பாங்களா... மாட்டாங்களா என்றெல் லாம் மயங்கவேயில்லை. போ... போய் கேட்டுப்பார் என்றதும் எத்தனை வேகமாக ஓடினாள். எவ்வளவு பக்குமாய் பேசினாள். இதுதான் நான் எதிர்பார்க்கின்ற பெண்மணி. டிக்கெட் கிடைத்த



பிறகும் இதுபற்றிப் பேசாமல் தன்னோடு கைகோர்த்து உட்கார்ந்து கொண்டிருப்பதும் இமிக்ரேஷன் வரை வந்ததும் அங்கேயே திரும்பவும் ஒருமுறை கையசைத்ததும் மிக கெட்டிக்காரி என்பதை வெளிப்படுத்துகின்றன.

உங்க வீட்டைப் பத்தி கவலைப்படாதீங்க.நான் பார்த்துக் கறேன். என்று எப்பொழுது சொன்னாளோ அப்பொழுதே அவளை அதிகம் பிடித்து விட்டது. எனக்குப் பிடித்து விட்டது என்கிற விஷயம் தான் காமமாக வெளியே வருகிறது. ஆமாம், என் காதலை நான் காமரூபமாக சொல்லுகிறேன். கனவு காண் கிறேன்.

பூரணி... பூரணி... பூரணி... இது போதும் நான் லட்ச லட்சமாய் சம்பாதித்து வருவேன்.

விமானத்தில் அறிவிக்கை ஒலித்தது. தரையிறங்கப் போகி றோம் என்று சொன்னார்கள்.

அவன் வெளியே பார்த்தான். மாலைநேர வெளிச்சத்தில் நீண்ட பாலைவனம் தெரிந்தது. விமானம் தரையிறங்க அவன் கடலையும், பாலைவனத்தையும் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

கட்டைவிரல் அளவு ஒரு பெரிய லாரி ஓடிக் கொண்டிருந் தது. வட்டமாக டபரா ஒன்றைக் கவிழ்த்து வைத்ததுபோல ஆயில் டேங்க்குகள் தெரிந்தன.

இனி பதினெட்டு மாதம் இங்கேதான் என்று நினைக்க தரையில் சக்கரம் பட்டது. குலுங்கிற்று. உருண்டது.தேய்ந்து நின்றது.

விமானத்திலிருந்து தோள்பையோடு அவன் வெளியே வந் தான். அவன் கம்பெனியின் பெயர் எழுதி பெரிய அட்டை யோடு வெள்ளை உடை அணிந்த டிரைவர் போலும் ஒருவன் நின்றிருந்தான். அவன் அருகே போய் நிற்க மிஸ்டர் கமலக் கண்ணன் என்று சொன்னான். வந்தவனை பாகிஸ்தானி என்று பேச்சிலும், பார்வையிலும் கண்டுகொண்டான்.

தயவு செய்து இமிக்ரேஷன் வேலைகளை முடித்து விட்டு வாருங்கள். நான் உங்களுக்காக காத்திருக்கிறேன். உங்களோடு

மொத்தம் பதினான்கு பேர் வருகிறார்கள். எனவே நீங்கள் சற்று காத்திருக்க வேண்டும் என்று சொன்னான். அவன் காட்டிய வழியில் பாஸ்போர்ட்டோடு அவன் உள்ளே போனான்.

துபாய் அவனை ஏற்றுக் கொண்டது. இங்கு வந்து நன்றாக வேலை செய் என்று உள்ளே அனுப்பியது.

## 36

**பை**த்தியம் பிடித்துவிடுமோ என்று பயமாக இருந்தது. எங்கு நின்றாலும், எப்படி நின்றாலும், என்ன செய்தாலும் அவன் முகமே, அவன் குரலே, அவன் அசைவே மனசுக்குள் மிதந்து வந்தது. எத்தனை முறை உதறினாலும் திரும்பத் திரும்ப மனசுக்குள் கமலக்கண்ணன் உருவம் வட்டமிட்டது. இது என்ன பேரவஸ்தை என்று சிறிது நேரம் நின்றிருந்தால் மறுபடியும் அந்த பேரவஸ்தை என்பது மறந்து போய் அவன் நெருங்கி நின்றதும், இடுப்பைத் தொட்டதும், நெஞ்சு முட்டியதும் நினைவில் ஓடின. அருகே யாரேனும் இருந்தால் மனம் உரக்கப் பேசியது. அருகே யாரும் இல்லையென்றால் வாய் உரக்கப் பேசியது.

"என்னப்பா... விட்டுட்டுப் போயிட்ட. போரடிக்குதுப்பா வேலை வேணாம் வந்துடேன்."

அவள் சுவர் பார்த்து, தூண் பார்த்து, கண்ணாடி பார்த்து அவன் புகைப்படம் பார்த்து, பாத்ருமில் வென்னீர் குழாய் பார்த்து பேசினாள்.

கோவிலுக்குப் போகலாம் என்று மனம் சொல்ல, விழித்துக் கொண்டாள். திலகம் இட்டாள். பூச்சூடிக் கொண்டாள். வாசலுக்கு வந்தாள். போகப்பிடிக்கவில்லை. யாரேனும் பார்ப்பார்கள், ஏதேனும் கேட்பார்கள் என்று மனம் பின்வாங்கியது. பேசாமல் கட்டிலில் சாய்ந்து கொண்டு ஏதேனும் அவனைப் பற்றி கற்பனை பண்ணிக்கொண்டிருக்கலாம். அல்லது பவழ



மல்லிச் செடியருகே உட்கார்ந்து கொண்டு வெறுமே பாட்டு பாடிக்கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

வெளியே போகாமல் மறுபடியும் வீட்டுக்குள்ளேயே தங்கி விட்டாள்.

அம்மா ஏதோ வேலைக்குக் கூப்பிட்ட போது இதோ வருகிறேன் என்று சொல்லி வேறு பக்கம் நகர்ந்தவள், அம்மா அழைத்ததை சுத்தமாக மறந்து போனாள். அம்மாவிற்கு அவள் நிலை புரிந்தது.

"இப்படித்தான் மனசு பித்தா அலையும். என்ன பண்றது. பொம்பளையா பிறந்துட்டோமில்லை. அனுபவிக்கத்தானே வேணும்."

"ஏன் பொம்பளைக்கு மட்டும் தான் பித்தா இருக்குமா. அவருக்கு இருக்காதா?"

அம்மாவை நிறுத்தி வைத்து கேள்வி கேட்டாள்.

"ஆம்பளைங்களுக்கு வேலை இருக்கும்டி. அதுவும் வெளியூர் போயிருக்காரு. புதுவேலை. புதுமனுஷாள். புது இடம். அதுக்குள்ள புகுந்து புறப்பட்டு வாறதுக்கே அவருக்கு சரியா இருக்குமே தவிர உன்னை நினைக்கக்கவா முடியும். நினைச்சுக் கிட்டா புகுந்து புறப்பட்டு வரமுடியுமா."

அம்மா நிதானமாக பதில் சொன்னாள்.

"அப்போ... நானும் வேலைக்கு போகட்டுமா?"

"எதுக்கு. அந்தத் தேவையில்லாத விளையாட்டு. வீட்லயே இரு. உன்னை ஜாக்கிரதையா அவங்க வீட்டுக்கு அனுப்பணும். கமலக்கண்ணன் திரும்பி வந்தவுடனே அவரு கையில பிடிச்சு கொடுக்கணும். நீ வேலைக்கு போறேன்னு ஆரம்பிக்க ஒன்னு கிடக்க ஒன்னு ஆச்சுன்னா யார் பதில் சொல்றது. நீ என் பொண்ணா மட்டும் இருந்தீன்னா நான் சொல்றதுதான் முடிவு. நீ அந்த வீட்டு மருமக. டக்கு புக்குனு வெளிய போக முடியாதுடா கண்ணு. வீட்டோட இரு."

"பைத்தியம் புடிச்சாப்போல ஆகுதும்மா."

"எனக்குப் புரியுது. அப்படித்தான் ஆவும். கல்யாணமான பன்னெண்டாம் நாள் உங்கப்பாவுக்கு மாற்றல் வந்துடுச்சு. எப்பவோ கேட்டதாம். எல்லோருக்குமே மறந்து போயிருந்தது. அரசாங்க விஷயங்கள் அப்படித்தானே. தடுக்குனு ஒரு லெட்டர் வந்து உடுமலைப்பேட்டைக்குப் போ. அப்படின்னு வந்துச்சு. உங்கப்பா... இது வேற யாரோ வேண்டாம்னு பண்ணியிருக்கறாங்க. கல்யாணம் ரொம்ப பிரமாதமா நடந்ததைப் பொறுக்காம எரிச்சல்படறாங்க அப்படின்னு சொன்னாரு."

"கல்யாணம் ரொம்ப பிரமாதமா நடந்துதாம்மா"

"ஆமாண்டி... அப்பவே நாப்பது சவரன் போட்டாங்க. உங்கப்பா வீட்ல கேட்கவே இல்லை. எங்கப்பாவே இஷ்டப்பட்டு போட்டாரு. நானூறு பேர் வருவாங்கன்னு பார்த்தோம். அறுநூறு பேர் வந்தாங்க. அன்னிக்கு ஞாயித்துக்கிழமையா அவங்க ஆபீஸ் கூட்டமே குவிஞ்சிடுச்சு. எல்லாம் காலையில டிபன் சாப்டுட்டு வெத்தலை பாக்கு போட்டுகிட்டு சம்பரமா உட்கார்ந்துட்டாங்க. மத்தியானம் சாப்பாடு சாப்டுட்டுதான் போனாங்க. மொய்ப்பணமே மூவாயிரத்து சொச்சம் வந்தது. மூவாயிரத்து சொச்சம்றது அப்போல்லாம் ரொம்ப பெரிய காசு. சாப்பாட்டு செலவுக்கு சரியாப்போச்சு போயேன்."

"நாப்பது பவுன் நகையே பெருசாம்மா."

"ரொம்ப பெருசுதான். ஆனா, உங்கப்பா உத்தமர். கல்யாணத்தன்னிக்கு முதல்நாளே நாப்பது பவுன் நகையை போட்டுகிட்டு என்ன பண்ணப்போற. ஏன், இத்தினி வாங்கிட்டு வந்தேன்னு கேட்டாரு. நான் ஒண்ணும் வாங்கிட்டு வரலை. எங்க வீட்ல பிரியப்பட்டு கொடுத்தாங்கன்னு சொன்னேன். உனக்கு ஒரு தங்கை இருக்கில்லன்னு கேட்டாரு. ஆமான்னு சொன்னேன். அப்போ வச்சுக்க உன் தங்கை கல்யாணத்துக்குன்னு வரும்போது நாம இருபது பவுன் கொடுக்கலாம் அப்படின்னு சொன்னாரு. எனக்கு ஆச்சரியம். உடனே போய் எங்கப்பா கிட்ட சொல்லணும்னு பரபரப்பு. வேணாம் சொல்லாத அப்படின்னாரு. ஏன்னு கேட்டேன். ஒருவேளை நம்மால கொடுக்க முடியாத போயிடுச்சுன்னா. உனக்குன்னு சொல்லி வைக்



கறேன். நாம இருபது பவுன் கொடுக்கணும்னு தீர்மானம் பண்ணிப்போம்னாரு. அடுத்த ரெண்டாவது வருஷமே தங்கைக்கு கல்யாணம் நிச்சயமாச்சு. அப்படியே இருபது பவுன் கொண்டு போய் அவரே எங்கப்பாகிட்ட கொடுத்து இதை நான் அன்னிக்கே சொன்னேன். இன்னிக்கு கொடுக்க முடிஞ்சது சந்தோஷம்னாரு."

"உடுமலைப்பேட்டை... உடுமலைப்பேட்டை அதை சொல்லவே இல்லையே."

"லீவு போட்டுட்டு வந்துடறா. கல்யாணம் ஆயிட்டு என்னத்துக்கு அங்க போய் இருக்க அப்படின்னாங்க. இவரு லீவு போடலை. போட மாட்டாரு. அரசாங்க வேலையா இருந்தாலும் மத்தவங்க மாதிரி செய்யறதில்லை. ரொம்ப உண்மையா செய்யறதுதான் வழக்கம். எனக்கு கவர்மெண்ட் சம்பளம் தருது. நாம கருத்தா உழைக்கணும். அப்படின்னு சொல்வாரு. கல்யாணமான பன்னெண்டாவது நாள் பொட்டிய தூக்கிட்டு உடுமலைப்பேட்டை போயிட்டாரு. தனியா வீட்ல இருக்கேன். ஒண்ணும் புரியலை போ. ராத்திரி யாரோ மேல படற மாதிரி இருக்கும். தடுக்குனு எழுந்து பார்ப்பேன். யாரும் இருக்காது. யாரோ கூப்பிடறா மாதிரி இருக்கும். ஓடியாந்து வாசலைப் பார்ப்பேன். யாரும் இருக்காது. சோறு சாப்பிடறபோது புரைக்கேறும். அவருதான் நினைச்சுக்கிறாரு. அவருதான் நினைச்சுக்கிறாருன்னு பதறுவேன். இப்போ நாம நினைச்சுக்கறோமே அவருக்கு புரை ஏறுமே தட்டறதுக்குக்கூட ஆள் இருக்காதுன்னு சொல்லிட்டு சாப்பிடறத அப்படியே நிறுத்திட்டு சாப்பாட்டை கொண்டு போய் கொல்லையில போட்ருவேன். பைத்தியம் மாதிரி இருந்தேன் போயேன். ரெண்டு லெட்டர் எழுதியிருந்தாரு. ரெண்டு லெட்டரும் அவங்கப்பாவுக்கு தான் எழுதியிருந்தாரு. அவங்கப்பா அந்த லெட்டர்ல என்ன எழுதியிருக்காருன்னு காமிக்கவே இல்லை. போய் மெல்ல கேட்டேன். நல்லா இருக்கேன்னுதான் எழுதியிருக்கான். வேற என்ன எழுதியிருப்பான்னு சொன்னாங்களே தவிர, இந்தாடி லெட்டர்னு அந்த லெட்டரை கொடுக்கக் கூடாது. ஒரு சின்னப்பொண்ணு ஆசைப்படும்னு தெரியாது. தெரியலை அவருக்கு."

அம்மா பழங்கதைகளில் கிறங்கிக் கிறங்கிப் பேச அவள் அம்மாவை வியப்போடு பார்த்தாள்.

"ஒரு மாசம் கழிச்சு வந்தாரு. வந்துட்டு எனக்கு அங்க சாப்பாடு சரியில்லை. அங்க எல்லாரும் குடிக்கறாங்க. சிகரெட் பிடிக்கறாங்க. எனக்கு நாத்தம் தாங்கலை. தலைநோவுது. எங்கூட தங்கறவங்களுக்கு குடிக்காதன்னு சொல்றதுக்கு எனக்கு என்ன ரைட் இருக்கு. குடிச்சுட்டு குப்புற கிடக்கறபோது எல்லாத்தையும் எடுத்து வைக்க வேண்டிய தலையெழுத்து எனக்கா இருக்கு. ச்சு... ரொம்ப வேதனை போ அப்படின்னாரு. வீட்ல எல்லாரும் அவரையே பார்த்துகிட்டிருந்தோம்.

வீடு எங்கேயாவது பார்த்துடலாமான்னு கேட்டேன். தனியா இருக்கற ஆம்பளைக்கு வீடு தரமாட்டோம் அப்படின்னுட்டான். என்னா பண்ற தெரியலைன்னாரு. உடனே அவ அப்பா கூட்டிகிட்டு போயிருன்னு சொல்லிட்டு எங்களுக்கு வேணுங்கற பாத்திரம், பண்டங்களெல்லாம் வாங்கி கொடுத்தாங்க. அப்புறம் தான் தெரிஞ்சது கதை என்னான்னு."

"என்னம்மா..."

"இது எல்லாமே இவரு ப்ளான். இந்த வீட்ல இருந்தாக்க ஆட்டம் ஆடமுடியலைன்னு தானா போய் ட்ரான்ஸ்பர் கேட்டு அதை வந்து என்னமோ எரிச்சலை எவனோ பண்றான்னு நாடகம் ஆடி ரெண்டுமாசம் அங்க தங்கியிருந்து லீவு போட முடியலைன்னு சொல்லி ரூம்ல குடிக்கறான், சிகரெட் பிடிக்கறான்னு புகார் பண்ணி என்னை கூட்டிகிட்டு போயிட்டாரு."

"எதுக்கும்மா."

"ஆட்டம் ஆடறதுக்குத்தான்" சொல்லிவிட்டு அம்மா முகத்தைப் பொத்திக்கொண்டாள்.

ஐம்பது வயது அம்மா வெட்கப்படுவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அப்புறம் ஆட்டம்தானா?"

"ஆமான்னும் சொல்லலாம், இல்லைன்னும் சொல்லலாம்."

"என்ன ரெண்டு விதமா பேசற."



"தனியா குடித்தனம் பண்றானாம்னு சொல்லிட்டு யாராவது வந்துருவாங்க. இவரு வீடு பார்த்தாரே ரெண்டு ரூம், மூணு ரூமா பார்க்கக்கூடாது. ஒரேயொரு பெட்ரூமா பார்த்தாரு. ஒரு ஹால், ஒரு கிச்சன். அப்போ அவ்ளோதான் முடியும். இவங்க வீட்லேர்ந்து வந்துடுவாங்க. எங்க வீட்லேர்ந்தும் வந்துடுவாங்க. தொலைதூரத்துலேர்ந்து வந்துடுவாங்க. வந்தா ஒரு வாரம் உட்கார்ந்து சாப்டுட்டுத்தான் போவாங்க. என்னடா கல்யாணமானவங்களை தொந்தரவு பண்றோமே அப்படின்னு யாருக்குமே தோணலை. அப்பா பேரை சொல்லி அவன் இருக்கறான் போய் ஒரு வாரம் நிம்மதியா தங்கிகிட்டு வந்தேன்னு சொல்வாங்க. அவங்களுக்கு நிம்மதி. எங்களுக்கு...?"

"அடிச்சு துரத்திட வேண்டியதுதானே. போங்கடா வெளியன்னு சொல்ல வேண்டியதுதானே."

"அதெல்லாம் சொல்லக்கூடாது. ஒருநாளைக்கு இல்லைன்னாலும் ஒரு நாளைக்கு அவங்க உதவி நமக்கு வேணும்."

"அப்போ ஆட்டமே போடலையா."

"நடுவுல ஒருவாரம் யாருமே இல்லாத இருப்பாங்க. இவரும் லீவு போட்ருவாரு. உட்கார்ந்து தாயப்பாஸ் ஆடிகிட்டிருப்போம். பந்தயம் போட்டுக்குவோம்."

"என்னா பந்தயம்."

"போடி வெட்கமாயிருக்கு."

அம்மா எழுந்து போனாள்.

இவள் விடவில்லை. மடக்கி அணைத்துக் கொண்டாள்.

"சொல்லு, என்ன பந்தயம்."

"ஒரு வெட்டுக்கு ஒரு முத்தம்."

அம்மா சொல்லிவிட்டு பழைய நினைவுகளில் கண்சொருகி வாய்விட்டுச் சிரித்தாள்.

"அடி சக்கை..."

அம்மாவை மறுபடி பூரணி அணைத்துக் கொண்டாள்.

"அந்த சந்தோஷத்துலதாண்டி நீ பொறந்த."

"நானும் உன்னை மாதிரியே தனிக்குடித்தனம் போயிட்டு மாம்மா."

"இதோ பார். அந்த மாதிரியெல்லாம் யோசனை பண்ணாத. தப்பு."

கேள்வி கேட்ட பூரணிக்கு அம்மா வேகமாக பதில் சொன்னாள்.

"ஏம்மா."

"எல்லாத்துக்கும் தயாரா இரு."

"எல்லாத்துக்கும்னா."

"கஷ்டநஷ்டத்துக்கு, சுகத்துக்கு, சந்தோஷத்துக்கு எல்லாத்துக்கும் தயாரா இரு."

"இன்னும் புரியும்படியா சொல்லேன்."

"பதிமூணாம் நாள் விட்டுட்டு ஊருக்குப் போவாருன்னு எனக்குத் தெரியுமா, போய் லெட்டர் எழுதினா அதை படிக்கக் கூட முடியாது அப்படீன்னு எனக்குத் தெரியுமா. அந்த லெட்டரை காட்டக்கூட மாட்டாங்கன்னு நான் நினைச்சுருப்பேனா. ஆனால், காட்டலைங்கறத நான் பெருசா எடுத்துக்கலை. அப்பால ரெண்டு வருஷம் கழிச்சு, அந்த லெட்டரை எடுத்து படிச்சுப் பார்த்தேன். என்னைப் பத்தி ஒருவரி கூட அதுல எழுதலை. எழுதறதுக்கு உங்கப்பா வெட்கப்பட்டிருக்காரு. கேலி பண்ணுவாங்களோ, அல்லது என்னை வந்து கலாட்டா பண்ணுவாங்களோ அப்படின்னு நினைச்சு என்னைப் பத்தி எழுதறத தவிர்த்திருக்காரு. இவளைப்பத்தி ஒண்ணும் கேட்டு எழுதலையே இந்த லெட்டரை கொடுத்தா இவளுக்கு வருத்தமா இருக்குமே அப்படின்னு சொல்லி என் மாமனார் கொடுக்காத போயிட்டார்.

நான் அன்னிக்கு ஏன் லெட்டரை கொடுக்கலையேன்னு வருத்தப்பட்டு மூஞ்சிய தூக்கி வச்சு சத்தம் போட்டிருந்தேன்னா நல்லாயிருந்திருக்குமா? சரி இந்தா ஒழின்னு லெட்டர் தூக்கிப் போட்டு அதுல என் பேரே இல்லையே அப்படின்னு தெரிஞ்சவுடனே எனக்கு வருத்தமில்லாம இருந்திருக்குமா. சரி கொடுக்கலை அப்படின்னு ஏத்துகிட்டோம். அது எவ்வளவு நல்லதாப் போச்சு. அடடா... இந்தப் பொண்ணு எவ்வளவு அமைதியா இருக்குன்னு எங்க மாமனார் பத்து பேர்கிட்ட சொல்லி உடுமலைப்பேட்டைக்கு என்னை வண்டி ஏத்தி அனுப்பினாரு. நான் சண்டை போட்டிருந்தேன்னா ஏத்தி அனுப்பியிருப்பாரா. இதுக்குத் தான், விட்டு பிடிக்கறதுன்னு பேரு. இதை எங்கம்மா கத்துக் கொடுத்தாங்க. நான் எதுக்கு விட்டுக் கொடுக்கணும். எப்பவுமே நான் தான் விட்டுக் கொடுக்கணுமா. அப்படின்னு எவ கத்தறாளோ அவளுக்குப் பிரச்சனை அதிகம். மனசு அழுத்தம் அதிகம். கொதிப்பு அதிகம். மனசுக்குள்ள சண்டை ஆரம்பிச்சுட்டா எந்த உறவோடயும் நிம்மதியா நிரந்தரமா இருக்க முடியாது. ஏன், புருஷனோட கூட வாழ முடியாது. அங்கயும் சண்டை தான் வரும்."



"அடேயப்பா... என்னமா பேசறம்மா நீ."

இம்முறை அம்மாவுக்கு நெருங்கிக் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்.

அம்மாவும் பூரணியின் முகத்தை கைகளில் தேக்கி நெற்றியில் முத்தமிட்டாள்.

"சொல்லிக் கொடுக்க வேண்டிய வேளை. அதனால அதைச் சொல்லித்தரேண்டி. வேற ஒண்ணுமில்லை. ஒன்றரை வருஷம் அவன் வரமாட்டான்றத போட்டு புழுக்கமா எடுத்துக்காத. ஜாலியா எடுத்துக்கோ. ஒரு மாசம் பிரிஞ்சா என்ன, ஒன்றரை வருஷம் பிரிஞ்சா என்ன, பிரிவு பிரிவுதானே. எனக்கு பைத்தியம் பிடிச்சாப்போல இருக்கற மாதிரிதானே உனக்கும் இருக்கும். இப்போவாவது போன் வரும், லெட்டர் வரும்னு நம்பிக்கை இருக்கு. எந்த நம்பிக்கையும் இல்லாம புருஷன் எப்படியிருக்கான்னு எந்த விவரமும் தெரியாத ஒருமாசம் இந்த வீட்டுக்கு வேலைக்காரியா வந்துட்டோமோ வேற எதுக்கும் லாயக்கில்லையோ அப்படின்னு துக்கப்படற அளவுக்கு ஒரு மாசம். எல்லாம் துடைச்சுப் போட்டாப் போல ஆச்சு, எப்போ..."

அம்மா பேச்சை நிறுத்தி பூரணியை உற்றுப் பார்த்தாள்.

"என் புருஷன் எனக்காகவே இந்த நாடகம் ஆடியிருக்கான் அப்படின்னு தெரிஞ்ச போது அத்தினி சந்தோஷம். எங்கப்பா, அம்மா நல்லவங்க தான். எங்க உறவும் நல்லவங்க தான். நாம சிரிச்சு பேசிகிட்டிருந்தா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. இருந்தாலும் சிரிச்சுப் பேச எனக்கும் கூச்சம். உனக்கும் வெட்கம் நிச்சயமா இருக்கும். அதனால இன்னும் வாய்விட்டு சிரிக்கறதுக்கு மனசு விட்டு பேசறதுக்கு ஏன் சண்டை போட ணும்னு தோணிச்சன்னா நல்லா சண்டை போடறதுக்கு தனியா கூட்டிகிட்டு வந்துட்டேன்னாரு. சமாளிச்சுட்டியாடின்னு கேட் டார். நூத்தி பதினஞ்சு ரூபா சம்பளம். அறுபது ரூபா வாடகை. நான் ரொம்ப நல்லா குடித்தனம் பண்ணேன்.

ஒரு தடவை எங்கப்பா வந்து அரிசி பருப்பெல்லாம் வாங்கிப் போட்டாரு. உங்கப்பா ஒண்ணும் சொல்லலை.ஆனா, எங்கப்பா கிளம்பறபோது இந்த அரிசி பருப்பெல்லாம் நான் இந்த தடவை எடுத்துக்கறேன். இனிமே இப்படி பண்ணவேணாம். நான் சம்பாதிச்சு நான் கொண்டு வர அரிசியில சமைக்கறது தான் அவளுக்கு மரியாதை. எனக்கும் மரியாதை. இல்லைன்னா சாப்பிட உட்காரபோது இது மாமனார் காசுன்னு சாப்பிட உட் கார்ந்தா என்னால நல்லா சாப்பிடமுடியுமா. அப்படின்னு கேட் டுட்டாரு. எங்கப்பா மன்னிப்பு கேட்டுட்டுப் போனாரு. ராத்திரி பக்கத்துல படுத்துகிட்டு என்னாடி கோபமான்னு கேட்டாரு. இல்லவே இல்லை. என் புருஷன் ஆம்பளையா இருக்கறான்றது எனக்கு பரமசந்தோஷம்னு சொன்னேன்."

"அன்னிக்கு பேயாட்டமா..."

"இல்லைடி... வெறுமனே கைகோரத்துகிட்டு தூங்கிட் டோம்..."

"ஏன்?"

"அப்படி ஒரு நிறைவு போயேன்."

அம்மாவும், பொண்ணும் சற்று எல்லை தாண்டி பேசிக் கொண்டார்கள்.



# 37

ஹாலில் மாட்டியிருந்த அப்பா, அம்மா இளம்வயது கருப்பு, வெள்ளை படத்தின் அருகே போய் பூரணி உற்றுப் பார்த்தாள்.

டெலிபோன் மணி அடித்தது.

தொலைதூரக்கூவல் என்று மணியின் ஒலியிலேயே தெரிந் தது. பாய்ந்து ஓடி எடுத்தாள். அம்மாவும் ஓடி வந்தாள்.

அவள் நினைத்ததுபோல அது கமலக்கண்ணன்தான்.

"பூரணி, துபாய் வந்துட்டேன். கம்பெனியே ரூம் கொடுத் திருக்காங்க. ஒரு ரூம்ல மூணுபேர், கட்டில், பீரோ, மேஜை, நாற்காலி தனியா கொடுத்திருக்காங்க. சாப்பிடறது பொது இடம். பெரிய கிச்சன். நம்மூர் சாப்பாடுதான் பண்ணி போட றாங்க. நூத்தி நாப்பத்தாறு பேர் இருக்காங்க. நான் நூத்தி நாப்பத்தேழு. சாப்பாடு ஒண்ணும் கஷ்டம் இல்லை. வேலை கொஞ்சம் கஷ்டம்றாங்க. வெய்யிலுன்றாங்க. ரிக்ல வேலை செய்ய வந்திருக்கீங்களா. தளதளன்னு வந்திருக்கீங்க. வாங்க வத்திடும் அப்படின்றாங்க. கொஞ்சம் பயமாகவும் இருக்கு. பூரணி எனக்காக பிரார்த்தனை பண்ணிக்கோப்பா."

அவன் குரலில் மெல்லிய நடுக்கம் தெரிந்தது.

"ஒண்ணும் ஆவாதுங்க. இதேமாதிரி அப்படியும் தளதளன்னு இருப்பீங்க. நான் உங்களுக்காக நாள் தவறாத இங்க இருக்கிற சிவன் கோவிலுக்கு போவேன். அப்படி நான் போக முடியாத நேரத்துல அப்பாவை போகச் சொல்லுவேன். அம்மாவை போகச் சொல்லுவேன். உங்களுக்கு பிரார்த்தனை பண்ண நாங்க இருக்கோம். ஒரு சின்ன தொந்தரவு கூட வராது."

"நீ எப்படியிருக்க பூரணி."

"நல்லாயிருக்கேன்ப்பா."

"பிரிவு கஷ்டமா இல்லை."

பூரணி யோசித்தாள்.

"ஆமாம்ப்பா... ரொம்ப கஷ்டமா இருக்கு. பைத்தியம் பிடிச்சாப் போல இருக்கு. தனியா பேசிக்கிட்டிருந்தேன். இப்போ தான் அம்மா கூப்பிட்டு வேணாம் சமாளிச்சுக்கோ அப்படின்னு சொல்லிக் கொடுத்தாங்க."

"இங்க யாரும் எதுவும் சொல்லித் தரமாட்டேன்றாங்க பூரணி. மூஞ்சிய தூக்கிட்டு போறாங்க."

"கொஞ்சம் நாளாகும்ப்பா. பத்துநாள்ல நிறைய பேர் ஸ்நேகிதமாயிடுவாங்க. விட்டு வரபோது பிரியமுடியாதபடி பிரிஞ்சு வருவீங்க. இப்போ அவங்க சாதாரணமா இருந்தாலும் மூஞ்சிய தூக்கறாப்போல நமக்கு தோணும். புது ஆள்கிட்ட எவ்வளவு பேசறதுன்னு அவங்களுக்கும் தோணும். எல்லாம் சரியாயிடும்ப்பா. கவலையே படாதீங்க."

"உங்களுக்கு வேலை போட்டு கொடுத்தாரே சந்திரசேகரன் அவரைப் பார்த்தீங்களா"

"பார்த்தேன். தனி பங்களால குடும்பத்தோட இருக்காரு. ரெண்டு பசங்க, அம்மா, அப்பா, மனைவி எல்லாரும் இருக்காங்க. அந்த மாதிரி நாம செட்டில் ஆகணும் பூரணி... அந்த வீடு பார்த்தவுடனேயே உன் ஞாபகம் வந்துடுச்சு. இதே மாதிரி நாமும் குடித்தனம் பண்ணணும்னு ரொம்ப ஆசையா இருக்கு பூரணி."

"பண்ணுவோம்ப்பா... நிச்சயமா பண்ணுவோம். அம்மா இப்போதான் சொன்னாங்க. ஒன்றரை வருஷம் எது வந்தாலும் ஏத்துக்கடி. பயப்படாதன்னாங்க. அதே மாதிரி எதுவந்தாலும் ஏத்துக்கோங்க. எதுக்கும் பயப்படாதீங்க. உங்களுக்காக பூரணி இருக்கா. பூரணியோட குடும்பம் இருக்கு. ஒவ்வொரு செகண்டும் நீங்க நல்லாயிருக்கணும், நீங்க நல்லாயிருக்கணும்னு பிரார்த்தனை பண்ண நாங்க இருக்கோம். பயப்படாதீங்கப்பா."

"ரொம்ப தேங்க்ஸ், பூரணி."

அவன் குரலில் இப்பொழுது தெளிவு தெரிந்தது.

"ஏய்... நேத்து போறதுக்கு முன்னாடி ஒரு கிஸ் அடிச்சனே ஞாபகம் இருக்கா."



அவன் அடிக்குரலில் கேட்க அவள் முகம் சிவந்தாள்.

"ஞாபகம் இருக்கு. எல்லாம் ஞாபகம் இருக்கு" என்று அவள் சொல்ல பூரணியின் அம்மா வெட்கப்பட்டாள். நகர முற்பட்டாள்.

பூரணி அவள் தோளைப் பிடித்து இழுத்து நிற்க வைத்துக் கொண்டாள்.

"உங்களுக்கு பூரணியை ஞாபகம் இருக்கா" என்று பதிலுக்குக் கேட்டாள்.

அவன் சில விவரங்கள் சொன்னான் உடம்பில் மின்சாரம் போல் ஒரு அதிர்வோடு உஷ்ணம் ஏறியது. கீழ் உதடு கடித்து கண் கிறங்க அவன் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

"சாகடிக்கறீங்கப்பா..." என்று சொன்னாள்.

அம்மா பூரணியின் தலையை, பிடரியை, கழுத்தை, முதுகை தடவிக் கொடுத்தாள்.

அவன் பூரணியின் அம்மாவிடம் பேசினான்.

"நல்லாயிருக்கேங்க. ஒண்ணும் பிரச்சினையே இல்லை. பூரணிகிட்ட இந்த மாதிரி பேசிகிட்டிருந்தா கூடபோதும் மனசு சந்தோஷமாயிடுது. நான் அப்பப்போ போன் பண்ணுவேன். தப்பா நினைச்சுக்காதீங்க."

"அவ உங்க சொத்து. நீங்க எப்போ வேணா போன் பண்ணலாம். உடம்பை கொஞ்சம் நல்லபடியா பார்த்துக்கோங்க. அலட்சியமா இருந்துடாதீங்க. சின்னதா ஒரு சங்கடம் இருந்தாலும் டாக்டர்கிட்ட போங்க இல்லை கைவைத்தியமா ஏதாவது பண்ணிக்கோங்க."

"கொஞ்சம் பூரணிகிட்ட கொடுங்களேன்" என்று அவன் சொல்ல மறுபடியும் பூரணியிடம் போன் கொடுக்கப்பட்டது.

"ஏய்... ஒரு பாட்டு பாடறேன் ஞாபகம் வச்சுக்கிறயா" என்று சொல்ல "உங்களைத்தவிர வேற என்ன ஞாபகம் எனக்கு. கூடுதலா ஞாபகம் வச்சுக்கறதுக்கு என்ன இருக்கு" என்று பூரணி உரத்த குரலில் பேச "என்னவளை முகம் சிவந்தவளை நான் சேர்த்துக் கொள்வேன் வளையிட்டு சின்னவளை காதல்

சொன்னவளை நான் சேர்த்துக்கொள்வேன் கரம் தொட்டு" என்று அவன் அங்கே பாடினான்.

பூரணியின் உயிர் கூடுவிட்டுக் கழன்று அவள் காலடியில் விழுந்தது. அவள் முத்தம் கொடுத்து போனை கீழே வைத்தான்.

*இதுதான் காதல் என்பதா...*
*இளமை தூண்டிவிட்டதா...*

என்று அவள் மனம் பாடியது.

உண்மையாக இருப்பின் உலகத்தில் மிகச்சிறந்த விஷயம் காதல்தான். அது கொடுக்கிற பரவசம். அது கொடுக்கிற அமைதி. அது கொடுக்கிற நம்பிக்கை.அது ஏற்படுத்துகிற சந்தோஷம். உலகத்தில் பணமோ, பொருளோ, அதிகாரமோ நிச்சயம் ஏற்படுத்தாது.

காதல் என்பது பரந்தமனம், தாராளகுணம், உலகத்தின் மீது அன்பு செய்ய பெண் மீது காதல் கொள்வது ஒரு ஆரம்பம். எல்லோராலும் காதலிக்க முடியாது. நல்லவர்கள்தான் காதலிக்கத் தகுதியானவர்கள்.

இரண்டுநாள் அவனுக்கு ஓய்வு கொடுத்தார்கள். ஒரு முறை ஊரைச் சுற்றிக்காட்டினார்கள். ஒரு சமையற்காரர் வந்து அவருடைய குடும்பத்தைப் பற்றி பேசிவிட்டுப் போனார். அவனுக்கு எதிர்கட்டிலில் இருப்பவன் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு தான் செய்கின்ற வேலையை விவரித்தான்.

"ரிக் வேலை கஷ்டம்தான். வந்தவுடனேயே ரிக் வேலையில் இறங்கி வளைகுடாவினுடைய முழு வெய்யிலையும், காத்தையும், குளிரையும் அனுபவிச்சுட்டீங்கன்னா பிறகு ஒரு பிரச்சனையும் இருக்காது. வளைகுடா சாதாரணமாயிடும். ஏ.சி.ரூம்லயும், ராத்திரி குளிருமே பழக்கப்பட்டுதுன்னா வெய்யில தாங்க முடியாம அவஸ்தை பட்டுருவோம். ஜுரம் வந்துடும்.இது எதுவுமே வராத இருக்கணும்னா விடாத விடாத பத்து நிமிஷத்துக்கு ஒரு தடவை தண்ணி குடிச்சு வயித்த ரொப்பிக்கோங்க. தண்ணி, மோர், பார்லி வாட்டர், சாத்துக்குடி ஜூஸ் அப்படின்னு குடிங்க. நிறைய பழம் சாப்பிடுங்க. உடம்புல க்ரீம் தடவிக்



கோங்க. ஆலிவ் ஆயில் தடவிக்கோங்க. வெய்யில் நாள்லயும் எண்ணெய் பசை வறண்டுடும். தலைவலி வராம இருக்கணும்னு கடவுளை வேண்டிக்கோங்க. இந்த வெய்யிலுக்கு தலைவலி வந்தா கண்ணே திறக்க முடியாது."

"உங்களுக்கு தலைவலி வருமா."

"வராது ஸார்."

"நல்லபடியா வராதயே இருக்கட்டும். சாப்பாடு ஒத்துக்காத லூஸ்மோஷன் ஆகலாம். சாப்பாட்டை நிறுத்திடுங்க. ஒரு ஆண்டிபயாடிக் போட்டுக்கோங்க. நீர் ஆகாரமா குடிங்க. ரெண்டுநாள்ல பாடி சரியாயிடும்."

மூன்றாம் நாள் அவனை ரிக் என்ற இடத்திற்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

அது எண்ணெய் வயல். எண்ணெயை பூமியில் துளை போட்டு எடுக்கிற வயல். குருடாயில் கருப்பாக பொங்கி வழிந்து கொண்டிருக்க அதை பெரிய குழாய்கள் மூலம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். கொக்கு போல் இருந்த கிரேன்கள் பூமியை துளைத்து அடித்து அழுத்தி பம்ப் செய்து குருடாயிலை வெளியேற்றிக் கொண்டிருந்தது.

அவனுக்கு கரும்பச்சை நிறத்தில் யூனிஃபார்ம் தரப்பட்டது. கழுத்திலிருந்து கால்வரை போட்டுக்கொள்ளும் கனமான துணி, பெரிய கையுறைகள் தரப்பட்டன. தொப்பி தரப்பட்டது. கூலிங்க்ளாஸ் தரப்பட்டது. வேறுவிதமான பாதணிகள் தரப்பட்டன. அவை கனமாக இருந்தன.

அரை டிராயரும், பனியனும் போட்டு அதற்கு மேல் இந்த யூனிஃபார்ம் போட்டு தலையில் தொப்பி வைத்து அவன் கிழக்கு திசை நோக்கி வணங்கினான். தன் அப்பாவை நினைத்துக் கொண்டான்.

பூரணி வீட்டை நினைத்துக் கொண்டான். பொழிச்சலூர் சிவனை நினைத்துக் கொண்டான். கையில் ரின்ச்சோடு தொழிலாளர்களுக்கு அருகே போனான்.

எல்லோரும் கைகொடுத்து வரவேற்றார்கள்.

"இவரு இடத்துக்குத்தான் நீங்க வரீங்க. இவரை ரிலீவ் பண்றீங்க" என்று ஒரு மலையாளியை கைகாட்டினார்கள். மலையாளி அவனை அணைத்துக் கொண்டார்.

அவரிடம் ஏதோ கேட்க முற்பட அவர் கைதூக்கி அவனை அமர்த்தினார்.

"இந்த வேலை கஷ்டமா. இது தான் இங்க வந்தவுடனே எல்லோரும் கேட்பாங்க. கஷ்டப்படறதுக்குன்னுதான் நாம் இங்க வந்திருக்கோம். கஷ்டப்பட்டா காசு கிடைக்கும்னுதான் வந்திருக்கோம். நல்லா காசு கிடைக்குது அதனால கஷ்டப் படுவோம். இந்த வேலை கஷ்டம்தான். ரொம்ப கஷ்டம்தான். ஏண்டா வந்தோம்னு நினைக்கிற அளவுக்கு கஷ்டம்தான்."

மலையாளம் கலந்த தமிழில் அவர் பேச அவன் மௌனமாக கேட்டுக்கொண்டான்.

"ஆனா, எடுத்தவுடனே ரிக்குக்கு வரவன் எப்படியும் பொழைச்சுக்குவான். இதுக்குமேல கஷ்டமான வேலை இங்க இல்லை. அதனால ரிக்லேர்ந்து தூக்கி வெளிய எங்கேயாவது போட்டா ஜம்முனு பொழைச்சுக்கலாம். சர்வ சாதாரணமா வேலை செய்யலாம். ஒன்னே ஒன்னு ஞாபகம் வச்சுக்க தம்பி. குறைசொல்லாத தொடர்ந்து வேலை செய்யறான்பார். அவனுக் குத்தான் இங்கு மதிப்பு மரியாதை. தளுக்குத்தனம் பண்ணாத வேலை செய்யறமாதிரி நடிக்காத இது உன் வேலை உன் ஆயில் ஃபீல்ட் உனக்குச் சொந்தமான எண்ணெய் வயல் அப்படின்னு வேலை செய். சட்டுனு புரிஞ்சுக்குவாங்க."

"நம்ம சந்திரசேகர் பிரமாதமான ஆபிஸர். குருடாயில் அதி கம் எடுத்தோம்னா அவருக்கு பிரமோஷன். அவருக்கு பிரமோ ஷன்னா உனக்கு பிரமோஷன் வெய்யில்லேர்ந்து தப்பிச்சுகற துக்கு வெங்காயத்துலேர்ந்து நிறைய வழி இருக்கு. ஆனாலும், இந்த வெய்யில் ஆரம்பத்துல உடம்பை படுத்தும். உடம்பு இந்த வெய்யிலுக்கு பழகறதுக்கு கொஞ்சம் நாளாகும். பல்லை கடிச்சுகிட்டு வேலை செய். முதல் ஒரு மாசம் தான் இங்கு குரூரம். நீ எதுக்கு இங்கு வேலைக்கு வந்திருக்க. எவ்வளவு சம்பாதிக்கப்போற, சம்பாதிச்சதை யாருக்கு கொடுக்கப்



போற அப்படின்னு யோசனை பண்ணு. இந்த சம்பாத்தியம் இந்தியாவில் கிடைக்குமா. அப்படின்னு கேள்வி கேளு. இந்தக் கேள்விக்கெல்லாம் ஒரேயொரு பதில் கிடைக்கும். நல்லா வேலை செய்யணும்றது.

நான் என் பொண்டாட்டியையும், பத்து வயசு பொண்ணை யும் ஆறு வயசு பையனையும் நினைச்சுப்பேன். வெய்யிலே தெரியாது. இங்க வேலை செய்து சம்பாதிக்கற காசை இந்தியா வுல இருக்கறவன் ஏமாத்தி தின்னான்னா, பதுக்கிட்டான்னா உன்னால இங்க வேலை செய்ய முடியாது. இங்கேயிருந்து நீ அனுப்புற ஒவ்வொரு காசும் அங்க உனக்கு மரியாதை அதிகப்படுத்துது... உனக்காக சேமிச்சு வைக்கப்படுதுன்னா இங்க பிசாசு மாதிரி உழைப்ப. உன்னுடைய பலம் உன்னுடைய வேர் துபாய்ல இல்லை. உன் ஊர்ல இருக்கு. உன் மனுஷாள் கிட்ட இருக்கு. அங்கேயிருந்து அன்புங்கற தண்ணி வந்து கிட்டே இருக்கணும். தளதளன்னு இருப்ப. அப்படி இல்ல ஒரே நாள்ல வாடிடுவ. இவ்வளவுதான் துபாய் சூட்சமம். அதுதான் வளைகுடா மர்மம். உன் ஊர், உன் மனுஷாள் அங்கேயிருந்து தான் பலம் வரணும். வீட்டுக்கு போன் பண்ணியா."

"பண்ணேன் ஸார்."

"பேசினியா."

"பேசினேன்."

"அன்பு கொட்றாங்களா."

"கொட்றாங்க சார்."

"வா. வேலை சொல்லித்தரேன். வா."

அவர் குருடாயில் எப்படி வருகிறது என்பதை விவரிக்க அவன் புரிந்து கொண்டான். அவர் பைப் லைன்களை கட்டிக் காட்டி அவன் என்ன செய்வது என்பதை விளக்கினார்.

"பெட்ரோலியம் கம்பெனியில இருந்தவன்தானே. உனக் குத் தெரியாதது ஒண்ணுமில்லை. ஆனா, அதை விட இங்க பிரஷர் ஜாஸ்தி. தப்பு பண்ணா பைப் மூஞ்சியில அடிக்கும். எண்ணெய் ரெண்டாள் ஆழத்துக்கு பீய்ச்சியடிக்கும்.

என்னெய் பீய்ச்சி அடிக்கறது பார்த்துட்டான் உன்னை குத்தி கொல்றமாதிரி ஓடிவருவான். ஏன்னா இது என்னெய் இல்லை, தங்கம். உருகி ஓடற கருப்புத்தங்கம்.

அதனால இதை சிந்தறது அவனுக்குப் பிடிக்காது. ஒரு ஸ்டேஜ்ல உனக்கே பிடிக்காத போயிடும். அதனால பார்த்து வேலை செய்."

அன்று வெய்யில் கடுமையாக இல்லை. போகப்போக கடுமையாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. கடற்கரைக் காற்று முகத்தைக் கிழிப்பதுபோல் அடித்தது.

"இப்போ அசைவம் சாப்பிடாத. மோர் குடி.மோர் சாதம் சாப்பிடு. ரசம் சாதம் சாப்பிடு. கொஞ்சம் நெய் எடுத்துக்க. ஒரு பாட்டில் நெய் வாங்கி வச்சுக்க. உள்ளங்கையில் வச்சு நக்கி சாப்பிடு. இன்னிக்கு உன் இடத்துக்கு அனுப்பிடுவாங்க. நாளைலேர்ந்து நீ இங்கயே தங்க வேண்டியிருக்கும். ராத்திரி இந்த இடத்துலேர்ந்து தூர துபாய் சிட்டி தெரியும். ஷார்ஜா தெரியும். அவ்ளோ அழகா இருக்கும். பகல்ல இருக்கற வேலை ராத்திரியில இருக்காது. சும்மா ஆயில் போறத வேடிக்கை பார்த்துகிட்டுருக்கணும். உட்கார்ந்து கடற்கரையைப் பார்த்து பாட்டு பாடிகிட்டிருக்கலாம். உனக்கு பாடத் தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும் ஸார்."

"பாடு.மனசு விட்டுப்பாடு, வாய் விட்டுப் பாடு.பாரம் ரொம்ப குறையும். கல்யாணம் ஆயிடுச்சா."

"இல்லை ஸார். நிச்சயதார்த்தம் ஆயிடுச்சு."

"அடடே... நிச்சயதார்த்தம் ஆயிட்டு ஏன் இங்க வந்த. கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே."

"இல்லை ஸார், அதுக்கு நேரமில்லை. ஒரே வாரத்துல கிளம்பி வந்துட்டேட. கிளம்பற நேரத்துல நிச்சயதார்த்தம் ஆயிடுச்சு."

"தமிழ்நாட்டுல உன் வுட்பியோட பேசிட்டு வந்தியா."



"கொஞ்சம் நல்லா தொட்டுப் பழகிட்டு வந்தேன் ஸார்."

"சபாஷ். அது உன்னை லவ் பண்ணுதா."

"உயிரையே வச்சுருக்கு ஸார்."

"அவங்க வீட்ல எப்படி நடத்தறாங்க."

"ரொம்ப பிரியமா நடத்தறாங்க."

"இது போதும்போ. உங்கப்பா அம்மா இருக்காங்க இல்ல."

"இருக்காங்க ஸார்."

"அவங்களையும் பிடிக்குமில்லை."

"பிடிக்கும் ஸார்."

"அவ்ளோதான். அவங்களை நினைச்சு கையில ரிஞ்ச் எடுத்தாக்க ஒரு கஷ்டமும் தெரியாது."

"நீங்க ஊருக்கு போறீங்களா ஸார்."

"ஆமாம்."

"எப்போ."

"இன்னும் ரெண்டு நாள்ல. நீ நாளைக்கு எப்படி வேலை செய்யறேன்னு பார்த்துட்டு உன் கூட நாள் முழுக்க இருந்துட்டு பிறகு துபாய் போய் ஷாப்பிங் பண்ணிட்டு ரெண்டு நாள் கழிச்சு கிளம்பிடுவேன். டிக்கெட் கன்ஃபார்ம் ஆயிடுச்சு. ரீ கன்ஃபார்ம் பண்ணணும். இன்னிக்கு பண்ணிடுவேன்."

"நீங்க கேரளாவா ஸார்."

"ஆமாம்"

"நேரா திருவனந்தபுரம் போய் இறங்கிடுவீங்களா ஸார்."

"இல்லை. மெட்ராஸ்."

"அப்படியா..." அவன் சொல்லிவிட்டு நிறுத்தினான்.

"என்ன. என்ன வேணும் சொல்லு."

"எங்க வீட்டுக்கு ஏதாவது வாங்கி அனுப்பலாமா?"

## 38

"நீ எங்கேயிருந்து வாங்கி எப்போ அனுப்பறது. நீ போக முடியாது. உங்க வீட்டுக்கு என்ன வாங்கணும்னு சொல்லு. நான் வாங்கி அனுப்பறேன்."

மலையாளி உரக்கப் பேசினார்.

"சென்ட் பாட்டில், பாடிஸ்ஃப்ரே, ஷாம்பூ, சாக்லெட், கொஞ்சம் அந்த மாதிரி."

கமலக்கண்ணன் தயங்கிச் சொன்னான்.

"நிச்சயமா அனுப்பலாம். ஆனா, ஒன்னு நான் இறங்கி அவங்க வீடு தேடறது எனக்கு கஷ்டம். அவங்களை ஏர்போர்ட்டுக்கு வந்து என்னை பார்க்க சொல்றயா. ஓமன் ஏர்வேஸ் கார்த்தால அஞ்சரை மணிக்கு. அவங்களை ஏர்போர்ட்டுக்கு வரச் சொல்லு. நான் பையைக் கொடுத்துடறேன். உன் பேர் சொல்லச் சொல்லு."

"ஸார், இதுதான் ஸார் அவங்க போட்டோ."

அவன் பூரணியின் படம் காட்டினான்.

"அட... இது யாரோ சினிமா நடிகை இல்ல."

"ஸார்... என் வொய்ஃப் ஸார்."

"பளிச்னு அழகா இருக்காங்கய்யா. யூ ஆர் லக்கி. அதே சமயம் அன்லக்கி."

"ஏன் ஸார்."

"இவ்ளோ அழகான லேடிய அங்க விட்டுட்டு இங்க உட்கார்ந்திருக்கியே. உள்ள வருத்தம் இருக்கத்தானே செய்யும்."

அவர் கிளறிவிட்டுப் போனார்.

மறுநாள் முழுவதும் நின்று வேலை கற்றுக் கொடுத்தார். என்னென்ன பிரச்சனை வரும் என்று அவர் சொல்ல அவன் எழுதிக் கொண்டான். நடுவே முதன்மை இன்ஜினீயர் சந்திரசேகர் வந்து கலந்து கொண்டார். அவர்கள் இருவரிடமும் பேச வேலை திறம்பட கை மாறி இருப்பது அவருக்குப் புரிந்தது.



"இங்கேர்ந்து பத்து கிலோ மீட்டர் தூரத்துல ஒரு ஆபீஸ் இருக்கு. அங்க டாக்டர் இருப்பாங்க. ஏதாவது பிரச்சனைன்னா அங்க போயிடலாம். ஹோன்னு ரோடு இருக்கும். கார் ஏறினாக்க ஏழு எட்டு நிமிஷத்துல கொண்டு போய் அங்க இறக்கிடுவாங்க. வயித்து வலி, தலைவலி, கண் எரிச்சல், மூட்டு வலி, சைனஸ் எதுவா இருந்தாலும் ஒரு தடவை டாக்டர்கிட்ட போயிட்டு வந்துடுங்க."

அவன் சரியென்று தலையசைத்தான். அன்று இரவு ரிக்கிலேயே தங்கினான். கடலை ஒட்டிய இடம். நிலா வெளிச்சம் கடல் சிறிய அலைகளாய் புரண்டு தரையை நக்கிக் கொண்டிருந்தது.

கடலுக்கு எதிர் பக்கம் வானம் நிறைந்த வெளிச்சம். புள்ளி புள்ளியாய் ஆயிரக்கணக்கான விளக்குகள் தெரிந்தன. தேவலோகம் போல் துபாயும், ஷார்ஜாவும் தள்ளித் தள்ளி காட்சியளித்தன.

வந்து இறங்கி காரில் போகின்ற இரண்டு மூன்று அராபியர்களை பார்த்ததோடு சரி. மற்ற எல்லா இடத்திலும் நீக்கமற இந்தியர்களே நிறைந்திருந்தார்கள். குறிப்பாக மலையாளிகளும், தமிழர்களும் கம்பீரமாக உலா வந்தனர்.

சீஃப் இன்ஜினீயர் சந்திரசேகர் வீடு அவனைக் கிறங்கடித்தது. வீடு முழுவதும் குளுமை செய்யப்பட்டு இரண்டு குழந்தைகளும் மிக கம்பீரமான மனைவியுமாக அவர் வாழ்ந்து கொண்டிருப்பது தெரியவந்தது. வீட்டிலுள்ள எல்லா விஷயங்களும் விலை உயர்ந்ததாய் மிக உபயோகமாய் இருந்தன.

பூரணியும், அவனும் அந்த மாதிரி ஒரு வீட்டில் என்றைக்காவது ஒருநாள் குடித்தனம் செய்ய வேண்டும் என்ற ஏக்கம் சட்டென்று பற்றிக் கொண்டது.

அதற்கு உழைக்க வேண்டும். பேயாய், பிசாசாய் உழைக்க வேண்டும்.

அவன் ரின்ச்சை தோளில் போட்டுக் கொண்டு மறுபடியும் ரிக் முழுவதும் சுற்றினான்.

ஏதேனும் தொந்திரவு இருக்கிறதா என்று பார்த்தான். அவன் ரின்ச்சோடு சுற்றிக் கொண்டிருக்கிறான் என்று சந்திரசேகருக்கு அங்கு வேலை செய்யும் ஒரு பாகிஸ்தானியின் மூலமாக தெரிவிக்கப்பட்டது.

சந்திரசேகர் சந்தோஷமடைந்தார். மனைவியை அணைத்துக் கொண்டு தூங்கப் போனார்.

இந்த மாதிரி நாலு பேர் கிடைச்சுட்டாபோதும். நான் இன்னும் கொடிகட்டிப் பறப்பேன் என்று நினைத்துக்கொண்டார்.

விடிகாலையில் எழுந்திருந்து அந்தப் பையனைப் பார்த்து உற்சாகமூட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

அன்று இரவு பூரணிக்காக அந்த மலையாளி நண்பரால் இரண்டு லேடீஸ் செண்ட்களும்.ஆறு பாடி ஸ்ப்ரேயும், சாக்லெட்டும், பிஸ்கெட்டும், ஷாம்பூவும், முகத்துக்குப் போடுகின்ற க்ரீமும், ஸ்க்ரப்பும் வாங்கப்பட்டன. பத்து பீங்கான் பொம்மைகள் வாங்கி பஞ்சில் பதித்து ஒரு அட்டையில் அடக்கி அதையும் பையில் அந்த மலையாளி போட்டுக்கொண்டார்.

"கல்யாணம் நிச்சயமாயிடுச்சாம்.திரும்ப போகறதுக்கு ஒன்றரை வருஷம் ஆகும்.என்ன பண்ணுவா அந்தப் பொம்பளை. பொம்மையத்தான் பார்த்துகிட்டுருக்கணும். இவன் கொடுக்கறது மட்டுமில்லாம, நாம கூட நம்ம பரிசா கொடுக்கலாம். அவளுக்கு கொடுத்தா நம்ம குழந்தை நல்லாயிருக்காதா?"

பூரணிக்கென்று பேரீச்சம் பழமும், பற்பசையும், நெயில் கட்டரும், பெண்கள் தலையில் அணிந்து கொள்கிற கலர் கலரான ரப்பர் பேண்ட் பட்டையும் வாங்கினார். நிஜம் போல இருக்கும் பிளாஸ்டிக் பூங்கொடிகள் வாங்கினார்.

மறுநாள் அந்தப் பையைக் கொண்டுபோய் கமலக்கண்ணனிடம் காண்பித்தார்.

கமலக்கண்ணன் ஒவ்வொன்றாக தடவிப் பார்த்தான். நெஞ்சில் வைத்துக் கொண்டான். மறுபடியும் பையில் வைத்தான். அவரை கால் தொட்டு வணங்கினான்.



"நீங்க நல்லாயிருக்கணுமய்யா. இது எனக்கு பெரிய பலம். இதை பார்க்கறபோது அவளுக்கும் பலம் கிடைக்கும். அவ பலமா இருக்கான்னா நானும் பலமா இருப்பேன்" என்று குரல் நெகிழ கண்ணில் நீர்த்துளிர்க்கச் சொன்னான்.

அந்த மலையாளி அவனை அணைத்துக் கொண்டார்.

"ஒரு வேளை அவங்க வராட்டாலும் நான் அவங்க வீட்டுக்கு போய் கொடுக்கறேன். அட்ரஸ் கொடு"என்று கேட்டு வாங்கிக் கொண்டார்.

அட்ரஸை எழுதி அந்தப் பையில் ஒட்டிக் கொண்டார்.

பூரணியும், பூரணியின் அப்பாவும் ஏர்போர்ட்டில் அந்தப் பையை வாங்கிக் கொண்டார்கள்.

"ஒரு கஷ்டமும் இல்ல. ரொம்ப நல்லாயிருக்கு. வேலை நல்லா தெரியுது.நான் செய்த வேலை தான் அவரு இப்போ செய்யறாரு. அறுபது நாள் லீவுல வந்திருக்கேன். நான் மறுபடியும் போய் ரிலீவ் பண்ணுவேன். நான் போறதுக்கு முன்னாடி நான் உங்களை வந்து பார்க்கறேன். எனக்கு நாடு கோழிக்கோடு. இது என் அட்ரஸ். அந்தப் பக்கம் வந்தா வாங்க" என்று சொன்னார்.

வீட்டிற்கு வந்து பை திறந்து எல்லாப் பொருட்களையும் தரையில் அடுக்க அவளுக்கு துக்கம் வந்தது. அவள் அங்கேயே அந்த பொருட்களுக்கு அருகே படுத்துக் கொண்டு மெல்ல உடம்பு அசையாமல் கண்ணீர் விட்டாள்.

பாவம், அம்மாவும், அப்பாவும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

ஆனால் பூரணியின் அப்பாவிற்கு நாக்கில் சனி. பெண் சுருண்டு சுருண்டு படுத்துக் கொள்கிறாளே. மாறுதலாக இருக்கட்டுமே என்று அவளுக்கு உற்சாகமூட்டுவதாக நினைத்துக் கொண்டு பேசத் துவங்கினார்.

"இப்படியே படுத்துக்கிட்டிருந்தா எப்படிம்மா. இதுல நாலு சாமான் எடுத்துக்கிட்டுபோய் மாப்பிள்ளை வீட்டுக்குக் கொடு.

சும்மா போக வர இரு. உனக்கும் மனசு மாறுதலா இருக்கும். எதிர்பார்ப்பாக இல்ல."

அப்பாவின் குரலுக்கு அம்மா எதிர்ப்பு தெரிவித்தாள்.

"அவங்க கூப்பிடாத நாமா போனா நல்லாயிருக்குமா..."

"அவங்க ஏன் கூப்பிடுவாங்க. நாமளா போறது."

"நாமளா போனா நல்லாயிருக்குமா. யோசனை பண்ணாத தடுக்குனு பேசாதீங்க."

அம்மாவிடம் ஒரு வெடுவெடுப்பு இருந்தது.

"ஏண்டி... இன்னிக்கு இல்லைன்னா நாளைக்கு அந்த வீட்டுக்கு போக வேண்டியவ. நீயும், நானும் அங்க போய் புழங்க வேண்டியவங்க. இப்பவே ஆரம்பிச்சா தப்பா. என்னமோ அன்னியம், ஆகாதவங்க மாதிரியே பார்க்கறியே. உனக்கு சாமர்த்தியம் போறாதுடி. ஜனங்களே முக்கியமில்லையா. உன்னை கூட்டிகிட்டு போய் தனிக்குடித்தனம் வச்சேன் பார் அது தப்பு. எங்க வீட்லயே விட்ருக்கணும். நாலு பேரோட பேசி பழகியிருப்ப. உடுமலைப்பேட்டையில ஆறு வருஷம், கரூர்ல ஏழு வருஷம். அப்புறம் கொண்ணாந்து பல்லாவரம்னு உட்கார வச்சேன் பார். உனக்கு யாரையும் புரியலை."

"இப்போ என்னான்னு சொல்றீங்க."

அம்மா தன்னை குறை கூறியவுடன் வேகமாகச் சீறினாள்.

"நாலு சாமானை எடுத்துகிட்டு அவங்க வீட்டுக்கு போய் நல்லாயிருக்கீங்களா. இதை கமலக்கண்ணன் அனுப்பினாரு உங்களுக்கு கொடுக்கறேன்னு சொன்னா என்ன."

"அதுக்கு எதுனா கோச்சுக்கப் போறாங்க."

"என்னா கோச்சுப்பாங்க."

"கமலக்கண்ணன் எனக்கு அனுப்பலையே. உனக்குத் தான் அனுப்பினாங்கன்னு கோச்சுக்கப் போறாங்க."

"அங்கேயும் அனுப்பியிருப்பாரு இல்ல."

"தெரியலியே."

"தெரிஞ்சுகிட்டு போறது நல்லது."



"சரி. நாலு சாமான் கொடுத்தா அது கோச்சுக்கறதுக்கா இருக்கும்."

"இந்த செண்ட்டெல்லாம் அந்தப் பொம்பளைங்களுக்கு பிடிக்கும்டி."

"மொத்தம் அனுப்பினதே ஏழு சாமான். இதுல எவ்வளவு அவங்களுக்கு கொடுக்கச் சொல்ற?"

பூரணி கொஞ்சம் அலுப்போடு கேட்டாள்.

"வேணாம்னா விட்டுரு."

"வேணாம்னு சொல்லலை. அவங்களாண்ட போறதுக்கே எனக்கு பயமா இருக்குப்பா."

"அப்படித்தாம்மா இருக்கும். நாமளா போய் பொழங்கி வர ணும். நீங்க ரெண்டு பேரும் போக வேணாம். எங்கிட்ட கொடு. என்ன கொடுக்கறியோ அதைக் கொடு. அதைவாங்கிகிட்டு நான் போறேன்."

"அதான் நல்லது. நீங்க போயிட்டு வாங்க. நீங்க போய் சுமூகமா இருந்ததுன்னா நான் வரேன்."

பூரணியின் அப்பா சம்மந்தி வீட்டுக்குப் போனார்.

ஆனால் அவர்கள் சுமூகமாக இல்லை.

"இங்கித்துக்கு ஒரு போன் பண்ணலை. எப்படியிருக்காங் கன்னு சொல்லலை. எப்படிப் போய் சேர்ந்தான்னு ஒரு வார்த்தை இல்லை. எங்களுக்கு ஒண்ணும் அனுப்பலை. டப் டப்புன்னு அங்க அனுப்பியிருக்கானே."

"பார்த்தியா... நான் அப்பவே சொல்லலை. அவன் அந்தப் பக்கம் சாய்ஞ்சுட்டாம்மா. இனிமே நம்மள மதிக்கமாட் டான்னு. அப்படியே நடந்திருக்குது பார்."

உரத்த குரலில் அழுத்தம் திருத்தமாக அவன் தமக்கை பேசினாள்.

பூரணியின் அப்பாவிற்கு ஏண்டா வந்தோம் என்றாகி விட்டது.

"உங்ககிட்ட பேசியிருப்பாருன்னு நினைச்சேங்க."

"ஏன் பேசறான். அதான் லட்சரூபாய எடுத்து சொளையா கொடுக்கறதுக்கு நீங்க இருக்கீங்களே. இனி உங்களாண்டதான் பேசுவான். உங்களாண்டதான் கொண்ணாந்து காசை கொட்டு வான். உங்க மேல தப்பு இல்லை. தப்பு எங்களது. நாங்க விசாரிக் காத பொண்ணு எடுத்துட்டோம்."

மறுபடியும் தமக்கை பேச அவருக்கு சுரீரென்று கோபம் வந்தது.

"என்னம்மா. என்ன தப்பாகிப் போச்சு. எங்கக்கிட்ட என்ன குறை கண்டீங்க."

"உங்களதுல ஒரு பொண்ணு வாழாவெட்டியா இருக்காமே. அதை சொல்லாத மறைச்சுட்டீங்களே."

"யாரு. யாரைச் சொல்றீங்க."

பூரணியின் அப்பா புரியாமல் திகைத்தார்.

"உங்க அக்காவோட மச்சினன் வீட்ல மூணு பொண்ணுங்க. அதுல ஒரு பொண்ணுதான் வாழுது. மத்தரெண்டு பொண் ணுங்களும் வீட்டோட வந்துடுச்சி."

"அவங்க வீட்டுக்கும் எங்க வீட்டுக்கும் என்னம்மா சம்மந் தம். அவங்க ரொம்ப பணக்காரங்கம்மா. அவரு ஐ.ஏ.எஸ். ஆபீஸரு. அவங்க அமெரிக்கா போயிட்டு வந்த பொண்ணுங்க அதுங்க ஒரு மாதிரியாத்தான் இருக்கும். நமக்கும் அவங்களுக் கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை."

"அவங்களாண்டயும் காசு இருக்கு. உங்களாண்டயும் காசு இருக்கு. தடாலடியாத்தான் நடத்துவீங்க. தடாலடியாத்தான் பேசுவீங்க. நாங்க கேட்டோமா. இந்த டப்பால்லாம் வேணும்னு வேணாம். எடுத்துக்கிட்டு போங்க. கமலக்கண்ணன் எங்க ளுக்கு அனுப்பினா வாங்கறோம். உங்களுக்கு அனுப்பறத நீங்க எனக்கு பிச்சை போட வேணாம். ரூபாயை தூக்கிப் போட்டா பாடி ஸ்ப்ரே, எங்க வீட்டுக்காரர்கிட்ட ஒரு வார்த்தை சொன்னா கொண்ணாந்து இறக்கிடுவாரு."



"இது பெரிய பொருள்னு நான் கொண்டாரலைம்மா. கமலக் கண்ணன் உங்களுக்கு கொடுக்க சொன்னாருன்னு கொண் டாந்தேன்."

"அவன் கொடுக்கச் சொன்னா எங்களுக்கு அனுப்பியிருக்க ணும். எங்ககிட்ட சொல்லியிருக்கணும். போய் இதுவரைக்கும் போன் பண்ணலை."

"அது எனக்குத் தெரியாதும்மா."

"உங்களுக்கு போன் பண்ணும் போது நீங்க கேட்டிருக் கணும். ஏம்பா... வீட்டுக்கு போன் பண்ணியா. அப்பா, அம்மா நல்லாயிருக்காங்களான்னு. அவன் எப்போ போன் பண்ணான். அவன் போன் பண்ணி நாலு நாள் ஆச்சு. இப்ப வந்து ரொம்ப நிதானமா பேசறீங்களே. தயவு செய்து இதை எடுத்துகிட்டு போயிடுங்க. இந்த மாதிரியெல்லாம் எடுத்துகிட்டு வராதீங்க. எங்களுக்கு பிடிக்காது."

"என்னாடி இது. பொண்ணு பெத்துட்டாருன்னு ஒரேயொரு காரணத்துக்காக இந்த விரட்டு விரட்டறீங்க."

கமலக்கண்ணன் அப்பா இடையில் பேச, கமலக்கண்ண னின் அம்மா புயலாகச் சீறினாள்.

"நீங்க கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு அடக்கிட்டு உட்கா ருங்க. இது பொம்பளைங்க சமாச்சாரம். நாங்க பேசிக்கறோம். இதை எடுத்துகிட்டு வரத்துக்கு உன் பொண்டாட்டியால முடியாதா. எல்லாத்துக்கும் நீ தான் வருவியா. கால்மேல கால் போட்டுகிட்டு அதிகாரம் பண்ணுவா. நீ குறுக்கேயும், நெடுக் கேயும் ஓடிக்கிட்டு இருப்ப. என்னா குடித்தனம் இது. ஆம்பளைய அடக்கி வைக்கற குடித்தனம். அப்படித்தானே என் பிள்ளையையும் அடக்கி வைப்ப. என் புள்ள அடங்க மாட்டான். அடங்க விடமாட்டோம்" அவர்கள் கூச்சலிட்டார்கள்.

மனைவியின் பேச்சை மீறி இங்கு வந்தது தவறு என்பதை புரிந்து கொண்டார்.

வேறு என்ன வழி. இன்னும் கீழ் இறங்கிப் பார்க்கலாம் என்று யோசித்தார்.

"தயவு செய்து மன்னிச்சுக்கணும். நான் கெஞ்சி கேட்டுக்கறேன். கோபப்படக்கூடாது. கமலக்கண்ணன் பண்ண தப்பு. அவரு முதல்ல உங்களுக்கு போன் பண்ணியிருக்கணும். உங்களுக்கு போன் பண்ணிட்டாரான்னு நான் கேட்டிருக்கணும். நானும் கேட்காதது தப்பு.

இந்த தடவை போன் பண்ற போது நிச்சயமா நான் சொல்லிடுவேன். இப்போ இதை பெரிய மனசு பண்ணி வாங்கிக்கோங்க."

"என்னாடி... இந்தக் குப்பையெல்லாம் வேணுங்கற."

அம்மா எகத்தாளமாகக் கேட்க "அது உன் இஷ்டம்."

பெண் முகத்தைத் திருப்பிக் கொண்டு போயிற்று.

## 39

பூரணியின் அப்பா நான்கு சாமான்களையும் மேஜையில் எடுத்து வைத்தார்.

"அப்போ நான் வரேங்க" என்று சொன்னார்.

அவர்கள் பதிலே சொல்லவில்லை.

மெல்ல எழுந்து வெளியே வந்தார்.

மனம் கனத்தது. கண்ணில் நீர் முட்டியது.

என்ன... என்ன சம்மந்தம் இது. ஏன் இப்படி தவறான ஒரு இடத்தில் பெண்ணை கொண்டு போய் கொடுத்து விட்டோம். என்னையே இப்படி தூக்கிப்போட்டு இம்சை பண்ணுகிறார்கள் என்றால் பொண்ணை என்னவெல்லாம் சொல்வார்கள். இது தப்பா... நிறுத்திவிடலாமா. சரி, ஆன வரையில் ஆகிவிட்டது என்று உதறிவிடலாமா. சம்மந்தம் சரியாக வராது என்று சீனு வாசய்யரை விட்டு பேசச் சொல்லி நிறுத்திவிடலாமா.

வீட்டை விட்டு வெளியே வர வர கோபம் அதிகமாயிற்று.



அவர் வீட்டிற்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததுமே பூரணியின் அம்மாவிற்கு தெரிந்து விட்டது. ஏதோ தகராறு நடந்திருக்கிறது என்று புரிந்து விட்டது.

"மிஸ்டர் கமலக்கண்ணன், நீங்கள் வந்து ஒரு வாரமாயிற்று. இந்த வேலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா."

ஆறுபேர் அரைவட்டமாக உட்கார்ந்து கொண்டு குளிரூட்டப்பட்ட அறையில் அவனுக்கு நடுவே ஒரு நாற்காலி போட்டு அமரவைத்து கேள்வி கேட்டார்கள்.

"பிடித்திருக்கிறதய்யா."

அவன் பணிவாக பதில் சொன்னான்.

"உங்கள் உடல் நலம் எப்படியிருக்கிறது."

"நன்றாக இருக்கிறது."

"உங்களால் இந்த இயற்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியுமா."

"சிரமம்தான். ஆனாலும் மன உறுதியால் இதை மெல்லத் தாண்டுவேன்.

சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையால் ஜெயிப்பேன்'' என்று ஆங்கிலத்தில் பதில்சொன்னான்.

பிறகு வேலை சம்மந்தமாக சில கேள்விகள் கேட்டார்கள்.

"ஒரு வேளை இது தவறானால் என்ன செய்வாய். கடற்கரையில் புயல்காற்று ஏற்பட்டால் உன் நிலை என்ன அந்த வரைபடத்திலுள்ள பைப்லைன் என்னவென்று சொல்."

அவன் படம் பார்த்து விவரம் சொன்னான். சகல இடத்திலும் மிகத் துல்லியமாகத் தேறினான்.

அவன் மன ஆரோக்கியம் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறதென்று ரகசியக் குறிப்பு எழுதப்பட்டது.

சந்திரசேகர் பிற்பாடு அதை அவனுக்குக் காண்பித்தார்.

"நான் போட்ட கணக்கு தப்பாகலை. நான் எதிர்பார்த்தது மாதிரியே நல்லபடியா வேலை செய்யற. ஒன்றரை வருஷம் பல்லைக் கடிச்சுகிட்டு இங்க வேலை செய். இந்த மாதிரி ஆறு

ரிக் இந்த இடத்துல போடப்போறான். ஏகப்பட்ட எண்ணெய் அடியில இருக்குன்றான். நம்முடைய வேலை இனிமேதான் இருக்கு. பைப் போடணும். புது பைப் கொண்டு வந்து போட ணும், காலையிலேயே வேலை ஆரம்பிச்சுடுவோம். வெய்யில் உச்சிக்கு போற போது ஏ.சி.ரூமுக்கு ஒதுங்கிக்குவோம். நாலரை மணி, அஞ்சுமணிக்கு கொஞ்சம் வெய்யில் குறைஞ்சவுடனே வேலை செய்யலாம். நைட் கூட வேலை செய்யலாம். இத்தினி நேரம் வேலைன்னெல்லாம் இங்க கிடையாது கமலக்கண்ணா. ஒரு வருஷத்துக்குள்ள இங்க போடற ஆறு ரிக்லேர்ந்தும் நாம பைப் லைன் ஏற்படுத்தி டாங்குக்கு கொண்டு வரணும். டாங்க் லேர்ந்து ஃபாக்டரிக்கு போகணும். இதுவரைக்கும் அமெரிக்கா லேர்ந்து ப்ளான் வரலை. அவங்களுக்குள்ள இன்னும் பேரம் படியலை."

"ஒருவேளை இந்த காண்ட்ராக்ட் இல்லைன்னு ஆயிடுமா ஸார்."

"டேய்... வாயை வைக்காதடா. எனக்கு பக்பக்குன்னுது. அடி மனசுல ஒரு கலவரம் இருக்கத்தான் செய்யுது. இவங்க ரெண்டு பேருக்கும் காண்ட்ராக்ட் இருந்தாதான் எல்லாத்துக்கும் வசதி. ஆனா, இவன் தொடர்ந்து ஆள் எடுக்கறதப் பார்த்தா காண்ட் ராக்ட் முடிஞ்சுரும்னுதான் தோணுது. இன்னும் நாப்பது இன் ஜினியர்ஸ் வேணும்னு கேட்கிறான். இன்னிக்கு விளம்பரம் போகுது இந்தியாவுக்கு."

"பேரம் படியாது போச்சன்னா?"

"அஞ்சோ பத்தோ கொடுப்பான், அதை வாங்கிட்டு திருப்பி யும் போக வேண்டியதுதான்."

உள்ளே சட்டென்று சந்தோஷம் பரவியது.

ஒருவேளை அமெரிக்காவும், துபாய்க்கும் உண்டான இந்த காண்ட்ராக்ட் ரத்தானால் உடனே ஓடிப்போய் பூரணியின் மடியில் விழலாம். இறுக்கி அணைத்துக் கொள்ளலாம். கவ்வி முத்தம் கொடுக்கலாம். கொஞ்சலாம். கட்டிப்புரண்டு உருள லாம். என்னவளை முகம் சிவந்தவளை நான் சேர்த்துக் கொள் வேன் வளையிட்டு... என்று ஆனந்தக் கூத்தாடலாம்.



கமலக்கண்ணா, துபாய் வேலைக்கு போனியாம். அந்தக் கம் பெனி ஊத்தி மூடிகிச்சாம். இங்க இருக்கிற கம்பெனியிலயும் வேலை போயிடுச்சு. என்னா பண்ணப்போற மல்லாட்டை பயிறு விக்கப் போறியா. வெளிநாடு... வெளிநாடுன்னு போற வனுக்கெல்லாம் இது தாண்டா கதி. நம் தாய் திருநாட்லயே அல்வாகடை, ஆப்பக்கடை வைக்கலாயில்லை.

இருக்கற ஒரேயொரு எண்ணெய் வயலிலிருந்து ஆயில் எடுக்க மறுநாள் பைப்புகள் போடுகிறபொழுது சட்டென்று ஒரு உத்தரவு... வந்தது. எல்லா வேலையையும் நிறுத்தச் சொல்லியது.

கமலக்கண்ணன் பயந்து போனான்.

ஏன் என்று கேட்ட போது தெரியவில்லை. இன்று ஒரு நாள் ஓய்வெடுக்கச் சொல்கிறார்கள். பிற்பாடு ஒரு ஓய்வுநாளை வேலை நாட்களாக செய்துவிடுவார்கள் என்று பதில் தரப் பட்டது.

எண்ணெய் வயல் உயரமான பிளாட்பாரத்திலிருந்து இரவு நேரம் துபாயை பார்த்துக்கொண்டிருந்தான். தொலை தூரத்தில் ஒரு கார் பாலைவனம் நோக்கி ஏறி இறங்கி மிக விரைவாக வந்து கொண்டிருந்தது.

கமலகண்ணனும் அவன் நண்பர்களும் கீழிறங்கி காத்துக் கொண்டிருந்தார்கள்.

கார் வந்தது.

சந்திரசேகர் குதித்தபடி கீழிறங்கினார்.

"டேய்... காண்ட்ராக்ட் வந்திடுச்சுடா இன்னிக்கு ராத்திரி பன்னெண்டு மணிலேர்ந்து நாம அத்தனை பேரும் அமெரிக்கர் கம்பெனி சர்வெண்ட்ஸ். பர்மனெண்ட்ஸ். நாளைக்கு இங்க வேலை இல்லைடா. ஏகப்பட்ட ஃபார்மாலிடிஸ் இருக்கு. அத்தினிபேரும் துபாய்க்கு வந்துருங்க. எல்லாரும் நல்லா உடுத்திகிட்டு வாங்கப்பா. அமெரிக்கன் கம்பெனி ரெப்ரசென் டேடிவ் உங்களை பார்க்கணும்னு சொல்றாரு. மொத்தம் நூத்தி நாப்பத்தேழு பேர்" அவர் பட்டியல் காட்டினார். அவர் ஒரு ஹோட்டல் பெயரைச் சொன்னார்.

நீளமான பஸ்ஸில் ஏறி துபாய் நகரத்தின் உட்புறங்களுக்கு போகும் போது வியப்பாக இருந்தது.

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மூன்றாவது மாடியில் ஒரு ஹால் முழுவதும் வாடகைக்கு எடுத்து அதில் அவர்களை உட்கார வைத்தார்கள். இரண்டு மணிநேர காத்திருத்தலுக்குப் பிறகு அவனுக்கு நேர்முகப் பேட்டிக்கான அழைப்பு வந்தது.

"சந்திரசேகர் இது உங்களுடைய ஆளா. உங்களுடைய தேர்வா"

பரங்கிப்பழம் போலிருந்த அந்த அமெரிக்கன் திரும்பிக் கேட்டான்.

"ஆமாம்" என்றதும் "சரி இவருடைய வேலைத்திறனும் முன்னேற்றமும் உங்களுடைய பொறுப்பு. நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆட்கள் யாரையும் நான் ஒரு முறை பார்ப்பதோடு முடித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல். குருடாயில் தீப்பிடித்துக் கொண்டால் நீ என்ன செய்வாய்."

"முக்கியமான உபகரணங்களை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு முதலில் காலி செய்வேன்."

"ஏன்."

"எனக்கு குருடாயில் தீயோடு போரிடத் தெரியாது. அது என் வேலை அல்ல. அந்த இடத்தை விட்டு காலி செய்வதே என் வேலை."

"மிகச் சரியான பதில். நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. ஏதாவது செய்து புரட்டுவேன் என்று இந்தியர்கள் சொல்வார்கள் என்று தான் எனக்கு சொல்லப்பட்டிருந்தது. இந்த இளைஞன் சரியாக இருக்கிறான்."

"நூற்று நாற்பத்தேழு பேருக்கும் நேர்முகப் பேட்டி நடந்து முடிந்து விட்டது. சிறு சிறு குழுக்களாக தொழில் ரீதியாக உட்கார்ந்து அந்த பெரிய ஹாலில் பேசிக்கொண்டிருந்தார்கள். வெளியே வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. அதற்கு சிறிதும் சம்மந்தமில்லாத முறையில் உள்ளுக்குள்ளே அந்த



ஹால் குளிரூட்டப்பட்டிருந்தது. தண்ணீரும், பழரசமும், வெள்ளரிக்காய் பிஞ்சுகளும் திரும்பத் திரும்ப கொண்டு வந்து வைக்கப்பட்டன.

இருபத்து மூன்று காகிதங்களுடன் சந்திரசேகர் அவர்களை நோக்கி வந்தார். காகிதத்தில் கையெழுத்து இடச் சொன்னார்.

மாதாந்திர சம்பளம் எழுபத்தைந்தாயிரம் என்று அவன் காகிதத்தில் எழுதியிருந்தது.

அவன் சந்தோஷம் தாங்காமல் தடுமாறினான்.

எழுபத்தைந்தாயிரம் ரூபாய். என்ன அற்புதமான காசு. வேலை கடினம்தான், கொளுத்துகிற வெய்யில் கூதர்காற்று வீசுகின்ற கடற்கரை.குருடாயிலின் வெப்பம். ஒரு நெடி இரும்புப்பிடித்து அசைத்து அசைத்து தோள்பட்டையும் கழுத்தும், முட்டிகளும் வலிக்கின்றன. ஜன நடமாட்டமே இல்லாத ஒரு இடத்தில் வேலையைத் தவிர வேறு எதுவும் சிந்திக்க முடியாத விதத்தில் ஒரு வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. இனி தொடர்ந்து அப்படித்தான் நகரும்.

ஆனால், எழுபத்தைந்தாயிரம். மாதம் ஒன்றுக்கு எழுபத்தைந்தாயிரம். பதினெட்டு மாதத்திற்கு பதிமூன்று லட்சத்து ஐம்பதாயிரம். இங்கு வேறு செலவே இல்லை. உணவை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். உடை வழங்குகிறார்கள். சோப்பு, சீப்பு போன்ற எல்லா செலவுகளும் அவர்களே தருகிறார்கள்.

ஊருக்குப்போகும்போது ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு சாமான்கள் வாங்கிக் கொண்டு பன்னிரெண்டு லட்ச ரூபாய் கனையாக எடுத்துப்போய் விடலாம். பொழிச்சலூரில் பெரிய வீடு வாங்கி விடலாம்.

"என்னய்யா சந்தோஷமா."

சந்திரசேகர் கேட்டார்.

"சந்தோஷம் ஸார்"

அமைதியான குரலில் கமலக்கண்ணன் பதில் சொன்னான்.

"எனக்கு சந்தோஷம் இல்லையா. நான் நினைச்சமாதிரி காசு கொடுக்கலையா. உங்களுக்கெல்லாம் நான் ஒரு ரூபாய்

எதிர்பார்த்தேன். ரிக்ல வேலை செய்றாங்க ஸார் கூட கொடுங்கன்னு கேட்டேன். வேலை செய்யறத பார்த்துக்குவோம்னு சொல்லிட்டாங்க."

"அதுக்கு என்னா ஸார் அர்த்தம்."

வேறு யாரோ கேட்டார்கள்.

"உள்ள வேலை செய்தா எழுவத்தஞ்சாயிரம். ரிக்ல வேலை செய்தா இருவத்தஞ்சாயிரம் கூட. ஒரு லட்சம்."

"ஏன் ஸார் அதை இப்பவே தர மாட்டேன்றாங்க."

"சந்தேகப்படறாங்க."

"என்னன்னு ஸார்."

"ரெண்டு வருஷத்துக்கு கையெழுத்து போட்டு உள்ள வந்து வேலை செய்வீங்களோன்னு. ரிக் தாங்க மாட்டாம மாத்திடு மாத்திடுன்னு கெஞ்சிடுவீங்களோன்னு பயப்படறாங்க."

"அங்க வேலை செய்யறது ஒண்ணும் கஷ்டமில்லை ஸார்."

"இப்போ தெரியாது தம்பி. போகப் போக வெய்யில் இன்னும் கொளுத்தும். இப்போ நாப்பது டிகிரி தானே. மெல்ல மெல்ல நாப்பத்தஞ்சு, நாப்பத்தாறு, நாப்பத்தேழுன்னு அம்பத்தோரு டிகிரி வரைக்கும் போகும். மூக்குலேர்ந்து ரத்தம் வரும். ரொம்ப வேதனையா இருக்கும்யா. கண்ணுல கடும் எரிச்சலை ஏற்படுத்தும்."

சாப்பிட முடியாது.எத்தினி தண்ணி குடிச்சாலும் தீராது. வயித்தால போகும். கடவுளே... என்னை விட்ருங்கன்னு நாலஞ்சுபேர் கதறியிருக்காங்க. மனுஷாளுக்கு மனுஷாள் வீராப்பு காட்டலாம். இயற்கையோட காட்ட முடியாதுய்யா. உடம்புல இருக்கற ஒவ்வொரு பார்ட்டும் ஒத்துழைச்சாதான் அந்த இடத்துல வேலை செய்ய முடியும். இயற்கை ஒவ்வொரு பார்ட்டுக்கும் சோதனை வைக்கும். எவ்வளவு தண்ணி குடிப்ப, எத்தனை தடவை ஒன்னுக்கு போவ. நிறைய பேருக்கு கொப்புளம் வருதய்யா. இன்னொன்னு சொல்லட்டுமா முடி உதிர்ந்து போகுது. வரும்போது கருகருன்னு மயிரோட வரான். நாலஞ்சு



மாசத்துல உதிர ஆரம்பிச்சுடுது. ஊருக்கு திரும்பி போறபோது வழுக்கையாவே போறாங்கயா."

"நான் விசாகப்பட்டணத்துல வேலை செய்தேன். அங்க நாப்பத்தஞ்சு டிகிரி வெய்யில் வரும் ஸார். அதைவிட கொஞ்சம் ஜாஸ்தி அவ்வளோதானே முடியெல்லாம் கொட்டலை ஸார்."

ஒரு தெலுங்கு பையன் சந்திரசேகரிடம் பேசினான்.

"ரெண்டு நாள் மூணு நாள்தான் நாப்பத்தஞ்சு டிகிரி இருக்கும். இங்க ஒரு மாசத்துக்கு அம்பது டிகிரி வெய்யில் இருக்கும். குட்டுக்கட்டி வரும். அடை அடையா வேர்குரு வரும். வாயில புண்ணு வரும். இதைத்தவிர இன்னொரு விஷயம் இருக்குய்யா. உங்களுக்கெல்லாம் தெரியுமான்னு தெரியலை. சாண்ட் ஸ்டார்ம் அடிக்கும். மண்புயல் அடிக்கும். திணறிடுவீங்க."

"அந்த நேரம் வேலை செய்யணுமா."

"வேலை செய்ய முடியாது. ரூமுக்குள்ளதான் இருக்கணும். கண்ணாடி ரூம்லேர்ந்து மண் புயலை பார்த்துகிட்டிருக்கணும். சில சமயம் ஒரு நாள் முழுக்க இந்தக் கூத்து இருக்கும். மனசு வெறுத்துப்போற நேரங்களை உங்களுக்கு கட்டிக்காட்டறேன். இந்த மனுஷாளோட சண்டைன்னா அந்த மனுஷாளோட சமாதானம் ஆயிடலாம். ஆனால் இயற்கையோட சண்டைன்னா ஒண்ணுமே பண்ணமுடியாது."

"நாங்க இதுக்கெல்லாம் பயப்படலை ஸார்.நாங்க ரிக்குலயே வேலை செய்யறோம், கூட காசு கேட்டு வாங்கித்தாங்க ஸார்."

யாரோ சொல்ல கமலக்கண்ணன் ஆவலாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அது எங்கிட்ட இல்லை. உங்ககிட்ட இருக்கு. நீங்க கஷ்டப்பட்டு வேலை செய்யிறதா சொல்லிட்டீங்கன்னா அதை நான் அங்க கொண்டு போய் சொல்லுவேன். அவன் வேலை செய்து காட்டுங்கன்னுதான் சொல்லுவான். நாம வேலை செய்து காட்டணும். ஆறு ரிக்லேர்ந்து பைப் போட்டுக்கிட்டு போகணும். மொத்தம் ஆறாயிரத்து சொச்சம் மீட்டர். மெயின்

பைப். வெறும் குருடாயில் பைப். இதுக்கப்புறம் டாங்க். டாங்க்லேர்ந்து ஃபாக்டரி. பதினாலு மாசத்துல முடிக்கணும். பைப் கொண்ணாந்து இறக்கிட்டான். பார்த்தீங்களா. அந்த பைப்புக்கு நடுவுல கேஸ்கட் போட்டு போல்ட் நெட் போட்டு இறுக்கிக்கிட்டு போயிட்டேயிருக்கணும். அங்கங்க ஸாலினாய்ட் வால்வ், யு பெண்ட், டி பெண்ட்டுன்னு நிறைய போகும். நாலரை மணிக்கு எழுந்து ஆறு மணிக்கு ஸ்பாட்ல இருங்கய்யா ஆறுலேர்ந்து பத்து வரைக்கும் பிசாசமாதிரி வேலை செய்யணும். பத்து மணிக்கு ரூமுக்கு போய் படுத்துகிட்டு தூங்கிடலாம்.

பிறகு நாலு மணிக்கு ஆரம்பிச்ச ராத்திரி பத்து மணி வரைக்கும் செய்யலாம். என்ன சொல்றீங்க. வெய்யில் நேரத்துல வேலை செய்ய வேணாம். ரெண்டு வேளையும் சரியா வேலை செய்தோம்னா பதினாறு மாசத்துக்குள்ளயே முடிச்சுடலாம். லீவு போட முடியாது. உள்ள சிட்டிக்கு கூட போக முடியாது. இங்கயே பிசாச மாதிரி வேலை செய்ய வேண்டியிருக்கும்.

எண்ணெய் வயலைவிட்டு தள்ளி போயிட்டோம்னா மடமடன்னு பைப் போட்டுகிட்டே போயிடலாம், உங்களுக்கு தம் பிடிச்சு வேலை செய்ய முடிஞ்சா. உச்சி வெய்யில் பன்னெண்டுலேர்ந்து நாலு வரைக்கும். அப்போ உள்ள வந்து பதுங்கிக்கோங்க."

எண்ணெய் வயலுக்கப்பால் தகர கூடாரம். மேற்கூரைக்குக் கீழே மரத்தடுப்பு. சுவர் முழுவதும் பிளாஸ்டிக் தகடுகள். இரண்டு ஏ.சி. தரையில் கார்ப்பெட் கட்டில், மெத்தை இரண்டு தலையணை. ஒரு தகர கூடாரத்திற்கு மூன்று பேர். ஏழு தகர கூடாரங்கள் இருந்தன. ஆனால் பதினெட்டு பேர்தான் வேலை செய்தார்கள். இரண்டு இன்ஜினீயர்கள் தனித்தனியே கூடாரத்தில் தங்கிக் கொள்ள மற்றவைகள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. கமலக்கண்ணன் அங்கே குடியேறினான்.



## 40

எண்ணெய் வயலிலிருந்து தகர கூடாரம் அரைகிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. காலையில் நாலரை மணிக்கு சுக்கிரன் உதிக்கும் வேளையில் எழுந்திருந்து கைகளை விரித்து சுவாசப் பயிற்சி செய்து விட்டு சற்று நேரம் குதித்து உடம்பை லேசாக்கிக் கொண்டு வெதுவெதுப்பான நீரில் குளித்து விட்டு ஆயில் கரைபடிந்த ஏப்ரான்களை தோளில் போட்டுக் கொண்டு எண்ணெய் வயல் நோக்கிப் போக அங்கே தயாராக இருந்த சந்திரசேகர் வரவேற்றார். வேறு சில அமெரிக்க இன்ஜினீயர்களும் வேகமாக வந்து இறங்கினார்கள்.

பாலைவனத்தின் மேடுபள்ளம் உள்ள பகுதிகளைப் பார்த்தார்கள். கோடுகள் போடச் சொன்னார்கள். அங்கங்கே குழாய்களை இறக்கச் சொன்னார்கள். புல்டோசர்கள் மண்ணில் புதையப் புதைய நகர்ந்து போய் குழாய்களை உருட்டிக் கொண்டு போய் சரியான இடத்தில் நிற்க வைத்து இரண்டு குழாய்களுக்கு நடுவே எதுவும் கசியாமல் இருக்க கேஸ்கட் என்கிற மெல்லிய தோலால் ஆன பட்டையை மாட்டி ஷெல்லாக் என்கிற கருப்புப் பெயிண்ட்டை தடவி போல்டுக்குள் நட்டை நுழைத்து திருகி சின்ச்சால் இறுக்கி பதினான்கு போல்டும் நெட்டும் இணைத்த பிறகு அடுத்த குழாய்க்கு நகர்ந்து அந்தக் குழாயையும், இந்தக் குழாயோடு இணைத்து போய்க் கொண்டேயிருக்க வேண்டும். அறுபது பேரில் ஐந்து பேருக்கு எண்ணெய் வயலில் நடு மத்தியில் வேலை. பதினைந்து பேரில் ஐந்தைந்து பேராக குழாயை மாட்டிக் கொண்டே போக வேண்டும். ஒரு குழாய் மாட்ட இருபது நிமிடமாகும்.

நடுவே ஒரு மலையாளி இளைஞன் ஃப்ளாஸ்கில் ஜூஸ் கொண்டு வருவான். தயிர் கொண்டு வருவான். பார்லி வாட்டர் கொண்டு வருவான். ஆப்பிளும், அன்னாசியும், சாத்துக்குடி களைகளும் கலந்தவைகளை ஒரு கிண்ணத்தில் கொண்டு வருவான்.

பத்து மணிக்கு புல்டோசர்களில் ஏறினார்கள். அதில் உட்கார்ந்து தகர கூடாரம் திரும்பினார்கள். சகலமும் களைந்து போட்டு விட்டு போய் உட்கார்ந்து இட்லி பொங்கல் சாப்பிட்டார்கள். ஏ.சியையும், மின் விசிறியையும் முழு வேகத்தில் சுழல விட்டு விட்டு மல்லாந்து படுத்துத் தூங்கினார்கள். டி.வி. பார்த்தார்கள். பாட்டு பாடினார்கள். ரேடியோ கேட்டார்கள். எல்லோரிடமும் வாக்மேன் இருந்தது. அவரவர் வாக்மேனை காதில் மாட்டிக்கொண்டு தலையை ஆட்டிக்கொண்டிருந்தார்கள்.

மூன்றரை மணிக்கு முகம் கழுவி பாடி ஸ்ப்ரே போட்டு மறுபடியும் எண்ணெய் ஏப்ரான் போட்டு தோளில் ரிஸ்ச் போட்டுக் கொண்டு புல்டோசர் ஏறி எந்த இடத்தில் பைப் லைன் முடிகிறதோ அங்குபோய் இறங்கினார்கள். மறுபடியும் குழாயை உருட்டி வந்து கோர்த்தார்கள்.

கமலக்கண்ணனுக்கு கூடாரத் தோழர்களாய் வெங்கடகிருஷ்ணன், மணிமாறன் இரண்டு பேர் இருந்தார்கள்.

மணிமாறன் மதுரைக்காரன். வெங்கடகிருஷ்ணன் தஞ்சாவூர் ஆள். மணிமாறனுக்கு திருமணமாகியிருந்தது. மனைவியின் மீது கரைகாணாத மோகம் இருந்தது.

வெங்கடகிருஷ்ணனுக்கு காதலி இருந்தாள். ஆனால், அவன் துபாய்க்கு போவதை சிறிதளவும் விரும்பவில்லை என்று சொல்லிவிட்டாள். நான் வேண்டுமா துபாய் வேண்டுமா என்று அவள் கேட்க அவன் துபாய் என்று தீர்மானம் செய்து இங்கு வந்து விட்டான்.

அவனுக்கு இங்கு எல்லா விஷயங்களும் மிரட்சியாகவே இருந்தன. அவளைப் பிரிந்து வந்ததாலா அல்லது அவள் புறக்கணித்து விட்டதாலா என்பது தெரியவில்லை. அவனிடமிருந்த எல்லா கேஸட்டுகளுமே சோகப் பாடல்களாக இருந்தன.

டேப்ரிக்கார்டர் அழுதபோது மனம் கரைந்து போயிற்று. பூரணியின் ஞாபகம் அதிகம் வந்தது. இது வேலையை குலைத்துவிடுமோ என்று கமலக்கண்ணன் பயந்தான். மணிமாறனோடு பேசவும் தயக்கமாக இருந்தது. மணிமாறனிடம் வெகண்டை அதிகமாக இருந்தது. பெண்களை வெறும்



போகப் பொருளாகவே நினைக்கின்ற ஆளாய் இருந்தான். அவன் மனைவியை அவன் திருமணம் செய்து கொள்ளக் காரணம் அவளுக்கு மூன்று தங்கைகள் என்று சொன்னபோது கமலக்கண்ணனால் அதை ரசிக்க முடியவில்லை. பதினைந்து நாட்கள் அங்கு வேலை செய்த பிறகு ஒரு நாள் ஓய்வு கிடைத்தது. வேலையின் தன்மை அதற்குள் பிடிப்பட்டு போய்விட்டது.

அவர்கள் நினைத்ததை விட அதிகமான குழாய்களை நிறைய இணைப்பு கொடுக்க முடிந்தது. அமெரிக்க இன்ஜினீயர் வந்து ஒவ்வொரு இடமாக தட்டிப்பார்த்து விட்டு, ஒரு குழாயை பிரிக்கச் சொல்லி பார்த்து விட்டு சோதனை செய்தான். இன்னும் ஷெல்லாக் அதிகம் தடவு என்று உத்தரவிட்டான்.மற்றபடி மிகச் சரியாக வேலை இருக்கிறது என்று சந்திரசேகரனைப் பாராட்டினான்.

விடுமுறையை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கம்பெனி வேனில் ஏறி துபாய் சுற்றிப்பார்த்தார்கள்.

டெலிபோன் கார்டு வாங்கிக் கொண்டார்கள். தெருமுனையிலுள்ள டெலிபோன் பூத்தில் நின்று கார்டு சொருகி விட்டு அவரவர் வீட்டிற்கு தொலைபேசியில் பேசினார்கள்.

முதலில் பூரணியின் வீடு போட்டான். கிடைக்கவில்லை. பிறகு தன் வீடு போட்டான். அம்மாதான் டெலிபோன் எடுத்தாள்.

அவன் பெயரைச் சொன்னவுடன் ஆ... ஊ... என்று என்ன செய்வது என்று தெரியாமல் மகிழ்ச்சியில் கத்தினார்கள்.

"என்னடா... எப்படி இருக்கற" என்று கேட்டாள்

அவன் பதில் சொன்னான். அப்பாவை அக்காவை நலம் விசாரித்தான்.

"பூரணி வந்துதா" என்று ஆவலாகக் கேட்டான்.

"அது எங்க வந்தது. அவங்க அப்பாதான் வந்தாரு. நீ என்னமோ டப்பா கொடுத்தனுப்பினேன்னு சொல்லிட்டு. ஏண்டா அந்த டப்பாவை எங்களுக்கு அனுப்பினா நாங்க வாங்கிக்க மாட்டோமா. யாரோ மலையாளத்தார் கொண்டு வந்து

கொடுத்தாராமே. அந்த மலையாளத்தாரை நம்ம வீட்டுக்கு அனுப்பறது."

"அவங்க வீடு ஏர்போர்ட்கிட்ட இருக்குமா. மலையாளத்தார் வீடு தேடிவந்து கொடுக்க மாட்டாரு. நாமதான் அங்க போய் வாங்கிக்கணும். காலங்கார்த்தால நீங்க அங்க போய் நின்னு கஷ்டம் எதுக்குன்னு சொல்லிட்டுதான் நான் அவங்ககிட்ட கொடுத்தனுப்பினேன். அது உங்களுக்குன்னு கொடுத்ததுகூட இல்ல. அவங்களுக்கு கொடுத்ததுதான்."

"எங்களுக்கு கொடுத்தது இல்லையா. அப்புறம் ஏன் அந்தாளு இங்க கொண்ணாந்து கொடுத்தாரு."

"ஏதோ ஒரு அன்புல கொடுத்திருப்பாரு. என்னா அதுக்கு இப்போ. நீ போனியா பூரணி வீட்டுக்கு."

"நான் என்னத்துக்குடா போகணும். இங்க உங்க அக்கா ஆ... ன்னு கத்தி சத்தம் போட்டு அவரை திருப்பி அனுப்பிடுக்க."

"அக்காவை ஏன் பேசவுடற."

அவன் கோபத்தில் சீறினான்.

"அவங்களுக்கும் நமக்கும் என்ன சம்மந்தம். அவளை வீட்டை விட்டு முதல்ல வெளியே போகச் சொல்லு. வேலையில்லாம அந்த நாய் இங்க வந்து ஏன் தொந்திரவு பண்ணுது. இனிமே அவ நம்ம வீட்டுக்கு வரக்கூடாது. கல்யாணம் பண்ணி கொடுத்தாச்சு இல்ல. போகச் சொல்லு அந்த நாய."

மறுபடியும் கோபமாகப் பேசினான்.

அவன் நண்பர்கள் மற்ற தொலைபேசியிலிருந்து அவனை திரும்பிப் பார்த்தார்கள். கோபத்தை குறைத்துக் கொண்டான். பனிச்சென்று போனைத் துண்டித்து விட்டு பூரணியின் வீட்டிற்கு இப்பொழுது முயற்சி செய்தான்.

பூரணியின் அம்மா எடுத்தாள்.

"என்னம்மா எங்க வீட்டோட ஏதாவது பிரச்சினையா."

"அதெல்லாம் ஒன்னும் இல்லீங்க. நீங்க அனுப்பினதை நமக்குன்னு வச்சுக்காத எங்க வீட்டுக்காரர் தான் பெருசா



கொண்டு போய் அங்க கொடுக்கலாம்... அங்க கொடுக்கலாம்னு கொடுத்தாரு. நான் அப்பவே சொன்னேன். வேணாம், அவங்களுக்கு கோவம் வரும்னு. நீ என்னாடி சொல்றது. நான் என்னடி கேட்கறதுன்னது போனாரு. மாட்டிகிச்சு, பொம்பளைக்கு தெரியாதா பொம்பளைங்க எப்படின்னு."

"என்ன கோவமாம்?"

கவலையோடு கேட்டான்.

"இதெல்லாம் மனசுல போட்டுக்காதீங்க விட்ருங்க."

"இல்லை தயவு செய்து சொல்லுங்க. என்ன கோவம்னு சொல்லுங்க."

"துபாய்லேர்ந்து பொருளை வாங்கி ஏன் அங்க அனுப்பனீங்க. ஏன் எங்களுக்கு அனுப்பலை. நாங்க முக்கியமா, அவங்க முக்கியமா இதுதான் மறைமுகமா சொன்னது. ஆனா, நேரடியா பேசினது வேற. ஏன் உன் பொண்டாட்டிய கூட்டிட்டு வரலை. ஏன் உன் பொண்ண கூட்டிகிட்டு வரலைன்னு ஆத்திரமா கேட்டிருக்காங்க."

"ஏன் நீங்க போகலை மாமி."

"நான் எதுக்குப்பா போகணும். போனா என்ன சொல்லு வாங்களோன்னு ஒரு பயம்தாம்ப்பா காரணம்."

"எனக்கு புரியுது மாமி. நான் இதேமாதிரி இன்னொரு செட் யார் மூலமாவது எங்க வீட்டுக்கு கொடுத்தனுப்பறேன். பத்து நாளைக்குள்ள அனுப்பிடறேன். நீங்க சும்மா ஒரு தடவை போய் பார்த்துட்டு வாங்க."

"ஏம்ப்பா... வேணாம்ப்பா..."

"தயவு செய்து எனக்காக போயிட்டு வாங்க. அவங்க முகம் என்னான்னு உங்களுக்கும் தெரியட்டும். எனக்கும் புரியட்டும்."

"உங்களுக்கு புரியாததா உங்க வீடு. அவங்களுக்கு ஏதாவது ஒரு காரணம் வேணும் நான் மூட்டிவிட்ட மாதிரி ஆகும்ப்பா."

"அதெல்லாம் ஆகாது. நீங்களும் பூரணியும் ஐயாவோட ஒரு தடவை போயிட்டு வாங்களேன்."

"சரிப்பா. உன் பேச்சுக்கு கட்டுப்பட்டு போறேன்."

"கொஞ்சம் கூட பயப்படாதீங்க. பூரணி என் சொத்து. அவ என் பொண்டாட்டி. அவளை கண்ணுக்குள்ள வச்சு காப்பாத்து வேன்."

"அங்க வேலை எப்படி இருக்கு. சம்பளம் முடிவாகலைன்னு சொல்லிட்டு போனீங்களே. முடிவாயிடுச்சா."

"ஆங்... எழுவத்தஞ்சாயிரம். ஒத்த பைசா செலவில்லை. சம்பாதிக்கற காசை அப்படியே சேர்த்து வைக்கலாம். சாப்பாடு, துணிமணி, சோப்பு, டவல், தலைக்கு எண்ணெய் எல்லாமும் அவங்க தராங்க."

"வெய்யில் கஷ்டமாப்பா."

"இப்போதைக்கு இல்லை. ஆனா, கஷ்டமாகுமாம். உடம்புல கட்டி வருமாம்."

"குல்கந்த் சாப்பிடுங்களேன். அது குளுமை."

"அவங்க சொன்னாங்க. இங்கு துபாய்ல வாங்கிட்டு போக ணும்னாங்க. நான் வாங்கிட்டு போகப் போறேன். பூரணி இல்லீங்களா."

"சீனுவாசய்யர் வீட்டுக்கு போச்சு இதோ வருது... இதோ வருது..."

எதனாலோ உந்தப்பட்டு வீட்டிற்கு ஓடிவந்த பூரணி அம்மா கூவுவதைப் பார்த்து இன்னும் வேகமாக ஓடிவந்து போனை கையில் எடுத்துக் கொண்டாள்.

அவளால் பேசமுடியவில்லை. மூச்சிரைத்தது.

"என்னாங்க எப்படி இருக்கீங்க?" என்று கேட்டாள். அவன் கொஞ்சினான். அவள் கிறங்கினாள்.

முப்பது திராமுக்கு வாங்கிய டெலிபோன் கார்ட் அவ்வளவு தான் சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள் என்று அச்சுறுத்தியது.

அவன் பேச்சை முடித்துக் கொண்டான். அயர்ச்சியோடு வெளியே வந்தான்.

"என்னம்மா சொன்னாரு. என்னம்மா சொன்னாரு."



அம்மாவை அவள் சுற்றிக்கொண்டாள்.

"அவங்க வீட்டுக்கு போய் பார்க்க சொல்றாருடி. உன்னை யும் என்னையும் பார்க்க சொல்றாரு. அவங்க வீட்டுக்கு நம்ம வீட்டுக்கு அனுப்பினா மாதிரியே துபாய்லேர்ந்து வாசனைப் பொருள் அனுப்பறாங்க. பத்து நாளைக்குள்ள போயிடுமாம். நம்மள அதுக்கப்புறம் போய் பார்க்க சொல்றாரு. என்னதான் அவங்க புத்தின்னு நீங்க தெரிஞ்சுகோங்க. நானும் புரிஞ்சுக்க றேன்றாரு. நான் உங்க பொண்ணை கண்கலங்காம காப்பாத்து வேன் கவலைப்படாதீங்கன்னு சொல்றாரு."

பூரணிக்குள் சந்தோஷம் வந்தது. கவலையும் ஏற்பட்டது.

*"காதல் சிறகை காற்றினில் விரித்து*
*வானவீதியில் பறக்கவா..."*

அவள் பாட ஆரம்பித்தாள்.

கொல்லைப்புறத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

*"பிரிந்தவர் மீண்டும் சேரும் பொழுது*
*அழுதால் கொஞ்சம் நிம்மதி*
*பேச மறந்து சிலையாய் இருந்தால்*
*அதுதான் காதல் சன்னதி"*

என்று உரக்கப் பாடினாள்.

பிரிந்தவனை மறுபடியும் சேர்ந்து விட்டோம் என்பது போல் மனதில் நினைத்துக் கொண்டாள். அவனோடு கைகோர்த்துக் கொண்டாள். தோள் உரசினாள். முகத்தோடுமுகம் வைத்து தேய்த்துக் கொண்டாள். மெல்ல அவன் உதட்டில் முத்த மிட்டாள். மானசீகமாய் அவள் புருஷனுக்கு அருகே உட்கார்ந்து கொண்டு அவனை கொஞ்சித் தீர்த்தாள்.

"என்ன அவஸ்தை இது. போ."

பூரணியின் அம்மாவிற்கு குரல் நடுங்கியது.

"இன்னும் ஒன்றரை வருஷம்டி. இன்னும் ஒன்றரை வருஷம் எப்படி தாங்கப்போற."

தாயின் உள்ளம் பெரிதாய் கூக்குரல் எடுத்து அழுதது.

அவனை பிரிஞ்சு இருக்கற தொந்தரவு போறாதுன்னு அவங்க வீட்டு மனுஷாளை சமாதானப்படுத்தனும். அவங்களுக்குன்னு டான்ஸ் ஆட்டம் ஆடனும். என்னதான் செய்வா ஒரு பொம்பளை சொல்லு.

எம்ப்பா... நீ பாட்டுக்கு எங்கயோ போயிட்ட. இங்க நாங்க அவஸ்தைப்படறோம். பாவம். அவனுக்கும் தான் அவஸ்தை. என்ன வேலையோ, என்ன வெய்யிலோ. என்ன சாப்பாடோ யார் நல்லவங்களோ யார் கெட்டவங்களோ தடுமாறித் தடுமாறி அதுவும் அவஸ்தை பட்டுகிட்டிருக்கும். அதுவும் ஏக்கம் பிடிச்சு அலைஞ்சுகிட்டிருக்கும். இங்க உட்கார்ந்து இது பாட்டு பாடற மாதிரிதானே அவனும் பாடிகிட்டிருப்பான்.

அவனுக்கும் பாட்டு வந்தது.

துபாயில் நீண்ட கடற்கரை ஓரம் நடப்பதற்கென்றே பெரிய நடைபாதையும் உட்காருவதெற்கென்றே நடைபாதையை ஒட்டி சிமெண்ட்டுக் கரையும் இருந்தது. பர்தா அணிந்த பெண்களும் அரேபிய ஆண்களும் ஜோடி ஜோடியாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இந்தியர்களும் தங்கள் குடும்பத்தோடு அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. நடுநடுவே தமிழும், தெலுங்கும், ஹிந்தியும் கேட்டன.

"என்னை யாரென்று எண்ணி எண்ணி
நீ பார்க்கிறாய்
இது யார் பாடும் பாடலென்று
நீ கேட்கிறாய்..."

அவன் பாடத்துவங்கினான்.

"நான் அவள் பேரை தினம் பாடும்
குயிலல்லவா
என் பாடல் அவள் தந்த
மொழியல்லவா..."

என்று உள்ளம் குழைந்து உரத்த குரலில் பாடினான்.



யாருக்குத் தெரியப் போகிறது. தமிழ் என்று பாட இரண்டு மூன்று பேர் நகர்ந்தவர்கள் நின்றார்கள். திரும்பினார்கள். அருகே வந்து நின்று கொண்டார்கள்.

அவன் பாட்டை நிறுத்தினான். "பாடுங்க, நல்லாயிருக்கு குரல் பாடுங்க."

ஒருவன் தமிழில் சொன்னான்.

"நீங்களும் தமிழா."

"ஆமாம்."

"எனக்கு அவ்வளவு நல்லா பாட வராது."

"இது போதுங்க. இது கூட எங்களால பாடமுடியலை."

"நீங்களெல்லாம் யாரு."

"அது ஒண்ணும் முக்கியமில்லை. உங்களை மாதிரியே ஊரை விட்டு, வீட்டை விட்டு ரொம்ப தூரம் பிரிஞ்சு இங்க தனியா அல்லாடறவங்க. அதனாலதான் கேட்கறோம் பாடுங்க."

"நான் மலரோடு தனியாக
ஏன் இங்கு நின்றேன்
என் மகராணி உனக்காக
ஓடோடி வந்தேன்
நீயில்லாமல் யாரோடு உறவாட வந்தேன்
உன் இளமைக்குத் துணையாக
தனியாக வந்தேன்..."

என்று அவன் பாட அவர்களில் ஒருவன் சேர்ந்து கொண்டான்.

அவனுக்கும் குரல் நன்றாக இருந்தது. ஸ்ருதி பிசகாமல் இருந்தது.

யாரோ இரண்டு பேர் காயல் பட்டணத்து இஸ்லாமியர்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். இங்கு நகை கடையில் வேலை செய்கிறோம். என்றார்கள். தமிழ்பாட்டு கேட்டு நின்றோம் என்று கைகூப்பினார்கள்.

"பாடுங்க தம்பி" என்று மத்திம வயது தாண்டிய அவர்கள் அருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

## 41

அருகே வந்து உட்கார்ந்தவர்களை கமலக்கண்ணன் வியப்போடு பார்த்தான்.

"நாங்க ஏதோ காதல் ஏக்கம் பிடிச்ச பாட்டு பாடறோம்" முதலில் வந்த இளைஞன் பேசினான்.

"அதே ஏக்கம் எங்களுக்கும் இருக்கு. என்ன வயசாச்சே நாப்பது வயசு ஆளா இருக்கானேன்னு பார்க்கறிங்களா, பொண்டாட்டிய பார்த்து மூணு வருஷமாச்சு.ரெண்டு பொம்பளை புள்ளேங்க. மூணு வயசுல ஒரு பையன் இருக்கான். ஊருக்கு போகலாம் தான். போனா காசு செலவு. அந்தக்காசை கைமாத்தி அனுப்பினோம்னா அங்க அவளுக்கு உபயோகமாகும். அதனால பல்லை கடிச்சுகிட்டு பொறுத்துகிட்டிருக்கோம். என்ன வயசா னாலும் நெஞ்சுக்குள்ள காதல் இருக்குய்யா. அது ஒண்ணும் செத்துப்போகலை."

சொல்லும்போது அந்த நாற்பது வயது நகைக் கடைக் காரருக்கு நாக்கு தழுதழுத்தது. கண்ணில் நீர் கட்டியது.

கமலக்கண்ணன் சட்டென்று மெல்ல அவரை அணைத்துக் கொண்டான்.

காதலுக்கும் வயசுக்கும் என்ன சம்மந்தம் என்று முதலில் சந்தித்த இளைஞன் உரக்கச் சொன்னான்.

எல்லோரும் கமலக்கண்ணன் பாட்டுக்குக் காத்திருந்தார் கள்.

*"விழியே கதையெழுது,*
*கண்ணீரில்... எழுதாதே*
*மஞ்சள் வானம்,*
*தென்றல் காற்று,*
*உனக்காகவே நான் வாழ்கிறேன்"*



அவன் பாட பலபேருக்கு மனம் வேதனையில் வெதும்பிற்று.

பிரிவுத் துயரத்தில் அலைகழிந்தது. அவரவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு தனித்தனியே ஆனால், நெருக்கமாக அவன் பாட்டை கேட்கும் தூரத்தில் நின்று கொண்டிருந் தார்கள்.

எங்கோ கடல் பார்த்து மனதை அலைய விட்டுக் கொண் டிருந்தார்கள்.

*"கண்கள் இரண்டும் விடிவிளக்காக*
*கட்டழகு மட்டும் வெட்ட வெளியாக*
*கைகள் இரண்டும் தொட்ட சுகமாக*
*கலந்திருப்போமே யுகம் யுகமாக..."*

என்று சொல்ல பலபேருக்கு உடம்பில் முறுக்கேறியது. சோம்பல் முறித்தார்கள்.

"பின்னி எடுக்கறீங்க தம்பி. பொண்டாட்டிக்கு போன் போட்டு கொஞ்சிக் கொஞ்சி கன்னாபின்னான்னு பேசினாதான் மனசு ஆறும். இன்னொரு பாட்டு பாடுங்க. ஆனா, அழுகையா இருக்கக் கூடாது. துள்ளலா இருக்கணும். அழுது அழுது போர் அடிச்சடுச்சி. இப்படி எதனா பாட்டுப்பாடி உற்சாகப் படுத்திக்கணும்."

காயல்பட்டணத்து முஸ்லிம் கட்டளை போலும் உரத்த குரலில் சொல்ல அவன் யோசித்தான்.

*"அவளுக்கென்ன..."*

யாரோ அடியெடுத்துக் கொடுத்தார்கள்.

எல்லோருக்கும் அந்தப்பாட்டு பிடித்துவிட்டதென்று அவர வர் சைகையில் தெரிந்தது.

*"அவளுக்கென்ன அழகிய முகம்*
*அவனுக்கென்ன இளகிய மனம்*
*நிலவுக்கென்ன இரவினில் வரும்*
*இரவுக்கென்ன உறவுகள் தரும்..."*

என்று பாட அத்தனைபேரும் கைகொட்டி ஆரவாரத்தோடு கமலக்கண்ணனுடன் சேர்ந்து பாடத் துவங்கினார்கள்.

"ஆயிரம் அழகியர் பார்த்ததுண்டு
ஆனால் அவள்போல் பார்த்ததில்லை
வா... வா... என்பதை விழியில் சொன்னாள்
மவுனம் என்றொரு மொழியில் சொன்னாள்"

கிட்டத்தட்ட ஆட்டமும், பாட்டமுமாய் நடந்து போகிறவர்கள் திரும்பிப் பார்க்கும் வண்ணம் அந்த கும்பல் மிகச் சந்தோஷமாய் இருந்தது.

ஒரு முறைக்கு இரண்டு முறை அந்தப் பாட்டைப்பாடி அவர்கள் அனுபவித்தார்கள். அவரவர் நெஞ்சக்குள்ளே அவரவருக்குப் பிடித்த பெண்மணி நடனமாடிக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.

காயல்பட்டணத்துக்காரர்கள் கை கூப்பினார்கள்.

"வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமை இங்க வந்துருங்களேன். பேசுவோம்."

"நான் பதினைஞ்சு நாளைக்கு ஒரு தடவைதான் வர முடியும்."

"புரியுது. ஒரு வெள்ளிக்கிழமை விட்டு ஒரு வெள்ளிக்கிழமை வாங்களேன். ரிக்ல வேலை செய்யறீங்களா. ரிக்ல வேலை செய்யறவங்களுக்கு பதினைஞ்சுநாள் தான். எவ்ளோ சம்பளம் வாங்கறீங்க."

"எழுவத்தஞ்சு ரூபா."

"நல்ல சம்பளங்க. யார் கொடுக்கறா. கவர்மெண்ட்டா, இல்லையே. கவர்மெண்ட்ல இவ்வளவு சம்பளம் வராதே."

அவர்களுக்குள்ளாகவே பேசிக் கொண்டார்கள்.

அவன் அமெரிக்க கம்பெனி பெயரைச் சொன்னான்.

"அதானே பார்த்தேன். சம்பளம் நல்லா தூக்கலாத்தான் இருக்கு. ஜாக்கிரதையா வச்சுக்கோங்க தம்பி. செலவு பண்ணி



டாதீங்க. இந்தாங்க எங்க அட்ரஸ். ஊருக்குப் போறபோது வாங்க. நான் நகை வாங்கித் தரேன்."

"ஐயா... அடுத்தவாரம் ஊருக்கு எதுனா சாமான் அனுப்பணும்னா உங்க மூலமா அனுப்பமுடியுமா."

"தினம் தினம் போயிட்டு வராக. என்ன அனுப்ப போறீக. தப்பா எதுவும் இருக்காது இல்ல."

"இல்லீங்க. பவுடர், செண்ட்தான்."

"அதை அனுப்பிடலாம். ஒரு பேக்ல போட்டுக்கொடுங்க"

"நாளைக்கு கொண்ணாந்து கொடுத்தா இருப்பீங்களா."

"நிச்சயமா இருப்போம். நாளைக்கு வந்துடுங்க."

அவன் எல்லோரிடமும் விடை பெற்றான்.

சூப்பர் மார்க்கெட்டுக்குப் போனான்.

அம்மாவுக்கு, அக்காவுக்கு, மாப்பிள்ளைக்கு இரண்டு மூன்று செண்ட் பாட்டில்கள் வாங்கினான்.

சின்னச் சின்ன பொம்மைகள் எடுத்தான். பஞ்சு சுருட்டி அட்டைப் பெட்டிக்குள் வைத்துக் கொடுத்தார்கள்.

சாக்லெட்டும், பிஸ்கெட்டும் ஒரு பையில் போட்டு சந்திரசேகர் வீட்டிற்குப் போய் மணி அடித்தான்.

சந்திரசேகர் வெளியே வந்தார்.

"வாய்யா... என்று வாய் நிறைய கூப்பிட்டார்."

"இல்லை ஸார். தொந்தரவு பண்ண விரும்பலை. இந்தப் பைய இந்த அட்ரஸ்ல கொடுத்துட்டீங்கன்னா மெட்ராஸுக்கு போயிடுமாம். ஒரு நண்பர் சொன்னாரு."

"என்னய்யா இருக்கு உள்ள."

"வெறும் செண்ட் பாட்டில் தாங்க."

"நல்லது. நான் கொடுத்துடறேன். உன் பேர் சொன்னா போதுமா."

"போதுங்க. பாட்டுப் பாடிக்கிட்டிருந்தாரே அந்தக் கமலக்கண்ணன்னு சொன்னீங்கன்னா சந்தோஷமா வாங்கிப்பாரு."

"எங்கய்யா பாட்டு பாடிக்கிட்டிருந்தீங்க."

"பீச்சோரம் ஸார்."

"அடிசக்கை... கச்சேரி களைகட்டிடுச்சா. ஆள் சேர்த்துட்டியா."

"இன்னிக்குதான் பழக்கமானாங்க."

"சம்பளம் கேட்டிருப்பாங்களே."

"கேட்டாங்க ஸார்."

"துபாய்ல ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்துட்டா முதல்ல பேரு. அடுத்தது சம்பளம். ஜாதியெல்லாம் அப்புறம்தான். உன் சம்பளமும், என் சம்பளமும் ஒன்னா இருந்தா ஒரே ஜாதி. இல்லை, வெவ்வேற ஜாதி."

"அந்த மாதிரி பேசலை ஸார்."

"இனிமே பேசுவாங்க. எவ்ளோ சம்பளம் சொன்னே."

"எழுவத்தஞ்சு ரூபான்னு சொன்னேன்."

"அதுக்கு என்ன சொன்னாங்க"

"அடடே... நல்ல தூக்கலான சம்பளம்னு சொன்னாங்க."

"இல்லை. ஒரு ரூபா தருவாங்க. இப்போகூட அதான் பேசிகிட்டிருந்தோம். அவங்களுக்கு நம்ம வேலை பிடிச்சுருக்குய்யா. சௌதாமணி காபி கொண்டா."

அவனை ஹாலில் உட்கார வைத்து சந்திரசேகர், மனைவியிடம் காபிக்குச் சொன்னார்.

"இன்னும் வேகமா செய்ய முடியுமா. அதான் என் கவலை."

"இதுக்கு மேல வேகம்னா கூட ஆளுங்க வேணும் ஸார்."

"எத்தனை ஆளுங்க."

"இன்னும் ஒரு பேட்சு போடுங்க. இன்னொரு அஞ்சு பேர் இதை மாதிரி கவனமா தேர்ந்தெடுத்தீங்கன்னாக்க வேகமாயிடும் ஸார்."

"அமெரிக்கன் கம்பெனிய குவைத் அரசாங்கம் ஆறு மாசத்துல முடிச்சு தருவியான்னு கேட்டுது."

[library stamp: 5247006-2]



"ஸார். எப்படி ஸார் முடியும்."

"ஆள் எடுத்துக்கோன்னு சொல்லுதுய்யா."

"அப்போ இந்த மாதிரி ஒன்றரை மடங்கு ஆள் வேணுமே."

"ஆமாம்"

"ஒன்றரை மடங்கு ஆளுக்கும் வசதி வேணுமே."

"ஆமாம்."

"எப்படி ஸார் முடியுமா."

"முடியும். முடியணும். அடுத்த வாரம் இந்தியாவுல விளம்பரம் வரப்போகுதுய்யா, உங்களை மாதிரி ட்ரெய்னீஸ் வேணும்னு. இதெல்லாம் முடிஞ்சு ஆளுங்க வந்து இறங்கறதுக்கு மூணுமாசம் ஆகும். அதுக்குள்ள ஒரு குறிப்பிட்ட அளவு முடிச்சாகணும். முடிச்சிட்டா இன்னொரு வசதி இருக்கு."

"என்னங்க."

"வர ஆளுக்கு நீ சீனியரா போயிடுவ. சூப்பர்வைசரா போயிடுவ."

"அதுல என்ன ஸார் லாபம்."

"சம்பளம் ஜாஸ்திய்யா, ஆனா பெரும் பொறுப்பு எடுத்துக்கணும்."

"ஆளுங்க நல்லாயிருந்தா எடுத்துக்கலாம் ஸார்."

"நல்ல ஆளுங்களதான் அனுப்புவேன். நீ, வெங்கடகிருஷ்ணன், மணிமாறன் மூணுபேரும் மூணு பேட்சா பிரிஞ்சு வேலை செய்தீங்கன்னா நல்லாயிருக்கும்னு தோணுதுய்யா."

"வெங்கடகிருஷ்ணன் செய்துடுவார் ஸார். மணிமாறன் கொஞ்சம் விளையாட்டா இருக்கார்."

"விளையாட்டா இல்லை. அது மனைவியைப் பிரிஞ்ச துக்கம்."

"நாங்களும்தான் பிரிஞ்சு வந்திருக்கோம்."

"உன் பிரிவு வேற. அவன் பிரிவு வேற. வெங்கடகிருஷ்ணனுக்கு லவ் விவகாரம். உனக்கு இருக்கறது கல்யாணம்

நிச்சயமான பொண்ணு. ஆனா, மணிமாறன் மூணுவருஷம் குடித்தனம் பண்ணிட்டு வந்திருக்கான். கையில ஒரு குழந்தை இருக்கு. செத்துப் போயிடலாமான்னு தோணும்மாயா பிரிவு அவ்வளவு கஷ்டமா இருக்கும். அட... இந்தக் கடையா... அல் ஹசீனா... நஸீர்பாய் அங்கதானே வேலை செய்யறாரு."

திடீரென்று அவன் கொடுத்த விஸிட்டிங்கார்டை பார்த்து கூவலாக சந்திரசேகர் பேசினார்.

"உங்களுக்குத் தெரியுமா ஸார்."

"இங்க ஒரு அக்கவுண்ட்டண்ட் இருக்காருய்யா. நமக்குத் தெரிஞ்சவர்தான். நான் மெட்ராஸுக்கு ஏதாவது அனுப்பணும்னா கூட அவர்கிட்ட தான் கொடுப்பேன். சௌதாமணி நஸீர்பாய்க்கு போன் போட்டுக்கொடு."

அவர் மனைவி காபியை கொண்டுவந்து கொடுத்து விட்டு மடமடவென்று செல்போனைத்தட்டி விசாரித்து சந்திரசேகரிடம் நீட்டினாள். கிட்டத்தட்ட அந்த அம்மாள் ஒரு செகரட்டரி போல செயல்பட்டாள்.

காபி சரியாக இருந்தது.

"பசிக்குதா. ஏதாவது டிபன் சாப்பிடறீங்களா."

"ராத்திரி நேரம் எப்படிம்மா டிபன் செய்வீங்க?"

"ப்ரெட் தரேன்."

அந்த அம்மாள் சட்டென்று சமையல் அறைக்குள் போனாள்.

வறுத்த ரொட்டியும், வெண்ணையும், ஜாமும் கொண்டு வந்தாள்.

அப்பொழுதுதான் கமலக்கண்ணனுக்கு பசிக்கத் துவங்கியிருந்தது. அவன் ப்ரெட்டை ஆவலோடு உண்ணத் துவங்கினான்.

"நஸீர் பாய் எங்க இருக்கீங்க."



அந்த நண்பரை டெலிபோனில் தொடர்பு கொண்டு சந்திரசேகர் விசாரிக்க தான் இன்னும் அலுவலகத்தில் இருப்பதாகச் சொன்னார்.

"வெள்ளிக்கிழமையும் வேலை செய்யறீங்களா" என்று சொல்ல அவர் ஏதோ சமாதானம் சொல்வது காதில் விழுந்தது.

"ஒரு சின்ன பேக் மெட்ராஸுக்கு போகணும். புதுசா வந்திருக்கற நண்பர் வீட்டுக்கு அனுப்பறாரு. கொஞ்சம் உதவி பண்ணணும். ஒரு நிமிஷம் நஸீர்பாய். சௌதாமணி நீ ஏதோ பழைய நகைய திருப்பி கொடுக்கணும்னு சொன்னியே அதை வச்சருக்கியா. நஸீர்பாய் ஃப்ரீயா இருக்காராம். வீட்டுக்கு வரேன்றாரு."

"இந்நேரத்துக்கா. நான் எதுவும் பண்ணலையே."

"ஏதாவது பண்ணு சௌதாமணி."

"உப்புமா பரவாயில்லையான்னு கேளுங்க."

"நஸீர்பாய் இன்னிக்கு அம்மாவுக்கு ரெஸ்ட். உப்புமா பரவாயில்லையான்னு கேட்கறாங்க."

எதிர்ப்பக்கம் மறுபடியும் ஏதோ சந்தோஷமான குரல் கேட்டது.

தான் இன்னும் பத்து நிமிடத்தில் அங்கு வந்துவிடுவதாக அவர் சொல்ல சந்திரசேகரனும் கமலக்கண்ணனும் ப்ளான் விரித்துப்போட்டு இனி எப்படி செயல்பாடுகள் ஆரம்பிக்க வேண்டும் என்று பேசத் துவங்கினார்கள்.

வாசலில் அழைப்புமணி கேட்டது.

நடுத்தர உயரமாய், அகலமாய், லேசான தாடியுடன் உயரம் குறைவான முடியுடன் வட்டக்கண்ணாடியுடன் நல்ல சட்டையும், பேண்டுமாய் அணிந்தபடி ஒரு நண்பர் கைகூப்பி உள்ளே நுழைந்தார்.

"நஸீர்பாய் இது கமலக்கண்ணன்."

கமலக்கண்ணன் எழுந்து நின்று அவரைப் பார்த்து கைகூப்பினான்.

நஸீர்பாய் கைநீட்டினார். பற்றிக் குலுக்கினார்.

ஏனோ எந்தக் காரணமுமில்லாமல் நஸீர் பாயை அவனுக்குப் பிடித்துவிட்டது.

"இந்தப் பை, மெட்ராஸ் போகணும் அவ்வளவுதானே. சௌதாமணி அம்மா ஒரு ஸ்டாப்ளர் எடுத்துட்டு வாங்களேன்."

சந்திரசேகரின் மனைவி ஒரு ஸ்டாப்ளர் எடுத்து நீட்ட அந்த பிளாஸ்டிக் பையின் வாயை பிளிச் பிளிச் சென்று ஸ்டாப்ளரால் நஸீர்பாய் தைத்தார்.

"நாளைக்கு ராத்திரி ஃப்ளைட் ஓமன் ஏர்வேஸ் மஸ்கட்ல இறங்கி மாறணும். ரெண்டுநாள் டெல்லியில வேலை நாலு நாள் மெட்ராஸ்ல வேலை, மறுபடியும் வந்துடுவேன். பைய எங்க கொடுக்கணும்."

அவன் சைதாப்பேட்டை விலாசம் சொல்ல அந்த விலாசத்தை எழுதி அந்தப்பை மீது மறுபடியும் இன்னொரு ஸ்டாப்ளர் அடித்தார்.

அந்த விலாசம் இப்போது பையோடு ஒட்டிக் கொண்டிருந்தது.

"கொண்டுபோய் கொடுத்தவுடனே சந்திரசேகருக்கு போன் பண்றேன். சந்திரசேகர் உங்ககிட்ட சொல்வாரு. சந்தோஷமா. இது என் கடை அட்ரஸ். இது வீட்டு அட்ரஸ். பின்னாடி மெட்ராஸ் அட்ரஸ் இருக்கு" என்று கார்ட் நீட்டினார்.

"ரொம்ப நன்றிங்க. எப்படி சொல்றதுன்னே தெரியலை என்வீடு ரொம்ப சந்தோஷப்படும்."

"இதோ பாருங்க. ஊரைவிட்டு ஊர் வந்துருக்கோம். ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யத்தான் இவ்ளோ தொலைவு வந்திருக்கோம்னு எனக்கு படுது. இதெல்லாம் உதவியே இல்லை."

"கமலக்கண்ணன் அவசரத் தேவைக்கு வீட்ல ஏதாவது காசு கொடுக்கணும்னாலும் நஸீர்பாய் கொடுத்துடுவாங்க. அப்படி ஏதாவது சொல்லணுமா எண்ணம் இருக்கா."

"இல்லீங்க முதல் மாசம் சம்பளம் வாங்கி நான் வச்சுக்கணும்னு நினைக்கிறேன். அப்புறம்தான் வீட்டுக்கு."



"கரெக்ட் முதல் சம்பளம் உனக்கு ரிஸர்வ் பண்ணி வச்சுக்க. அதுக்கு அடுத்தது... அதுக்கு அடுத்ததெல்லாம் பேங்க் மூலமா மாத்திக்கோ. அதான் நல்லாயிருக்கும். ஒரு அவசரத்துக்கு நஸீர்பாயை பயன்படுத்திக்கலாம்."

அவர்கள் சிரித்தபடி உப்புமா சாப்பிட்டார்கள். பட்டாணி, சிறிய வெங்காயம், சின்னஞ்சிறு துண்டுகளாக நறுக்கிய பீன்ஸ், உளுத்தம்பருப்பு என்றெல்லாம் போட்டு உப்புமா படு பிரமாதமாக செய்யப்பட்டிருந்தது. உப்புமாவிற்கு தொட்டுக் கொள்ள தேங்காய் சட்டினியும் ஊறுகாயும், சர்க்கரையும் தனித் தனியாக வைக்கப்பட்டிருந்தன.

## 42

உப்புமா என்கிற இந்த உணவுப் பண்டத்தில் வெறும் உப்பு ருசி மட்டுமில்லை, ஒரு கம்பீரம் இருக்கிறது. பரிமாறுதலில் ஒரு நாகரீகம் இருக்கிறது. அமர்ந்து சாப்பிடும் இடத்தில் ஒரு சுத்தமும் உச்சகட்ட சவுகரியமும் இருக்கின்றன.

ஒரு மனிதர் இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் சம்பாதிக்க வேண்டும். அதற்கு கடுமையாக உழைக்க வேண்டும்.

இதோ சந்திரசேகருக்கு அழகான வீடு. அழகான மனைவி. தட்டு நிறைய உப்புமா. எல்லாம் கிடைத்திருக்கிறது. அதே போல் எனக்கும் வேண்டும். இந்த ஊரில் இரண்டு படுக்கை யறைகள் கொண்ட அழகான வீட்டில் இப்படி ஏ.சி. செய்யப் பட்ட இடத்தில் பூரணியோடு குடித்தனம் பண்ணவேண்டும். இதற்காக எவ்வளவு கஷ்டம் வேண்டுமானாலும் படலாம். எந்த வெய்யிலில் வேண்டுமானாலும் வேகலாம். உண்மையில் வெய்யிலே தெரியவில்லை. உழைப்பு களைப்பாகவே இல்லை. உண்மையில், களைப்பு ஏற்படுத்துவது வேலையில் லாத எதிர்காலம் பற்றிய நிச்சயமில்லாத ஒரு தனிமைதான்.

"உங்க ஆபீஸ் டெலிபோன் நம்பர் சொல்லுங்க, கொண்டு போய் கொடுத்துட்டு நான் போன் பண்றேன்."

நஸீர்பாய் அவன் போன் நம்பர் வாங்கிக்கொண்டு சந்திர சேகரிடமிருந்து விடைபெற்று போனார் கமலக்கண்ணனும் நஸீர்பாயுடன் புறப்பட்டான்.

நஸீர்பாய் அவனை கம்பெனி ஹெட் குவார்ட்டஸில் இறக்கி விட அங்கிருந்து, வண்டியேறி அபுதாபி எண்ணெய் வயலுக்குப் போனான்.

இங்கு வந்து இருபத்தைந்து நாட்கள் ஆகிவிட்டன. கிட்டத் தட்ட ஒரு மாதம். இன்னும் பதினேழு மாதத்திற்குப்பிறகு சென்னைக்குப் போகலாம். திருமணம் செய்யலாம். பூரணியை கட்டிக்கொண்டு கொண்டாடலாம். அப்படியே அள்ளிக் கொண்டு மறுபடியும் இந்த காம்பஸ் அருகே ஏதேனும் வீடு பார்த்து குடித்தனம் வைக்கலாம். அபுதாபி ஒரு அழகான நகரம். மிகமிக அமைதியான நகரம். துபாய் ஒரு சொர்க்க பூமி-ஷார்ஜா இந்தியர்களின் இருப்பிடம். வீடு வாங்கின கையோடு கார் வாங்கிவிட்டால் போதும். எல்லா இடங்களுக்கும் விடுமுறை நாட்களில் போய் வரலாம். மனைவி இருக்கிற சந்தோஷத்தில் கடுமையாக உழைக்கலாம். அதிகம் சம்பாதிக்கலாம், பொழிச்சலூரில் வீடு வாங்கலாம்.

இரண்டு வருடத்திற்குப் பிறகு ப்ளம்பிங் ஒர்க்ஸ் என்று போட்டு புதிய கட்டிடங்களுக்கு குழாய் இணைப்பு கொடுக்கின்ற வேலைகள் செய்யலாம். காண்ட்ராக்ட் எடுக்கலாம்.

அவன் கற்பனை செய்தபடியே தூங்கிப்போனான்.

அவனுடைய பை மறுநாள் விமானத்தில் கிளம்பிப் போயிற்று. இந்த மாதிரி மூன்று பைகளை ஒன்றாக ஒருதோள் பையில் போட்டு மார்புக்குப் குறுக்கே பட்டைகட்டிமாட்டி நஸீர்பாய் எடுத்துக்கொண்டு போனார். கிளம்புகின்ற வரையில் வேலை இருந்ததால் விமானத்தில் உணவுகூட மறந்துவிட்டு அயர்ந்து தூங்கினார். விமானத்திலிருந்து மேலே எட்டிப்பார்க்க கீழே அழகாய் கட்டிடங்கள் தெரிந்தன. பெங்களூர் வந்து விட்டது என்று புரிந்துவிட்டது. முகம் கழுவிக்கொண்டு டீ



கேட்டுவாங்கிக் குடித்தார். தோளில் பை மாட்டிக்கொண்டு இறங்கினார்.

விமானம் தரையிறங்கியது. அன்றைக்கு கஸ்டம்ஸ் கெடுபிடி அதிகம் இருந்தது.

"துபாய்ல கூலி வேலைக்குன்னு போறாங்க, லட்ச லட்சமா சம்பாதிச்சுட்டு வராங்க. இங்க பன்னெண்டு மணி நேரம் வேலை செய்யறோம். பத்தாயிரம் ரூபா சம்பளத்துக்கு ரத்தம் கக்கறோம்" என்று குடும்பத்தில் உள்ளவர்கள் யாரோ கடுப்பேற்றிப் பேச அந்தக் கடுப்பு ஆள்மாற்றி ஆள் மாற்றி படர்ந்து இன்னும் அழுத்தமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

"எம்ப்பா... யாரோ சந்தனப்பவுடரை எடுத்துட்டு வாராம். பார்த்து..."

பெரிய அதிகாரி குரல் கொடுத்தார்.

சந்தனப் பவுடர் என்பது ப்ரவுன்ஷுகர், போதை மருந்து.

"யாராவது முறைச்சா உட்கார வச்சுடுங்க" என்று அடுத்தபடியான உத்தரவு வந்தது.

அங்கிருந்த அதிகாரிகளான வாலிபர்கள் சுறுசுறுப்பானார்கள்.

வாங்கடா... வாங்க என்பது போல் பார்த்தார்.

நஸீர்பாய் பை கிட்டத்தட்ட கிழிப்பதுபோல் திறக்கப்பட்டது.

நஸீர்பாய் "என்னாங்க அது. நான் திறந்து தரேன்" என்று சொல்ல, "சும்மாயிரு. தள்ளிப்போய் நில்லு" என்று அதட்டினார்.

நஸீர்பாய் கோபமானார். கோபத்தில் தோளில் பைமாட்டியிருப்பதை மறந்து போயிற்று.

"அதை கொடுக்கறீங்களா. என்ன வச்சுருக்கீங்க உள்ள" என்று எடுத்து அதிலிருக்கிற மூன்று பையையும் பிரித்துப் பிரித்து பார்த்தார்கள். அப்படிப்பார்க்கும் போதே ஒரு பையின் மேல் ஒட்டியிருக்கின்ற ஸ்டாப்ளர் செய்த காகிதங்கள் பிய்ந்து போயின.

எல்லாப் பையிலும் விலாசங்கள் எழுதப்பட்டு ஸ்டாப்ளர் செய்யப்பட்டிருந்தது. எந்தப்பை யாருடையது என்று தெரிய வில்லை. வெளியேவர கூடுதலாய் ஒன்றரை மணி நேரமா கிறது. மனைவிமக்களை பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருந்த நஸீர்பாய்க்கு இந்தத் தாமதம் கோபத்தை ஏற்படுத்தியது.

அங்கிருந்து வண்டியேறி சைதாப்பேட்டை தாண்டுகிற பொழுது அந்த விலாசம் வந்தது. பிய்ந்து கீழே விழுந்த பேப்பர் களை பையில் வைத்திருந்த நஸீர்பாய் அந்த விலாசம் எடுத்துப் பார்க்க திருப்பச்சொல்லி கதவிலக்கம் பார்த்து வண்டியை நிறுத்தச் சொன்னார்.

கமலக்கண்ணன் வீட்டு வாசலில் வண்டி நின்றது.

எந்தப்பை எந்தப்பை கண்ணனுடைய பை.

தெரியவில்லை. நிறமும் ஞாபகம் இல்லை. வயிறு பசித்தது. வீட்டிற்கு போகவேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தது. செல்போனில் மனைவி இரண்டுமுறை கூப்பிட்டு விட்டாள். மகள்கூட கொஞ்சலாக எப்போ வருவீங்க டாடி என்று கேட்டது.

சட்டென்று ஒரு பையை எடுத்து கமலக்கண்ணன் தாயா ரிடம் நீட்டினார்.

"கமலக்கண்ணன் ரொம்ப நல்லாயிருக்கு. அவர் வொய்ப்பு கிட்ட சொல்லிடுங்க" என்று சொன்னார்.

வண்டி திரும்பியது.

நஸீர்பாய் மிக ஆவலாக தன் வீடு நோக்கிப் போனார்.

கமலக்கண்ணன் தாயார் அந்தப்பையை வீட்டுக்குள் எடுத்துப் போய் பிரித்து கவிழ்த்துக் கொட்டினார்.

துபாயிலிருந்து வீட்டிற்கு பொருள் அனுப்புபவர்கள் எல்லோரும் பாடிஸ்ப்ரே, சென்ட், லிப்ஸ்டிக், சாக்லேட்டுகள், பிஸ்கெட்டுகள் என்றுதான் அனுப்புகிறார்கள். அந்தப் பையில் அவைதான் நிரம்பியிருந்தன.

ஷாம்பூவும், கண்டிஷனரும், பெண்களுக்கான சென்ட்டும், பாடிஸ்ப்ரேயும், பதினாறு வகை நிறத்தில் லிப்ஸ்டிக்கும், விதம் விதமான மேக்கப் சாமான்களும் இருந்தன.



அம்மாவும், பெண்ணும் உட்கார்ந்து பார்த்தார்கள்.

"சாக்லெட்டெல்லாம் சாப்பிடாத. சர்க்கரை இருக்கு. மாட்டி கிட்டு செத்துடுவ. இத்தனை உதட்டு சாயம் வாங்கிட்டு வந்தி ருக்கானே. எதுக்கு நீயும் போடமாட்ட நானும் போடமாட்ட. ஏன் அதை அனுப்பியிருக்கான். போட்டுக்கன்னு அனுப்பியிருக் கானா."

"ஒன்னுமில்ல. இதை அவளுக்கு அனுப்பியிருக்கான். தெரியாத்தனமா இங்க கொண்டுவந்து கொடுத்துட்டாங்க."

"இவளே ஏர்போர்ட் போய் வாங்கிப்பாளே."

"இந்த தடவை போகலை போலிருக்கு."

"என்னா பண்றது இதை வச்சிக்கிட்டு. இந்த கண்றாவி யெல்லாம் நான் போடமாட்டேன்."

"இந்த பெயிண்ட் டப்பால்லாம் என்னா பண்றதுன்னே தெரியலே."

"இது கண்ணுக்கு மேல அடிச்சுக்கற பெயிண்ட்டுடி."

"அதை அவ அடிச்சிக்கட்டும். சினிமாக்காரி மாதிரி அவ பண்ணிக்கட்டும். எனக்கு தேவையில்லை."

"யார் கொண்டுபோய் கொடுக்கறது."

"வாயேன், நீயும், நானுமே போயிட்டு வரலாம்."

"எதுக்குடி, அங்கபோனா எதுனா ஆகும்."

"எதிர அந்த ஐயர் வீட்டுக்கு போனா என்ன."

"அங்க போய் உட்கார்ந்து இவங்களை கூப்பிடறதா. அதுக்கு இங்க வரச்சொல்லி அவங்களை கூப்பிட்டா என்னா."

"யாரு."

"அவன்தான் அந்தக் கிழவன்தான் வருவான். பூரணியும் வரமாட்டா. அந்தப் பொம்பளையும் வரமாட்டா. அந்த பொம் பளை நம்ம வீட்டுக்கு வரணும்டி. இல்ல, நாம போய் அந்தப் பொம்பளைய பார்க்கணும். இவங்கிட்டயே கொசகொசன்னு பேசறது. இவன் டேய்... அப்படின்னா எழுந்து இடுப்புல துண்டை கட்டிக்கிட்டு ஐயோ ஐயோன்றான். அந்த புருஷோத்த

மன் லாயக்கில்லைடி. அந்த பாக்கியத்தம்மாளை ஒரு உலுக்கு உலுக்கணும்."

மனத்தில் ஒரு காரத்தோடு கமலக்கண்ணன் தாயார் பேசினாள்.

"எதுக்கு இவ்ளோ ஆத்திரப்படற."

"பொண்ணு கொடுக்கறவ வந்து நின்னா பேச வேணாமா. நல்லாயிருக்கீங்களான்னு ஒரு வார்த்தை கேட்க வேணாமா. ஒரு போன் கூட பண்ணலை. அவ்ளோ மிதப்பா இருக்கிறதா. உன்னை கொண்டுபோய் கொடுத்துட்டு உங்க மாமியார் வீட்டுக்கு எத்தனை தடவை நடந்திருப்பேன் நான். கூப்பிட்டு கூப்பிட்டு எத்தனை தடவை அனுப்புவா அவ. என்னா சொல்ற. அவ வர மாட்டேன்றா. நாம போவோம். நின்னு ஒன்னு ஒரு கத்து கத்திட்டு வரேன். அப்புறம் தானா வராளா இல்லை யான்னு பாரு."

"சும்மாயிரும்மா. கமலக்கண்ணன் நம்ம பக்கம் இல்லை. என் மாமியார் பக்கம் எங்க வீட்டுக்காரரு இருந்தாரு. எங்க மாமியார் என்ன சொன்னாலும் இன்னிக்கு வரைக்கும் அவ பண்றதுதான் சரி. எங்க அம்மாவுக்கு அடங்கிப்போன்னு சொல்றாரு."

"கமலக்கண்ணன்தான் இல்லையேடி. எங்கயோ பாலை வனத்தில இல்ல இருக்கான். நாமபோய் கேட்டா என்ன. வேணாங்கிறியா."

"உனக்கு இஷ்டம்னா கேளு."

"நீ வரதா இருந்தா நான் கேட்கறேன்டி. இல்லைன்னா போகலை.

"நான் வந்து என்ன. என் வாயை எதுக்கு கிளறவிட்ற. நீ மட்டுமே கெட்டபேர் வாங்கிட்டு இரு. எனக்கு வேணாம்."

"என்னாடி பேசற."

"புள்ள பெத்தவளை மதிக்காத இருக்கறது தப்பு இல்லையா."

"தப்புதான். அந்த சனியனுக்கு தெரிய மாட்டேங்குது."



"சொல்லிட்டு வந்துடுவோம். நீ பண்றது தப்புன்னு."

ஒரு புன்சிரிப்போடு மகள் ஒத்துக்கொள்ள தாயும், மகளும் உடுத்தி பவுடர்பூசி நெற்றிக்கு இட்டு கூடுதலாய் இரண்டு சங்கிலிகள் போட்டுக்கொண்டு ஆட்டோவில் ஏறி அங்கே போய் இறங்கினார்கள்.

"இருப்பா. உள்ள இருக்கறவங்க வந்து துட்டு தருவாங்க. ஒரு அஞ்சு நிமிஷம் ஆவும் இரு" என்று மெல்ல சீனுவாசய் யரின் வீட்டிற்குப் போனார்கள்.

சீனுவாசய்யர் அடுத்த ஐந்தாவது நிமிடம் வெளியே ஓடி வந்து ஆட்டோவுக்கு தொண்ணூற்று ஐந்து ரூபாய் கொடுத்து அனுப்பினார். கவலையோடு மறுபடியும் உள்ளே போனார்.

"நல்லா இருக்கறீங்களா."

நிதானமாக கமலக்கண்ணன் தாயார் கேட்டார்.

"இருக்கேம்மா."

"பதிலுக்கு கேட்க மாட்டீங்களா."

கொக்கி போட்டு இழுத்தாள்.

"நல்லாயிருக்கீங்களாம்மா."

"இல்லியே... அதானே வந்திருக்கறேன். மனசு ரொம்ப சங்கடமா இருக்குது. மனசு சங்கடத்துனால உடம்பு சங்கடம். அடிக்கடி வயிறு நோவுது. கால் குடைச்சலான குடைச்சல். தலைபாரமா இருக்கு."

"என்னம்மா உடம்புக்கு என்ன."

"அதான் சொன்னேனே. மனசுக்கு வருத்தமா இருக்கறது னால உடம்புக்கு வருதுன்னு."

"என்னமா மனசுக்கு வருத்தம்."

"இப்படி ஒவ்வொன்னா கேட்டுகிட்டே இருக்கப் போறீங் களா. உங்களுக்கா ஒண்ணும் தெரியாதா."

"என்னம்மா இது. கேட்டா தப்புன்றீங்க. கேட்கலைன்னா ஏன் கேட்கலைன்றீங்க."

"நீங்க ஐயருதானான்னே எனக்கு சந்தேகமா இருக்கு. நூல் பார்த்தா சேலையை சொல்ற ஜாதி. கோடு போட்டா ரோடு போடற ஜாதி. என்ன ஒண்ணும் தெரியாத போல இருக்காங்க."

"அவங்க அப்பாவியா நடிக்கறாங்கம்மா."

"நடிச்சுட்டு போகட்டும். இதோ பாருங்க. பொண்ணை பெத்தவங்க அப்பப்போ வந்து வீட்ல விசாரிக்கறது வழக்கம். ஒரு வருஷம் கழிச்சு, ஒன்றரை வருஷம் கழிச்சு கல்யாணம் நடக்குதுன்ற ஒரே காரணத்துக்காக நீ என்னாடி பெரிய ஆளு. நான் உன்னை எதுக்கு மதிக்கறதுன்னு பொழிச்சலுர்லயே உட்கார்ந்துண்டிருக்கறது ரொம்ப தப்பு. போய் அந்த அம்மாவை கூட்டிகிட்டு வாங்க. ரெண்டு வார்த்தை கேட்கணும்."

"அதுக்குத்தான் வந்தீங்களா."

"ஏன். நாங்க எதுன்னா சீர் செனத்தி எடுத்துட்டு வரணும்னு நினைக்கறீங்களா. புள்ள வீட்டுக்காரங்க பண்றதுதான் உங்க வீட்டுப் பழக்கமா. வரசட்தணைன்னு ஒரு கொடுமைய ஆரம்பிச்சதே உங்க ஜாதிதானப்பா."

"சும்மா ஜாதி பத்தி பேசாதீங்கம்மா."

"சரி. பேசலை. நாம எல்லோரும் ஒருஜாதி. ஒன்னுக்குள்ள ஒன்னு கொடுத்து வாங்கியிருக்கோம். போய் அவங்களை கூட்டிகிட்டு வாங்க."

கமலக்கண்ணன் சகோதரிக்கு அவன் தாயார் பேச்சு பெரிய சிரிப்பைக் கொடுத்தது. அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் அந்த பூரிப்பை காட்டிக் கொடுத்தது. அதைப் பார்க்கப் பார்க்க சீனுவாசய்யருக்கு வேதனையாக இருந்தது.

இது என்ன. வேண்டுமென்றே ஒரு வீட்டிற்குள் நுழைந்து உரக்க சண்டைபோட்டு ஊரை கூட்டி ஏன் இப்படி செய்கிறார்கள் என்று கவலை வந்தது. இல்லையென்று சொல்லலாமா. கண்டுபிடித்துவிட்டால் கோபமாகுமா. இருக்கிறார்கள் என்று சொல்லலாமா. போய் சொன்னால் மறுபடி சண்டையாகுமா.



அவஸ்தைப்பட்டார். இறங்கி பாக்கியத்தம்மாளை தேடிக் கொண்டு போனார். வீட்டிலிருந்த பாக்கியத்தம்மாளிடம் நிதானமாக விஷயம் சொன்னார்.

"புருஷோத்தமர் எங்கே."

"குளித்துக் கொண்டிருக்கிறார்."

"நான் இதை எதிர்பார்த்தேன். ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் அந்தம்மா வருவாங்க.உரக்கக் கத்துவாங்க. எதனா சொல்லி சண்டை போடுவாங்கன்னு நான் நினைச்சேன். அப்படியே ஆவுது."

"ஆட்டோல வாசல் பக்கம் வந்து நிக்கறா. கத்தறா நான் எப்படி உள்ளுக்குள்ள உட்கார்ந்திருக்க முடியும்."

"அந்தம்மா என்ன சொல்றாளோ அதுக்கேத்தபடி பதில் சொல்ல வேண்டியதுதான். ரெண்டு தடவை பொறுமையா இருப்பேன். மூணாந்தடவை நானும் கேள்வி கேட்க ஆரம்பிச்சுடுவேன்."

"சண்டை பெருசாகி குழந்தைக்கு கெடுதல் வந்திடக் கூடாது."

"வந்தா என்ன பண்ண முடியும். சொல்லுங்கோ. ஐயரே... நாமளா கெடுதலை தேடிப்போகலை."

"கெடுதல் நம்மள தேடி வந்ததுன்னா என்ன பண்ணலாம்."

"என் பொண்ணு கல்யாணம் நின்னு போனா, இவன் இல்லைன்னு ஆயிட்டா நான் என்ன பண்ண முடியும். வேற இடத்துல புள்ள பார்ப்பேன். வேற இடத்துல கல்யாணம் பண்ணி வைப்பேன். அவ்ளோதான்."

"அதெப்படிம்மா, இவ்ளோ தொலைவு ஆன பிறகு."

"என்ன தொலைவு ஆயிப்போச்சு. அவ அவ புருஷன் செத்து இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலையா."

"கடவுளே. என்ன எடுத்தவுடனே இப்படி பேசறீங்க.நீங்க அங்க போனா இன்னும் மோசமா பேசுவீங்க."

"பேசிடலாம்னுதான் தோணுது. அதான் சொல்லிட்டேனே ரெண்டு தடவை மௌனமா இருப்பேன். மூணாம் தடவை நானும் கேட்க ஆரம்பிச்சுடுவேன்."

புருஷோத்தமர் அவசரமாக வெளியேவர சலவை வேட்டி உடுத்திக்கொண்டு தலைவாரிக் கொண்டு விபூதி இட்டுக் கொண்டு மனைவியோடு சீனுவாசய்யர் வீட்டிற்குப் போனார்.

அங்கே மௌனம் நிலவியது.

"இதெல்லாம் எங்க அண்ணன் உங்களுக்கு அனுப்பினார்" ன்னு சொல்லி ஒரு பைநீட்ட பாக்கியத்தம்மாள் அதை வாங்கிக் கொள்ளாமல் இருந்தாள்.

"உங்களுக்குத்தான் கமலக்கண்ணன் அனுப்பியிருக்கான் வாங்கிக்கோங்க."

"கமலக்கண்ணன் அனுப்பியிருந்தார்னா போன் பண்ணி யிருப்பார். உங்களுக்கு அனுப்பியிருப்பார்னு நினைக்கறேன். எங்களுக்கு அனுப்பறதா ஒண்ணும் சொல்லலையே."

"ஏன் அவன் விடற மூச்சை ஒவ்வொண்ணையும் உங்க கிட்ட சொல்லிட்டுத்தான் விடறானா."

கமலக்கண்ணனின் தாயார் சொல்ல பூரணியின் தாயார் மெல்ல மறுத்தார்.

"அப்படியில்லை, முக்கியமான விஷயமா இருந்தா போன் பண்ணி சொல்லிடறார்."

"ஒரு வாரத்துக்கு நாலுதடவை பண்றானா."

"இல்லீங்க. ரெண்டு தடவைதான் பண்றார்."

"எங்களுக்கு ஒருதடவைகூட பண்றதில்லை."

"அடுத்த தடவை பண்றபோது உங்களுக்கும் பண்ண சொல்லி சொல்றேன்."

"நீங்க சொல்லி அவன் பண்ணணுமா."

"தெரியலைங்க. அவர் ஏன் பண்ணலைன்னு காரணம் இல்லை. ஆனா, நீங்க பண்ணலைன்னு வருத்தப்பட்டீங்கன்னு நான் சொல்லிடறேன்."



"அதை ஒண்ணும் சொல்ல வேணாம்."

"சரிங்க சொல்லலை."

"உள்ளுக்குள்ள ஏதோ முகத்துக்கு போடற சாயமெல்லாம் இருக்கு. எல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம்தான், எடுத்து உங்க பொண்ணுக்கு அந்த சாயத்தை போட்டுக்கச் சொல் லுங்க."

"நாங்க யாரும் சாயம் போடறதில்லைங்களே."

"பின்ன எதுக்கு அனுப்பியிருக்கான்."

"உங்க புள்ளையதான் கேட்கணும்."

"இங்க கேட்காமயா அனுப்பியிருப்பான்."

"அதான் சொல்றனே. நாங்க கேட்கலை, எங்களுக்கு இதை அனுப்பலை. சாயத்தையெல்லாம் உங்களுக்குத்தான் அனுப்பி யிருக்கான்னு நினைக்கறேன். நீங்க ஏன் கொண்டு வந்து எங்கிட்ட கொடுக்கறீங்க."

"அப்போ நாங்க சாயம் போடறவங்களா."

"தெரியாதுங்க. நாங்க மஞ்சள்தான் தேய்ச்சு குளிக்கறோம். மைதான் இடறோம். அதுபோதும். அதைவிட அழகு என்ன இருக்கு."

"பதினாறு லிப்ஸ்டிக் அனுப்பியிருக்கானே எதுக்கு."

"நான் கேட்கலை."

"அவங்களுக்கு வேணாமாண்டி. நமக்கும் வேணாம். அதை ஏன் வச்சுட்டிருக்க. விசிறி போடு."

அந்தப்பையை மகளிடமிருந்து பிடுங்கி வாசல் நோக்கி விசிறி எறிந்தாள். அந்தப்பை வாசலில் வந்து விழுந்தது.

பூரணி உள்ளே நுழைய அவள் காலில்பட்டு சிதறியது.

பாக்கியத்தம்மாள் கோபமானாள்.

# 43

"எங்கிருந்தோ, எவனோ, எதையோ கொடுத்தான்னு சொல்லிட்டு எங்க வீட்டுக்கு வராத, எதிர்வீட்ல இருந்து எங்க மேல விசிறி அடிக்கிறியே. நீ என்ன மனுஷியா இல்ல மாடா."

பாக்கியத்தம்மாளின் குரல் பிளிறலாய் தெருமுழுவதும் ஒலித்தது. அக்கம்பக்கமுள்ளவர்கள் கதவு திறந்து வெளியே வந்தார்கள்.

"என்ன பாக்கியம். என்னாச்சு உனக்கு."

அடுத்த வீட்டிலுள்ள பெண்மணி மெல்லிய அதட்டலோடு அவளை நோக்கி வந்தாள்.

"ஏண்டி, நீயும்தான் பொண்ணு கொடுத்து பொண்ணு எடுத்திருக்க. எங்களியா அடிமையா இருக்கியா. பொண்ணு கொடுத்தா அடிமையா ஆயிடணுமா. இப்படி எதனா சட்டம் இருக்குதா அந்த ஊர்ல சொல்லு" மறுபடியும் பாக்கியத்தம்மாள் கத்தினாள்.

கமலக்கண்ணனின் தங்கைக்கு லேசாக ஒரு பயம் வந்தது.

சீனுவாசய்யர், நல்லது. பாக்கியத்தம்மாள் சீறட்டும் என்று மௌனமாக நின்றார்.

கமலக்கண்ணனின் அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், மறுபடியும் தாக்குவதற்கு அவள் பரபரப்பாக இருந்தாள். விஷயங்களை மனதுக்குள் வேகமாகத் தேடினாள்.

அம்மாவின் கூச்சல் பூரணிக்கு அதிர்ச்சி அளித்தது.

இது நல்லதல்ல. இது நிச்சயம் கெடுதல் தரும். யாருக்கு இல்லையென்றாலும் எனக்கு. எனக்கு இல்லையென்றாலும் கமலக்கண்ணனுக்கு இது நிச்சயம் கெடுதல் தரும். எனவே, அம்மாவை சமாதானப்படுத்த வேண்டியது அவசியம்.

அவள் சமாதானத்திற்கு தயாரானாள்.

ஏதோ ஆர்ப்பாட்டம் நடத்தவே வந்திருக்கிறார்கள். என்ன செய்வது என்று வேகமாக புருஷோத்தமர் யோசித்தார்.



சீனுவாசய்யரைப் பார்த்தார்.

சீனுவாசய்யருக்கு புருஷோத்தமரின் திகைப்பு தெரிந்தது. கொஞ்சம் கீழவே, அடக்கியே வாசி என்பதுபோல் கைகாட்ட அது புருஷோத்தமருக்குப் புரிந்தது.

ஆனால், யார் என்ன அமைதியாகப் பேசினாலும் அங்கு எடுபடாத நிலைமை வந்துவிட்டது.

பாக்கியத்தம்மாள் இந்த அவமானம் தாங்காமல் குமுறினாள். பொழிச்சலூர்க்காரர்களை துணைக்கு அழைத்தாள்.

"நிச்சயம் பண்ணியிருக்கோமில்ல. இங்க என் வீட்டுக்கு வரவேண்டியதுதானம்மா. ஏம்மா எதிர் வீட்ல உட்கார்ந்து பேசறீங்க."

"நாங்க எதிர்வீட்ல வச்சுத்தான் நிச்சயம் பண்ணோம். உங்க வீட்லயா வச்சு பண்ணோம். அதான் இந்த வீட்டுக்கு வந்தோம்." என்று கமலக்கண்ணன் தாயார் பேசினாள்.

"என்ன அறிவுகெட்டத்தனமா பேசறாங்க பாரேன். கல்யாணத்தை சத்திரத்துல வச்சா நியாயம் பேசறதுக்கும் சத்திரம் புக் பண்ணணுமா. என்ன மாதிரியான பொம்பளை நீ" என்று, சொல்ல கமலக்கண்ணனின் அம்மாவிற்கு உள்ளுக்குள் ரௌத்திரம் பொங்கியது. அவள் தங்கையும் சூடாக அம்மாவைப் பார்த்தாள்.

"இதோ பார் பாக்கியம் கொஞ்சம் அடக்கிப் பேசு."

"இன்னொரு தடவை என் பேர் சொன்னீன்னா கோவம் வரும். நான் உன் பேர் சொன்னேனாடி, எதுக்கு என் பேர் சொல்லி கூப்பிடற."

பாக்கியத்தம்மாள் பேச புருஷோத்தமர் "என்ன அது எதுக்காக அவங்களை அவ்ளோ மட்டமா பேசறீங்க."

"அவ்ளோ மட்டமா நடந்துக்கறாங்க."

"அங்கேயிருந்து வந்து இவங்க வீட்ல உட்கார்ந்துகிட்டு என்னமோ அவங்க வாங்கிட்டு வந்ததை கொண்டுவந்து வாங்கிக்கோ வாங்கிக்கோன்னா நான் என்னத்துக்கு வாங்கிக்கணும். முடியாதுன்னா தூக்கிப்போடறதா. என்ன நினைச்சுகிட்டிருக்

காங்க மனகல. இவங்க புள்ள பெத்துட்டதாலேயே கையில பிடிக்க முடியாத அளவுக்கு உசத்தி இல்ல. எங்களுக்கு மான மரியாதை இருக்கு. மிஞ்சிப்போனா என்ன பண்ணுவீங்க கல்யாணம் கிடையாது நிறுத்திடுவோம்னு சொல்லுவீங்க போகுது. இந்த புள்ள இல்லைன்னா இன்னொரு புள்ள. அதே முகூர்த்தத்துல இன்னொரு புள்ள பார்த்து என் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணுவேன். உன் கால்ல விழமாட்டேன்."

"இந்தாடி, இவ தீர்மானம் பண்ணிட்டாடி. நீ என்ன பேச வந்தியோ அதை அவளே சொல்லிட்டா. சரி பண்ணிக்கோ நாங்க கிளம்பறோம்."

அவர்கள் இரண்டு பேரும் வெளியே வந்தார்கள்.

ஊர், இவ்வளவு வேகமாக பாக்கியத்தம்மாள் பேசுவதைப் பார்த்து மிரண்டது.

"அப்படி ஆத்திரப்படாத. எம்மா வந்தவங்க வீட்டுக்கு வந்து இவங்களாண்ட பேச வேண்டியதுதானே. அதை விட்டுட்டு சீனுவாசய்யர் வீட்ல உட்கார்ந்துண்டு இப்படி போட்டிருக்கீங்களே. இப்படி தூக்கிப் போடறது தப்பில்லை. நீங்க என்ன இவ்வளவு முரட்டுத்தனமா நடந்துக்கறீங்க" என்று வேறு யாரோ சொல்ல, "எங்களை வீட்டுக்கு வாங்கன்னு கூப்படாத வீட்டுக்கு கொடுக்கறத வாங்கறத விட்டுட்டு இதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லைன்னு எடுத்தவுடனே மப்பா பேசினாக்க என்ன அர்த்தம்."

"யம்மா நீ பேசினியா நான் பேசினேனா. வரேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டுதானே வரணும். நீங்களா வந்து எதிர் வீட்ல உட்கார்ந்தீங்கன்னா என்ன அர்த்தம்."

"பொண்ண பெத்தவ நீ வந்து பார்க்கணும். நீ என்னிக்காவது வந்து பார்த்தியா."

"என்னா... வாராவாரம் உங்களை வந்து பார்த்து உங்களுக்கு கப்பம் கட்டிகிட்டு உங்க வீட்ல கீரை ஆய்ஞ்சுகிட்டிருக்கணும்னு பார்க்கிறயா. அதுக்கு வேற ஆள் பார். நான் வீட்டுக்கு வரேன். காபி தண்ணி தரணும். ஒரு ரவா உப்புமா பண்ணி வைக்கணும்னு சொல்ல வேணாமா. இதுபாட்டுக்கு திடுக்குனு



வந்து இது வந்த நேரமெல்லாம் நான் எழுந்து ஆடணும்னு நினைக்கராங்களே என்ன அது."

பொழிச்சலூர் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு கமலக்கண்ணன் வீட்டுப் பெண்களை கடிந்து கொண்டது.

"அம்மாதான் இப்படி பேசறாங்க, நீ வயசுப்பொண்ணுதானே, படிச்சவதானே நீ சொல்லவேணாம். இப்படி வரக்கூடாதுன்னு தெரியாது. ஏன் போன் பண்ணாத வந்தீங்க. வந்து ஏன் போறீங்க."

"அப்படி போக வர நாம இருக்கறதுல இல்லைங்க" என்று வேகமாகப் பேசியது.

திடீரென்று சீனுவாசய்யருக்கு ஒரு விஷயம் பொறி தட்டியது. அவர் உடனே கமலக்கண்ணன் வீட்டிற்கு போன் செய்தார். கமலக்கண்ணன் தகப்பனாரை அழைத்தார். கமலக் கண்ணன் தகப்பனார் வந்தவுடன் "உங்க வீட்டுப் பொண்ணுங்க இங்க உட்கார்ந்திருக்காங்க. நீங்க அங்கியே... உங்களுக்குத் தெரியுமா லோடீஸ் வந்தது" என்று கேட்டார்.

"இல்லீங்களே. எங்கயோ வெளியே போயிட்டு வரேன்னு உடுத்திகிட்டு போச்சங்க. சினிமா போகுதுங்கன்னு நினைச்சேன். என்னாவாம்."

"இங்க வந்து ஒரே ரகளைங்க. கன்னாபின்னான்னு பேசறாங்க" சீனுவாசய்யர் குமுறலோடு பேசினார். "போன் கொடுங்க. அவங்ககூட நான் பேசறேன். போன் கொடுங்க" கமலக்கண்ணன் தகப்பனார் கோபமானார்.

சீனுவாசய்யர் வந்த இரண்டு பேரில் யாரிடம் போன் கொடுப்பது என்று யோசித்தார்.

சட்டென்று கமலக்கண்ணனின் தாயாரை அழைத்து "என்னங்க. உங்களுக்கு போன்" என்று சொன்னார்.

"யாரு"

"தெரியலை. கமலக்கண்ணன்னு நினைக்கிறேன்."

"கமலக்கண்ணனா..." என்று வேகமாக வந்து அந்தப் பெண்மணி போன் வாங்கிக் கொண்டாள். வாங்கிய சில நிமிடங்களில் கமலக்கண்ணனின் தாயார் முகம் மாறியது.

"என்னங்க கமலக்கண்ணன்னு சொல்றீங்க. என் வீட்டுக்காரருல்ல பேசறாரு."

"இல்ல, கமலக்கண்ணன்... கமலக்கண்ணன்னு காதுல விழுந்தது."

சீனுவாசய்யர் ஒன்றுமே தெரியாததுபோல் முகம் தூக்கி வைத்துக் கொண்டார்.

"ஆமா... என்னா இப்போ உனக்கு என் சொல்லணும். இந்தாடி என்னால பேசமுடியலை. உங்கப்பாகிட்ட பேசு. கத்தறார்."

இப்பொழுது மகள் வாங்கிப் பேச "இல்லைப்பா. சும்மாதான் போனோம். ஐயோ இந்தம்மா கத்திட்டு நம்மள கத்தறதா சொல்றாங்க. உங்ககிட்ட என்னத்துக்கு சொல்லணும். நாங்களெல்லாம் போயிட்டு வந்து சொல்லாமேன்னு நினைச்சோம். வந்தது தப்பு. எங்க புத்தியை செருப்பால அடிக்கணும்.

நான் வந்துடறேம்ப்பா'' என்று வேகமாகப் பேசி போனைத் துண்டித்தாள்.

"வாம்மா போகலாம். தப்பாகிப் போச்சு எல்லாம்" என்று சொல்லி கீழே இறங்கினாள். திரும்பி பூரணியைப் பார்த்தாள்.

"உனக்கும் எங்க அண்ணனுக்கும் கல்யாணம் நடக்கும்னு தோணலை. நடந்தா நல்லா வரும்னு தோணலை. உங்கம்மா சொல்படியே வேற புள்ளையப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ. எங்க அண்ணனை விட்டுடு" என்று சொல்ல,

"நான் விட்ருவேன் உங்க அண்ணன் விடுவாரா. அது தெரியலை இல்லை, உங்க அண்ணன்கிட்டயும் கேட்டுக்க" என்று மிருதுவான குரலில் கோபமேயில்லாமல் கேட்டாள்.

"என்னா... கைக்குள்ள எங்கண்ணனை போட்டுக்கிட்டன்னு பேசறியா."



"அப்படியில்லைங்க. எனக்கு புருஷன்னா அது கமலக்கண்ணன்தான்னு தீர்மானம் ஆகிப்போச்சு. உள்ளுக்குள்ள எழுதிவச்சுட்டேன். வேற யாரையும் என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. ஒரு வேளை கமலக்கண்ணனுக்கு பூரணி இல்லாத, பூரணியைவிட நல்ல பொண்ணு கிடைக்கும் அப்படின்னு தோணுச்சுன்னா பூரணியை விட்டுட்டு அவர் வேற பொண்ண கல்யாணம் பண்ணிக்கலாம். அவர் வேற பொண்ண கல்யாணம் பண்ணிக்கிறதப்பத்தி எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், பூரணி கமலக்கண்ணனைத் தவிர வேற யாரையும் எப்போதும், எதுக்காகவும் கல்யாணம் பண்ணமாட்டாள். அது சத்தியம் இது முடிஞ்சுபோன கதை"

அத்தனை வார்த்தைகளும் கோபமில்லாமல் அதே நேரம் மிக உறுதியாக வந்தன.

"இத்தனை அழுத்தமா நீ பேசற, உங்கம்மா எப்படி தூக்கி அடிக்கறாங்க."

"நான் அழுத்தமா பேசறதுனால தூக்கி அடிக்கலைங்க, நீங்க அநியாயமா பேசறதுனால தூக்கி அடிக்கறாங்க. எங்கம்மா எதுக்கு உங்களாண்ட வரணும். உங்ககிட்ட வந்து என்னா செய்யணும். பொண்ணு பெத்தவங்க கைகட்டி நிக்கணும். நீங்க கூப்பிட்ட குரலுக்கெல்லாம் வரணும் அப்படின்னு எதிர்பார்க்கறீங்க. அந்த மாதிரியெல்லாம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நல்லபடியா கல்யாணம் பண்ணி கொடுப்பாங்க.

நகைநட்டு போடுவாங்க. அவ்வளோதானே தவிர உங்களுக்கு அடிமையா வேலை செய்யணும்னு நினைச்சீங்கன்னா அதுக்கு வேற இடம் பாருங்க. எங்கம்மா வரமாட்டாங்க."

"நல்லாயிருக்கு நீ பேசற நியாயம்" என்று ஆரம்பிக்க பூரணி கை உயர்த்தினாள்.

"நியாயத்தை கமலக்கண்ணன் கிட்ட நான் கேட்டுக்கறேன். நீங்க விட்ருங்க."

"என்ன புருஷனை பேர் சொல்லி கூப்பிடற."

"டேய்னு கூப்பிடுவேன். அது என் இஷ்டம். அது அவரு இஷ்டம். இதுல நீங்க வந்து குறுக்குல நுழையக்கூடாது. அது ஆம்படையான் பொண்டாட்டி விவகாரம்."

"ஆம்படையான் பொண்டாட்டின்னு தெள்ளத்தெளிவா சொல்லிட்டு உங்க இஷ்டத்துக்கு ஆடினா ஒரு மரியாதை வேணாம்."

"உங்களுக்கு இந்த மரியாதையே ஜாஸ்தி போங்க கிளம்பி. நாங்க பார்த்துக்கறோம்."

பொழிச்சலூர் மனிதர்கள் விஷயம் கேள்விப்பட்டு ஆளாளுக்கு மிக வேகமாகப்பேச, அந்த இடம் தவறாக வருகிறது என்று கமலக்கண்ணன் சகோதரிக்கு புரிந்து போயிற்று. சட்டென்று அவள் ஆட்டோ வேண்டுமென்று கேட்க சீனுவாசய்யர் ஒரு பையனை ஆட்டோ எடுத்துவரச் சொல்லி அனுப்ப அவர்கள் சீனுவாசய்யர் வீட்டு நடையில் உட்கார்ந்தார்கள். ஆட்டோ வந்ததும் ஏறிக் கொண்டார்கள். சொல்லாமல், கொள்ளாமல் போனார்கள். புருஷோத்தமர் சீனுவாசய்யர் வீட்டில், நடுக்கூடத்தில் துண்டு விரித்து சுருண்டு படுத்துக்கொண்டார்.

"எனக்கு உடம்பு சரியில்லைங்க, தலை கிறுகிறுன்னு வருது" என்று சொன்னார்.

"மனசை விட்டுடாதீங்க. ரொம்ப மனசை விட்டுட்டீங்கன்னா உடம்பு படுத்தும். எல்லாம் சரியாப்போயிடும். ரெண்டும் விவரங்கெட்ட பொம்பளைங்க தப்பா நடந்துக்கறாங்க. அவ்ளோதான், வெறும் கர்வத்துல ஆடறாங்க அவ்ளோதான். பையன் தூக்கி செவிட்டி அடிச்சுட்டான்னா சரியாவரும்."

"அவன் அவங்களை செவிட்டி அடிப்பானா, இல்ல நம்மள செவிட்டி அடிப்பானான்னு எனக்கு ஒண்ணும் புரியலையே."

"நீங்க ஏங்க பயப்படறீங்க. அப்படி செவிட்டி அடிச்சா உங்க பொண்டாட்டி சொல்றமாதிரி வேற இடத்துல புள்ள பார்ப்போம். பூரணி என்ன சொன்னான்னு கேட்டீங்க இல்ல. உத்தமமான வார்த்தை சொன்னா. எனக்கு புருஷன்னா கமலக்கண்ணன்தான்னு சொன்னா. அந்த வார்த்தை அவனை கட்டி இழுத்துண்டு வரும். கவலைப்படாதீங்க ஓய். முகம் அலம்



பிண்டு நம்மூர் கோவிலுக்கு போயிட்டு வாங்க. இது தப்பான வேளை. திருஷ்டி."

"என்ன திருஷ்டி. திருஷ்டி படும்படியா நான் என்ன வாழ்ந்திட்டேன்"

"திருஷ்டி உம்மமேல இல்லை. உங்க பொண்ணு மேல. தேவதைமாதிரி பொழிச்சலூரில் அவ சுத்திசுத்தி வந்தா. அடடா... அவளுக்கு கல்யாணம்னு எத்தனை பேர் நினைச்சுருப்பான். அந்த நினைப்பு சும்மா போகுமா. ஏதோ ஒரு விதமா வரணுமில்லை. மெலிசா மேல தாக்குமில்ல. அப்படி தாக்கிடுத்து. ஜபம் பண்றேன். ஜபம் பண்ணி குழந்தைக்கும், உமக்கும் கயிறு கட்டறேன். ஒண்ணும் கவலைப்படாதேள். பாக்கியத்தம்மா இதுக்கு மேல கத்தாதீங்க. சாதாரணமா இருந்து நீங்க செய்த அத்தனை காரியமும் ரைட். பேசின அத்தனை வார்த்தைகளும் சரி. தப்பேயில்லை. இதை இத்தோட விட்டுடுவோம். வீட்டுக்குள்ள போயி திரும்பத்திரும்ப கத்திண்டிருக்காதீங்க."

"இல்லீங்க. நான் கத்தமாட்டேன். அவங்க சத்தியமா இருந்தா என்னை கடவுள் தண்டிக்கட்டும். நான் சத்தியமா இருந்தா என்ன நடக்குமோ அது நடக்கும்."

கமலக்கண்ணன் தாயார் வீட்டிற்குள் போய் நின்றதும் புருஷனைப் பார்த்து "என்னா நினைச்சுகிட்டு அங்க போன்ல கத்தற" என்று உரத்த குரலில் பேசியதும் அவருக்கு கோபம் வந்தது.

பக்கத்தில் இருந்த தண்ணீர் டம்பளரை தூக்கி அந்த அம்மாவின் முகத்தில் வேகமாக வீசினார்.

அவள் நெற்றியில் பட்டு தண்ணீர் தரையில் தெறித்தது.

உடனே, மகளைப்பார்த்து விளவினார் "கிளம்பு. போ. இன்னொரு தடவை இங்கு வந்தா காலை ஒடிச்சுடுவேன் போ. கல்யாணம் பண்ணி கொடுத்தாச்சு. இனி ஏண்டி வர நாயே. கூடிக்கூடி ரெண்டுபேரும் பேசி அவளை கிளப்பிவிட்டியா. அதுவே பைத்தியம், பன்னாடை. கிளம்பிவிட்டு ஆடலாம்னு பார்க்கறியா. போ, போய் உங்க மாமியாரைக் கவனி, உங்க மாமனாரைக் கவனி. என்னைக்காவது ஒரு நாள் எதுனா ஒரு பண்டம்

வாய்க்கு ருசியா பண்ணிப் போட்டிருக்கியா. வயசானவங்களுக்கு மரியாதை கொடுத்திருக்கியா. இங்க வந்து என்ட எழவு கொட்ற போ."

அவளுடைய தோள் பையை, கீழேயிருந்த துணிமணியை வெளியே வீசி எறிந்தார்.

"நீ வரணும்னு அவசியமே இல்லை போ" என்று கத்த அவள் எல்லாத்தையும் வாரிக்கொண்டு அழுதபடியே வெளியேறினாள்.

## 44

"என்ன என் பொண்ண எதுக்கு துரத்தற. என் பொண்ண துரத்துறதுக்கு நீ யார்" என்று மனைவி கத்த, அவள் கழுத்தில் கைவைத்து நெடுகத்தள்ளினார். அந்த அம்மாள் தடுமாறி கதவில் மோதி நின்றாள்.

ஆனால், சுரீர் என்ற வலி கமலக்கண்ணன் தந்தைக்கு ஏற்பட்டது. நெஞ்சை பிடித்துக்கொண்டார்.முன்னும், பின்னும் அலைந்தார். கண் நிலை குத்தியது. மூச்சு வேகமாக வாங்கியது. மறுபடியும் மார்பில் திருகுவலி வர வியர்த்துக் கொட்டியது. நாக்கு உலர்ந்தது. வரட்டு இருமல் போல் தொண்டையிலிருந்து சப்தம் வெளிப்பட்டது. அவர் தடுமாறி நாற்காலியில் உட்கார்ந்தார். உட்காரும் போது வலி மட்டுப்பட்டது.

அந்த அம்மாள் அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஒரு எழவும் இல்லை போடி" என்று மறுபடியும் அவளை நோக்கிச் சீறினார். சட்டென்று திரும்பவும் ஒரு வலி நெஞ்சைத் தாக்கியது.

அவர் தோளில் துண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு மெல்ல படியிறங்கினார். பக்கத்து வீட்டுக்குப் போனார். அங்குள்ள தன் வயது ஒத்த இன்னொரு நண்பரை அழைத்தார்.

"நெஞ்சு ரொம்ப வலிக்குது. ஆஸ்பத்திரியில் சேர்த்துடறியா" என்று கேட்டார்.



நண்பர் பதறி எழுந்திருக்க அவர் பிள்ளைகளும், எதிர்வீட்டு மனிதரும் சேர்ந்து அவரை ஆட்டோ பிடித்து அருகேயுள்ள தனியார் மருத்துவனைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

என்னா... என்னா என்று கமலக்கண்ணன் தாயார் வந்ததை அவர் திரும்பியே பார்க்கவில்லை.

மருத்துவமனைக்குள் நுழைந்ததுமே அவரைப் பார்த்ததுமே டாக்டர்கள் இது மாரடைப்பு என்பதை புரிந்துகொண்டார்கள். சக்கர நாற்காலியில் உள்ளே கொண்டு போனார்கள். ஆக்ஸிஜன் மாட்டினார்கள். நரம்பில் ஊசிசெருகி மருந்து ஏற்றினார்கள். இன்னொரு கையில் செலைன் ஏற்றினார்கள். நாடித்துடிப்பு பார்த்தார்கள். மானிட்டர் வைத்தார்கள், "நீங்க தூங்குங்க" என்று ஊசி போட்டார்கள்.

"என்ன. என்னாங்க பண்ணனும்."

"ஒண்ணும் பண்றதுகில்லை. அவர் அமைதியா தூங்கனும். உள்ளுக்குள்ள டென்ஷனாகி கோபப்பட்டு மாரடைப்பு வந்திருக்கு. படுத்து தூங்கிட்டார்னா தானா தானா அமைதி ஆயிடும். அதுக்கப்புறம் வைத்தியம் பண்ணனும். இப்போதைக்கு ஒரு வைத்தியமுமில்லை. அவர் தூங்கறதுதான் வைத்தியம். வெறுமன கிடக்கறதுதான் வைத்தியம். நீங்க ஒரு தொந்தரவும் பண்ணாம போங்க. அவர் முழிச்சுகறதுக்கு இன்னும் ஆறுமணி நேரம் ஆகும். நாங்க பார்த்துக்கறோம்."

பணம் கட்டணுமே என்று கேட்டார்கள்.

அடுத்த வீட்டுக்காரருக்கு அந்த தலைமை டாக்டரை தெரிந்திருந்தது.

"இப்போது எடுத்துட்டு வரலிங்க, பதட்டத்துல ஓடியாந்துட்டோம். நான் காசு கட்டறதுக்கு ஏற்பாடு பண்றேன்."

"கொண்டாந்துடுங்கய்யா."

டாக்டர் சொல்ல அவர்கள் விரைந்து வீட்டிற்கு வந்தார்கள்.

"அம்மா ஐயாவுக்கு மாரடைப்பு."

"அவரு ஒருவாரமாவே சரியா இல்லை. சாப்பிடும் போது நெஞ்சு நோவுதுன்றாரு. இதை யாராவது கவனிச்சீங்களா."

"எங்கிட்ட எப்போ சொன்னாரு. சொல்லலையே."

கமலக்கண்ணன் அம்மா கத்தினாள்.

"இப்படி கத்தினா எப்படி சொல்லுவாங்க. பேசிக்கிட்டே இருக்கும்போது திடீர்னு உரத்த குரல்ல ஏன் உங்ககிட்ட பேசறீங்கன்னு எனக்குப் புரியவே இல்லை. நீங்க பேசறதுனாலதான் அவரு பேசறாரு. எங்களாண்ட பேசறபோது அவரு தன்மையா பேசலையா. எங்கிட்ட வந்து நெஞ்சு வலிக்குது சாப்பிடற போதுன்னு என்கிட்ட சொல்ற மனுஷன் உங்ககிட்ட சொல்லலைன்னா உங்களோட சரியான பேச்சு வார்த்தை இல்லை. நீங்க சொல்றதக் கேட்கலை. பத்தாயிரம் ரூபா கொடுக்கணும்."

"எங்கிட்ட எங்க இருக்கு பத்தாயிரம்."

"ஆஸ்பத்திரிக்கு கட்டணுமே."

"மாப்பிள்ளை வந்தாதான் முடியும். கமலக்கண்ணனுக்கு போன் பேசணும்."

"எங்க மாப்பிள்ளை கிட்டயா காசு கேட்பாங்க. நல்லா இருக்கு நீங்க பண்றது. கமலக்கண்ணன் அங்கேயிருந்து எப்போ அனுப்பி எப்போ வாறது."

"சரி நான் கொடுத்துடட்டுமா. நீங்க அப்புறம் கொடுத்துடறீங்களா, சொல்லுங்க."

"அந்த மாதிரிதான் ஏதுனா செய்யணும்" என்று சொல்ல டெலிபோன் மணி அடித்தது. அருகேயிருந்தவர், அடுத்த வீட்டுக்காரர் டெலிபோன் எடுத்து காதில் வைத்துக் கொண்டார்.

கமலக்கண்ணனின் அப்பாவின் பெயரைச் சொன்னார். அவரு இருக்காருங்களா என்று புருஷோத்தமர் குரல் கேட்டது.

"யார் நீங்க பேசறது."

"நான் கமலக்கண்ணன் கட்டப்போறாரே பூரணி அவங்கப்பா பேசறேன்"

"அடடே... சொல்லுங்க. நாங்க வந்திருந்தோமே வீட்டுக்கு."



"ஆமாங்க. அவர்கிட்ட கொஞ்சம் பேசணும்."

"ஒரு தப்பாகிப் போச்சுங்க."

"என்னா."

"அவருக்கு நெஞ்சடைப்பு வந்துடுச்சு. இங்கவந்து சின்னதா அம்மாவோட தகராறுபோல. வீட்டுக்கு வந்து நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னாரு. அப்படியே அள்ளிகிட்டு ஆட்டோவுல போனோம். ஏங்க சண்டை போடறீங்கன்னு கேட்டேன். வீட்ல இருக்கற பொம்பளைங்க சரியில்லைன்னு சொல்லிக்கிட்டிருந்தாரு. கொண்டுபோய் ஆஸ்பத்திரியில சேர்த்தோம். இது வந்து மாரடைப்பு மாஸிவ் அட்டாக். இங்கயே இருக்கட்டும்னு சொல்லி மயக்கமருந்து ஊசி கொடுத்து ஆக்ஸிஜன் கொடுத்து படுக்க வச்சிட்டாங்க."

"ஐய்யய்யோ... ஐய்யய்யோ..."

அவர் பதறினார். தன் பெண்ணுக்கு இது தப்பாக வருமே என்று துடித்தார்.

"இல்லீங்க... ஒண்ணும் அபாயமா ஏதும் இல்லை. தூண்டிட்டாரு. ஆனா, ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்றாங்க. நாடித்துடிப்பு, ப்ளட்பிரஷர் எல்லாம் நார்மலாயிருக்கு. ஆனா, உள்ளுக்குள்ள ஏதுனா ஒரு சின்ன ரிப்பேர் ஆயிருக்கலாம் அப்படின்னு கவலைப்படறாங்க. இவங்ககிட்ட காசு வாங்கறதுக்கு வந்தேன். அம்மா காசு இல்லை அப்படிங்கறாங்க. அதான் என்ன பண்றதுன்னு தெரியாம திகைச்சிட்டிருக்கேன்."

"எவ்வளோங்க காசு."

"அது ஆவுங்க. வெளிய வாறதுக்குள்ள அறுபது எழுபது ரூபா ஆகும். பத்தாயிரம் ரூபா உடனே கட்டணும்னு கேட்கறாங்க."

"நான் வந்துடறேங்க இப்போ. எந்த ஆஸ்பத்திரிங்க."

புருஷோத்தமர் அடுத்த ஒரு மணிநேரத்தில் பூரணியோடும் தன் மனைவியோடும் அந்த தனியார் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்.

பெரியவரை பார்க்கப்போவதற்கு முன்பு பதினைந்தாயிரம் ரூபாய் காசு கட்டினார்.

பெரியவருக்கு மிகத்தரமான சிகிச்சைகள் தரப்படும் என்று டாக்டர்கள் உறுதி அளித்தார்கள். வந்த மனிதர்களைப் பார்த்து காசுக்கு கஷ்டமில்லை என்பதை புரிந்து கொண்டார்கள். எல்லோரும் வெளியிலிருந்து எட்டிப்பார்க்க பூரணியின் அப்பாவிற்கும் பூரணிக்கும் அவரை அருகில் போய் பார்க்க அனுமதி கிடைத்தது. மெல்லப் போய் அருகே நிற்க யாரோ வந்து நிற்பது பார்த்து ஒரு அரைமயக்கத்தில் பெரியவர் பேச முற்பட்டார்.

"ஒண்ணும் பேச வேணாம். நான் பார்த்துக்கறேன்" என்று சொல்ல கையை நீட்டி தடவி புருஷோத்தமனின் கைகளை பெரியவர் பிடித்துக் கொண்டார். மறுபக்கம் நிற்கின்ற பூரணியை தலை திருப்பிப் பார்த்தார்.

அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"அப்பா அழுவாதீங்கப்பா, ஒண்ணும் ஆயிடலை. நல்லா யிட்டீங்க. அபாய கட்டம் தாண்டிட்டீங்க. ஒண்ணும் கவலை இல்லைன்றாங்க டாக்டர். ஆனா, உடம்பை ஜாக்கிரதையா பார்த்துக்கணும்ப்பா. மனசுல எதுவும் போட்டு குழப்பிக்காதீங்க. நாங்க இருக்கோம். நான் கூடவே இருக்கேன்பா. கவலைப் படாதீங்கப்பா."

அவர் பூரணியின் கையை எடுத்து தன்னுடைய நெஞ்சில் வைத்துக்கொண்டார். அந்த நெஞ்சை பூரணி மெல்ல வருடிக் கொடுத்தாள். அவருக்கு அந்த வருடல் சுகமாக இருந்தது. யாரோ மிக நெருங்கியவர் தனக்கு உதவ வந்துவிட்டார்கள் என்பது தெரிந்தது. கண்களை மூடிக்கொண்டார். தூக்கம் அவர் மனதை கவ்வியது. மெல்ல மெல்ல அவர் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

அப்பாவும் பெண்ணும் வெளியே வந்து உட்காரும்போது அம்மா கவலையோடு முகத்தை பொத்திக் கொண்டாள்.

"நான் வாயைமூடிகிட்டு சும்மா இருக்கக்கூடாதா. என்னமோ சொல்லப்போக இந்த பெரியவர் தலைக்குக் கத்தி வந்துடுச்சு. இவர் ஒருத்தர்தான் நமக்கு ஆதரவா இருந்தாரு. இவரும் இப்படி படுத்துகிட்டார்னா நம்ம கதி என்னா."



அம்மா தலையில அடித்துக்கொண்டு அழுதாள்.

"சும்மா இரும்மா, எதையும் போட்டு மனசுல குழப்பிக்காத."

"என்னமோ உன் கல்யாணம் இப்படி குழம்புது."

"குழம்பட்டும். தெளியறதுக்குத்தானே குழம்பும். கவலையே படாதம்மா. எது வந்தாலும் சமாளிக்கலாம்" பூரணி என்றுமில்லாத திடத்தோடு பேசினாள்.

"ஊர் உலகத்துல கல்யாணம் நடக்கலை. எல்லார் வீட்லயும் கல்யாணம் நடக்கலை. நம்ம வீட்டுக்கு மட்டும் ஏன் இந்த மாதிரி வருது."

"அதுவும் நல்லதுக்குத்தான்."

"போடி, என்னாடி நல்லதுக்கு. நான் ஆசை ஆசையா எவ்வளவு செய்யறதுக்கு இருந்தேன்."

"சம்மந்தின்னா மரியாதை இல்லையா, நீ ஏன் கத்தறே."

"என் மயிரை பிடிச்சு இழுத்தா...? எனக்குத் தாங்காது. பாக்கியத்தம்மா நல்லாயிருக்கீங்களான்னு மிருதுவா கேட்டா போதும், ஓடி ஓடி செய்வேன். எனக்கு ஓடிப்போய் செய்யணும் தாண்டி ஆசை. பயமா இருக்குடி. சம்மந்தியம்மாவோட கை கோர்த்துகிட்டு புடவை கடைக்கு போயிட்டு, நகை கடைக்கு போயிட்டு, சினிமாவுக்கு போயிட்டு, ஓட்டலுக்கு அப்படியே கூட்டிட்டு சம்மந்தியம்மாவ வீட்ல விட்டுட்டு திரும்பி வரணும் னுதான் ஆசை. ஒத்த பைசா நீங்க செலவழிக்காதீங்க. நாங்க பண்றோம் அப்படின்னு ஆசை. அதிகாரமா பேசினா, இந்த நாய்க்கு ஏன் செய்யணும்னு தோணுது. பிரியமா பேசினா கொண்டாடலாம். எங்க அக்காளும் பொண்ணு பெத்திருக்கா. அவளும் கொண்டுபோய் பொண்ண கல்யாணம் பண்ணி கொடுத்தா. சம்மந்தி அம்மா டீச்சர். எனக்கு கல்யாணமெல்லாம் பண்ணத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது பள்ளிக்கூடத்துல பசங்களுக்கு கணக்கு சொல்லிக் கொடுக்கறதுதான். நீங்களே எல்லாம் பார்த்து பண்ணிடுங்களேன் அப்படின்னு சொன்னாங் களாம். எங்க அக்கா இழுத்து போட்டுக்கிட்டு அத்தினி செய் திருக்காங்க. ஐயோ செய்யறீங்களேன்னு வாய்க்குவாய்

பாராட்டு. மாம்பலம் ரங்கனாதன் தெருவுல யாரோ காலை மிதிச்சுட்டா. கட்டை விரல் நகத்துலேர்ந்து ரத்தம் வருது. அங்கேயே ஒரு கடை வாசல்ல நிக்கவச்சு ஈரத்துணிபோட்டு மருந்து போட்டு புள்ள பெத்தவோ எங்க அக்கா காலை கட்டிவிட்டிருக்கா. ஐயோ நீங்க தொடாதீங்க, நீங்க தொடாதீங்க அப்படின்னு எங்க அக்கா பதறியிருக்கா. இவ்ளோ ரத்தம் போகுது தொடாதீங்கன்னா என்ன அர்த்தம். சும்மா இருங்க அப்படின்னு அதட்டி டாக்டர் வீட்டுக்கு கூட்டிட்டுபோய் இன்ஜெக்ஷனைப் போட்டு சீராக்கிட்டாங்களாம். எங்க அக்கா அத்தனை பெருமையா சொல்றா கேட்கறதுக்கே காதுக்குள்ள ஜில்லுனு இருக்கு. உடம்பெல்லாம் நனையுது. மனசெல்லாம் நனையுது. சம்மந்தின்னா இப்படி இருக்கணும்.

"அவங்க சொந்தக்காரங்க யாரோ சொன்னாங்களாம், வாழை மரம் இன்னும் பெருசா இருக்கணும், குலைதள்ளின வாழை மரமே இல்லை, வெறும் வாழை மரத்தை வச்சுருக்காங்கன்னு. சம்மந்தியம்மா சொல்லிட்டாங்களாம். குலை தள்ளின வாழை மரம் இல்லாட்டி பரவாயில்லை. நீங்க போய் குலையா தொங்குங்க. இந்த வாழைமரம் போதும்னுட்டாங்களாம். அப்படி இருக்கணும். நமக்கு ஏன் அப்படி வரலை. நாம என்ன பாவம் பண்ணோம். எதுக்கு நம்மள ஓடஓட விரட்டறாங்க."

மருத்துவமனையில் உட்கார்ந்து கொண்டு பூரணியின் அம்மா பாக்கியத்தம்மாள் கதறலாகவே பேசினாள்.

"பாக்கியம், விடும்மா, கடவுள் இருக்கார். நீ சொன்ன இல்ல ஒரு வார்த்தை என் பக்கம் கடவுள் இருந்தா அவளுக்கு தண்டனை கிடைக்கும்னு. இது அவளுக்கு கொடுத்த தண்டனை. அவருக்கு கொடுத்த தண்டனை இல்லை. அவர் பாட்டுக்கு நிம்மதியா தூங்கறார். இதோ பார் மூஞ்சி பேயடிச்சா மாதிரி இருக்கு. உன்னை பார்க்கறதுக்கு அதுக்கு இப்போ மூஞ்சி இருக்குமா."

"வந்து என்ன திட்டப்போறாளோ. சண்டாளி உன்னால தாண்டின்னு என்னை திட்டினாலும் திட்டுவா. உன்னாலதான் எங்க வீட்ல எல்லாக் கெடுதலும் வருதுன்னு சொல்லுவா.



பூரணியை நிச்சயம் பண்ண வேளை என் தாலிக்கயிறு அறுந்து ஆடுதுன்னுவா."

"நான் சொல்லவிடமாட்டேன். ஒழுங்கா இருந்தா அந்த ஊசலாட்டத்தோட போகும். இல்லைன்னா உனக்கும் ஏதுனா தீமை வரும். சும்மாயிருன்னு சொல்லிடமாட்டேன்."

"வேணாம், வேணாம், நாம சொல்ல வேணாம்." பூரணியின் அம்மா கூறினாள்.

சீனுவாசய்யர் கார் உள்ளே நுழைவது தெரிந்தது. எழுந்து நிற்க சீனுவாசய்யர் முன்பக்கத்தில் இறங்கி வேகமாக உள்ளே வந்தார்.

"என்னய்யா எப்படி இருக்கார்."

"ஒண்ணுமில்லை. ஆபத்து கட்டத்தை தாண்டிட்டாரு. ரெண்டு மூணு நாள் அப்படியே படுக்க போட்டுவாங்க. அதுக்கப்புறம் என்ன மாதிரி வைத்தியம் அப்படின்னு யோசனை பண்ணுவாங்களாம். ஜாஸ்தி அவரை தொந்தரவு பண்ண மாட்டாங்களாம். சாப்பாடு கொடுத்து தூங்க வைக்கறதுதான் வேலையாம்."

"ஆமாய்யா, ஹார்ட் அட்டாக்னா அப்படித்தான் பண்ணுவாங்க. சரி, இந்தம்மாவ கூட்டிண்டு வரலையா நீங்க."

"இல்லை."

"நான் கூட்டிண்டு வந்துட்டேன்யா. தப்பா."

"எங்க கூட்டிட்டு வந்தீங்க."

"நீங்க வந்து அந்த வீட்ல இருப்பீங்கன்னு நினைச்சு நான் அந்தப்பக்கம் போனேன். இந்தம்மா என் காரைப் பார்த்தவுடனே நானும் வரேன், நானும் வரேன் என்னை கொண்டுபோய் ஆஸ்பத்திரியில விடுங்கனு சொல்லிச்சு. வண்டியில இருக்காங்க. ஒரே சண்டை."

"என்ன சண்டை."

"கூட பொண்ணும் மாப்பிள்ளையும் வராங்க. மாப்பிள்ளைய காசு கேட்கறது இந்தம்மா. அவன் நல்லாயிருக்கு. எதுக்கு உங்களுக்கு காசு கொடுக்கறதுன்னு கேட்கறான்."

"அடடே... நான் கட்டிட்டேனே பதினஞ்சாயிரத்தை."

"வாயை மூடிண்டு பேசாத கமுக்கமா உட்கார்ந்துண்டிரு. அவங்க இங்க வந்தவுடனே காசு கட்டணுமான்னு கேட்கறேன், என்ன சொல்றாங்கன்னு பார்த்துப்போம். நீ ஓரமாக உட்கார்."

அவர்களை திருப்பி உட்கார வைத்தார்.

படியேறி உள்ளுக்குள் கமலக்கண்ணனின் தாயாரும், தமக்கையும், இன்னொரு பெண்மணியும் மாப்பிள்ளையும் வந்தார்கள்.

காரின் பின்பக்கத்தில் அடைந்து உட்கார்ந்து வந்ததால் கசங்கியிருந்தார்கள்.

"நல்லா இருக்காராம். படுக்கை போட்டிருக்காங்களாம். காசு கட்டணும்னு கேட்கறாங்க, எடுத்துண்டு வந்திருக்கேளான்னு கேட்கறா. என்ன பண்றது."

சீனுவாசய்யர் கேட்க அவர்கள் மூவரும் வந்தவர்களுக்கு முதுகைக் காண்பித்து தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

"மாப்ளைதான் ஏதாவது பண்ணணும்"

"இதோ பாருங்க. சும்மா சும்மா எங்கிட்ட காசு கேட்காதீங்க."

"தே... உங்கிட்ட ஏதாவது இருந்தா கொடுத்துத் தொலையேண்டி சனியனே."

அவன் மனைவியைப் பார்த்துக் கத்தினான்.

"எங்கிட்ட நகைங்கதான் இருக்கு."

"ஏன் உங்க அம்மாகிட்ட நகை இல்லையா. அது மறந்து போச்சா உங்கம்மாவுக்கு. ஏதாவது கேட்டு வாங்கி கொடுத்து காசுக்கு ஏற்பாடு பண்ணு."

"யாராண்ட சொல்றது."

"சீனுவாசய்யர் இருக்காரு இல்ல."

"அவர் நமக்கு தெரிஞ்சவர். அவ்ளோதான். அவராண்ட போய் நகைய அடமானம் வைக்க சொல்றதா."



"என்ன பண்ணணும். என்ன பிரச்சனை. பேங்க்ல ஏதாவது காசு இருக்கா."

"அது அவருக்குத்தான் தெரியுங்க."

"எங்ககிட்டே தனியா ஒண்ணும் காசு இல்லை. ஆயிரம் ஆயிரத்து ஐநூறுதான் வச்சப்போம்."

"இல்லீங்க, எங்க வீட்டுக்காரருக்கும் இப்போ கஷ்டமான நேரம். காசு இல்லை, அம்மாவோட நகை தரேன். கொஞ்சம் வச்சு வாங்கித் தரீங்களா."

"ஐய்யோ... உங்க வீட்டு நகைய நான் வச்சாக்க நல்லாயிருக்குமா. உங்க மாப்பிள்ளைய வைக்க சொல்லுங்க. சாயந்தரத்துக்குள்ள காசு கட்டணும்."

கமலக்கண்ணனின் தாயார் இடது கை பக்கமிருந்த நாலு வளையல்களைக் கழட்டி மாப்பிள்ளையிடம் கொடுக்க மாப்பிள்ளை அதை வாங்கி பையில் போட்டுக்கொண்டு வெளியே போனான்.

# 45

"புருஷோத்தமர் இங்கதான் வந்தார். எங்க இருக்கார்னு தெரியலையே."

முன்னும் பின்னும் தேடுவது போல சீனுவாசய்யர் பார்க்க புருஷோத்தமர் எழுந்து நின்று சப்தமெழுப்பினார்.

சட்டென்று இவர்களைப் பார்த்து "அடடே..." என்றார். கமலக்கண்ணன் தாயாரை நோக்கி வந்தார்.

"என்னம்மா இப்படி ஆயிடுச்சு. ஆனா, நான் வந்து பார்த்து உள்ள போய் பேசினேன். நல்லா கண்ணு திறந்து பேசினாரு. ஒண்ணுமில்லைய்யா கவலைப்படாதீங்க சரியாப்போயிடும்னு சொன்னாரு. பூரணிகிட்டயும் பேசினாரு. பூரணி உடம்பெல்லாம் தடவி கொடுத்தது. பூரணியை பார்த்தவுடனே அழுதாரு. அழாதீங்கப்பா, ரெண்டு மூணு நாள்ல சரியாயிடும். கொஞ்சம் அமைதியா இருங்கப்பான்னு சொல்லிட்டு வந்தேன்."

"அப்படியா... நான் பார்க்கணுமே" பரபரத்தாள்.

"உள்ள விடமாட்டாங்கன்னு நினைக்கிறேன்."

"எப்படியாவது ஏற்பாடு பண்ணுங்களேன்"

ஆனால், மருத்துவமனையில் மறுத்து விட்டார்கள். "சும்மா சும்மா பார்த்துக்கிட்டிருந்தீங்கன்னா அவரு டென்ஷன் ஆயிடுவார். சும்மா இருங்க. நாளைக்கு பார்த்துக்கலாம்."

"என்னம்மா உங்க வீட்டுக்காரர் வரலையா" என்று அன்போடு புருஷோத்தமர் கமலக்கண்ணனின் தமக்கையை பார்த்துக் கேட்டார்.

"இல்லை. காசுக்கு ஏற்பாடு பண்ணப் போயிருக்கிறார்."

"ஏம்மா நீங்க அவஸ்தைப்படறீங்க. நான் பார்த்துக்கறேன்."

"அதெல்லாம் வேணாம்" வேகமாக கமலக்கண்ணனின் தமக்கை மறுத்தாள்.

"இல்லையே. பதினஞ்சாயிரம் ரூபா கேட்டாங்க. கட்டிட்டேன்."

"கட்டிட்டீங்களா." கமலக்கண்ணன் தமக்கை திகைத்தாள். அந்த வளையலைப் போய் மறுபடியும் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று கமலக்கண்ணன் அம்மாவுக்குப் பட்டது. ஆனால், பதினைந்தாயிரம் ரூபாயோடு போகாது என்பது அவளுக்குப் புரிந்தது.

"எவ்ளோ கட்டினீங்க."

"பதினஞ்சாயிரம்."

"திருப்பி கொடுத்துடறோம்."

"ஆகட்டுமா. மெல்ல கொடுங்க என்ன இப்போ. வாங்கிக்க மாட்டேன்னா சொல்றேன்." புருஷோத்தமர் பேசினார்.

"கமலக்கண்ணன்கிட்ட சொல்லணுமே."

"ஏம்மா அந்த தொலைதூரத்துல இருக்கறவர்கிட்ட போய் ஏன் இதெல்லாம் சொல்லணும். சும்மாயிருங்க. மூணு நாள்ல சரியாப்போயிடும். வீட்டுக்கு கூட்டிட்டு போயிடலாம்."

"காசு வரணுங்க. அதுக்குத்தான் கேட்கறேன்."



"போய் ஒருமாசம்தானே ஆச்சு. இப்பவே காசு கேட்டோம்னா அவரு என்ன பண்ணுவாரு. எல்லாம் நான் பார்த்துக்கறேன். வாங்க. இப்போ செலவு பண்ணிடறேன். கமலக்கண்ணன் வரும்போது கமலக்கண்ணன்கிட்ட வாங்கிக்கறேன்."

"நீங்க ஏன் அதெல்லாம் கவலைப்படறீங்க. அவரை காசு அனுப்புங்கன்னு சொல்ல வேண்டாம். நான் பார்த்துக்கறேன்."

அவர் ஆஸ்பத்திரி கணக்கரிடம் மொத்தமாக எவ்வளவு செலவாகும் என்று கேட்ட போது ஐந்துநாள் மருத்துவமனையில் தங்க வேண்டியிருக்கும் என்றும் அதில் மூன்று நாள் ஸ்பெஷல் வார்ட் என்றும், இரண்டுநாள் சாதாரண வார்ட் என்றும் எல்லாம் சேர்த்து ஐம்பதாயிரம் ரூபாய் ஆகலாம் என்றும் சொல்ல கமலக்கண்ணன் தமக்கைக்கு தலைசுற்றியது.

"இந்த நாலு வளையலும் கூட போதாதே. என்ன பண்ணுவ."

"என்னதும்மா நாலு வளையல்."

"அம்மா வளையலைக் கழட்டி எங்க வீட்டுக்காரர்கிட்ட கொடுத்திருக்காங்க, துட்டு வாங்கிட்டு வரச்சொல்லி."

"ஐய்யய்ய... அதெல்லாம் பண்ணாதீங்கம்மா. நான்தான் காசு பார்த்துக்கறேன்னு சொன்னேன் இல்ல."

"நீங்க சொல்றதுக்கு முன்னாடியே எங்க வீட்டுக்காரு எடுத்துக்கிட்டு போயிட்டாரு."

"என்னத்துக்கு இது. சரி மீட்டுடலாம்." அடமான ரசீதோடும், காசோடும் மாப்பிள்ளை வர அந்த ரசீதையும், காசையும் புருஷோத்தமர் வாங்கிக்கொண்டார். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஆக, இன்னிக்கு ஒரு நாள் வட்டி இருநூத்தி நாப்பத்தஞ்சு ரூபா போகும். அவ்ளோதானே. அதுக்காக உங்க தங்க வளையலை வைக்கறதா. நாலு சவரனுக்கு பதினோராயிரம் ரூபாதான் கொடுத்திருக்கானா. சரி பரவாயில்லை நான் கொண்டு போய் உடனே மாத்திகிட்டு வந்துடறேன்."

"பூரணி, அவங்க அம்மாவுக்கு ஆறுதல் சொல்லி பேசிகிட்டிரு" என்று சொல்ல பாக்கியத்தம்மாளுக்கும் பூரணிக்கும் நடுவே கமலக்கண்ணனின் தாயார் உட்கார்ந்தாள்.

புருஷோத்தமர் சீனுவாசய்யர் காரில் ஏறிப்போனார்.

"சீனுவாசய்யரே நீர் எப்படி உதவி செய்யறீர் தெரியுமா. தெய்வம்யா நீர். என் குடும்பத்துக்கு தெய்வம். பொழிச்சலூர் சிவனை நான் பார்த்ததேயில்லை. சீனுவாசய்யரைதான் பொழிச்சலூர் சிவனா பார்க்கறேன்."

கண்ணில் நீர் கட்டிக்கொண்டு கன்னத்தில் இறங்கியது. புருஷோத்தமர் குரல் தழுதழுக்க சீனுவாசய்யரிடம் பேச சீனுவாசய்யர் வாய்விட்டுச் சிரித்தார்.

"அடப்பாவி பூரணியை வந்து என் சொந்த பொண்ணு மாதிரி நான் நினைச்சிண்டிருக்கேன். நீ என்னமோ பிரிச்ச ஒரு ஓரமா கருங்கல்லா உட்கார வைக்கறயே. இதுக்குப் போய் கன்ல ஜலம் விட்டுண்டு நான் தப்பு பண்ணிட்டனோன்னு பயந்தேன். நல்லவேளை இல்லைன்னு ஆயிடுத்து."

"என்னது."

"நான் போய் தடுக்குனு உன்னைத் தேடிண்டு அவங்க வீட்டுக்குப்போக அவங்க ஏறி உட்கார நேரம் காலம் தெரியாத இவங்களை கொண்டு வந்துடறோமோ, இதுங்க கத்தறதை மறுபடியும் பார்க்கப்போறமோ அப்படின்னு கலவரமாகவே வண்டியை ஓட்டிண்டு வந்தேன். ரொம்ப நல்ல புருஷன். சொன்ன பேச்சு கேட்கிறார். அதனாலேயே கொஞ்சம் கூடுதலா ஆடறாங்க. மாமனார், மாமியார் அவளை தொந்தரவு பண்றதே கிடையாது. அதனாலதான் அவளுக்கு மத்தவங்க துன்பம் தெரியலை. அவ புருஷன் வீட்டுக்காரங்களை மதிக்கறதில்லை. புருஷன் வீட்டுக்காரங்க வீட்டுக்கு போகறதுமில்லை."

ஏன் உங்கப்பா அம்மா வீட்டுக்கு தினம் போற. தேவையில்லாத விஷயம் அப்படின்னு கத்தறார். வீடு குப்பையா இருக்கு. அதைப் பெருக்கி துடைக்கறதைக் காணோம். என்னத்துக்கு நீ அலையற அப்படிங்கறார்."



"நீங்க எதுனா சொன்னீங்களா."

"வாயே திறக்கலை. வெறுமனே அவங்க சண்டை கேட்டுக்கிட்டே வந்தேன். மாப்பிள்ளையை ஒருநாள் கூப்பிட்டு கொஞ்சம் உன் பொண்டாட்டிய அடக்கி வை. வீட்டு சமாச்சாரத்தை கெடுக்கறான்னு சொன்னா போதும் நசுக்கி தேய்ச்சு விடுவான்."

"அப்படியெல்லாம் போகவேணாய்யா."

"இல்லை கடைசிப்பட்சமா அந்த ஆயுதமும் இருக்குன்னு சொல்ல வரேன்."

"சரி இப்பவே பதினஞ்சாயிரம் கட்டிட்டோம். மொத்தப் பணமும் கட்றதா சொல்லிட்டோம். அம்பதாயிரம் ரூபா ஆகும்னு சொல்றானே என்ன பண்ணலாம்."

"நீங்கதான்யா கொடுக்கணும். கொடுக்க கொடுக்க பூரணிக்கு நல்லது."

"இது என்னான்னு செலவு."

"அது பின்னாடி பார்த்துக்கலாம்யா. உம்ம செலவுன்னே வச்சுக்க. அங்கேயிருந்து கமலக்கண்ணன் கொண்டு வந்து வட்டியும் முதலுமா கொடுத்துட்டா வாங்கி உள்ள வச்சுக்கோ. அந்தக் காசுக்கு வேற எதுனா நகை வாங்கி உன் பொண்ணு கழுத்துல மாட்டு."

"கமலக்கண்ணன்கிட்ட இதை சொல்றதா வேணாமா."

"வேணாய்யா. விட்டுரு. சொல்லாத."

"இவங்க அவசரப்பட்டு சொல்லிடுவாங்கன்னு எனக்குத் தோணுது. குறிப்பா அந்த மாப்பிள்ளை சொல்லிடுவான். தன்னை தட்டுக்கு தொந்தரவு பண்ணப் போறாங்களேன்னு நினைச்சு அவன் போன் பண்ணி உங்கப்பாவுக்கு இப்படி ஆயிப் போச்சு. கொஞ்சம் உடனடியா காசு அனுப்பு அப்படின்னு கேட்பான். அந்தக் காசையும் தனக்கு அனுப்புன்னு சொல்லுவான். போகட்டும் விடுங்க."

"கமலக்கண்ணன் அனுப்ப மாட்டான்யா."

"பிறகு."

"உடனே போன் பண்ணி நம்மள கேட்பான். அப்பாவை பார்த்தீங்களான்னு."

"நாம அப்போ என்ன சொல்றது. அதை சொல்லுங்க."

புருஷோத்தமர் சீனுவாசய்யரைக் கேட்க சீனுவாசய்யர் யோசனையோடு கார் ஓட்டினார்.

"போன் பண்ணா சொல்லிடு. பதினஞ்சாயிரம் ரூபா கட்டிட்டேன். ரசீது வச்சுண்டிருக்கேன். அடுத்தபடியா ஒரு பதினஞ்சாயிரம் ரூபா நாளை மறுநாள் கேட்பாங்க. அப்போவும் கட்டிடுவேன். அப்பாவைப்பத்தி எந்தக் கவலையும்படாத. நான் பார்த்துக்கறேன். எந்தத் தொந்தரவும் இல்லை. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு சண்டை போட்டாங்க அதனாலன்னு சொல்லிடு."

"என்ன சண்டைன்னு கேட்பான்."

"அப்போ அவங்க அம்மாவும் தங்கையும் வந்து கத்தினதைச் சொல்லு."

"சொல்லட்டுமா."

"சொல்லுய்யா, அந்தப் பையனுக்கு தெரியணும். அவங்க அம்மா தப்பு. அவங்க தங்கச்சி தப்புன்னு தெரியணும்."

"என் சொன்னீங்கன்னு இவங்க கத்தினா."

"நானா சொல்லலைங்க. உங்க மாப்பிள்ளை சொல்லியிருப்பாரோன்னு சொல்லி விட்டுட்டேன்."

"என்னாத்துக்கு இந்த தந்திரம்."

"தந்திரம் தான் பண்ணியாகணும். பெண்ணா பெத்துட்ட இல்ல."

"அவங்க தந்திரமா வராங்க இல்ல. அப்போ நாம தந்திரம் பண்ணித்தான் ஆகணும்."

அடுக்கடை வாசலில் கார் நின்றது. புருஷோத்தமர் கீழிறங்கினார். பணத்தைத் திருப்பி கொடுத்தார். இருநூற்று நாற்பது ரூபாய் வட்டி கட்டினார். அந்த வட்டிக்கு தனி ரசீது வாங்கிக் கொண்டார். பத்திரப்படுத்திக் கொண்டார். வளையல் எடுத்துக் கொண்டு வந்து திரும்பவும் மருத்துவமனைக்கு வந்தார்.



பாக்கியத்தம்மாளிடம் வளையலைக் கொடுத்து "அந்தம்மா கையில மாட்டிவிடு" என்று சொன்னார்.

பாக்கியத்தம்மாள் கமலக்கண்ணனின் தாயாரின் கையைப் பிடித்து வளையலை மாட்டிவிட கமலக்கண்ணனின் தாயாருக்கு அழுகை பொங்கி வந்தது. முகத்தைப் பொத்திக் கொண்டு வேகமாக அழ ஆரம்பித்தாள்.

பாக்கியத்தம்மாள் அவளை அணைத்துக்கொண்டாள். அந்த அணைப்பில் உண்மை இருந்தது. நிஜமான அன்பு இருந்தது.

அடி... அறிவுகெட்டவளே, எதுக்குடி இந்த கூச்சலெல்லாம் என்கிற பரிதாபம் இருந்தது.

பூரணி கமலக்கண்ணன் அம்மாவின் மறுபுறம் உட்கார்ந்து தலையை தடவிக் கொடுத்தாள். அலை அலையாக கமலக் கண்ணன் வீடு ஜனங்கள் பார்க்க வர பூரணியும், பூரணியின் அம்மாவும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

"உங்களுக்கு சாப்பாடு எடுத்துட்டு வரட்டுமா" என்று பூரணி கேட்டாள்.

"எங்கேயிருந்து எங்க சாப்பாடு எடுத்துக்கிட்டு வருவ. நான் பார்த்துக்கறேன்மா."

கமலக்கண்ணனின் அம்மா பேசினாள். அதில் ஸ்நேகம் இருந்தது.

"பொண்ணையும் அனுப்பிட்டீங்க. அப்போ உங்களை யார் பார்த்துப்பா. டாக்டர் என்ன சொல்றாரு. இன்னும் ஒரு மாசத்துக்கு பெட்ரெஸ்ட் இருக்கணும்னு சொல்றாரு. கூட மாட உதவி செய்யிறதுக்கு ஆள் இல்லாத எப்படி பெட்ரெஸ்ட் வரும். எப்படி ஓய்வு எடுக்க முடியும். அதனால ஒரு யோசனை சொல்றேன். தயவுசெய்து தப்பா நினைக்காதீங்க."

உங்க வீட்டை பூட்டிட்டு புருஷனும் பொண்டாட்டியும் தயவுசெய்து எங்க வீட்டுக்கு வந்துடுங்க. எங்க வீட்ல தங்குங்க. ஒரு மாசம் வேணாங்க. குறைஞ்ச பட்சம் ஒரு பதினைஞ்சு நாள் தங்குங்க.''

புருஷோத்தமர் மருத்துவமனையில் கமலக்கண்ணன் அப்பாவுக்கு அருகேயிருந்து கை கட்டிப்பேச கமலக்கண்ணன் அப்பா தன் கையை நீட்டி கட்டப்பட்ட புருஷோத்தமரின் கையை பிரித்து விட்டார்.

இப்படி அடக்க ஒடுக்கமாக நிற்க வேண்டாம். சாதாரணமாக இரு என்று அந்த செய்கை சொல்லாமல் சொன்னது.

"இதுல ரெண்டு லாபம் இருக்கு. நீங்க வந்து போற ஒரு சந்தோஷம். உங்களுக்கு நாங்க உதவி செய்யற ஒரு திருப்தி. அதைத்தாண்டி நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முடியறது. நான் ஏதாவது தப்பா பேசியிருந்தா தயவு செய்து மன்னிச்சுடுங்கோ" மறுபடியும் புருஷோத்தமர் கைகட்ட, கமலக்கண்ணனின் தகப்பன் மீண்டும் கைநீட்டி அப்படி கட்டப்பட்ட கைகளை பிரித்து "இப்படி வேணாம்" என்று மெல்லிய குரலில் அன்போடு கட்டளையிட்டார்.மறுபடியும் யோசனை செய்தார்.

"என் பொண்டாட்டிக்கு சம்மதம்னா எனக்கும் சம்மதம். கல்யாணமே ஆகலை. "இப்போபோய் கை நனைக்கிறதா அப்படின்றதெல்லாம் அன்னியமா நினைக்கிறவங்களுக்குத்தான்." பாக்கியத்தம்மாளுக்கு அந்தக் குரலும் அந்தப் பேச்சின் குழைவும் பளிச்சென்று கண்களில் நீர்த்தளும்ப வைத்தன. இரண்டடி முன்னேறி கமலக்கண்ணன் தந்தையின் காலைத்தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாள். நீங்கள் என் சகோதரன் என்று சொல்லாமல் சொன்னாள்.

கமலக்கண்ணனின் தாயாருக்கு தன் மகளை ஒரு முறை கேட்டுக்கொள்வோமா என்ற எண்ணம் வந்தது. திரும்பத் திரும்ப புத்தி இப்படியே யோசிக்கறதே என்றுதன்னைத்தானே மனசுக்குள் அதட்டிக் கொண்டாள். நான்கு நாட்களாய் மருத்துவமனையில் புருஷனுக்கு அருகே இருந்து ஆழ்ந்து யோசித்துப் பார்த்ததில் தன் மகள் வெவ்வேறு விதங்களாய் தன்னை பல்வேறு செயல்களுக்கு தூண்டிவிட்டிருப்பது தெரிந்தது. இந்த விஷயத்தில் மட்டுமில்லை. இன்னும் பல விஷயங்களில் தன்னை பகடைக்காயாய் மகள் உபயோகப்படுத்தியிருக்கிறாள் என்பது புரிந்தது. மகள் என்ற பாசத்தில் கண்மூடி மிக



முட்டாள்தனமாக பலபேரை நோகடித்திருக்கிறோம் என்பது தெரிந்தது.

இது தவிர காசு கேட்டதற்காக மாப்பிள்ளை சீறி விழுந்ததும், அலட்சியப்படுத்தியதும் நெஞ்சை மிகவும் வலிக்கச் செய்தன. நேரத்திற்கு உதவி செய்யாது தூஷணையாகப் பேசுகிற மனிதர்களை கொண்டாடிக் கொண்டிருந்தோமே என்று வருத்தம் ஏற்பட்டது. உறவுக்காரர்களிடம் பேசி அடுத்த காசு திரட்டுவதற்கு முயற்சி செய்து சிறிதளவு காசோடு மருத்துவமனைக்கு வந்து காசு கட்ட முற்படும் போது மிகப்பெரிய தொகை கட்டப்பட்டிருப்பது தெரிந்து திக்குமுக்காடிப் போனாள். வாய்விட்டு அழவேண்டும் போலிருந்த உணர்வை அடக்கிக் கொண்டாள்.

மாப்பிள்ளையும் மகளும் எதிர்ப்பட மறுபடியும் காசுக்கு மன்றாடினாள்.

"நீங்கதானே செய்யணும். கமலக்கண்ணன்கிட்ட வாங்கி கொடுத்துடறேன் எதுனா செய்யுங்க" என்று கைகூப்பி மாப்பிள்ளையிடம் கெஞ்சினாள்.

"எது வேணா பண்றேன். உடனடியா கமலக்கண்ணனுக்கு போன் பண்ணி எப்படியாவது காசு அனுப்புடா. நீ போய் ஒரு மாசம் ஆச்சு. அந்த சம்பளத்துல டப்புனு அனுப்பு அப்படின்னு கேட்கறேன். மாசத்துக்கு எண்பதாயிரம் ரூபா சம்பளம்னா நமக்கு பெரிய விஷயமாச்சே. எதுனா கடனை வாங்கி ஒரு லட்ச ரூபா அனுப்பமாட்டானா. டப்புனு ஒரு ஐநூறு ரூபா கொடுங்க." கைநீட்டினான்.

"எதுக்கு."

கமலக்கண்ணனின் அம்மா வியந்தாள். "போன் பண்ண வேணாமா நிமிஷத்துக்கு அறுபது ரூபா ஆகும். அவன்கிட்ட பேச வேணாமா."

கமலக்கண்ணனின் அம்மா நொந்து போனாள். ஐநூறு ரூபாய் தன் கைகாசிலிருந்து உருவிக்கொடுத்தாள்.

"ஏண்டி உங்கிட்ட காசே இல்லையா."

மகளை கடிந்துகொண்டபோது மகள் கள்ளென்று பதிலுக்கு சீறி விழுந்தாள்.

"வெட்கம், மானம், சூடு, சுரனை ஏதாவது இருக்கா? வீட்டுக்காரருக்கு உடம்பு சரியில்லைன்னா மாப்பிள்ளை கிட்டதான் காசு கேட்பியா. இதை அவங்கவீட்ல போய் சொன்னாக்க என் நிலைமை என்ன. யோசனை பண்ணியா."

"நல்லது, கெட்டதுக்கு மனுஷாள் உதவி பண்றது வழக்கம் தானடி."

கமலக்கண்ணனின் தாயார் மெல்லியகுரலில் பேசினாள்.

"வழக்கம்தான். அப்படியென்ன பஞ்சப்பனாதியா நீங்க அப்படின்னு அவங்க கேட்பாங்க. அதுவும் வழக்கம்தான், தயவுசெய்து இன்னொரு தடவை துட்டு கேட்டு என் மானத்தை வாங்காத. உன் புருஷன் பெரிய கித்தாப்பா வெளியபோ, வெளிய போன்னு என்னை அடிச்சு துரத்தினானே. பெத்த பொண்ணுன்னு பார்க்காத பையத் தூக்கி போட்டானே. நான் மறப்பேனா. என் புருஷன் காசு கொடுக்கட்டுமான்னு கேட்டா கூட நான் வேணாம்னுதான் சொல்வேனே தவிர கொடுன்னு சொல்ல மாட்டேன்."

இந்த நிஷ்டூரப் பேச்சில் தான் கமலக்கண்ணனின் தாயார் ஆடிப்போனாள். மகளின் செய்நன்றி கொன்ற தன்மையை உணர்ந்தாள். உள்ளே பட்டென்று ஒருநூல் அறுந்து போயிற்று. தான் செய்த தவறு பூதாகரமாக எழுந்து தாண்டவமாயிற்று.

திசைதிரும்பினாள். புருஷோத்தமரையும் பாக்கியத்தம்மாளையும் பார்த்தாள்.

## 46

பொண்ண பெத்தவங்க பணிஞ்சுதான் போகணும்னு மடத்தனமா யோசனை பண்ணியிருக்கேன். அது செய்யணும், இது செய்யணும்னு எந்த அவசியமும் இல்லை. எந்த சட்டமும் இல்லை. உதவிகேட்டு முடியாதுன்னு சொன்னா மாப்பிள்



ளைக்கு முன்னாடி கேட்காதயே பதினைந்தாயிரம் ரூபாயை கொடுத்து மிச்சத்துக்கு நான் இருக்கேன் கவலைப்படாதேன்னு சொல்லி மொத்தப் பணமும் கட்டி இதோ இந்த நேரம் எங்க வீட்டுக்கு வா, நான் பார்த்துக்கறேன் பத்து நாள் அப்படின்னு வாயார சொல்றாங்களே இப்படி உண்டா. கூடப்பிறந்தவங்க செய்யாத உதவியை இந்தக் குடும்பம் செய்யுதே. இதை விட நல்ல மனுஷங்க உண்டா. பொண்ணு கொடுத்ததாலயா செய்யறாங்க.இல்லை. இவர் நல்ல மனுஷர். எனக்கு வேற வழியில்லை. நான் ஒண்டியா இவரை காப்பாத்த முடியாது. வேளா வேளைக்கு மருந்து கொடுக்கணும். கைய பிடிச்சு நடக்க வைக்கணும். பத்தியமான சமையல் ஆக்கிப் போடணும். எனக்கு முடியுமா. அஞ்சு நாள் ஆஸ்பத்திரியில் அரையும்குறையுமா சாப்பிட்டு சரியா தூக்கம் இல்லாத. பயந்து போய் உடம்பு வாடிப்போச்சு. நின்னா கால் நடுங்குது. நான் சொன்ன ஒரு வார்த்தைய பிடிச்சுக்கிட்டு பொண்ணு வர முடியாதுனுட்டா. போன்னு சொன்னீங்களே நான் ஏன் வரணும் அப்படின்னு கேள்வி கேட்கறா. என்னா... பொண்ண எடுக்கப் போற இடத்துலபோய் மல்லாக்க படுத்துக்குவாங்களா. ஊர் கேலி பண்ணும்.

பண்ணிட்டு போகட்டும். கேலியை விட அவர் உயிர் முக்கியம். இன்னும் ஒரு மாசம் நல்லா பார்த்துக்கணும்னு சொல்ற போது மறுபடியும் அட்டாக் வரலாம்னு சொல்றபோது நான் எதுக்கு தனியா கிடந்து லோல் படணும். பாக்கியத்தம்மா சொல்ற மாதிரி ஒருத்தரை யொருத்தர் புரிஞ்சுக்கறது நல்லது.

யோசித்துக் கொண்டிருந்தபோதே கமலக்கண்ணன் அம்மாவுக்கு இன்னொரு நினைப்பும் வந்தது.

ஒருநிமிஷம் கல்லு புரண்டு அவர் கதை முடிஞ்சு இருந்துன்னா என் கதை என்ன கதி. யார் சீந்துவா. எவ்ளோ பிடுங்கலாம்னு தான் பார்ப்பாங்களே தவிர எதெல்லாம் எடுத்துக்கிட்டு போகலாம்னு தான்பார்ப்பாங்களே தவிர உதவி செய்யமாட்டாங்க. கமலக்கண்ணன் எங்கயோ பாலைவனத்துல மாட்டிக்கிட்டு வரவும் முடியாத போகவும் முடியாத கிடப்பான். அப்படி வராதா இருந்தா வேலையை உதறிட்டு வரணும். இங்கு இருக்கிற

வேலையையும் விட்டுட்டு அங்கு இருக்கிற வேலையையும் விட்டுட்டு அந்தப்புள்ள வேற நிர்க்கதியா அலையும். கடவுளே காப்பாத்திட்ட காப்பாத்திட்ட. குடும்பம் கலையாத காப்பாத் திட்ட. எனக்கு சம்பந்தியா, புருஷோத்தமர் வந்து காப்பாத் திட்டாரு.

நர்ஸ் சொல்றாங்க. பதினஞ்சாயிரம் ரூபா கட்டினவுடனே உடனே நாங்க ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சுட்டோம். கொடுத்துடு வாங்கன்ற நம்பிக்கை வந்தவுடனே நாங்கள் ஜாக்கிரதையா கவனிச்சுக்கிட்டோம். கொண்ணாந்து சேர்த்த நைட்கூட ரெண்டு தடவை கஷ்டப்பட்டாரு. ஹெப்பாரின் இன்ஜெக்ஷன் போட்டோம். பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை டூட்டி டாக்டருங்க பார்த்துகிட்டே இருந்தாங்க. ஒரு நர்ஸை தனியா போட்டு மானிட்டரையே கவனிச்சுக்கிட்டிருந்தாங்க. இருபத்திநாலு மணி நேரம் கழிச்சதான் எல்லாம் சரியாச்சு. அந்த ரெண்டு ஹெப்பாரின் இன்ஜெக்ஷன் போடாட்டி தப்பாயிருக்கலாம்."

கமலக்கண்ணன் அம்மாவுக்கு அந்த தாதியோடு இரவுநேர அரட்டையில் அந்த ஆபத்தின் முழு கனம் புரிந்தது.

பூரணி மின்னலாய்ச் சுழன்றாள்.

அந்த வீட்டின் எல்லாக் கதவுகளையும் பூட்டினாள். அடுப்பு அணைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தாள். சமையல் அறை சாளரங்களை மட்டும் திறந்து வைத்தாள். ஒரு வேளை கேஸ் லீக்கானா இப்படியே போயிடட்டும் அதுக்காகத்தான். எப்பவும் திறந்து வைக்கறது நல்லது" என்று கதவு சார்த்தியவுடன் சுத்தமாகப் பெருக்கினாள்.

"திரும்பி வரும் போது தூசியா இருந்தா மனசுக்கு கஷ்டமா இருக்குமில்லை.அதான் வீட்டை பூட்டிட்டு போறபோது ஒரு தடவை பெருக்கிடறது நல்லது."

பீரோவை திறந்து அவர்களுக்கு தேவையான புடவைகளையும், வேட்டிகளையும், சட்டைகளையும் மடித்து எடுத்துக் கொண்டாள். ஒரு பெட்டியைத் திறந்து அதில் எல்லாவற்றையும் அடுக்கி வைத்தாள். உள்ளேயிருந்த நகைகளை வெள்ளிப்



பாத்திரங்களை எடுத்து தனியே மூட்டைக்கட்டி அதை இன்னொரு பையில் போட்டுக் கொண்டாள்.

சீனுவாசய்யர் கார் கொண்டு வர கமலக்கண்ணன் தந்தையும் தாயும் குடிபெயர்ந்தார்கள். பொழிச்சலூரில் வந்து இறங்கினார்கள்.

ஒரே வாரத்தில் தன் வாழ்க்கை திசைமாறிப் போனதை கமலக்கண்ணனின் தாயார் உணர்ந்தாள். வெட்கப்பட்டாள். கூச்சத்தோடு உள்ளே நுழைந்தாள்.

பாக்கியத்தம்மாள் அவளை அன்போடு வரவேற்று "இதோ பாருங்க. இது உங்க வீடு. கொஞ்சம்கூட சங்கோஜப்படாம நிம்மதியாக இருங்க. இது பூரணி படுக்கை. இது வசதியா இருக்குமான்னு பாருங்க. இல்லைன்னா இந்த ரூம்ல ஒரு கட்டில் இருக்கு அங்கேயும் வந்து பாருங்க."

கமலக்கண்ணனின் அப்பா அங்கே வந்து உட்கார்ந்து கொண்டார். பிறகு மெல்லப்படுத்துக் கொண்டார். பூரணி அருகே அமர்ந்து காலைப் பிடித்துவிட சில நிமிடங்களில் தூங்கிப் போனார்.

அன்று இரவு கமலக்கண்ணன் அலறி அடித்துக் கொண்டு போன் செய்தான். உரக்கக் கத்தினான்.

"வீட்டுக்கு போன் பண்ணேன். பெல் அடிச்சுகிட்டே இருக்கு. பூரணி... பூரணி இல்லையா" என்று கேட்டான்.

பூரணியின் அம்மா தொலைபேசியை பூரணியிடம் கொடுத்தாள். பூரணி அவனை அமைதிப்படுத்தினாள்.

"ஒண்ணுமில்லை. ஒண்ணுமில்லை. பயப்படாதீங்க. கத்தாதீங்க. உங்களுக்கு ஏதாவது ஆயிடப்போகுது சும்மாயிருங்க. அப்பா நல்லா இருக்காரு. திரும்பவும் சொல்றேன். அப்பா நல்லாயிருக்காரு. இப்போ எங்க வீட்ல இருக்காரு."

வீட்டுக்கு வந்திருந்த சீனுவாசய்யர் போனை வாங்கிக் கொண்டார்.

"கமலக்கண்ணா கவலைப்படாதே. தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சு. பெரிய கண்டம் தாண்டிட்டாரு

உங்கப்பா. வீட்ல யாருமில்லை உதவிக்கு அப்படின்றதுனால இங்க கொண்ணாந்துட்டோம்."

"அம்மா, தங்கச்சியெல்லாம் எங்க போச்சு..." என்று கத்த "அதை அப்புறம் சொல்றேன். நீ எதுக்கும் பயப்படாத ஒரு அரைமணி நேரம் கழிச்சு போன் செய். அப்போதான் படபடப்பு இல்லாது பேசுவ. ஒரு காபிகுடிச்சட்டு வா" என்று உத்தர விட்டார்.

அவன் டெலிபோனை துண்டித்தான். ஒரு மணி நேரம் கழித்து மறுபடியும் தொடர்பு கொண்டான்.

"நம்ம மாப்பிள்ளை சொன்னாராமே அரையும் குறையுமா யார் யார்கிட்டயோ சொல்லி எங்களுக்கு தகவல் வந்தது. ஏன் அந்தாள்கிட்ட பேசவிடற. நீங்க சொல்லக்கூடாதா."

அம்மாவிடம் கத்தினான். பூரணி வாங்கி என்ன நடந்தது என்பதை விளக்கினாள். ஏன் இங்கே கூட்டிக் கொண்டு வந்தோம் என்பதைச் சொன்னாள்.

"எனக்கு புரியுது பூரணி. ரொம்ப பெரிய உதவியை பண்ணி யிருக்கீங்க. யார் கொடுத்தது காசு" என்று கேட்டான்.

"அப்பாதான் ஏதோ கொடுத்திருக்காரு" என்று பூரணி சொல்ல கமலக்கண்ணனின் அம்மா போனை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

"இவங்கதான் முழுக்க கொடுத்தாங்க. நம்ம மாப்பிள்ளை கிட்ட கேட்டேன். எங்கிட்ட இப்போ ஏது காசுன்னு சொல்லி அசிங்கமா பேசிட்டாரு. ரொம்ப ரொம்ப வருத்தமாப் போச்சு. என் புருஷன்கிட்ட ஏன் காசு கேட்கற. உங்களை பிச்சைக்கார பன்னா டையா நினைக்க மாட்டாங்களா. அப்படின்னு அவ கத்திட்டு போயிட்டா.

நான் எங்க போவேன் சொல்லு. யாரைக் கேட்பேன். நான் கேட்காத இவங்களா செய்தாங்க. இவங்களுக்கு நான் கெடுதல் பண்ணிட்டேன்'' என்றதும் பூரணி போனை பிடுங்கிக் கொண் டாள்.



"அதெல்லாம் ஒண்ணுமில்லை. அம்மா ஏதோ சொல்றாங்க. இங்க எல்லாரும் நல்லாயிருக்கோம். அப்பா ரொம்ப நல்லா யிருக்காரு. நீங்க கொஞ்சம்கூட கவலைப்படாத உங்க வேலையை கவனிங்க. எங்க பாட்டு கேட்கறீங்களா."

"என்ன பாட்டு."

பேச்சு மாற்றி சந்தோஷமாகக்கேட்டபோது அவனுக்கு அழுகை வந்துவிட்டது. பெருங்குரலெடுத்து அழுதான்.

"அப்பாவை கவனிச்சுக்கோ பூரணி. எங்கப்பாவை கவனிச் சுக்கோ. அது ரொம்ப நல்ல ஆத்மா. அம்மாகிட்ட மாட்டிகிட்டு அவர் பெரிய அவஸ்தைப்பட்டிருக்காரு. உனக்கு நல்ல பொண் டாட்டி வரணும்டா. ஒருத்தருக்கு நல்ல பொண்டாட்டி வாது பெரிய கொடுப்பினை. ஆம்பளங்களை அயோக்கியன், மொள்ள மாறி, குடிகாரன்னு எல்லா பொம்பளைங்களும் சொல்லுவாங்க. ஆனா, பொம்பளைங்க பண்ற அயோக்கியத் தனம் தெரியறதே இல்ல. ராப்பகலா தூங்கவிடாத நொய்ய நொய்யன்னு அரிச்சு எடுக்கற கஷ்டத்தை யாரும் வெளிய சொல்றதில்லை. உனக்கு அப்படி பொம்மனாட்டி வந்துடக் கூடாதுடா. நீ அந்த அவஸ்தை படவே கூடாதுன்னு சொல்லு வாங்க. பூரணி இந்த நன்றி என் நெஞ்சை விட்டுப் போவாது. நீயும், உங்கப்பாவும் செய்திருக்கிற உதவி எனக்கு மறக்காது. அப்பாகிட்ட போனை கொடேன். ஒரேயொரு வார்த்தை சொல்லணும்."

புருஷோத்தமரிடம் போன் கொடுத்தாள்.

"மாப்பிள்ளை நல்லாயிருக்கீங்களா" புருஷோத்தமர் மிருது வாகக் கேட்டார்.

"நல்லாயிருக்கேன் மாமா. ஒரு வார்த்தை உங்ககிட்ட சொல்றேன். உங்க பொண்ணை ஜென்ம ஜென்மாந்திரத்துக்கு நான் கண்கலங்காம பார்த்துப்பேன். உள்ளங்கையில் வச்சு தாங்குவேன். இது சத்தியம் மாமா. கல்யாணத்திற்கெல்லாம் துட்டு செலவு பண்ணாதீங்க.பொழிச்சலூர் சிவன் கோவில்ல தாலி கட்டுவோம். உங்க வீட்டு வாசல்ல பந்தல் போட்டு ரிசப் ஷன் மாதிரி வைப்போம். போதும் அப்பாவை கவனிச்சுக்

கோங்க. செலவுபத்தி கவலைப்படாதீங்க. நீங்க செலவு பண்ற ஒவ்வொரு காசுக்கும் நான் கேரண்டி. நான் நிச்சயமா திருப்பி தருவேன். இதுவும் சத்தியம்."

"அட ஏங்க இவ்வளவு வேகமாக பேசறீங்க."

புயலில் தத்தளித்த படகு சட்டென்று சரியான நேரோட்டத்தில் மிகவேகமாக, மிக எளிதாக புயலைத்தாண்டி இலக்கு நோக்கி சுகமாகப் போவது போல அந்த வீடு திசைமாறியது. நிம்மதியாக பயணப்பட்டது.

நடந்தது மொத்தமும் கமலக்கண்ணன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பதினாறு பக்கக் கடிதமாய் பூரணி எழுதியிருந்தாள். இருபதாவது முறையாக அதைப்படித்த கமலக்கண்ணன் பூரணியை மனசுக்குள் கொண்டாடினான்.

இருபதுநாள் தங்கிவிட்டு அப்பா வீட்டிற்குத் திரும்பியும், மறுபடியும் செக்கப் செய்து கொள்ள போனதும் சகலமும் சரியாக இருக்கிறது என்று டாக்டர் சொன்னதும், உடற்பயிற்சி இல்லாத காரணம்தான் இந்த மாரடைப்பு என்று எச்சரித்ததும், அப்பா உடற்பயிற்சி செய்ய துவங்கி விட்டதையும், உணவில் கடும் கட்டுப்பாட்டை கொண்டு வந்து விட்டதையும், தொலைபேசி மூலம் தெரிந்து கொண்டான்.

விடுமுறையின் போது அபுதாபியிலிருந்து துபாய்க்கு காரில் வந்தான். சந்திரசேகரை சந்தித்தான். அவர் மனைவிக்கு வணக்கம் சொன்னான்.

"என்ன. அப்பாக்கு உடம்பு சரியில்லையாமே."

அவள் பதறி விசாரித்ததும் நிலைமை சரியாகிவிட்டதை உணர்த்தினான்.

"இது ஒண்ணுதான் இங்க பிரச்சினை. நமக்கு தெரிஞ்சவங்க அங்க ஆபத்துல இருக்கும்போது நமக்கு உடனடியா கிளம்ப முடியாத பிரச்சினை. அங்க சரியான மனுஷாள் இருந்துட்டா நம்ம குடும்பத்தை, நம்ம வேலையை கவனிக்கறதுக்கு அங்கு நம்ம காசுக்கு ஆசைப்படாத நல்லவங்க இருந்துட்டா இங்க இன்னும் கடுமையா உழைக்கலாம். எத்தனை காசு சம்பாதிச்



சாலும் யாரோ திருடி எடுத்துக்கிட்டு போகப்போறான்னு ஒரு விவரம் உள்ள வந்துடுச்சுன்னா சம்பாதிக்க முடியாது. நீ பட்ட அவஸ்தையை நான் பட்டிருக்கேன் கமலக்கண்ணா."

எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு இருபதாயிரம் அனுப்பினேன். பத்தாயிரம் ரூபா கொடுத்துட்டு அம்மாகிட்ட இருபதாயிரம் ரூபாய்க்கு கையெழுத்து வாங்கிண்டிருக்கா. இந்த மாதிரி மூனு தடவை ஏமாத்தியிருக்கா. ரொம்ப நெருங்கின உறவு. ரொம்ப தெரிஞ்ச பையன். ரொம்ப நல்லவன்னு நான் நினைச்ச ஆள். ஒரு வருஷம் கழிச்சு ஊருக்குப்போய் கேட்டா அம்மா சொல்ற கணக்கு வேற. நான் அனுப்பின கணக்கு வேற. இதை மறைக்கறதுக்கு ஏகப்பட்ட பொய், பித்தலாட்டம். காசு முக்கியம்தான். ஆனா, அதுக்கு இப்படியா, நொந்து போயிடுத்து. வெளியூர்ல சம்பாதிக்கலான்னா இந்தியாவுல இருக்கற அத்தனை பேருக்கும் லட்டு. எப்படி ஏமாத்தலாம். எப்போ ஏமாத்தலாம்னு கண்குத்திப்பாம்பா இருப்பான். இங்க நாம எவ்வளவு அவஸ்தைப்படறோம்னு தெரியவேயில்லை. இதோ இன்னிக்கு வெள்ளிக்கிழமை லீவு. இவர் வீட்ல இல்லை. நேத்து காத்தால போனவர். ஷார்ஜாவுல இருக்காரா, அபுதாபியில இருக்காரா எதுவும் தெரியாது. செல்லுக்கு ட்ரை பண்ணா நாட் ரீச்சபிள்னு சொல்றது. அவரா நடுராத்திரியில போன் பண்ணி, கவலைப்படாத ரொம்ப முக்கியமான வேலையில் இருக்கேன். ஆபீஸ் ஒயர்லெஸ்சை காதுல மாட்டிண்டிருக்கேன்றதுனால செல்போனை, ஆப் பண்ணியிருக்கேன்னு சொல்றார். நீ வேலைக்குப் போகலையா."

"கடலுக்கு நடுவுல இருக்கற ரிக்குக்கு சந்திரசேகர் போயிருக்கார் மேடம். அப்பாவுக்கு உடம்பு சரியில்லையே ஏதாவது காசு அனுப்பலாம்னு ஒரு ஐம்பதாயிரம் ரூபா எடுத்துகிட்டு நான் துபாய்க்கு வந்தேன். நஸீரபானை பார்த்து யார் மூலமாவது காசு அனுப்பணும்னு சொல்றதுக்காக வந்தேன். நஸீராவுக்கு போன் பண்ணி எங்க இருக்காருன்னு கேட்டுச் சொல்லுவீங்களா."

"உடனே சொல்றேன்."



37682
5470062

சந்திரசேகர் மனைவி பரபரத்தாள். நஸீர்பாயை செல்போன் மூலமாகப் பிடித்தாள்.

"நான் இங்கதாம்மா ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்ல இருக்கேன். அஞ்சு நிமிஷம் டிரைவ். நான் வந்துடறேன். என்ன டிபன் வீட்ல" உரிமையாகக் கேட்டார்.

நஸீர்பாய் போல தனியாக இருக்கிறவர்களுக்கு நல்ல உணவு என்பது சந்தோஷமான விஷயம்.

" பிஸிபேளாபாத். அதாவது குழம்பு சாதம். வாங்களேன்."

பத்து நிமிடத்தில் நஸீர்பாய் வந்து இறங்கினார்.

"கமலக்கண்ணன் உங்க சாமானெல்லாம் வீட்டுக்கு போயிடுச்சு இல்ல" என்று நஸீர் சொல்ல கமலக்கண்ணன் அதற்கு நன்றி தெரிவித்தான்.

தகப்பனுக்கு மாரடைப்பு வந்தது பற்றி மெல்லிய குரலில் சொன்னான்.

"அடடே... என்ன பண்ணணும் நான். உடனே ப்ளைட்ல டிக்கெட் போட்டுடட்டுமா."

"இல்லிங்க. நான் போக முடியாது. அதான் அதான் இங்க இருக்கிற கஷ்டம். ஆபத்து சமயத்துக்கு போக முடியாது. நமக்கு வேலை முக்கியம். காசு முக்கியம். இந்த இடத்தை விட்டு நகரவே முடியாது. அங்க யார் தலைபோனாலும் நாம இந்த மண்லதான் கொதிச்சுகிட்டு கிடக்கணும்."

"என்ன பண்ணணும் சொல்லுங்க."

"ஒரு அம்பதாயிரம் ரூபா காசு கொண்டு வந்திருக்கேன். அதை எவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு அனுப்ப முடியுமோ அனுப் பணும்."

"எப்படி அம்பதாயிரம் ரூபா போதுமா?"

"போறாதுதான். ஆறுநாள் ஆஸ்பத்திரியில் வச்சு கூட்டிட்டு வந்துட்டாங்க.துட்டு கட்டிட்டாங்க. வாங்கின கடனை டக்குனு கொடுத்துடலாம். இன்னும் கூட கடனை வாங்கலாம்."

"எதுக்கு கடன் வாங்கறது."



"இதுதாங்க முதல் மாச சம்பளம். இதுக்கு மேல கொடுக்க என்னால முடியல."

"அப்போ ஒண்ணு செய்வோம். ஒரு அம்பதாயிரம் ரூபாய் மேல போட்டு ஒரு லட்சமாக நான் கொடுத்துவிட ஏற்பாடு பண்றேன். பின்னாடி கொடுத்துடுங்க."

நஸீர்பாய் சாதாரணமாகச் சொன்னார்.

கமலக்கண்ணன் அந்த அன்பில் தடுமாறினான்.

"ஐயா... ஐயா..." என்று தடுமாறி வார்த்தைகள் குழைய கைகூப்பினான்.

மெல்ல நஸீர்பாய்க்கு அருகே போய் அவர் கால் தொட முயற்சித்தான்.

நஸீர்பாய் பாய்ந்து நிமிர்த்தினார்.

"தப்பு. இது ரொம்ப தப்பு. மனுஷங்க கால்ல மனுஷங்க விழறது ரொம்ப தப்பு. வணக்கம் சொல்லுங்க. ஒத்துக்கறேன். நன்றி சொல்லுங்க கேட்டுக்கறேன். இது என்ன கெட்ட பழக்கம். பண்ணாதீங்க. ஆபத்து சமயத்துக்கு உதவாத வேறு எதுக்கு இருக்கோம். நீங்க ஊருக்கு போறபோது என் மனைவி யையும், மகளையும் பார்த்து இதை கொடுத்துட்டு போங்கன்னா போகமாட்டீங்களா. எனக்கு ஒரு கஷ்டம்னா போகமாட்டீங் களா. நிக்கமாட்டீங்களா. சரி, உங்ககிட்ட என்ன வித காசு இருக்கும்"

"அமெரிக்கன் டாலர்."

"சரி. சைதாப்பேட்டையில் எங்க மனுஷாளும் இருக்காங்க. அவங்களை விட்டு உங்க வீட்டுக்கு நாளைக்கு காலையி லேயே ஒரு லட்ச ரூபா கொடுக்கச் சொல்றேன். நாளைக்கு சாயந்தரம் நம்ம ஊர் நேரப்படி ஆறு மணிக்கு நீங்க போன் பண்ணி தெரிஞ்சுக்கலாம். இல்ல அபுதாபிக்கு போன் பண்ணி நான் சொல்றேன். செல் வாங்கி வச்சுக்கறது நல்லது. இவ்ளோ தூரம் லொங்கு லொங்குனு ஓடிவர வேண்டாம். அபுதாபி லேர்ந்து சொன்னா நான் செய்துவிட்டு போறேன்."

பிலிபேளாபாத்தும், தயிர் சாதமும் சந்திரசேகர் மனைவி கொண்டு வர அவர்கள் விரும்பி சாப்பிட்டார்கள்.

"உங்க வீட்டுக்குள்ள இருக்கற போது, உங்க வீட்டுச் சாப்பாட்டை சாப்பிடறபோது, வெளிய இறங்கினா அபிராமபுரம் இல்ல. மயிலாப்பூரான்னுதான் தோணுது. துபாய்னே மறந்து போகுது. சாப்பாட்டை போட்டு நீங்க தமிழ்நாட்டை கொண்டு வந்து கொடுத்துடறீங்க. மாசத்துக்கு ஒருதடவையாவது நாங்க சாப்பிடணும். எங்களுக்கு சோறு போடற தெய்வமா நீங்க இருக்கணும்."

நஸீர்பாய் சொல்ல வாய்விட்டு சந்திரசேகர் மனைவி சிரித்தாள்.

விடைபெற்று வந்து நஸீர்பாய் காரில் கமலக்கண்ணன் ஏறிக் கொண்டான்.

"துபாய் சுத்தி பார்த்திருக்கீங்களா."

"இல்லீங்க."

"தங்க மார்க்கெட் பார்த்திருக்கீங்களா."

"லேசா பார்த்தேங்க."

"இப்போ ப்ரீதானே."

"ஆமாங்க."

"வாங்க பார்க்கலாம்."

நஸீர்பாயின் டயோட்டா கரோலா துபாயை சுற்றியுள்ள நீண்ட ரோட்டில் சீறிப் பறந்தது. போக்குவரத்து நெரிசலில் சற்று தேங்கி மறுபடியும் நகரத்தின் மையத்தை நோக்கி விரைந்தது.

## 47

நஸீர்பாய் வண்டியை நிறுத்தி விட்டு வந்தார். அவரும் கமலக்கண்ணனும் நடந்தார்கள்.



"இந்த இடத்துக்கு பேர் கராமா. இந்த கராமால இந்த ஏரியாவுக்குப் பேர் கோல்ட் ஸூக். அதாவது தங்கச்சந்தை."

நஸீர்பாய் விளக்க கமலக்கண்ணன் வாய் பிளந்து பார்த்து நின்றான்.

துரியோதனன் கவசம் போல உள்ளங்கை அகலத்தில் பெரிய பெரிய தங்க நெக்லஸ்கள் தொங்கிக் கொண்டிருந்தன. காசு மாலைகள் விரவிக் கிடந்தன. ஒரு கண்ணாடி அறை முழுவதும் தங்கச் சங்கிலி கொத்துக் கொத்தாய் மாட்டப் பட்டிருந்தது.

சக்கரம் வைத்த சூட்கேஸ்களில் தங்க நகைகளை வைத்தபடி ஏஜெண்டுகள் முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந் தார்கள். சூட்கேஸ் திறந்து தங்க நகைகளை யாருக்கோ காட்டிக் கொண்டிருந்தார்கள். ஐரோப்பியர்கள், அராபியர்கள், இந்தியர் கள், பாகிஸ்தானிகள் என்று பலரும் தங்கம் வாங்க அலைந்து கொண்டிருந்தார்கள். ஆப்பிரிக்காவின் பல பாகத்து நீக்ரோக் கள் உயரமும், அகலமுமாய் புதுவிதமான உடையோடு தங்க நகைகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

"இந்த நகையெல்லாம் பார்த்தா என்னன்னு தோணுது?"

நஸீர்பாய் கண் சிமிட்டியபடி கேட்டார்.

"வீட்ல இருக்கற லேடீஸுக்கு வாங்கிக் கொடுக்கணும்னு தோணுது."

"உங்களுக்கு போட்டுக்கணும்னு தோணலையா?"

"இந்த நகைய நாம எப்படி ஸார் போட்டுக்கறது. ஒரு செயின் போட்டுக்கறோம் அவ்ளோதான். இவ்ளோ பெரிய நெக்லஸை நாம போட்டுக்கிட்டு எப்படி அலைய முடியும்?"

"அந்த காலத்துல மன்னர்கள் போட்டுகிட்டிருந்திருக் காங்களே. நாம ஏன் இன்னிக்கு போடலை."

"அந்தக் காலத்துல லேடீஸ் முக்கியமில்லை ஸார். இப்போ லேடீஸ் நமக்கு முக்கியமாயிட்டாங்க. அதுனால அவங்களுக்கு போட்டு அழகு பார்க்கறதோட முடிஞ்சு போச்சு. நமக்கு நகை

தேவையில்லை ஸார். வாங்கிக்கொடுக்கற யோக்கியதைதான் நமக்கு அழகு."

"அடிசக்கை... கமலக்கண்ணன் நீ பெரிய ஆளுய்யா."

நஸீர்பாய் அணைத்துக் கொண்டார்.

"இந்தியாவுல இருக்கற பொம்பளைக்கு நிறைய நகை வாங்கிப் போடணும்னுதான் இங்க நாயா பேயா உழைச்சுகிட்டிருக்கோமில்ல."

"ஆமாங்க பாய். நான் நகைகள் பார்த்து வச்சிருக்கேன். நான் கல்யாணம் கட்டப்போற பொண்ணுக்கு அந்த நகைகளை வாங்கித்தரணும். எங்கப்பாவுக்கு உடம்பு குணமானவுடனே அடுத்தபடி அதுதான் செலவா இருக்கணும்."

"நீங்க கல்யாணம் பண்ணிக்கப்போற பொண்ணு எப்படியிருக்காங்க"

"ரொம்ப நல்லாயிருக்காங்க. அவங்க வீடுதான் எங்கப்பாவை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்து முன்னாடி காக கட்டி காப்பாத்துச்சு. இப்போ எங்கப்பா அவங்க வீட்லதான் இருக்காரு. என் வூட்டிதான் காப்பாத்தறாங்க. என்னை கட்டிக்கப்போற பொண்ணுதான் எங்கம்மாவுக்கும் சோறு போட்டு எங்கம்மா துணியை தோய்ச்சு ரெண்டு பேரையும் நல்லா கவனிச்சுக்கறாங்க."

"கொடுப்பினை வாத்தியாரே, கொடுப்பினை. கல்யாணத்துக்கு முன்னாடியே இவ்ளோ செய்யறான்னா கல்யாணத்துக்கு அப்புறம் எவ்ளோ செய்வாங்க." நஸீர் வியந்தார்.

"சொல்றதுக்கில்லை ஸார். லோகல் யாரையும் முழுசா நான் நம்பறதில்லை. செய்த வரைக்கும் சந்தோஷம்னு விட்டுடறது. சின்ன விஷயத்துக்கு கோபப்பட்டுருவாங்க. சின்ன விஷயத்துக்கு சந்தோஷப்பட்டுருவாங்க. அதனாலயே நான் ரொம்ப நிதானமா இருக்கேன்."

அவர்கள் துபாய் சரவணபவன் ஓட்டலுக்குப் போய் மதிய உணவு சாப்பிட்டார்கள்.

கூதற்காற்று அதிகமாக இருந்தது. வெய்யில் சற்று குறைவாக இருந்தது.



வெள்ளிக்கிழமை என்பதால் அதிகம் கடைகள் திறந்திருக்கவில்லை. ஆனால், தெருவில் நடமாட்டங்கள் அதிகமாக இருந்தது. நிறைய தமிழ் முகங்கள் தெரிந்தன. மரத்தடியில் போட்டிருந்த வட்ட சலவைக்கல் பெஞ்சில் இருவரும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மவுனமாய் இருந்தார்கள்.

டெலிபோன் மணி அடித்தது.

அவர் உருதுவில் பேசத் துவங்கினார்.

"சரி. சொல்லிடறேன். வணக்கம் " என்று தமிழில் முடித்தார்.

"கமலக்கண்ணன் உங்க வீட்டுக்கு உங்கப்பாகிட்ட ஒரு லட்ச ரூபா கொடுத்து கையெழுத்து வாங்கிட்டாங்க. சாட்சியா புருஷோத்தமர் அப்படிங்கறவரு கையெழுத்து போட்டிருக்காரு"

"ஆமாம். பூரணி அவங்கப்பா."

"பூரணி யாரு?"

"நான் கட்டிக்கப்போற பொண்ணு."

"பொழிச்சலூர்ல போய்தான் கொடுத்திருக்காங்க."

"ஆமாம். அங்கதான் இருக்காங்க."

"உங்க பிரச்சனை ஓவர்."

அவர் தோளில் கைவைக்க அவர் கையை எடுத்து கமலக் கண்ணன் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

"யோவ் சும்மா இருய்யா. நன்றி சொல்றதா இருந்தா இப்படிச் சொல்லாத."

"எப்படிச் சொல்லணும்."

"ஒரு பாட்டு பாடு."

"என்ன பாட்டு ஸார் வேணும்."

"ஒரு சோகப்பாட்டு பாடுய்யா."

"என்னங்க இது. நான் சந்தோஷமா இருக்கேன். சோகப் பாட்டு பாடுன்றீங்களே."

"சோகம்தான்யா சரியான அழுத்தமான, தெளிவான உணர்ச்சி. சோகம் உள்ள இருக்கும் போதுதான் அன்பா இருக்க முடியும். ஆசையை குறைச்சுக்க முடியும். அமைதியா இருக்க முடியும். அப்படின்னு தோணுது. இப்போ பாட்டு பாடு"

"என்ன சோகப்பாட்டுன்னு சொன்னீங்கன்னா பாடலாம்."

"நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா
பழகத் தெரிந்த உயிரே
உனக்கு விலகத் தெரியாதா..."

எந்தக் காரணமுமின்றி கமலக்கண்ணனையும் ஒரு சோகம் கவ்விக் கொண்டது. பிரிந்திருக்கிறோமே என்கிற துக்கத்தால் அந்தப் பாட்டு குழைந்து குழைந்து வந்தது.

நஸீரும் முகத்தைப் பொத்திக்கொண்டு மெல்ல விசும்பத் துவங்கினார்.

அவன் நஸீருக்கு அருகே உட்கார்ந்து அவர் தோளை அணைத்துக்கொண்டான்.

"காத்திருந்தேன் காத்திருந்தேன் காதல்
மனம் நோகும் வரை
நாத்து வெச்சு காத்திருந்தா
நெல்கூட முளைச்சிருக்கும்
காக்க வச்சி கன்னி வந்தா
காதல் உண்டா கேட்டுச் சொல்லு"

மிகவும் இனிமையான குரலில் கமலக்கண்ணன் பாடினான். அடுத்த பாட்டுக்கு அவர் சொல்லாமலேயே தாவினான்.

"விழியே கதையெழுது
கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் காற்று
உனக்காகவே வாழ்கிறேன்"



கமலக்கண்ணன் மனசுக்குள்ளே பாட்டு கூதற்காற்றாகப் புகுந்து கொண்டது. எல்லா இடத்திற்கும் புகுந்து புறப்பட்டு நகர்ந்தது.

"காதற்கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்
கண்கள் கலங்கி கன்னம் வழிந்து
நெஞ்சில் விழுந்தால் சொந்தம் புரியும்
ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்..."

என்று பாடும் போது பூரணி மிகப்பெரிதாக விஸ்வரூபம் எடுத்து அவனை இறுக அணைத்துக்கொண்டாள்.

"ஒரு மம்மூட்டி படம். அதுல வாலி ஸார் ஒரு பாட்டு எழுதியிருக்கார். கேட்டிருக்கீங்களா" நஸீர்பாய் கேட்டார்.

"தெரியும் ஸார். மனப்பாடம் பண்ணியிருக்கேன்" துள்ளலாக அவன் சொன்னான்.

சோகப்பாட்டிலிருந்து மீண்டும் காதல் பாட்டுக்கு நஸீர் வந்தது தெரிந்தது.

"அந்தப்பாட்டு பாடட்டுங்களா ஸார்" என்று ஆவலாகக் கேட்டான்.

"பாடுங்கய்யா. பாடுங்க" என்று நஸீரும் துள்ளலாகச் சொன்னார்.

அவரது சோகத்திலிருந்து காதலிக்கின்ற வேகத்தை அடைந்து விட்டார் என்பதை அவர் கண்களில் பிரகாசத்தை பார்த்தைப் புரிந்து கொண்டான்.

"கல்யாணத் தேன்நிலா
காய்ச்சாத பால்நிலா
சங்கீதம் பாட்டிலா
நீ பேசும் பேச்சிலா
என் ஜீவன் உன்னிலா
உன் காதல் கண்ணிலா
தேனூறும் வேர்ப்பலா உன் சொல்லிலா..."

என்று அவன் குரல் துள்ள நஸீர் முகம் முழுவதும் சந்தோஷம் பரவியது.

"கரோக்கின்னு ஒரு சிஸ்டம் இருக்கு. பி.ஜி.எம் ரெக்கார்ட் ஆயிடும். ரெக்கார்ட் ஆயிடும் பாட்டு. நீ பாடணும். நீ மைக்குல பாட்டுப்பாட பி.ஜி.எம் டேப்புல போக ரெண்டும் மிக்சிங் ஆகி ஜனங்களுக்கு கேட்கும். துபாய்ல இது ரொம்ப பாப்புலர். அடுத்த மாசம் ஏற்பாடு பண்ணட்டுமா."

"எனக்கு அவ்ளோ நல்லா பாட வராது ஸார்."

கமலக்கண்ணன் சொல்ல நஸீர் எழுந்து அவன் முதுகில் அறைந்தார்.

"கொன்னுடுவேன். என்னடா பேசற. பாடியே சாவடிக்கற மகனே. அந்தப் பொண்ணு அவங்க பேரு என்ன."

"பூரணி."

"கொடுத்து வச்சவடா. உன்னை கொடுத்து வச்சவன்னு சொன்னேனே அதுக்கு மேல கொடுத்து வச்சவ அந்தப் பொம்பளைதான். இப்படி உட்கார்ந்து நாலுபாட்டு பாடினேன்னு வச்சக்கோ அவளென்ன கதி ஆவா. ஆம்பளை நானே ஆடிப்போய் உட்கார்ந்திட்டேன். நீ எப்படி மனசை மாத்திக்கிட்டடா. டேய்... யூ ஆர் கிரேட். உன் குரல்ல அக்கறை இருக்கு. நான் நல்லா ஆவணும்னு அன்பு இருக்கு. அதனால தான் குழைச்சு குழைச்சு பாடற. குரல்ல இருக்கற வளத்தை விட மனசுல இருக்கிற அன்பு தான் உன்பாட்டுலேர்ந்து பொங்கி வருது. நீ பிரமாதமா வருவ கமலக்கண்ணா. ரொம்ப நல்லாயிருப்ப. நீ எப்போ போவ. இன்னும் பதினேழு மாசம் இருக்குல்ல. போறபோது என்கூட ரெண்டு நாள் இருந்துட்டுப்போ. பார்த்துப் பார்த்து சாமான் வாங்கித்தரேன். சீப்பான விலைக்கு வாங்கித் தரேன். நல்ல கோல்ட் செயின். அற்புதமான காதுத் தோடுன்னு வாங்கித் தரேன். கொண்டு போய் கொடு. செலவு பண்ணாத கமலக்கண்ணா சேர்த்து வச்சுக்கோ. எந்த கெட்டப் பழக்கத்துலயும் மனசு ஈடுபட வேண்டாம். நல்லா சாப்பிடு. சந்திரசேகர் தன்னைச் சேர்ந்த அத்தனை பேரையும் பிரமாதமா கொண்டு வந்திருக்காரு.



அமெரிக்காவிலேயே பிரமாதமான பைப் லைன் கம்பெனி அவருது. அதுல முக்கியமான போஸ்ட் இவருக்கு. அவர் நினைச்சா யாரை வேணாலும் வேலையில வைக்கலாம். யாரை வேணாலும் துரத்தலாம். காக்கா பிடிக்க வேண்டிய அவசியமே யில்லை. அவரு சொன்னதைப் புரிஞ்சுகிட்டு செய்தா போதும். இவனை நம்பி வேலை விடலாம்னு எண்ணம் அவருக்கு வந்தாபோதும். பார்த்துப் பார்த்து அவரே செய்வாரு. ரெண்டு மூணு தடவை அவரே வாய் திறந்து எங்கிட்ட சொல்லியிருக்காரு. அதை நான் உங்கிட்ட சொல்றேன். கவனமா வச்சுக்க. அங்க கொஞ்சம் வம்பு சண்டை வரும். அந்தக் கட்சி இந்தக் கட்சின்னு அடிச்சுப்பாங்க. நடிகர்கள் பேர் சொல்லி முட்டிப்பாங்க. இது எதிலயும் சம்பந்தப்படாத. இந்த மாதிரியான எண்ணெய் கம்பெனியில அவன் பயப்படறது லோக்கல் சண்டைக்குக்குத்தான். ரவுடி பசங்களைக் கண்டாதான் அவன் மிரள்வான். எந்தக் காரணம் கொண்டும் எதுக்கும் சண்டை போடாத."

"சரிங்க ஸார்."

அவன் கைகூப்பினான்.

"ஏதாவது ஒரு கடவுள் பாட்டு பாடு. அந்தப் பாட்டு காது ரொம்பி இருக்கட்டும்."

"எனக்கு முஸ்லிம் பாட்டு தெரியாதே."

"உங்க பாட்டுதான் பாடுங்கய்யா. எல்லாக் கடவுளும் ஒன்று தானே."

நஸீர் பிரியத்துடன் பேசினார்.

"தெரியேன் பாலகனாய் பல தீமைகள்
செய்து விட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழைத்து
ஏழையானேன்
கரிசேர் பூம்பொழில் சூழ்
கனமாமலை வேங்கடவா

அரியா வந்தடைந்தேன் அடியேனை
ஆட்கொண்டருளாய்"

அவர்கள் அமைதியாக நெடுநேரம் உட்கார்ந்திருந்தார்கள். பிரிந்து அவரவர் தொழில் பார்க்கப் போனார்கள்.

என் உயிரினும் இனிய என் காதலர். என் வருங்காலக் கணவர் கமலக்கண்ணருக்கு பூரணியின் தெண்டனிட்ட நமஸ்காரங் கள் பல. அன்பு முத்தங்கள் நூறு.

நான் இந்தக் கடிதத்தை எங்கிருந்து எழுதுகிறேன் என்று சொல்லுங்கள் பார்க்கலாம். எந்த இடத்திலிருந்து எழுதுகிறேன் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?

இப்பொழுது மணி நள்ளிரவு பன்னிரெண்டு முப்பது. நான் இந்தக் கடிதத்தை உங்கள் வீட்டில், உங்கள் நாற்காலி மேஜையில் உட்கார்ந்து எழுதுகிறேன். உங்கள் வீட்டிற்கு நான் வந்து ஏழு நாளாயிற்று. பயப்பட வேண்டாம்.

என் வீட்டில் பத்து நாள் தங்கி அப்பா உடம்பு சரியானதும், பொழிச்சலூரில் இருக்க இருப்பு கொள்ளாமல் அல்லது வெட்கப்பட்டு உங்கள் அம்மாவுடன் கிளம்பி சைதாப்பேட்டை வந்துவிட்டார். எனக்கு என் வீட்டில் இருப்பே கொள்ள வில்லை. என்ன மருந்து சாப்பிடுகிறாரோ என்ன உணவு செய்கிறாரோ மாமிக்கு என்ன வேலை செய்ய முடிகிறதோ. எது செய்ய முடியவில்லையோ என்று மிகவும் தவித்துப் போனேன்.

அவர்களைக் கொண்டு போய் விட்ட அன்று வீடு பெருக்கி, சுத்தம் செய்து கொஞ்சம் குறைந்திருந்த மளிகை சாமான்களை வாங்கிப்போட்டு துணிகள் துவைத்துக் கொடுத்துவிட்டு வந்தேன். ஆனாலும், தொடர்ந்து மாமியார் மட்டுமே எப்படி மாமாவை பேண முடியும். எப்படி மாத்திரைகள் எடுத்துக் கொடுக்க முடியும் என்ற பயமிருந்தது. நான் நினைத்தது போலவே மாமி தடுமாறியிருக்கிறார். அது மட்டுமில்லாது உங்கள் தமக்கை வந்து மறுபடியும் பேச ஏதோ சண்டை வந்து விட்டது. ஒருமுறை அம்மா தலைசுற்றி கீழே விழுந்துவிட்டார். அடுத்த வீட்டுக்காரர் எனக்கு போன் செய்தார்கள். புருஷோத்த மர் வீடுதானா என்று உடனடியாக எங்களை தொடர்பு கொண்



டார்கள். நானும், அப்பாவும், அம்மாவும் அலறி அடித்துக் கொண்டு வந்தோம். பயப்பட வேண்டாம் எந்தப் பிரச்சினையும் இல்லை. இரத்த அழுத்தம் சற்று கூடியிருக்கிறது. வயிற்றுப்பசி வேறு. மயக்கமாகி விட்டார்கள். டாக்டர் வந்து பார்த்து எந்தப் பயமும் இல்லை என்று சொல்லிவிட்டார். மாமியும் தெளிவாக எழுந்து உட்கார்ந்து கொண்டு விட்டார்கள். ஆனால், உடல் சோர்வினாலோ, மனச் சோர்வினாலோ மாமி மிகவும் தடுமாறி இருப்பது தெரிந்தது. எனவே, நான் வீட்டிற்குப் போய் என் துணிமணிகளை பெட்டியில் எடுத்துக்கொண்டு இங்கு வந்து விட்டேன். அதாவது கல்யாணம் ஆவதற்கு முன்பே உங்களிட மிருந்து தாலி ஏற்றுக்கொள்ளும் முன்னரே நான் இந்த வீட்டிற்கு மருமகளாக வந்து உட்கார்ந்துவிட்டேன். அம்மாவும் வரு கிறேன் என்று சொன்னாள். நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

உன்னிடம் கமலக்கண்ணன் அம்மா பேச கூச்சப்படுவார் கள். என்னிடம் சற்று நன்றாகப் பேசுவார்கள். நீ இல்லாது போனால் இன்னும் உரிமையோடும், அன்போடும் பேசுவார்கள். எனவே, நீ வராதே என்று அம்மாவை திருப்பி அனுப்பி விட்டேன். நான் நினைத்தது போலவே உங்கள் அம்மா என் மீது அன்பைப் பொழிகிறார். அவர் ஒரு முரட்டு ஜாதி. அவர் அன்பும் முரட்டுத்தனமானது. பேச்சுத்தான் கடுமை. அப்படிப்பேசி பழகி விட்டார்கள். ஆனால், மனம் மிக வெண்மையானது.

நல்ல புருஷன் தனக்குத் கிடைத்திருக்கிறான் என்பதை ஊருக்கு சொல்ல வேண்டுமே. எப்படிச் சொல்வது உரக்கக் கத்தி புருஷனைத் திட்டினால் ஊர் வியக்கும். அட... புருஷன் இவளுக்கு அடங்கி நடக்கிறானே என்று ஆச்சரியமாகப் பார்க் கும். அதில் ஒரு சந்தோஷம். மருமகள் வந்திருக்கிறாளே எப்படி என்று விசாரிக்கும் போது தோ... என்னா பண்ற உள்ள. வா. என்று என்னை நோக்கி குரல் கொடுக்க நானும் திபுதிபு என்று ஓடி வர அதை எதிர் வீடும் பக்கத்து வீடும் பார்த்து அடடா... மருமகளை ஆட்டிப்படைக்கறா கமலக்கண்ணன் அவங்கம்மா என்று கிசுகிசுக்க அதைப் பார்த்தும் ஒரு சந்தோஷம்.

நான் ஒரு இரவு சாப்பிடும் போது இந்தக் குற்றங்களை மெல்ல எடுத்துச் சொன்னேன். திகைத்துப் போனாள். மறுநாள் ஆமாண்டி நான் தப்பாத்தான் பேசறேன் இல்ல என்று சட்டென்று புரிந்து கொண்டாள். அந்த ஆளை எவ்வளவு வதைச் சுருப்பேன் தெரியுமா. எனக்கு இப்போதான் யோசிக்க யோசிக்க தப்பு பண்ணிட்டோனோன்னு தோணுது. பாவம்டி அந்த ஆளு பதிலுக்கு வாயே திறக்க மாட்டாரு.

தூங்குகின்ற புருஷனுக்கு அருகே போய் அவர் நெஞ்சை தோள் பட்டையை தலையை தடவிக்கொடுத்தார்கள். மாமா விழித்துக்கொண்டு பயத்தோடு என்ன என்று கேட்டார். நான் நிறைய தப்பு பண்ணியிருக்கேன், என்னை மன்னிச்கடுங்கோ என்று அம்மா சொல்ல மாமாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. உங்கள் அம்மா மாறிவிட்டார். மெல்ல மெல்ல இன்னும் மாறி வருகிறார்.

கமலக்கண்ணன் கடிதத்தை மடித்து அட்டைப்பையில் வைத்துக் கொண்டான். உள்ளே நிம்மதி பரவிற்று.

## 48

கமலக்கண்ணன் எழுந்து போய் ஷவர் திறந்து குளித்து விட்டு மறுபடியும் பூரணியின் கடிதம் பிரித்து படிக்கத் துவங்கினான்.

உங்கள் அம்மா புடவை கட்டுவதில் தப்பு. போட்டுக் கொண்டிருக்கிற நகைகள் தப்பு. பல் தேய்க்கும் விதம் தப்பு. உணவில் இவ்வளவு காரம் கூடாது. இத்தனை மாமிசம் சாப்பிடக்கூடாது. முழுக்க சைவ உணவுக்கு மாறுங்கள். இந்த வயதிற்கு மேல் மாமிசம் வேண்டாம் என்று சொல்ல சரி என்று ஏற்றுக் கொண்டார்கள்.

நானும், அம்மாவும் இரவு நேரம் வாக்கிங் போகிறோம். அப்பாவுக்காக வேயுறுதோளிபங்கன்... கோளறு பதிகமும், அம்மாவுக்காக கோவிந்த நாமாவளியும் வீட்டில் உரக்கப்படிக்கிறேன். அப்பாவும், அம்மாவும் எழுந்து என் எதிரே உட்கார்ந்து கொள்வார்கள். அம்மாவுக்காக சில தேவாரங்களும், பதிகங்களும் படிப்பேன். மாமா கண்ணீர் வடிய கேட்டுக் கொண்டிருப்பார். நல்லவேளை மாமா மெடிக்ளெய்ம் எடுத்திருந்தார். அதைக்கொண்டு போய் காட்டி ஆஸ்பத்திரியின் சில ரசீதுகள் காட்டி முப்பத்தேழாயிரத்து ஐநூறு வாங்கி வந்து விட்டோம். அந்தக் காசை அப்படியே மாமா அப்பாவிடம் கொடுக்க அப்பா முப்பதாயிரம் எடுத்துக்கொண்டு ஏழாயிரத்து ஐநூறு உங்கள் செலவுக்கு இருக்கட்டும். இன்னும் மருந்து வாங்க வேண்டியிருக்கிறது என்று சொல்ல அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷமாகி விட்டது. சமையலை, என்பாட்டை என்னுடைய வேலைகளை அம்மா, அப்பாவிடம் மனமாரப் பாராட்டினார்.

அப்பாவிற்கு அழுகை வந்துவிட்டது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு தெருவுக்கு வந்ததும் அடுத்த வீட்டில் உட்கார்ந்து விக்கிவிக்கி அழுதார். நான் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தேன். மனிதர்களுக்கு துக்கம் வந்தாலும் அழுகை. சந்தோஷம் வந்தாலும் அழுகை. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் இன்னும் பாடிக் கொண்டிருக்கிறீர்களா. யார் உங்களோடு சேர்ந்து கொள்கிறார்கள். அந்த நஸீர்பாய் மட்டும்தானா.

சந்திரசேகர் ஸாருக்கும், அவர் மனைவிக்கும் என் நமஸ்காரத்தை சொல்லுங்கள். எனக்கு பாட்டு கேட்கவோ, பாட்டுப் பாடவோ நேரமேயில்லை. சமைக்கும் போது மெல்லியதாய் ஏதாவது பாட்டு தோன்றும். ஆனாலும் பாடுவதில்லை. வேலைக்கே நேரம் சரியாக இருக்கிறது. பேசிப் புரிந்து கொள்ளவே நேரம் போதவில்லை. அப்பா சம்பாதித்ததையும், இந்த வீடு வாங்கினதையும், அவர் சகோதரர்கள் பற்றியும், அவர்கள் தாத்தா பாட்டியைப்பற்றியும், நிறைய சொன்னார். உங்கள் குடும்பக் கதை முழுவதையும் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாக கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அப்பாவை இரண்டாவது செக்கப்புக்கு அழைத்துக் கொண்டு போனோம். எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனாலும் வயதானதால் இருதயம் முழு திறனோடு வேலை செய்யவில்லை. எனவே, எத்தனை அமைதியாகவும் நிதானமாகவும்

இருக்க முடியுமோ அது நல்லது. நிம்மதிதான் மிகப்பெரிய மருந்து. பிரார்த்தனையோடு கூடிய சங்கீதம் தான் அவருக்கு போஷாக்கான பானம். உறவுகள் வந்து கொண்டாடுவதும் நண்பர்கள் வந்து விசாரிப்பதும்தான் அவருக்கு நோய் எதிர்ப்புணர்ச்சியை அதிகப்படுத்தும். எனவே கொண்டாடுங்கள் என்று டாக்டர் சொன்னார். அப்பா வாரத்திற்கொருமுறை வருகிறார்.

இப்பொழுது சூரியன் எப்.எம். என்று ஒன்று வருகிறது. கேட்பட்ட பாட்டு. எப்போதும் பாட்டு.

"காதல் எந்தன் மீது என்றால்
காதில் இனிக்கிறது
தாலிகட்டிக்கொள்ள தட்டிக்கழித்தால்
கவலைப்படுகிறது. மனது கவலைப்படுகிறது
கட்டிக்கரும்பே கனியே உன்னை
தட்டிக் கழிப்பேனோ
காலம் நேரம் பார்த்து முறையாய்
பெண்ணும் கேட்டுக்க வேண்டாமோ
நாளும் பார்த்துக்க வேண்டாமோ"

அது எம்.ஜி.ஆர். பாட்டா. இல்லை நம்ம பாட்டு. நமக்காக எழுதிய பாடல். நாம் அனுபவிக்க பிறந்த கானம்.

இந்த மாதிரி நடுநிசியில்தான் உங்கள் ஞாபகம்.ஆடிய ஆட்டங்கள் நினைவுக்கு வருகின்றன. நான் இன்னும் சில நாட்கள் உங்கள் வீட்டில் இருப்பேன்.

உங்கள் அம்மாவின் தங்கை டெல்லியிலிருந்து வருகிறாராம். அவரின் மகனும், மனைவியும் உடன் வருகிறார்களாம். பெண் குழந்தையும் உடன் வருகிறதாம். டெல்லியிலிருந்து சென்னைக்கு மாற்றல் ஆனதால் குடிபெயர்ந்து இங்கே வருகிறார்கள். வந்து சில நாட்கள் இங்கே தங்குவார்கள்.அப்போது நான் பொழிச்சலூர் போய் விடுவேன். அடிக்கடி வந்து அம்மாவைப் பார்ப்பேன். நீங்கள் நெல்முனையளவும் உங்கள் வீடுபற்றி கவலைப்பட வேண்டாம். ரொம்பவும் பாடி மனசை கிறங்கடித்துக் கொள்ள வேண்டாம். சாப்பாட்டை குறைத்துக்



கொண்டு உடம்பை வருத்திக்கொள்ள வேண்டாம். நன்றாக சாப்பிடுங்கள். கடுமையாக வேலை செய்யுங்கள்.

நன்றாகத் தூங்குங்கள்.நிறைய சம்பாதியுங்கள்.உங்கள் அப்பாவுக்கு உங்களைப்பற்றி மிகவும் பெருமை. அவன் உழைப்பாளிம்மா ரொம்ப நல்லவன்மா என்று அடிக்கடி என்னிடம் சொல்கிறார். எனக்கும் பெருமையாக இருக்கிறது. எந்தக்காரணம் கொண்டும் சிகரெட் பிடிக்க வேண்டாம். மதுவும் அருந்த வேண்டாம். நானே மதுவாக, நானே போதையாக என்றும் உங்களுக்கு இருக்கிறேன். என்னைவிட லாகிரி வஸ்து உங்களுக்கு வேண்டுமா. உங்களுக்காக உயிரும், உடம்பும் வளர்த்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்காகவே நான் நன்றாகச் சாப்பிடுகிறேன். உங்கள் டெலிபோனுக்காக காத்திருக்கிறேன். போனில் ஹலோ... ஹலோ... என்று பேசுவதை விட இப்படி மாய்ந்து மாய்ந்து எழுதுவது சுகமாக இருக்கிறது.

இப்படிக்கு
உங்களையே நினைத்துக் கொண்டு உயிர்வாழும்
பூரணி என்கிற குண்டு கண்ணம்மா.

கமலக்கண்ணன் கடிதத்தை நெஞ்சில் வைத்துக்கொண்டு விசும்பினான்.

இன்னும் பதினாறு மாசம் எப்போ முடியும். விரல்விட்டு எண்ணினான்.

"என்னா மூஞ்சி இருண்டு கிடக்கு. வீட்லேர்ந்து போன் வந்ததா. ஏதாவது பிரச்சினையா. இல்ல வெறும் ஏக்கமா."

நஸீர்பாய் முகவாயை நிமிர்த்தியபடி கேட்டார்.

"லெட்டர் வேற எழுதியிருக்காங்க. படிச்சுப் பாருங்க."

கடிதத்தை நீட்டினார்.

"வேணாம்ப்பா. அது தப்பு. என்னான்னு சொல்லு."

"லவ் லெட்டர் இல்லை ஸார். சாதாரண லெட்டர்தான். படிச்சுப்பாருங்க."

நஸீர்பாய் மறுபடியும் தயங்கினார்.

பிறகு எடுத்து படித்துப்பார்த்தார்.

"தம்பி, ஒரேயொரு வார்த்தை சொல்லட்டுமா."

"சொல்லுங்க நஸீர்."

"நீ அதிர்ஷ்டக்காரன்யா. கல்யாணம் பண்ணிக்கப்போற பொண்ணு பதினெட்டு மாசத்துக்கு முன்னாடி வந்து உங்கம்மாவுக்கு சோறு சமைச்சுப் போடுது. உங்க வீட்ல பாத்திரம் தேய்க்குதுனா நீ பெரிய அதிர்ஷ்டக்காரன்யா. புண்ணியம் பண்ணவனுக்குத்தான் இப்படிப் பொண்டாட்டி கிடைப்பா. இது கடவுள் அருள். அல்லாவினுடைய கிருபை. உங்கள் வீட்டு முதியோருடைய வாழ்த்து. நல்லாயிருங்க தம்பி அந்தம்மா அழகா எழுதிடுச்சு.

சாப்பிடு, வேலை செய், தூங்கு. பாட்டுகூட கேட்காதன்னும் சொல்லிடுச்சு. ஏங்கி ஏங்கி தன் உடம்பை ஏன் கெடுத்துக்கறேன்னு சொல்லிடுச்சு. கரெக்டா அதே காரியத்தை பண்றியே. நியாயமா. தருமமா. இன்னொரு தடவை இந்த மாதிரி பேய் அடிச்சா மாதிரி உட்கார்ந்தன்னு வச்சுக்கோ நான் லெட்டர் எழுதி போட்ருவேன். சரியில்லைன்னு. ஷேவ் பண்ணுங்க. மூஞ்சிய கழுவுங்க. அப்புறம் வெளிய போகலாம். இந்த தடவை நாம பாட்டு பாடப்போறதில்லை. துபாய் ஷாப்பிங் மஹால் சுத்தி வரப்போறோம். பூரணி மூக்குத்தி போடுவாங்க இல்ல. வாங்க, கையில எவ்ளோ வச்சுருக்கீங்க.ரெண்டுமாசம் சம்பளம் வாங்கிட்டீங்க இல்ல. அந்தக் காசை அப்பறம் எடுத்துக்கலாம்யா. உங்க வீட்டுக்கு ஏதாவது வாங்கி அனுப்புங்க."

நான்கு வளையலும் ஒரு ஒற்றைக்கல் வைர மூக்குத்தியும் நஸீர்பாய் எடுத்துக்கொடுத்தார். காசு வாங்கிக் கொண்டார்.

அவருக்குக் கொடுக்க வேண்டிய கடன் அப்படியே இருந்தது. அடைத்துக் கொள்ளலாம் கவலையில்லை என்று ஒதுக்கி வைத்தார்.

தமிழர்கள் சந்திக்கும் இடத்திற்குப் போய் நண்பர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"பாட்டுக்காரத் தம்பி இங்கயா இருக்க. நான் பீச்சல போய் லோல்பட்டேன் ரெண்டு வாரம்" அந்த முஸ்லிம் நண்பர்



விழுந்து அடித்துக்கொண்டு வந்தார். கடற்கரையில் அவரை சந்தித்து ஞாபகம் வந்தது.

"வாங்கய்யா. எல்லோரும் உட்காருங்க. தம்பி பாட்டெல்லாம் பிச்சு உதறிடுவான் தெரியுமா. இங்க உட்கார்ந்து பாடினா நல்லாயிருக்காது. வாங்க ஓட்டலுக்குள்ள போவோம்."

தமிழில் பெரிய பெயர் எழுதியிருந்த ஓட்டலுக்குள் அவர்கள் நுழைந்தார்கள்.

அது டீக்கடையுமில்லை. ஓட்டலுமில்லை, என்று ஒரு நடுவாந்திரத்தில் இருந்தது. உணவுப்பண்டங்கள் சுவையாக இருந்தன. "பாடுங்க தம்பி, பாடுங்க."

அந்த நண்பர் வற்புறுத்தினார். கமலக்கண்ணன் பரிதாபமாக நஸீர்பாயைப் பார்த்தான்.

"சில சமயம் நாம நமக்காக வாழறோம். பல சமயம் பிறருக்காகவும் வாழறோம்" என்று நஸீர்பாய் சிரிப்போடு சொல்ல கமலக்கண்ணனும் வாய்விட்டுச் சிரித்தான்.

"நீயெனதின்னுயிர் கண்ணம்மா
எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்
துயர் போயின, போயின துன்பங்கள்
நினைப் பொன்னெனக் கொண்ட பொழுதிலே
எந்தன் வாயினிலே அமுதூறுதே..."

கடல் கடந்து வாழும் அந்த தமிழர்களுக்கு இந்தப் பாரதியின் பாட்டு காதில் தேனாய் இறங்கிற்று.

"அழகிய தமிழே அழகிய மொழியே
எனதுயிரே..."

என்று அவன் பாட கூட்டம் தலையாட்டி ரசித்தது.

"நீதான் செல்வம் நீதான் அமுதம்
நீதான் எந்தன் இதயம்..."

இன்னொரு பாட்டு கிளம்ப பல பேர் உள்ளுக்குள் உட்கார்ந்தார்கள்.

"காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாருமில்லை
வாலிபத்தில் காதலிக்க ஜாதகத்தில் வழியுமில்லை"

என்று பாட பலருக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. எழுந்து ஆட வேண்டும் என்று தோன்றியது.ஒரு இளைஞன் ஆடவும் செய்தான்.

ஒன்றரை மணிநேரம் பல பாட்டுகள் கமலக்கண்ணன் பாடினான்.

நண்பர்கள் கட்டித்தழுவி கன்னத்தில் முத்தமிட்டு அவனை வழி அனுப்பி வைத்தார்கள்.

அபுதாபி பைப்லைன் வேலைக்கு பல்வேறு திக்கிலிருந்தும் இளைஞர்கள் வந்தார்கள். எல்லார் முகத்திலும் பிரிவுத் துக்கம் இருந்தது.

கமலக்கண்ணன் சூப்பர்வைசராக பதவி உயர்வு பெற்றான். திட்டமிட்டதையும் விட வேகமாக குழாய் இணைப்புகள் செய்ய முடியும் என்று தோன்றிற்று. சந்திரசேகரிடம் மிக ரகசியமாகச் சொன்னான்.

"வேகமாக செய்யறது நல்லதா அல்லது கொஞ்சம் தாமதப் படுத்துறது சரியா" கேட்டான்.

திட்டமிட்டதுக்கு ஆறுநாள் முன்னால முடிப்போம். அந்த மாதிரி ஜாக்கிரதையா கொண்டுபோ. வெறுமன உட்கார விட்டுடாத. ஒரு க்ரூப்பை போட்டலா ரீசெக் பண்ணச் சொல்லு. ஒரு தப்புகூட வராத பார்க்கச் சொல்லு.செக்கிங்கு வரபோது ஒரு பிசிறுகூட இல்லாத இருக்கணும். அப்படி பயன்படுத்திப் போம்."

"புரியுது ஸார்."

வெய்யில் போய் மெல்ல கூதற்காற்று வீச ஆரம்பித்தது. குளிர்காலம் வந்தது. கடுமையாய் பனி இறங்கிற்று.

தகர கூடாரத்தை விட்டு வெளியே வந்தால் முகத்தில் குளிர் காற்று அடித்தது. உதடுகள் வெடித்தன. தோல் வறண்டது. எதிர் ஆள் தெரியாத படி பனிப்புகை நகர்ந்தது. பத்து மணிக்குத்தான்



வெளிச்சம் வந்தது. உச்சி வெய்யில் நேரத்திலும் குளிர் அடித்தது.

சட்டையும், ஸ்வெட்டரும் கனத்த கோட்டும் முகத்தில் மப்ளரும், தலையில் குரங்குத் தொப்பியும், கைகளில் கையுறையும் மாட்டிக் கொண்டு தோளில் பெரிய ரின்ச்சோடு போர் வீரர்கள் போல அவர்கள் வண்டி ஏறினார்கள். இணைப்புகள் சரியாக இருக்கின்றனவா என்று மிகக் கவனமாக சோதனை செய்தார்கள். தவறு நடந்திருப்பதை கண்டுபிடித்தார்கள்.

பைப்பில் தண்ணீரை அனுப்பி ஏதேனும் கசிகிறதா என்று பார்த்தார்கள். ஒரே ஒரு இடம் மட்டும் பைப்பின் நடுவே ஈரம் தட்டியது. ஒரு இடத்தில் கூட இணைப்பில் கசிவில்லை.

சந்திரசேகர் எகிறி குதித்தார். சகலரையும் தட்டிக் கொடுத்தார்.

"இந்த பைப்புல ஏதோ உற்பத்திக் கோளாறு. அப்படியே பிடுங்கி போட்டுட்டு வேறு மாட்டிடு. உடைச்ச ஓரம் போடு."

"நாம இதை முடிச்சிட்டா என்ன பண்ணனும்."

"சின்ன பைப், கிளைகிளையா நிறைய போட வேண்டியிருக்கும். அதுவும் தவிர தொழிற்சாலைக்குள்ள நிறைய பைப்லைன் ஒர்க் இருக்கு."

"அத்தனை பேருக்கும் வேலை இருக்குமா ஸார்."

"இருக்கும் அப்படின்னு நான் சொல்லப்போறேன். சீக்கிரம் முடிச்சுத் தரப்போறேன்னு உண்மையா பேசப்போறேன்."

சந்திரசேகர் கணக்கை அமெரிக்க ஆயில் கம்பெனி ஏற்றுக் கொண்டது.

இரண்டு நீக்ரோ வாலிபர்களை சூப்பர்வைசர் என்று சொல்லி தொழிலாளர்களுக்கு நடுவே புழங்கவிட்டது. ஆனால், அவர்கள் சூப்பர்வைசர்கள் இல்லை. மிகச்சிறந்த இன்ஜினியர்கள்.

தொழிற்சாலைக்குள் பைப்லைன் வேலை என்பதால் குளிர் தாங்க முடியாதபோது உள்ளுக்குள் போய் ஓய்வெடுத்துக் கொள்ள முடிந்தது.

பகலில் வேலையை குறைத்துக்கொண்டு இரவு நேரத்தில் பரபரப்பாக இயங்க முடிந்தது.

கமலக்கண்ணன் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதை அவர்கள் குறித்துக் கொண்டார்கள். திறமையாக வேலை செய்பவர்கள் பெயரை எழுதிக் கொண்டார்கள். சற்று சோம்பலானவர்களைப் பிரித்து வைத்தார்கள்.

இரண்டு மாதம் கழித்து சந்திரசேகரின் குழுவினரைப் பற்றி நீண்ட அறிக்கை ஒன்றை அமெரிக்காவிற்கு அனுப்பினார்கள். ஒரு பிரதியை சந்திரசேகருக்குக் கொடுத்தார்கள்.

அதில் சந்திரசேகருடைய உண்மை பாராட்டப்பட்டிருந்தது.

கமலக்கண்ணனைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தென்னிந்தியாவிலிருந்து வருகின்ற டிப்ளமா படித்த இளைஞர்கள், வேலையில் தெளிவாக இருக்கிறார்கள். துரிதமாக இருக்கிறார்கள். உண்மையாக இருக்கிறார்கள் என்று அந்த முடிவு சொல்லிற்று.

பங்களாதேஷிகளையும், மலேஷியர்களையும் அது கொண்டாடவில்லை.

தொழிற்சாலைக்கு வெளியே போடப்பட்ட பைப்லைன்கள் இப்பொழுது தொழிற்சாலைக்கு உள்ளே போயின. குளிர் இன்னும் கடுமையாக, உள்ளுக்குள் வேலை செய்வது இதமாக இருந்தது.

இடையறாது உண்பதற்கு ஏதேனும் கிடைத்தது. வேலைக்கு வந்த பல பேர் நன்றாக எடையேறினார்கள். கன்னம் சிவக்க நிறம் மாறினார்கள். தகரக்கொட்டாய்க்குப் போய் சி.டிக்களில் தமிழ் சினிமாக்கள் பார்த்தார்கள்.

தொட்டியிலிருந்து குருடாயில் மற்ற இடங்களுக்கு ஊடுருவிப் போயிற்று. அந்த இடங்களையும் சுற்றி சுற்றி பார்த்தார்கள். அரைமணி நேரத்தில் பாய்லருக்குள் குருடாயில் நுழைந்தது. ஒரு இடத்தில்கூட ஒரு சொட்டு கூட வெளிபேறவே இல்லை.



சந்திரசேகர் குதித்தார். எல்லோரையும் கட்டிக்கொண்டு முத்தமிட்டார். அவருக்குக் கீழே வேலை செய்த குழுவும் பிளிறலாய் கத்தியது. குதித்தது. ஆட்டமாடியது. அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று முஸ்லிம் நண்பர்கள் கூச்சலிட்டார்கள்.

சீனுவாசா கோவிந்தா, ஸ்ரீவெங்கடேசா கோவிந்தா, பக்தவச்சலா கோவிந்தா, பாகவதப்ரியா கோவிந்தா...

கமலக்கண்ணனும், சந்திரசேகரும் இன்னும் சிலரும் கைதட்டிப் பாடினார்கள். அமெரிக்கர்களும் அவர்களுடைய சந்தோஷத்தில் பங்கேற்றார்கள்.

இன்னும் அழுத்தம் அதிகரிக்கப்பட்டது. ஓட்டம் துரிதமாயிற்று. இரண்டு மூன்று பைப்லைன்கள் தொழிற்சாலைக்குள் போவது சிகப்பு சிக்னல் காட்டின. அவைகளுக்கு பைபாஸ் அமைக்கப்பட்டது.

பதினாறு மாதத்தில் தொழிற்சாலையின் எல்லா இணைப்பு வேலையும் முடிந்தது.

"இன்னும் வேற எங்கயாவது அனுப்புவாளா."

ஆவலோடு கமலக்கண்ணன் கேட்டான்.

"ஏன், ஊருக்குப் போகணுமா."

"ஆமாம். ஸார், முகமே மறந்து போச்சு."

# 49

"ஊருக்குப் போகணும்னு வெறியாயிடுச்சு ஸார்" கமலக்கண்ணன் சொன்னான்.

"புரியுது கமலக்கண்ணன். மோட்டார் ஃபிட் பண்ணிட்டான்னா நல்லாயிருக்கும். ஆயில் ஓட ஆரம்பிச்சுடுச்சின்னா நல்லாயிருக்கும்."

இன்னும் இந்திய இளைஞர்கள் வந்து இறங்கினார்கள். இன்ஜீனியர்களாக, இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக்குகளாக வேலையில் சேர்த்தார்கள்.

ஒரு வெள்ளிக்கிழமை காலை குருடாயில் வரும் என்று சொல்லப்பட்டது. அமெரிக்க இன்ஜினியர்கள் ஒரு ஜீப்பில் ஏறிக்கொள்ள சந்திரசேகரும் கமலக்கண்ணனும் வேறு சிலரும் இன்னொரு ஜீப்பில் ஏறிக்கொள்ள பைப்லைன் வழியாகவே உள்ளுக்குள் பொங்கி ஓடும் குருடாயிலோடு பயணப்பட்டார்கள். மிகப்பெரிய இரும்புத்தொட்டியில் குருடாயில் சத்தமாக நிறைவதைக் கேட்டார்கள்.

அந்த தொழிற்சாலை குருடாயிலிருந்து இருபத்து நான்கு வகையான விஷயங்களை விதம் விதமாக தயாரிக்கத் துவங்கியது.

"கமலக்கண்ணா அவ்ளோதாண்டா வேலை" சந்திரசேகர் கூவினார்.

"அப்படின்னா."

"அப்படின்னா, அப்படித்தான்."

சந்திரசேகர் கண்சிமிட்டினார்.

"சொல்லுங்க ஸார், அப்படின்னா."

கமலக்கண்ணன் பதறினான்.

"என்னடா பதற. இன்னும் ஆறு மாசம் இருந்து நிதானமா முடிச்சுட்டுப்போ."

"ஸார். சாவடிக்காதீங்க ஸார்."

சந்திரசேகரை நோக்கி பதட்டமாகக் கத்தினான்.

"இன்னும் பத்து நாள்ல பொட்டிப் படுக்கையோட தயாரா இரு. எல்லாருக்கும் பிஸினஸ் க்ளாஸ் போட்டு ஊருக்கு திருப்பி அனுப்பறதுக்கு ஏற்பாடு பண்ணப்போறேன்."

"சரின்டானா."

"மேலெழுந்தவாரியா சரின்னு சொல்லிட்டான். பேப்பர்ல வரலை. இன்னிக்கு பேப்பர்ல கொடுக்கப்போறேன். யார் யாருக்குன்னு கேட்கறான். மெயின்டனன்ஸுக்கு கொஞ்சம் பேரை விட்டுட்டு யார் ஆரம்பத்துலேர்ந்து இருக்காங்களோ அவங்களை ஊருக்கு அனுப்பனும்னு சொல்லியிருக்கேன். இப்போ



தயார் பண்ணி அனுப்பப்போறேன். அமெரிக்காவுக்கு போன் பண்ணி கேட்டுட்டு நமக்கு என்னிக்கு போகலாம்கறதை சொல்லிடுவான்."

காட்டுத் தீ போல இந்தச் செய்தி நண்பர்களிடையே பரவியது. எல்லோரும் பரவசப்பட்டார்கள்.

கடவுளே... கடவுளே... எனக்கு உதவி செய்யுப்பா. கெஞ்சினார்கள்.

இரண்டு நாள் கழித்து அவர்கள் ஊருக்கு போகும் தேதி சொல்லப்பட்டது. ஊருக்குப் போவதற்கு முன்பு ஐந்து நாள் விடுமுறை எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

அவர்கள் பேய்க்கூச்சலிட்டார்கள். பைத்தியம் போல் ஆடினார்கள். ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள். ஒரு காரைக்கால் முஸ்லிம் கீழே துண்டு விரித்து மண்டியிட எல்லோரும் சட்டென்று அமைதியானார்கள். பயணத்தை உறுதி செய்த அல்லாவே உங்களுக்கு நன்றி என்று சொல்ல வரிசையாக கைகட்டி அவர் தொழும் வரை நின்று கொண்டார்கள்.

காசுக் கணக்கு போடப்பட்டது.

"சூப்பர்வைசர்னு சொல்லிட்டான் ஸார். இதுவரைக்கும் ஒரு இன்கிரிமெண்ட்டும் கொடுக்கலை. சூப்பர்வைசராவே ஒரு வருஷம் வேலை செய்திருக்கான் ஸார். ஏதாவது கொடுக்க வேண்டாமா."

அமெரிக்க கம்பெனியின் இந்திய மேலாளரை சந்திரசேகர் கேட்டார்.

"இதுவே ஜாஸ்தி சம்பளம்யா."

"சொல்லாதீங்க ஸார். அவன் வேலைக்கு இது ஜாஸ்தி இல்லை. சௌகரியமா ஏ.சி ரூம்ல உட்கார்ந்திருக்கோம். அவனுங்க சாகறானுங்க ஸார்."

"என்ன வேணும்னு கேட்கறீங்க."

"நீங்க சொல்லுங்க ஸார்."

"சொல்லமாட்டேன்யா. அமெரிக்காகாரனையே கேட்டுவோம். நான் சொன்னாலும் குறைச்சு சொல்லிடுவேன்."

உச்சமட்டத்திற்கு இந்த விஷயம் எடுத்துப் போகப்பட்டது. எடுத்துக்கொண்டு போன வேளை துபாய் காசும் அபுதாபிக் காசும் அமெரிக்கக் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த பாங்குகள் பரிமாறிக் கொண்டன.

"சம்பளம்னு சொல்ல முடியாது. போனஸ்ன்னு சொல்லு."

"எவ்ளோ சொல்லுங்க ஸார்."

"ஒவ்வொரு மாதம் சம்பளத்தை கொடு."

"அப்படிப் பண்ணாதீங்க ஸார். எல்லாருக்கும் சமமா போனஸை கொடுங்க."

அந்த அமெரிக்கன் ஒரு லட்ச ரூபாய் என்று சொல்ல அவர்கள் நன்றி சொன்னார்கள். வெளியே வந்து தொழிலாளர்களிடம் சொல்ல தொழிலாளர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். ஆனந்தத்தில் திக்குமுக்காடினார்கள்.

"இதே டீம் ஒரு இடத்துக்கு கிளம்ப தயாரா இருக்காங்களா, வருவாங்களா."

"எங்க கூப்பிட்டாலும் வருவாங்க."

"எங்க ஸார் போகணும்."

அந்த அமெரிக்கன் பிற்பாடு சொல்வதாகச் சொன்னான்.

இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு நஸீர்பாய் அறையில் தங்கி கமலக்கண்ணனும் மூன்று நண்பர்களும் ஷாப்பிங் போனார்கள். விதம்விதமாக பொருள்கள் வாங்கினார்கள். சாக்லேட்டுகளும், செண்ட் பாட்டில்களும் வாங்கிக் கொண்டார்கள்.

நல்ல பெட்டிகள் வாங்கி அதில் அடுக்கி வைத்துக் கொண்டார்கள்.

மூன்றாம் நாள் கோல்டன் சௌக்குப் போய் விதம்விதமாக நகைகள் வாங்கினார்கள்.

டேப்ரிக்கார்டரும், விசிடி ப்ளேயரும், டிவியும் நஸீர்பாய் வீட்டை நிறைத்தன. மறுபடியும் அபுதாபி போய் அங்கு எல்லோரிடமும் விடைபெற்றார்கள். தகரக்கூடாரத்திலிருந்த



எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

சந்திரசேகர் வீட்டில் சிறிய விருந்து இருந்தது. பதினாலுபேர் கலந்துபேசி சந்தோஷமாக உண்டார்கள். அங்கே அவர்களுக்கு எமிரேட்ஸ் விமானத்தில் டிக்கெட் வழங்கப்பட்டது. நேரே போய் டெலிபோன் கார்டு வாங்கி வீட்டிற்கு நெடுநேரம் பேசினார்கள்.

கமலக்கண்ணன் பூரணியிடமும் அம்மாவிடமும் வருகையைப் பற்றிப் பேசினான். என்ன வேண்டுமென்று கேட்டான்.

போனஸ் என்று கொடுக்கப்பட்ட ஒரு லட்சத்தையும் சம்பளத்திலிருந்து முக்கால் லட்சத்தையும் செலவு செய்தான். தனிக்குடித்தனம் போகப்போகிறோம் என்று தெரிந்து அப்படிப்பட்ட சாமான்கள் வாங்கினான்.

"கூட சார்ஜ் ஆகும்யா."

"பரவாயில்லை ஸார், கட்டிடலாம்."

"அங்க ஏதாவது ட்யூடி போடப்போறான்யா."

"பரவாயில்லை ஸார் கட்டிடலாம்."

சந்திரசேகர் அனைவரையும் வழியனுப்ப நண்பர்களோடு கமலக்கண்ணன் விமானம் ஏறினான்.

விமானம் ஏறும்போது உடம்பு நடுங்கியது.

ஊருக்குத்தான் போகிறோமா. இந்த விமானம் ஊருக்குப் போகுமா இல்லை வழியில் எங்கேயாவது கடலில் விழுந்து விடுமோ சட்டென்று ஒரு கலவரம் ஏற்பட்டது.

ஜன்னலோரம் உட்கார்ந்து கொண்டு நண்பனின் கையை பிடித்துக் கொண்டான்.

"என் பிரதர் டென்ஷனா இருக்கீங்க. அதான் திரும்ப ஊருக்கு கிளம்பிட்டோமே."

"கடைசி நேரத்துல செத்துடுவோமோன்னு ஒரு பயம் வந்துடுச்சு ஸார்."

"எனக்குக்கூட இருக்கு. ஆனா, நான் வெளிய காட்டிக்கலை. எல்லோருக்கும் இருக்கும்."

"ஏதோ ஊருக்குப் போகறோன்றதையே நம்ப முடியலை. நாம எல்லாருமே அந்த வெய்யில்லயே. அந்த பாலைவனத் துலயே அழிஞ்சுடுவோமோன்னு நினைச்சு பயந்துட்டிருந் தோம். இப்போது ஊருக்குப் போன்னு சொன்னாக்க உடம்பு உதறுது. நிக்க முடியாம தலை சுத்தது. எனக்கு ஙங்ஙங்கு தலை வலி ஸார். ப்ரஷர் ஜாஸ்தியாயிடுச்சு. மாத்திரை சாப்பிட் டிருக்கேன்."

கண்மூடி சாய்ந்து கொண்டான்.

விமானம் மேலேழும்பியது. ஐந்து மணிநேரத்தில் மெல்ல மெல்ல கீழிறங்கியது.

அதோ பேஸின் பிரிட்ஜ்... அதோ பார் சென்ட்ரல் ஸ்டேஷன் கடவுளே... கடவுளே மெரீனா, கடவுளே மயிலாப்பூர். கடவுளே சாந்தோம் சர்ச், கடவுளே கபாலி கோயில், கடவுளே சைதாப் பேட்டை, கடவுளே பரங்கிமலை, கடவுளே விமான நிலையம்.

சட்டென்று விமானம் தரையிறங்கி ஓடியது. ஓடுபாதையில் நிதானித்து மெல்லத்திரும்பியது. ஊர்ந்து விமான நிலையம் நோக்கி நகர்ந்தது.

ஜன்னல் வழியே தேடினான். யாரும் தெரியவில்லை. விமான நிலைய ஊழியர்கள் தான் இருந்தார்கள். இறங்கினான். கதவு திறந்தது.பேப்பர்களை பாஸ்போர்ட்டை காட்டினான்.

அவன் இந்தியாவுக்குள் வந்துவிட்டான் என்று முத்திரை குத்தப்பட்டது.

தூக்க முடியாமல் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தான். நீளமான ஓடு பாதையில் பெட்டிகளுடன் வந்தான். மெல்ல அவன் பெட்டிகளை கீழிறக்கினான். டிராலியில் எடுத்து வைத்துக் கொண்டான்.

யாரு வந்திருப்பாங்கன்னு தெரியலையே என்று யோசனை செய்தான்.

"எலக்ட்ரானிக் அயிட்டம் வச்சருக்கீங்களா."



"நாலு வச்சருக்கேன்."

"என்னென்ன."

"வீடியோ சி.டி., டி.வி., டேப்ரிக்கார்டர் ஸார்."

"எப்போ போனீங்க துபாய்க்கு."

"பதினாறு மாசம் ஆச்சு ஸார்."

"என்னவா இருந்தீங்க."

"ஓர்க்கர் ஸார்."

"போங்க, போங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்சது. எடுத்துக் கிட்டு போங்க, என்ஜாய்."

கஸ்டம்ஸ் ஆபீஸர் அவனை மெல்லத் தள்ளினார். டிரா லியை தள்ளிக்கொண்டு அவன் வெளியே வந்தான். அங் குள்ள பைப்பில் ஏறி நின்று பூரணி கையசைத்தாள்.

"என்னங்க..." என்று கத்தினாள்.

பச்சையும், மஞ்சளும் கலந்த ஷிபான் புடவையில் தேவதை போல் இருந்தாள். பின்னால் பூரணியின் அப்பா தெரிந்தார். பூரணியின் அப்பாவுக்கு அருகே கமலக்கண்ணனின் அப்பா வும் இருந்தது தெரிந்தது.

கமலக்கண்ணன் அப்பாவைப் பார்த்ததும் உதடுகோணி அழத்துவங்கினான். அவன் கைகள் நடுங்கின. வண்டியை தள்ளமுடியாமல் தவித்தான். ஒரு தோழர் உதவி செய்ய வண்டி வெளியே வந்தது.

அப்பாவை பார்த்ததும் அவர் கால்களில் தடேரென்று விழுந்தான்.

"ரொம்ப பயந்துட்டேன்ப்பா... உன்னை பார்க்கவே முடியா தோன்னு பயந்துட்டேன்ப்பா."

புருஷோத்தமரின் பாதங்களைத் தொட்டு நன்றி சொன் னான்.

புருஷோத்தமர் சொல்லாதே என்று சொன்னார்.

திரும்ப பூரணியையே பார்த்தான். பூரணியின் கண்களில் நீர் தங்கியது. மெல்ல திரண்டது. கண் விளிம்பில் நின்றது. சட

டென்று கோடாய் கன்னம் இறங்கியது. அவளையே பார்த்து விசும்பாமல் வெறுமே கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். அவளுக்கருகே கமலக்கண்ணன் போனான். கைகளை எடுத்துக்கொண்டான்.

"ஐ லவ் யூ" என்று சொன்னான். கோடானுகோடி எடையுள்ள அன்பை அந்த ஒற்றை வார்த்தை மிக அழகாக பூரணிக்கு சொல்லிவிட்டது.

பூரணி மெல்லச் சிரித்தாள். "தேங்க்யூ" என்றாள். கைகளை கோர்த்துக் கொண்டாள். எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அவன் தரையிறங்கிய பத்தாம் நாள் பொழிச்சலூர் கோவிலில் அவன் ஹோமம் வளர்த்து அக்னியை நமஸ்கரித்து பூரணியின் கழுத்தில் தாலி கட்டினான்.

தெருவடைத்து பந்தல் போட்டு நாற்காலி மேசை போட்டு பகல் விருந்து நடந்தது.

பொழிச்சலூரே திரண்டு வந்து சாப்பிட்டது. பூரணி பிடிப்பிடியான நகைகளோடு தேவதை மாதிரி இருந்தாள்.

"எங்க ஊர் பொண்ண விட்டுட்டுப் போயிட்டீங்களேன்னு பயந்தோம். இறைவன் அருள். பொழிச்சலூர் சிவனுடைய கருணை மறுபடியும் வந்து நல்லபடியா கல்யாணத்தை முடிச்சுட்டீங்க."

பொழிச்சலூர் இளைஞர்கள் கைகுலுக்கினார்கள்.

சிவன் மடியில் அமர்ந்திருக்கும் பார்வதியின் பஞ்சலோக சிலையை பரிசளித்தார்கள். ஒரு சாண் உயரமுள்ள சிலை அற்புதமாக இருந்தது.

கமலக்கண்ணன் நெகிழ்ந்து போனான்.

நியாயத்துக்கு எங்க வீட்லதான் முதலிரவு வைக்கணும். ஆனா உங்க வீடு ராசி. "சீனுவாசய்யர் வீட்லயே முதலிரவு இருக்கட்டும்" என்று சொல்ல அந்த வீட்டிலிருந்து சீனுவாசய்யரும் அவர் மனைவியும் தலையணைகளோடு வந்து புருஷோத்தமர் வீட்டில் படுத்துக் கொண்டார்கள்.



அந்த மொத்த வீடும் கமலக்கண்ணனுக்காகவும், பூரணிக்காகவும் ஒழிக்கப்பட்டது.

பூரணி, தான் ஓடியாடி விளையாடிய வீட்டில் அவன் சமையல் கற்றுக்கொண்ட இடத்தில் சங்கீதமும், பாசுரமும், தேவாரமும் தெரிந்து கொண்ட வீட்டில் தன்னை கமலக்கண்ணன் உண்ணக் கொடுத்தாள்.

விருந்து பரிமாறிய களைப்பில் மயங்கிக் கிடந்தாள்.

தேவர்கள் ஆசிர்வதித்தார்கள்.

"கமலக்கண்ணா கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுதா. என் டெலகிராம் வந்துதா. சிங்கப்பூர்ல ஒரு கெமிக்கல் ஃபாக்டரி பண்ணணுமாண்டா. ஒரு மாசம் வேலையிருக்கு. முதல் ஆறுமாசம் நாம தான் மெயின்டெயின் பண்ணி ஆகணும். ஒரு வருஷம் அங்கதான் குடித்தனம் பண்ணணும். உன் பொண்டாட்டியோடு வந்துடு. நான் அங்க குவார்ட்டர்ஸ் ஏற்பாடு பண்றேன். பதினாலு பேரையும் கூட்டிகிட்டு வரச் சொல்றாண்டா, நான் கூட காக கேட்டிருக்கேன். கொடுக்கலாம்னு இருக்கான். பத்து நாள்ல கிளம்பிடுவியா, டிக்கெட் அனுப்பட்டுமா." சந்திரசேகரிடமிருந்து போன் வந்தது.

சரி என்று சொன்னான்.

பூரணிக்கு விஷயம் தெரிவித்தான். அவள் குதித்தாள்.

"சிங்கப்பூர்ல அவ்வளவு வெய்யில் இருக்காதுங்களே."

"இருக்காது. நம்மூர் மாதிரிதான். ஆனா, அடிக்கடி மழை பெய்யும், வர்றியா போகலாம்."

கமலக்கண்ணன் அவளை கட்டிக்கொண்டு கேட்டான்.

"ஹனிமூன்னு ஒரு இடத்துக்கு போகவே இல்லையே."

அடிக்குரலில் தாபத்தோடு பூரணி கேட்டாள்.

"சிங்கப்பூர் போறமே, எதுக்கு? அங்கதான் ஹனிமூன். வா"

அவன் இன்னும் இறுக்கிக் கொண்டான்.

எல்லோரையும் விழுந்து வணங்கி மாமனார், மாமியாரை கட்டிக்கொண்டு கொஞ்சி, தகப்பனாருக்கு நிறைய பரிசு

பொருட்கள் கொடுத்து பூரணி இண்டியன் ஏர்லைன்ஸ் விமானம் ஏறினாள்.

ஜன்னல் வழியே விமானம் கிளம்பும் வரை வேடிக்கை பார்த்தாள். விமானம் ஊர் தாண்டியது. கடல் பகுதிக்குள் நுழையத் தொடங்கியது.

பூரணி புருஷன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"உங்களுக்கு இப்போ என்னா பாட்டு ஞாபகம் வருது."

"நீதானே சொன்ன பாடக்கூடாதுன்னு. அப்பவே நான் பாட்டு விட்டுட்டேன்."

"அப்பப்போ நான் பாடறேங்க. என்ன பாட்டு தெரியுமா ஞாபகம் வருது."

"பாடு."

"காதல் சிறகை காற்றினில் விரித்து
வானவீதியில் பறக்கவா
கண்ணில் நிறைந்த கணவனின் மார்பில்
கண்ணீர் கடலில் குளிக்கவா...
இத்தனை காலம் பிரிந்ததை எண்ணி
இரு கை கொண்டு வணங்கவா"

பூரணி புருஷனை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவன் மெல்ல அவள் கைகளை பற்றிக் கொண்டான்.

அவள் மீது சாய்ந்து கொண்டான்.

"இப்படி பிரிஞ்சு இருந்த பொறுமைதான் நம்மள கெட்டியா, ஒன்னா சேர்த்துடுச்சு இல்ல" என்று கேட்டான்.

பூரணி ஆம் என்றாள்.

அந்த விமானம் சிங்கப்பூர் நோக்கி மேகங்களுடே பறந்து போயிற்று.

(முற்றும்)

27.6.82
5470062